கலைஞரின்
கடிதங்கள்

47

19.08.2012 - முதல்
19.02.2013 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 47

19.08.2012 - 19.02.2013

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

AVAILABLE @ :

GOWRA AGENCIES
No : 1 Samy Street,
Sai Baba Temple Back Side
Triplicane, Chennai - 05.
9790706548 / 044 28443791.

கௌரா ஏஜென்ஸீஸ்
எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA PUTHAGA MAIYAM
9, Saint John Church Complex,
Rockins Road, Trichy - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 **CODE :2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஒய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2254
க 894.8116
கருணா 47

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன்
ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3647. நடுநிலை, நியாயம், மனசாட்சி - இவை என்னாவது?	19-8-2012	23
3648. காவிரி ஆணையம், அன்றும் - இன்றும்!	25-8-2012	30
3649. மல்லாந்து படுத்திருப்பவன் காறித் துப்புகிற கதை!	30-8-2012	39
3650. முரண்பாடுகளின் மொத்த உருவம்!	31-08-2012	46
3651. எதையும் தாங்கும் இந்த இதயம் - வாழ்க வசவாளர்கள்!	03-09-2012	52
3652. மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைப்போம்; வா!	10-9-2012	59
3653. தன்மானம் பற்றிப் பேசத் தகுதி வேண்டாமா?	15-9-2012	64
3654. பெரியார் பிறந்தநாளில் 'அதை நினையுங்கள் - இதை மறந்து விடுங்கள்!'	17-9-2012	71

3655. அந்த நாள் ஞாபகம்; இந்த நாள் இல்லையா?	20-9-2012	78
3656. கை குலுக்குவது; அங்கே - கழுத்தறுப்பது இங்கேயா?	22-9-2012	83
3657. கவலை போக்கிடுமா? கண்ணீர் துடைத்திடுமா?	26-09-2012	89
3658. வெளிச்சத் துளி கிடைத்திட!	27-9-2012	96
3659. எழுதுவதை நிறுத்தும் எண்ணம் எனக்கில்லை!	28-9-2012	99
3660. இன்றே அணிவேன்; என்றும் அணிவேன்!	5-10-2012	110
3661. இனியாவது அதைத் தவிர்ப்பாரா?	9-10-2012	116
3662. மக்கள் எதிர்பார்க்கிறார்கள்!	12-10-2012	121
3663. நெஞ்சைத் துளைத்திடும் தொடர்கதை இது!	14-10-2012	127
3664. சேது திட்டம் வந்தால் செழிப்புறும் தென்னகம்!	21-10-2012	132
3665. நீர் இடித்து நீர் விலகுவதா?	23-10-2012	140
3666. தாய்த் தமிழகத்தின் தவிப்பு!	24-10-2012	148
3667. மின்வெட்டு தீரும் நாள் எந்நாளோ?	28-10-2012	154
3668. ஐ.நா. பயண வெற்றிக்கு; அனைவரும் வாழ்த்துவோம்!	1-11-2012	161

3669. எத்தனைக் காலம் இப்படி ஏமாற்றுவார்?	3-11-2012	168
3670. துள்ளி வருகுது வேல்! புள்ளி விவர மாய்மாலம் தூள்! தூள்!!	8-11-2012	178
3671. திசை திருப்பும் முயற்சியால் பிரச்சினை தீருமா?	10-11-2012	185
3672. மறைமலை நகரில் - இளைஞர் அணி கருத்தரங்கு!	17-11-2012	190
3673. கரும்பு விவசாயிகள் கவனத்திற்கு!	21-11-2012	195
3674. விடைதான் என்னவோ; இந்த வினாவுக்கு!	23-11-2012	202
3675. வைர விழாவும்; மாண்புமிகு மரபுகளும்!	30-11-2012	208
3676. நீதி கிடைக்கும் என்று நம்புகிறேன்!	7-12-2012	215
3677. எந்த நிலையிலும் என் கடன்; பணிசெய்து கிடப்பதே!	8-12-2012	222
3678. இருளின் ஆட்சி; இன்னும் எத்தனை காலமோ?	9-12-2012	230
3679. பத்திரிகையாளர்களும் ரசித்துச் சிரிக்கட்டும்!	11-12-2012	237
3680. வெங்கிடங்கால், வாழக்கரையை எங்ஙனம் மறப்பேன்!	12-12-2012	243

3681.இருள் தொலைந்திட வா! விரைந்து வா! வா!	15-12-2012	248
3682. அன்பே வா! அந்தகார இருள் போக்க அரிமாவே வா!	16-12-2012	253
3683. ‘‘வெள்ளை அறிக்கை’’ வெளியிட முன்வருவார்களா?	17-12-2012	255
3684. பெறற்கரிய திருநாள் பேராசிரியர் பிறந்த நாள்!	19-12-2012	260
3685. ஏன்; இந்த இரட்டை அளவுகோல்?	22-12-2012	265
3686. அங்கும் - இங்கும் ஏன் இந்த ஏற்றத்தாழ்வு?	25-12-2012	271
3687. கர்நாடகம் தடுக்கும் தண்ணீரும்; தமிழகம் வடிக்கும் கண்ணீரும்!	27-12-2012	277
3688. பள்ளிக் கல்வித் துறையும் பாழாகும் பரிதாபம்!	28-12-2012	283
3689. அவமானம்; யாரால் என்பதுதான் கேள்வி!	29-12-2012	289
3690. கபட நாடகமாடிகளைக் கண்டுகொள்வீர்!	31-12-2012	296
3691. வள்ளுவர் சிலை காத்திட வாய்மைப்போர்!	03-01-2013	302
3692. பாலியல் கொடுமைக்கு தனிமைச்சிறையே தக்க தண்டனை!	06-01-2013	307
3693. மத்திய அரசு தலையிட வேண்டும்; உடனடியாக!	10-01-2013	313

3694. கெடுமதி கொண்டு ''நெடு'' எழுதிய கட்டுரை!	11-01-2013	320
3695. துணிச்சலான செயலா? துவள வைக்கும் காரியமா?	16-1-2013	327
3696. "யாகாவாராயினும் நா காக்க!"	17-1-2013	333
3697. இந்த கொடுமைக்கு எப்போது விடியல்?	21-1-2013	340
3698. ஏட்டிக்குப் போட்டியென எத்தனை காலம் ஏமாற்றுவார்?	22-1-2013	345
3699. ஈழத்தமிழர் வாழ்வில், நல்லொளி பரவிட....	26-1-2013	352
3700. வெளியே வந்து விட்டது பூனைக்குட்டி!	31-1-2013	359
3701. எப்போது விஸ்வரூபம் எடுக்கப் போகிறதோ?	1-2-2013	366
3702. தனிப்பட்ட காழ்ப்பும், தலைமைச் செயலக மாற்றமும்!	2-2-2013	372
3703. மின் உற்பத்தி வளர்ச்சி - அன்றும், இன்றும்!	11-02-2013	378
3704. முறையான நடவடிக்கை எடுத்தது; நானா? அவரா?	12-02-2013	384
3705. பெண்ணாளும் மாநிலத்தில், மண்ணாகுதே மங்கையர் வாழ்வு!	19-2-2013	394

3647. நடுநிலை, நியாயம், மனசாட்சி - இவை என்னாவது?

உடன்பிறப்பே,

இந்திய சட்ட வரலாற்றிலேயே இதுவரை காணாத ஆச்சரியமாக சுமார் பதினைந்து ஆண்டு காலத்திற்கு மேலாக ஒரு வழக்கு நடைபெறுகிறதென்றால் அது நமது முதலமைச்சர் ஜெயலலிதாவின் 66 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு வழக்குதான்! 1996ஆம் ஆண்டு தொடரப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கு 2003ஆம் ஆண்டு உச்ச நீதி மன்றத்தினால், பெங்களூர் சிறப்பு நீதி மன்றத்துக்கு மாற்றப்பட்டு, அதன் பிறகும் எட்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஏற்கனவே சிறப்பு நீதி மன்றத்தில் இரண்டு நீதிபதிகள் விசாரித்து பின்னர் மூன்றாவதாக தற்போது விசாரித்துக் கொண்டிருக்கும் நீதிபதி மல்லிகார்ஜுனையாவும் இந்த மாதம் ஓய்வு பெறுகிறார்.

இந்த வழக்கில் விளக்கத்திற்கு மேல் விளக்கம், கேள்விக்கு மேல் கேள்வி, வாய்தாவுக்கு மேல் வாய்தா என்று கேட்டே நாட்களை கடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் சிறப்பு நீதி மன்றத்தில் கோரிக்கையை வைத்து, அங்கே அவர்களுக்கு எதிராக தீர்ப்பு வந்ததும், அதை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்வதும், அங்கும் தீர்ப்பு எதிராக வந்ததும், மீண்டும் அதே வழக்கினை உச்ச நீதி மன்றத்திலே மேல் முறையீடு செய்வதும், அதன் காரணமாக ஒரு சில மாதங்களைக் கடத்துவதும் - அதன் பிறகு மற்றொரு காரணத்தைச் சொல்லி சிறப்பு நீதிமன்றத்திலே வழக்கினை தாமதம் செய்வதும் தொடர்ந்து ஆண்டுக்கணக்கில் நடைபெற்று, அந்த வழக்கினை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்களும், கர்நாடக அரசு சார்பில் அந்த வழக்கில் ஆஜரான வழக்கறிஞர் அவர்களும் களைத்துச் சலித்துப் போய் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியாக மனிதனையே கடித்தது என்பார்களே, அதைப்போல கடைசியாக ஜெயலலிதா தரப்பினர் இந்த வழக்கினை விசாரிக்கும் நீதிபதிக்கே தகுதியில்லை என்று முறையிடுகின்ற அளவிற்குப் போய், அந்த நீதிபதிக்கு தகுதி இருக்கிறதா இல்லையா என்ற விசாரணைதான் தற்போது கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக் கின்றது. இதன் விளைவாக, குறிப்பாக அந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக ஆரம்பம் முதல் தொடர்ந்து வாதிட்டு வந்த மூத்த வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா தனது பதவியையே அண்மையில் ராஜினாமா செய்திருக்கிறார். அதிலேயே ஒரு வேடிக்கை.

வழக்கறிஞர் ஆச்சார்யா அளித்துள்ள ராஜினாமா கடிதத்தில்; அவர் சந்தித்த நெருக்கடிகளையும், மிரட்டல்களையும் வேதனையுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

“சிறப்பு அரசு வழக்கறிஞர் பதவியை நான் ராஜினாமா செய்ததன் மூலம், இதில் ஆர்வமுடன் இருந்த நபர்கள் தங்களது குறிக்கோளை எட்டிவிட்டனர். இந்த வழக்கு விசாரணை கால கட்டம் முழுவதிலுமே வெளியில் சொல்ல முடியாத கஷ்டங்களுக்கு நான் ஆட்படுத்தப்பட்டேன். இதற்குக் காரணமாக இருந்தவர்களின் ஒரே குறிக்கோள் சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையின் அரசு வழக்கறிஞர் பதவியில் இருந்து என்னை விலக்க வேண்டும் என்பதாகவே இருந்தது. என்னை தூண்டுவதன் மூலமும், மிரட்டலின் மூலமும் பணிய வைக்க முடியாததால், எனக்கு எதிராக வழக்குகள் போடப்பட்டன. அதை நீதி மன்றம் தள்ளுபடி செய்தாலும் எனக்கு எதிராக தலைமை நீதிபதியிடமும் , ஆளுநரிடமும் மனுக்கள் தரப்பட்டன. இந்தத் தொடர் நிகழ்வுகள் எனக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. எனது ராஜினாமா மூலம், இதில் ஆர்வம் கொண்டிருந்த நபர்கள் தங்களது குறிக்கோளை அடைவார்கள் என்பது எனக்குப் புரிகிறது. இருப்பினும் நான் உதவியற்ற நிலையிலே உள்ளேன்”

என்று குறிப்பிட்டுள்ளார்.

"அரசு பதவியை பயன்படுத்தி பெங்களூரிலுள்ள பி.எம்.எஸ். கல்லூரி அறக்கட்டளையில் திரு. ஆச்சார்யா நிதி மோசடி செய்தார்" என்று கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு; முகாந்திரம் எதுவும் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. வழக்கு தொடர்ந்தவருக்கு நீதிமன்றம் 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது.

(B.V. Acharya, Special Public Prosecutor in the disproportionate assets case against Jayalalithaa, resigned from the post, stating that he had suffered untold hardship and embarassment at the instance of interested parties whose sole objective appears to be to get rid of me as SPP. He alleged that the BJP Government in Karnataka was pressuring him to quit the post of SPP. When contacted, Mr. Acharya, 78, said : "The interested parties, having failed to achieve the objective by inducements and threats, initiated several proceedings with oblique motive. Petitions were filed before the High Court and the Governor seeking my removal from the post of SPP when I was holding the post of Advocate General. As a last resort, a private complaint was filed before the Special Lokayuk Court making false and baseless allegations against me, citing my position in the BMS Educational Trust, and an order was obtained for investigation against me. Finally, the High Court recently quashed that complaint, imposing a fine of Rs. 50,000 on the complainant.

Even the High Court in its August 3 order quashing the complaint against him, had found that there was "sufficient weight" in Mr. Acharya's contention that the complaint was motivated, and was an attempt to humiliate and coerce Mr. Acharya to quit his post as SPP.)
(The Hindu 15-8-2012)

இரண்டு நாட்களுக்கு முன்பு பெங்களூரில் நடைபெறும் ஜெயலலிதா, சசிகலா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில், கர்நாடக உயர் நீதி மன்றத்தில் விசாரணை வந்த போது, அரசு வழக்கறிஞராக இருந்த ஆச்சார்யாவும் ஆஜராகி, அந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்குமாறு மனு தாக்கல் செய்தார். தமிழ் நாளேடுகளில் இந்தச் செய்தி மட்டும்தான் வந்துள்ளது. ஆனால் "இந்து" நாளிதழில், ஆச்சார்யா ராஜினாமா செய்யத் தேவையில்லை என்று கர்நாடக உயர் நீதிமன்றம் சொன்னதாக தலைப்பிட்டு அந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. அதில்

கர்நாடக உயர் நீதிமன்றம், அந்தச் சொத்துக் குவிப்பு வழக்கில் உயர் நீதி மன்றத்துக்கு ஆச்சார்யா உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. உயர் நீதிமன்ற நீதிபதி மோகன் சந்தான கவுண்டர் அந்த வழக்கு விசாரணையில் ஆச்சார்யாவை துணை புரிய வேண்டுமென்று கூறினார். திரு ஆச்சார்யா உயர் நீதிமன்ற நீதிபதியிடம் தான் அரசு வழக்கறிஞர் பதவியை ராஜினாமா செய்து விட்டதாகத் தெரிவித்த போது, அவர் தனது பதவியை ராஜினாமா செய்யத் தேவையில்லை என்று சொன்னதோடு, சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதி நியமனம் குறித்து ஏற்கனவே ஆச்சார்யா வாதாடியிருப்பதால் உயர் நீதிமன்றத்திற்கும் உதவியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார் என்றும் "இந்து" நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால் பெரும்பாலான பத்திரிகைகள் இந்தச் செய்தியை ஜெயலலிதா தரப்பினருக்கு அஞ்சியோ என்னவோ, அப்படியே மறைத்து விட்டன. என்ன காரணமோ? ? (The Karnataka High Court asked Senior Advocate B.V. Acharya, who recently submitted his resignation from the post of Special Public Prosecutor in the Disproportionate Assets Case against Tamil Nadu Chief Minister Jayalalithaa, to assist the court in petitions filed by her and other accused. Justice Mohan Shantana goundar, before whom the petitions came up for hearing, told Mr. Acharya that he should assist the court on the issue raised in the petitions as it involved the law followed in the appointment of judge to the special court. When Mr. Acharya told the court that he had submitted his resignation to the State Government and had been asked to continue till alternative arrangements were made, the Judge said there was no need for him to resign from the post and asked him to assist the court since he had argued the issue before the Special Court.)

இது மட்டுமல்ல; இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா தரப்பினர் இந்திய நீதி பரிபாலன முறையையே எந்த அளவிற்கு கேலிப் பொருளாக ஆக்கி வருகிறார்கள் என்பதற்கு திரு. ஆச்சார்யா அவர்கள் ஜூனியர் விகடன் இதழுக்கு அளித்துள்ள சிறப்பு பேட்டியே தக்க சான்றாகும். அந்தப் பேட்டியின் சில குறிப்பிட்ட பகுதிகள் வருமாறு :-

"ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்குக்கு 2005ஆம் ஆண்டு உச்ச நீதி மன்ற வழிகாட்டுதலின்படி

என்னை, அரசு சிறப்பு வக்கீலாக நியமித்தார்கள். ஆறே மாதங்களில் வழக்கு முடிந்து விடும் என்ற நம்பிக்கையில்தான் ஆஜரானேன். ஆனால், இந்த ஏழு ஆண்டுகளில் அவர்கள் தரப்பிலிருந்து ஸ்பெஷல் கோர்ட்டிலும், ஐகோர்ட்டிலும், சுப்ரீம் கோர்ட்டிலும் எத்தனை மனுக்கள் போட்டிருக்கிறார்கள் தெரியுமா? எத்தனை முறை அப்பீலுக்குப் போய் இருக்கிறார்கள் தெரியுமா? இப்போது கூட சுப்ரீம் கோர்ட்டில் சசிகலா போட்ட இரண்டு மனுக்கள் விசாரணையில் இருக்கின்றன. **சொத்துக்குவிப்பு வழக்கு கொஞ்சம்கூட நகராமல் அதே இடத்தில் இருந்தால், என்னால் என்ன செய்ய முடியும்? கடந்த ஓர் ஆண்டாகவே என்னை இந்த வழக்கில் இருந்து வெளியேற பலவித சதி முயற்சிகளை மேற்கொண்டனர்.**

என்னைப் பற்றி அவதூறாக, கவர்னருக்கும் ஹைகோர்ட் நீதிபதிக்கும் பெட்டிஷன் போடுவது, ஸ்பெஷல் கோர்ட்டிலும் ஐகோர்ட்டிலும் துண்டு அறிக்கை கொடுப்பது, போஸ்டர் ஒட்டுவது, மீடியாக்களில் புகார் பரப்புவது என்றெல்லாம் செய்தனர். ஒரு கட்டத்தில் நான் அட்வகேட் ஜெனரல் பதவி, அரசு சிறப்பு வக்கீல் என இரண்டு பொறுப்புக்களையும் வகிக்கக் கூடாது என்றனர். அப்போது அவர்கள் நான் சிறப்பு வக்கீல் பதவியை ராஜினாமா செய்துவிடுவேன் என்று நினைத்தனர். ஆனால், நான் அட்வகேட் ஜெனரல் பதவியை ராஜினாமா செய்து விட்டேன். இறுதியாகச் சிலரைத் தூண்டிவிட்டு கர்நாடக லோக் ஆயுக்தா நீதிமன்றத்திலும், ஐகோர்ட்டிலும் என் மீது அவதூறு வழக்குப் போட வைத்தனர். லோக் ஆயுக்தா வில் போட்ட வழக்கு அடிப்படை ஆதாரம் இல்லாதது என்று ஆரம்பத்திலேயே வழக்கை ரத்து செய்து உத்தரவிட்டது கோர்ட். இரண்டாவதாக கல்வி நிறுவன மோசடியில் ஈடுபட்டதாகப் போடப்பட்ட வழக்கை விசாரித்த ஐகோர்ட், "நேர்மையானவர்மீது அவதூறு பரப்பாதீர்கள்" என்று கண்டித்து 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் வழக்கு தொடுத்தவருக்கு

விதித்திருக்கிறது. இதுபோன்ற பிரச்சினைகளால் தேவை யில்லாத நெருக்கடிகளுக்கும் தீவிர மன உளைச்சலுக்கும் உள்ளானேன். மெண்டல் டார்ச்சர் இந்த வயதில் எனக்குத் தேவையா? தொடர்ந்து இந்த வழக்கில் ஆஜராகி நெருக்கடிகளைச் சந்திக்க விருப்பம் இல்லை. நான் கையறு நிலையில் இருக்கிறேன். அதுதான் உண்மை. என்னுடைய ராஜினாமா ஜெயலலிதா தரப்புக்கு மகிழ்ச்சியான செய்தியாக இருக்கும் என்று கர்நாடக உள் துறைச் செயலருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலும் குறிப்பிட்டிருக்கிறேன்."

இவ்வாறு மூத்த வழக்கறிஞர் ஆச்சார்யா அவர்கள் அந்தப் பேட்டியில் தன் மனந்திறந்து நடந்தவைகளையெல்லாம் உலகத்திற்குத் தெரிவித்திருக்கிறார். என்னதான் இவர்கள் வழக்கை நீட்டிக்க இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டாலும் மக்களுக்கும் உலகத்திற்கும் இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கு என்பது எந்த அளவிற்கு வலிமையான ஆவண ஆதாரங்களின் அடிப்படையில் உண்மையான ஒன்று என்பது தெளிவாக தெரிந்துவிட்டது. எதற்காக இப்படியெல்லாம் வழக்கை இழுத்தடிக் கிறார்கள்? "மடியில் கனம் இருந்தால்தான் வழியில் பயம் ஏற்படும்!"

இதோ ஒரு உதாரணம்! சென்னை உயர் நீதி மன்றத்தில் எம். மாரியப்பன் என்பவர், கோவை சிறப்பு துணை ஆட்சியர் (முத்திரைத்தாள்) உத்தரவை எதிர்த்து கோவை முதன்மை உதவி நீதிபதி நீதிமன்றத்தில் 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தாக்கல் செய்த முறையீட்டு மனு கடந்த 14 ஆண்டுகளாக நிலுவையில் இருப்பதால் அதை விரைவில் விசாரித்துத் தீர்ப்பு வழங்கக் கோரியிருந்தார். அந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், "நீதிமன்றத்தில் ஒரு முறையீட்டு மனுவை 14 ஆண்டு காலம் நிலுவையில் வைத்திருப்பது கவலை அளிக்கும் அம்சம். நிச்சயமாக ஜீரணிக்க முடியாதது. வழக்கு தாக்கல் செய்தவரின் வழக்குக்கு விரைவில் தீர்வு காண அனுபவ அடிப்படையிலான, நடைமுறை சாத்தியமான, தேவைக்கேற்ற, பொது அறிவு அணுகுமுறையை நீதிமன்றம் கடைப்பிடித்து வழக்குக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். இது, இந்த நீதிமன்றத்துக்கு, வழக்காடுபவர் நிரந்தரமானவரல்ல

(Immortal) வழக்கோ சாகாவரம் பெற்றது (Mortal); என்ற முதுமொழியை நினைவுபடுத்துகிறது. நடுநிலைமை, நியாயம், நல்ல மனசாட்சி மற்றும் புத்திசாலித்தனத்தின் அடிப்படையில் கூட, நீதி பிறழ்வதைத் தடுக்க இந்த முறையீட்டு மனுவை மூன்று மாதங்களுக்குள், விசாரித்துத் தீர்ப்பு வழங்குமாறு கோவை முதன்மை உதவி நீதிபதிக்கு உத்தரவு விடப்படுகிறது". (Keeping an appeal pending for 14 long years is a disturbing feature and certainly not a palatable one. A pragmatic, practical, purposeful and common sense approach should be adopted by a court of law to secure the records in time so that the case/cause of the litigant is resolved early. It reminds this court of the saying that a "litigant" is mortal and a "litigation" is an immortal one")

சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு - 14 ஆண்டுகளாக நடைபெற்ற ஒரு வழக்குக்கு என்றால் - 16 ஆண்டுகளாக நடைபெறும் ஜெயலலிதா தரப்பினரின் சொத்துக்குவிப்பு வழக்குக்கும் இந்த தீர்ப்பு பொருந்துமா? பொருந்தாதா?

இந்திய அரசியல் சட்டத்துக்கு முரணாகப் பதவிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டவர்கள் - உயர் நீதிமன்ற நீதிபதியின் உறவினர்மீதே கஞ்சா வழக்குப் போட்டுப் பழி தீர்த்துக் கொள்ள முயற்சி செய்தவர்கள் - தங்களுக்கு வேண்டாதவர்களைப் பணிய வைத்திட சட்டத்தை வளைத்து காவல் துறையைப் பயன்படுத்தி கைது செய்து சிறையிலடைத்து மகிழ்ச்சி கொண்டாடியவர்கள் - முன்னாள் அமைச்சர்கள் மீதும், கழக முன்னணியினர் மீதும் நில அபகரிப்பு என்ற பெயரால் "குண்டர் சட்டம்" உள்ளிட்ட அனைத்துச் சட்டங்களையும் தங்கள் விருப்பத் திற்கும் வசதிக்கும் ஏற்ப துஷ்பிரயோகம் செய்தவர்கள் - அவர்கள்தான் இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கினை இவ்வாறு இழுத்தடிக்கிறார்கள். இது சரிதானா என்பதை நாட்டு மக்களே! நடுநிலையாளர் களே! நல்லவர்களே! நீங்களே கூறுங்கள்.

அன்புள்ள,

மு.க.

19-8-2012

3648. காவிரி ஆணையம், அன்றும் - இன்றும்!

உடன்பிறப்பே,

தமிழகத்திற்குத் தண்ணீர் தர கர்நாடகம் தொடர்ந்து பிடிவாதமாக மறுத்து வருகின்ற காரணத்தால், காவிரி ஆணையத்தை உடனே கூட்டும்படி பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு தமிழக முதலமைச்சர் அவசரக் கடிதம் எழுதியிருப்பதாக ஏடுகளில் செய்தி வந்துள்ளது. முதலமைச்சர் அனுப்பியுள்ள கடிதத்தின்படி பிரதமர் அவர்கள் உடனடியாக காவிரி ஆணையத்தைக் கூட்ட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நானும் கேட்டுக் கொள்கிறேன். 2011இல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு காவிரி ஆணையத்தைக் கூட்டுமாறு ஜெயலலிதா எழுதும் இரண்டாவது கடிதம் இது. தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்து; இவ்வாறு பிரதமருக்குக் கடிதம் எழுதினால், ஜெயலலிதா என்ன செய்திருப்பார்? "முதலமைச்சர்; பிரதமருக்கு கடிதம் எழுதி விட்டு, இங்கேயே உட்கார்ந்திருந்தால் என்ன செய்வது? நேரிலே சென்று கேட்டிருக்க வேண்டாமா? தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கிறார்கள்? நேரில் பிரதமரைப் பார்த்துக் கேட்டிருக்க வேண்டாமா? கபட நாடகம் போடும் கையாலாகாத சர்க்கார் இது" என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி வசை பாடி மகிழ்ந்திருப்பார். ஆனால் இப்போது இரண்டாவது கடிதம் எழுதியிருக்கிறார். முதலமைச்சரின் வேண்டுகோளை ஏற்று பிரதமர் காவிரி ஆணையத்தை இதுவரை ஏன் கூட்டவில்லை என்றால், கடந்த காலத்தில் இதே ஜெயலலிதா காவிரி ஆணையத்தைப் பற்றி தெரிவித்த கருத்துக்கள் தான் என்று கூடச் சொல்லலாம். அப்படி என்ன தான் ஜெயலலிதா காவேரி ஆணையம் பற்றி தெரிவித்தார் தெரியுமா?

21-8-1998இல் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "காவிரி நடுவர் மன்றம் ஏழாண்டுகளுக்கு முன்பு கொடுத்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்துவது தொடர்பாக, தகராறு

செய்து கொண்டிருக்கிற நான்கு மாநில முதல்வர்கள், பிரதமர் தலைமையிலான ஆணையத்தின் உறுப்பினர்கள் என்றால் அந்த ஆணையம் நடைமுறைக்கு வராத ஒன்று தானே? ஆணையம் என்றால் என்ன? விதிக்கப்பட்ட செயலை செய்யும் அதிகாரம் உடையது என்பதுதான் அதன் பொருள். ஆனால், பிரதமர் தலைமையிலான ஆணையத்திற்கு காவிரி நதி நீர் தொடர்பாக உத்தரவிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் எந்த அதிகாரமும் இல்லை. காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க இயலாத, எந்த முடிவும் எடுக்க விடாமல் தடுக்கிற வெறும் விவாத அமைப்பாகத்தான் இந்தப் புதிய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய ஆணையத்தை முதலமைச்சர் கருணாநிதி ஒப்புக் கொண்டதற்குக் காரணம் என்ன? தமிழ்நாட்டில் இந்த ஆண்டுக்கான குறுவை விவசாயம் முடிந்துவிட்டது. அறுவடைக்குத் தயாராகி விட்ட நிலையில் கர்நாடகா இனிமேல் தண்ணீர் விட்டாலும் பலனில்லை. ஆக, பிரதமர் தலைமையிலான புதிய ஆணையம் என்பது தமிழ்நாட்டுக்கு எள்ளளவும் நன்மை பயக்காத ஏமாற்றுத் திட்டமே என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறிய ஜெயலலிதாதான் நேற்றைக்கு பிரதமருக்கு உடனடியாக அதே காவிரி ஆணையத்தைக் கூட்டுமாறு கடிதம் எழுதியிருக்கிறார்.

2001ஆம் ஆண்டு தி.மு.கழகம் வெற்றி வாய்ப்பையிழந்து, ஜெயலலிதா பொறுப்பேற்ற பிறகு 9-9-2001 அன்று நான் கூறும்போது, "காவேரி பிரச்சினையில் தி.மு.க. ஆட்சிக்கு அ.தி.மு.க. ஒத்துழைப்பு தர மறுத்ததுபோல் இல்லாமல் ஒட்டுமொத்த தமிழகத்தின் இந்தப் பிரச்சினையில் தி.மு.க. தனது ஒத்துழைப்பை இந்த அரசுக்கு நல்கும்" என்று தெரிவித்தேன். ஆனால் ஜெயலலிதா எப்படி விவசாயிகளின் ஜீவாதாரப் பிரச்சினையில் அவர்களுக்கு விரோதமாக நடந்து கொண்டார் என்பதை நாடறியும்.

2-4-2002 அன்று சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா கூறும்போது, "செயல்படாத ஆணையம் காவேரி ஆணையம்", "பல் இல்லாத ஆணையம்"; அந்த ஆணையத்தை ஏற்காமல் நாங்கள் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினோம், மத்திய அரசு சொன்னதை ஏற்றுக் கொண்டு காவேரி பிரச்சினையில் துரோகம் விளைவித்தது தி.மு.க. அரசுதான்" என்று தேவையில்லாமல் தி.மு.க. மீது வசை பாடினார்.

21-6-2002 அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழக, கர்நாடக மாநிலங்களுக்கு இடையேயான காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு வருமாறு:-

"காவிரி நதி ஆணையத்தை உடனே கூட்டி அதன் விதிமுறைகளுக்கு திருத்தம் கொண்டு வர வேண்டும்; இதற்குப் பிரதமரின் தலையீடு மிகவும் அவசியம் என்பதை முதல்வர் ஜெயலலிதா கூறியிருந்தார். ஆனால் கர்நாடக மாநிலத்தின் சம்மதம் இல்லாமல் காவிரி நதி ஆணையத்தின் விதிகளுக்கு திருத்தம் வெளியிட இயலாது என்று பிரதமர் தெரிவித்து விட்டார். இதிலிருந்து காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை திறம்படச் செயலாக்குவதற்கு மத்திய அரசிடமிருந்து எந்தவித உதவியும் கிடைக்காது என்று தெரியவருகிறது. எவ்வித அதிகாரமும் இல்லாமல், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பைத் திறம்படச் செயல்படுத்த இயலாத நிலையில் காவிரி நதி ஆணையம் உள்ளது. எனவே இந்த ஆணையத்தின் கூட்டங்களில் இனிமேல் தமிழ்நாடு கலந்து கொள்ளாது. இந்த முடிவு தற்போதுள்ள கண்காணிப்புக் குழுக் கூட்டங்களுக்கும் பொருந்தும். காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையையும் இனி வரப்போகும் இறுதி ஆணையையும் முழுமையாகவும் திறம்படவும் செயல்படுத்துவதற்கு ஏதுவாக தமிழக அரசு புதிய வரைவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க உள்ளது. இதைச் செயலாக்க மத்திய அரசுக்கு ஆணையிடக் கோரி உச்ச நீதிமன்றத்தில் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 131ன் கீழ் புதிய வழக்குத் தொடரப்படும். காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையையும் இனி வரப் போகும் இறுதி ஆணையையும் கர்நாடக அரசு மதித்துச் செயல்பட வேண்டுமென்று கர்நாடக அரசுக்கு ஆணையிட வேண்டுமென உச்ச நீதி மன்றத்தில் கோரிக்கை வைக்கப்படும்."

அ.தி.மு.க. அரசின் இந்த அமைச்சரவை முடிவினைப் பற்றி என்னிடம் கருத்து கேட்ட போது, "ஆணையத்தைப்

புறக்கணிக்க ஜெயலலிதா அரசு எடுத்த முடிவு; விவேகமான தல்ல; குறுவை நெல் பயிரிடுவதற்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு மத்திய அரசின் தலையீட்டையும் உதவியையும் பெற அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்; தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட முடிவுகளை எல்லாம் மாற்றும் போக்குதான் அ.தி.மு.க. அரசில் மேலோங்கி நிற்கிறது. காவிரிப் பாசனப் பகுதிக்கு; உரிய நேரத்தில் நீர் கிடைக்க முயற்சி மேற்கொண்டது தி.மு.க. ஆட்சிக் காலம். ஆணையக் கூட்டத்துக்குச் செல்ல மாட்டேன் என்பது அ.தி.மு.க. ஆட்சிக் காலம்" என்று நான் கூறினேன்.

ஜெயலலிதாவின் முதல் கோரிக்கையை அடுத்து மத்திய அரசு சில நடவடிக்கைகளை எடுத்தது. அதன்படி குறைந்தபட்சம் தண்ணீராவது திறந்து விட வேண்டும் என்று கர்நாடகத்தை நிர்பந்தித்தது. அதைத் தொடர்ந்து பிலிகுண்டுலுவில் இருந்து ஒரு டி.எம்.சி. தண்ணீரைத் திறந்து விட கர்நாடகம் ஒப்புக் கொண்டது. ஆனால் பிரதமருக்குக் கடிதம் எழுதிய மறுநாளே ஜெயலலிதா புறக்கணிப்பு அறிவிப்பை வெளியிட்டதால் அந்த முயற்சி தோல்வியடைந்தது. அதற்குப் பிறகும் காவிரியில் தமிழகத்துக்கு 3 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணாவை பிரதமர் வாஜ்பாய் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டார். ஆனால் காவிரியில் தமிழகத்துக்கு 3 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட முடியாத நிலையில் கர்நாடகம் உள்ளதாக பிரதமரிடம் கர்நாடக அரசு தெரிவித்தது.

காவேரி ஆணையத்தைப் புறக்கணிப்போம் என்று அ.தி.மு.க. அரசு தெரிவித்த நேரத்தில், திருச்சியில் 4-7-2002 அன்று செய்தியாளர்கள் என்னிடம் அதைப்பற்றி கருத்து கேட்டனர். "காவேரி ஆணையம் அமைக்கப்பட்ட போது தி.மு. கழக ஆட்சியில் அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து அவர்களில் மிகப் பெரும்பாலோருடைய கருத்தின்படிதான் அந்த ஆணையத்திற்கான ஷரத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதிலே ஒரு ஷரத்தை நாம் விட்டுக் கொடுத்துவிட்டோம் என்றும், அதை இணைத்தால்தான் காவேரி ஆணையக் கூட்டத்திலே கலந்து கொள்ள முடியும் என்றும் இப்போதுள்ள அ.தி.மு.க. அரசாங்கத்தால் சொல்லப்பட்டுவருகிறது. அந்த ஷரத்து

என்னவென்றால், காவேரி ஆணையத்தினுடைய முடிவை - அதாவது, பிரதமர் தலைமையிலே உள்ள தமிழ்நாடு முதலமைச்சர், கர்நாடக முதல் அமைச்சர், கேரள முதல் அமைச்சர், பாண்டிச்சேரி முதல் அமைச்சர் ஆகியோர் உள்ளிட்டவர்கள் எடுக்கின்ற முடிவை எந்தவொரு மாநிலமாவது நிறைவேற்றத் தவறினால், அந்த மாநிலத்திலே உள்ள அணைக்கட்டு நிர்வாகத்தை ஆணையம் எடுத்துக் கொள்வது என்பதாகும். இதனை காவேரி ஆணையத்தில் உள்ள கர்நாடகமும், கேரளமும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தச் சூழ்நிலையில் அந்த ஷரத்தை வலியுறுத்த வேண்டாமென்றுதான் தமிழ் நாட்டிலே கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அப்படி ஒரு அணைக்கட்டின் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொள்வது அல்லது ஆக்கிரமித்துக் கொள்வது என்றால் அது இரண்டு மாநில மக்களிடையே எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதையெல்லாம் யோசித்துத் தான் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய கட்சிகளின் தலைவர்கள், திரு. மூப்பனார் போன்றவர்கள் இப்போதுள்ள காவேரி ஆணையத்திற்கு ஒப்புதல் கொடுத்தார்கள். கர்நாடக முதலமைச் சராக பட்டேல் இருக்கும்போது அரைகுறை மனதோடுதான் இந்த ஆணையத்தையே ஒத்துக் கொண்டார். அடுத்தடுத்து ஓரிரு கூட்டங்கள் காவேரி ஆணையத்தின் சார்பாக கூட்டப்பட்ட போது, அப்போது கர்நாடகா சார்பில் கலந்து கொண்ட முதலமைச்சர் கிருஷ்ணா அவர்கள் காவேரி ஆணையத்தையும், 205 டி.எம்.சி., தண்ணீர் காவேரியிலிருந்து தர வேண்டுமென்று நடுவர் மன்றம் அறிவித்த இடைக்கால ஆணையையும் ஒத்துக் கொண்டார். பிரதமர் வாஜ்பாய் அவர்கள் தலைமையில்தான் அந்தக் கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டின் சார்பாக நான் கலந்து கொண்டேன்" என்று கூறினேன்.

காவேரி ஆணையக் கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டேன் என்று தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா சொன்னார். அதற்கடுத்த நாள்; "அழைத்தால் பார்க்கலாம்" என்றார். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் 5-7-2002 அன்று எதிர்க்கட்சியாக இருந்த நிலையிலும், பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு நான் காவிரி நதி நீர் ஆணையத்தை உடனே கூட்ட வேண்டுமென்று கோரி கடிதம் ஒன்று எழுதினேன். அந்தக் கடிதத்தில், "தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் திறந்து விட வேண்டும் என்ற காவிரி நடுவர் மன்ற உத்தரவைக் கண்காணிப்பதற்காகவே

தங்களது (பிரதமரது) தலைமையில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல் அமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டு காவிரி நதி நீர் ஆணையம் அமைக்கப்பட்டது. ஆனால், நடுவர் மன்ற ஆணையின்படி தண்ணீர் திறந்து விடப்படாததால், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் மிகுந்த துயருக்குள்ளாகியுள் ளனர். காவிரிப் பாசன விவசாயிகளின் இந்தத் துயரத்தை உணர்ந்து, பிரச்சினை ஓரளவேனும் குறைக்கப்பட தமிழகத்திற்கு 3 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்து விடும்படி கர்நாடக முதலமைச்சரை தாங்கள் கேட்டுக் கொண்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தாங்கள் விடுத்த அந்தக் கோரிக்கையை கர்நாடக அரசு ஏற்க மறுத்துள்ளது. எனவே, காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டத்தை விரைவில் கூட்டி நடுவர் மன்ற உத்தரவை உடனடியாக செயல் படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகிறேன்" என்று எழுதியிருந்தேன்.

முதலமைச்சர் ஜெயலலிதா அமைச்சரவையில் முடிவெடுத்தவாறு 10-7-2002 அன்று உச்ச நீதி மன்றத்தில் காவேரியில் தண்ணீர் திறந்து விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வழக்கு தொடுத்தார். அதில் "29-7-2002 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் தமிழக, கர்நாடக அதிகாரிகளைப் பிரதிநிதிகளாகக் கொண்ட காவிரி நீர்க் கண்காணிப்புக் குழு ஆகஸ்ட் 12ஆம் தேதி கூடி ஆலோசித்து ஒரு வாரத்திற்குள் தனது அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும். தமிழக அரசின் கோரிக்கை தொடர்பான சிபாரிசுகளை பிரதமரைத் தலைவராகக் கொண்ட காவிரி நதி நீர் ஆணையத்துக்கு அது வழங்க வேண்டும். பின்னர் தமிழக, கர்நாடக முதலமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்ட காவிரி நதி நீர் ஆணையம் விரைவில் கூடி, அது பற்றி முடிவெடுக்க வேண்டும்" என்று உச்ச நீதி மன்றம் தெரிவித்தது.

5-7-2002 அன்று பிரதமருக்கு காவேரி ஆணையத்தைக் கூட்ட வேண்டுமென்று நான் எழுதிய கடிதத்திற்கு 10-7-2002 அன்று பிரதமர் எழுதிய பதில் கடிதத்தில் அதைப்பற்றிக் கவனிப்பதாகக் கூறியிருந்தார். அவ்வாறே காவிரி நதி நீர் ஆணையம் கூட்டப்பட்டது.

காவேரி ஆணையத்தைப் பல் இல்லாத ஆணையம், செயல்படாத ஆணையம் என்றெல்லாம் குறிப்பிட்ட ஜெயலலிதா

2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27இல் டெல்லியில் நடைபெற்ற காவேரி ஆணையக் கூட்டத்திலே கலந்து கொண்டார். ஆனால் அங்கே அனைவருடனும் சுமுகமாகப் பேசி சாதுரியமாகத் தண்ணீரைப் பெறுவதற்கான வழிவகை காணாமல், அவருக்குள்ள முன் கோபம் காரணமாக பிரச்சினையின் அவசர முக்கியத்துவத்தை மறந்து, இடையிலே வெளி நடப்பு செய்வதாகக் கூறி விட்டு வெளியே வந்து விட்டார். அதனால் பாதிக்கப்பட்டவர்கள் என்னவோ தமிழ் நாட்டு விவசாயிகள்தான்!

7-9-2002 அன்று செய்தியாளர்கள் என்னைச் சந்தித்த போது, "கர்நாடக மாநில முதல்வர் அடிக்கடி அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டி காவேரி பிரச்சினையிலே முடிவெடுப்பதைப் போல தமிழக முதல்வர் கூட்டுவதில்லையே என்று கேட்டபோது கூட, யாருடைய துணையும் இல்லாமல் தன்னால் செயல்பட முடியும் என்ற நம்பிக்கையுடைய முதல் அமைச்சரைத்தான் நாம் பெற்றிருக்கிறோம்" என்றுதான் கூறினேன்.

மருத்துவமனைக்கு முரசொலி மாறனைப் பார்க்க வந்த பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் காவேரி ஆணையத்தை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் பொறுப்பிலே இருந்த தமிழக முதல் அமைச்சர், ஜெயலலிதா பிரதமர் வருகின்ற நேரத்தில் கோடைவாசஸ்தலமான ஊட்டியிலே அரசுப் பணிகளைத் தீவிரமாக ஆற்றிக் கொண்டிருந்ததால்; (?) பிரதமரை நேரில் சந்திக்க முடியாமல், நான் வேண்டுகோள் விடுத்த பிறகு காவேரி ஆணையத்தைக் கூட்டுமாறு கோரி அப்போதும் பிரதமருக்கு டெல்லிக்குக் கடிதம் எழுதினார்.

29-11-2002 அன்று பிரதமர் தலைமையில் காவேரி ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. கர்நாடக முதலமைச்சர் முதல் நாளே டெல்லி சென்று விட்டார். ஆனால் காவிரி நீர் தேவைப்பட்ட நமது மாநில முதல் அமைச்சர் கடைசி நிமிடம் வரை வருவதாகச் சொல்லிவிட்டு, பிறகு டெல்லி பயணத்தையே ரத்து செய்துவிட்டார். அதனால் யாருக்கு நட்டம்? முதல் அமைச்சருக்கு அல்ல, நமது மாநில விவசாயிகளுக்குத்தான்.

இதற்கிடையில் "பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையம் மீது நம்பிக்கை இல்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதியது,

கடுமையான ஆட்சேபத்துக்குரியது" என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர். முதலமைச்சர் பிரதமருக்கு எழுதிய அந்த அவதூறு கடிதத்தை நான்கு நாட்களுக்குள் திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக அரசு வழக்கறிஞரிடம் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். தமிழக அரசின் வழக்கறிஞரான திரு. கே.கே. வேணுகோபால், நீதிபதிகள் முன்னிலையில் கூறுகையில், "பிரதமர் மீதும், அவரது தலைமையில் செயல்படும் காவிரி நதிநீர் ஆணையத்தின் மீதும் தமிழகம் முழு நம்பிக்கை வைத்துள்ளது. காவிரி நதி நீர் ஆணையத்தின் மீது நம்பிக்கை தெரிவித்தும், பிரதமர் வாஜ்பாய்க்கு இது தொடர்பாக எழுதிய கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்காக மீண்டும் ஒரு கடிதத்தை வெகு விரைவில் பிரதமர் வாஜ்பாய்க்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எழுதி அனுப்புவார்" என்றும் தெரிவித்தார்.

இது பற்றி நான் கூறும்போது, "13-9-2001 அன்று காவேரி ஆணையத்தைக் கலைக்க வேண்டுமென்று செய்தியாளர்களிடம் ஜெயலலிதா அறிவித்தார். காவேரி ஆணையக் கூட்டத்தில் தமிழக அரசின் சார்பில் கலந்து கொள்ள நிபந்தனைகள் விதித்தும், பிரதமர் வாஜ்பாய் அவர்களை விமர்சித்தும் தற்போது நவம்பர் 5 அன்று கடிதம் எழுதிய கால கட்டத்திற்குள்ளாக ஜெயலலிதா, காவேரி ஆணையக் கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து, பல்வேறு முரண்பாடான நிலைப்பாடுகளை எடுத்து விட்டார். அதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளார்கள்" என்று கூறினேன். உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு வழக்கறிஞர் ஒப்புக் கொண்டதற்கிணங்க, 16-11-2002 அன்று பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், பிரதமர்மீது தனிப்பட்ட முறையில் தான் மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாகவும், காவேரி ஆணையத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதாகவும் எழுதியிருந்தார்.

இதையெல்லாம் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டே போகலாம். ஆனால் உண்மை நிலை மேட்டூர் அணை இந்த ஆண்டு இதுவரை திறக்கப்படவில்லை; குறுவை சாகுபடி நடைபெறவே இல்லை; சம்பாவாவது பயிரிடப்படுமா என்பது கேள்விக் குறியாக உள்ளது என்பது தான். ஆனால் முதலமைச்சர் எதையாவது ஒரு பிரச்சினை பற்றி பிரதமருக்கு கடிதம் எழுதுகிறாரோ இல்லையோ, அதைப் பற்றிய செய்தியை ஏடுகளில் வெளியிடுவதிலேதான்

அதிக அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறார். அ.தி.மு.க. விற்கு வாக்களித்தால் தமிழ்நாட்டில் பாலாறு பாயும், தேனாறு ஓடும், பிரச்சினைகள் எல்லாம் நொடியில் தீர்ந்து விடும், எந்த நேரத்திலும் மின்பற்றாக்குறையே இருக்காது, கொலை, கொள்ளை என்பதே என்னவென்று தெரியாமல் மாயமாய் மறைந்து விடும் என்றெல்லாம் நம்பி வாக்களித்து எதுவும் நடக்காமல், ஏமாந்து நிற்கும் தமிழ் நாட்டு மக்களே, உங்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்று சொல்ல நான் தயாராக இல்லை. ஏன் என்றால் உங்களில் நானும் ஒருவன் அல்லவா?

அன்புள்ள,

மு.க.

25-8-2012

3649. மல்லாந்து படுத்திருப்பவன் காறித் துப்புகிற கதை!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் தாங்கள் மக்களுக்காக என்ன செய்யப் போகிறோம் என்று சொல்வதற்கு மாறாக - தி.மு.கழகத்தையும் என்னையும் திட்டுவதுதான் நோக்கம் என்ற அடிப்படையிலே வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முற்றிலும் என் மீதான தாக்குதல்தான்! 2009இல் இலங்கையில் இனக்கலவரம் உச்சக் கட்டத்தில் இருந்தபோது, மத்திய அரசை நான் வலியுறுத்தவில்லையாம்! அப்பாவி இலங்கைத் தமிழர்கள் அழிவிற்கு நான்தான் காரணமாம்! 2006ஆம் ஆண்டு மே திங்கள் வரை ஆட்சியிலே இருந்த ஜெயலலிதா இலங்கைத் தமிழர்களுக்காக என்ன செய்தாராம்? 16-4-2002 அன்று சட்டப் பேரவையிலே ஜெயலலிதாவே முன்மொழிந்த தீர்மானம் வருமாறு:-

> **“இலங்கை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைப் பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இச்சட்டப்பேரவை வற்புறுத்துகிறது. மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்து கிறது. இலங்கை அரசின் அனுமதி யைப் பெற்று நமது இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி பிரபாகரனை சிறை பிடித்துக் கொண்டு வர வேண்டும்”**

என்பதாகும். இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றிய லட்சணமா இது?

17-1-2009 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில்,

"இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர் நடக்கும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள்; இதில் எந்த நாடும் விதிவிலக்கல்ல. எங்கே யுத்தம் நடந்தாலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். ஆனால் இன்று இலங்கையில் என்ன நடக்கிறதென்றால், இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல விடாமல் விடுதலைப் புலிகள், அவர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாக ராணுவத்தின் முன்னால் அவர்களை ஒரு கேடயமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்"

என்று குறிப்பிட்டாரே, இதுதான் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றிய லட்சணமா?

ஜெயலலிதா இப்படியெல்லாம் சொன்னதால் அல்லவா, இலங்கை ராணுவத்தினர் இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்தனர். எனவே இலங்கைத் தமிழர்கள் அழிவிற்கு யார் காரணம்? ஜெயலலிதாவா? நானா?

இனக்கலவரம் உச்சக் கட்டத்தில் இருந்த போது நான் எதுவும் செய்யவில்லையாம்! ஜெயலலிதாதான் பாடுபட்டாராம்! என்ன ஆதாரம்?

14-10-2008 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம், 24-10-2008 அன்று மனிதச் சங்கிலி, 12-11-2008 அன்று சட்டப் பேரவையில் தீர்மானம், 4-12-2008 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் பிரதமரோடு சந்திப்பு, 27-12-2008 அன்று தி.மு. கழகப் பொதுக் குழுவிலே தீர்மானம்,

28-3-2009 அன்று பிரதமருக்கும், சோனியாவிற்கும் கடிதம், 7-4-2009 அன்று பிரதமர், சோனியா காந்தி, பிரணாப் முகர்ஜி, ப. சிதம்பரம் ஆகியோருக்கு தந்தி, 9-4-2009 அன்று சென்னையில் பேரணி, 21-4-2009 அன்று பிரதமர், சோனியா

காந்தி ஆகியோருக்கு மீண்டும் தந்தி, 23-4-2009 அன்று தமிழகத்தில் "பந்த்", 24-4-2009 அண்ணா அறிவாலயத்தில் உள்துறை அமைச்சர் ப. சிதம்பரத்துடன் சந்திப்பு, 27-4-2009 அன்று உண்ணாவிரதம் - இவைகள் எல்லாம் இலங்கை யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்தபோது நான் எடுத்த நடவடிக்கைகள்! ஆனால் என்னைக் குற்றஞ்சாட்டி செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றிய ஜெயலலிதா செய்தது என்ன?

14-10-2008 அன்று கூடிய அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் "கண்துடைப்பு நாடகம்" என்று கூறி அதனைப் புறக்கணித்தார்.

15-10-2008 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில்,

"இலங்கையில் தற்போது நடக்கும் யுத்தம் விடுதலைப் புலிகள் என்னும் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்திற்கு எதிரான யுத்தம். இந்த யுத்தத்தில் அங்கு வசிக்கும் அப்பாவித் தமிழர்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல விடாமல் விடுதலைப் புலிகள் அமைப்பு அவர்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்துவதாகச் செய்திகள் கூறுகின்றன. போரை நிறுத்த வேண்டும் என்பதன்மூலம் கருணாநிதி, விடுதலைப் புலிகள் அமைப்பைக் காப்பாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இது ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று அல்ல"

என்று என்னைத் தாக்கி அறிக்கை விட்டதைத் தவிர வேறு எதையும் ஜெயலலிதா செய்ய வில்லை.

இலங்கைத் தமிழர்களுக்காக எதுவுமே செய்யாத ஜெயலலிதா, தற்போது அவரது கட்சியின் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் என்னைக் கடுமையாகத் தாக்கியிருக்கிறார்.

மேலும் அந்தத் தீர்மானத்தில் போர் முடிந்து விட்டதாக பொய்யான தகவலைக் கூறி நான் உண்ணாவிரதத்தை வாபஸ் பெற்றதாகச் சொல்லியிருக்கிறார். நான் உண்ணாவிரதம் இருந்த 27-4-2009 அன்று மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட அறிக்கை வருமாறு :-

27-4-2009

The Government of Sri Lanka has announced that combat operations have reached their conclusion and that the Sri Lankan Security forces have been instructed to end the use of heavy caliber guns, combat aircraft and aerial weapons, which could cause civilian casualities. Sri Lankan forces will now confine their attempts to rescue the civilians who remain and give foremost priority in saving them.

This is an important first step in addressing concerns for the safety and security of Tamil civilians and Internally Displaced Persons trapped in the conflict zone.

The need of the hour is for urgent steps to ameliorate the humanitarian situation of those who have come out from conflict zone as well as to bring the remaining civilians and IDPs in the No Fire Zone out to safety. The IDPs and innocent civilians are the main victims of the conflict and every measure must be taken to protect them and guarantee their welfare.

I am happy to announce that the Prime Minister has approved a grant of Rs. 100 crores (Rs. 1 billion) for providing humanitarian relief assistance to innocent civilians who have been evacuated from the conflict zone. The details regarding utilization of this assistance are being worked out.

ஆங்கிலத்தில் வந்துள்ள இந்த அறிக்கையின் தமிழாக்கம் வருமாறு :-

“போர் நடவடிக்கைகள் முற்றுப் பெற்று விட்டதென்றும், கனரகத் துப்பாக்கிகள், போர் விமானங்கள், வான்வழித் தாக்கிடும் போர் ஆயுதங்கள் போன்றவை குடிமக்களை பெருமளவிற்குக் கொல்லும் என்பதால் இலங்கை பாதுகாப்புப் படைகள் அவற்றைப் பயன்படுத்தக் கூடாது என்று ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.”

இவ்வாறு இலங்கை அரசு அறிவித்துள்ளதாகவும், மேலும் “குடிமக்களை மீட்பதற்கும், அவர்களைக் காப்பாற்று வதற்கும் தேவையான அனைத்து முயற்சிகளையும்

மேற்கொள்வதில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் இனி கவனம் செலுத்தும்" என்றும்,

"போர் முனையில் சிக்கிக் கொண்டுள்ள தமிழ் மக்கள் மற்றும் இடம் பெயர்ந்தோர் ஆகியோரின் பாதுகாப்பு பற்றிய பிரச்சினைகளே முதன்மையானவை ஆகும். அவற்றைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு இன்று செய்துள்ள அறிவிப்பு முக்கியமான முதல் படியாகும்" என்றும்

"போர் முனையிலிருந்து வெளிவந்தோரின் துயரங்களைத் தணிப்பது மட்டுமன்றி; போர் நடைபெறாத பகுதியில் இன்னும் தங்கியிருக்கும் குடிமக்கள் மற்றும் இடம் பெயர்ந்தோர் ஆகியோரை பாதுகாப்பான இடங் களுக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதுதான் தற்போதைய உடனடித் தேவையாகும்" என்றும், இலங்கை அரசு கூறியிருப்பதாகத் தெரிவித்த பிரணாப் அவர்கள், அந்த அறிக்கையில்,

"போர்ப் பகுதியிலிருந்து வெளிக் கொணரப்பட்டுள்ள அப்பாவி மக்களுக்குத் தேவையான நிவாரண உதவி களை வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் அவர்கள் 100கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து ஒப்புதல் அளித்துள்ளார் என்பதை அறிவித்திட மகிழ்ச்சி அடைகிறேன்"

என்றும் குறிப்பிட்டிருந்தார்.

மத்திய முக்கிய அமைச்சர் ஒருவரே இவ்வாறு அறிவித்த பிறகும், அதை எப்படி நம்பாமல் இருப்பது? அவ்வாறு நம்பி நான் எடுத்த முடிவுக்குத்தான் களங்கம் கற்பிக்க முயலுகிறார் இன்றைய முதல்வர் ஜெயலலிதா. இந்த ஒன்றிலிருந்தே ஜெயலலிதாவின் தற்போதைய செயற்குழுத் தீர்மானம் எவ்வளவு இட்டுக் கட்டிய கற்பனை என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இதுமாத்திரமல்ல; ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோதுதான் இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக மிகவும் பாடுபட்டவரும், விடுதலைப் புலிகளின் அரசியல்

ஆலோசகராக இருந்தவருமான அருமை நண்பர் ஆண்டன் பாலசிங்கம் அவர்கள்,

நோய்வாய்ப்பட்ட நிலையில் அவருக்கு சிகிச்சை அளிப்பது பற்றி ஓர் பிரச்சினை எழுந்தது. அப்போது பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் அது பற்றிக் கேட்டபோது, மனிதாபிமான அடிப்படையில் பாலசிங்கம் அவர்களுக்கு சிகிச்சை பெறுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்றுதான் கூறினார். அப்போது தமிழக முதல் அமைச்சராக இருந்த ஜெயலலிதா, வாஜ்பாய் அவர்களின் கருத்தைக் கடுமையாக எதிர்த்தார். தமிழகம் உள்பட இந்தியாவின் எந்த இடத்திலும் ஆண்டன் பாலசிங்கம் சிகிச்சை பெற, மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது என்றே கூறினார். தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாகச் செயல்படுபவர் கள்மீது புதிய "பொடா" சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

12-4-2002 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா, விடுதலைப் புலிகள் பிரச்சினை தொடர்பாக இரண்டு முறை விரிவாகப் பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியின் போது அவர் கூறியதாவது :-

"விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையிலான சமரசப் பேச்சு வார்த்தையில் இந்தியா பங்கேற்காது எனப் பிரதமர் கூறியுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனால் அதேசமயம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் பால சிங்கத்துக்கு இந்தியாவில் சிகிச்சை அளிப்பது குறித்து மனிதாபிமான அடிப்படையில் பரிசீலிக்கப்படும் எனப் பிரதமர் தெரிவித்துள்ளதை எதிர்க்கிறேன். தமிழகம் மட்டுமின்றி இந்தியாவின் எந்த இடத்திலும் ஆண்டன் பாலசிங்கம் சிகிச்சை பெற மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது என்பது அ.தி.மு.க. அரசின் நிலைப்பாடு. இந்த விஷயத்தில் தமிழகத்தை மத்திய அரசு நிர்ப்பந்திக்காது என்ற நம்பிக்கை உள்ளது."

இப்படியெல்லாம் பேட்டி கொடுத்தவர் இலங்கைத் தமிழர்களுக்கு உதவி செய்பவராம்! ஆனால் நான் இலங்கைத் தமிழர்கள் அழிவிற்குக் காரணமானவனாம்!

ஜெயலலிதாவிடம் செய்தியாளர்கள், "விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்" என்று ம.தி.மு.க., பா.ம.க., போன்ற சில கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகிறார்களே என்று கேட்டபோது,

> "விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பு. விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் தேசதுரோகக் குற்றம் செய்ததாகக் கருதப்பட வேண்டும். எனவே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுபவர்கள் மீது புதிய "பொடா" சட்டத்தின்கீழ் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க முடியும். இச்சட்டத்தின்கீழ் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் தமிழக அரசுக்கும் உள்ளது"

என்று பதிலளித்தார். நானாக இதை இட்டுக்கட்டிக் கூறவில்லை. தினமணி நாளிதழ் 13-4-2002இல் முதல் பக்கத்தில் வந்துள்ள தலைப்புச் செய்தியே இதுதான்!

இத்தகைய முரண்பாடுகளுக்கும், இரக்கமின்மைக்கும் சொந்தக்காரர்தான் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா; இவர்தான் நம்மைப் பார்த்து "கபட நாடகம்" ஆடுவதாகச் சொல்கிறார். அரசியலுக்கு வந்தது முதல் இப்போது ஆட்சி நடத்துகிற வரையில் அனைத்து நிகழ்ச்சிகளையும் "கபட நாடகம்" ஆகவே ஆடித் தீர்ப்பவர், நம்மைப் பார்த்து பொய்யர்கள் என்றும், புளுகர்கள் என்றும், உண்மையை மறைப்பவர்கள் என்றும் உளறிக் கொட்டுவதும்; தங்கள் வரலாற்றை மறந்து விட்டு அல்லது மறைத்து விட்டு பிறர் மீது மாசு கற்பிக்க முயலுவதும், மல்லாந்து படுத்திருப்பவன் காறித் துப்பிய கதையாகவே ஆகிவிடும்.

அன்புள்ள,

மு.க.

30-8-2012

3650. முரண்பாடுகளின் மொத்த உருவம்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தில் தவிர்த்திட இயலாத நிலையில், தமிழகத்தில் ஏற்பட்ட மின் வெட்டு குறித்து எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா விடுத்த அறிக்கைகளையும், அதிலே கழக அரசையும் குறிப்பாக என்னையும் அந்த அம்மையார் எந்த அளவிற்கு கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி கோபமாகக் கேள்விக்கணைகளைத் தொடுத்தார் என்பதையும் - அவர் பேசியதற்கு மாறாக; இப்போது தமிழகம் எந்த அளவிற்கு இருண்டு கிடக்கிறது, மின்வெட்டு காரணமாக எல்லா தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் தமிழ்நாட்டு மக்கள் அனுபவ ரீதியாக நாள்தோறும் உணர்ந்து வருகிறார்கள்.

இந்த லட்சணத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா அமைச்சர்களையும், மின் வாரிய அதிகாரி களையும் அழைத்து ஆய்வுக் கூட்டம் நடத்திய தாகவும், அந்தக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் தற்போது நிலவும் மின் பற்றாக்குறையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை கள் குறித்து "அம்மா" அவர்கள் மின் வாரிய அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்ததாகவும் ஏடுகளில் எல்லாம் செய்தி வந்துள்ளது.

ஏடுகளில் இந்தச் செய்தி மாத்திரம் வரவில்லை . அதே நாளில் தமிழகத்தில் தற்போது இருந்து வந்த மின்வெட்டு 5 மணி நேரம், 6 மணி நேரம் என்பது; இனி 10 மணி, 12 மணி என்ற அளவிற்கு நீடிக்கும் நிலை வந்துள்ளது என்றும் செய்தி வந்துள்ளது. இந்த அளவிற்கு தமிழ்நாட்டில் கடும் பற்றாக்குறை வரக் காரணம் என்ன?

16-9-2011 அன்று அதாவது சரியாக ஓராண்டு காலத்திற்கு முன்பு முதல் அமைச்சர் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில்,

"தற்போது கூடங்குளம் அணு மின் நிலையத்திற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்து, அதனை மூடி விட வேண்டும் என்று கோரி வருகின்றனர். மேலும், இந்த அணு மின் நிலையத்தை உடனடியாக மூட வலியுறுத்தி இடிந்தகரையில் மீனவர்கள் உண்ணா விரதம் இருந்து வருகின்றனர். இந்த நிலையில் கூடங்குளம் அணுமின் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சம்பந்தப் பட்ட பொறியாளர்கள், அணு விஞ்ஞானிகள் ஆகியோருடன் எனது அரசு ஆலோசனை நடத்தியது. கூடங்குளம் அணு மின் நிலையம், நில நடுக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் இல்லாத, இரண்டாம் நிலை மண்டலத்தில்தான் உள்ளது. அங்கே சிறந்த, மிகவும் பாதுகாப்பான அணு உலை குளிர்விப்பு முறை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. சுனாமி தாக்கிய போதும், கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. எனவே கூடங்குளம் அணு உலையின் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்கள் யாரும் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட வேண்டும். கூடங் குளம் அணு மின் நிலையத் திட்டத்திற்கு அனைவரும் முழு ஒத்துழைப்பு தர வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

16-9-2011 அன்று கூடங்குளம் அணு மின் நிலையம் பற்றி பொறியாளர்களுடனும், அணு விஞ்ஞானிகளுடனும் ஆலோசனை நடத்தி விட்டு, பொதுமக்கள் யாரும் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை, அணு மின் நிலையத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்ட முதல்வர் ஜெயலலிதா; 19-9-2011 அன்று மீண்டும் ஓர் அறிக்கை விடுத்தார். அதிலே என்ன சொன்னார் தெரியுமா?

"கூடங்குளம் அணு மின் திட்டம் மத்திய அரசு மற்றும் இந்திய அணு மின் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அணு மின் நிலையத்தால் பாதிப்பு ஏற்படும் என்ற அந்தப் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்குவது, மத்திய அரசின் கடமை ஆகும். ஆனால் மத்திய அரசு இதற்கான எந்த நடவடிக்கைகளையும்

இதுவரை எடுக்க வில்லை . அந்தப் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்குவதற்கான முழுப் பொறுப்பும் மத்திய அரசிடமே உள்ளது. தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் ஜெயந்தி நடராசனிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, இந்தப் பிரச்சினை தன்னுடைய துறை சம்பந்தப் பட்டது அல்ல என்று கூறி கை கழுவி விட்டது வருந்தத் தக்கதாகும். மத்திய அரசு தன் பொறுப்பை தட்டிக் கழிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இந்தப் பிரச்சினை குறித்து நான் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள் ளேன். நிதியமைச்சர் தலைமையில் அனைத்துக் கட்சிகள், போராட்டக் குழுவினர் டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்து மனு கொடுப்பார்கள். இந்தப் பிரச்சினையில் சுமூகத் தீர்வு எட்டப்படும் வரையில் பணிகள் எதையும் மேற் கொண்டு தொடர வேண்டாம்'' என்று கேட்டுக் கொண்டார்.

16ஆம் தேதி அறிக்கையில் எந்தவிதமான ஆபத்தும் இல்லை, பாதுகாப்பாக உள்ளது, அணு விஞ்ஞானிகளுடன் பேசப்பட்டு விட்டது, சுனாமியினால் கூட பாதிப்பு ஏற்படவில்லை, பணிகள் தொடர அனுமதிப்பீர் என்றெல்லாம் கூறிய முதல்வர் ஜெயலலிதா, 19ஆம் தேதியன்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் பணிகளை நிறுத்தும்படி வேண்டிக் கொள்கிறார். இதிலே எது உண்மை ? மூன்றே நாளில் ஏன் இந்த பல்டி? ஏன் இந்த முரண்பாடு? முதல்வர்தான் கூற வேண்டும்.

மத்திய அரசு பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டது என்றெல்லாம் அறிக்கையில் கூறிய முதலமைச்சர் ஜெயலலிதா, அன்றையதினமே பிரதமருக்குக் கடிதம் எழுதியதோடு தொலைபேசி வாயிலாகவும் பிரதமருடன் பேசினார். அம்மையார் அறிக்கையிலே தெரிவித்ததுபோல் பிரதமர் தட்டிக் கழித்தாரா? இல்லை. கூடங்குளத்திற்கு மத்திய இணை அமைச்சர் நாராயணசாமியை நேரில் அனுப்பி வைப்பதாகவும், ஐ.நா. சபை கூட்டத்திற்கு தான் நியூயார்க் செல்வதால் 27ஆம் தேதியன்று தமிழ்நாட்டுக் குழுவினரைச் சந்திப்பதாகவும் கூறியதோடு, "இந்தியாவிலேயே அறிவில் சிறந்த முதலமைச்சராகிய தங்களின் வழிகாட்டுதல் தேவை என முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவிடம் பிரதமர் வேண்டுகோள் " என்று அவர்களின் ஏட்டிலே

பெருமிதத்தோடு வெளியிட்டுக் கொள்கின்ற அளவிற்கு பிரதமர் பாராட்டிய செய்தியும் வந்தது.

இன்னும் வேடிக்கை பாருங்கள் ! 21ஆம் தேதியன்று கூடங்குளம் கூடாது என்று இடிந்தகரையில் உண்ணாவிரதம் இருந்தவர்களின் பிரதிநிதிகள் சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து, அவர் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்.

அதன் தொடர்ச்சியாக 22-9-2011 அன்று தமிழக அமைச்சரவை அவசர அவசரமாகக் கூடி அந்தப் பகுதி மக்களின் அச்சம் தீர்க்கப்படும் வரை கூடங்குளம் அணு மின் நிலையப் பணிகளை நிறுத்தி வைக்க மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள்.

கடிதத்தின் வாயிலாகவும், தொலைபேசி மூலமாகவும் அணு மின் நிலையத் திட்டத்தில் பணிகளை மேற்கொள்ள வேண்டாமென்று முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுக் கொண்ட தற்குப் பிறகு - பிரதமர் அவரிடம் கூறியவாறே மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி அவர்களை முதலமைச்சரைச் சந்திக்க அனுப்பி வைத்து, அவரும் கூடங்குளம் சென்று நிலைமை களை அறிந்ததோடு தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரையும் சந்தித்தார்.

இந்த நிலையில் கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்புப் போராட்டத்தால் கடந்த ஆறு மாதங்களாக தினமும் 5 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என இந்திய அணுமின் கழக இயக்குனர் பரத்வாஜ் அவர்கள் தெரிவித்தார். கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்புப் போராட்டத்தால் ஆறு மாதங் களாக, கூடங் குளம் மின் நிலையப் பணிகள் முடங்கியுள்ளன. கடந்த டிசம்பர் முதல் தமிழகத் திற்குக் கிடைக்க வேண்டிய மின்சாரம் மேலும் ஆறு மாதங்களுக்கு தள்ளிப் போகும் நிலை ஏற்பட் டுள்ளது. நாளொரு பிரச்சினை, பொழுதொரு காரணம் சொல்லி, கூடங்குளம் செயற்படத் துவங்க தமிழக அரசிடமிருந்து அனுமதி கிடைப்பது தாமத மாகிறது. இதனால் அணுமின் நிலையப் பணிகளில் ஈடுபடும் விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட 1000 பேர், தினமும் எந்தப் பணியும் இன்றி முடங்கிக் கிடக்கின்றனர். வழக்கமான தங்களது பராமரிப்புப் பணியைக்கூட மேற்கொள்ள

முடியாமல் அவதிப்படுகின்றனர். இந்திய அணுமின் கழகம், பணிகள் செய்ய முடியாமல் காத்திருக்கும் கூடங்குளம் நிலைய அலுவலர்கள் 1000 பேருக்கும் சம்பளம் அளித்து, நஷ்டத்தை சந்தித்து வருகிறது. ஆறு மாதங்களாக 900 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பண வீக்கத்தில் சிக்கித் தவிக்கும் இந்தியாவில், இதுபோன்ற போராட்டங்களால், பொருளாதாரத் தைச் சீர் குலைக்கும் சக்திகளை, தமிழக அரசு விரைவில் அடையாளம் கண்டு, கைது நடவடிக்கை மேற்கொள்ளுமா என்றெல்லாம் அணு மின் கழக இயக்குநர் கூறினார்.

இதற்குப் பிறகு 17-12-2011 அன்று மீண்டும் முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் கூடங்குளத்தில் பணிகளைத் தொடங்குவதற்கு முன் அந்தப்பகுதி மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார். இதற்குப் பிறகு என்ன நடைபெற்றது?

தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில், சங்கரன்கோவில் தொகுதி இடைத்தேர்தல் நடைபெற்று, ஆளுங்கட்சி வெற்றி பெறுகிறது. மேலும் தமிழகத்தில் மின் பற்றாக்குறை அதிகரித்து, கூடங்குளத்தில் மின் உற்பத்தி உடனடியாக தொடங்கினால் பற்றாக்குறை யைச் சமாளிக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. கூடங்குளத்தில் ஆறு மாத காலம் அ.தி.மு.க. ஆட்சியினர் பணிகளை முடக்கி வைக்காமல் இருந்திருந்தால், மின் உற்பத்தி தொடங்கி யிருக்குமே, 'மின் பற்றாக்குறை வராமல் சமாளித்திருக்கலாமே என்றெல்லாம் மக்கள் பேசத் தொடங்கினார்கள்.

29-2-2012 அன்று சென்னையில் நான் பேசும்போது, கூடங்குளம் அணு மின் நிலையம் மூடிக் கிடப்பதைப் பற்றிக் குறிப்பிட்டு, "அந்தப் போராட்டத்தைத் தமிழக அ.தி.மு.க. அரசு ஆதரிக்கிறதா? அதிலே தமிழக அரசின் நிலை என்ன? கையிலே வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைகின்ற காரியம் போன்றது அல்லவா தமிழகத்திலே நடைபெறு கிறது; அதன் ரகசியம் என்ன?" என்றெல்லாம் கேட்டிருந்தேன்.

அதற்குப் பிறகு முதலமைச்சர் ஜெயலலிதா, பிரதமருக்கு 31-3-2012 அன்று ஒரு கடிதம் எழுதுகிறார். அந்தக் கடிதத்தில் கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படவுள்ள

2000 மெகாவாட் மின்சாரத்தையும் தமிழகத்திற்கே ஒதுக்க வேண்டும் என்று கோரிக்கை! பிரதமர் தனக்குள் சிரித்துக் கொள்ளமாட்டாரா? என்னடா? ஒரே முரண்பாடாக இருக்கிறதே? இதே முதலமைச்சர் தானே, சில மாதங்களுக்கு முன்பு மக்களின் அச்சத்தைப் போக்குகின்றவரை பணிகளை முடக்கி வைக்க வேண்டுமென்று எழுதினார், இப்போது இப்படி மாற்றி எழுதியிருக் கிறாரே என்று நினைத்துக் கொள்ளமாட்டாரா?

பிரதமருக்கு மட்டுமல்ல; கூடங்குளத்தில் போராடிய, உண்ணாவிரதம் இருந்த மக்களுக்கும் ஆச்சரியம்! சில மாதங்களுக்கு முன்பு முதல் அமைச்சரைச் சந்தித்தபோது, தங்களுக்கு ஆதரவு காட்டி உடனடியாக பிரதமருக்குக் கடிதம் எழுதினாரே, தொலைபேசியில் பேசினாரே, தூதுக்குழு அனுப்பி வைத்தாரே, அவசர அவசர மாக அமைச்சரவையைக் கூட்டித் தீர்மானம் நிறைவேற்றினாரே, இப்போது கூடங்குளத்தில் பணிகளைத் தொடங்கி, உற்பத்தியாகும் மின்சாரத்தை தமிழகத்திற்கே ஒதுக்கிட வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறாரே என்று இப்படி அனைவருக்கும் ஒரே குழப்பம்!

இப்படி ஜெயலலிதா, முரண்பாடாகவும், முன்னுக்குப் பின் முரணாகவும், கால - நேர வசதிப்படி கடந்த கால நிகழ்வுகளை மறைத்தும், மறந்தும்; பாலுக்கும் காவல் - பூனைக்கும் தோழி என்று இரட்டை வேடம் போடுவதால்; தொடர்ந்து இன்னலுக்காளாவோர் தமிழகத்து மக்களே! ஜெயலலிதாவின் முரண்பாடுகள் இவ்வளவு தானா? இன்னும் வருமா? "சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும் என்றார்கள்; பிறகு எல்லா பழங்களை யும் எங்களுக்கே கொடு" என்று கேட்பதைப்போல அல்லவா தமிழக அரசின் நாளொரு பேச்சு; பொழுதொரு போக்கு இருக்கிறது!

அன்புள்ள,

மு.க

31-08-2012

3651. எதையும் தாங்கும் இந்த இதயம் - வாழ்க வசவாளர்கள்!

உடன்பிறப்பே,

கடந்த 23-8-2012 அன்று நெடுமாறன் "தினமணி" நாளேட்டில் எழுதிய ஒரு நீண்ட கட்டுரையில் இலங்கையில் விடுதலைப் போராளிகளுக்கும், சிங்கள ராணுவத்திற்கும் இடையே போர் நடைபெற்றபோது, அதைத் தடுக்க கருணாநிதி எதுவுமே செய்யவில்லை என்று எழுதியிருந்தார். அதற்கு நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் ஆதாரப்பூர்வமாகச் சில விவரங்களைக் குறிப்பிட்டு; இலங்கையில் போர் நடைபெற்றபோது அதனைத் தடுக்க நான் எதுவுமே செய்யவில்லையா? என்னென்ன செய்தேன்? என்பதையெல்லாம் தொகுத்து தேதிவாரியாக விளக்கியிருந்தேன்.

இலங்கைப் போரை நிறுத்துவதற்காக சென்னையில் நான் உண்ணாநோன்பை மேற்கொண்டபோது, மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் வெளியிட்ட அறிவிப்பின் நகல் ஒன்றினை நான் உண்ணா நோன்பு இருந்த இடத்திற்கே அனுப்பி வைத்தார். அந்த அறிவிப்பை நம்பித்தான் நான் உண்ணா நோன்பை நிறுத்திக் கொண்டேன் என்பதற்குச் சான்றாகவும் - நெடுமாறன் போன்றவர்களும், அல்லது நெடுமாறனால் என்னைத் தவறாகப் புரிந்துகொள்ள வைக்கப்பட்டுள்ளவர்களும் விளக்கம் பெறுவதற்காகவும் - இதோ அந்த ஆங்கில அறிவிப்பின் தமிழ் மொழி ஆக்கத்தை மீண்டும் இங்கே நினைவுபடுத்துகிறேன்.

> "போர் நடவடிக்கைகள் முற்றுப் பெற்று விட்டதென்றும், கனரகத் துப்பாக்கிகள், போர் விமானங்கள், வான்வழித் தாக்கிடும் போர் ஆயுதங்கள் போன்றவை குடிமக்களை பெருமளவிற்குக் கொல்லும் என்பதால் இலங்கை பாதுகாப்புப் படைகள் அவற்றைப் பயன் படுத்தக் கூடாது

என்று ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது.” -

இவ்வாறு இலங்கை அரசு அறிவித்துள்ளதாகவும், மேலும் “குடி மக்களை மீட்பதற்கும், அவர்களைக் காப்பாற்றுவதற்கும் தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் இனி கவனம் செலுத்தும்” என்றும்,

“போர் முனையில் சிக்கிக் கொண்டுள்ள தமிழ் மக்கள் மற்றும் இடம் பெயர்ந்தோர் ஆகியோரின் பாதுகாப்பு பற்றிய பிரச்சினைகளே முதன்மையானவை ஆகும். அவற்றைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு இன்று செய்துள்ள அறிவிப்பு முக்கியமான முதல் படியாகும்” என்றும்

“போர் முனையிலிருந்து வெளிவந்தோரின் துயரங்களைத் தணிப்பது மட்டுமன்றி; போர் நடைபெறாத பகுதியில் இன்னும் தங்கியிருக்கும் குடிமக்கள் மற்றும் இடம் பெயர்ந்தோர் ஆகியோரை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தான் தற்போதைய உடனடித் தேவையாகும்” என்றும், இலங்கை அரசு கூறியிருப்பதாகத் தெரிவித்த பிரணாப் அவர்கள், “போர்ப் பகுதியிலிருந்து வெளிக்கொணரப்பட்டுள்ள அப்பாவி மக்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் அவர்கள் 100கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து ஒப்புதல் அளித்துள்ளார் என்பதை அறிவித்திட மகிழ்ச்சி அடைகிறேன்”

- என்றும் குறிப்பிட்டிருந்தார்.

நெடுமாறனைப் பொறுத்தவரையில் அவருக்கு எப்படியாவது தற்போது ஆளுங்கட்சியோடு இணைந்து ஏதாவது பயன்பெற வேண்டுமென்பதுதான் குறிக்கோள். அங்கே நெருங்க வேண்டுமென்பதற்கு என்ன வழி என்று பார்த்து, நம்மைத் தாக்கினால்தான், அங்கே உள்ளவர்கள் மனம் குளிர்வார்கள், தனக்கு தக்க இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்து, 24 மணி நேரமும் நம்மைச் சாடுவதிலேயே நேரத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கிறார்.

1984 ஆம் ஆண்டு ஆட்சியில் இருந்த எம்.ஜி.ஆர். ஈழ விடுதலைப் போராளிகள் அனைவரும் ஒன்று பட வேண்டுமென்று கூறியதாகவும், நான் அந்த முயற்சியை முறியடிக்கும் செயலிலே ஈடுபட்டேன் என்றும் ஜி.வி. இதழிலே தற்போது நெடுமாறன் கட்டுரை எழுதியிருக்கிறார்.

அதில் 1984-85களில் போராளிகளிடையே சகோதரச் சண்டையை தொடங்கி வைத்தவனே கருணாநிதிதான் என்று எழுதியிருக்கிறார். சகோதர யுத்தத்தைப் போராளிகளிடையே நான் தூண்டி விட்டேனா? அல்லது நெடுமாறன் கும்பல் தூண்டி விட்டதா? என்பதை அந்தப் போராளி இயக்கங்களைச் சேர்ந்தவர்களே நன்குணர்வார்கள். அந்தப் போராளிகள் இயக்கங்களை நான் தான் தூண்டிவிட்டேன் என்று நெடுமாறன் கூறுவதை வாதத்திற்காக ஒப்புக் கொண்டு கேட்கிறேன். நான்தான் போராளிகள் இயக்கத்தைத் தூண்டி விட்டவன் ஆயிற்றே? 1985ஆம் ஆண்டு மே திங்களில் என் தலைமையில் உருவான "டெசோ" அமைப்பில் இந்த நெடுமாறன் ஏன் ஒரு முக்கிய உறுப்பினராகச் சேர்ந்தார்? "டெசோ" அமைப்பின் சார்பில் கோவை, திண்டுக்கல், திருச்சி, சேலம் ஆகிய நகரங்களில் நடைபெற்ற பேரணிகளில் என்னுடன் எதற்காக நெடுமாறன் கலந்து கொண்டார்? கடைசியாக நடைபெற்ற வேலூர் பேரணியில் நெடுமாறன் கலந்துகொள்ளாமல் யாருக்கும் தெரியாமல் இலங்கை சென்றபோது, 10-10-1985 தேதியிட்டு எனக்கொரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில், "டெசோ இயக்கத்தை மேலும் வளருங்கள். ஏனெனில் தமிழீழம் காணப் போராடும் விடுதலைப் போராளிகளுக்கும் மக்களுக்கும் நமது "டெசோ" இயக்கத்தைத் தவிர உற்ற துணைவன் - உண்மையான துணைவன் வேறு யாரு மில்லை " என்று எழுதிய கை நெடுமாறன் அவர்களுடைய கை தானே? அப்போது முதல மைச்சர் எம்.ஜி.ஆர்., நெடுமாறன் குறிப்பிட்டுள்ள உணர்வோடு இருந்தார் என்றால், நெடுமாறன் அப்போது எழுதிய கடிதத்தில் "விடுதலைப் போராளிகளுக்கும் மக்களுக்கும் நமது டெசோ இயக் கத்தை தவிர உற்ற துணைவன், உணமையான துணைவன் வேறு யாருமல்ல" என்று எழுதியது இட்டுக்கட்டிய கற்பனையா? அல்லது; யாருக்கோ முட்டுக்கொடுக்கும் வேலையா?

அதுமாத்திரமல்ல; அந்தக் காலகட்டத்தில் இதே நெடுமாறன்; அவர் எழுதிய " மத்தியமாநில உறவுகள் - சில குறிப்புகள்" என்ற நூலினை நான்தான் வெளியிட வேண்டுமென்று கேட்டு, 30-6-

1985 அன்று சென்னை பெரியார் திடலில் தி.சு.கிள்ளிவளவன் தலைமை யில் நான் வெளியிட்டேன். அப்போது நெடுமாறனுக்கு நான்தான் இலங்கையில் சகோதரச் சண்டையை தொடங்கி வைத்தவன் என்று தெரியாமல் போய்விட்டதா?

நெடுமாறன் தனது கட்டுரையில் நான் ஏதோ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆரம்பம் முதல் நடந்து கொண்டேன் என்று சொல்லியிருக்கிறார். திம்பு பேச்சுவார்த்தைகள் முறிந்து விட்டநிலையில் திடீரென ஒரு நாள் மத்திய அரசு சென்னையிலே தங்கியிருந்த தமிழீழத் தலைவர்களை வெளியேற்ற முடிவெடுத்து, அதன் முதற்கட்டமாக 23-8-1985 அன்று தந்தை செல்வா அவர்களின் மகன் சந்திரஹாசன், விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆலோசகர் பாலசிங்கம், தமிழீழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சத்தியேந்திரா ஆகியோரை நாட்டை விட்டு வெளியேற்ற ஆணை பிறப்பித்து, தமிழகக் காவல் துறை மூலம் அவர்களைக் கைது செய்தது. இந்திய அரசின் இந்தக் கொடுமையான உத்தரவை எதிர்த்து "டெசோ" அமைப்பின் சார்பில் 25-8-1985 அன்று சென்னையில் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தினோம். பேரணி முடிவில் நான் பேசும்போது, நாடு கடத்தும் காரியம் நிறுத்தப்படா விட்டால், பிரதமருக்குக் கறுப்புக் கொடி காட்டப்படும் என்று அறிவித்தேன்.

நாடு கடத்தும் உத்தரவை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி 30-8-1985 அன்று தமிழகத்தில் ரயில் நிறுத்தப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. அந்தப் போராட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியரும், இதே நெடுமாறன் உட்பட ஆயிரக்கணக்கானவர்களும் கைது செய்யப்பட்டார்கள். இதன் விளைவாக பாலசிங்கம் மீதும், மற்றவர்கள் மீதும் பிறப்பிக்கப்பட்ட நாடு கடத்தும் உத்தரவை இந்திய அரசு திரும்பப் பெற்றது.

நெடுமாறன் அறிக்கையில் திரும்பத் திரும்ப நான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடந்து கொண்டதைப் போல தோற்றமளிக்கும் வகையில் குறிப்பிட்டுள்ளார். அது ஏதோ திட்டமிட்டு உள்நோக்கத்துடன் எழுதியுள்ளதாகவே தெரிகிறது. மதுரை "டெசோ" மாநாட்டிற்கு முன்பாக 1-5-86 அன்று இலங்கை வானொலியிலும், 2-5-1986 அன்று சில ஏடுகளிலும், இலங்கையில் விடுதலைப் புலிகளின் இயக்கமும், டெலோ

இயக்கமும் ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டதாகவும், அதிலே டெலோ இயக்கத் தலைவரான சிறீ சபாரத்தினத்தை விடுதலைப் புலி இயக்கத்தினர் கைது செய்து கொண்டு போய் விட்டதாகவும் செய்தி வந்தது.

அதைப் பற்றி "டெசோ" மாநாட்டையொட்டி; மதுரையில் என்னிடம் செய்தியாளர்கள் கேட்ட போது, "இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதற்குத் தமிழ்நாட்டிலே உள்ள அரசியல் தலைவர்கள் மாத்திரமல்லாமல், இந்திய நாடு முழுமையுமுள்ள பல்வேறு கட்சி அரசியல் தலைவர்களும் ஒன்றுபட்டு "டெசோ" மாநாட்டின் மூலம் குரல் கொடுக்கும் இந்த முக்கியமான நேரத்தில் இப்படியொரு சம்பவம் போராளிகளுக்குள் நடைபெற்றிருக்குமானால் அது விரும்பத்தக்கதல்ல. யார் முதலில் தவறு செய்தார்கள் என்பது இப்போது முக்கியமல்ல. போராளிகள் இயக்கத்தில் இரண்டு பெரும் பிரிவுகளான புலிகள் இயக்கமும், டெலோ இயக்கமும் ஒருவரையொருவர் அழித்துக் கொள்ள முயற்சி செய்வதை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்" என்றுதான் கூறினேன்.

அந்த மாநாட்டிற்காக வருகை தந்திருந்த வாஜ்பாய், என்.டி. ராமராவ், ராமுவாலியா போன்றவர்களின் முன்னிலையில், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் "நமக்குள் நாமே மோதிக் கொள்ளக் கூடாது, சகோதர யுத்தம் கூடாது, சபாரத்தினத்தைக் கொன்றுவிட வேண்டாம், இலங்கைத் தமிழர்களுக்காக அனைவரும் சேர்ந்துதான் பாடுபடவேண்டும்" என்று அவர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு உருக்கத்தோடு கேட்டுக் கொண் டேன். நெடுமாறனுக்கு இது தெரியாதா? இதே பிரச்சினை பற்றி வாஜ்பாய் அவர்கள் கூட அந்த நேரத்தில், "ஈழ விடுதலைப் போராளிகளே உங்கள் மோதலை நிறுத்துங்கள், ஒன்று படுங்கள், தனித் தமிழ் ஈழம் காண என்ன வழி என்பதை முடிவு செய்யுங்கள்" என்றுதான் கூறினார்.

4-5-1986 அன்று மதுரையில் நடைபெற்ற "டெசோ" மாநாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சார்பாக திலகரும் பேபி சுப்பிரமணியமும் கலந்து கொண்டனர். அந்த இயக்கத்தின் மீது எனக்கு காழ்ப்புணர்ச்சி இருக்குமானால் அவர்களை நான் அழைத்திருப்பேனா? மேலும் அந்த மாநாட்டில் பேசும்போது, "எட்டுப் பிரிவாக இயங்கும் தமிழீழத் தலைவர்கள் ஒற்றுமை

யாகச் செயல்படுவது குறித்து அந்தக் கூட்டத்தில் உறுதி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன்". இன்று திரிபுவாதம் பேசுகின்ற நெடுமாறன் அப்போது அந்த மாநாட்டிலேதான் இருந்தார். இதை இல்லை என்று மறுக்கிறாரா? அந்த மாநாடு நடைபெற்ற போதுதான் 6-5-1986 அன்று சிறீசபாரத்தினம் விடுதலைப் புலி இயக்கத்தினரோடு நடந்த மோதலில் கொல்லப்பட்டார் என்பதை அந்த இயக்கத்தின் ஆலோசகர் பாலசிங்கம் சென்னையிலே அறிவித்தார்.

அந்த சபாரத்தினத்தின் படத்திறப்பு நிகழ்ச்சி 18-5-1986 அன்று பெரியார் திடலில் நடைபெற்ற போது, "போராளி இயக்கங்கள் இனியாவது ஒன்றுபட்டு வேற்றுமைகளை மறந்து செயல்பட வேண்டும்" என்றுதான் நான் கேட்டுக் கொண்டேன். நெடுமாறன் இதையெல்லாம் வசதியாக மறந்துவிட்டு அல்லது மறைத்துவிட்டு இப்போது அறிக்கை விடுவது ஏன்?

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் என் மீது சாற்றப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்வதற்கு எனக்கு முதுகெலும்பு இல்லை என்று ஒரு வார்த்தையை நெடுமாறன் பயன் படுத்தியிருக்கிறார். எனக்கு முதுகெலும்பு இருக்கிறதா இல்லையா என்பதைத் தமிழ் நாட்டு மக்கள் அறிவார்கள். முதுகில் பெரிய அறுவை சிகிச்சை வரை நடைபெற்று அது உறுதி செய்யப்பட்டுவிட்டது. என்னை இவ்வாறு அர்ச்சனை செய்யும் நெடுமாறனின் முதுகெலும்பு எப்படியெல்லாம் வளையக் கூடியது என்பதையும் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். நான் அவருடைய பாணியிலே இறங்கி வந்து பதில் சொல்ல விரும்பவில்லை.

தன்னுடைய அறிக்கைக்கு ஆதரவு தேடுவதற்காக; நான் ஏதோ விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டுவதாக நெடுமாறன் கதை கட்டி யிருக்கிறார். விடுதலைப் புலிகளும், அந்த இயக்கத்தினரும் எனக்கு ஆதரவாக இருந்து விட்டால்; தங்கள் பிழைப்பை நடத்த முடியாது என்று நெடுமாறன் போன்றவர்கள் எண்ணி யிருக்கலாம். அதற்காக அவர்கள் ஆரம்பத்திலிருந்தே முயற்சித்திருக்கலாம். விடுதலைப் புலிகளிடம் எனக்கு அபிப்பிராயப் பேதம் என்றெல்லாம் பொய்யாக கதையளந்துதான் தங்கள் பிழைப்பை நடத்த வேண்டுமென்று இவர்கள் முற்பட்டால்; அவர்களுக்காக நான் பரிதாபப்படத்தான் முடியும்.

3-6-1986 அன்று என்னுடைய பிறந்த நாள் விழாவினையொட்டி உண்டியலில் 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மாலைக்குப் பதிலாக சேர்ந்தபோது, அந்த நிதியினை பல்வேறு போராளி இயக்கங்களுக்கு எவ்வாறு பிரித் தளிப்பது என்று பேசியபோது, விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அனைத்துப் போராளி இயக்கங்களுக்கும் அளிப்பதென்றுதான் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் நெடுமாறன் போன்றவர்களின் மறைமுகத் தூண்டுதல் காரணமாகவோ என்னவோ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அந்தத் தொகையைப் பெற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும் அன்றிரவு 12 மணியளவில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் திரு. பாலசிங்கம் அவர்கள் என்னை என் இல்லத்தில் வந்து சந்தித்து, தங்களால் ஏன் அந்த நிதியைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை என்பதை விளக்கினார். என்ன காரணம் சொன்னார் என்பதை நான் இப்போது நாகரிகம் கருதி வெளியிட விரும்பவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும், அங்கேயுள்ள தமிழர்கள் அமைதியாகவும், நலத்தோடும் வாழ வேண்டும் என்பதற்காகவும் நான் என் மனச்சாட்சிப்படி என்னால் முடிந்த அளவிற்கு என் வாழ்க்கையில் பணியாற்றியிருக்கிறேன். இப்போதும் பணியாற்றி வருகிறேன். இதிலே நெடுமாறன் போன்றவர்களின் சான்றிதழ்களை நான் ஏற்கனவே பெற்றிருக்கிறேன். எனவே இப்போது அவரைப் போன்றவர்களிடமிருந்து ஒதுங்கியிருக்கவே விரும்புகிறேன். என் மீது குறை கூறி விரலை நீட்டுகின்ற நெடுமாறன் போன்றவர்கள் வாய் ஜாலம் காட்டுவதைத் தவிர இலங்கைத் தமிழர்களுக்காக என்ன செய்தார்கள் என்பதையும் தமிழர்கள் அறிவார்கள். என்னைப் பற்றியும் நன்கறிவார்கள். ஏதோ என்னைத் தாக்கி எழுதினால் தங்கள் பிழைப்பு நடக்காதா என்பதற்காக எழுதுகிறார்கள் என்றால் எழுதி விட்டுப் போகட்டும்! எதையும் தாங்கும் இந்த இதயம் - வாழ்க வசவாளர்கள்! என்று மட்டும் அண்ணா வழியில் கூறி, அவ்வழியில் நடப்போம் நாம்!

அன்புள்ள,

மு.க.

03-09-2012

3652. மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைப்போம்; வா!

உடன்பிறப்பே,

முப்பெரும் விழாவினை இந்த ஆண்டு எந்த மாவட்டத்தில் நடத்துவது என்ற பேச்சு, அண்ணா அறிவாலயத்தில் எழுந்தபோது, சில மாவட்டக் கழகச் செயலாளர்கள், அங்கே இருந்தவர்கள் தங்கள் தங்கள் மாவட்டத்திலே நடத்துவதாக முந்தினார்கள். கழகப் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலின், இந்த ஆண்டு முப்பெரும் விழாவினை விழுப்புரத்திலே நடத்துவதாக முன்பே சொல்லிவைத்துள்ளார். "டெசோ" மாநாட்டினை அங்கே நடத்துவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, பின்பு சென்னைக்கு மாற்றப்பட்டதால், அவருக்கு

முன்னுரிமை தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்றதும், பொதுச் செயலாளர் பேராசிரியரும் வழிமொழிய இந்த ஆண்டு முப்பெரும் விழாவினை விழுப்புரத்திலே நடத்துவதென்று முடிவெடுக்கப்பட்டுவிட்டது. விழுப்புரம், தற்போதே விழாப் புரமாக காட்சி அளிப்பதாக செய்திகள் வருகின்றன. பொன்முடியின் ஏற்பாடல்லவா? கேட்கவா வேண்டும்!

முடிவெடுக்கப்பட்டு செய்தி வெளிவந்த மறுநாள் சென்னைக்கு வந்து நன்றி தெரிவித்து விட்டு உடனே நான் விழுப்புரம் செல்கிறேன் அண்ணா, முப்பெரும் விழா வேலைகள் இருக்கின்றன என்று கூறிவிட்டு, நான் சம்மதம் தெரிவிப்பதற்கு முன்பே புறப்பட்டு விட்டார்.

முப்பெரும் விழா - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை நம் நினைவில் பதித்து - நெஞ்சில் செதுக்கிய - நிகரில்லாத் தமிழர் கோமான் யார் என்ற கேள்விக்கு - ஒரே விடையாக விளங்குகின்ற வித்தகர் - தன்மானக் குன்றம் - தரணி வாழ் தமிழர்க்கெல்லாம் பெருமன்றம் - தகைமைக்கு இலக்கணமாய் - பகைமைக்கும் பரிவு காட்டும் நற்குணச்

செல்வமாய்த் திகழும் பேரறிஞர் அண்ணாவின் 104வது பிறந்த நாள் விழா! இந்த ஆண்டு முப்பெரும் விழாவினை, முப்பெரும் விழா மாநாடாகவே நடத்துகின்ற ஏற்பாட்டினைத் தொடங்கி - விழுப்புரத்தில் மாபெரும் விழா மட்டுமல்ல; அதனை மாநாடு போலவே நடத்துகிறோம்.... நாட்டு வாட்டம் போக்கிடவும், நலிவு தீரவும் எத்தனையோ மாநாடுகளை திட்டமிட்டு நடத்திக்காட்டிய நம் அண்ணனுக்கு நாம் நடத்துகின்ற மாநாடு இது. அவரை ஆளாக்கிய தந்தை பெரியாருக்கு நாம் நடத்துகின்ற மாநாடு இது. நம்முடைய கழகத்திற்கு நாம் நடத்துகின்ற மாநாடு இது என்று விழுப்புரம் மாவட்டக் கழகக் காவலர்களும் - மாவட்டக் கழக நிர்வாகிகளும் - விழுப்புரத்தில் கண்கொள்ளாக் காட்சிகாண நம்மை அழைத்திருக்கின்றனர்.

செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் காலை 7.30 மணியளவில், சென்னை வள்ளுவர் கோட்டத்திற்கு எதிரே அமைந்துள்ள அண்ணாவின் திரு உருவச் சிலைக்கு நானும், பேராசிரியரும், பொருளாளரும் மற்றும் கழக முன்னணியினரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு, விழுப்புரம் முப்பெரும் விழா மாநாட்டில் கலந்து கொள்ளப் புறப்படுகிறோம். விழுப்புரத்தில் முப்பெரும் விழா நிகழ்ச்சிகள் திறந்தவெளி மாநாடாக நடத்தினால் எங்கே மழை வரக் கூடுமோ என்பதற்காக இந்த ஆண்டு பந்தல் அமைத்து சிறப்பாக நடத்துகிறார்கள் விழுப்புரம் மாவட்டக் கழகக் கண்மணிகள், தம்பி பொன்முடி தலைமையில்!

காலை 10 மணியளவில் - நமது கழகத்திற்கு வலுச்சேர்க்க பட்டி தொட்டியெல்லாம் பயணம் செய்து - பட்டி மன்றங்கள் மூலமாக பிரச்சாரம் செய்து வருகின்ற தம்பி திண்டுக்கல்

ஐ. லியோனி குழுவினரின் பட்டிமன்ற நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. பட்டிமன்றத்தின் தலைப்பு - "நூறாண்டு திராவிட இயக்க வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தது கலைப்பணியே - அரசியல் பணியே".

பட்டிமன்ற நிகழ்ச்சி முடிந்ததும் சிறிது நேரம் மட்டுமே இடைவேளை! 3 மணியளவில் தம்பி இறையன்பன் குத்தூசு அவர்களின் கழகப் பாடல்கள் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்.

மாலையில் தொடக்க நிகழ்ச்சியாக விழுப்புரத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் புதிதாக அமைந்துள்ள பேரறிஞர்

அண்ணா அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலையினை பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தலைமையில், பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலின் முன்னிலையில் நான் திறந்து வைக்கிறேன்.

அடுத்து முப்பெரும் விழா மேடையில் - அண்ணா அவர்கள் தன் வாழ்வில் மாணவர்கள் பால் பெரிதும் அன்பும் அக்கறையும் கொண்டு, அவர்களை முன்னேற்றப் பாடுபட்டார் என்பதற்கு அடையாளமாக - மேல் நிலைப் பள்ளித் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு தி.மு.கழக அறக்கட்டளை சார்பில் நிதியளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் ஒப்பித்தல் போட்டியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப் பட்ட கல்லூரி மற்றும் மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு முரசொலி அறக்கட்டளை சார்பில் நிதியளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி யும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, தொழிலாளர்கள்பால் அண்ணா நேசம் கொண்டவர் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் வழங்குவதைப் போலவே இந்த ஆண்டும் சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கான நற்சான்று, பண முடிப்பு, பதக்கம் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

மாலையில் முப்பெரும் விழா விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி - அந்த விழாவிற்கு பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் தலைமை தாங்கிட தந்தை பெரியார் விருதினை மும்பை பொ. அப்பாதுரை அவர்களுக்கும், அண்ணா விருதினை அ. இரகுமான்கான் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களுக்கும் என் பெயரால் உள்ள கலைஞர் விருது ஆர்.டி. சீத்தாபதி அவர்களுக்கும், என்னால் வழங்கப் படவுள்ளது. விழுப்புரம் மாவட்டக் கழகச் செய லாளர் தம்பி பொன்முடி வரவேற்புரை ஆற்றிட, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர். ஜனகராஜ் நன்றியுரையாற்ற உள்ளார்.

நீர் இடித்து நீர் விலகாது என்ற பழமொழிக்குச் சான்றாக நின்ற - நிற்கின்ற - நிற்கப் போகின்ற இந்தத் திராவிடர் இயக்கத் தின் வரலாறு; தீரர்கள் நடேசனார், நாயர், தியாகராயருடன் விளைந்து வாடிவிட்ட காளான் செடி அல்லவே! - களங்கள் பலவற்றில் பகை உணர்வுகளைப் பந்தாடி - வென்றும் - வீழ்ந்தும்

- உயர்ந்தும் - தாழ்ந்தும் - இன்று உச்சி முட்டக் கொடி பறக்க திராவிட இயக்கத்தின் வரலாறு; தீப்பொறியாகக் காற்றில் பறந்து மறைந்து விட்டதல்ல; தீபமாக ஒளி விட்டவாறு தென்னக மக்களின் நம்பிக்கை மிகுந்த ஜோதிச் சுடராக; விண்ணுக்கும் மண்ணுக்குமாக எழுந்து நிற்கும் பேரொளியாக விளங்குகிற தென்றால்; அதற்கு ஒரு தாயிடம் உருக்கமுடன் அன்பு செலுத்தும் மகனைப் போல - இந்த இயக்கத்தின் மூத்த பிள்ளையாகிய அண்ணா அவர்களிடம் - இளைய பிள்ளைகளாகிய நாம் காட்டிய பாசம், பரிவு, கொண்டிருந்த பந்தம், கொண்டிருக்கும் சொந்தம்; இவைகள் அல்லவா தலையாய காரணங்கள்!.....

"தன்னை வெல்வான் தரணியை வெல்வான்" என்று இந்தத் தம்பியை பாளையங்கோட்டை தனிமைச் சிறைச்சாலையில் தங்கத் தமையன் அண்ணா வாழ்த்தினார் என்றால்; உன் உழைப்புத்தான் இந்த இயக்கத்துக்கு உயிர் என்று உத்தமப் பெரியார் உரைத்தார் என்றால் - உன் போன்ற உடன்பிறப்புகள் என்னுடன் கொண்டுள்ள உறவும்; உதவிடும் ஒத்துழைப்பும் - அல்லவா என் உதிரத்துடன் கலந்து எனக்கோர் புத்துணர்ச்சியை வழங்கி; இந்தப் புவியில் மேலும் பல வெற்றிகளைப் பெற்றிட ஆர்த்தெழும் அறப்போர் ஆயுதங்களாக அணிவகுத்திருக்கின்றன.

உடன்பிறப்பே,

இந்த விழாக்கள் பற்றிய செய்திகள் ஏற்கனவே ஏடுகளில் வெளிவந்து அவற்றில் கலந்து கொள்ள புறப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு நீ இருக்கிறாய் என்பதை நான் அறிவேன். இருந்தாலும், அண்ணாவின் விழாவிற்கு, அண்ணன் நான் அழைக்க வில்லையே என்ற குறை உனக்குமிருக்கு மல்லவா? அதற்காகவே இந்தக் கடிதம்! தலைமைக் கழகம், அண்ணாவிற்கு விழா எடுத்த போதும், உனது சொந்த ஊரில் உன்னால் முடிந்த அளவிற்கு அண்ணாவிற்கு விழா எடுப்பாய் என்பதை நான் நன்கறிவேன். அதுதான் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி வீசும். இருந்தாலும் விழுப்புரம் எடுக்கும் இந்த விழாவிற்கு நீ உன் குடும்பத்தோடு புறப்படத் தயாராகு!

மனக் கலக்கத்தில் ஒரு மணல் துளியளவு கூட தலைவனுக்கு வருதல் கூடாது என்று என் தம்பிமார்கள் எண்ணிடுவார்களேயானால்;

அண்ணா போல் புன்னகை தவழும் முகத்துடன்
அய்யா போல் நெஞ்சு நிமிர்த்திய நடையுடன்
வயதான இந்தக் காலத்திலும் வாலிப முறுக்கு
எனக்கும் வந்தே தீரும் தம்பீ!

என்று திடம் கொள்கிறேன் - திசை யெட்டுமிருந்து தீ பரவினாலும் - தீயோர் வலை நாள்தோறும் விரிக்கப்பட்டாலும் - கணைகள் ஆயிரமாயிரம் கடுகிப் பறந்து வரினும் கவலைப்படாது;

கருமமே கண்ணாக -
கழகமே பாசறையாக -
பெரியாரே துணையாக -
பேரறிஞர் அண்ணாவே என் உயிரின் இணையாக -

இருக்கும்போது; இந்த முப்பெரும் விழா - விழுப்புரம் நகரில் நடைபெறுகிறது;

அதில் நான் கலந்து கொண்டு கழகத் தீரர்களுக்கு விருது வழங்கும் வாய்ப்பு பெறுகிறேன் என்பதை நினைத்தால்;

இதனை இரட்டிப்பு மகிழ்ச்சி என்பதா?

இடையறாத மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கப் போகிறேன் என்பதா?

வாழ்க திராவிடம்
வெல்க திராவிட உணர்வு -
வாழ்க தமிழ்
வெல்க தமிழர்!

அன்புள்ள,
மு.க.
10-9-2012

3653. தன்மானம் பற்றிப் பேசத் தகுதி வேண்டாமா?

உடன்பிறப்பே,

திருவரங்கத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அரசு பற்றிய செய்திகளைக் கூறுவதைவிட, என்னையும், ஏனைய எதிர்க்கட்சியினரையும் கடுமையாகத் தாக்குவதில்தான் அக்கறை காட்டியிருக்கிறார். என்ன காரணமோ தெரியவில்லை; நமது முதல் அமைச்சருக்கு வாயைத் திறந்தாலே, மற்றவர்களைத் திட்டுகின்ற வார்த்தைகள்தான் வருகிறதே தவிர, நல்ல வார்த்தைகளே வருவதில்லை. அவருடைய சொந்தத் தொகுதிக்குச் சென்று, அரசு நல்வாழ்வுத் திட்டங்களை வழங்குகின்ற விழா நடைபெறுகிறது. அங்கே நான் எப்படி ஞாபகத்திற்கு வந்தேன்? என்னைத் திட்டுவதற்காக ஒரு விழாவா? அதுவும் அரசு செலவிலா? பாவம், அவர்தான் என்ன செய்வார்? அவர் கலந்து கொள்வது ஒன்று சொந்தத் தொகுதியில் நடைபெறும் விழாவாக இருக்கும்; இல்லாவிட்டால் அவர் சென்று தங்குகின்ற எஸ்டேட் அருகிலே உள்ள வங்கியிலே ஏதாவது ஒரு ஏ.டி.எம். மையம் திறக்கின்ற விழாவாக இருக்க வேண்டும். மற்ற திறப்பு விழாக்கள், அது எவ்வளவு பெரிய பாலமாக இருந்தாலும், கட்டிடமாக இருந்தாலும் தலைமைச் செயலகத்தில் இருந்த படியே "வீடியோ கான்பரன்ஸ்" மூலமாகத் திறந்து வைத்து விடுவார்.

"இலங்கையில் தமிழினம் அழியக் காரண மாக இருந்தவர், இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பது போல் நாடகமாடுகிறார்" என்று சாடியிருக்கிறார். தன்மானம் பற்றி யார் பேசுவது என்றே இல்லையா? யார் பேசினாலும் இவர் பேசலாமா? இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்

துணிச்சலுடன் தீர்மானம் நிறைவேற்றினேன் என்று தற்பெருமை பாடியிருக்கிறார் ஜெயலலிதா! பேரவையில் இலங்கைத் தமிழர்களுக்காக இந்த ஒரு தீர்மானத்தை மட்டுமா ஜெயலலிதா துணிச்சலோடு நிறைவேற்றினார்?

16-4-2002 அன்று இதே ஜெயலலிதா தமிழ்நாடு சட்டப்பேரவையில் அவரே ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து "மெஜாரிட்டி" யோடு நிறைவேற்றினாரே, அது மறந்து விட்டதா? என்ன தீர்மானம் அது? இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு காட்டும் தீர்மானமா? இதோ அந்தத் தீர்மானம் -

"இலங்கை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இச்சட்டப் பேரவை வற்புறுத்துகிறது. மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும் இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது. இலங்கை அரசின் அனுமதியைப் பெற்று, நமது இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி பிரபாகரனை சிறை பிடித்துக் கொண்டு வர வேண்டும்"

இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் விளைவிக்கும் இந்தத் தீர்மானத்தை தமிழகச் சட்டமன்றத்திலே முன் மொழிந்தவர், தன்மானம் (?) மிகுந்த இந்த ஜெயலலிதா அல்லவா?

இலங்கையிலே சிங்களப் படையினர் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த போது, அதனைக் கண்டித்து தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளும் ஆர்ப்பாட்டங்களும், கண்டனப் பொதுக் கூட்டங்களும் நடத்திக் கொண்டிருந்த நேரத்தில், இதே ஜெயலலிதா என்ன சொன்னார்?

"இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர் நடக்கும்போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். இதில் எந்த நாடும் விதி

விலக்கல்ல. எங்கே யுத்தம் - போர் நடந்தாலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். ஆனால் இன்று இலங்கையில் என்ன நடக்கிறதென்றால், இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல விடாமல் விடுதலைப் புலிகள் அவர்களைப் பிடித்து வைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாக ராணுவத் தின் முன்னால் அவர்களை ஒரு கேடயமாக பயன்படுத்திக் கொண் டிருக்கிறார்கள்"

என்று 17-1-2009 அன்று அறிக்கை விடுத்த ஜெயலலிதா; என்னைப் பார்த்து தன் மானத்தை இழந்தவன் என்று சொல்லலாமா?

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குவதைப் பற்றியும் முதல் அமைச்சர் திருவரங்கத்தில் பேசியிருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்பு தான், இதே அ.தி.மு.க. அரசின் காவல் துறை, கூடங்குளத்தில் போராடிய அந்தோனி ஜான் என்ற ஒரு மீனவரைக் கொன்று, அவருடைய குடும்பத்தை நடுத்தெருவிலே நிறுத்தியிருக்கிறதே, அதற்கு என்ன பதில் சொல்லப்போகிறார்?

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவராக இருந்த தமிழ்ச் செல்வன் மறைந்த போது 4-11-2007 தேதிய "முரசொலி"யில் நான் ஒரு இரங்கல் கவிதை எழுதினேன். அது,

"எப்போதும் சிரித்திடும் முகம்
எதிர்ப்புகளை எரித்திடும் நெஞ்சம்!
இளமை, இளமை, இதயமோ;
இமயத்தின் வலிமை, வலிமை!
கிழச் சிங்கம் பால சிங்கம் வழியில்
பழமாய்ப் பக்குவம் பெற்ற படைத் தளபதி!
உரமாய்த் தன்னையும் உரிமைப் போருக்கென உதவிய
உத்தம வாலிபன் - உயிரனையான் -
உடன்பிறப்பனையான்;
தமிழர் வாழும் நிலமெலாம் அவர்தம் உளமெலாம்
தன்புகழ் செதுக்கிய செல்வா; எங்கு சென்றாய்?"

இவ்வாறு; இறந்துபோன ஒருவருக்கு இரங்கல் தெரிவித்ததைக்கூட, ஜெயலலிதாவினால் பொறுத்துக்கொள்ள

முடியாமல், என் கவிதையைக் கண்டித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், புலிகளுடன் கருணாநிதிக்கு ரகசியத்தொடர்பு இருக்கின்றது என்றும், அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்தவர்தான் ஜெயலலிதா. அவர் என்னைப் பார்த்து தன்மானத்தை இழந்தவன் என்று கூறுவதற்கு என்ன தகுதி உள்ளது?

14.10.2008 அன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினேன். 15.10.2008 அன்று பிரதமருக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து கடிதம் எழுதினேன். 13.11.2008 அன்று உணவுப் பொருட்கள், துணிவகைகள் மற்றும் மருந்து பொருட்களை இலங்கைத் தமிழர்களுக்காக கப்பல் மூலம் அனுப்பி வைத்தோம். 2009ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களுக் காக சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது - "இலங்கையிலே தமிழ் ஈழம் மலரும் என்றால், அதற்காக ஆட்சியை இழக்கக் கூட நாங்கள் தயார்" என்று அறிவித்தவன் நான்.

1956ஆம் ஆண்டிலேயே சிதம்பரம் தி.மு. கழகப் பொதுக்குழுவிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையில் இலங்கைத் தமிழர்களுக்கான தீர்மானத்தை முன் மொழிந்தவனே நான்தான்! அந்த ஆண்டிலே பிறந்தார்களோ, பிறக்கவில்லையோ அவர்கள் எல்லாம் நான் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே தன்மானத்தை இழந்து விட்டேன் என்று புலம்புகிறார்கள் என்றால், அதைவிட வெட்கக்கேடு வேறு ஏதாவது இருக்க முடியுமா?

24-8-1977 அன்று சென்னை மாநகரிலே ஒரேநாள் அறிவிப்பில் ஐந்து இலட்சம் பேரைத் திரட்டி இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பிரம்மாண்டப் பேரணி நடத்தியவன் நான். 1981ஆம் ஆண்டு இலங்கையிலே தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற செய்தி ஏடுகளில் வந்ததும், 13-8-1981 அன்று இந்தியப் பிரதமருக்கு "கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் இலங்கையின் கிழக்கிலும் தெற்கிலும் கலவரங்கள் பரவி வருகின்றன என்று தெரிவிக்கின்றன. அங்குள்ள அரசே கலவரத்தை ஊக்குவிப்பதாகத் தோன்றுகிறது. தமிழர்களின் இல்லங்கள் தாக்கப்படுகின்றன. தமிழ்ப் பயணிகள் கொள்ளை அடிக்கப்பட்டு ரயிலை விட்டு தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினையை தீர்க்க மனிதாபிமான அடிப்படையில் உதவிட வேண்டும்" என்று கேட்டு தந்தி அனுப்பியவன் நான். இதே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக 81ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் அன்று தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த அ.தி.மு.க. அரசினால் கைது செய்யப்பட்ட நான் இப்போது நாடகம் நடத்துகிறேனாம்.

25-7-1983 அன்று வெலிக்கடை சிறைச்சாலைக்குள் நுழைந்து 35 தமிழர்களை படுகொலை செய்த போது - சென்னை மாநகரில் 7 மணி நேர அவகாசத்தில் 8 இலட்சம் பேரைக் கூட்டி மாபெரும் பேரணி நடத்தியவன் நான். மத்திய - மாநில அரசுகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டிட வேண்டு மென்பதற்காக 10-8-1983 அன்று நானும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் எங்களுடைய சட்டப்பேரவை உறுப்பினர் பதவிகளையே ராஜினாமா செய்தவர்கள். 16-5-1985 அன்று காஞ்சிபுரத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டேன். அதே ஆண்டு ஆகஸ்ட் 23ந்தேதியன்று சந்திரஹாசன், பாலசிங்கம், சத்தியேந்திரா ஆகியோரை நாடு கடத்த உத்தரவிட்டதை அடுத்து சென்னையில் ஊர்வலம் நடத்தி, அந்த உத்தரவு ரத்து செய்யப் படாவிட்டால் போராட்டம் தொடருமென்று அறிவித்து, அதன் தொடர்ச்சியாக நாடு கடத்தும் உத்தரவைத் திரும்பப் பெறச் செய்தவனும் அடியேன்தான்.

இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டி 1986ஆம் ஆண்டு மே திங்களில் மதுரையில் "டெசோ" அமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டினை நடத்தியவனும் நான்தான். இப்படி தொடர்ந்து சொல்லிக் கொண்டே போகலாம்; அயர்ந்து விடாமல் அடுக்கடுக்கான நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொண்டவன் நான். ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக தமிழகச் சட்டப்பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றிய ஒரே முதலமைச்சர் இந்த ஜெயலலிதாதான்! வாழ்க தன்மானம்!

1997ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, "சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க கருணாநிதி முயலுகிறார், விடுதலைப் புலிகள் தமிழகத்தில் மீண்டும் தலைதூக்கி

விட்டார்கள்" என்று ஜெயலலிதா கண்டன அறிக்கை விடுத்ததை மறந்து விட முடியுமா?

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட "அமைதிப்படை" இலங்கைத் தமிழர்களையே கொன்று குவித்து விட்டு தாயகம் திரும்பிய நேரத்தில் முதல் அமைச்சராக இருந்த நான் அவர்களை வரவேற்கச் செல்ல மறுத்து விட்டேன். அதைப் பற்றி அப்போது ஜெயலலிதா, "இந்திய அமைதிப் படையை வரவேற்கச் செல்லாதவர்தான் தி.மு.க. தலைவர் கருணாநிதி" என்று விமர்சனம் செய்தபோது; "இலங்கைத் தமிழர்களையும் தமிழச்சிகளையும் கொன்று குவித்துவிட்டு திரும்புகிற இந்திய ராணுவத்தை வரவேற்க நான் போகமாட்டேன்" என்று கூறியவன் நான்!

இலங்கைத் தமிழர்களுக்காக, தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போது மத்திய அரசை வலியுறுத்தி எதுவுமே செய்யவில்லையாம்! 23-4-2008 அன்று தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போதுதான் - தமிழகச் சட்டப் பேரவையில் - "இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக, அங்கே மோதலில் ஈடுபட்டு வரும் இரு பிரிவுகளுக்கிடையே பேச்சுவார்த்தைகளுக்கு இந்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்; இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முறையானதொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்காக பயனுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசு முன்வர வேண்டுமென்று இப்பேரவை வலியுறுத்துகிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அவையின் நடவடிக்கை குறிப்பினை எடுத்துப் பார்த்தாலே நன்கு தெரிந்து கொள்ளலாம்.

தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியதோடு நின்று விடவில்லை. 6-10-2008 அன்று இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு - புதுடெல்லியிலே உள்ள இலங்கைத் தூதரை மத்திய அரசு உடனடியாக நேரில் அழைத்து, நிராயுதபாணியாக உள்ள இலங்கைத் தமிழர்களைக் கொல்வது குறித்து, இந்தியாவின் மன வருத்தத்தை தெரிவிக்க வேண்டுமென்றும், இலங்கை அரசின் ராணுவ நடவடிக்கையும், இனப் படுகொலையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொண்டதை ஜெயலலிதா வசதியாக மறந்து விட்டு அல்லது வேண்டுமென்றே மறைத்து விட்டு தற்போது குற்றஞ்சாட்டுவது

சரிதானா என்பதை தமிழ்நாட்டு மக்கள்தான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்!

2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மாத்திரம் 7-12-2006 அன்றும், 23-4-2008 அன்றும், 12-11-2008 அன்றும், 23-1-2009 அன்றும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பேரவையில் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அந்தத் தீர்மானங்களில் எதுவும், ஜெயலலிதா சட்டமன்றத்தில் நிறைவேற்றி மகிழ்ந்த; 'இலங்கைக்குப் படையை அனுப்பி, பிரபாகரனை சிறைப்பிடித்துக் கொண்டுவர வேண்டும்' என்ற தீர்மானத்தைப் போன்றதல்ல, தன்னலம் காரணமாக நான் தன்மானத்தை இழந்து விட்டேனாம் - ஜெயலலிதா கூறுகிறார். இரண்டு முறை இலங்கைத் தமிழர்களுக்காகவே ஆட்சியை இழந்து, ஒரு முறை பேராசிரியரோடு இணைந்து சட்டமன்ற உறுப்பினர் பதவியையே ராஜினாமா செய்த நான் தன்னலவாதியாம். ஆனால் ஜெயலலிதா பொது நலவாதியாம்! எனக்கு தன்மானம் கிடையாது என்கிறார். தன்மானம் எங்கே கிடைக்கும்? அது கடையிலே கிடைக்குமா? படிக் கணக்கிலா? மரக்கால் கணக்கிலா? எப்படி கிடைக்கும் என்ற விவரமே புரியாதவர், என் தன்மானத்தைப் பழிப்பது; பத்மாசூரன், யார் தலையிலே கையை வைத்தாலும், அவர்கள் எரிந்து போகும் வரம் வாங்கிவிட்டு, பிறகு தன் தலையிலேயே தன் கையை வைத்துக் கொண்டதாகச் சொல்லப்படும் கதையாகத்தான் முடியும்!

அன்புள்ள,

மு.க.

15-9-2012

3654. பெரியார் பிறந்தநாளில் ‘அதை நினையுங்கள் - இதை மறந்து விடுங்கள்!’

உடன்பிறப்பே,

இன்று தந்தை பெரியார் அவர்களின் 134ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா.

நேற்றையதினம் விழுப்புரத்தில் நமது அண்ணனின் 104ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா - தந்தை பெரியார் பிறந்த நாள் விழா - கழகம் பிறந்த நாள் விழா என தமிழர் வரலாற்றில் மிகச் சிறப்புக்குரிய மூன்று நிகழ்வுகளையும் ஆண்டு தோறும் நாம் முப்பெரும் விழா கொண்டாடுவதைப் போல; இந்த ஆண்டு முப்பெரும் விழா நடைபெற்று முடிந்த மகிழ்ச்சியோடு அமர்ந்துள்ளேன். விழுப்புரத்தில் முப்பெரும் விழாவா நடந்தது? ‘முப்பெரும்’ மாநாடே நடந்தது. எங்கு நோக்கினும் கழகத்தினர்! கழகத்தினர்! கழகத்தினர்! - நான் ஏற்கனவே எழுதியது போல விழுப் புரம் விழாப் புரமாக - விழிப்புணர்வு பெற்ற விழுப்புரமாக அளித்த காட்சியினை; கண்டோம். எழுச்சி - எழுச்சி - எழுச்சி - எங்கு நோக்கினும் கழகக் கொடிகள், பதாகைகள் - வரவேற்பு வளைவுகள் - தோரணங்கள் - ஒவ்வொன்றிலும் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பொன்முடியின் உழைப்பும் - விழுப்புரம் மாவட்டக் கழகத் தோழர்கள் பட்ட பாடும் தெரிந்தது. காலை முதல் இரவு 10 மணி வரை ஒரு நிமிடம் கூட ஓய்வில்லை. மகிழ்ச்சியின் எல்லையில் நின்று விழாவினை இரவு 10.15 மணியளவில் முடித்து விட்டு, சென்னை புறப்பட்டோம். வழியில் திண்டிவனத்தில் 11 மணியளவில் இரவு சாப்பாடு என்ற ஒன்றை முடித்து விட்டு அங்கிருந்து புறப்பட்டு விடியற்காலை 3 மணிக்குத்தான் சென்னை திரும்பி உறங்கச் சென்றேன்.

அந்த எண்ணங்களோடு காலையில் எழுந்தவுடன் நாளை தந்தை பெரியார் அவர்களின் 134வது பிறந்த நாள்

விழாவினையொட்டி, அவரோடு பழகிய நிகழ்வுகள் எல்லாம் என் நினைவுகளில் அலை அலையாக எழுந்தது. நேற்று விழுப்புரம் முப்பெரும் விழாவில் "சாந்தா அல்லது பழனியப்பன்" என்ற நாடகத்தை நாகை திராவிட நடிகர் கழகத்தின் சார்பில் நடித்தது பற்றியெல்லாம் சொன்னேன் அல்லவா; அதை முடித்து விட்டு புதுச்சேரிக்குத்தான் புறப்பட்டோம். இந்த நாடகத்தில் நான் தாங்கிய பாத்திரத்திற்குப் பெயர் சிவகுரு. புதுவை பொது மக்கள் என்னை "சிவகுரு" என்றே அழைக்கத் தொடங்கினர். புதுவையில் பெரியார், அறிஞர் அண்ணா, தளபதி அழகிரிசாமி போன்ற தலைவர்களையெல்லாம் அழைத்து மாநாடு ஒன்றினை நடத்தினோம். ஆனால் எங்களுக்கு எதிர்ப்பாளர்கள் "திராவிடத் தலைவர்களே, திரும்பிப் போங்கள்" என்று கூச்சலிட்டனர். "வா என்றழைப்பதுதான் தமிழர் பண்பு, போ என்று கூற காரணம் யாதோ'' என்று தன் பேச்சைத் தொடங்கி அண்ணா அவர்கள் அரியதோர் உரையாற்றினார்கள். அந்த உரையினைத் தொடர்ந்து கழகக் கொடியை ஏற்றி வைத்தார்கள். கொடி ஏற்றப்பட்ட அடுத்த வினாடியே கொடி மரத்தை வீழ்த்தி விட்டார்கள் எதிரிகள்! அவ்வளவு தான், அமளி தொடங்கி விட்டது. பெரியாரையும், அண்ணாவையும் பத்திரமாக ஒரு வண்டியில் ஏற்றி அனுப்பி விட்டு, நானும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும், காஞ்சி கல்யாண சுந்தரமும் நடந்து வந்து கொண்டிருந்தோம். ஒரு பெருங்கூட்டம் எங்களை சூழ்ந்து கொண்டது. அந்தக் குழப்பத்தில் ஆளுக்கு ஒரு திசையில் பிரிந்து விட்டோம். அடி, அடி, அடி என்று அடித்தார்கள். என் மீது விழுந்த அடிகள் சிலவற்றை திருவாரூர் அண்ணன் ராசகோபால் வாங்கிக் கொண்டார். என் சட்டையில் மாட்டப் பட்டிருந்த "பெரியார் பேட்ஜை" பறிப்பதற்காக ஒருவன் என் சட்டையைக் கிழித்தான். நான் அந்த பேட்ஜை விடாமல் என் கையால் பற்றியவாறு ஓட முயற்சித்தேன். அன்றைக்கு என் சட்டையோடு சேர்த்து பெரியாரின் பேட்ஜை பிடித்திருந்த நான் இன்று வரை அந்த நினைவுகளையும் விடாமல் பிடித்துக் கொண்டுதான் உள்ளேன். அந்தப் பெரியாருக்குத்தான் இன்று பிறந்த நாள் விழா.

அடித்தவர்கள் களைத்துப் போய், நானும் செத்திருப்பேன் என்று எண்ணிக் கொண்டு சாக்கடையோரத்தில் என்னைத் தூக்கி வீசி விட்டு போய் விட்டார்கள். "ஐயோ, யார் பெற்ற

பிள்ளையோ? இப்படிச் சாகக் கிடக்கிறதே?" என்று சொல்லிக் கொண்டே ஒரு மூதாட்டி தன் வீட்டிற்குள் என்னைக் கொண்டு போய் காப்பாற்றினார்கள். என் நிலைமை என்னவாயிற்று என்று தெரியாமல் பெரியாரும் அண்ணாவும் ஊர் முழுவதும் தேடச் சொல்லி பிறகு விடியற்காலை 4 மணியளவில் என்னைக் கண்டுபிடித்து, மீண்டும் கலகக்காரர்கள் தாக்குவார்களோ என்றஞ்சி, கைலி, நீண்ட ஜிப்பா, தலையில் குல்லாய் அணிவித்து பெரியாரிடம் அழைத்துச் சென்றார்கள். என்னைக் கண்டதும், அதுவரை கண்ணுறங்காமல் காத்திருந்த தந்தை பெரியார், என்னைத் தழுவிக் கொண்டு "சுகமாக இருக்கிறாயா?" என்று தழுதழுத்தக் குரலில் கேட்டார். அவரே என் காயங்களுக்கெல்லாம் மருந்திட்டார். என்னுடன் ஈரோட்டுக்கு வா, போகலாம் என்று ஆணையிட்டார். நானும் அவருடன் புறப்படத் தயாரானேன்.

பெரியாரின் ஈரோட்டுக் "குடியரசு" அலுவலகத்தில் துணை ஆசிரியனாகப் பொறுப்பேற்றேன். என் இனிய நண்பர் கருணானந்தம், ஏ.பி. ஜனார்த்தனம், தவமணி ராஜன் ஆகியோர் குடியரசு அலுவலகத்தில் பணியாற்றி வந்த காலம் அது. காலை எட்டு மணிக்கெல்லாம் பெரியார் வீட்டில் அவர் முன்னால் அமர்ந்து - அன்று வருகிற தபால்களை அவர் பார்த்து அதுபற்றிய விளக்கங்களை அறிவித்து - அதனைச் செயல்படுத்துகிற வழி வகைகளை நாங்கள் தொடங்கிடுவோம். குடியரசு இதழில் நான் எழுதிய "அண்ணாமலைக்கு அரோகரா" என்ற கட்டுரையைப் பெரியார் பெரிதும் பாராட்டினார். திருவண்ணாமலை தீபத்தைப் பற்றிய கட்டுரை அது. அதற்குப் பிறகு பெரியாரைக் கவர்ந்த மற்றொரு கட்டுரை "தீட்டாயிடுத்து!" என்ற துணைத் தலையங்கம். ஒவ்வொரு நாளும் இரவு, பெரியார் வீட்டில் உணவு முடிந்ததும், பெரியார் தன் வீட்டு மாடியில் காற்றோட்டமான பகுதியில் எங்களை உட்கார வைத்துக் கொண்டு, சமுதாயச் சீர்திருத்தங்கள், அரசியல் மாற்றங்கள் இவைகளைப் பற்றியெல்லாம் நீண்ட நேரம் விளக்கங்கள் அளிப்பார். நாங்கள் குடியரசு இதழில் சிறப்பாக எழுதிவிட்டால், படி ஏற முடியாத நிலையிலும் மிகுந்த சிரமத்தோடு மாடிக்கு ஏறி வந்து தட்டிக் கொடுத்துப் பாராட்டுவார். எவ்வளவு மகிழ்ச்சி அப்போது ஏற்படும் தெரியுமா?

சில ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு, திருச்சி ரயிலடியில் பெரியாரும், நானும் இந்தி எழுத்துக்களை

அழித்தோம். ரயிலடிக்களம் முடிந்து நானும், ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும் கொடி ஏந்தியவாறு திருச்சி நகர வீதிகள் அனைத்திலும் நடந்து சென்றே ஊர்வலம் நடத்தினோம். தெப்பக்குளம் வழியாக ஊர்வலம் வந்த போது, காரில் சென்று கொண்டிருந்த பெரியார் அவர்கள் இறங்கி, எங்களை வாழ்த்தி வழி அனுப்பினார். இரு வேறுபட்ட கட்சிகளாகப் பிரிந்த பிறகு ஏற்பட்ட இந்தத் திடீர்ச் சந்திப்பில் பாசமும் கொள்கைப் பற்றும் பட்டுப் போகவில்லை என்ற உண்மை ஒளி விடலாயிற்று. இதைத் தான் "நீரிடித்து நீர் விலகாது" என்பார்களோ?

அதன் பிறகு தந்தையைச் சந்திக்க 2-3-1967இல் திருச்சிக்குச் சென்றோம். ஆம், கழகம் தேர்தலில் வென்று தமிழகத்தில் ஆளும் பொறுப்புக்கு வருவதற்கு முன்பு தந்தை பெரியாரின் வாழ்த்துக்களை நேரில் பெற விரும்பி, அண்ணா அவர்களோடு திருச்சி சென்ற போது, அதாவது

18 ஆண்டுகளுக்குப் பின்னர் அய்யாவின் பக்கத்தில் போய் அமர்ந்த போது பாச வெள்ளம் அங்கே கண்ணீராகி விழிகளுக்குத் திரையிட்டது. குரல் தழுதழுத்தது. நாவும் எழ மறுத்தது. என்ன பேசுவதென்றே எனக்குத் தெரியவில்லை. எங்கள் நிலைதான் தந்தைக்கும். "என்னைக் கூச்சப்பட வைத்து விட்டீர்கள்" என்று பெரியார் குமுறினார். இந்த நிகழ்ச்சியைப் பற்றித்தான் விழுப்புரம் முப்பெரும் விழாவில் நமது பேராசிரியர் பேசும்போது உணர்ச்சி ததும்ப எடுத்துக் கூறினார்.

24-12-1973 அன்றுதான் தந்தை பெரியார் அவர்கள், தமிழகத்தையும், நம்மையும் தவிக்க விட்டு விட்டு மறைந்தார். செய்தி அறிந்ததும் சில நிமிடங்கள் எனக்கு என்ன செய்வதென்றே புரியாத நிலை. இன்றைக்கு வருவதைப் போல அன்றைக்கும் அலைஅலையாக பெரியாரோடு பழகிய நினைவுகள் எல்லாம் என் மனதிலே எழுந்தன. என் கடமை, தந்தை பெரியாருக்கு அரசு மரியாதையுடன் இறுதிப் பயணம் செய்திட விரும்பி தலைமைச் செயலாளரை அழைத்து, அதற்கான ஏற்பாடுகளை செய்யும்படி கூறினேன். அதிகாரிகள்; பெரியார் அவர்கள் அரசுப் பொறுப்பில் எதிலும் இல்லாத காரணத்தால் அரசு மரியாதை செய்வதற்கு விதிமுறைகள்படி வழியில்லை என்று கூறினர். "காந்தியடிகள் எந்த அரசுப் பொறுப்பில் இருந்தார்? எனவே நாம்

விரும்பியபடி தந்தை பெரியாருக்கு அரசு மரியாதை தரப்பட்டே ஆக வேண்டும், அதனால் கழக அரசு கலைக்கப்படக் கூடிய நிலை தோன்றுமேயானால், அதை விட பெரிய பேறு எனக்கு இருக்க முடியாது, வேண்டியதைக் கவனியுங்கள்" என்று கூறினேன். எனவே காந்தியடிகளுக்கு எவ்வாறு அரசு மரியாதை அளிக்கப்பட்டதோ, அதைப் போலவே தந்தை பெரியாரும் ஒப்பற்ற சமுதாயப் புரட்சியாளர், சீர்திருத்தச் சிந்தனையாளர் என்பதால் அரசு மரியாதையோடு அடக்கம் செய்யலாம் என்று கூறினேன். அவ்வாறே ஏற்பாடுகள் நடைபெற்றன.

தந்தை பெரியார் அவர்கள் மறைந்தாலும், அவர் நமக்கு அளித்த போதனைகள் மறையவே இல்லை. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே, தந்தை பெரியாருக்கு அளிக்கும் முதல் காணிக்கையாக சுயமரியாதை திருமணச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றினார். அதைப் பற்றி பேரவையில் கே. வினாயகம் அவர்கள் அந்தச் சட்டம் தி.மு. கழக அரசு தந்தை பெரியாருக்குச் செலுத்தும் காணிக்கையா என்று கேட்டபோது, அண்ணா அவர்கள் எழுந்து, இந்தச் சட்டம் மாத்திரமல்ல, இந்த அமைச்சரவையே தந்தை பெரியாருக்கு காணிக்கைதான் என்று இடிமுழக்கமென எழுந்த கையொலிக்கிடையே அறிவித்தார்.

அண்ணா அவர்கள் மறைந்த பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற நான் தந்தை பெரியார் அவர்களின் மனதில் முள்ளாக உறுத்திக் கொண்டிருந்த மற்றொரு கொள்கையான அர்ச்சகர் சட்டத்தைக் கொண்டு வந்து 2-12-1970 அன்று நிறைவேற்றினோம். ஆலயங்களில் நியமிக்கப்படும் அறங் காவலர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்பதை மரபாக மட்டுமே கொண்டிருந்த நிலையை மாற்றி, எந்த ஒரு ஆலயத்து அறங்காவலர் குழுவிலும் நிச்சயம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இடம் பெற்றாக வேண்டுமெனவும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அந்தச் சட்டம் நடைமுறைக்கு வராமல் உச்ச நீதிமன்றம் வரை சென்று விட்டது.

அடுத்து தந்தை பெரியார் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான கொள்கை, பெண்களுக்கு சொத்துரிமை வழங்க வேண்டும் என்பதாகும். 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற

சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர் சொத்தில் பெண்களுக்கு உரிமை வழங்கும் தனி சட்டத்தினை முன்னோடி மாநிலமாக 1989ஆம் ஆண்டில் மே திங்கள் 6ஆம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றினேன்.

அதைப் போலவே சாதி சமய பிணக்குகளை அகற்றி அனைத்து சமுதாய மக்களும் நல்லிணக்கமாக ஒன்று கூடி சமத்துவ உணர்வுடன் வாழ்கின்ற சூழ் நிலையை உருவாக்கும் வகையில் இந்திய சுதந்திரப் பொன்விழாவையொட்டி 1997ஆம் ஆண்டில் தி.மு. கழகம் உருவாக்கிய புதுமையான, புரட்சிகரமான திட்டம்தான் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சமத்துவபுரக் குடியிருப்பிலும், 100 வீடுகள் கட்டப்பட்டு, அவற்றில் 40 வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும், 25 வீடுகள் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 25 வீடுகள் பிற்படுத் தப்பட்டவர்களுக்கும், 10 வீடுகள் இதர பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனைத்துச் சமுதாயத்தினரும் ஒரே இடத்தில் இணக்கமாக வாழ்வதற்கு வழிவகை செய்யப்பட்டது.

தந்தை பெரியார் அவர்களோடு பழகி, அவரின் கொள்கைகளையெல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வந்த காரணத்தால்தான், தந்தை பெரியார் அவர்கள் "பொதுமக்களுக்காக பொதுத் தொண்டு செய்தவர்கள் என்பது மாத்திரமல்லாமல், பாராட்டுதலுக்குரிய எந்தக் காரியத்தை யார் செய்தாலும் அவர்களைப் பாராட்ட, பெருமைப்படுத்த பொதுமக்கள் முயற்சிப்பது இயற்கையே ஆகும். கலைஞர் கருணாநிதி விஷயத்தில் பாராட்டத் தகுந்த பல தன்மைகள் இருக்கின்றன. கலைஞர் அவர்கள் தனது பள்ளி மாணவப் பருவத்தில் இருந்து பொதுத் தொண்டு செய்து வருகிறார். தியாகிகள் அடையாளமாகிய சிறை செல்லும் தன்மையில் பலமுறை சிறை சென்றிருக்கிறார். இவ்வளவு மாத்திரமல்லாமல் ஒரு கட்சியை ஆரம்பித்து, ஆரம்பித்த முக்கியஸ்தர்களில் ஒருவராய் இருந்து, அந்தக் கட்சிக்கு உண்டான எதிர்ப்புகளை எல்லாம் சமாளித்து அந்தக் கட்சியை நல்ல வண்ணம் உருவாக்கி அந்தக் கட்சியை நாடாளும் ஸ்தாபனம் ஆக்கிய முக்கியஸ்தர்களில் ஒருவராகவும் இருக்கிறார். கலைஞர் அறிவில் சிறந்தவர், நிர்வாகத்தில் சிறந்தவர், பொதுத் தொண்டுக்காக தியாகம் செய்ததில் சிறந்தவர்" என்றெல்லாம் என்னைப் பாராட்டிய

சொற்கள் கல் மேல் எழுதப்பட்ட மணிமொழிகளாக என் மனதிலே தோன்றும்போது சில அனாம தேயங்கள் என்னைப் பற்றியும், என் தன்மானத்தைப் பற்றியும் அநாகரிகமாக அலறுவது எப்படி எனக்குப் பெரிதாக தோன்றும். என் அருமை உடன்பிறப்புகளே, 'அதை நினையுங்கள் - இதை மறந்துவிடுங்கள்'.

அன்புள்ள,

மு.க.

17-9-2012

3655. அந்த நாள் ஞாபகம்; இந்த நாள் இல்லையா?

உடன்பிறப்பே,

தமிழகத்தில் இன்று என்ன நடக்கிறது? இதோ சில சான்றுகள்! அனைத்தும் இன்றைய நாளேடுகளில் வந்த செய்திகளே!

அமெரிக்க துணைத் தூதரகம் 5வது நாளாக முற்றுகை - இரண்டு மணி நேரம் ஸ்தம்பித்தது அண்ணாசாலை - பைக் எரிப்பு, கார், பஸ் உடைப்பு - போலீஸ் தடியடி - ஆஸ்பத்திரியில் பரபரப்பு - இது தலைப்பு. போலீசார் தடியடி நடத்துகின்ற புகைப்படங்கள் ஏடுகளில் எல்லாம் வெளிவந்துள்ளன. "நபிகள் நாயகத்தை இழிவுபடுத்தும் அமெரிக்க திரைப்படத்தைக் கண்டித்து 24 முஸ்லீம் அமைப்புகள் சென்னையில் நேற்று (18-9-2012) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. மாலை 4.45 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பலர் திடீரென அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிடுவதாகக் கூறி அண்ணாசாலை வழியாக ஓடினர். இதைப் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போலீசாரால் கட்டுப்படுத்த முடியவில்லை. அண்ணா சாலையில் நிறுத்தப்பட்டிருந்த கார் மீது கல் வீசி தாக்கப்பட்டது. இதில் தனியார் டி.வி. நிறுவனத்தின் கார் உட்பட இரண்டு கார் கண்ணாடிகள் சேதமடைந்தன. அண்ணா சாலையில் உள்ள கார் நிறுவன கட்டிடத்தின் கண்ணாடிகள் மீது கற்கள் வீசப்பட்டன. இதில் கண்ணாடி உடைந்து அங்கிருந்த ஊழியர் ஒருவர் காயமடைந்தார். இதனால் பதற்றம் ஏற்பட்டு, அண்ணாசாலையில் இருந்த கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டன. போலீசாருக்கும், பொதுமக்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதையடுத்து கூட்டத்தைக் கலைக்க போலீசார் தடியடி நடத்தினர். அந்தப் பகுதியே போர்க்களம் போல காட்சியளித்தது. இதில் சிலர் மண்டை உடைந்தது. போலீசாருக்கும் காயம் ஏற்பட்டது. இது சென்னை நகரில் ஒரு காட்சி.

இது தொடர்ந்து ஐந்து நாட்களாக நடக்கிறது. அரசு சார்பில் இந்த ஐந்து நாட்களாக ஆர்ப்பாட்டம் நடத்துவோரின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, இந்தப் பிரச்சினையில் ஆவன செய்வதாக உறுதியளித்து சுமுகமாகத் தீர்க்க ஏன் முயற்சிக்கவில்லை?

கிறித்தவ ஆயர் பேரவைத் தலைவர் திரு. ஏ.எம். சின்னப்பா அவர்கள் நேற்று (18-9-2012) அளித்த பேட்டியில், கூடங்குளத்தில் போலீசார் அத்துமீறி இடிந்தகரை தேவாலயத்தில் நுழைந்ததாகவும், கூடங்குளம் பங்குத் தந்தை இல்லத்திலும் காவலர்கள் அத்துமீறி நுழைந்ததாகவும், போலீசாரின் இந்த நடவடிக்கைகளைக் கண்டித்து, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை முன்பாக ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

கூடங்குளம் தேவாலயத்தில் காவலர்கள் உள்ளே நுழைந்தது பற்றி கடந்த சில நாட்களாகப் பேசப்பட்டு வருகிறது. அரசு அவர்களை அழைத்துப் பேசியிருக்க வேண்டாமா? சமாதானப்படுத்தியிருக்க வேண்டாமா?

திருவள்ளூர் மாவட்டத்தில் திட்டக் குழு ஊரகப் பிரிவுக்கு நான்கு உறுப்பினர்களையும், நகர்ப்புறப் பிரிவுக்கு நான்கு உறுப்பினர்களையும் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று (18-9-2012) கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. கலெக்டர் அலுவலக வளாகத்திலும், வாக்குச் சாவடி மையத்திலும் மணிமாறன், எம்.எல்.ஏ., தலைமையில் அ.தி.மு.க. வினர் திரண்டு, தி.மு.க. வினரை வாக்குப் பதிவு செய்ய விடாமல் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். தி.மு.க. வேட்பாளர்களின் அடையாள அட்டைகளைப் பிடுங்கி கிழித்து எறிந்ததுடன் சரமாரியாகத் தாக்கி அங்கிருந்து வெளியேற்றியிருக்கிறார்கள். தி.மு.க. வினர் வந்த கார்களின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். தி.மு.க. வினர் மீது நடந்த தாக்குதலை பாதுகாப்புப் பணியில் இருந்த போலீசார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். காவல் துறை அதிகாரியிடம் முறையிட்ட போது, கலெக்டர் அலுவலக வளாகத்துக்குள் நடந்த சம்பவத்துக்கு தான் எதுவும் செய்ய முடியாது என்று கூறிவிட்டார். கலெக்டர் அலுவலகத்திற்குள் உள்ளே நுழையவே காவல் துறை அனுமதிக்கவில்லை. இதைக் கண்டித்து சாலை மறியலில் ஈடுபட்டதால், அவர்களை காவல்

துறை கைது செய்து மாலையில் விடுவித்திருக்கிறார்கள். இது ஒரு காட்சி.

அம்பத்தூர், அத்திப்பட்டு, அயப்பாக்கம், போரூர், பூவிருந்தவல்லி உள்ளிட்ட பகுதிகளில் தண்ணீர் விநியோகம் செய்யும் தனியார் லாரி உரிமையாளர்கள் நேற்று (18-9-2012) காலையில் 200க்கும் மேற்பட்ட லாரிகளுடன் பூவிருந்தவல்லி தாசில்தார் அலுவலகம் முன்பாக முற்றுகைப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள்.

இதோ மற்றொரு காட்சி! பொன்னேரி அருகே குடிநீர் வாரிய அதிகாரி ஒருவர் வீட்டில் முகமூடிக் கொள்ளையர்கள் புகுந்து, கணவன், மனைவியைப் பயங்கரமாகத் தாக்கியதோடு, 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 42 சவரன் தங்க நகைகள், 2 கிலோ வெள்ளிப் பொருள்கள், ரொக்கப் பணம் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயைக் கொள்ளையடித்துச் சென்றிருக்கிறார்கள். அதே கொள்ளையர்கள், கொக்குமேடு கிராமத்தில் பிரகாஷ் என்பவர் வீட்டில் பூட்டை உடைத்தவுடன் சத்தம் போடப்பட்டதால் தப்பியோடியிருக்கிறார்கள். பின்னர் பொன் நகரில் உள்ள பால் வியாபாரி தேவன் வீட்டிலும் கொள்ளையடிக்க முயன் றிருக்கிறார்கள். இவை அனைத்தும் நேற்று நடைபெற்ற காட்சிகள்.

தண்ணீர் லாரிகளை போலீஸ் அதிகாரிகள் மடக்கி அபராதம் விதிப்பதைக் கண்டித்து, சென்னை புறநகர்ப் பகுதிகளில் நேற்று தண்ணீர் லாரிகள் திடீரென நிறுத்தப்பட்டு, அதன் உரிமையாளர்கள் ஸ்டிரைக் செய்துள்ளார்கள்.

நாடு முழுவதும் இன்று நள்ளிரவு முதல் லாரிகள் ஓடாது என்று லாரி உரிமையாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதற்கு முன்பாகவே திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை மாவட்டங்களுக்கு லாரிகளில் சிலிண்டர்களை எடுத்துச் செல்லும் டிரைவர்களும், கிளீனர்களும் ஊதிய உயர்வுக் கோரிக்கைகளை

முன் வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் இந்தப் பிரச்சினையில் தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை உடனே தலையிட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். சேத்தியாத்தோப்பு சர்க்கரை ஆலை கூட்டுறவுச் சங்கத்தில் புதிய உறுப்பினர் சேர்ப்பு விவகாரத்தில் மோதல் ஏற்பட்டு, நாற்காலிகளையும், கற்களையும் வீசி ரகளை நடைபெற்றுள்ளது.

ஏற்கனவே பள்ளி மாணவர்கள் செல்லும் வேனில் இருந்து ஒரு மாணவன் விழுந்து இறந்த சம்பவத்திற்குப் பிறகும் எச்சரிக்கையாக இல்லாத காரணத்தால், துறையூர் அருகே நேற்று (18-9-2012) பள்ளி வேனில் இருந்து கிஷோர் என்ற ஐந்து வயது மாணவன் கீழே விழுந்து இறந்திருக்கிறான். அது போலவே திருச்சிக்கு அருகே மிதுன் என்ற மாற்றுத் திறனாளி மாணவனும் பள்ளி வேன் மோதி இறந்திருக்கிறான்.

தர்மபுரி மாவட்டத்தில் அதியமான் கோட்டையில் சின்னசாமி என்ற கட்டிடத் தொழிலாளி உயிரோடு எரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

காரைக்குடி அருகே பாலசுப்பிரமணியன் என்ற ஒன்றிய தி.மு.க. இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சென்னை அருகே தாம்பரத்தில் மின்சாரம் தாக்கி மைக் செட் ஊழியர் ஒருவரும், மாணவர் ஒருவரும் உடல் கருகி இறந்திருக்கிறார்கள்.

ஜாமீனில் விடுதலையான இலங்கைத் தமிழர் செந்தூரன் மீண்டும் உண்ணாவிரதத்தைத் தொடங்கியிருக்கிறாராம்.

பரங்கிமலை போலீஸ் குடியிருப்பில், பட்டப் பகலில் காதலியுடன் உல்லாசமாக இருந்த போலீஸ்காரர் ஒருவரை கையும் களவுமாக பிடித்து மனைவியே போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்திருக்கிறார்.

திருவொற்றியூரிலிருந்து மணலி செல்லும் சாலையை சீரமைக்கக் கோரி கிராம மக்கள் திடீர் சாலை மறியலில் ஈடுபட்டு ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கூடங்குளத்தில் சம்மன் அனுப்பியும் ஆஜராகாத உதயகுமாருக்கு நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளது. அவருடைய மனைவியோ உதயகுமாருக்கு ஆபத்து என்று பேட்டி கொடுத்துள்ளார்.

ராஜபக்ஷே இந்தியாவுக்கு வருவதை எதிர்த்து, சட்டக் கல்லூரி மாணவர்கள் நேற்று (18-9-2012) திடீரென சென்ட்ரலில் ரெயில் மறியல் போராட்டம் செய்திருக்கிறார்கள்.

நேற்று காலையில் அனைத்துப் பள்ளிகளுக்கும் நாளை விடுமுறை என்று அறிவிப்பு செய்த அ.தி.மு.க. அரசின் பள்ளிக் கல்வித் துறை, மாலையில் அந்த அறிவிப்பை திடீரென வாபஸ் பெற்றுள்ளது.

"கிடப்பதெல்லாம் கிடக்கட்டும், கிழவியைத் தூக்கி மனையிலே வை" என்பதைப் போல அ.தி.மு.க. அரசு தன் மீது ஏராளமான தவறுகளை வைத்துக் கொண்டு, தன் மீது சாற்றப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சமாளிக்கின்ற வகையில் எப்போதும் காவல்துறை யினரைப் பலிகடாவாக்கி, சென்னை அமெரிக்கத் தூதுவரக வளாகத்தில் நடைபெற்ற கலவரத்திற்கு சென்னை மாநகர காவல் துறை ஆணையரைப் பொறுப்பாக்கி இன்று அவசர அவசரமாக அவரை அந்தப் பதவியிலிருந்து மாற்றியிருக்கிறது.

கடந்த மாதம் திருவேற்காடு கோவிலில் முதல் அமைச்சர் நடத்தி வைத்த 1006 திருமணத்தின் போது, ஏற்கனவே திருமணம் செய்து கொண்ட ஜோடிகளைக் கொண்டு வந்து மீண்டும் திருமணம் செய்து வைத்த கேலிக்குரிய செய்திகள் ஏடுகளிலே ஆதார பூர்வமாக வந்தபோது, அந்தத் துறையிலே உள்ள அதிகாரிகளையெல்லாம் இப்படித்தான் அ.தி.மு.க. அரசு பழி வாங்கியது. அரசு செய்கின்ற தவறுகளுக்கெல்லாம் அதிகாரி கள் பலிகடாவாக ஆக்கப்படுகிறார்கள்.

உடன்பிறப்பே, தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போது இதுபோல ஒரு நிகழ்ச்சி, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு ஏற்பட்டால் போதும். உடனடியாக இன்றைய முதல் அமைச்சர் ஜெயலலிதா எப்படியெல்லாம் அறிக்கை விட்டிருக்கிறார். "இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுள்ள "மைனாரிட்டி" அரசின் முதலமைச்சர், இந்தத் தவறுக்குப் பொறுப்பேற்று உடனடியாகப் பதவி விலக வேண்டும், இல்லாவிட்டால் மத்திய அரசு இந்த அரசின் மீது 356வது பிரிவினைப் பயன்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று எத்தனை அறிக்கைகள் விட்டிருக்கிறார் என்பதுதான் ஞாபகத்திற்கு வருகிறது.

அன்புள்ள,

மு.க.

20-9-2012

3656. கை குலுக்குவது; அங்கே - கழுத்தறுப்பது இங்கேயா?

உடன்பிறப்பே,

தமிழகத்திலே உள்ள ஆளுங்கட்சியைத் தவிர ஏனைய அனைத்துக்கட்சிகளும் இலங்கை அதிபர் ராஜபக்ஷே இந்தியாவிற்கு வருவதையும், அவருக்கு இங்கே வரவேற்பு கொடுப்பதையும், மத்தியப் பிரதேசத்திற்கு அவர் சென்று அங்கே புத்தமதச் சம்மந்தமான மையத்தைத் திறந்து வைப்பதையும் எதிர்த்தும்கூட, இந்திய அரசோ, தமிழக அரசோ அதைப் பற்றி கவலைப்படாதது மாத்திரமல்ல; மத்திய அரசே ஒரு அமைச்சரை அனுப்பி வரவேற்பதும், அவருக்கு பிரதமரே விருந்தளிப்பதும் மரபுப்படி தவிர்க்க முடியாதது என்றாலும் எந்த அளவிற்கு தமிழர்களின் உணர்வுகளை காயப்படுத்துகிறது என்பதை ஈழத் தமிழர்கள்பால் அன்பு கொண்டுள்ள அனைவரும் அறிவர்.

சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் மிக நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டும் பல்வேறு காரியங்களுக்கு அவர்களின் நட்பைப் பயன்படுத்திக் கொண்டும், இரண்டு நாடுகளையும் தங்களுக்கு மிக அணுக்கமாக வைத்துக் கொண்டும், இந்தியாவை மிரட்டும் பாணியில் இலங்கை அரசு செயல்படுவதை, இலங்கையிலே நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கவனித்து வருவோர் நிச்சயமாக அறிவார்கள்.

இலங்கைக்கு சீனாவும், பாகிஸ்தானும் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி வருகிறது என்று நாம் திரும்பத் திரும்பச் சொன்னாலும், இந்திய அரசு அதை நம்புகிறதா? நம்பிச் செயல்படுகிறதா? நம்பிடவே இல்லையா? என்பது தெரியவில்லை. இருந்தாலும் இந்திய அரசுக்கு இதை மேலும் ஆதாரங்களோடு தெரிவிப்பது நம்முடைய கடமை என்ற முறையில் ஒருசிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

19-9-2012 "தினமணி" இதழில், "இலங்கை - சீனா இடையே 14 புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. இதன்படி ரூ.

4,180 கோடி செலவில் இலங்கையில் உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை சீனா மேற்கொள்ள இருக்கிறது. ஏற்கனவே சீனாவின் உதவியுடன் இலங்கையில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போது மீண்டும் பல உதவிகளைச் செய்து இலங்கையுடனான தனது உறவை சீனா வலுப்படுத்தியுள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சியில் அதிபர் ஹூ ஜிண்டாவோவுக்கு அடுத்த நிலையில் இருக்கும் தலைவரான வூ பாங்ஜூ இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அப்போது புதிய ஒப்பந் தங்கள் கையெழுத்தாகின. இந்த ஒப்பந்தங்களின் படி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு, பொருளாதார ஒத்து ழைப்பு, புதிய முதலீடுகள், விசா நடைமுறைகள் தளர்வு, கடல்சார் துறைகளை வலுப்படுத்த உதவி ஆகியவற்றை இலங்கைக்கு சீனா அளிக்க விருக் கிறது. இவை தவிர இலங்கை உள்கட்டமைப்பு வசதிகளுக்காக சீன வங்கிகள் கடனளிக்க இருக்கின்றன. ஆனால் இது தொடர்பான முழு விவரங்கள் வெளியிடப்படவில்லை. அருணாசல பிரதேசத்தை உரிமை கொண்டாடுவது, எல்லையில் விமான தளங்களை அமைப்பது என இந்தியாவுக்கு பல்வேறு பிரச்சினைகளை கொடுக்கும் சீனாவுக்கு இலங்கை மிகவும் நெருங்கிய நட்பு நாடாக மாறியுள்ளது. இதனால் இருநாடுகளும் சேர்ந்து எதிர்காலத்தில் இந்தியாவுக்கு நெருக்கடி அளிக்கவும் வாய்ப்பு உள்ளது" என்று விரிவாக 'தினமணி'யில் வந்துள்ள செய்தி, இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையே எந்த அளவிற்கு நட்பு வளர்ந்துள்ளது என்பதைத் தெளிவாக்கும்.

மும்பையை தீவிரவாதிகள் தாக்கியது போல தென்னிந்தியாவைத் தாக்க சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளதாக இரண்டு தினங்களுக்கு முன்பு திருச்சியில் பிடிபட்ட ஐ.எஸ்.ஐ. உளவாளி தமீம் அன்சாரி என்பவன் கியூ பிரிவு போலீசாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளான். அவனிடமிருந்து இலங்கையில் உள்ள சம்பத் வங்கியின் ஏ.டி.எம். கார்டு ஒன்றினையும் காவல் துறையினர் பறிமுதல் செய்துள்ளனர் என்ற செய்தியும், இலங்கையில் ஐ.எஸ்.ஐ. மையம் ஒன்றை நிறுவி இந்தியாவுக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு வருகிறது என்ற செய்தியும் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் உள்ள நட்பின் ஆழத்தைத் தெளிவாக்குகிறது.

இந்திய மீனவர்களை மீன் பிடிக்க அனுமதிக்காமல் தொடர்ந்து தாக்கி வருகின்ற இலங்கை, அம்பாறை பொத்துவில் கடலில்

மீன்பிடிக்க சீன நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ் மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு பல்வேறு தடைகளும், கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ள நிலையில், சீன நிறுவனம் ஒன்று அந்தக் கடலில் மீன் பிடித்து வருகிறது. நமது தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் தாக்கப்பட்டு பிடிக்கப்பட்ட போது, அவர்கள் சீன நாட்டைச் சேர்ந்த சிலரை இலங்கைக் கடற்படையினரோடு பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள்.

சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் இந்த அளவிற்கு இலங்கைக்கு நட்பு இருப்பதால்தான், இலங்கைத் தமிழர்களைத் தாக்குவதிலும், கொடுமை புரிவதிலும், கொன்று குவிப்பதிலும் இலங்கை அரசு தீவிரம் காட்டுகிறது. அந்த உண்மையை நம்முடைய இந்திய அரசும் புரிந்து கொள்ளாமல், இலங்கை அரசுக்கு தொடர்ந்து ஆதரவுக் கரம் நீட்டி வருவதோடு, தற்போது இலங்கை அதிபரை வரவேற்பதிலும் அக்கறை காட்டுகிறது. 20-9-2012 அன்று "இந்து" நாளிதழில் நிரூபமா சுப்பிரமணியன், ஆர்.கே. ராதாகிருஷ்ணன் ஆகியோர் எழுதிய நீண்ட கட்டுரையில், அதுவும் ராஜபக்ஷே இந்தியாவிற்கு வருகை தரும் நாளில் அந்தப் பெரிய, முக்கிய கட்டுரை இடம் பெற்றுள்ளது. அந்தக் கட்டுரையின் முக்கிய சில பகுதிகளை மட்டும் இங்கே தந்துள்ளேன்.

- விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்று மூன்றாண்டுகள் கழிந்த பின்னரும், அந்தத் தீவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அதாவது தமிழர்கள் பெரும்பாலும் வாழும் இடங்களில் சிங்கள ராணுவம் அதன் 19 பிரிவுகளில், 16 பிரிவுகளை நிறுத்தி வைத்துள்ளது.

- **"இந்து" இதழில் உள்ள தகவல்படி, யாழ்ப்பாணத்தில் 3 பிரிவுகளும், கிளி நொச்சியில் 3 பிரிவுகளும், முல்லைத் தீவில் 3 பிரிவுகளும் வவுனியாவில் 5 பிரிவுகளும் நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் 2 பிரிவுகள் கிழக்கு மாகாணத்திலும், தென்பகுதியில் 3 பிரிவுகளும் வைக்கப்பட்டுள்ளன.**

- இந்திய ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கர்னல் ஆர். அரிகரன் அவர்கள்; இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இலங்கை ராணுவம் பரவலாக

நிறுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, போருக்குத் தயார் நிலையில் இருப்பது போன்ற காட்சியளிக்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

- தமிழர்கள் வாழும் பகுதிகளில் தொடர்ந்து இலங்கை ராணுவம் நிறுத்தப்பட்டிருப்பது போருக்குப்பின் உள்ள சூழ்நிலையை மேலும் சிக்கலாக்குவதாக அமைந்துள்ளது.

- இலங்கையைச் சேர்ந்த ஜனநாயக ஆர்வலர், திரு. அகிலன் கதிர்காமர் என்பவர் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இலங்கை ராணுவம் நிறுத்தப்பட்டிருப்பது பெரும் கவலை அளிப்பதாகவும், போருக்குப் பின் இலங்கை முழுவதையும் ராணுவ மையமாக்கும் முயற்சியாகவே இது தெரிகிறது என்றும் கருத்து தெரிவித்துள்ளார்.

- இலங்கை அரசே நியமித்த எல்.எல்.ஆர்.சி. எனும் ஆணையம் அளித்துள்ள முக்கிய பரிந்துரைகளில் ஒன்று; இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள ராணுவத்தின் அளவை வெகுவாகக் குறைத்திட வேண்டும் என்பதுதான்.

- அண்மையில் அதிபர் ராஜபக்ஷே தமிழ்ப் புலிகளுக்கு எதிரான போரில் பாகிஸ்தானும், சீனாவும் உதவியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

"இந்து" நாளிதழே 20-9-2012 அன்று வெளியிட்டுள்ள ஒரு பக்கக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஏற்கனவே நமது கவனத்திற்கு வந்ததின் அடிப்படையிலேதான், அதனை மனதிலே கொண்டு கடந்த

12-8-2012 அன்று சென்னையில் நடைபெற்ற "டெசோ" மாநாட்டில் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றி, இந்தியப் பிரதமருக்கு அப்போதே அனுப்பியிருக்கிறோம்.

"இன்றைய இலங்கையில் ஜனநாயக ஆட்சி முறைக்குப் பதிலாக இராணுவத்தின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கிறது. இராணுவம், அதன் நடவடிக்கைகளுக்காக, தமிழர் பகுதிகளில் தமிழர்களுக்குச் சொந்தமான ஏராளமான வீடுகளை கையகப்படுத்திக் கொண்டுள்ளது. காலியாக உள்ள வீடு

களைத் தன் கட்டுப்பாட்டில் மேற்கொள்ளும் இராணுவம், அவற்றைக் காலி செய்ய மறுக்கிறது. இராணுவத்தின் அனுமதியின்றி வடக்கு, கிழக்குப் பகுதிகளில் தமிழர்களின் வீடுகளில் எந்த சமூக நிகழ்ச்சிகளும் நடத்த முடியாது.

இராணுவத்தினரே அங்கு மாவட்ட ஆட்சியராகவும் அரசு நிர்வாகிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர். இன்றையத் தமிழ் ஈழம் ஓர் இராணுவ முகாம்போலக் காட்சியளிக்கிறது. ஜனநாயக அடிப்படையிலான உள்ளாட்சி அமைப்புகள் இல்லாததால் அங்குள்ள தமிழர்களுக்குத் தங்களது குறைகளை எடுத்துக் கூறவும், பேசவும், அமைதியான முறையில் போராடவும் வழி யில்லை. அவர்கள் எப்போதும் பெரும் பீதியில் உறைந்து கிடக்கின்றனர்.

தமிழ் இளைஞர்கள் பலர் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர். பலர் சித்திரவதை முகாம்களில் சொல்லொணாத வேதனைக்கும், துயரத்துக்கும் ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். தமிழ்ப் பெண்கள், இராணுவப் படையினரால் பாலியல் வன்முறை உள்ளிட்ட பல கொடுமைகளுக்கு ஆளாக்கப் படுகின்றனர். தமிழ்க் குழந்தைகள் துப்பாக்கிகளைப் பார்த்துக் கொண்டு, இராணுவப் படையினர் கட்டவிழ்த்துவிடும் வன்முறையால் பாதிக்கப்பட்டு, முடிவில்லாத அச்சத்துடன் வாழ்கின்றனர்.

போரின் பின் விளைவாக ஏறத்தாழ

90 ஆயிரம் தமிழ்ப் பெண்கள் விதவைகளாக ஆக்கப்பட்டுள்ளனர் என்று இங்கிலாந்து அரசின் வெளியுறவு அமைச்சகத்தின் 2011ஆம் ஆண்டு அறிக்கை கூறுகின்றது. இருண்டு கிடக்கும் அவர்களின் எதிர்காலத்தை மேலும் அச்சுறுத்தும் வகையில், அவர்களின் மீது சிங்கள இராணுவத்தினர் பாலியல் வன்முறைகள் உள்ளிட்ட பல்வேறு சித்திரவதைகளைச் செய்து வருகிறார்கள்.

எனவே தமிழீழப் பகுதிகளிலிருந்து உடனடியாக இராணுவத்தைச் சிங்கள அரசு விலக்கிக் கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் அவையும் உலக நாடுகளும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. இராணுவத்தைத் திரும்பப் பெறுவதை நேரடியாகக் கண்காணிப்பதற்கு, ஐக்கிய நாடுகள் அவை

ஒரு பன்னாட்டுக் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்றும் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.”

“டெசோ” மாநாட்டின் இந்தத் தீர்மானம் உள்ளிட்ட அனைத்து தீர்மானங்களையும், விரை வில் ஐ.நா. மன்றத்தில் நேரடியாகவே கொடுக்க இருக்கிறோம்.

இலங்கையில் உள்ள சிங்களப் பேரினவாத அரசு தொடர்ந்து இலங்கை முழுவதையும் சிங்களமயமாக்குவதிலும், பௌத்தமயமாக்கு வதிலும் தீவிரம் காட்டி வருவதை உலக அரசியல் பார்வையாளர்கள் அனைவரும் அறிவர். கடந்த ஐம்பதாண்டுகளுக்கு மேலாக இந்த முயற்சிகள் இலங்கைத் தீவில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு அரசும் இலங்கையிலிருந்து தமிழினத்தை அறவே துடைத்தெறிவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றன. இலங்கையில் தமிழர்கள் இருப்பதை சிங்கள அரசு இந்தியாவின் நீட்சியாகவே கருதி பகை பாராட்டி வருகிறது. இந்திய நாடு எவ்வளவு உதவிகளைச் செய்தாலும், எவ்வளவு ஆழமான நேசத்தோடு கரம் கொடுத்தாலும், அதையேற்று போற்றுவதற்கு சிங்கள அரசு தயாராக இல்லை. மாறாக இந்தியாவோடு வேற்றுமை கொண்டுள்ள நாடுகளான பாகிஸ்தானோடும், சீனாவோடும் தான் நட்பை வளர்த்துக் கொள்ள இலங்கை அரசு முயற்சி மேற்கொண்டு வருகின்றது என்பதை நான் மேலே எழுதியுள்ள பல்வேறு குறிப்புகளும் தெளிவாக்கும் என்றே நம்புகிறேன்.

இந்தக் குறிப்புகள் அனைத்தும் இந்திய அரசுக்கு தெரியாமல் இருக்க நியாயமில்லை. எனவே இனியாவது விழித்துக்கொண்டு, சிங்கள அரசும், அதன் அதிபர் ராஜபக்ஷேயும் விரிக்கும் வஞ்சக வலையில் விழுந்துவிட வேண்டாமென்றும், மிச்சமிருக்கும் ஈழத் தமிழர்களையாவது காப்பாற்றி அவர்களுக்கு வாழ்வாதாரத்தையும், வாழ்வுரிமையையும், ஜனநாயக உரிமைகளையும் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் உலகத் தமிழர்களின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

22-9-2012

3657. கவலை போக்கிடுமா? கண்ணீர் துடைத்திடுமா?

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு என்ன பாடுபடுகிறது? இதைப் பற்றி பல முறை நான் எழுதியும், எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டுதான் வருகிறது. இதோ சட்டம் ஒழுங்கு தொடர்ந்து சீர்குலைந்து வருவதற்கு மேலும் சில உதாரணங்கள்

:* சேலம் மாவட்டம், பூவனூரைச் சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட முத்துச் செல்வி என்பவர் தலையில் கல்லால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

* கும்மிடிப்பூண்டி அருகே எளாவூர் கிராமத்தில் வெங்கடேசன் என்பவர் தன் மனைவி செல்வியை கத்தரியால் குத்திக் கொலை செய்திருக்கிறார்.

* குமரி மாவட்டம் ராஜாக்கமங்கலம் அருகே ஜெகநாதன் என்ற போலீஸ்காரர் அடித்துக் கொலை செய்யப்பட்டு பாழடைந்த கிணற்றில் போடப்பட்டுள்ளார்.

* கோவை அருகே குறிச்சியில் மதன்குமார் என்பவர் தன் அத்தை மகள் ரம்யா என்பவரை சரமாரியாக கத்தியால் குத்தியிருக்கிறார். இரண்டு நாளில் இது போல மூன்று சம்பவங்கள் கோவையில் மட்டும் நடந்துள்ளன. அபிநயா என்ற மாணவியும், சுருதி என்ற மாணவியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

* ஆரணி அருகே சேவூரில் தி.மு.க. ஊராட்சி மன்றத் தலைவர் சரவணன் அடித்துக் கொலை.

* தஞ்சை மாவட்டம், திருநாகேஸ் வரத்தில் பேராசிரியர் சாமிநாதன் வீட்டில் நகை, பணம் கொள்ளையடிக் கப்பட்டுள்ளது.

* சென்னையிலுள்ள புழல் சிறையில் இந்த மாதத்திலே அடுத்தடுத்து இரண்டு கைதிகள் மரணமடைந்துள்ள நிலையில் 22-9-2012 அன்று ஒரு விசாரணைக் கைதி தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

* திருவள்ளூரில் நேற்று ஒரு நாளில் மட்டும் அடுத்தடுத்து மூன்று வீடுகளில் கொள்ளை நடைபெற்றுள்ளது.

* புது வண்ணாரப்பேட்டையில் மணிஎன்ற மீனவருக்கு அரிவாள் வெட்டு விழுந்துள்ளது.

* கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து இதுவரை பத்து மாதங்களில் மட்டும் 12 மரணங்கள் புழல் சிறையிலே நடைபெற்றுள்ளன. அதில் ஆறு பேர் தூக்கிட்டுக் கொண்டு இறந்திருக்கிறார்கள்.

* மதுரையில் நேற்று காலையில் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று இடிந்து தரைமட்டமானதோடு, இடிபாடுகளில் சிக்கி ஒருவர் இறந்திருக்கிறார்.

* செங்குன்றத்தில் ஆசிக் செரீப் என்ற பதினாறு வயது பத்தாம் வகுப்பு மாணவன் வேன் மோதி இறந்திருக் கிறான்.

* ஊரப்பாக்கம் கிராம மக்கள் 12 மணி நேர மின்வெட்டைக் கண்டித்து போராட்டம் நடத்தி மின்வாரிய அலுவலகத்திற்கே பூட்டு போட்டிருக்கிறார்கள்.

* பொன்னேரியில் ஸ்டீபன் என்றமருத்துவ அலுவலர் வீட்டில் கொள்ளை.

இவை அத்தனையும் நேற்று ஒரு நாளில் நம்முடைய தமிழ்நாட்டில் நடந்த சம்பவங்களாகும். நேற்று ஒரு நாளில் மாத்திரமல்ல, அன்றாடம் தமிழகத்திலே இப்படித் தான் சட்டம் ஒழுங்கு படாதபாடு பட்டுக் கொண்டிருக் கின்றது. இதைப் பற்றி அரசுப் பொறுப்பிலே இருப்போர் யாரும் கவலைப்படுவதாக இல்லை.

சென்னை நகரிலே போக்குவரத்துத் துறை என்று ஒன்று இருக்கிறதா என்றே தெரிய வில்லை. எல்லா இடங்களிலும்

போக்குவரத்து ஸ்தம்பித்து ஓர் இடத்தைக் கடக்க மணிக் கணக்கிலே மக்கள் காத்திருக்கிறார்கள். அதைப்பற்றி ஏடுகளே செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க தூதுவரகத்திற்கு முன்னால் இஸ்லாமியப் பெருமக்கள் மூன்று நாட்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அவர்களை அழைத்து அரசின் சார்பில் யாராவது பேசியிருந்தால் ஒரே நாளில் பிரச்சினை முடிந்திருக்கும். ஆனால் அதைச் செய்யாததால் அவர்கள் போராட்டம் மூன்று நாட்கள் நடைபெற்றது.

கூடங்குளம் அணு உலை பிரச்சினை இன்னமும் முடிந்தபாடில்லை. தொடக்கத்தில் அவசர அவசரமாக எதிர்ப்பாளர்களை சந்தித்துப் பேசி, அவர்களுக்காக அமைச்சரவையைக் கூட்டி கூடங்குளத்தில் பணிகளைத் தொடரக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றிப் பிரதமருக்கு அனுப்பிய முதலமைச்சர் தற்போது அவர்களையோ, அவர்கள் பிரச்சினையையோ காதிலே போட்டுக் கொள்ளவே தயங்குகிறார். வேறு எந்த ஆட்சியிலும் நடைபெறாத அளவிற்கு, மீனவப் பெருங்குடி மக்கள் கடலிலே நூற்றுக்கணக்கிலே இறங்கிப் போராடுகிறார்கள். போராட்டக் குழுவினரின் பிரதிநிதிகளை அரசு அழைத்து வந்து அவர்களுக்கு விளக்கமளிக்க ஏன் தயங்குகிறது? அவர்கள் மிகச் சாதாரணமானவர்கள்தானே என்று அரசு கருதுகிறதா? போலீசாரின் துணை கொண்டு தான் அடக்க வேண்டுமென்று கருதுகிறதா? காவல் துறையினரைக் கொண்டுபோய் நூற்றுக்கணக்கிலே அங்கே குவித்து விட்டால் பிரச்சினை தீர்ந்து விடும் என்று முதலமைச்சர் கருதுகிறாரா?

காவேரி நதி நீர் ஆணையத்தின் கூட்டத்திலே கலந்து கொள்ளப்போகிறேன் என்று டெல்லி சென்றார் முதலமைச்சர் ஜெயலலிதா! அங்கே என்னவாயிற்று? இதுவரை வந்து கொண் டிருந்த நீரையும் கர்நாடக அரசு நிறுத்தி விட்டது. மேட்டூரில் தண்ணீரின் அளவு ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே வருகிறது. வினாடிக்கு 3 ஆயிரம் கன அடி தண்ணீர்தான் இப்போது வருகிறதாம். அ.தி.மு.க. அரசு மேட்டூர் அணையைத் திறந்து விட்டதை நம்பி, தொடர்ந்து தண்ணீர் வரும் என்ற நம்பிக்கை யோடு சம்பா சாகுபடியைத் தொடங்கி விட்ட விவசாயிகள் தொடர்ந்து தண்ணீர் வருமா என்று அஞ்சித் தவித்துக்

கொண்டிருக்கிறார்கள். இதுபற்றிய விளக்கத்தை அரசின் சார்பில் விவசாயிகளுக்குத் தெரிவிக்க வேண்டாமா? கர்நாடக முதலமைச்சர் காவேரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில் வெளிநடப்பு செய்தார். ஊர் திரும்பினார். சும்மா இருந்தாரா என்றால் கிடையாது. உடனடியாக அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, அவர்களின் கருத்துக்களையெல்லாம் கேட்டறிந்தார். கூட்டத்தில் ஏன் வெளிநடப்பு செய்ய நேரிட்டது என்று பிரதமருக்கு கடிதம் எழுதுகிறார். ஆனால் இங்கே என்ன நிலை? டெல்லிக்கு சிறப்பு விமானத்தில் சென்று வந்த முதலமைச்சர் இதுவரை அதைப் பற்றியே மக்களுக்கு எதுவும் கூறவில்லை. ஆய்வுதான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தி.மு. கழகம் ஆளுங்கட்சியாக இருந்த போது காவிரிப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டினால், அ.தி.மு.க. அந்தக் கூட்டங்களைப் புறக்கணித்ததைப் போல, தற்போது அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினால் மற்றக் கட்சிகள் எல்லாம் வருவார்களோ மாட்டார்களோ என்று முதலமைச்சர் ஜெயலலிதா கருதுகிறார்போலும்!

அண்ணா நகரிலே உள்ள அண்ணா வளைவினை அகற்றத் தேவையில்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டதாக ஏடுகள் தெரிவித்தன. ஆனால் அந்த வளைவுகள் இன்னமும் அதே இடத்தில் பாதி அகற்றப்பட்ட நிலையில் எந்த நேரத்திலும் கீழே விழலாம் என்று பயமுறுத்திக் கொண்டுள்ளது. இன்று வந்துள்ள செய்திப்படி ராட்சத கிரேன் வாடகை மட்டும் 96 லட்சம் ரூபாய் ஆகியிருக்கிறதாம். பணி எப்போது தொடங்கும் என்று பொறியாளரிடம் செய்தியாளர் கேட்டபோது, மேலிடத்து உத்தரவுக்காக காத்திருக்கிறோம், விரைவில் பணிகள் தொடங்கும் என்று கூறினாராம்.

ரேஷன் கடைகளில் 20 ஆயிரம் பணியாளர்கள் பற்றாக்குறையாம்; ஒருவரே மூன்று கடைகளில் பணியாற்றும் அவலம் என்று "தினமலர்" நாளேடு இன்று அரைப் பக்கத்திற்கு செய்தி வெளியிட்டுள்ளது. அதே நாளேட்டில் சமையல் எரி வாயு நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால்; சமையல் எரிவாயு சிலிண்டர் வினியோகத்தில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றும், பல இடங்களில் 60 நாட்களாகியும் சிலிண்டர் கிடைக்காமல் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர் என்றும் செய்தி வந்துள்ளது.

"அங்கன்வாடி நியமனத்தில் ஆளுங் கட்சிக்கு சாதகம்" என்ற தலைப்பில் இன்று வந்துள்ள செய்தியில் ஒரு பணி இடத்துக்கு நான்கு பேரிடம் பணத்தை வசூலித்து, கட்சி நிர்வாகிகள் மோசடியில் ஈடுபட்டுள்ளது தெரிய வந்துள்ளது என்றும், பெத்தநாயக்கன் பாளையம் யூனியன் சேர்மென், மாற்றுத் திறனாளி பெண்ணிடம் வேலை வாங்கித் தருவதாகக் கூறி இரண்டு லட்சம் ரூபாய் வசூலித்ததாகவும், வேலையும் வாங்கிக் கொடுக்காமல் பணத்தையும் திரும்ப வழங்காமல் இழுத்தடிப்பு செய்தார் என்றும் எழுதப்பட்டுள்ளது.

மின்வெட்டு பற்றியோ கேட்கவே வேண்டியதில்லை. எந்தப் பத்திரிகையைப் பிரித்தாலும் மின் தடை பற்றித்தான் கொட்டை எழுத்துக்களிலே செய்தி. எதிர்க்கட்சியிலே இருந்த போது, ஜெயலலிதா மின்தடை பற்றி எப்படியெல்லாம் அறிக்கை விடுவார்? இப்போது அதைப்பற்றி வாயையே திறக்கக் காணோம்! ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்து மணி நேரமா, பன்னிரண்டு மணி நேரமா, பதினான்கு மணி நேரமா என்று போட்டிப் பட்டிமன்றம் நடக்கின்றது. சிறு தொழில் புரிவோர் எல்லாம் செய்வதறியாது தங்கள் தலையிலே கையை வைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டார்கள். இன்றைய "தினமலர்" நாளேட்டில், "ஆகாயத் தாமரை ஆக்கிர மிப்பால், காவிரி கதவணை மின் உற்பத்தி நிலையங்களில், 70 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மின் கழகத்துக்கு தினமும் 85 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படும் நிலையில், ஆகாயத் தாமரைகளை அகற்ற நடவடிக்கை எடுக்காமல், அலட்சியம் காட்டி வருகின்றனர்" என்று செய்தி வந்துள்ளது. இன்றைய "தினமணி" வெளியிட்டுள்ள செய்தியில், "16 மணி நேர மின்தடை : மக்கள் சாலை மறியல்; போலீஸ் தடியடி" என்ற தலைப்போடு 16 மணி நேர மின் தடையைக் கண்டித்து திருநின்றவூரில் ஞாயிற்றுக்கிழமை சாலை மறியல் செய்த பொதுமக்கள் என்ற அடிக்குறிப்புடன் பொதுமக்கள் மறியல் செய்யும் புகைப்படம் வெளிவந்துள்ளது. அதே "தினமணி" பத்திரிகையில் "4 நாள்களாக வரிசையில் நிற்கும் கன்டெய்னர் லாரிகள் - போக்குவரத்து ஸ்தம்பிப்பு" என்ற தலைப்பில் புகைப்படத்தோடு செய்தி வந்துள்ளது. எண்ணூர் விரைவுச்சாலை, மாதவரம் உள்வட்டச் சாலை, பொன்னேரி நெடுஞ் சாலை உள்ளிட்டவைகளில் ஆயிரக்கணக்கான லாரிகள் தொடர்ந்து வரிசை கட்டி நிற்கின்றன என்றும், இதனால் பஸ்

போக்குவரத்து உட்பட அனைத்து வாகனப் போக்குவரத்தும் அடியோடு ஸ்தம்பித்துள்ளது என்றும் எழுதியுள்ளது.

மணல் கொள்ளையால் கிணறுகள் வற்றின என்று இன்று ஒரு செய்தி. தண்ணீர் பற்றாக்குறை, மின் வெட்டு பாதிப்பால் டெல்டா பகுதிகளில் விளைச்சல் குறைந்தது என்று மற்றொரு செய்தி ராமநாதபுரம் அருகே குடிநீர் பஞ்சம் வேறொரு செய்தி

மக்களின் அன்றாட வாழ்க்கையிலே சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினைகளை யெல்லாம் விட்டுவிட்டு, முதலமைச்சர் அன்றாடம் எல்லோரையும் கேலி செய்வதைப் போல பத்து நகராட்சிகளுக்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு அறிவிப்பு - தொழில் பயிற்சி நிலையங்களில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் உதவித்தொகை உயர்வு - விலையில்லா மடிக் கணினி வழங்கப் போகிறோம் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆட்சிக்கு வந்தவுடன் அறிவித்த மடிக் கணினிகளே இன்னும் வழங்கப்படவில்லை. கூடங்குளம் பகுதியிலே போராட்டக்காரர்களை ஏமாற்றுவதற்காக 500 கோடி ரூபாய்க்கு நலத் திட்டங்களை வழங்கப்போவதாக அறிவித்து ஆறு மாதங்கள் ஆயிற்று. அவற்றில் எதையுமே ஆரம்பிக்க வில்லை என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளிதழ் முதல் பக்கத்திலே கொட்டை எழுத்துக்களில் எழுதியுள்ளது. அதற்குப் பதில் அளிக்க அரசிலே யாரும் இல்லை. இதிலே நடைபெறாத செயல்களுக்கு அறிவிப்பு ஒரு கேடா? அரசாங்கத்தில் வேறு என்ன நடக்கிறது? இவ்வாறு அறிவிப்புகளை அன்றாடம் செய்வதும் - பத்திரிகைகள் மீதும், எதிர்க்கட்சிக்காரர்கள் மீதும் பழி வாங்குவதற்காக பொய் வழக்குகளைத் தொடுப்பதும் தான் நடைபெறுகின்றன. - உதாரணமாக இன்றையதினம் கூட முன்னாள் அமைச்சர் பொன்முடி மீது செம்மண் எடுத்ததில் அரசுக்கு 28.37 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுத்திவிட்டதாக ஐந்து பிரிவுகளில் வழக்கு தொடுத்திருக்கிறார்கள். என்னென்ன பிரிவுகள் தெரியுமா? 379 (திருடியது); 506-1 (மிரட்டல்); 406 (அதிகாரம் செய்தல்); 120-பி (சதி செய்தல்); போன்ற பிரிவுகளையெல்லாம் போட்டிருக்கிறார்கள். அ.தி.மு.க. ஆட்சியில் கிரானைட் ஒதுக்கீட்டில் என்னென்ன முறைகேடுகள் நடந்தன, அதிலே யார் யாருக்கு எவ்வளவு பொறுப்பு என்பதைப் பற்றியெல்லாம் முழுவதுமாக விசாரிக்க வேண்டும். அதைப்

போலவே வாகன ஓட்டிகள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறி விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் திருமாவளவனின் உதவியாளரை கைது செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளை மாறுதல் செய்து, அவர்கள் அன்றாடம் கொடுக்கும் பூங்கொத்துகளை வாங்கிக் கொண்டு, அதைப் புகைப்படம் எடுத்து ஏடுகளிலே வெளியிடுவதும் தானே நடக்கிறது? மக்கள் பிரச்சினைகள் கவனிக்கப்படுகின்றனவா? குறிப்பாக மின் தடையைப் போக்க என்ன வழி? டீசல் விலை உயர்வால் பாதிக்கப்படுகிறவர்களுக்கு கேரள மாநிலத்தைப் பின்பற்றியாவது வாட் வரியைக் குறைக்க முடியுமா? சமையல் எரிவாயு சிலிண்டர்கள் ஆறுக்கு மட்டுமே மத்திய அரசு மானியம் கொடுக்கின்ற நிலையில் காங்கிரஸ் ஆளுகின்ற மாநிலங்களில் மேலும் மூன்று சிலிண்டர்களுக்கு மாநில அரசே மானியம் கொடுக்க முன் வரும் என்பதைப் போல, தமிழகத்திலும் அப்படிப்பட்ட சலுகை அளிக்கலாமா? சம்பா சாகுபடிக்கு என்ன செய்வது? கூடங்குளம் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர என்ன செய்யலாம்? என்பது போன்ற முக்கிய பிரச்சினைகளில் முதலமைச்சர் ஜெயலலிதா சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி அதிலே முடிவு கண்டு அறிவிப்பதுதான் மக்கள் குறை தீர்ப்பதற்கான வழியே தவிர, அறிவிப்பு செய்வதும், வழக்குப் போடுவதும் மட்டுமே மக்கள் குறைகளைத் தீர்க்க உதவாது!

வெற்று அறிவிப்புகளும், வீண் வழக்குகளும் காலத்தைத் தள்ளப் பயன்படுமே அன்றி; நம்பி வாக்களித்த மக்களின் கவலை போக்கிடுமா? கண்ணீர் துடைத்திடுமா?

அன்புள்ள,

மு.க.

26-09-2012

3658. வெளிச்சத் துளி கிடைத்திட!

உடன்பிறப்பே,

தமிழ்நாடே இன்று இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

ஏழையெளிய நடுத்தர மக்கள், ஏன் - வசதி வாய்ப்புள்ளவர்கள்கூட வரலாறு காணாத மின் வெட்டினால் படுகின்ற அல்லல் கொஞ்சம் நஞ்சமல்ல!

லகானை விட்டுவிட்டு; அதை மீறி பாய்ந்தோடும் நாலு கால் பாய்ச்சல் குதிரையை அடக்குவதற்கு; அதன் கால்களைப் பிடித்துக் கொண்டு கதறி அழுவதுபோல இந்த இருண்ட இழிநிலைக்கு தி.மு.க.தான் காரணம் என்று ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற அம்மையார் ஜெயலலிதா திசை திருப்பும் பணியிலே ஈடுபட்டு, அதற்கேற்ப அறிக்கைகளைப் பறக்க விட்டாலே தனது "ஆத்மா"வுக்கு ஒரு சாந்தி என்று கருதிக் கொண்டு செயல்படுவது போலத் தெரிகிறது.

அடுக்கடுக்காக தான் செய்த தவறுகளுக்கு அவரே சுவரில் முட்டிக் கொள்வது போல ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டு விட்டு; தனது மந்திரி, பிரதானியர், அதிகார வர்க்கத்தினர்

"ஆகா! ஊகூ! பேஷ்! பேஷ்!"

என்று கை தட்டுகிற அந்த ஒலியில் சுகம் காணுகிறார் என்பதைப் பார்க்கும்போதும் - அதை நினைக்கும் போதும் - இப்படி அவதூறு பரப்புவோர்களுக்கு - அருந்திட பழமும் பாலும் தந்து - அயர்ந்து தூங்கிட பஞ்சணையும் ஏற்பாடு செய்து - ஏமாந்து கிடக்கும் பஞ்சை பராரிகளாம் ஏழைத் தமிழர்கள்மீது நமக்கு இரக்கம்தான் ஏற்படுகிறது!

ஒரு துக்க நிகழ்ச்சி நடைபெறும்போதுகூட அதில் பங்கு பெற்று ஆறுதல் கூறிடவோ; அல்லது அந்தத் துக்க நிகழ்ச்சி தொடர்பாக ஏற்படும் கஷ்ட, நஷ்டங்களைக்களைவதற்கு ஒரு

சிலர் முன் வந்தால் அவர் மீதும் சீறிப் பாயும் சேட்டைக் குணம் ஜெயலலிதா போன்றவர்களுக்கு இன்னமும் அவர்களை விட்டு விலகாமல் இருக்குமானால் அதன் பயனையும் அவர்கள்தான் அனுபவிக்க வேண்டும்.

அனுதாபம் கூறி - நடந்தவைகளை இடித்துக் காட்டி - இனி நடப்பவைகளாவது நல்லவைகளாக இருப்பதற்கு ஆலோசனை கூற வருகிறவர்களைக்கூட அவமதிப்பதும்;

அவர்கள் மீதுள்ள பழைய காழ்ப்புகளை மறந்து விடாமல் விலகிச் செல்லுங்கள் என்று அவர்களை நோக்கி வெறியாட்டம் போடுவதும்; விளைந்துள்ள துன்பங்களின் எதிரொலியாகக்கூட இருக்கலாம்.

அதற்காக "என்னம்மா உதவி தேவை?" என்று இரக்க உணர்வோடு ஆறுதல் கூற வருபவர்களையும், கடந்த காலத் தவறுகளைச் சுட்டிக்காட்டி இனி அவ்வாறு எதுவும் நடந்திடக் கூடாது என்பதற்கான எச்சரிக்கையை அறிவுரையாகக் கூறினால்கூட, "எடுத்தேன்; கவிழ்த்தேன்" என்ற பாணியில் "நீ யார் எனக்கு அறிவுரை கூற?" என்று சல்லடம் கட்டிக் கொண்டு சண்டைக்கு வருபவர்களிடம்;

என்ன பேசுவது?
எதைப் பேசுவது?
எப்படிப் பேசுவது?

இந்த நிலையில் என்ன பேசுவது? என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் - எப்படிப் பேசுவது என்பதைப் பற்றியும் அலட்டிக் கொள்ளாமல் - சும்மா இருப்பதே சுகம் என்ற முடிவுக்குத்தான் வர வேண்டும்.

எனினும், நம் தமிழ்நாட்டு மக்களின் தவிப்பு -
அவர்களை வாட்டி வதைக்கும் இருட்டு -

வாய் பிளந்து நிற்கும் பசி, பஞ்சம், பட்டினி என்ற
வேதனையான கொடுமைகள் -

இவற்றிலிருந்து நாமும் தமிழர்கள் என்ற காரணத்தால் - இன்னமும் நம்மை நம்பியிருக்கிற தமிழர்களை நினைத்து நினைத்து நெஞ்சுருக - சிலவற்றைச் சொன்னால் அந்த நெஞ்சிலேயே - நெடிய வாளால் - ஈட்டியால் குத்துகிற வகையில் அல்லவா;

ஜெயலலிதாவின் அறிக்கையும் - அந்த அறிக்கையிலே அள்ளித் தெளிக்கப்பட்ட அவதூறு அர்ச்சனைகளும் இருக்கின்றனவே அல்லாமல்;

தமிழக உழவர்களின் தவிப்பைப் போக்கிட -
தானியக் களஞ்சியங்கள் தரிசு நிலங்களாகி விடாமல்
தடுத்திட -
உரிய வழி என்ன - உகந்த முறை என்ன என்பது பற்றி
ஒருவருக்கொருவர் கலந்து பேசி முடிவெடுக்கவே
இயலாமல்;

ஆத்திரத்தில் அலறித் துடிப்பது போல் அம்மையாரின் அறிக்கை வாசகங்கள் அணுகுண்டுகளாகச் சிதறி வெடிக்கின்றன!

இது நியாயமா?
நேர்மையா?

இல்லாததும், பொல்லாததும் கூறி எதிர்க்கட்சிகளின் குரல்வளையை நெரிப்பதற்கு முற்படாமல் இனியாவது ஜெயலலிதா; தான் ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் - மக்களைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர் என்பதை உணர்ந்து - தெளிந்து உதவிட முன்வருவாரா?

என்று தமிழக மக்கள் தாங்கொணா துயரத்தோடு ஒலி எழுப்பும் இந்த

நேரத்திலாவது -
தன்னை உணர்ந்து -
தமிழர்களின் கஷ்டத்தை உணர்ந்து -

அவருடைய அலட்சியத்தால் தமிழகமே இருண்டு கிடக்கிற நிலைமையிலிருந்து - சிறியதோர் வெளிச்சத் துளி கிடைப்பதற்குப் பாடுபட முன்வருவாரா? பணியாற்றக் கிளம்புவாரா?

இந்தக் கேள்விகள்தான் அவருடைய அவதூறு அறிக்கைக்கு பதிலாக அமைகின்றன!

அன்புள்ள,
மு.க.
27-9-2012

3659. எழுதுவதை நிறுத்தும் எண்ணம் எனக்கில்லை!

உடன் பிறப்பே ,

அண்மையில் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில் நாட்டில் தற்போதுள்ள முக்கிய பிரசினைகளில் 'இரட்டை நிலையை நான் கடைபிடித்து வருவதாகவும், ஏமாற்று வித்தையில் நான் கை தேர்ந்தவன் என்பதை ஒரு முறை நிரூபித்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்.

இரட்டை நிலைமை எப்போதும் கடைப்பிடிப்பவர் யார் என்பது தமிழ்நாட்டு மக்களுக்கே நன்றாகத் தெரியும். எனினும் ஒருவேளை மறந்திருந்தால் அதற்காக ஒன்றிரண்டை மட்டும் நினைவூட்டுகிறேன்.

பேரவையிலே முதல் நாள் ஆத்திரக் கோலத்தில் நீதிபதிகளையெல்லாம் கடுமையாகத் திட்டிவிட்டு, அடுத்த நாளே அதே பேரவையில் முதல் நாள் திட்டியதையெல்லாம் பெற்றுக் கொள்வதாகத் தெரிவித்தவர் ஜெயலிதா. இவர்தான் எனக்கு 'இரட்டை நாக்கு' என்கிறார். சிரிப்புத்தான் வருகிறது.

சர்க்காரியா கமிஷன் விசாரணையிலிருந்து தப்பிக்க 1972ஆம் ஆண்டு இந்திரா காந்தியை அணுகி காவேரி வழக்கினை நான் வழக்கினை வாபஸ் பெற்றேன் என்று பேரவையில் தெரிவித்தார். உடனே திரு. எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் எழுந்து நீங்கள் சொல்வது தவறு, காவேரி வழக்கினை வாபஸ் பெற்றுப் பல ஆண்டுகளுக்கு பிறகு 1977இல் தான் சர்க்காரியா கமிஷனே வந்தது என்று தெளிவாக்கியதும் ''வாய் தவறிச் சொல்லி விட்டேன், ''டங் ஸ்லிப்'' என்று ஆங்கிலத்தில் கூறினார். சிரிக்காமல் இருக்க முடியுமா?

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று இந்து எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளுக்குப் பேட்டி கொடுத்தார். விடுதலைப் புலிகளுக்காகப் கருணாநிதி எதுவுமே செய்யவில்லை

என்றார். பிறகு சில நாட்களுக்கெல்லாம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிபாகரனைக் கைது செய்து இந்தியாவிற்கு அழைத்து வர வேண்டுமென்று பேரவையில் இவரே தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றினார். இது இரட்டை நிலையா? அல்லவா?

இவ்வளவு ஏன்? 8-5-1995 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், சசிகலா மீது யாராவது குறை கூற முற்படுவார்களேயானால், நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிவிட்டு 27-8-1996 தேதிய அறிக்கையில் சசிகலாவோடு எனக்கு இருந்த தொடர்புகள் அனைத்தையும் இந்த நாள் முதல் விலக்கிக் கொள்கிறேன் என்றும் அறிவித்துவிட்டு, மீண்டும் ஒரு முறை அவரை ஒன்று சேர்த்துக் கொண்ட இதற்குப் பெயர் இரட்டை நிலையா? நிலையில்லாத நிலையா?

சில மாதங்களுக்கு முன்பு கூடங்குளம் பிரச்சினையிலே போராட்டக்காரர்களையெல்லாம் தலைமைச் செயலகத்திற்கே ஜெயலலிதா அழைத்துப் பேசினாரா? இல்லையா? அவர்களையெல்லாம் பிரதமரைச் சந்திக்க தமிழக நிதியமைச்சர் துணையோடு அனுப்பி வைத்தாரா இல்லையா? போராட்டக்காரர் களுக்கு ஆதரவாக அவசர அவசரமாகத் தமிழக அமைச்சரவை கூட்டத்தைக் கூட்டி, கூடங்குளம் ஆலைப் பணிகளைத் தொடரக் கூடாது என்று தீர்மானமே நிறைவேற்றி, பிரதமருக்கு அனுப்பி வைத்தாரா இல்லையா? ஆனால் தற்போது என்ன நிலை? கூடங்குளம் போராட்டக்காரர்களை அடக்கி ஒடுக்க; படாதபாடு படுகிறாரா இல்லையா? இதற்குப் பெயர் இரட்டை நிலையா இல்லையா? ஏமாற்று வித்தையில் கைதேர்ந்தது நானா அவரா? தமிழ்நாட்டு மக்களே, பத்திரிகையாளர்களே, நீங்களே கூறுங்கள்! குழந்தையையும் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டுவது யார்? ஜெயலலிதாவா? நானா?

தமிழ்நாட்டிலே எந்தப் பிரச்சினை என்றாலும், உடனே காவேரியில் துரோகம் செய்தது கருணாநிதி என்ற ஊசிப்போன ஒப்பாரியை எத்தனையோ ஆண்டுக் காலமாகத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். அதற்கு நானும் எத்தனை முறைதான் பதில் கூறுவது? நான் துரோகம் செய்து விட்டதாகவும், முதல் துரோகம், இரண்டாவது துரோகம் என்றெல்லாம் பட்டியலிட்டிருக்கிறார். அவர் குற்றஞ்சாட்டியிருப்பதால் நான் பதில் சொல்கிறேன். மக்களே தீர்மானித்துக் கொள்ளட்டும். எம்.ஜி.ஆர். செயல்பட

42254
தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூலகம்
தி.894-8116
கருணா.47

முடியாதவராகி விட்டார், அவரை நீக்கிவிட்டுத் தன்னை முதலமைச்சராக ஆக்கும்படி பிரதமர் ராஜீவ் காந்திக்குக் கடிதம் எழுதியவர், துரோகத்தைப் பற்றிப் பேசுவதும், அறிக்கை விடுவதும் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போலத்தானே?

"ஹேமாவதி அணைக்கட்டு கட்டுவதில் தமிழக அரசுக்கு எந்தவிதமான மறுப்பும் இல்லை" என்று நான் கூறியது முதல் துரோகமாம்! இதற்கு 2-5-2002லேயே நான் "முரசொலி"யில் பதிலளித்து விட்டேன். அதாவது ஹேமாவதி அணைக்கட்டு, கபினி அணைக்கட்டு ஆகியவை எல்லாம் கர்நாடக அரசினால் திட்டமிடப்பட்டுத் தொடங்கப்பட்டுவிட்ட நிலையில்தான்; பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.கழக ஆட்சியே அமைந்தது! அண்ணாவின் மறைவுக்குப் பிறகு 8-7-1971 அன்று பேரவையில் நான் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானமே **ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி ஆகிய அணைத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசுக்கு முறைப்படி தெரிவித்து தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெறாமல் நிறைவேற்றியது குறித்து இப்பேரவை தனது கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது என்பதுதான்.**

அடுத்து, எனக்குள்ள அரசியல் நெருக்கடி காரணமாக இரு அவைகளுக்கும் தெரிவிக்காமல் நான் வழக்கை வாபஸ் பெற்றதாகவும், அது ஒரு துரோகம் என்றும் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். பொன்னையனும் ஜெயலலிதாவும் இதே பொய்யைப் போட்டி போட்டுக்கொண்டு சட்டமன்றத்தில் கூறி அந்தப் பொய்யை மறுத்து தி.மு.க சார்பில் அவர்கள் இருவர் மீதும் உரிமைப் பிரச்வினை கொண்டு வந்தபோது, அதை ஜெயலலிதா சமாளித்து, வழக்கு வாபஸ் பற்றிய அ.தி.மு.க. வினரின் குற்றச்சாட்டு கொஞ்சமும் வாய்மையற்றது; நஞ்சு கலந்த வஞ்சகப் என அப்போதே நிரூபிக்கப்பட்டது.

பிரதமர் இந்திரா காந்தியின் வாக்குறுதிப்படி வழக்கு திரும்பப் பெறப்பட்டது. அதுவும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி மீண்டும் தமிழக அரசு விரும்பினால் அந்த வழக்கைத் தொடரலாம் என்ற நிபந்தனையோடுதான் திரும்பப் பெறப்பட்டது. ஆனால் பேச்சுவார்த்தையில் பலன் காண முடியாமல் போனதால்தான்

நடுவர் மன்றம் வேண்டுமென்ற முடிவுக்கு தமிழக அரசு வந்தது. பிரதமர் வி.பி. சிங் அவர்கள் காலத்தில் கழக அரசின் முயற்சியின் காரணமாக நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, இடைக்கால ஆணையும் நடுவர் மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டது. இதைத் தான் ஜெயலலிதா, "தமிழகத்திற்குத் துரோகம் இழைப்பதையே வாடிக்கையாகக் கொண்டுள்ள கருணாநிதி" என்று அவருக்கே உரிய பண்பார்ந்த(?) வார்த்தைகளால் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்.

அடுத்து ஜெயலலிதா தனது அறிக்கையில், தி.மு.க. அரசின் முதல் அமைச்சராக நான் இருந்த போது, கர்நாடக அரசு தமிழகத்திற்குக் காவிரியிலிருந்து தண்ணீர் விடமாட்டோம் என்று சொல்லியிருக்கிறதே என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, "பத்திரிகைகளிலே வரும் செய்திகளை வைத்துக் கொண்டு நான் பதில் சொல்ல விரும்பவில்லை. பத்திரிகைகளிலே வரும் செய்திகளினால் நான் சொல்கிற பதில்களினால் இரண்டு மாநிலங்களுக்கும் இடையிலே தேவையற்ற கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு நான் இடம் தர விரும்பவில்லை " என்று தன்னலம் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தில், பதில் அளித்தவர் கருணாநிதி" என்று எழுதியிருக்கிறார். நான் அளித்த பதிலில் ஏதாவது தவறு இருக்கிறதா? அந்தப் பதில் தன்னலம் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற

அச்சத்தில் சொல்லப்பட்ட பதிலா அல்லது இரண்டு மாநிலங்களும் நேச மனப்பான்மையோடு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு, தமிழகத்திற்குத் தண்ணீர் வர வேண்டும், தமிழக விவசாயிகள் வாழ வேண்டும் என்ற அக்கறையோடு சொல்லப்பட்ட பதிலா என்பதை இதைப் படிப்பவர்களே புரிந்து கொள்ளட்டும். அண்டை மாநிலங்களோடு மன வேறுபாடு கொண்டு விரோதத்தை வளர்த்துக் கொள்ளாமல் கூடுமானவரையில் ஒற்றுமையோடு பேசிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது நல்லதா? "வா, ஒரு கை பார்க்கலாம்" என்று வாய் ஜாலம் காட்டும் ஜெயலலிதாவைப் போல வார்த்தையிலேயே வம்புக்கு இழுத்து விவசாயிகளைப் பாதிப்புக்கு உள்ளாக்குவது நல்லதா?

"மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்த போதிலும்,

காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட கருணாநிதியால் கூட்டச் செய்ய இயலவில்லை" என்று ஜெயலலிதா அறிக்கையிலே கூறுகிறார். இந்தக் காவிரி நதி நீர் ஆணையம் அமையக் காரணமாக இருந்ததே நான்தான்! ஆனால் அந்த ஆணையம் பற்றி இதே ஜெயலலிதா என்னவெல்லாம் சொன்னார் தெரியுமா?

காவிரி நதி நீர் ஆணையம் (Cauvery Authority) அமைக்கப்பட்டு, 11-8-1998 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. 21-8-1998 அன்று ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில், **"உத்தரவிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் போதிய அதிகாரம் உள்ள அமைப்புக்குத்தான் ஆணையம் என்று பெயர். ஆனால் பிரதமர் தலைமையில் ஆணையத்துக்குக் காவிரி தொடர்பாக உத்தரவிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் எந்த அதிகாரமும் இல்லை . காவிரி பிரச்சினையைத் தீர்க்க இயலாத, எந்த முடிவும் எடுக்கவிடாமல் தடுக்கிற விவாத அமைப்பாகத்தான் இப்புதிய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கர்நாடகத்துக்குச் சிறிதும் பாதிப்பில்லை; பாதிக்கப் படப் போவது தமிழகம்தான்" என்று ஆத்திர அவசரத்தோடு சொன்னார்.**

காவிரி நதி நீர் ஆணையத்தின் முதல் கூட்டம் 28-10-1998 அன்று டெல்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்றது. அந்தக கூட்டத்தில் நானும், கர்நாடக முதல்வர் பட்டேல், கேரள முதல்வர் நாயனார், புதுவை முதல்வா ஆர்.வி. ஜானகிராமன் ஆகியோரும் கலந்து கொண்டோம். ஆனால் ஜெயலலிதா, கருணாநிதியால் காவிரி நதி நீர் ஆணையத்தைக் கூட்டச் செய்ய இயலவில்லை" என்று சொல்லியிருக்கிறார்.

14-7-2000 அன்று டெல்லியில் காவிரி ஆணையத்தின் இரண்டாவது கூட்டம் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நானும், கர்நாடக முதல்வர் கிருஷ்ணா அவர்களும், கேரள முதல்வர் ஈ.கே. நாயனார் அவர்களும், புதுவை முதல்வர் பி. சண்முகம் அவர்களும்

கலந்து கொண்டோம். அந்தக் கூட்டத்தில் அடுத்த 30 நாட்களில் ஜூன் மாதம் வரை அளிக்க வேண்டிய தண்ணீரை தமிழ் நாட்டுக்கு திறந்து விட கர்நாடகம் ஒப்புக்கொண்டது. நான் முதலமைச்சராக இருந்த போது கூட்டமும் நடைபெற்று, அதில்

தமிழகத்திற்கு இவ்வாறு பலனும் ஏற்பட்டதற்கு ஜெயலலிதா என்ன பதில் சொல்லப் போகிறார்?

2-4-2002 அன்று சட்டப்பேரவையில் முதல்வர் ஜெயலலிதா கூறும்போது, "செயல்படாத ஆணையம் காவேரி ஆணையம்", "பல் இல்லாத ஆணையம்"; அந்த ஆணையத்தை ஏற்காமல் நாங்கள் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினோம்," என்று சொன்னார்.

21-6-2002 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் "எவ்வித அதிகாரமும் இல்லாமல், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பைத் திறம்படச் செயல்படுத்த இயலாத நிலையில் காவிரி நதி ஆணையம் உள்ளது. எனவே இந்த ஆணையத்தின் கூட்டங்களில் இனிமேல் தமிழ்நாடு கலந்து கொள்ளாது" என்று விளைவுகளைப் பற்றி முழுதும் ஆராயாமல் முடிவெடுத்து அறிவித்தார்.

அ.தி.மு.க. அரசின் இந்த அமைச்சரவை முடிவினைப் பற்றி என்னிடம் கருத்து கேட்ட போது, "ஆணையத்தைப் புறக்கணிக்க ஜெயலலிதா அரசு எடுத்த முடிவு; விவேகமான தல்ல; குறுவை நெல் பயிரிடுவதற்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு மத்திய அரசின் தலையீட்டையும் உதவியையும் பெற அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்; தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட முடிவுகளை எல்லாம் மாற்றும் போக்குதான் அ.தி.மு.க. அரசில் மேலோங்கி நிற்கிறது. காவிரிப் பாசனப் பகுதிக்கு; உரிய நேரத்தில் நீர் கிடைக்க முயற்சி மேற்கொண்டது தி.மு.க. ஆட்சிக் காலம். ஆணையக் கூட்டத்துக்குச் செல்ல மாட்டேன் என்பது அ.தி.மு.க. ஆட்சிக் காலம்" என்று நான் கூறினேன்.

காவேரி ஆணையக் கூட்டத்தில் கலந்து கொள்ள மாட்டேன் என்று தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா முதலில் சொன்னார். அதற்கடுத்த நாள்; "அழைத்தால் பார்க்கலாம்" என்றார். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் 5-7-2002 அன்று எதிர்க்கட்சியாக இருந்த நிலையிலும், பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு காவிரி நதி நீர் ஆணையத்தை உடனே கூட்ட வேண்டுமென்று கோரி கடிதம் ஒன்று எழுதினேன். அதற்கு 10-7-2002 அன்று பிரதமர் எழுதிய பதில் கடிதத்தில் அதைப்பற்றிக் கவனிப்பதாகக் கூறியிருந்தார். அவ்வாறே காவிரி நதி நீர் ஆணையம் கூட்டப்பட்டது.

காவேரி ஆணையத்தைப் "பல் இல்லாத ஆணையம், செயல்படாத ஆணையம்" என்றெல்லாம் குறிப்பிட்ட ஜெயலலிதா, அதை அனைவரும் மறந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில், 2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27இல் டெல்லியில் நடைபெற்ற காவேரி ஆணையக் கூட்டத்திலே கலந்து கொண்டார். ஆனால் அங்கே சுமுகமாகப் பேசி தண்ணீரைப் பெறுவதற்கான வழிவகை காணாமல், அவருக்குள்ள முன் கோபம் காரணமாக பிரச்சினையின் அவசர முக்கியத்துவத்தை மறந்து, இடையிலே வெளி நடப்பு செய்வதாகக் கூறி விட்டு வெளியே வந்து விட்டார். அப்போது அவர் வெளி நடப்பு செய்தது, தற்போது கர்நாடக முதல்வர் வெளி நடப்பு செய்ய முன்மாதிரியாக அமைந்தது. அதனால் பாதிக்கப்பட்டவர்கள் என்னவோ தமிழ்நாட்டு விவசாயிகள்தான்! பாழானதென்னவோ அந்த விவசாயிகளின் வாழ்வாதாரம்தான்!

29-11-2002 அன்று பிரதமர் தலைமையில் காவேரி ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. கர்நாடக முதலமைச்சர் முதல் நாளே டெல்லி சென்று விட்டார். ஆனால் காவிரி நீர் தேவைப்பட்ட நமது மாநில முதல் அமைச்சர் கடைசி நிமிடம் வரை வருவதாகச் சொல்லி விட்டு, பிறகு டெல்லி பயணத்தையே ரத்து செய்துவிட்டார். இந்தத் தலைகீழ் நடவடிக்கையால் யாருக்கு நட்டம்? முதல் அமைச்சருக்கு அல்ல; நமது மாநில விவசாயிகளுக்குத்தான்.

இதற்கிடையில் **"பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையம் மீது நம்பிக்கை இல்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதியது, கடுமையான ஆட்சேபத்துக்குரியது; அந்த அவதூறுக் கடிதத்தை நான்கு நாட்களுக்குள் திரும்பப் பெற வேண்டும்"** என்று தமிழக அரசு வழக்கறிஞரிடம், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். தமிழக அரசின் வழக்கறிஞரான திரு. கே.கே. வேணுகோபால், நீதிபதிகளிடம், "பிரதமர் மீதும், அவரது தலைமையில் செயல்படும் காவிரி நதிநீர் ஆணையத்தின் மீதும் தமிழகம் முழு நம்பிக்கை வைத்துள்ளது. காவிரி நதி நீர் ஆணையத்தின் மீது நம்பிக்கை தெரிவித்தும், பிரதமர் வாஜ்பாய்க்கு இது தொடர்பாக எழுதிய கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்காகவும் மீண்டும் ஒரு கடிதத்தை வெகு விரைவில்

பிரதமர் வாஜ்பாய்க்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எழுதி அனுப்புவார்” என்றும் தெரிவித்தார்.

அதற்கிணங்க, 16-11-2002 அன்று பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், பிரதமர்மீது தனிப்பட்ட முறையில் தான் மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாகவும், ஏற்கனவே தான் சொன்ன அத்தனை யையும் மறந்து விட்டு காவேரி ஆணையத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதாகவும் எழுதியிருந்தார்.

அப்படியெல்லாம் இரட்டை வேடம் போட்ட ஜெயலலிதாதான் ஏமாற்று வித்தையில் நான் கைதேர்ந்தவன் என்றும், காவேரி பிரச்சினையில் நான் துரோகம் செய்து விட்டேன் என்றும் அறிக்கை விடுகிறார். ஒரு முதலமைச்சர் விடுகின்ற அறிக்கையில் முன்னாள் முதலமைச் சரைப் பற்றி இப்படியெல்லாம் தரத்தையும், பண்பாட்டையும் தூக்கியெறிந்து விட்டு, தாறுமாறாக வார்த்தைகளை பயன்படுத்துவது முறைதானா? நியாயம்தானா?

“கூடங்குளம் பிரச்சினையில் போராட்டக் குழுவினரின் முக்கிய பிரதிநிதிகளையெல்லாம் மத்திய மாநில அரசினர் அழைத்துப் பேச வேண்டும், ஆபத்து எதுவும் ஏற்படாமல் அரசினால் எடுக்கப்படவேண்டிய அத்தனை நடவடிக்கைகளையும் செய்து கொடுப்போம் என்று அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும், உத்தரவாதம் அளிப்பதோடு அவற்றை செய்து முடிக்கவும் ஆவன செய்ய வேண்டும். போராட்டம் நடத்துவோரும் நமது மக்கள்தான். அவர்களை ஏதோ விரோதிகள் என்பதைப் போல இந்த அரசு நினைக்கக் கூடாது” என்று நான் எழுதியிருந்ததை தன் அறிக்கையிலே குறிப்பிட்டுள்ள ஜெயலலிதா, “இவ்வாறு நீட்டி முழக்கியிருக்கிறார் கருணாநிதி” என்று சொல்லியிருக்கிறார். நான் எழுதியது எவ்வாறு அடக்கமாகவும், அக்கறையோடும் இருக்கிறது என்பதையும், முதலமைச்சர் ஜெயலலிதா எழுதியிருப்பது எத்தகைய நல்ல பண்பாடு (?) என்பதையும் சிந்தித்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய அறிக்கையைப் படித்து விட்டு, அந்தப் பகுதியிலே உள்ள பொதுவானவர்கள் எல்லாம் வரவேற்றுப் பாராட்டித் தொலைபேசியில் பேசியதோடு, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. அப்பாவு அவர்களையும் சந்தித்துச்

சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நான் ஏதோ ஆறு மாதத்தில் "அந்தர் பல்டி" அடித்துள்ளதாக ஜெயலலிதா அறிக்கையிலே கூறுகிறார். எனக்கு; முதலமைச்சர் ஜெயலலிதாவைப் போல, சொன்னதை, மாற்றி மாற்றி "அந்தர் பல்டி" அடிக்கத் தெரியாது!

ஜெயலலிதா; 19-9-2011 அன்று விடுத்த அறிக்கையில், "கூடங்குளம் அணு மின் திட்டப் பிரச்சினையில் சுமுகத் தீர்வு எட்டப்படுகிற வரையில் பணிகள் எதையும் மேற்கொண்டு தொடர வேண்டாம்" என்று சொல்கிறார். 19ஆம் தேதியன்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் பணிகளை நிறுத்தும்படி வேண்டிக் கொள்கிறார். 21ஆம் தேதியன்று கூடங்குளம் கூடாது என்று இடிந்தகரையில் உண்ணாவிரதம் இருந்தவர்களின் பிரதிநிதிகள் சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து, அவர் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிக்கிறார்கள். **அதன் தொடர்ச்சியாக** 22-9-2011 **அன்று தமிழக அமைச்சரவை அவசர அவசரமாகக் கூடி அந்தப் பகுதி மக்களின் அச்சம் தீர்க்கப்படும் வரை கூடங்குளம் அணு மின் நிலையப் பணிகளை நிறுத்தி வைக்க மத்திய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றுகிறார்கள்.**

இப்படியெல்லாம் கூடங்குளம் எதிர்ப்பாளர்களை ஈர்ப்பதற்காகச் சொன்ன அதே முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு 31-3-2012 அன்று எழுதிய கடிதத்தில், "கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படவுள்ள 2000 மெகாவாட் மின்சாரத்தையும் தமிழகத்திற்கே ஒதுக்க வேண்டும்" என்றார். எது அந்தர் பல்டி? கூடங்குளம் போராட்டக்காரர்கள் எல்லாம் முதல் அமைச்சரைப் பார்த்துச் சிரிப்பாய் சிரிக்கிறார்களே? எது இரட்டை நிலை?

அடுத்து, மின்சாரப் பற்றாக்குறைக்கு தி.மு. கழக அரசுதான் காரணம் என்று ஜெயலலிதா தனது அறிக்கையிலே சொல்லியிருக்கிறார். இதற்குப் பதில் பல முறை சொல்லி ஆயிற்று; எனினும் எது உண்மை என்பதை நேற்று ஏடுகளில் வெளிவந்துள்ள ஒரு செய்தியைப் பார்த்தே புரிந்து கொள்ளலாம். தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணைய உறுப்பினர் திரு. வேணுகோபால் ஒரு நிகழ்ச்சியில் பேசும் போது, "வல்லூர், வடசென்னை, மேட்டூர் ஆகிய இடங்களில் மின் உற்பத்தித் திட்டம் மூலம் அடுத்த ஆறு மாதங்களில் 3000 மெகாவாட் மின்சாரம்

கிடைக்கும்" என்று சொல்லியிருக்கிறார். இந்த 3000 மெகாவாட் மின்சாரம், தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்கள் மூலமாகத்தான் கிடைக்கவுள்ளது என்பதைப் புரிந்து கொண்டால்; கழக ஆட்சியில் மின் உற்பத்திக்காக எதுவும் செய்யவில்லை என்று திரும்பத் திரும்ப புழுதி வாரித் தூற்ற மாட்டார்கள்.

கூடங்குளத்திலிருந்து மின் உற்பத்தி அடுத்த ஆண்டுதான் கிடைக்கும் என்றும் ஒரு செய்தி வந்துள்ளது. ஜெயலலிதா இந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தத் திட்டத்தை நிறுத்துகின்ற வகையில் போராட்டக்காரர்களை ஊக்குவிக்காமல், அவர்களிடம் உண்மை நிலையை விளக்கி, திட்டப் பணிகள் தொடர்ந்து நடந்திட ஒத்துழைத்திருந்தால், கூடங்குளத்திலிருந்து இந்த ஆண்டு மத்தியிலேயே மின் உற்பத்தி தொடங்கியிருக்கும். தற்போதுள்ள மின் பற்றாக்குறையே ஏற்பட்டிருக்காது. எனவே இந்த மின் பற்றாக்குறைக்கும், இருள் விலகாமல் இருப்பதற்கும் முழுமுதற்காரணம் ஜெயலலிதாவின் எதிர்மறை நடவடிக்கைகள் தான்.

கூடங்குளம் பகுதியில் 500 கோடி ரூபாய்க்கு நலத் திட்ட உதவிகளை அங்கே அமைதியான சூழ்நிலை உருவானவுடன் செய்யப்போவதாக தற்போது முதல் அமைச்சர் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். 19-3-2012 அன்று அதாவது ஆறு மாதங்களுக்கு முன்பு அமைச்சரவையிலே முடிவெடுத்து கூடங் குளத்தில் வீட்டு வசதி, - சாலை வசதிகள் உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார். அதிலே இதுவரை ஒரு கோடி ரூபாய்கூடச் செலவு செய்யப்படவில்லை. நான் அதைக் குறிப்பிட்டுக் கேட்ட பிறகு, அங்கே அமைதியான சூழல் ஏற்பட்ட பிறகு அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்கிறார். அறிவித்தவுடன், பணிகளை மேற்கொண்டிருந்தால், அந்தப் பகுதி மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை ஏற்பட்டு, அங்கே அமைதி நிலை உருவாகியிருந்தாலும் உருவாகியிருக்கக் கூடும். எனவே அங்கே போராட்டம் இந்நாள் வரை தொடர்வதற்கே ஜெயலலிதாவின் செயற்பாடுகள்தான் காரணம்!

இறுதியாக ஜெயலலிதா தனது அறிக்கையில் நான் முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகளை வெளியிடுவதாகவும், குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபடுவதை

வாடிக்கையாகக் கொண்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். தமிழ் மாநிலப் பெருமக்களே! அவரது அறிக்கையையும் படித்திருப்பீர்கள். என்னுடைய இந்த விரிவான பதிலையும் படியுங்கள். யார் சொல்வது முன்னுக்குப் பின் முரணானது, திரித்தும் குறைத்தும் திசை திருப்பக் கூடியது, யார் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கிறார்கள், யார் குறைந்தபட்சப் பண்பாடு இல்லாமல், நாகரிகம் இல்லாமல் அறிக்கை கொடுக்கிறார்கள் என்ற முடிவுக்கு நீங்களே வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டு முரண்பாடான அறிக்கைகளை வெளியிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டு"மென்று எனக்கு அறிவுரை கூறியிருக்கிறார் ஜெயலலிதா. தமிழர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டுதான் நாளும் நாளும் எழுதுகிறேன். ஜெயலலிதாவின் அறிவுரையைக் கேட்டு எழுதுவதை நிறுத்துகின்ற எண்ணம் எனக்கில்லை.

அன்புள்ள,

மு.க.

28-9-2012

3660. இன்றே அணிவேன்; என்றும் அணிவேன்!

உடன்பிறப்பே,

ஒரு ஜனநாயக நாட்டில், எதிர்க்கட்சிகள், ஆளுங்கட்சியின் மக்கள் விரோத நடவடிக்கை களையும், குறைகளையும் சுட்டிக்காட்டி அமைதியான முறையில் சட்ட ரீதியாகப் போராட்டம் நடத்துவது என்பது அனுமதிக்கப்பட்ட முறையாகும். தி.மு. கழகம் ஆளுங்கட்சியாக இருந்தபோது, அதை விமர்சித்து ஜெயலலிதாவின் அறிக்கைகள் வெளிவராத நாட்களே கிடையாது. எடுத்துப் பார்த்தால், "வடசென்னை மாவட்டத்தில் தண்டையார் பேட்டையில் துணை மின் நிலையத்தை செயல்பாட்டிற்குக் கொண்டு வராத, மைனாரிட்டி தி.மு.க.அரசைக் கண்டித்து வடசென்னை மாவட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" - இது 29-4-2010 அன்று ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை! அந்தப் போராட்டத்திற்கு ஆட்கள் வருகிறார்களோ இல்லையோ, அது நடக்கிறதோ இல்லையோ, ஆனால் ஜெயலலிதாவின் ஆர்ப்பாட்ட "போர்"ப்பாட்டு அறிக்கைகள் வராத நாட்களே இல்லை.

அப்போது மிகச்சாதாரணப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஆர்ப்பாட்டம், மறியல் எல்லாம் நடைபெற்றது. இப்போதோ மாநிலம் முழுவதும் நாள் ஒன்றுக்கு 16 மணி நேரத்திற்கு மேல் மின்சாரமே இல்லை. மாநிலமே இருண்டு கிடக்கிறது. எந்த நாளிதழைப் பிரித்தாலும் திருப்பூரில் மின்வெட்டைக் கண்டித்து போராட்டம், பந்த் - 1000 கோடி ரூபாய் தொழில்கள் பாதிப்பு - கோவையில் போராட்டம் - 800 கோடி ரூபாய் தொழில்கள் பாதிப்பு என்ற செய்திகள்.

சட்டம், ஒழுங்கு என்று எடுத்துக் கொண்டால் இந்த இரண்டு நாட்களில் மட்டும், ராமேசுவரம் அருகே ஒரே குடும்பத்தில் ஆறு பேர் எரித்துக் கொலை - திருப்பெரும்புதூர் அருகே சினிமா

தயாரிப்பாளர் பி.பி.ஜி குமரன் கொலை, இந்த வழக்கில் அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் குற்றவாளி என்று கைதாகி இருக்கிறார் - காசிமேட்டில் பிரபல ரவுடி பிரான்சிஸ் வெட்டிக் கொலை - சென்னைப் பல்கலைக் கழக காவலாளி பாபு அடித்துக் கொலை - மதுராந்தகத்தில் சாராய வியாபாரி கங்காதரன் வெட்டிக் கொலை - வெள்ளக் கோவில் அருகே கணவன், மனைவி, மாமியார் கொலை - தேவகோட்டை அருகில் மண்வெட்டியால் அடித்துக் கணவன் கொலை - தஞ்சையில் முன்னாள் காவலர் தர்மன் படுகொலை - நேற்றும் இன்றும் நடைபெற்ற கொலைகளின் பட்டியல் இது.

எட்டாவது முறையாக அமைச்சர்கள் மாற்றம் - இந்த ஆட்சியில் இந்நாள் அமைச்சர்களின் எண்ணிக்கையை விட முன்னாள் அமைச்சர்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும் போலும்!. பேரவைத் தலைவரே தன்னுடைய பதவியை ராஜினாமா செய்திருக்கிறார் என்ற நிலைமை. தேர்தல் நேரத்தில் தோழமைக் கட்சிகளாக இருந்தவர்களே இன்று எதிர்க்கட்சியாகி விட்டார்கள். யாரையும் மதிக்காத போக்கு. அதிகாரிகளின் நிலைமையோ தர்ம சங்கடம். "ஆமாம்" போடுபவர்களே, பதவியில் நீடிக்க முடியுமென்ற நிலை. காவல் துறையோ ஏவல் துறையாகச் செயல்படுகிறது. சென்னை மாநகர ஆணையரே ஒன்றரை ஆண்டிற்கு மேல் நீடிக்க முடியவில்லை.

பத்திரிகைச் சுதந்திரம் என்றால் என்ன என்று கேட்கும் நிலை. எத்தனை பத்திரிகைகள் மீது அவதூறு வழக்குகள் என்ற எண்ணிக்கையே தெரியவில்லை. அதன் காரணமாக எந்தப் பத்திரிகையும் இந்த ஆட்சியைக் குறை கூறி, மக்கள் பிரச்சினைகளை விளக்கித் தைரியமாக எதையும் எழுத முடியாத நிலை. எதிர்த்து எழுதினால் அரசின் விளம்பரம் கிடைக்காது. பிரதான எதிர்க்கட்சியில் தீவிரமாகச் செயல்படுவோர் மீதெல்லாம் பொய் வழக்குகளைப் போட்டு சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாகச் சிறைக்கு அனுப்பிடும் கொடுமை. அவர்களிலும் தீவிரமாகச் செயல்படுபவர்கள் மீது குண்டர் சட்டம். கடந்த ஆட்சியில் கட்டப்பட்ட கட்டிடங்களையெல்லாம், திறந்து வைத்துப் பயன்படுத்தாமல், கடந்த ஆட்சியின் திட்டங்களை குப்பைக் குழிக்கு அனுப்புவதைப் போலவே, காழ்ப்புணர்ச்சியோடு செயல்படும் தன்மை. என்னுடைய பெயர் இடம் பெற்றிருக்கிறது என்பதற்காகவே அகற்றப்படும் கல்வெட்டுகள். ஒவ்வொரு

நாளும் இந்த ஆட்சியைப் பற்றி நீதிமன்றங்களிலே நீதிபதிகள் தெரிவிக்கும் கண்டனக் கணைகள். காவிரிப் பிரச்சினையில் கர்நாடகாவில் இந்த ஒரு மாத காலத்தில் மூன்று அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டங்களை நடத்திச் செயல்படுகின்ற அரசு இருக்கையில், தமிழகத்திலோ எந்தக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தையும் கூட்டவே இல்லை. அண்டை மாநிலங்களையும், எதிர்க்கட்சியினரைப் போல நடத்துகின்ற காரணத்தால் இரண்டு மாநிலங்களுக்கும் இடையே சுமுக உறவு கெட்டு 6ஆம் தேதியன்று கர்நாடகாவில் "பந்த்" அறிவிப்பு. அதன் காரணமாக அந்த மாநிலத்தில் பிழைப்புக்காகச் சென்றிருக்கும் தமிழர்கள் தங்கள் நிலை என்னவாகுமோ என்று அச்சத்தில் உறைந்திருக்கின்ற நிலைமை. தமிழகத்திலிருந்து கர்நாடகாவுக்கோ, கர்நாடகாவிலிருந்து தமிழகத்திற்கோ பேருந்துகளே வர முடியாத சூழ்நிலை.

ஒன்றரை ஆண்டுக் காலத்தில் மின் வாரியத்திற்கு நான்கு தலைவர்கள். கூடங்குளத்தில் உரிய நேரத்தில் உரிய முடிவுகளை எடுக்காத காரணத்தால் ஒன்றரை ஆண்டுகளாக நீடிக்கும் போராட்டம். அங்கே இரண்டு மீனவர்களை சுட்டுக் கொல்கின்ற கொடுமை. பரமக்குடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஆறு உயிர்கள் கொல்லப்பட்ட சோகம்! பஞ்சம், பட்டினி காரணமாக அங்கே கொள்ளை, இங்கே வழிப்பறி, பெண்ணிடம் சங்கிலிப் பறிப்பு என்ற செய்திகள்! எதற்கெடுத்தாலும் போலீஸ் தடியடி. பேச்சுவார்த்தைகளின் மூலமாகத் தீர்க்க வேண்டிய பிரச்சினைகளிலே கூட,போலீஸ் படையை அனுப்பி அடக்குமுறை.

விலைவாசியைப் பற்றியோ கேட்கவே வேண்டியதில்லை. சுமார் இருபதாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் டாஸ்மாக் மூலமாக வருமானம் வந்த நிலையிலே கூட, பால் விலை உயர்வு, பஸ் கட்டணம் உயர்வு, இல்லாத மின்சாரத்திற்கு பொல்லாத மின் கட்டணம், வரலாறு காணாத அளவிற்கு உயர்வு என்று ஏழையெளிய நடுத்தர மக்கள் படாத பாடு படுகிறார்கள்.

அரசு அலுவலர்களின் நிலையோ சொல்ல முடியாது. மத்திய அரசு அகவிலைப்படி உயர்வினை அறிவித்துப் பல நாட்களாகியும், தமிழகத்திலே இன்னும் அரசு மூச்சு விடவே இல்லை. அங்கன்வாடிப் பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள் நியமனத்தில் ஆளுங்கட்சியினரின் பரிந்துரைகள் காரணமாக முட்டுக்கட்டை.

பரிந்துரைகளுக்குச் செவி சாய்க்காமல் நியாயமாகச் செயல்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மூன்று மாதங்களிலேயே மாற்றப்பட்டு விட்ட கொடுமை. சத்துணவுப் பணியாளர்கள் 29 ஆயிரம் பேரைத் தேர்வு செய்ததை உயர்நீதிமன்றமே ரத்து செய்துள்ள வெட்கக் கேடு. அதற்கடுத்த நாளே 3 ஆயிரம் ஆசிரியர்கள் நியமனத்தை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. குடிதண்ணீர், குடம் எவ்வளவு என்று ஏடுகளில் செய்தி. குடிநீர் வாரியம் ஒரு லாரி குடிநீர் விலை எவ்வளவு என்று தானாக அறிவிக்கின்றது.

உடன்பிறப்பே, இப்படி எழுதிப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். இந்தக் கொடுமைகளையெல்லாம் சுட்டிக்காட்டி ஆளுங்கட்சியின் அராஜகப் போக்கைக் கண்டித்து, அமைதியாக அறவழியில் கருப்பு உடை அணிந்து மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடத்தப்போகிறோம் என்று கழகச் செயற்குழுவிலே முடிவெடுத்து, முறைப்படி அதற்கு அனுமதி கோரி, காவல் துறையினரிடம் எழுதிக் கொடுத்தால் அதற்குக் கூட இந்த ஆட்சியிலே அனுமதி கிடைக்கவில்லை. கழகத்தின் சார்பில் கேட்கப்படும் வழி சரியில்லை என்று சொன்னதால், மூன்று மாற்று வழிகளைக் குறித்துக் கொடுத்து, இதிலே ஒன்றைக் கொடுங்கள் என்று கேட்டால்; அதற்குக்கூட இந்த ஆட்சியினர் அனுமதி தரவில்லை என்றால் அதற்கு என்ன அர்த்தம்?

ஒரே நாளில் ஒரு சில மணி நேரங்களில் மட்டுமே தமிழக மக்கள் பிரச்சினைகளுக்காக நடத்தவிருந்த மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டத்தை தற்போது மூன்று நாட்களில் நடத்தக்கூடிய அளவிற்கு இந்த ஆட்சியினர் நம்மைக் கட்டாயப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு சில மணிகள் சாலையோரத்தில் கருப்பு உடை அணிந்து நிற்பதோடு முடிந்து விடுகின்ற நிலையை - கருப்பு உடை அணிந்து வீடு வீடாகச் சென்று இந்த ஆட்சியினரின் அவலங்களை எடுத்துச் சொல்லக் கூடிய அளவிற்கு நம்மைக் கொண்டு போய் விட்டிருப்பது ஆளுங்கட்சியினரே தவிர நாமல்ல.

கழகம் நடத்தவிருந்த மனிதச் சங்கிலிக்கான அனுமதியை ரத்து செய்து காவல் துறை பிறப்பித்த ஓர் ஆணையை தற்போது என்னிடம் காட்டினார்கள். அந்த ஆணையின் தொடக்கத்தில், "அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் நிலவும் கடும் மின்வெட்டைக் கண்டித்தும், தொடர்ந்து தி.மு.க. வினரைப் பழி வாங்குவதைக் கண்டித்தும் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில்" போராட்டம்

என்று எழுதியிருக்கிறார்கள். எனவே காவல் துறை சார்பில் வெளியிட்ட அறிக்கையிலேயே அ.தி.மு.க. ஆட்சியிலே கடும் மின்வெட்டு இருப்பதையும், தி.மு.க. வினர் பழிவாங்கப்படுவதையும் ஒப்புக் கொண்டிருப்பது நமக்கு நன்றாகவே தெரிகிறது. எனவே இன்றையதினம் அவர்களே ஒப்புதல் வாக்குமூலம் தருகிற அளவிற்குத் தமிழகம் இருண்ட கண்டமாகவே காட்சியளிக்கிறது.

இந்த அவலங்களை மக்களுக்குத் தெரிவிக்கும் வகையிலேதான் 5ஆம் தேதியன்று சென்னையிலும், 6ஆம் தேதியும், 7ஆம் தேதியும் மற்ற மாவட்டங்களில் மாநகர், ஒன்றியம், சிற்றூர், பேரூர் போன்ற அனைத்துப் பகுதிகளிலும், கருப்பு உடை அணிந்து "முரசொலி"யிலே வெளிவந்துள்ள வாசகங்களை துண்டுப் பிரசுரங்களாக அச்சியற்றி, வீட்டுக்கு வீடு எடுத்துச் சென்று சாதாரண, சாமான்ய, ஏழை, எளிய, நடுத்தர மக்களிடம் வழங்க வேண்டுமென்று கழகத்தினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். இந்தப் பணியினை மிகவும் அமைதியாக, அற வழியில், எந்தவிதமான பிரச்சினைக்கும் இடம் தந்து விடாமல் நடத்திட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

சாலையோரத்தில் அமைதியாக மனிதச் சங்கிலியாக ஒரே இடத்தில் கருப்பு உடை அணிந்து நின்று அணிவகுப்பு ஆர்ப்பாட்டம் நடத்துகிறோம் என்றுதான் நாம் அனுமதி கோரினோம். இன்றையதினம்கூட மத்திய அரசின் நுழைவுத் தேர்வினை எதிர்த்து மருத்துவர்கள் மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டம் நடத்தி, அந்தப் புகைப்படங்கள் எல்லாம் ஏடுகளிலே வெளி வந்துள்ளன. எனவே மனிதச் சங்கிலிப் போராட்டம் என்பது அனுமதிக்கப்படாத ஒரு போராட்ட முறை அல்ல. அது போலவே கருப்பு உடை அணிந்து கொள்வது என்பதும் புதிதல்ல. அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், தி.மு. கழகம் ஆளுங்கட்சியாக இருந்த போது, பேரவைக்கே கருப்பு உடை அணிந்து வந்திருக்கிறார்கள். ஒருவேளை முதலமைச்சர் ஜெயலலிதா; இந்த அறவழி அறப்போராட்ட அணிவகுப்பு ஆர்ப்பாட்டத்திற்கு சென்னையில் கருணாநிதியே இந்த வயதிலே தலைமை தாங்கப் போகிறானே என்பதற்காக என் உடல்நிலை பற்றிப் பரிதாபப்பட்டு, அனுமதி கொடுக்கவில்லையோ என்னவோ? அப்படியென்றால் வெளியூர்களிலாவது அனுமதி கொடுத்திருப்பார்களே? ஏன் கொடுக்க வில்லை?

என்னைப் பொறுத்தவரையில் 5ஆம் தேதி ஒரு நாள்தான் இந்த ஆட்சியினரின் அவலங்களை எதிர்த்து கருப்பு உடை அணிவதாக இருந்தேன். ஒரு பழைய நிகழ்வை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திராவிட விடுதலைப் படை என்பதாக ஒரு தொண்டர் படை திராவிடர் கழகத்துக்குத் தேவை என்று திருச்சி மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெரியார் ஈரோடு திரும்பியதும், அதைப்பற்றி மேலும் சிந்தித்து, 1945 செப்டம்பர் 29ஆம் நாள் "குடி அரசு" இதழில், கருப்புச் சட்டைப் படை அமைப்பு என்பதாக ஓர் அறிவிப்பு வெளியிட்டார். ஈ.வி.கே. சம்பத், கவிஞர் கருணானந்தம் ஆகிய இருவரும் அதன் தற்காலிக அமைப்பாளர்கள் என்று கூறும் அறிவிப்பு 22-12-1945 "குடிஅரசு" இதழ் வரையில் தொடர்ந்து வெளியானது. தந்தை பெரியார் விரும்பி அமைத்த அந்தக் கருப்புச் சட்டைப் படையின் முதல் தொண்டராக அப்போது ஈரோட்டில் பதிவு செய்து கொண்டது யார் தெரியுமா? இதே மு. கருணாநிதிதான். அந்த மு. கருணாநிதிதான், நாளைய மனிதச் சங்கிலி ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்குவதாக அறிவித்தேன். ஆம் நாளையதினம் கருப்புச் சட்டை அணிந்து மனிதச் சங்கிலியில் கலந்து கொள்வதாக இருந்தேன். அதற்கு இந்த அரசு அனுமதி கொடுக்கவில்லை. பரவாயில்லை, இன்று முதலே இந்த ஆட்சியின் அவலங்களை எதிர்த்து கருப்புச் சட்டை அணிவேன், இன்றே அணிவேன்; இனி என்றும் அணிவேன்!

அன்புள்ள,

மு.க.

5-10-2012

3661. இனியாவது அதைத் தவிர்ப்பாரா?

உடன்பிறப்பே,

"சீப்பை ஒளித்துவிட்டால் திருமணம் நின்று விடுமா?" என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். 27-9-2012 அன்று தலைமைக் கழகத்தின் சார்பில் ஓர் அறிக்கை வெளியிடப் பட்டது. அந்த அறிக்கையிலேதான் இந்த ஆட்சியின் அவலங்களைப் பற்றிப்பேசி முடி வெடுப்பதற்காக 1-10-2012 அன்று கழகத்தின் தலைமைச் செயற்குழு கூடி விவாதிப்பதென்று முடிவு செய்து அறிவித்திருந்தது. இடையிலே மூன்றே நாட்கள். ஆனாலும் 1-10-2012 அன்று செயற்குழுவில் 257 உறுப்பினர்களும், சிறப்பு அழைப்பாளர்கள் 31 பேரும் கலந்து கொண்டு காலை 10 மணி முதல் 1.30 மணி வரை சிறப் பாக நடைபெற்று; செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் அந்தக் கூட்டத்தில் உரையாற்றி, விவாதித்து இறுதியாக இரங்கல் தீர்மானம் இல்லாமல், ஏழு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் பிறகு செய்தியாளர்கள் என்னிடம், "அந்த ஏழு தீர்மானங்களில் முக்கிய தீர்மானம் எது" என்று கேட்டபோது, "போராட்டத் தீர்மானம்தான்" என்று நான் பதிலளித்தேன்.

அன்றையதினம் நிறைவேற்றப்பட்ட போராட்டத் தீர்மானத்தில் 5-10-2012 அன்று ஒரு நாள் அதுவும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரையில் சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து கடற்கரைச் சாலைவழியாக, கடற்கரை சாலையிலே உள்ள கலங்கரை விளக்கம் வரையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் அனைத்து வகையிலும் செயலிழந்து விட்ட அ.தி.மு.க. அரசின் மக்கள் விரோதப் போக்கினைக் கண்டித்து, கறுப்பு உடை அணிந்த மனிதச் சங்கிலி அமைத்து, அமைதியாக அற வழியில் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றுதான் குறிப்பிட்டிருந்தோம். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது 1-10-

2012 - கறுப்பு உடை அணிந்த மனிதச் சங்கிலி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது

5-10-2012. மாவட்டக் கழகச் செயலாளர்களில் ஒருவரான தம்பி முல்லைவேந்தன்கூட இடையில் மூன்று நாட்கள்தானே இருக்கிறது, தேதி மாற்றம் செய்ய முடியுமா என்றார்.

"அறிவித்தது, அறிவித்ததுதான், 5ஆம் தேதியில் மாற்றம் இல்லை" என்று கூறினேன்.

சென்னையில் 1ஆம் தேதி மாலையிலேயே மாவட்டக் கழகச் செயலாளர், தம்பி ஜெ. அன்பழகன் காவல் துறையிடம் முறைப்படி அனுமதிகோரி கடிதமும் கொடுத்துவிட்டார். அந்தக் கடிதத்தில் மூன்று மாற்று வழிகளைத் தெரிவித்து, தீர்மானத்தில் குறிப்பிட்ட அந்த வழியில் அனுமதி கொடுக்க அரசு தயங்கினால், மூன்றில் ஒரு பாதையில் அனுமதி தரவேண்டுமென்று கோரப்பட்டது. ஆனால் மிகவும் விரைந்து (?) செயல்படும் இந்த அரசிடமிருந்து எந்த அனுமதியோ, பதிலோ வரவில்லை. அதேநேரத்தில் வேறு சில மாவட்டங்களில் மனிதச் சங்கிலிக்கு அனுமதி மறுக்கப்பட்டு காவல் துறையினர் பதில் கொடுத்திருந்தனர். அந்த நிலையிலேதான், "சீப்பை ஒளித்து வைத்துவிட்ட காரணத்தால் திருமணத்தை நிறுத்திவிடக்கூடாது" என்ற வகையில் - கறுப்பு உடை அணிந்து மனிதச் சங்கிலி அணி வகுப்புக்குப் பதிலாக - ஆட்சியினர் பற்றிய விமர்சனங்களை துண்டுப் பிரசுரங்களாக கையால் எழுதியோ, அச்சியற்றியோ கழகத்தினர் ஒவ்வொரு ஊரிலும் உள்ள பொதுமக்களைத் தேடிச்சென்று வழங்கவேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டு, அவ்வாறே அறிவிக்கப்பட்டது. 5ஆம் தேதி ஒரு நாள் ஒரு சில மணி நேரம் மனிதச் சங்கிலியோடு முடிந்திருக்க வேண்டிய போராட்டம், மூன்று நாட்களாக நீடிக்கப்பட்டு, சென்னை மாநகரிலும், மாவட்டத் தலைநகரங்களிலும் மட்டுமே நடைபெறவிருந்த நிகழ்ச்சிக்குப் பதிலாக ஒவ்வொரு கிராமத்திலும் இந்த ஆட்சியினரைப் பற்றிய வண்டவாளங்கள் எல்லாம் அச்சியற்றப்பட்ட துண்டறிக்கைகளாக இலட்சக் கணக்கான மக்களைத் தேடிச்சென்று, அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த அளவிற்கு இந்தப் போராட்டத்தை பெரிதாகவும், விரிவாகவும் ஆக்கிய பெருமை நமது முதலமைச்சர் ஜெயலலிதா ஒருவருக்கே உரியதாகும். அதற்காகத்தான் ஆயிரம் விளக்குத் தொகுதியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நிகழ்ச்சியைத்

தொடங்கிவைத்தபோது முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டேன்.

துண்டுப் பிரசுரங்களை அச்சியற்றி விநியோகிக்க வேண்டுமென்ற முடிவினை 3ஆம் தேதி எடுத்து, அது நாளேடுகளில் 4ஆம் தேதியன்றுதான் வெளிவந்தது. அதற்குப் பிறகு 5ஆம் தேதிக்கு 24 மணி நேரங்கள்தான். அதற்குள் கழக உடன்பிறப்புகள் என்ன மாயம் செய்தார்களோ? எப்படித்தான் அச்சியற்றினார்களோ? என்று வியக்குமளவுக்கு இலட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் பொது மக்கள் கையில்! 5ஆம் தேதியும், 6ஆம் தேதியும் தொடர்ந்து தொலைபேசிகள்! கறுப்பு உடையில் கழகத்தினர் தெருத்தெருவாகச் சென்று வீடுகளிலே மட்டுமல்ல; சாலையோரங்களிலே நின்றவாறு ஓடுகின்ற கார்களை நிறுத்தியும், பேருந்துகளில் பயணம் செய்தும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து தமிழ்நாட்டில் இந்த ஆட்சியினருக்கு எதிராக ஒரு பெரும் எழுச்சியை மூன்றே நாட்களில் ஏற்படுத்தி விட்டார்கள். குறைந்த நாட்களில் இப்படிப்பட்ட எழுச்சியை ஏற்படுத்திய என்னுடைய உடன் பிறப்புகளுக்கெல்லாம் என் நெஞ்சார்ந்த நன்றியினையும், பாராட்டினையும் தெரிவிக்கத்தான் இந்த மடல்!

கழகத்தின் சார்பில் எதைச் செய்தாலும், அதை எதிர்க்கின்ற போக்குத்தான் இன்றைய ஆட்சியினரிடம் உள்ளது. கடந்த மாதம் "டெசோ" இயக்கம் சார்பில் சென்னையிலே ஒரு மாநாட்டினை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தபோதும், அ.தி.மு.க. ஆட்சியினர் அதற்கு அனுமதி மறுத்தார்கள். அப்படி அனுமதி மறுக்கப்பட்ட காரணத்தினாலே, அந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது. தற்போது இந்த கறுப்பு உடை அணிந்து மனிதச் சங்கிலி நடத்துகிறோம் என்றால் அதற்கும் அனுமதி மறுப்பு. ஆட்சியினரின் இந்த ஜனநாயக விரோதப் போக்கினை எடுத்துக் காட்டி இடித்துரைக்க வேண்டிய பத்திரிகைகளோ, பஜனை மடம் நடத்துவதைப்போல எதற்கெடுத்தாலும் இந்த ஆட்சியை பாராட்டு கின்றன.

இந்த ஆட்சியின் இருண்ட நிலைகளை விளக்க கறுப்பு உடை அணிகிறோம் என்றால், அதற்கு ஒரு காரணம் கற்பித்து, மஞ்சள் ஆடையை அகற்றிவிட்டேன், கறுப்பு சட்டை அணியக் காரணம் என்ன தெரியுமா? "தினமலர்" நாளேடு எவ்வளவு பெரிய

பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் அரை பக்கத்திற்கு ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்கள். அதன் தலைப்பே "மஞ்சளில் இருந்து கறுப்பு - கலரை மாற்றினார் கருணாநிதி" என்பதுதான். அந்தச் செய்திக் கட்டுரையில், "கடந்த சில ஆண்டுகளுக்கு முன், கருணாநிதி திடீரென மஞ்சள் துண்டு அணியத் துவங்கினார். தி.மு.க. தலைவர் கருணாநிதியின் ராசி ரிஷபம். இந்த ராசிக்கு குரு பகவான் சாதகமில்லாதவராக இருப்பதால், அவரை குளிர்விக்கும் வகையில் மஞ்சள் துண்டு அணியத் துவங்கியதாக அப்போது தகவல்கள் வெளியாகின. தற்போது, திடீரென கறுப்புச் சட்டையை தொடர்ந்து அணிவேன் என்று கருணாநிதி அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இதுகுறித்து ஜோதிட வட்டாரத்தில் விசாரித்தபோது அவர்கள் கூறியதாவது : கறுப்பு நிறம், சனி பகவானுக்கு உகந்த நிறம். கருணாநிதியின் ரிஷப ராசிக்கு ஐந்தில் சனி இருந்தபோது, அதன் பலனாக, ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்பட்டது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு பதவி பறிபோனது. தற்போது ரிஷப ராசிக்கு, ஆறில் சனி பகவான் மாறியுள்ளார். இதனால் அவருக்கு உகந்த கறுப்பு வண்ண உடையை அணிவதன் மூலம் எதிரிகளை எதிர் கொள்ளவும், வெற்றிகளை குவிக்கவும் முடியும் என்பதால், அவர் கறுப்பு உடைக்கு மாறியிருக்கிறார்" என்றெல்லாம் எழுதியிருப்பதைப் பார்த்து சிரிப்புதான் வருகிறது. இப்படியெல்லாம் கற்பனையாகச் செய்திகளை வெளியிட்டு பிழைப்பதும் ஒரு பிழைப்பா?

"தினமலர்" இப்படி எழுதியிருக்கிறது என்றால், இன்னொரு பத்திரிகை "தினமணி"யோ, "கறுப்புச் சட்டை : பாசிசத்தின் அடையாளம்" என்று எழுதியுள்ளது. நம்மைப் பற்றி இவ்வளவு எழுதுகின்ற இந்தப் பத்திரிகைகள் - 10ஆம் தேதியன்று தமிழகச் சட்டப்பேரவை எத்தனை மணிக்கு துவங்குகிறது? எமகண்டம், ராகுகாலம் எல்லாம் பார்த்து பேரவையைத் தொடங்குவதைப் பற்றி வாய் திறக்க ஏன் நடுங்குகிறது? ஆகஸ்ட் 15ஆம் தேதி கோட்டையில் கொடியேற்று விழா நிகழ்ச்சி எப்போது நடைபெற்றது? ஒவ்வொரு ஆண்டும் எத்தனை மணிக்கு நடந்தது? இந்த ஆண்டு மட்டும் ஏன் நேர மாற்றம்? இப்படி ராகுகாலம், எமகண்டம் எல்லாம் பார்த்து ஒரு ஆட்சி நடைபெறுகிறதே? அதையும் பார்த்துக் கொண்டு தற்போது உறுதி மொழி ஏற்கும்போது மட்டும், பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர். ஆகிய மூவரின் ஒட்டு மொத்த உருவமாக தமிழக முதலமைச்சர் திகழ்கிறார் என்று அறிக்கை வேறு ஒரு கேடா?

இப்படிப்பட்ட பத்திரிகைகளின் பாராட்டுக்களிலே மயங்கி, எதையும் செய்யலாம், கேட்பதற்கு ஆள் இல்லை, கடந்த கால ஆட்சியிலே நிறைவேற்றப்பட்ட திட்டங்களையெல்லாம் குப்பைக் கூடைக்கு அனுப்பலாம், அதைப்போலவே தி.மு.கழக ஆட்சியில் எழுப்பப்பட்ட கட்டிடங்களைக்கூட அப்படியே கிடப்பிலே போடலாம், யார் நம்மை என்ன செய்ய முடியும் என்றெல்லாம் முதலமைச்சர் செயல்படுவது அவருக்கு நல்லதோ கெட்டதோ, இந்த நாட்டு மக்களுக்கு நல்லதல்ல. தி.மு.கழகம் விநியோகித்த துண்டுப் பிரசுரங்கள் தமிழ்நாட்டு மக்களின் கவனத்திற்கு மாத்திரமல்ல; முக்கியமாக இந்த ஆட்சியிலே இருப்போரின் நடவடிக்கைக்கு உரிய செய்திகள்தான் அதிலே இடம் பெற்றுள்ளன. அவற்றின் மீது இந்த ஆட்சியினர் உரிய நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும். மாறாக யார் மீது என்ன வழக்கு போடலாம்? யாரை எப்படி கைது செய்யலாம்? என்றெல்லாம் சிந்தித்து அடக்குமுறை தர்பார் நடத்துவதிலேயே காலத்தைச் செலவழிப்பது ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமென்றால் “Cheap Taste” - அதாவது மலிவான அணுகுமுறை. முதலமைச்சர் இனியாவது அதைத் தவிர்ப்பாரா?

அன்புள்ள,

மு.க.

9-10-2012

3662. மக்கள் எதிர்பார்க்கிறார்கள்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 5-10-2012 அன்று கறுப்பு உடை அணிந்து மனிதச் சங்கிலி அணிவகுப்பு நடத்திட அரசிடம் அனுமதி கோரி, அதற்கு மறுப்பு தெரிவிக்கப் பட்ட காரணத்தால், 5, 6, 7 ஆகிய நாட்களில் தமிழகம் முழுவதிலும் அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களை விளக்கி, கழகத் தோழர்கள் கறுப்பு உடை அணிந்து, வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கினார்கள். அந்தத் தூண்டுதலுக்குக் காரணமாக இருந்தவர்கள் அ.தி.மு.க. ஆட்சியினர்தான்.

கழகத்தின் சார்பில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி, ஒரு ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சி, மக்கள் நலன் கருதி ஆற்ற வேண்டிய கடமையின்பால் பட்டதாகும். கறுப்பு உடை அணிந்து துண்டுப் பிரசுரங்களை வழங்கும் அமைதிவழி அறப் போராட்டம் தமிழகமெங்கும் தி.மு.கழகத்தினரால் வெற்றிகரமாக நடத்தப்பட்டதறிந்து, அ.தி.மு.க.வில் ஒரு சிலரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தி.மு.க.வுக்குப் போட்டியாக, "அ.தி.மு.க. வின் சார்பில் நாங்களும் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்குகிறோம்" என்று சிலர் அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்ட ஒருசில சாதனைகளைப் பட்டிய லிட்டு, பொதுமக்களிடம் சென்று அவற்றை வழங்கியிருப்பதாகச் சில நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

அ.தி.மு.க.வினர் சென்னையின் ஒருசில பகுதிகளில் வீடு வீடாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கிய போது, வீட்டிலிருந்தோர், விளக்கம் பெறுவதற்காக, ஒருசில கேள்விகளை துண்டுப் பிரசுரம் வழங்கியவர்களிடம் கேட்டிருக்கிறார்கள். "சாதனைப் பட்டியலில் இவற்றையெல்லாம் விட்டு விட்டீர்கள், உங்களது அடுத்த துண்டுப் பிரசுரத்திலாவது அவற்றையும் சேர்த்து விளக்கமாக வெளியிடுங்கள்" என்று சொன்னார்களாம். அவ்வாறு

அ.தி.மு.க. வினரால் தங்கள் துண்டுப் பிரசுரத்தில் தவிர்க்கப்பட்ட "சாதனை(?)களை" அடுத்த பிரசுரத்தில் சேர்ப்பதற்காக செவிவழிச் செய்தியாகச் சொன்னவற்றை, இங்கே நான் ஞாபகத்தில் இருந்தவரை பட்டியலிட்டுள்ளேன்:

- கடந்த ஆட்சிக் காலத்தில் 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டு கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தைப் பயன்படுத்தமாட்டேன் என்று இட நெருக்கடிக்கிடையே பழைய தலைமைச் செயலகத்திலேயே தொடர்ந்து இருக்கின்ற இமாலயச் சாதனை!

- பாவேந்தர் செம்மொழித் தமிழ் ஆய்வு நூலகத்தை ஆட்சிக்கு வந்த நாளிலேயே வெளியே தூக்கி எறிந்த வியத்தகு சாதனை!

- கழக ஆட்சியில் கட்டப்பட்டு பாதியில் நின்றிருந்த தலைமைச் செயலகத்தின் இரண்டாம் கட்டமாக நிறைவேற்ற வேண்டிய கட்டிடங்கள், "கலைவாணர் அரங்கப் பணிகள்" ஆகியவற்றைத் தொடராமலும்; அதுபற்றிக் கொஞ்சமும் சிந்திக்காமலும், கிடப்பிலே போட்ட கித்தாப்புச் சாதனை!

- ஆசியாவிலேயே மிகப் பெரியதும், அண்ணா நூற்றாண்டு நிறைவை யொட்டி அதன் நினைவாக சென்னை கோட்டூர்புரத்தில் கட்டப்பட்டதுமான நூலகத்தை குழந்தைகள் மருத்துவ மனையாக மாற்றுவதாக அறிவித்த மாபெரும் சாதனை!

- ஏழை மாணவர்கள் - வசதி படைத்த மாணவர்கள், நகர்ப்புறத்து மாணவர்கள் - கிராமப்புறத்து மாணவர்கள் என்று வழிவழி வந்த வேறுபாடுகளை அகற்றும் சமச்சீர் கல்வி முறைக்கு 23.5.2011இல் தடை விதித்த தனிப் பெரும் சாதனை. சமச்சீர் கல்விக்காக 200 கோடி ரூபாய் செலவழித்து அச்சடிக்கப்பட்ட புத்தகங்களை யெல்லாம் விநியோகிக்காத விண்ணுயர் சாதனை!

- ஆசிரியர்கள் நியமனத்திலும், ஆசிரியர்களுக்கு மாறுதல் வழங்குவதிலும் குளறுபடிகளை ஏற்படுத்தி, அதில் ஆளுங்கட்சியினர் குளிர் காய்ந்த குதூகலச் சாதனை!

- சத்துணவுப் பணியாளர்கள், அங்கன் வாடிப் பணியாளர்கள் நியமனங்களில் ஆளுங்கட்சியினர் புகுந்து விளையாடிய அற்புத சாதனை!

- இதுவரை எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு நாள் ஒன்றுக்கு 20 மணி நேரத்திற்கு மேல் மின்வெட்டு செய்த மின்னல் வேகச் சாதனை. கழக ஆட்சிக் காலத்தில் திட்டமிட்டு பணிகள் தொடங்கப்பட்ட மேட்டூர் புதிய அனல்மின் நிலையம், வடசென்னை அனல்மின் நிலையம் - யூனிட் (1), வடசென்னை அனல் மின்நிலையம் யூனிட் (2), வல்லூர் யூனிட் (1), வல்லூர் யூனிட் (2), வல்லூர் யூனிட் (3), தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் புதிய யூனிட் ஆகியவற்றை ; கழக ஆட்சியில் திட்டமிடப்பட்டவை என்ற ஒரே காரணத்திற்காக, உரிய காலத்தில் மின் உற்பத்தி செய்வதில் அக்கறை காட்டாத அபார சாதனை!

- வரலாறு காணாத மின்வெட்டு காரணமாக பல்லாயிரக்கணக்கான சிறுதொழில் முனைவோர், விசைத்தறியாளர், தொழிலாளர்கள் பாதிப்புக்கு ஆளாகி; ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டு; தெருவுக்கு வந்து போராடும் திகைப்பூட்டும் சாதனை!

- 'பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன்' என்ற வகையில் கூடங்குளம் அணுமின்நிலையப் பிரச்சினையில் இரட்டை வேடம் போட்ட இணையிலாச் சாதனை!

- தமிழகத்தில் பொறியியல் உயர்கல்வி பரவலாக்கப்பட்டு, அந்தந்த பகுதிகளில் உள்ளோர் பயனடையும் பொருட்டு; திருச்சி, கோவை, மதுரை, நெல்லை ஆகிய இடங்களில் திட்ட

மிட்டு உருவாக்கப்பட்ட அண்ணா பல்கலைக் கழகங்களை ரத்து செய்து உருக்குலைத்த ஒப்பற்ற சாதனை!

- ஏழை எளியோருக்குப் பயன் தரும் எந்த இலவசத் திட்டத்தையும் முழுமையாகச் செயல்படுத்தாத முக்கியச் சாதனை! எடுத்துக்காட்டாக, 2011 பொங்கல் திருநாளையொட்டி வழங்க வேண்டிய இலவச வேட்டி - சேலைகளை எட்டு மாதங்கள் கடந்த பிறகும் இன்னும் வழங்கி முடிக்காத வரலாற்றுப் புகழ் சாதனை - கல்வியாண்டு தொடங்கி ஐந்து மாதங்கள் கடந்த பிறகும் இலவச மடிக் கணினி வழங்கும் பணியும் - இலவச பஸ் பாஸ் வழங்கும் பணியும் முடிந்தபாடில்லாத முக்கியமான சாதனை!.

- இதுவரை எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு அமைச்சர்களை அடிக்கடி மாற்றி, அமைச்சர்கள் மத்தியில் நிச்சயமற்ற தன்மையும், நிரந்தர நடுக்கமும் நிலவுவதற்கு வழிவகுத்த நிகரற்ற சாதனை!

- எந்த இடத்திலும் காலூன்ற முடியாத அளவுக்கு அதிகாரிகளை அடிக்கடிப் பந்தாடும் அநியாய சாதனை!

- குறுவைச் சாகுபடியைக் கனவாக்கி, சம்பாச் சாகுபடியையும் ஏக்கத்திற்கு உள்ளாக்கிய இணையில்லாச் சரித்திரச் சாதனை!

- கட்சி மாச்சரியத்தோடு, நில அபகரிப்பு என்ற பெயரால் முன்னாள் அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னணியினர்மீது சட்ட விதிமுறைகளுக்குப் புறம்பாகப் பொய்யான வழக்குகளைத் திரும்பத் திரும்பத் தொடுத்து கைது செய்து சிறையிலே அடைத்த சிறப்பான சாதனை! மதுபான உற்பத்தியாளர்கள் மேலும் லாபம் சம்பாதிக்க ஏதுவாக,

- மதுபானங்களின் விலையை உயர்த்திய மாபெரும் சாதனை!
- கொலை இல்லாத நாட்களே இல்லை; கொள்ளை நடக்காத ஊர்களே இல்லை; வழிப்பறி நடக்காத சாலைகளே இல்லை; பெண்கள் வெளியே புறப்பட்டால் கழுத்திலே உள்ள தாலிச் சங்கிலிகள் நிலைத்திருக்குமா என்பதே கேள்விக்குறி; போலீஸ் தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிச் சூடு என்று சட்டம் - ஒழுங்கு நிலையைப் படாதபாடு படவைத்த பரவச சாதனை!
- பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணவேண்டிய பிரச்சினைகளுக்குக் கூட போலீஸ் படையை அனுப்பி அடக்குமுறை மூலம் தீர்வு காண முயற்சிக்கும் அரிய சாதனை!
- பால்விலை உயர்வு, பஸ் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு என்று ஏழை எளிய நடுத்தர மக்களை வாட்டி வதைத்திடும் வளமான(?) சாதனை!
- இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தை நெரித்திடும் வகையில்; ஆட்சியினரையும் அவர்தம் செயல்பாடுகளையும் ஆரோக்கியமான முறையில் விமர்சனம் செய்திடும் எதிர்க்கட்சித் தலைவர்கள் மீதும், பத்திரிகைகள் மீதும் வழக்குத் தொடுத்து அச்சுறுத்த நினைக்கும் அபார சாதனை!
- தமது இயலாமையை மறைத்து மக்களைத் திசை திருப்புவதற்காக; எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் மீதும், இந்தியப் பிரதமர் மீதும், முன்னாள் ஆளுங்கட்சியான தி.மு. கழகத்தின் மீதும் பழி சொல்லிப் புழுதிவாரித் தூற்றும் புரட்சிகர சாதனை!
- ஜனநாயக நடைமுறைகளுக்கு முக்கியத்துவம்

கொடுத்து, மனசாட்சிக்குப் பயந்து, வாக்களித்த மக்களுக்குப் பயந்து, எதிர்க்கட்சியினருக்குப் பயந்து, பத்திரிகைகளுக்குப் பயந்து நடைபெற்ற தி.மு.கழக ஆட்சிக்கு மாறாக; அனைத்துத் தரப்பினரையும் பயமுறுத்தியே ஆட்சி நடத்தும் பண்பட்ட(?) சாதனை!

தி.மு.கழகத்திற்குப் போட்டியாக, ஆளும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு சிலர், துண்டுப் பிரசுரத்தில் இடம்பெறச் செய்ய மறந்துவிட்ட இந்தச் சாதனைகளை எல்லாம்; அடுத்த முறையாவது தவறாமல் அச்சியற்றி; பரவசப் பண்பாடி, தமிழகத்துத் தெருக்கள் தோறும் தவறாமல் வினியோகம் செய்வார்கள் என்று; மாற்றம் கருதி வாக்களித்து ஏமாற்றமடைந்த மக்கள் எதிர்பார்க்கிறார்கள்!

அன்புள்ள,

மு.க.

12-10-2012

3663. நெஞ்சைத் துளைத்திடும் தொடர்கதை இது!

உடன்பிறப்பே,

“தி.மு.கழக ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் செயல்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்கிறது” என்று அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ‘லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ்’ ஏடு சுட்டிக்காட்டியுள்ளதை; தமிழாக்கம் செய்து 11-10-2012 அன்று ‘விடுதலை’ நாளேட்டில் வெளியிட்டிருக்கிறார்கள்; அதுகுறித்துத் தலையங்கமும் தீட்டியிருக்கிறார்கள்.

“தீண்டத்தகாதவர்கள் என்று அழைக்கப் படும் தாழ்த்தப்பட்ட பிரிவு சமூகத்தைச் சேர்ந்த தனது தோழர்கள் வந்து வழிபடும் உள்ளூர் தற்காலிகக் கோயில் ஒன்றில் நித்திய சடங்குகளைச் செய்து கொண்டும், மெழுகு வர்த்திகளை விற்றுக் கொண்டும், அக்கோவில் அறங்காவலர்களான கேசவனது தந்தையும் தாத்தாவும் இருந்து வந்தனர். அவர்களின் சாதி எதுவாக இருந்தாலும், அதனைப் பற்றிக் கவலைப்படாமல் அனைத்து சாதி இந்துக்களையும் கோவில் அர்ச்சகர்களாக ஆக்குவதற்கான பயிற்சியை அளிக்க, தென்னிந்தியாவின் தமிழ்நாடு அரசு முன்வந்தபோது கேசவன் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார். இதற்கான நீண்ட ஓராண்டுப் பயிற்சி முடித்து நான்கு ஆண்டுகள் கடந்தும் கேசவனும், அவரைப் போன்ற தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த அர்ச்சகர் பயிற்சி பெற்ற 250 பேரும், இந்தியாவின் உச்ச நீதிமன்றத்தில் பார்ப்பனர் சிலர் இதுபற்றி வழக்குத் தொடுத்திருப்பதால், அர்ச்சகர் வேலை இதுவரை கிடைக்காமல் காத்திருக்கின்றனர். இத்தகைய நீண்டகாலத் தாமதமே இந்திய சமூகத்தில் பார்ப்பனர்கள் கொண்டிருக்கும் செல்வாக்கையும் அதிகாரத்தையும் காட்டுவதாகக் கூறுகின்றனர். கோயில் வழிபாடுகளையும், மந்திரங்களையும் சமஸ்கிருதத்தில் செய்யாமல், மாநிலத்

தாய்மொழியான தமிழிலேயே செய்ய வேண்டு மென்று அர்ச்சகர் பயிற்சி பெற்ற தாழ்த்தப்பட்டவர்கள் விரும்புவது பாரம்பரியப் பிடிவாதம் கொண்ட பார்ப்பனர்களை மேலும் பதறச் செய்கிறது."

- என்று அமெரிக்க ஏடு வெளியிட்டுள்ளதை, படித்தபோது, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள் ஆவதற்கு கழக ஆட்சியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், அந்த முயற்சிகளுக்கு ஏற்பட்ட விளைவுகள் ஆகிய நிகழ்வுகளைச் சுற்றி எனது நினைவு சுழல ஆரம்பித்தது.

1970ஆம் ஆண்டு, அப்போது கழகம் ஆட்சியில்; தமிழக முதலமைச்சராக நான். அந்த ஆண்டு ஜனவரித் திங்கள், தந்தை பெரியார் அவர்கள் ஒரு கிளர்ச்சியைத் தொடங்கப் போவதாக அறிவித்தார்கள்.

ஆலயங்களில் கர்ப்பக்கிரகம் வரையில் சாதிப் பாகுபாடு இன்றி அனைவரும் சென்று ஆண்டவனைத் தொழுதிட வேண்டும் என்றும், அனைவருக்கும் சாதி உயர்வு தாழ்வு இன்றி அர்ச்சகராகும் உரிமை வேண்டும் என்றும் வலியுறுத்துவதற்காக அந்தக் கிளர்ச்சி நடைபெறும் என்று பெரியார் போர்முரசு கொட்டினார்.

அப்படி ஒரு கிளர்ச்சி நடத்தாமலே, பெரியார் அவர்களின் விருப்பத்தை நடைமுறைக்குக் கொண்டுவரச் சட்டம் இயற்றப்படும் என்று உறுதியளித்து நான், தந்தை பெரியார் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன்.

அந்த வேண்டுகோளில், "குறிப்பிட்ட வகுப்பினர்தான் அர்ச்சகராக வேண்டுமென்று யாரும் இந்த நூற்றாண்டில் வாதாடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. காலம் வேகமாகச் சுழன்று, மனிதனுக்கு மனிதன் பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை என்ற கொள்கை வலுப்பெற்று வரும் இந்நாளில், அப்படிப்பட்ட ஒரு பிற்போக்கு எண்ணத்தை யாரும் முரட்டுப் பிடியாக பிடித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். அர்ச்சகர்களுக்கென ஒரு சில தகுதிகள் இருக்க வேண்டும். அதற்குரிய பயிற்சிகளை அவர்கள் பெற்றாக வேண்டும். அதில் எனக்குக் கருத்து வேறுபாடில்லை. அப்படிப் பயிற்சி பெறுகிறவர்கள் எந்த வகுப்பினராக இருந்தாலும் அவர்கள் அதில் தேர்வு பெற்று அர்ச்சகராக ஆகலாம். இந்த நல்ல நிலை ஏற்பட - ஆலயங்களில் ஆண்டவன் முன்னே, சாதியின் பெயரால், மற்றவர்களுக்கு இழைக்கப்படும் இழிவான அநீதி

அகன்றிட, விதிமுறைகள் செய்திட அரசு முன் வருகிறது என்ற உறுதிமொழியினை ஏற்று, பெரியார் அவர்கள், திட்டமிட்டிருந்த கிளர்ச்சியினை நிறுத்தி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்" என்று நான் குறிப்பிட்டிருந்ததை ஏற்றுக் கொண்டு, தந்தை பெரியார் அவர்கள், அவர் நடத்த இருந்த போராட்டத்தைத் தள்ளிவைக்கச் சம்மதித்தார்.

பெரியார் அவர்களுக்கு நான் கொடுத்த உறுதிமொழியினை நிறைவேற்றிடும் வகையில், தமிழர் தலைவர் வீரமணி அவர்களின் ஆலோசனையையும் பெற்று, 2-12-1970 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் அர்ச்சகர் சட்டம் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. அர்ச்சகர் தேர்வில் வெற்றி பெறும் ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்துப் பெருமகனும் கர்ப்பக்கிரகத்தில் நுழைந்து ஆண்டவனைப் பூஜை செய்யலாம் என்ற உரிமையை வழங்கும் அந்தச் சட்டத்தைப் புரட்சிகரமான சட்டமென சமத்துவம் விரும்பும் சான்றோர் அனைவரும் பாராட்டினர்.

ஆலயங்களில் நியமிக்கப்படும் அறங் காவலர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்பதை மரபாக மட்டுமே கொண்டிருந்த நிலையை மாற்றி; எந்தவொரு ஆலயத்து அறங்காவலர் குழுவிலும் நிச்சயம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் இடம் பெற்றாக வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

தமிழக அரசின் அர்ச்சகர் சட்டம் கண்டு வெகுண்ட சமத்துவம் விரும்பாத சனாதனிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்கள். அந்த வழக்கில் 1972ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் நாள் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

கோயில்களில் அர்ச்சகர்களை நியமிப்பது வகுப்பு வேறுபாடற்ற நடவடிக்கை. அந்த நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட உரிமை உண்டு. மனுதாரர்களால் தவறு என்று கூறப்படும் இந்தச் சட்டம், மத சம்பந்தமான நடவடிக்கைகளிலோ, விவகாரங்களிலோ தலையிடவில்லை. எனவே தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தம் செல்லுபடியானதே என்று தீர்ப்பிலே கூறப்பட்டிருந்த போதிலும்; அந்தச் சட்டத்தின்படி காரியங்கள் நடைமுறைக்கு வரமுடியாத அளவுக்கு முடக்கப்பட்டுவிட்டன. அது நடைமுறைக்கு வரவேண்டுமென்றால், அரசியல் சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அடிப்படையாக வைத்து திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர், எனது இளவல் கி. வீரமணி அவர்கள், 'விடுதலை'யில் "அறுவை சிகிச்சை வெற்றி - ஆனால் நோயாளி மரணம்" என்று தலைப்பிட்டு அருமையான தலையங்கம் ஒன்றினைத் தீட்டியிருந்தார்.

கழக அரசின் சார்பில், நாம் எவ்வளவோ முயன்றும், அரசியல் சட்டத்தில் தக்கதிருத்தம் கொண்டுவரப்படவே இல்லை என்பதைக் கண்டு கொதிப்படைந்த தந்தை பெரியார் அவர்கள், 1973ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில், நாடு தழுவிய ஒரு போராட்டத்தை நடத்தப் போவதாகத் தீர்மானம் நிறைவேற்றினார். ஆனால் அந்தப் போராட்டத்தை நடத்தாமலேயே, 1973ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் பெரியார் அவர்கள் மறைந்துவிட்டார்கள். அர்ச்சகர் சட்டம் முடமாக்கப்பட்டிருந்த நிலையில், அதன் காரணமாகத் தந்தை பெரியார் "நெஞ்சில் ஒரு முள்ளோடுதான்" மறைந்தார்.

2006ஆம் ஆண்டு கழக அரசு அமைந்த உடன், தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சில் தைத்திருந்த அந்த முள்ளை அகற்றும் பணியில் ஈடுபட்டது. சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்து, தகுதியும் திறமையும் பெற்ற அனைத்து இந்துக்களும் சாதி வேறுபாடின்றி திருக்கோயில்களில் அர்ச்சகராகலாம் என 23-5-2006 அன்று அரசாணை பிறப்பிக்கப் பட்டது. அதனையடுத்து, பழனி, திருச்செந்தூர், மதுரை, திருவண்ணாமலை ஆகிய நான்கு இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும்; சென்னை, திருவரங்கம் ஆகிய இரண்டு இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையங்களும் தொடங்கப் பட்டன. இப்பயிற்சி நிலையங்களில் மாணவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் ஆகியன இலவசமாக அளிக்கப்பட்டன. ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த 34 மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 76 மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 55 மாணவர்கள், இதர வகுப்பைச் சேர்ந்த 42 மாணவர்கள் உள்பட மொத்தம் 207 மாணவர்கள் ஓராண்டு கால 'இளநிலை அர்ச்சகர் சான்றிதழ்' பயிற்சியை முடித்து, சான்றிதழ் பெற்றனர்.

2006ஆம் ஆண்டு கழக அரசு பிறப்பித்த அரசாணைக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டு, அது உச்சநீதிமன்றம் வரை சென்றது. வழக்கை விரைவுபடுத்திட கழக அரசின் சார்பில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வழக்கு நிலுவையில் இருந்த காரணத்தால், அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக தமிழகத் திருக் கோயில்களில் முறைப்படி நியமனம் செய்து பணி ஆணையை விரைந்து வழங்க இயலாமல் போய்விட்டது.

இவ்வாறு அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்கள் ஆவதற்கு உருவாக்கப்பட்ட சட்டச் சிக்கல்களைக் களைந்து, பெரியார் நெஞ்சில் தைத்திருந்த முள்ளை அகற்றி, ஆரம்ப நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வந்த நிலையிலேதான்; 2011ஆம் ஆண்டு சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தல்கள் வந்தன. தேர்தல்கள் நடைபெற்று, ஆட்சி மாற்றம் ஏற்பட்டதற்குப் பிறகு, அதைப் பற்றி யாரும் அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை; யாருக்காக கழக ஆட்சியில் அரசாணை வெளியிடப்பட்டதோ அவர்களும் அது குறித்துக் கவலைப்படுவதாகத் தகவல் இல்லை. ஆதிக்க சக்திகள் விரிக்கும் வலையை அறுத்து அப்பாவி மக்களை மீட்க நாம் கடுமையாக முயற்சிப்பதும்; அதிகாரம் கைமாறியதும், ஆதிக்க சக்திகளின் மாயவலையில் அவர்கள் மாட்டிக் கொண்டு வதைபடுவதும்; தொடர்கதையாக நீண்டு நம் நெஞ்சைத் துளைக்கிறது!

அன்புள்ள,

மு.க.

14-10-2012

3664. சேது திட்டம் வந்தால் செழிப்புறும் தென்னகம்!

உடன்பிறப்பே,

16-10-2012 அன்று நான் விரிவாக எழுதிய அறிக்கையில், சேது சமுத்திரத் திட்டம் தேவையில்லை என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அரசு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு, தமிழகத்திற்கு இழைக்கப்படும் மாபெரும் துரோகம் என்பதை விளக்கி யிருந்தேன். கழக மாணவர் அணி சார்பிலும், மற்றும் பல மாவட்டக் கழகங்களின் சார்பிலும் அந்த அறிக்கையினை துண்டு நோட்டீசாக அச்சடித்து தென் மாவட்டங்களில் விநியோகம் செய்யப் போவதாகவும் என்னிடம் தெரிவித்தார்கள். சேது சமுத்திரத் திட்டம் தமிழகத்திற்கு எத்தனை அவசியமானது என்பதைப்பற்றி திராவிடர் கழகத் தலைவர் இளவல் வீரமணி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தோழர் ஜி. ராமகிருஷ்ணன் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தோழர் தா. பாண்டியன் அவர்களும், பா.ம.க. சார்பில் நிறுவனர் டாக்டர் திரு. ராமதாஸ் அவர்களும் தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்.குமார் அவர்களும் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள்.

சேது சமுத்திரத் திட்டத்திற்காக எழுச்சி நாள் கொண்டாடும்படி 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே ஆணையிட்டு, அதனை நிறைவேற்றியவர்கள் நாம்.

முதலமைச்சராக அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது, 1985-1990 ஆம் ஆண்டுக்கான ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் சமர்ப்பித்தபோது சேது சமுத்திரத் திட்டம் மன்னார் வளைகுடாவை பாக் ஜலசந்தியுடன் இணைப் பதற்கு பாம்பனுக்கு அருகே உள்ள குறுகிய பகுதியில் கப்பல் போக்குவரத்துக் கால்வாயை வெட்டுவதற்கு வகை செய்யும்

திட்டம் என்றும், பயணதூரம், பயண நேரம் ஆகியவை குறையும் என்றும் எடுத்துக் கூறி அத்திட்டத்தை நிறைவேற்றியே தீரவேண்டுமென்றும் கூறி யிருக்கிறார்.

1981ஆம் ஆண்டு சேது சமுத்திரத் திட்டம் பற்றி ஆராய எச்.ஆர். லட்சுமி நாராயணன் தலைமையில் அமைந்த குழு தமிழகத்திற்கு வந்த போது, எனது கோரிக்கையினை ஏற்று, அன்றைய முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர்., அந்தக் குழுவிடம் சேது சமுத்திரத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றிப் பேசினார். அந்தக் குழு மதுரைக்கும் நெல்லைக்கும் சென்ற போது, கழகத்தின் சார்பில் திரு. வைகோ அவர்கள் அந்தக் குழுவினரைச் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தார். நாடாளுமன்ற விவாதங்களின் போதும் முரசொலி மாறனும், அவரைத் தொடர்ந்து திரு. வைகோவும் வாதாடி, 2004ஆம் ஆண்டு தேர்தலில் கழகம் ஆதரவு தெரிவித்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மத்தியிலே அமைந்த போது கப்பல், சாலை போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற தம்பி டி.ஆர். பாலு இத்திட்டத்திற்கு முழு வடிவம் தந்து மிக வேகமாக திட்டப் பணிகள் நடந்தன.

இதற்கிடையே, 8-5-2002 அன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு நான் ஒரு நீண்டக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் வருமாறு :-

"அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு, வணக்கம்.

தமிழகத்தின் நீண்ட நாள் கோரிக்கையான சேது சமுத்திரத் திட்டத்தை உடனே நிறைவேற்றக் கோரி இக்கடிதம் தங்களுக்கு எழுதுகின்றேன். இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம் கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலமாக வலியுறுத்தி வருகிறது. நான் பல சமயங்களில் பொறுப்பில் இருந்த பல பிரதமர்களிடம் இதைக் குறித்து வலியுறுத்தி உள்ளேன். 23-7-1967இல் சேது சமுத்திரத்தின் ஒரு பிரிவாக உள்ள தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றக் கோரி முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் எழுச்சி நாளை அறிவித்தார். இத்திட்டம் உலகளவில் உள்ள சூயஸ் கால்வாய், பனாமா

கால்வாய் போன்று சிறப்பைப் பெறும் என்பதை அறிந்து இத்திட்டத்தை ஆராய பல குழுக்கள் அமைக்கப்பட்டும், இத்திட்டம் நீண்ட நாளாக கிடப்பில் போடப்பட்டது என்பது கவலைக்குரிய செய்தியாகும். மத்தியில் ஆளும் நமது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு இத்திட்டத்தை நிறைவேற்றிடவும், இத் திட்டத்தின் சாத்தியக் கூறினை ஆராய பண ஒதுக்கீடு செய்தது குறித்தும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இந்தச் சேதுக் கால்வாய் திட்டம் விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்ற அடிப்படை யில் இக்கடிதம் மூலமாக தங்களை வலியுறுத்துகிறேன்.

சேது கால்வாய் பற்றிய விவரங்களையும், அதனால் பொதுவாக இந்தியாவிற்கு குறிப்பாக தமிழகத்திற்கு ஏற்படும் பயன்களையும் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். சேதுக் கால்வாய் திட்டம் என்பது, பாக் ஜலசந்தியையும் மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்பட வேண்டிய கால்வாயின் பெயராகும். இத்திட்டத்தை ஆங்கில அரசாங்கத்தின் கப்பல் படையைச் சேர்ந்த கமாண்டர் டெயிலர் என்பவர் 1860ஆம் ஆண்டு உருவாக்கினார். அன்றைக்கு அதனுடைய மதிப்பீடு ரூபாய் ஐம்பது இலட்சமாகும். பின்பு டவுண்ட்ஸ்டன் மற்றும்

சரி. ஜான்கூடே என்பவர்கள் இத்திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்து, இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டு மெனப் பல வழிகள் வகுத்தனர். ஆனால், ஒரு சாரார் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மறுபடியும் 1921ஆம் ஆண்டு சென்னை மாநில அரசு இத்திட்டத்தை வகுத்தும், ஆங்கில ஆட்சியாளர்களின் உதவியின்மையால் நிறைவேற்றப்படவில்லை.

1945ஆம் ஆண்டு மறுபடியும் ஆங்கில அரசாங்கம் இத்திட்டத்தைப் பற்றி அறிய ஒரு குழுவை அமைத்தது. ஆனால், இந்தக் குழுவின் அறிக்கை வெளியிடப் படவில்லை. இந்திய விடுதலைக்குப் பிறகு 1955ஆம் ஆண்டு டாக்டர் சர். ஏ. இராமசாமி முதலியார்

தலைமையில், சேதுக் கால்வாய் திட்டத்தைப் பரிசீலிக்க ஒரு குழு இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. "சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால், இந்தியாவிற்கு அன்னியச் செலாவணியும், கிழக்கு கடற்கரையோரமாய்க் கப்பல் போக்குவரத்தும் எளிதாக இருக்கும்" என இக்குழு தனது அறிக்கையில் கூறியதோடு, உடனே இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டு மெனவும் தெளிவாக இந்திய அரசுக்கு தெரிவித்தது. அதற்கு ரூ. 9.98 கோடி திட்ட மதிப்பையும் அக்குழு வெளியிட்டது. சர். ஏ. இராமசாமி முதலியார் குழுவின் அறிக்கையின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இந்திய அரசாங்கம் விட்டு விட்டது. 1963ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் நான்காவது திட்டக் காலத்தில் இந்தச் சேதுக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றியே ஆக வேண்டுமென முடிவு செய்தும், இத்திட்டம் செயல்வடிவம் பெறாமல் போய் விட்டது. அதன் பிறகு டாக்டர் நாகேந்திர சிங் குழுவும் (1963ல்) சி.வி. வெங்கடேஸ்வரன் குழுவும் (1965ல்) அமைக்கப்பட்டது. 1965ஆம் ஆண்டு சி.வி. வெங்கடேஸ்வரன் தலைமையில் ஒரு குழு இத்திட்டத்தை அறிய நியமிக்கப் பட்டது. இந்தக் குழு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சுமார் 37 கோடி ரூபாய் செலவாகும் என்றும், ஆனால் இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒன்றரைக் கோடி வருவாய் உள்ளதெனவும் கூறியது. அதன் பின்பு இறுதியாக எச்.ஆர். இலட்சுமி நாராயணன் தலைமையில் ஐவர் குழு ஒன்றும் மத்திய அரசால் 1981-82ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இக்குழு தமிழகமெங்கும் சென்று இத்திட்டத்திற்கான பல்வேறு தரப்பாளர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்தது.

இத்திட்டத்தின் பயனைப் பற்றி 1981-82ஆம் ஆண்டு மத்திய அரசின் குழு பின்வருமாறு ஆராய்ந்து மதிப்பிட்டது.

1. இந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரத்தில் தொடர்ச்சியான கடல் வழிப் போக்குவரத்திற்கு

தற்போது வழி யில்லை. இத்திட்டத்தை செயல்படுத்தினால் இந்து மகா சமுத்திரமும் வங்கக் கடலும் இணைய வாய்ப்புள்ளது. பாறைகளால் அமைந்த ஆடம்ஸ் பாலத்தை வெட்டி இணைத்தால் கடல் வழிப் போக்குவரத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

2. சேது கால்வாய்த் திட்டமும், தூத்துக் குடித் துறைமுகத் திட்டமும் ஒருங் கிணைந்தவைகளாகும். சேது சமுத்திரத் திட்டத்தைச் செயல்படுத்தினால் தூத்துக்குடி துறைமுக வளர்ச்சியும் முழு அளவு அதிகரிக்கும். தூத்துக்குடியிலிருந்து பின்வரும் துறைமுகங் களுக்குப் பயணம் செய்யும் நேரமும் குறையும்.

அ. தூத்துக்குடியிலிருந்து சென்னை 434 மைல் (மிச்சப்படும் தூரம்)

ஆ. தூத்துக்குடியிலிருந்து விசாகப்பட்டினம் 376 மைல் (மிச்சப்படும் தூரம்)

இ) தூத்துக்குடியிலிருந்து கல்கத்தா - 340 மைல் (மிச்சப்படும் தூரம்)

3. இக்கால்வாயினால் பயணம் செய்யும் தூரம் குறைவதால் கப்பலின் எரி பொருள் மிச்சப்படும். இதனால் இந்தியாவின் அன்னியச் செலாவணி செலவில் சுமார் 130 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் மிச்சப்படும்.

4. இந்தியாவிற்கு அன்னியச் செலாவணி கணிசமான அளவு உயரும். இந்தக் கால்வாயின் மூலம் தமிழகத்தின் குளச்சல், முட்டம், தூத்துக்குடி, இராமேசுவரம், நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை மற்றும் விசாகப்பட்டினம், கல்கத்தா வரையுள்ள கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்கள் வளர்ச்சி அடையும்.

5. இக்கால்வாய் வெட்டப்பட்டால் தூத்துக்குடித் துறைமுகத்தின் வளர்ச்சி ஏற்பட்டு அதன்மூலம்

பொருளாதார ரீதியாக நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், காரைக்குடி, திருப்பத்தூர், மதுரை, நாகர்கோவில் ஆகிய பிற்படுத்தப்பட்ட பகுதிகள் முழுதும் தொழில் ரீதியாக வளர்ச்சி பெறும்.

6. இந்தக் கால்வாய் வெட்டப்பட்டால், இந்தியாவின் தென் பகுதியில் அன்னியச் சக்திகள் ஊடுருவாமல் அது ஓர் அரணாக விளங்கும்.

7. இக்கால்வாயின் மூலம் மீன்பிடித் தொழில் தென்னிந்தியாவில் வளர்ச்சி பெறும். மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இது ஒரு பாதுகாப்பு வளையமாகத் திகழும்.

8. நிலம் வழியாகச் செல்லும் நிலக்கரி, சிமெண்ட், உப்பு, உரங்கள், கடல் உணவு வகைகள், பருப்பு வகைகள், பருத்தி போன்ற பொருள்களைக் கிழக்குக் கடற்கரை மார்க்கமாக இந்தியாவின் பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்ல இக்கால்வாய் மிகவும் உதவியாக இருக்கும்.

9. சேதுக் கால்வாய் மூலமாக கப்பல்கள் சென்றால், புயல் அபாயம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.

10. இக்கால்வாய் ஒரு சுற்றுலா மையமாக அமைந்து உலகின் பல பகுதிகளில் இருந்து பயணிகளை ஈர்க்க வாய்ப்புள்ளது.

11. ஏற்றுமதி, இறக்குமதித் தொழில்கள் இக்கால்வாயினால் பெருகி, இந்தியாவின் வளர்ச்சியை அதிகரிக்கும்.

12. இக்கால்வாய் திட்டத்தை நிறைவேற்றி னால் ஏற்படும் செலவை சுமார் பத்து அல்லது பனிரெண்டு ஆண்டுகளில் ஈடு செய்து விடலாம்.

13. இத்திட்டம் பொருளாதாரரீதியாகவும், தொழில்நுட்ப ரீதியாகவும் சாதகமானதாகும். இந்தியாவின் நலன் கருதி உடனடியாக இத்திட்டம் நிறை வேற்றப்பட வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தின் கப்பல் மற்றும் கடல் வழிப்

போக்குவரத்து அமைச்சகத்தின் 1981-82ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

எனவே பொருளாதாரரீதியாக எவ்வாறெல்லாம் இத்திட்ட தாமதத்தினால் இழப்பு ஏற்படுகிறது என்பதை என் கடிதம் மூலம் தாங்கள் அறிவீர்கள். எனவே பொருளாதார வளர்ச்சியுடன் வேலை வாய்ப்புகள் வழங்கிடும் இத்திட்டத்தை நாட்டு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு தாங்கள் தலையிட்டு தாமத மில்லாமல் நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்."

என்று, விளக்கமாகவும், விரிவாகவும் எழுதினேன். இக்கடிதத்தை நான் எழுதிய போது தி.மு. கழகம் தமிழகத்திலே ஆளுங்கட்சி அல்ல. இருந்தாலும் தமிழகத்தின் நலன் கருதி இந்தக் கடிதத்தை பிரதமருக்கு நான் எழுதினேன்.

அந்தக் கடிதம் பற்றி 11-5-2002 தேதிய "தினமணி" ஒரு தலையங்கத்தை "தூங்காத கருணாநிதி" என்ற தலைப்பில் எழுதியிருந்தது. அதன் சுருக்கம் வருமாறு :-

"கருணாநிதியின் சுறுசுறுப்பு அலாதியானது. அது எத்தகையது என்பதை அவருடைய அரசியல் எதிரிகளும்கூட நன்றாக அறிவார்கள். ஆட்சியைப் பறி கொடுத்து ஓராண்டு ஆகிறது. ஆயினும் கருணாநிதியின் வேகமான அரசியல் தடைப்பட்டு விடவில்லை. அநேகமாக நாள்தோறும் ஏதாவது ஒரு பிரச்சினை மீது அறிக்கையை அவர் வெளியிடத் தவறுவதில்லை. அதோடு புதிய புதிய பிரச்சினைகளை ஆட்சியாளர்களுக்குக் கிளப்பி விடுவதிலும் அவர் பின்வாங்குவதில்லை. இதற்கிடையே திடீரென சேது சமுத்திரத் திட்டம் கருணாநிதிக்கு நினைவுக்கு வந்து விட்டிருக்கிறது. அவ்வளவுதான், உடனடியாக பிரதமருக்கே நேரிடையாகக் கடிதம் எழுதிவிட்டார். இத்திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட்டால் இந்தியாவின் கப்பல் போக்குவரத்து மற்றும் தொழில் வணிக வளர்ச்சிக்குப் பெரிய வாய்ப்பு ஏற்படுவதுடன் தென் தமிழகத்தின் பல முனை முன்னேற்றத்திற்கும் வரப்பிரசாதமாக அமையும் என்பதையும் நினைவுபடுத்தியிருக்கிறார். கருணாநிதி இப்பொழுது ஆட்சிப் பொறுப்பில் இல்லாமல் இருக்கலாம். ஆயினும் பொறுப்புள்ள மூத்த தலைவர்களில் ஒருவர் அல்லவா?

அவரால் எப்படி தமிழக நலன்களை மறக்க முடியும்? அதோடு இங்கு அதிகாரத்தில் தி.மு.க. இல்லாவிடினும், தில்லியில் வாஜ்பாய் அரசில் அங்கம் வகிக்கிறது அல்லவா? எனவே சேதுத் திட்டம் வேகமாக நிறைவேற்றப்படுவதில் தி.மு.க. வும் தனி அக்கறை இருப்பதை கருணாநிதியால் நியாயப்படுத்த முடியும். தூங்காத கருணாநிதியால் சும்மா இருக்க முடியாது. ஆட்சியில் இருந்தால் எதிர்க் கட்சிகளைத் தூங்க விடமாட்டார். எதிர் வரிசையில் இருந்தால் ஆட்சியாளர் - நண்பர்கள் ஆகிய இரு தரப்பையுமே தூங்க விடமாட்டார். "தூங்காமை, கல்வி, துணிவுடைமை" ஆகிய மூன்றும் ஆட்சியாளர்களுக்கு அவசியமான பண்புகள் என்று திருவள்ளுவர் இலக்கணம் வகுத்து இருக்கிறார் அல்லவா? எனவேதான் இந்த அபார சுறுசுறுப்பு!"

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் என்னைப் பாராட்டி எழுதியிருந்தது என்பதற்காக இப்போது நான் கூறவில்லை. இந்தத் திட்டம் எவ்வளவு முக்கியமான திட்டம், அது நிறைவேற்றப்பட வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் எடுத்துக்காட்டினேன். ஆனால் இந்தத் திட்டம் தேவையில்லை என்று தமிழக அரசின் முதல் அமைச்சரே உச்ச நீதிமன்றத்திலே, அதுவும் பல கோடி ரூபாய் மக்கள் பணத்தை செலவு செய்து திட்டத்தின் 75 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் அறிக்கை கொடுத்திருப்பது முறைதானா என்பதை அரசியல் கட்சி வேறுபாடுகளை யெல்லாம் மறந்து, தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வை ஒருக்கணம் எண்ணிப் பார்த்து அனைவரும் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவே இக்கடிதம்!

அன்புள்ள,

மு.க.

21-10-2012

3665. நீர் இடித்து நீர் விலகுவதா?

உடன்பிறப்பே,

நான் அடிக்கடி ஒன்றைச் சொல்லியிருக்கிறேன்; தந்தை பெரியார் அவர்கள் வலியுறுத்திச் சொல்வார் என்று குறிப்பிட்டே அதைச் சொல்லியிருக்கிறேன். அதுதான் கழகத்தின் தாரக மந்திரங்களான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுள் "கட்டுப்பாடு"தான் முக்கியம்! அதைத்தான் விழுப்புரம் முப்பெரும் விழாவில் நமது இனமானப் பேராசிரியர் நினைவூட்டி விரிவாக உரையாற்றினார். திராவிட முன்னேற்றக் கழகம் பல முறை தேர்தலில் தோற்றிருக்கலாம். பல முறை வெற்றி பெற்றிருக்கலாம். வெற்றி, தோல்வி பற்றி நாம் எந்தக் காலத்திலும் முறையே வெறியாட்டம் போட்டதோ, வீழ்ந்து பட்டதாக நினைத்ததோ இல்லை. ஆனால் கட்டுப்பாடு குலைந்தாலோ - சேதாரம் ஏற்பட்டாலோ பிறகு கழகத்தைக் காப்பாற்ற முடியாது!

என்னுடைய வயது 89; பேராசிரியரின் வயது 90; இருவருமே மாணவர்களாக இருந்த காலந்தொட்டு, இப்போது வரை ஓய்வின்றி உழைத்துக் கொண்டுதான் இருக்கிறோம். நாங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு ஒரு நாள் கழக அலுவலகத்திற்கு வராமல் இருந்தால் எங்களைக் கேட்பவர்கள் யாரும் இல்லை. இருந்தாலும் காலையிலும், மாலையிலும் கழக அலுவலகத்திற்கு வந்து கொண்டுதான் இருக்கிறோம். கழகம் தற்போது ஆளுங்கட்சி அல்ல. தமிழகத்தில் கடந்த ஆண்டு 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், நாம் எதிர்க்கட்சியாகக் கூட வர முடியாத அளவிற்கு தோல்வியைக் கண்டு விட்டோம். நான் அதற்காக துவண்டா போய் விட்டேன்? கழகப் பணி ஆற்றாமல் இருந்து விட்டேனா? இந்த வயதிலும் எதற்காக அன்றாடம் எழுதுகிறேன்? காலையில் சாப்பிடுகிறேனோ, இல்லையோ, எத்தனை நாளிதழ்களைப் படிக்கின்றேன்? அத்தனை பத்திரிகைகளையும் உன்னால் வாங்கிப் படித்திட இயலாது என்பதால், அந்த இதழ்களையெல்லாம் படித்து விட்டு, அதிலே நீ தெரிந்து கொள்ள வேண்டிய

செய்திகளை யெல்லாம் - நீ மக்களுக்கு விளக்கி எடுத்துரைத்திட வேண்டியவற்றை யெல்லாம் தேடிப்பிடித்து, ஆளுகின்ற அரசைப் பற்றி எப்படிப்பட்ட செய்திகள், விமர்சனங்கள் எல்லாம் வருகின்றன, உச்ச நீதிமன்றத்தில், உயர் நீதி மன்றத்தில் இந்த ஆட்சியினரைப் பற்றி எப்படிப்பட்ட கருத்துக்கள், கண்டனங்கள் எல்லாம் வெளிவருகின்றன என்பதையெல்லாம் தொகுத்து இடுப்பு ஒடிய ஒடிய சலிப்பின்றி எழுதுகிறேன்.

ஆனால் அந்த என்னுடைய கருத்துக்களை தமிழகத்திலே உள்ள நாளேடுகள் வேண்டா வெறுப்பாக, ஏதோ நாங்களும் வெளியிட்டோம் என்கிற அளவிற்கு, நடுநிலை நாளேடு என்று காட்டிக் கொள்வதற்காக இரண்டு பத்தி, மூன்று பத்தி என்று வெளியிடுகிறார்கள். முழுமையாக வெளியிட்டு, அந்தக் கருத்துக்கள் பரவினால், கழகத்தின் செல்வாக்கு கூடுதலாகி விடுமோ என்று ஆட்சியாளர்களைவிட, நமது இதழாளர்களுக்கு அக்கறையும், ஆர்வமும் அதிகமாக உள்ளது. ஆனால் அதே நேரத்தில் கழகத்திற்கு எதிர்ப்பான செய்திகள் என்றால் அதற்கு எவ்வளவோ முக்கியத்துவம் கொடுத்து, ஒரு வரி விடாமல் வெளியிட்டு, ஆட்சியாளர்களுக்கு அரவணைப்பு காட்டிட, அரசியல் ரீதியாக உதவிட முன் வருகிறார்கள். என்ன காரணம்? நம்மீது உள்ள வெறுப்பு என்பதை விட; ஆட்சியாளர்களைக் காப்பாற்றிட வேண்டுமென்பதிலே உள்ள முனைப்புதான் காரணம்.

நேற்று (21-10-2012) ஒரு நாள் "தினமலர்" நாளேட்டில் மட்டும் கழகத்திற்கு எதிர்ப்பாக எத்தனை செய்திகள் என்று பாருங்கள்!

- ❖ "உடன்பிறப்புகள் குமுறல் : வட சென்னைக்கு பஞ்சாயத்து எப்போ?"
- ❖ "கோவை மாநகர தி.மு.க. வின் மாநில திருமண மேளா?"
- ❖ "நடுரோட்டில் கட்டிப் புரண்டு சண்டை"
- ❖ டி.ஆர். பாலுவுக்கு மத்திய இணை அமைச்சர் "அட்வைஸ்"

கொட்டை எழுத்துக்களில், அரைப்பக்கம், முழுப் பக்கம் என்ற அளவிற்குக் கழகத்தைப் பாதிக்கும் இத்தனைச் செய்திகள் - ஆனால் சேது கால்வாய்த் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து

நான் ஒன்றரைப் பக்கத்திற்கு விளக்கமாக எழுதிய கட்டுரையில் "நாங்களும் வெளியிடுகிறோம்" என்ற அளவிற்கு இரண்டே இரண்டு பத்திகள் மட்டுமே; நடுநிலை (?) நாளேடாம்!

இன்றைய (22-10-2012) "தினமலர்" இதழில் முதல் பக்கத்தில் "பேனர்" செய்தி - எட்டு பத்தி தலைப்பு செய்தியே - என்ன தெரியுமா? "லடாய்! - தி.மு.க. மந்திரி - எம்.பி., நேருக்கு நேர் மோதலின் பின்னணி - கோஷ்டி பூசலின் பலப் பரிட்சையால் கருணாநிதி அப்செட்!" என்பதுதான்! பழனிமாணிக்கம் பேட்டி கொடுத்ததே 21ஆம் தேதிதான். ஆனால் "தினமலர்" "இந்த மோதலால் அதிருப்தி அடைந்துள்ள கருணாநிதி கடந்த நான்கு நாட்களாக அறிவாலயத்திற்கு வராமல், தன் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்" என்று புளுகியுள்ளது. நம்மீது சேற்றை வாரி இறைக்க என்ன காரணம்? அடுப்பில் எரியும் விறகை வெளியே இழுத்தால் கொதிப்பு அடங்கும் என்பார்களே! அதைப் போல "தினமலர்" இப்படி எழுதாவிட்டால், இந்த மாதத்திற்கான அரசு விளம்பரம் குறைந்து விடும்! கடந்த மாதமே அந்த இதழுக்கான விளம்பரத் தொகையைக் குறைத்து விட்டார்களாம்! என்ன காரணம்? அண்ணா நகர், அண்ணா வளைவினை அகற்றுவதில் ஆட்சியாளர்களின் குளறுபடிகள் பற்றிப் பெரிய அளவில் அந்த இதழ் செய்தி வெளியிட்டது என்பதற்காகவே விளம்பரங்களை "கட்" பண்ணக் கூறி விட்டார்களாம்! எனவேதான் "லடாய்" என்று "பேனர்" வெளியிடுகிறது "தினமலர்". "விளம்பரக் கொழுக்கட்டை" என்னென்ன விநோதத்தைச் செய்கிறது பார்த்தாயா?

"இந்து" - ஆங்கில நாளேடு! அந்த இதழின் மீது அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் கடுமையாக நடவடிக்கை எடுத்தபோதெல்லாம், அந்த "இந்து" இதழுக்கு ஆதரவாக - பாரம்பரியம் மிக்க அந்த இதழைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக; பக்கம் பக்கமாக எழுதியவன் நான். அகில இந்தியப் புகழ் பெற்ற அந்த நாளேடு நேற்றையதினம் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டுள்ள செய்தி என்ன தெரியுமா? "Palanimanickam's spat with Baalu comes out in open" என்ற தலைப்பில் டி.ஆர். பாலுவைப் பற்றி, மத்திய இணை அமைச்சர் பழனி மாணிக்கம் புகார் கூறி கொடுத்த பேட்டியினை அரைப்பக்க அளவிற்கு வெளியிட்டுள்ளது. "இந்து" பத்திரிகைக்குத் திடீரென்று பழனிமாணிக்கம் மீது அன்பு பெருக்கெடுத்தோடி, அவருடைய பேட்டியை அந்த

அளவிற்கு பெரிதாக வெளியிட்டு விட்டார்களா? தமிழக மக்களின் நல்வாழ்வுக்காக சேது சமுத்திரத் திட்டம் வேண்டுமென்று கழகத்தின் தலைவனாகிய நான் அவ்வளவு பெரிய அறிக்கையை எழுதியிருக்கிறேனே, அதிலே ஒரு சிறு பகுதியையாவது "இந்து" வெளியிட்டிருக்கிறதா? கிடையாது.

"டைம்ஸ் ஆப் இந்தியா" - ஆங்கில நாளேடு - எவ்வளவு பெரிய இதழ்? அந்த இதழின் சென்னைப் பதிப்பை நான்தான் தொடங்கி வைத்தேன். அதில், "Two DMK Leaders locked in turf battle - Baalu,Palanimanickam Spar Over Rail Projects" என்று தலைப்பிட்டு, இவர்களின் மோதலைப் பற்றி அரைப் பக்கத்திற்கு செய்தி வெளியிடுகிறது என்றால், நம் இயக்கத்தின் மீதுள்ள பற்றா காரணம்? இல்லை, இல்லவே இல்லை. கழகத்திற்கு எதிரான அந்தச் செய்தியை அந்த அளவிற்கு ஆவலோடு வெளியிடுகிறார்கள். **இந்தச் செய்திகளைப் படிக்கின்ற கடைக்கோடித் தொண்டன் இருக்கிறானே, எந்தப் பதவியையும் எதிர்பார்க்காமல், என் வீட்டு வாசலில் காலையிலிருந்து ஒரு மாலையை கையிலே ஏந்திக் கொண்டு, "அய்யா எனக்கு 27 வயது, உங்கள் வாழ்த்துக்காகக் காத்திருக்கிறேன்" என்று ஒவ்வொரு நாளும் கூறிக் கொண்டு காத்திருக்கிறார்களே அவர்கள் எல்லாம் திசை திருப்பும் இந்தச் செய்திகளைப் படித்து விட்டு கண்களிலே கண்ணீரைச் சிந்தவில்லை; ரத்தத்தை அல்லவா சிந்துகிறார்கள்?**

நேற்று காலையிலே ஒரு உடன்பிறப்பு - சேப்பாக்கம் ராஜு - அவருடைய வளர்ப்பு மகனுக்கு என் வீட்டிலே திருமணத்தை நான் நேற்று நடத்தி வைத்தேன். சேப்பாக்கத்தில் நான் தேர்தலில் போட்டியிட்ட போது இரவும் பகலும் உழைத்தவர் ராஜு. திருமணம் முடிந்து மணமக்கள் எல்லாம் போய் விட்டார்கள். ஆனால் ராஜு மட்டும் மேலே தாழ்வாரத்தில் அமர்ந்திருந்த என்னிடம் வந்து என் கால்களில் விழுந்தார். "என்ன?" என்றேன். "அய்யா, என் வாழ்நாளில் எனக்கு எந்தப் பதவியும் தேவையில்லை, தங்கள் கையால் தாலி யெடுத்துக் கொடுத்து, என் மகனை வாழ்த்தினீர்களே, அதுவே எனக்குப் போதும். இந்தப் பிறவியின் பயனை அடைந்து விட்டேன்" என்றார். இப்படிப்பட்ட தன்னலமற்ற, தலை வணங்கத்தக்க உடன்பிறப்புகள் எல்லாம் - கழகத்திலே பதவிச் சுகம் கண்டு, முன்னணித் தலைவர்களாக

இருப்பவர்கள் - ஒருவரோ டொருவர் திறந்தவெளி மைதானத்தில் மோதிக் கொள்வதைக் கண்டு, ரத்தக் கண்ணீர் வடிக்காமல் என்ன செய்வார்கள்?

என்னைச் சந்திக்க வருகிற நமது இயக்க முன்னோடிகள் மாத்திரமல்ல, தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் கழகத்திற்கு எந்த அளவிற்கு செல்வாக்கு கூடியிருக்கிறது என்பதைப் பற்றியும், ஆளுங்கட்சி மீது ஒன்றரை ஆண்டுக் காலத்திலேயே எந்த அளவிற்கு வெறுப்பும் விரக்தியும் ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியும், மின்வெட்டின் காரணமாக மக்கள் எந்த அளவிற்கு கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றியும் விளக்கி, என்னிடம் எடுத்துக் கூறும்போது; என் மனதிலே ஆளுங்கட்சிக்கு மக்களின் எதிர்ப்பு பெருகுகிறது என்ற செய்தியைவிட, இரண்டு கழக முன்னோடிகள் ஒருவரோடொரு வர் குழு சேர்த்துக் கொண்டு இந்த மாவட்டத்திலே மோதிக் கொள்கிறார்கள். ஒரு குழுவினர் துண்டுப் பிரசுரங்களை பொது மக்களிடம் கொடுத்து விட்டுச் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு, நமது கழகத்தைச் சேர்ந்த இன்னொரு குழுவினர் தனியாக வந்து அதே துண்டுப் பிரசுரங்களைக் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் கேள்விப்படுகிறேனே, அந்தச் செய்திதான் என்னைப் பெரிதும் வருந்தச் செய்கிறது. அந்த வருத்தம், என்னை உண்ண விடாமலும் இரவு முழுவதும் தூங்க விடாமலும் செய்து விடுகிறது.

1967 ஆம் ஆண்டு முதன் முதலாகக் கழகம் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, நாமெல்லாம் பெருமகிழ்ச்சியிலே ஆழ்ந்திருந்த போது, அண்ணா மட்டும் அந்த அளவுக்கு மகிழ்ச்சி யாக இல்லை. அமைப்புச் செயலாளர் என்.வி. நடராசன் அப்போது அண்ணாவிடம், "என்ன அண்ணா? உங்கள் முகத்திலே மகிழ்ச்சி இல்லையே" என்று கேட்ட போது, "ஆட்சி வந்து விட்டது, ஆனால் கட்சி போச்சே" என்று அண்ணா சொன்னார். அவர் என்ன அர்த்தத் தில் அப்படிச் சொன்னார் என்பதை நான் இப்போது அனுபவ ரீதியாக உணருகிறேன். இரவு 11 மணி வரை கழக முன்னணியினரோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டு, படுக்கச் சென்றால், உள்கட்சியை அரித்து வரும் இத்தகைய குழுக்களைப் பற்றிய வேதனைதான் என்னை சூழ்ந்து கொள்கிறது. தூங்கவிடாமல் செய்கிறது.

நேற்று மாலையில் மத்திய இணை அமைச்சர் பழனிமாணிக்கம் அளித்த பேட்டி பற்றி அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவனும், தம்பி முரசொலி செல்வமும் என்னிடம் வந்து கூறியவுடன், "இன்றிரவு என் தூக்கம் போச்சு" என்றுதான் கூறினேன். அதுபோலவே இரவு முழுவதும் நான் உறங்கவில்லை. இன்று காலையில் தாய்க் கழகமான, திராவிடர் கழகத்தின் தலைவர், தமிழர் தலைவர், இளவல் வீரமணி அவர்கள் என்னிடம் நேரடியாகப் பேசுவதற்குத் தயங்கிய நிலையில், என் செயலாளரிடம் தொலைபேசியில் தன்னுடைய மன வேதனையையெல்லாம் கொட்டித் தீர்த்திருக்கிறார். "நம் கழகத்தில் இப்படியெல்லாம் கிடையாதே, இதென்ன புதுப் பழக்கம்" என்று பதறியிருக்கிறார்.

அண்ணா சொன்னாரே; "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று! அதெல்லாம் மறந்து போய் விட்டதா? அதுவும் தஞ்சை மாவட்டத்திலா? கடந்த சில நாட்களுக்கு முன்பு, தஞ்சை மாவட்டத்தில் கீழ் மட்டத்திலே இரண்டு பிரிவினருக்கு இடையே உள்ள பிரச்சினையைச் சமாதானப்படுத்துவதற்காக, கழக அலுவலகத்திற்கே அழைத்து நானும், பேராசிரியரும் இரண்டு மணி நேரம் செலவிட்டோம். தம்பி துரைமுருகன் அந்தக் கூட்டத்தில் பேசும்போது தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்கள் இணைந்த மாவட்டம், நம் தலைவரின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள அவருடைய சொந்த மாவட்டம். அங்கே அவர் கூறுவதுதான் "வேதவாக்கு" என்றெல்லாம் தெரிவித்து, அங்கே குழு உருவாகலாமா என்று கண்ணீர் மல்கக் கேட்டாரே! அந்த மாவட்டத்திலா இந்தத் தலைக்குனிவு? மன்னையும், தஞ்சை நடராசனும், தாழையும், குடந்தை நீலமேகமும், மாயூரம் கிட்டப்பாவும், விளநகர் கணேசனும், முத்துப்பேட்டை தர்மலிங்கமும், பேராவூரணி கிருஷ்ண மூர்த்தியும், நாடியம் ராமையாவும், குடவாசல் கிருஷ்ண மூர்த்தியும், டி.கே. கோவிந்தனும் உயிரோடு இருந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா? ஏன், என் இனிய உடன்பிறப்பு கோ.சி. மணி பழைய உடல் நிலையோடு உத்வேகமாக இருந்திருந்தால், இப்படியொரு செய்தி ஏடுகளில் வந்திருக்குமா?

என்னுடைய குணம் முக தாட்சண்யம்! சில கட்சிகளின் தலைமையைப் போல எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், கட்சிக்காக உழைத்தவர்களாக இருந்தாலும், மூத்தவர்களாக

இருந்தாலும் கணநேரத்தில் "கட்டம் கட்டி" விடுகிறார்கள்? என்னால் அப்படி - இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் - இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு, கடினமாக இருக்க முடிவதில்லை. அதையே காரணமாகக் கொண்டு, தாங்கள் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று கருதினால் பிறகு நான் என்ன தான் செய்ய முடியும்?

இரண்டு நாட்களுக்கு முன்பு பழனிமாணிக்கம் என்னைச் சந்தித்தார். அவருடைய தொகுதியிலே நடைபெறுவதைப் பற்றி யெல்லாம் என்னிடம் கூறினார். பொறுத்திருங்கள், தலைமைக் கழகத்திற்குப் புகாராக எழுதிக் கொடுங்கள், என்று சொன்னேன். அதற்குள் என்ன அவசரம்? எதற்காக இந்தப் பேட்டி? நான் அனைவருடனும் எளிதில் கலந்து, அன்போடு பழகுகிறேன் என்பதற்காகவே - அதையே பலவீனமாக எடுத்துக் கொண்டு, எது வேண்டுமென்றாலும் செய்வதா? "மறப்போம்; மன்னிப்போம்" என்று அண்ணா சொன்னபடி, நான் எல்லாவற்றையும் மன்னித்து விடுகிறேன், மறந்து விடுகிறேன் என்பதற்காக எதையும் செய்யத் துணிவதா? எதிர்க் கட்சிகளிடமிருந்து கட்சியைக் காப்பாற்றுவதா? நமக்குள்ளேயே உலவுகின்ற இத்தகைய குழு பேதத்தைப் போக்குவதா? இலை நிறைய பண்டங்களையும், பதார்த்தங்களையும் பரிமாறி விட்டு, அதன் மூலையிலே சாணத்தையும் சிறிது வைப்பதற்குப் பெயர் விருந்தோம்பலா? எதற்காக நான் இருக்கிறேன்? எதற்காகக் கழகத் தலைமை இருக்கிறது? மாவட்டத்திற்கு மாவட்டம் இது போன்றதொரு நிலைமை உருவானால் அதற்கு எங்கே எல்லை?

தம்பி பழனிமாணிக்கம் தஞ்சையிலே பேட்டி கொடுத்து விட்டு, அவரது மனச்சாட்சியே உறுத்திய காரணத்தால் நேற்றிரவே அவசர அவசரமாகச் சென்னை வந்து என்னைச் சந்தித்து என்ன காரணத்தால் அந்தப் பேட்டியைக் கொடுக்க நேரிட்டது என்பதை என்னிடமும், துணைப் பொதுச் செயலாளர் துரைமுருகனிடமும், அமைப்புச் செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவனிடமும் விளக்கினார்.

இந்தத் தம்பிகள் இருவருமே ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் - இன்னும் சொல்லப் போனால் நாடாளுமன்றத்தில் நீண்ட கால அனுபவம் உள்ளவர்கள் - இருவருமே தம்பி முரசொலி மாறனின் தயாரிப்புகள்! கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு

நாடாளுமன்றத்தில் ஒரு விவாதம் - அதாவது தமிழகத்திற்கு வர வேண்டிய ஒரு திட்டம் மேற்கு வங்கத்திற்கு எடுத்துச் செல்லப்படுகிறது என்பதைப் பற்றி தம்பி டி.ஆர். பாலு காரசாரமாக ஆளுங் கட்சியைத் தாக்கிப் பேசிக் கொண்டிருக்கிறார். அப்போது மூன்றாவது வரிசையிலே இருந்த மேற்கு வங்கத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், முதல் வரிசையிலே இருந்த தம்பி டி.ஆர். பாலுவைத் தாக்குவதற்காக வேகமாக வருகிறார்கள். ஆனால் அவர்கள் பாலுவை நெருங்குவதற்கு முன்பாக, ஐந்தாவது வரிசையிலே அமர்ந்திருந்த பழனிமாணிக்கம் முதல் வரிசைக்கு ஓடி வந்து, டி.ஆர். பாலுவிற்கு அரணாக அவர் முன்பு நின்று கொண்டு மேற்கு வங்க நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தடுத்தார்! அந்த உணர்வு இன்று எங்கே போய் விட்டது? "ஊரிடத்துப் பகை என்றால் உறவிடத்துப் போயுரைப்பேன்; உறவிடத்தே பகை என்றால், யாரிடத்துப் போயுரைப்பேன்?" என்ற நிலையில் நான் நிம்மதி இழந்திருக்கிறேன்! பாலுவிற்காக பழனிமாணிக்கம் அல்ல - பழனிமாணிக்கத்தைத் தாக்குவதற்கு அங்கே யார் முற்பட்டிருந்தாலும், பழனிமாணிக்கத்தை விட வேகமாக ஓடி வந்து பாதுகாக்கக் கூடியவர் தான் டி.ஆர். பாலு! என்ன செய்வது? அதைத்தான் அண்ணா "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்றார். "நீர் இடித்து நீர் விலகாது" என்பது முதுமொழி அல்லவா? மறந்து விடாமல் அதை நினைப்போம்; மறந்திருந்தாலும் மீண்டும் அதை நினைப்போம்! கட்டுப்பாடு போற்றி, கழகத்தை உயிரெனக் காப்போம்!

அன்புள்ள,

மு.க.

23-10-2012

3666. தாய்த் தமிழகத்தின் தவிப்பு!

உடன்பிறப்பே,

இலங்கையிலே தமிழர்கள் பல ஆண்டுகளாகப் படுகின்ற எல்லையில்லாத - எண்ணற்ற துயரங்கள் குறித்து, நம்மைப் பற்றி யார் குறை சொன்ன போதிலும், மற்றவர்களின் பாராட்டுக்காக நாம் காத்திருக்காமல், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வகையில், 1956ஆம் ஆண்டு முதல் ஆட்சியிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும், தொடர்ந்து நம்மால் முடிந்த அளவிற்கு குரல் கொடுத்து வருகிறோம் என்பதை உண்மையை நேசிப்பவர்கள் உணர்ந்தே இருப்பார்கள். நமது பல்வேறு கோரிக்கைகளுக்கு இந்திய அரசு உதவிட முன் வருவதாக உறுதி கூறிய போதிலும், உலக நாடுகளின் மத்தியில் நடுநிலை நாடுகளில் ஒன்று இந்தியா என்ற பெயரைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவாவது, சிலவற்றில் விட்டுக் கொடுத்துப் போகிறதோ இந்திய அரசு என்று சிலர் சந்தேகம் கொள்ளக் கூடிய அளவிலேதான் செயல்படுகிறது.

உதாரணமாக இலங்கைத் தமிழர்களைக் கொல்வதற்குக் காரணமாக இருக்கும் இலங்கை ராணுவத்தினருக்கு இந்தியாவிலே பயிற்சி அளிக்கக் கூடாது என்பதுதான் தமிழகத்திலே உணர்வுள்ள தமிழர்களின் கோரிக்கை, வேண்டுகோள். அந்த வேண்டுகோளை இந்திய அரசிடம் நாம் பல முறை விடுத்துள்ளோம். ஆனால் சிங்கள அரசின் அமைச்சரே நம்மிடம் சவால் விடுகின்ற அளவிற்கு, இலங்கை ராணுவத்திற்கு இந்தியாவிலே பயிற்சி அளிக்கச் செய்தே தீருவோம், முடிந்தால் தமிழகத்திலே உள்ளவர்கள் தடுத்துப் பார்க்கட்டும் என்கிறார். இந்திய அரசும் சிங்கள அமைச்சருக்கு நேரடியாகப் பதில் சொல்ல முன் வரவில்லை. இந்தியாவிலே இலங்கை ராணுவத்திற்கு பயிற்சி அளிக்க மாட்டோம் என்று இந்திய அரசின் சார்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்க அவர்களால் இயலவில்லை. **இலங்கையில் படுகொலைக்கு ஆளான பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களும்,**

இந்தியர்கள்தான் என்று ஏற்றுக் கொள்ள இந்திய அரசு இன்னமும் தயாராக இல்லைபோலும்!

இந்தியாவின் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளும் சிங்கள அரசு, மறைமுகமாகவோ அல்லது தெரிந்தும் தெரியாமலோ சீனாவின் உதவியை, பாகிஸ்தானின் துணையை தொடர்ந்து பெற்றுக் கொண்டுதான் உள்ளது. எந்த அளவிற்குச் சிங்கள அரசு இலங்கைத் தமிழர்களுக்கு விரோதமாகச் செயல்படுகிறது என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாக 22-10-2012 "இந்து" நாளிதழில் முதல் பக்கத்தில் ஒரு கட்டுரையை பிரபல பத்திரிகையாளர்கள் நிருபமா சுப்ரமணியனும், ஆர்.கே. ராதாகிருஷ்ணனும் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கட்டுரைக்கான தலைப்பே, "விடுதலைப் புலிகள் இறுதியாக போரிட்ட இடத்திற்கு அருகிலேயே - தமிழர்களை வெறுப்பேற்றும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வெற்றி நினைவுச் சின்னம்" என்பதாகும். அதிலே உள்ள சில செய்திகள் வருமாறு:

"இலங்கையில் வடக்குப் பகுதியின் மையத்தில் - 2009ஆம் ஆண்டு நடந்த உச்சக்கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட ரத்தம் தோய்ந்த பூமிக்கு அருகில் - அந்தப் போரில் இலங்கை அரசு பெற்ற வெற்றியை உணர்த்திடும் வகையில் ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு போரின் போது கொடுமையான நிகழ்ச்சிகள் நடந்த இடத்தில் கருங்கல் குன்று ஒன்றின் மீது இலங்கை ராணுவத்தின் ராணுவ வீரர் ஒருவர் முகத்தில் பெருமகிழ்ச்சியோடும், பெருமிதத்தோடும் ஒரு கையில் துப்பாக்கி ஏந்தியபடி - மற்றொரு கையில் இலங்கையின் தேசியக் கொடியை ஏந்தியபடி சிலை ஒன்று பொறிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தின் ஒவ்வொரு மூலையிலும் கருங்கல்லால் செதுக்கப்பட்ட இலங்கை அரசின் தேசிய விலங்கான "சிங்கம்" நிறுவப்பட்டுள்ளது.

இந்தப் போர் நினைவுச் சின்னத்திற்கு அருகில், போர் அருங்காட்சியகம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டையும் பார்ப்பதற்காக சிங்களச் சுற்றுலா பயணியர் நாள்தோறும் வந்து சென்ற வண்ணம் உள்ளனர். போர் அருங்காட்சியகத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றிய துப்பாக்கி உள்ளிட்ட போர் ஆயுதங்கள், படகுகள் போன்றவை காட்சிப் பொருள்களாக வைக்கப் பட்டுள்ளன. விடுதலைப்

புலிகளின் தலைவர் பிரபாகரன் தங்கியிருந்த மறைவிடமும், கடல் புலிகள் பயிற்சிக்காகப் பயன்படுத்திய நீச்சல் குளமும் காட்சிப் பொருள்களாக ஆகியிருக்கின்றன. நீர் மூழ்கிக் கப்பல்கள், விடுதலைப் புலிகள் கைப்பற்றிய ஜோர்டான் நாட்டுக் கப்பல் போன்றவையும் அங்கே காட்சி அளிக்கின்றன.

புதுக் குடியிருப்பு சந்திப்பிலிருந்தே போர் நினைவுச் சின்னத்திற்கு போவதற்கு ராணுவத்தினர் தாங்களே பயணிகளை வழிகாட்டி அழைத்துச் செல்கின்றனர். இந்தச் சந்திப்பிலிருந்து 4.5 கிலோ மீட்டர் தொலைவில் முல்லைத் தீவுக்குச் செல்லும் சாலையில், போர் அருங்காட்சியகத்தைப் பற்றிய அறிவிப்புப் பலகை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அந்த நினைவுச் சின்னத்திற்கும், போர் அருங்காட்சியகத்திற்கும் சென்றால், சிங்கள ராணுவ வீரர்களே ஒவ்வொன்றைப் பற்றிய விளக்கத்தையும், பின்னணியையும் சிங்கள மொழியிலே விவரிக்கிறார்கள்.

சில காட்சிப் பொருள்கள், ஒரு கூடத்திலும்; சில பொருள்கள் ஓர் அறையிலும்; மற்றவை திறந்த வெளியிலும் வைக்கப்பட்டுள்ளதாம். நினைவுச் சின்னத்திற்கு அருகில் உள்ள பெட்டிக்கடையை நடத்தும் சிங்கள ராணுவ வீரர் ஒருவர், நாள்தோறும் 500 முதல் 700 பேர் அங்கு வருவதாகவும், வார இறுதியில் 2000 பேர் வருவதாகவும் தெரிவித்தார்.

250 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து நினைவுச் சின்னத்தைப் பார்க்க வந்திருந்த சிங்களக் கல்லூரி மாணவர் ஒருவர், "எங்களுடைய ராணுவத்தைப் பற்றி நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். அதனாலே தான் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்" என்றாராம்.

போர் நினைவு சின்னத்திலிருந்து முல்லைத்தீவு வரையில் உள்ள சாலையின் இருமருங்கிலும் போரின் காரணமாக இடம் பெயர்ந்த தமிழர்கள் அவசரம் அவசரமாக விட்டுச் சென்ற துணிமணிகள், பாத்திரப் பண்டங்கள் போன்ற அனைத்தும் கீழே தாறுமாறாக இன்னமும் இறைந்து கிடக்கின்றனவாம்.

இந்தப் போர் நினைவுச் சின்னம் தமிழர்களின் கண்களில் விரலை விட்டுக் குத்துகின்ற அளவில் வேண்டுமென்றே திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளதாம். இப்படிச் சொன்னவர், போரின் போது பெரிதும் பாதிக்கப்பட்ட ஒரு தமிழ்க் குடும்பத்தைச்

சேர்ந்தவர். அவர் தன்னுடைய தந்தையை சிறையிலிருந்து விடுவிப்பதற்கு நிறைய பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருந்ததாம். "எவ்வளவோ தியாகங்களைச் செய்தும் கூட, தமிழர்களாகிய நாங்கள் எங்கிருக்கிறோம் என்றே தெரியாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்" என்று அவர் கண்ணீரோடு புலம்பினார்.

போரில் பலியாகி, அழிந்து போன அப்பாவித் தமிழர்களுக்கு எந்த நினைவுச் சின்னமும் அங்கே கிடையாது. ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் போரின் போது கொல்லப்பட்டதையே இலங்கை அரசு ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை.

போர் நினைவுச் சின்னமும், போர் அருங் காட்சியகமும் இலங்கை அரசின் நாகரிகமற்ற செயல். இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாகச் சொல்லிக் கொள்ளும் சமாதான முயற்சிக்கு, இந்தச் சின்னங்கள் எந்த வகையிலும் உதவிகரமாக இல்லை.

இலங்கையின் வடக்குப் பகுதியில் சிங்கள ராணுவம் தொடர்ந்து கண்காணிப்புப் பணியில் இன்னமும் இருந்து வருகிறது என்பதற்கு அடையாளம்தான், இந்தப் போர் நினைவுச் சின்னமும், அருங்காட்சியகமும் ஆகும். இது கண்டு போரினால் பாதிக்கப்பட்ட அப்பாவித் தமிழர்கள் அனைவரும் பெரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளார்கள். இலங்கை ராணுவத்தின் 19 பிரிவுகளில், 14 பிரிவுகள் வடக்குப் பகுதியில் மட்டும் இருந்து வருகின்றன. ராணுவ முகாம்கள் அனைத்தும் "கண்டோன்மென்ட்" பகுதிகளாக மாற்றப்பட்டு அங்கே ராணுவ வீரர்கள் தமது குடும்பங்களோடு குடியேறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தமிழர்கள் வாழ்ந்து வரும் பகுதிகள் இப்படி சிங்களர்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாவது கண்டு, தமிழர்கள் கவலை மிகக்கொண்டு கண்ணீர் சிந்துகின்றனர்.

புதுக்குடியிருப்பு - முல்லைத் தீவு - ஏ.9 நெடுஞ்சாலை போன்றவற்றில் காணப்படுவதைப் போல இலங்கை ராணுவத்தின் நடமாட்டம் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் வெளிப்படையாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இருந்த பல்லாயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் பலாளி விமான தளத்திற்கு அருகிலே உள்ள "கடும் கண்காணிப்புப் பகுதி"க்கு

இடம் பெயர் வைக்கப்பட்டுள்ளார்கள். அகதிகள் முகாம்களில் வாடிக் கொண்டிருக்கும் இந்தத் தமிழர்கள் என்றாவது ஒரு நாள் தங்களுடைய சொந்த இடத்திற்குத் திரும்ப மாட்டோமா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் இலங்கை ராணுவத்தினர் விவசாயம் செய்து காய்கறிகள் போன்றவற்றை விளைவித்து, பலனடைந்து பரவசப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துத் தமிழர்கள் குமுறுகின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குச் செல்லப் பயன்படும் ஏ.9 நெடுஞ்சாலை முழுதும் புத்தவிகாரங்கள் புதியதாக முளைத்திருக்கின்றன. இலங்கை ராணுவத்தினரால் நடத்தப்படும் ஓட்டல்களும், கடைகளும் வழிநெடுகத் தோன்றியிருக்கின்றன."

உடன்பிறப்பே, எந்த அளவிற்கு ராஜபக்ஷே தலைமையிலான இலங்கை அரசு, இன்னமும் தமிழர்களை அவமானப்படுத்தி அடக்குவது என்ற எண்ணத்தோடு; விடுதலைப் புலிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து முப்பதாண்டுகளுக்கு மேலாக போரிட்ட இடத்திலே - அப்பாவித் தமிழர்கள் கால்நடைகளைப் போல வேட்டையாடப்பட்ட இடத்திலே - தங்கள் வெற்றியை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்ற அளவிற்கு நினைவுச் சின்னம் அமைத்து, அவற்றை அன்றாடம் நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் வந்து பார்த்துப் பரவசப்படுகிறார்கள் என்பதையெல்லாம் படிக்கும்போதே நம்முடைய நெஞ்சம் பதறுகிறது என்றால், அந்தக் கொடுமையை அங்கே அன்றாடம் காணுகின்ற ஈழத் தமிழர்களின் மனம் என்ன பாடுபடும்? இப்படிப்பட்ட செயல்கள் எல்லாம் அங்கேயுள்ள தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி வாழச் செய்யும் முயற்சிகள்தானா?

உலக நாடுகள் ஒருபோதும் அங்கீகரிக்க ஒப்புக் கொள்ள முடியாத போர்க் குற்றங்கள் அனைத்தையும் மனசாட்சி உறுத்தல் சிறிதுமின்றிப் புரிந்து விட்டு; ஐ.நா. போன்ற சர்வதேச மன்றங்கள் கொஞ்சங்கூடச் சகித்துக் கொள்ளவியலாத மனித உரிமை மீறல்களை எல்லையில்லாத அளவுக்குச் செய்து விட்டு; மனித மனமோ - மனித நேயமோ சிறுதுளியுமின்றி மிகப் பெரிய இனப் படுகொலையை நிறைவேற்றிவிட்டு; பல்லாயிரக்கணக்கான தமிழ் இளம் பெண்டிரை விதவையராக்கி விட்டு; நீண்ட நெடிய வரலாறும், பண்பாட்டுப் பாரம்பரியமும் கொண்ட தமிழ் தேசிய இனத்தை தரணியெங்கும் தெருக்களிலே அலைய வைத்து விட்டு;

போரில் வெற்றிபெற்று விட்டதாகக் கருதிக் கொண்டு, போலிப் பூரிப்போடு, போர் நினைவுச் சின்னம் எழுப்பியிருக்கிறது. "சிங்களப் பேரினவாதம்"!

ஈழத் தமிழர்களின் தியாக பூமியில் சிங்களர்கள் எழுப்பியுள்ள இந்த நினைவுச் சின்னம், உலகத் தமிழர்களின் நெஞ்சங்களிலெல்லாம் நெருப்பைக் கொட்டும் என்று தெரிந்தே, வேண்டுமென்றே அவர்களின் உள்ளங்களையெல்லாம் நோகச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டுள்ளது என்பதுதான் உண்மை.

இலங்கையிலே ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட வேண்டுமென்று பெரிதும் விரும்புகின்ற ஐ.நா. மன்றம் போன்ற சர்வதேச நிறுவனங்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கடந்த மாதம் நாம் நடத்திய "டெசோ" மாநாட்டிலே இந்தக் கருத்துக்களை யெல்லாம் உள்ளடக்கித்தான் பதினான்கு தீர்மானங்களை நிறைவேற்றினோம்.

நமது "டெசோ" மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானங்களைத்தான் இந்த மாதக் கடைசியிலே நமது கழகப் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினும், நாடாளுமன்றக் கழகக் குழுவின் தலைவர் தம்பி டி.ஆர். பாலுவும் எடுத்துச் சென்று ஐ.நா. சபையிலே ஒப்படைக்கவிருக்கிறார்கள். இதற்குப் பிறகாவது, இலங்கைத் தமிழர்களுக்கு விடிவு காலம் பிறக்காதா, அவர்களின் நல்வாழ்வுக்காக நாளும் நாளும் ஏங்கிக் கொண்டிருக்கும் உலகத் தமிழர்களின் துயரம் நீங்காதா என்ற ஏக்கத்தோடுதான் தாய்த்தமிழகம் தவித்துக் கொண்டிருக்கின்றது!

அன்புள்ள,

மு.க.

24-10-2012

3667. மின்வெட்டு தீரும் நாள் எந்நாளோ?

உடன் பிறப்பே,

காவல் துறை, சிறைத்துறை, தீயணைப்புத் துறையில் பணியாற்றும் சீருடை பணியாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் பணிக்கு அடிக்கல் நாட்டிய நம்முடைய முதல் அமைச்சர் ஜெயலலிதா அவர்கள் மின்சாரத்தைப் பற்றியும், மின் வெட்டைப் பற்றியும் விலாவாரியாகப் பேசி, மத்திய அரசையும், கடந்த கால கழக அரசையும் எந்த அளவிற்குக் குறை கூற முடியுமோ அந்த அளவிற்குத் தாக்கிப் பேசி, இறுதியாக அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்று முடித்திருக்கிறார். ஆனால் ஆட்சிக்கு வருவதற்கு முன் ஊருக்கு ஊர் பேசிய கூட்டங்களில் ஜெயலலிதாவும் அவரது கட்சியினரும் என்ன சொன்னார்கள்? ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில் மின் வெட்டு இல்லாமல் செய்வோம் என்று சொல்லிவிட்டுத்தான் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் இப்போது அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்று சொல்லுகிறார். எப்போது வேண்டுமானாலும் தீர்க்கட்டும்! ஆனால் தேவையில்லாமல் மத்திய அரசின் மீதும் கழக ஆட்சியின் மீதும் குறை கூறுவது நியாயம் தானா?

ஜெயலலிதாவின் நீண்ட உரையில் கழகத்தின் மீது சாட்டியுள்ள குற்றச் சாட்டுகளுக்கு மட்டும் நான் பதில் கூறுகிறேன். அம்மையார் எதையெடுத்தாலும் துரோகம் என்று சொல்லாவிட்டால் பேச்சே முழுமை பெறாது. காவிரியை எடுத்துக் கொண்டாலும், மின்சாரத்தை எடுத்துக் கொண்டாலும் நான் செய்த துரோகம் ஒன்று, இரண்டு என்று சொல்லத் தவறுவதில்லை. பொதுவாக ஜெயலலிதா துரோகத்தைப் பற்றிப் பேசலாமா? இவரை விடவா துரோகத்திற்கு எடுத்துக்காட்டாக வேறொருவர் திகழ முடியும் ? தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே தெரிந்த விவரம் ஆயிற்றே? “எனக்கு எல்லாமே எம்.ஜி.ஆர்.தான் என்று சொன்ன ஜெயலலிதா, எந்த எம்.ஜி.ஆர்., அரசியலிலே ஜெயலலிதாவை அழைத்து வந்து கொள்கை பரப்புச் செயலாளராக

ஆக்கி, மாநிலங்களவையில் உறுப்பினராக்கி உலகத்திற்கு அறிமுகப் படுத்தி வைத்தாரோ, அதே எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றித் தன் கைப்பட ஆங்கிலத்தில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தை மக்கள் குரல் நாளேடு அப்படியே நகல் எடுத்து வெளியிட்டு, தமிழகத்திலே முதல் துரோகி என்பதைப் பட்டை உரித்துக் காட்டியிருக்கிறதே! இவர் என்னைப் பற்றி துரோகம் என்று கூறுவது கேலிக்கூத்து தானே?

ஏன்? இன்னமும் அவருடைய வீட்டிலே உடன்பிறவா சகோதரியாக உலா வந்து கொண்டிருக்கும் சசிகலாவை கட்சியை விட்டு நீக்கி - அவரது உறவினர்களை யெல்லாம் சிறையிலே தள்ளி - பின்னர் அவர்களை எல்லாம் விடுவித்ததற்குப் பெயர் துரோகம் இல்லையா? ஏன்? அ.தி.மு.க.வின் வளர்ச்சிக்காக ஜெயலலிதாவுடன் பணியாற்றிய எத்தனையோ மூத்த தலைவர்கள், பிறந்த நாள் விழா நடத்திக் கொண்ட குற்றத்திற்காகவே என்ன ஆனார்கள் என்பதைத் தமிழகம் அறியாதா? எனவே இனியாவது ஜெயலலிதா தனது அறிக்கையிலோ, பேச்சுக்களிலோ இந்த "துரோகம்" என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருப்பது அவருக்கே நல்லது!

அடுத்து, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும், வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரத்தை வாங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்ததாகவும், குஜராத் மாநிலத்தோடு மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போட்டதாகவும், மின்சாரத்தை விலை கொடுத்து வாங்கியும் தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கவே வழியில்லாத நிலைதான் தற்போது உள்ளது என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இதைவிட முன்யோசனையற்ற செயல்பாடு ஒன்று இருக்க முடியுமா? ஒரு மாநிலத்திடம் மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போடும்போதே, அதை வாங்க முற்படும்போது, அதை வாங்கினால் தமிழகத்திற்குக் கொண்டு செல்ல வழி இருக்கிறதா என்று பார்க்காமலே அ.தி.மு.க. அரசு ஒப்பந்தம் செய்தது என்றால்; அது, எவ்வளவு பெரிய தவறு? ஒப்பந்தம் போட்ட போதே, மின் வாரியத்திலே உள்ள பொறியாளர்கள் எல்லாம், குஜராத்திலே மின்சாரம் வாங்கினால் அதை ஜெயலலிதா எப்படிக் கொண்டு வந்து சேர்க்கப் போகிறார் என்று கிண்டல் செய்து ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்களாம். இதுகூடத் தெரியாத நிலையில் குஜராத் மாநிலத்தோடு மின்சாரம் வாங்க ஒப்பந்தம் செய்யக் காரணமாக இருந்தவர்கள் யார்? அதிகாரிகள் நிச்சயம் ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்களே?

அதுபோலவேதான் மத்திய அரசிடமிருந்து மின்சாரத்தைப் பெறுவதிலும், அவர்கள் கொடுக்க முன் வந்தால்கூட, அந்த மின்சாரத்தை எப்படி தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பது என்ற திட்டம் இல்லாமல், அதைப் பற்றி யோசிக்காமல், பிரதமருக்கும், மத்திய அரசுக்கும் கடிதம் எழுதிவிட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமா?

மத்திய அரசைச் குறை கூறும் முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்து இந்த 18 மாதங்களில் எத்தனை முறை டெல்லி சென்று தமிழகத்தின் மின் தேவையைப் பற்றிப் பிரதமருடனோ, அல்லது துறையின் அமைச்சருடனோ பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்? ஏன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை?

அவருக்குத் தனியாக முடியாவிட்டால்கூட, சட்டப் அனைத்துக் கட்சித் அழைத்துப் பேசி, அவர்களை கொண்டு போய் டெல்லியிலே கேட்டுக் கொண்டது அமைச்சருக்கே அதிலே அவ்வல இல்லை என்கிற போது, மந்திரிகள் அக்கறை காட்டம் அவர்கள் மீது குற்றம் கூறுவத நியாயமோ; தெரியவில்லை !

அவருக்கு தனியாகச் சென்று கேட்க முடியாவிட்டால் கூட, சட்டப்பேரவையிலே உள்ள அனைத்து கட்சித் தலைவர்களையும் பேசி, அவர்களையும் அழைத்துக் கொண்டுபோய் டெல்லியிலே ஒரு முறையாவது கோட்டுக்கொண்டது உண்டா? முதல் அமைச்சருக்கே அதிலே அவ்வளவு அக்கறை இல்லை என்கிற போது, தி.மு.க. மத்திய மந்திரிகள் அக்கறை காட்டவில்லை என்று மீது குற்றம் கூறுவது எந்த விதத்தில் நியாயமோ; தெரியவில்லை!

கடந்த கால ஆட்சியிலே ஏன் “காரிடார்” அமைக்கவில்லை என்று கேள்வி கேட்கிறார் ஜெயலலிதா! அப்போது தமிழகத்திலே தற்போது ஏற்றப்பட்டுள்ளதைப்போல மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்குமேயானால், அப்போதே கழக அரசு மத்திய அரசிடம் “காரிடார்” அமைப்பதைப் பற்றிப் பேசியிருக்கும். ஆனால் கழக ஆட்சிக் காலத்திலே இந்த அளவிற்குப் பற்றாக்குறை இல்லை. எனவே “காரிடார்” அமைக்கத் தேவையும் ஏற்படவில்லை. இந்த அடிப்படைக் காரணமே புரியாமல், கழக ஆட்சிக் காலத்தில் காரிடார் அமைக்க ஏன் முயற்சிக்கவில்லை என்று ஜெயலலிதா போலீசார் மத்தியிலே போய்ப் பேசினால் என்ன செய்வது? முதலில் ஒரு முதலமைச்சர் எங்கே, என்ன பேசுவது என்று தெரிய வேண்டாமா? எங்கே சென்றாலும் ஒரு குட்டிக்கதை, எதிர்க் கட்சிகளைத்

தாக்குவது என்ற போக்கினை எப்போதுதான் திருத்திக் கொள்ளப் போகிறார்?

கழகம் ஆட்சியிலே இருந்த 2006-2011ஆம் ஆண்டு காலத்தில் மின் உற்பத்திக்கு எதுவுமே செய்யவில்லையா? அதைப்பற்றியெல்லாம் எத்தனை கடிதங்கள், எத்தனை அறிக்கைகள் எழுதியிருக்கிறேன். முதலமைச்சர் அதை யெல்லாம் படிக்கவில்லையா? இருந்தாலும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 3136 கோடி ரூபாயில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரித்திட ஒரு திட்டம் கழக ஆட்சியில் 2-5-2007 அன்று தொடங்கப்பட்டதா இல்லையா? அந்தத் திட்டத்தின் மூலம் 2011ஆம் ஆண்டு இறுதியி லேயே மின்சாரம் கிடைத்திருக்க வேண்டும். அந்தத் திட்டத்தில் தாமதம் ஏற்பட யார் காரணம் ? 2011இல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அல்லவா?எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று 8-12-2006இல் 3 ஆயிரத்து 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது; அதன் உற்பத்தி 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கும். 8-12-2006 என்பது யாருடைய ஆட்சிக் காலம்? கழக ஆட்சிக் காலம் அல்லவா? அப்போது தொடங்கப்பட்ட திட்டம்தானே இது?

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய வகையில் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் 26-6-2007இல் தொடங்கப்பட்டது; இதன் உற்பத்தி 2011 மே திங்களில் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டியது, தற்போது விரைவில் மின்உற்பத்தி இங்கே தொடங்கும் என்று செய்தி வந்துள்ளது. 26-6-2007 யாருடைய ஆட்சிக் காலம்? கழக ஆட்சிக் காலம் அல்லவா?

உடன்குடியில் பி.எச்.ஈ.எல்., மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இணைந்து கூட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு திட்டங்கள் 15-10-2007இல் 8 ஆயிரத்து 362 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டன. இதில் ஒரு அலகு 2013ஆம் ஆண்டு மார்ச் திங்களிலும்; மற்றொரு அலகு 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் நடைமுறைக்கு வந்து உற்பத்தியைத் தொடங்கும். இந்தத் திட்டம் தி.மு. கழக ஆட்சியிலே நான் முதல்வராக இருந்த போது தொடங்கப்பட்ட திட்டம் அல்லவா?

வடசென்னை அனல் மின் நிலையத்திலேயே மேலும் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு திட்டம் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 14-7-2008இல் தொடங் கப்பட்டது. இதன் உற்பத்தி 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல், நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே விரைந்து நடவடிக்கை எடுக்கப்படாததால், இத்திட்டத்தில் மின் உற்பத்தி தாமதமாகிறது.

ஆயிரத்து 126 கோடி ரூபாய் செலவில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து, 183 மெகாவாட் இணை மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டம், 14-12-2009இல் தொடங்கப்பட்டது. 2006இல் தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு, வருங்காலத் தேவையை கருத்தில் கொண்டு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 2010-2011இல் 1400 மெகாவாட் மின்சாரமும், 2011-2012இல் 3316 மெகாவாட் மின்சாரமும், 2012-2013இல் 1222 மெகாவாட் மின்சாரமும், 2013-2014இல் 1860 மெகாவாட் மின்சாரமும் - ஆக மொத்தம் 7798 மெகாவாட் மின்சாரம் பல்வேறு மின் திட்டங்களின் மூலமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

இந்தப் புள்ளிவிவரங்கள், தி.மு. கழக ஆட்சியில் புதிதாக மின்சாரத்தை உற்பத்திச் செய்யக்கூடிய திட்டங்கள் எதையும் தொடங்கவில்லை என்ற ஜெயலலிதாவின் குற்றச்சாட்டிற்குத் தேவையான திடமான விளக்கமாக அமையுமென்று கருதுகிறேன்.

ஆனால் இதைப்போல அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் என்னென்ன திட்டங்கள் தொடங்கப் பட்டன என்பதை ஜெயலலிதா ஏன் தன்னுடைய நீண்ட பேச்சில் கூறவில்லை? மாறாக என்ன சொல்லுகிறார் என்றால், “நான் (ஜெயலலிதா) ஆட்சியில் இருக்கும்போதே பல பெரிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டி அவற்றிற்கு தேவையான ஆயத்த பணிகளை (?) செய்ய நான் நடவடிக்கை எடுத்தேன். அந்த நேரத்தில் தேர்தல் வந்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டது” என்று பேசியிருக்கிறார். இது என்ன ஏமாற்றம்? ஆயத்தப் பணிகளை செய்ய ஜெயலலிதா நடவடிக்கை எடுத்தாராம். அதற்குள் தேர்தல் வந்து விட்டதாம்? ஏன் ஆட்சிக்கு வந்தவுடனே ஆயத்தப் பணிகளைச் செய்து, ஆட்சியிலே இருந்தபோதே, தேர்தல் வருவதற்குள்ளாகவே மின் உற்பத்தியை தொடங்கி இருக்கலாமே? தி.மு. கழக

ஆட்சியிலே அப்படித்தானே 2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும், உடனடியாக ஆயத்தப் பணிகளைச் செய்து, 2006ஆம் ஆண்டிலும், 2007ஆம் ஆண்டிலும், 2008ஆம் ஆண்டிலும் மின் உற்பத்திக்கான திட்டங்கள் தொடங்கப்பட்டன. அப்படி தொடங்கிய திட்டங்கள் மூலமாகத்தானே இன்னும் இரண்டொரு மாதங்களில் தமிழ்நாட்டிற்கு மின்சாரம் கிடைக்கவுள்ளது. அதற்கெல்லாம் காரணம் தி.மு. கழக ஆட்சியா? அல்லவா?

2001 முதல் 2006 வரையிலான தனது ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின் வெட்டே இல்லாத மாநிலமாக இருந்தது என்று ஜெயலலிதா சொல்லி பெருமைப்பட்டுக் கொள்கிறார். 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே தமிழ்நாட்டில் மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா? இல்லையா? அதுபோலவே 3-10-1982 முதல் 26-7-1984 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா இல்லையா? அது என்னுடைய ஆட்சிக் காலம் அல்ல, எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த காலம் என்று ஜெயலலிதா சொல்கிறாரா? எப்படியோ அதுவும் அ.தி.மு.க. ஆட்சிக் காலம்தான். 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அதிகத் தொழிற்சாலைகளை தமிழகத்திலே தொடங்காமல் இருந்திருந்தால் மின் கட்டுப்பாட்டு முறை வந்திருக்காதுதான். அதற்காக தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்காமல் அ.தி.மு.க. அரசைப் போல ஓர் அரசு இருக்க முடியுமா?

கடந்த ஆண்டு ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்த முதல் அமைச்சர் ஜெயலலிதாதற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம் என்றும், ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்றும் சொன்னார். அந்தத் துறையின் அமைச்சர், நத்தம் விசுவநாதன் "இந்தியா டுடே" இதழுக்கு 2012, பிப்ரவரி மாதம் அளித்த பேட்டியில், "இந்த மார்ச் முதல் மே மாதம் வரையில் மட்டும் தான் தமிழகம் மின் பற்றாக்குறையை அனுபவிக்கும். இந்த மூன்று மாதங்களை மட்டும் பொறுத்துக் கொண்டால் தமிழகத்தில் மின் பற்றாக்குறையே இருக்காது" என்று சொன்னார். ஆனால் நேற்றைய பேச்சில் முதலமைச்சர் ஜெயலலிதா அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இவற்றில் எதுதான் உண்மை? எது எப்படியோ; தமிழ்நாட்டில் மின் வெட்டு தீரும் நாள் எந்நாளோ?

அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றப்படும் நாளே அந்நாள்!

இந்த வார ஜூ.வி. இதழிலே கூட "ஆற்காடு வீராசாமியின் மின்வெட்டுக்கும், நத்தம் விஸ்வநாதனின் மின்வெட்டுக்கும் என்ன வித்தியாசம்" என்ற கேள்விக்கு, "ஆற்காடு வீராசாமிக்கு கொஞ்சமாவது உறுத்தல் இருந்தது, தன்னால் தான் தி.மு.க. ஆட்சிக்கு கெட்ட பெயர், ஒருவேளை தோற்றால், இந்த மின் வெட்டுதான் முக்கியமான காரணம் என்று! ஆனால் நத்தம் விசுவநாதனுக்கு அந்த மாதிரி எந்தக் கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை. அது வேற டிபார்ட்மென்ட் மேட்டர். அதுவும் பக்கத்து ஸ்டேட் மேட்டர் என்று நினைப்பது போலவே மெத்தனமாக இருக்கிறார்" என்று எழுதியுள்ளது. எனவே தமிழகத்தின் மின்வெட்டை ஆட்சியாளர்கள் இந்த அளவில் நமக்கு என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கழக ஆட்சியில் வெறும் இரண்டு மணி நேரம் மட்டுமே இருந்த மின் வெட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் தற்போது தமிழக வரலாறு இதுவரை கண்டிராத கொடுமையாக பதினாறு மணி நேரம் மின் வெட்டு, கடும் மின் வெட்டுப் பிரச்சினையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி யிருக்கும் பொது மக்கள் தினமும் தெருவுக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். பல நூறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழந்து வாடிக் கொண்டிருக்கிறார்கள். உற்பத்திக்குப் பாதிப்பு ஏற்பட்டு மாநிலப் பொருளாதார நிலை தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இக்கட்டான இந்த கால கட்டத்தில்; கழகத்தின் சார்பில் தரப்படும் விளக்கங்கள் ஒருபுறமிருக்க - ஆட்சிப் பொறுப்பிலே உள்ள அ.தி.மு.க., மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க, சிந்தித்து, முறையாக வழி காண்பதை விட்டு விட்டு; வீண் குற்றச்சாட்டுகளை மற்றவர்கள் மீது அடுக்கிக் கொண்டு காலத்தைக் கழிப்பது கண்டு யாரும் காலவரையறையின்றி பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து செயலாற்றுவதே சிறப்பு!

அன்புள்ள,

மு.க.

28-10-2012

3668. ஐ.நா. பயண வெற்றிக்கு; அனைவரும் வாழ்த்துவோம்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் தளபதி தம்பி மு.க.ஸ்டாலினும், நாடாளுமன்ற கழகக்குழுத் தலைவர் தம்பி டி.ஆர்.பாலுவும் இன்று (31-10-2012) விடியற்காலையில் அமெரிக்காவுக்கு "டெசோ" இயக்கத்தின் சார்பாக - திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூதுவர்களாக - புறப்பட்டுச் சென்றிருக்கிறார்கள். நேற்றிரவு இருவரும் என்னிடம் வந்து விடை பெற்றுச் சென்றார்கள். அமெரிக்க நாட்டில் ஐ. நா. சபையில் அவர்கள் அளித்திட இருக்கின்ற அறிக்கைகளின் நகல்களையும், சி.டி. போன்றவற்றையும் என்னிடம் காட்டியதோடு, எனக்கும் அதிலே ஒரு பிரதியை அளித்துச் சென்றார்கள். இரவு முழுவதும் திரும்பத் திரும்ப அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன். நானும், "டெசோ" உறுப்பினர்களும் அமர்ந்து வரி வரியாகப் படித்து, விவாதித்து, தக்கத் திருத்தங்களைச் செய்து, மிகுந்த கவனத்தோடு தயாரிக்கப்பட்ட அறிக்கைதான் அது. 4-9-2012 அன்று செய்தியாளர்களுக்கு நான் அளித்த பேட்டியில், "டெசோ" மாநாட்டுத் தீர்மானங்களை எல்லாம் நாங்கள் டெசோ மூலமாக ஐ.நா. மன்றத்திற்கு எடுத்துச் செல்லவிருக்கிறோம், இன்னும் ஓரிரு வார காலத்தில் ஐ.நா. மன்றத்தில் அந்தத் தீர்மானங்களை மு.க.ஸ்டாலினும், டி.ஆர். பாலுவும் சென்று கொடுப்பதாக ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. அதற்கான தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் எந்தத் தேதியில் இருவரும் ஐ.நா. மன்றத்திற்கு அந்தத் தீர்மானங்களைக் கொண்டு சேர்க்கவிருக்கிறார்கள் என்பதை வெளியிடுகிறேன்" என்று சொல்லியிருந்தேன். அதன்படியேதான் இருவரும் இன்று ஐ.நா. மன்றத்தில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை "டெசோ" இயக்கத்தின் சார்பில் கொண்டு சேர்க்கப் புறப்பட்டிருக்கிறார்கள்.

பொருளாளர் தளபதி தம்பி மு.க. ஸ்டாலின் பற்றி நான் எதுவும் புதிதாக எழுதத் தேவை யில்லை. நெருக்கடி நிலை நேரத்தில் மு.க. ஸ்டாலின் "மிசா" சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டபோது, நான் கழகத் தலைவர் என்ற நிலையிலே அல்ல, அவருடைய தந்தை என்ற முறையில் தனியாக அமர்ந்து கலங்கினேன். அப்போது ஸ்டாலின் திருமணமாகி ஐந்து மாதங்கள் மட்டுமே கடந்த நிலையில், ஸ்டாலினின் மனைவி கண்ணீர் நிறைந்த கண்களோடு "மாமா" என்று கதறிய போது, பதில் சொல்ல முடியாமல், ஆறுதலும் வழங்கிட வார்த்தை கிடைக்காமல் வாடித்தவித்தேன். இருந்தாலும் என் மகனும், ஜனநாயக வழியில் பொதுப்பணி ஆற்றியதற்காகச் சிறைக்குச் செல் கிறாரே என்பதை எண்ணி உள்ளுக்குள் பெருமிதமே ஏற்பட்டது. பின்னர் ஸ்டாலின் மேயராகி, சட்டப்பேரவை உறுப்பினராகி, கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராகி, தமிழகத்தின் துணை முதலமைச்சராகி, தற்போது கழகத்தின் பொருளாளராகத் தமிழகமெங்கும் நான் செல்ல வேண்டிய நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சென்று கழகத்தினரின் வேண்டுகோள்களைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவில் நாளெல்லாம் கழகம், கழகம் என்று பம்பரம்போல் சுற்றிச் சுழன்று பாடுபடுவதைப் பார்த்து; இளம்வயதில் நாம் உழைத்ததைப் போலவே நம் மகனும் உற்சாகத்தோடு உழைப்பதை எண்ணி; மனதிற்குள் பெரும் மகிழ்ச்சி அடையும் நான்; நேற்றைய தினம் அமெரிக்க நாட்டிற்கு ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காகப் பயணம் மேற்கொள்ள என்னிடம் விடை பெற்றுக் கொண்டபோது; "மிசா" கைதியாக ஸ்டாலின் சிறைக்குப் புறப்பட்ட நினைவும், சிறைச்சாலையிலே அடிக்கப்பட்ட கையிலே உள்ள காயத்தை மறைத்து முழுக்கை சட்டை போட்டுக் கொண்டு என்னைச் சந்தித்த அந்த நினைவும்தான் என் மனதைச் சூழ்ந்து கொண்டிருந்தன. ஸ்டாலின் பிறந்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட - "மிசா" கைதியாக சிறைக்குள் இருந்த போது ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட - ஈழத் தமிழர்கள் வாழ்வில் இருள் நீங்கி ஒளி பிறந்திட வேண்டு மென்பதற்காக, அவர் பயணம் மேற்கொள்வதிலே எனக்கு தனிச் சிறப்பான மகிழ்ச்சி ஏற்பட்டது.

தம்பி டி.ஆர். பாலுவைப் பற்றியும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அவர் சென்னையில் "ஸ்கூட்டரில்" சுற்றிய காலத்திலிருந்து, கழகம், கழகம் என்று உழைத்ததை நான்

அறிவேன். அவருடைய மாமனார் செங்குட்டுவன் சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக இருந்து பணியாற்றினார். பின்னர் தம்பி ஆர்.டி. சீத்தாபதி மாவட்டக் கழகச் செயலாளராக இருந்த போது அவரிடம் துணைச் செயலாளராக இருந்து, கழகப் பணி களைக் கற்று, பின்னர் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் ஆனவர். தம்பி முரசொலி மாறனின் பேரன்பைப் பெற்றவர். அவரிடம் பாராளுமன்றப் பணிகள் பற்றி பாடம் கற்றவர். நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவராக இன்று டி.ஆர்.பாலு சிறப்பாகப் பணியாற்றுகிறார் என்றால், அதெல்லாம் மாறனிடம் பெற்ற பயிற்சிதான்! என்ன, கொஞ்சம் பிடிவாதக்காரர், கோபக்காரர். அதுவும் என் முன் கோபப்படுவதைப்போலக் காட்டிக் கொள்வார். அவரும் என்னிடம் நேற்று விடைபெற்றார். அண்ணா அறிவாலய வாசலில் சாலையில் காவலர்கள் சூழ்ந்து கொண்டு அவரைத் தாக்கிய காட்சியும் - என்னை அ.தி.மு.க. அரசு கைது செய்தபோது, காவலர்களிடம் அவர் போராடி அடிகளைத் தாங்கிக் கொண்ட காட்சியும்தான் நேற்று எனக்குத் தெரிந்தது. அவரும் இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கான என்னுடைய கோரிக்கையைத் தாங்கி ஐ.நா. மன்றத்திலே அதனை வழங்குவதற்காகப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவர்களின் இந்தப் பயணம் வெற்றிபெற என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய வாழ்த்துகள் மட்டுமல்ல, ஈழத் தமிழர்களின் நலனில் அக்கறையுள்ள அத்தனை தமிழர்களும் இந்தப் பயணம் வெற்றி பெறவும், ஈழத் தமிழர் வாழ்வில் விடியல் காணவும் அனைவரும் வாழ்த்த வேண்டுமென்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

12-8-2012 அன்று தமிழக அரசின் எதிர்ப்புக் கிடையில் "டெசோ" மாநாட்டினை சென்னையிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்திற்கிடையே மிகச் சிறப்பாக நடத்தி அதிலே முக்கிய பல தீர்மானங்களை வடித்தெடுத்தோம். அங்கே மக்கள் மத்தியிலே அந்தத் தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றுவதற்கு முன்பு உலகத் தமிழர்களின் பிரதிநிதிகளையெல்லாம் காலையிலே அழைத்து நடத்திய ஆய்வரங்கில் நன்றாக விவாதித்த பிறகுதான் தயாரித்தோம். அந்தத் தீர்மானங்களை "டெசோ" அமைப்பின் சார்பில் நடைபெற்ற ஈழத் தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாட்டிலே

நிறைவேற்றியதோடு இருந்து விடாமல், அந்தத் தீர்மானங்களை ஐ.நா. மன்றத்தில் இந்தியா கொண்டு செல்ல வேண்டுமென்று கேட்டு இந்தியப்பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதமும் நான் எழுதினேன்.

அந்தக் கடிதத்தில் இலங்கையிலுள்ள தமிழர்கள் கோரி வரும் அரசியல் தீர்வை, அவர்களே முடிவு செய்ய அவர்களுக்கு உரிமைகள் வழங்கும் தீர்மானத்தை ஐ.நா. பொதுச்சபையிலும், மனித உரிமைகள் ஆணையத்திலும் கொண்டு வர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டிருந்தேன். கடிதத்தை பிரதமரிடம் கடந்த 21-8-2012 அன்று கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இணைந்து நேரில் கொண்டு போய் கொடுத்திருக்கிறார்கள். அடுத்த கட்டமாக, "டெசோ" சார்பிலும்; கழகத்தின் சார்பிலும் நேரடியாக ஐ.நா.மன்றத்திற்கே நமது கோரிக்கையைக் கொண்டு செல்கின்றோம். அதற்காகத்தான் இன்று தம்பிகள் ஸ்டாலினும், பாலுவும் அமெரிக்கப் பயணம் புறப்பட்டிருக்கின்றார்கள்.

நான் அனுப்பியிருந்த கடிதத்தைப் படித்து விட்டு பிரதமர் அவர்கள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி அளித்ததோடு, ஏற்கனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா நமது வேண்டுகோளை ஏற்று ஆதரித்தது என்பதையும் நினைவு கூர்ந்தார்கள். பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் நகலை ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்களுக்கும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று அளித்தனர்.

நமது கழக உறுப்பினர்களிடம் நேரில் உறுதி அளித்ததோடு, என்னுடைய கடிதத்திற்கு எனக்குப் பதில் எழுதிய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், இலங்கைத் தமிழர்களின் நலனுக்கும், நல்வாழ்வுக்கும் தேவையான பணிகளில் இந்திய அரசு அக்கறை காட்டி வருகிறது என்றும், ஈழத் தமிழர்களின் மறு குடி அமர்வு மற்றும் மறுவாழ்வுக்கு இந்திய அரசு மிகுந்த முன்னுரிமை வழங்கிச் செயல்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார். மேலும் அந்தக் கடிதத்தில், அதிகாரப் பகிர்வு குறித்து ஈழத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகளை முன்னெடுத்துச்

செல்ல வேண்டிய தன் அவசியத்தையும் இலங்கை அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம் என்றும், எதிர்காலத்தில் ஈழத் தமிழர்கள் சம உரிமை, கௌரவம், சமநீதி மற்றும் சுயமரியாதையுடன் வாழக்கூடிய நிலையை உருவாக்கிட இலங்கை அரசுடன் இந்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்திருந்தார்.

கடந்த 3-10-2012 அன்று என்னுடைய தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் தமிழ் ஈழம் ஆதரவாளர் (டெசோ) அமைப்பின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பிரதமரின் கடிதத்திற்கு நன்றி தெரிவிக்கப்பட்ட தோடு, ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைப் பாதுகாத்திட ஐ.நா. மன்றத்தின் தலையீட்டைக் கோரும் தீர்மானத்தை இந்திய அரசு முன் மொழிவதன் மூலம் இலங்கையில் தற்போதுள்ள நிலைமைக்கு விரைந்து முற்றுப் புள்ளி வைத்து, ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடவும், தங்களுடைய உரிமைகள் குறித்து விவாதித்துத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளவும் இந்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டு மென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், "டெசோ" மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும், அதன் உறுப்பினர்களான கழகப்பொதுச் செயலாளர் பேராசிரியர், திராவிடர் கழகத் தலைவர் மானமிகு கி. வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு.தொல். திருமாவளவன், பேராசிரியர் சுப. வீரபாண்டியன், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோருடன் நான் விரிவான முறையிலே விவாதித்து, தயாரிக்கப்பட்ட - ஈழத் தமிழர்கள் அரசியல் உரிமைகளையும், வாழ்வுரிமைகளையும் குறித்த - எனது கோரிக்கை மனுக்களை நியூயார்க்கில் உள்ள ஐ.நா. பொதுச் செயலாளர் அவர்களிடமும் - ஜெனீவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையத்திடமும் வழங்க முடிவெடுத்து; இந்தக் கோரிக்கை மனுக்களை என்னுடைய சார்பிலும், "டெசோ" அமைப்பின் சார்பிலும், கழகப் பொருளாளர் மு.க. ஸ்டாலினும், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலுவும் நேரில் சென்று அளிப்பார்கள் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படை யில் இன்றையதினம் இந்தப் பயணம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக 1956ஆம் ஆண்டிலிருந்து தி.மு.கழகம் தொடர்ச்சியாக மேற்கொண்ட எத்தனையோ முயற்சிகளில், இந்தப் பயணமும் ஒன்றாக வரலாற்றுப் பதிவேட்டில் இடம் பெறும். இந்தப் பயணம், பயனுள்ள பயணமாக, வெற்றிப் பயணமாக அமைந்து, இலங்கைத் தமிழர் வாழ்வில் அமைதியும், அனைத்து ஜனநாயக உரிமைகளும் கிடைக்க வேண்டுமென்று உலகத் தமிழர்கள் எல்லாம் விரும்புவதைப் போலவே நாமும் பெரிதும் விரும்புகிறோம்.

ஆனால் நமது தமிழர்களிலேயே ஒரு சிலர் நமது இனப் பகைவர்களை எதிர்க்கிறார்களோ இல்லையோ, நம்மை எதிர்ப்பதிலேதான் இன்பம் காணுகிறார்கள். இலங்கை அரசு, நமது தமிழர்கள் போரிட்டு மாண்ட இடத்திலே வெற்றிச் சின்னம் அமைத்திருப்பது குறித்து 24-10-2012 “முரசொலி”யில் நான் கடிதம் எழுதியிருந்தேன். நமது தாய்க் கழகமான திராவிடர் கழகத்தின் சார்பில் 29-10-2012 அன்று சென்னை பெரியார் திடலில் அதற்காகக் கூட்டம் ஒன்றையே நடத்தி, அதில் தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்கள் “ஈழத்தமிழர்கள் பகுதியில் போர் நினைவுச் சின்னம் என்பது சிங்கள அரசின் வெறிச் சின்னமே தவிர வெற்றிச் சின்னம் அல்ல” என்று பேசியிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் உரையாற்றிய திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர், தம்பி பேராசிரியர் சுப. வீரபாண்டியன், “அன்று கலைஞர் தலைமையில் “டெசோ” உருவாக்கப் பட்டது - போராளிகள் பக்கம் நின்று; இன்று கலைஞர் தலைமையில் “டெசோ” உருவாகியிருப் பது ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைக் காப் பாற்ற! ஆனால் இன்றையதினம் ஈழத் தமிழர் களுக்காக என்று சொல்லப்படும் மேடைகள், ஈழத் தமிழர்களுக்காக என்ற நிலை மாறி, கலைஞரை யும், தி.மு.க. வையும் தூற்றுவது என்கிற அளவுக்கு குறுகிவிட்டதே?” என்று வருத்தப்பட்டிருக்கிறார்.

சிலர் என்னைத் தூற்றுகிறார்கள் என்பதற்காக நான் என்றைக்கும் வருத்தப்பட்டதில்லை. என்னை இப்போது தூற்றுகிறவர்கள் எல்லாம் முன்பு என்னைப் பாராட்டியவர்கள்தான். நாளை மீண்டும் என்னைப் பாராட்டப் போகின்றவர்கள் தான். இன்றைய நிலையில் அந்த ஒரு சிலர் என்னைத் தாக்கிப் பேசுவதை ஏதோ சந்தர்ப்பவசத்தால், இக்கட்டால், பேசப்படுகின்ற ஒன்று என நினைத்து ஒதுக்கிட வேண்டும். “போற்றுவார் போற்றட்டும்; புழுதி

வாரித் தூற்றுவார் தூற்றட்டும்; என் கடன் பணி செய்துகிடப்பதே" என்பதை மனதிலே செதுக்கி வைத்துக்கொண்டு, சிந்தனையைச் சிதற விடாமல், நாளும் நாளும் நமது நல்ல பணியைத் தொடருவோம்! இங்கேயுள்ள தமிழர்களை மட்டுமல்ல; இலங்கைத் தமிழர்களையும், உலகத் தமிழர்களையும் உணர்வுப்பூர்வமாகக் காப்பாற்றவும், அவர்களை முன்னேற்றவும், நம்மால் முடிந்த பணிகளை முனைப்புடன் தொடருவோம், அதற்கெனவே ஐ.நா. பயணம் மேற்கொண்டுள்ள தம்பிகள் ஸ்டாலின், டி.ஆர். பாலு ஆகியோரின் இந்த முயற்சி வெற்றிபெற வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம்.

அன்புள்ள,

மு.க.

1-11-2012

3669. எத்தனைக் காலம் இப்படி ஏமாற்றுவார்?

உடன்பிறப்பே,

31-10-2012 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் தி.மு.கழக உறுப்பினர்கள், மின் வெட்டு குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானத் தினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டபோது;, அவையிலிருந்து வெளியேற்றப்பட்டு, அதற்குப் பிறகு முதலமைச்சர் ஜெயலலிதா மின்சாரப் பற்றாக்குறை பற்றியும், மின்வெட்டு பற்றியும் நீண்ட நேரம் உரையாற்றியிருக்கிறார்.

கழக ஆட்சியிலே ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவர எதிர்க் கட்சிகளுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டன என்பதை பேரவையின் கடந்த கால நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஒரு பிரச்சினையின் மீது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்புத் தீர்மானமோ கொடுத்திருந்தால், அதன் மீது அரசு பதிலளிக்க விரும்பினால், முதலில் அந்தத் தீர்மானங்களைக் கொடுத்தவர்களை அந்தத் தீர்மானத்தின் மீது பேச அனுமதித்து, அவர்களின் கருத்துக்களுக்குப் பின்னர் அரசு விளக்கம் தருவதுதான் கடந்த காலத்தில் இருந்து வந்த நடைமுறை.

கழக ஆட்சிக் காலத்தில் 13-11-2008 அன்று மின்வெட்டு குறித்து எதிர்க் கட்சிகள் எல்லாம் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தபோது, பேரவைத் தலைவர் அந்தத் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து, அதன் மீது உறுப்பினர்களை நீண்ட நேரம் பேச அனுமதித்து, அதற்குப் பிறகு அந்தத் துறையின் அமைச்சரான, ஆற்காடு வீராசாமி விளக்கம் அளித்தார். அந்த விளக்கத்தை அவை நடவடிக்கைக் குறிப்பில் இன்றைக்கும் பார்க்கலாம். எதிர்க் கட்சிகளின் சார்பில் பல குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தார்கள்.

எதிர்க்கட்சிக்காரர்கள் பல்வேறு பிரச்சினைகளின் மீது குற்றச்சாட்டுகளை பேரவையிலே வைப்பது அவர்களுடைய உரிமை; அதற்கு உகந்த பதில்களை அளிக்க வேண்டியது ஆளுங்கட்சியின் கடமை என்பதற்கேற்ப, அமைச்சர் தன் பதிலுரையில், "பேசியவர்கள் எல்லாம் பல நல்ல அரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்" என்றுதான் குறிப்பிட்டார். அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பேரவை நடவடிக்கைகளிலே பின்பற்றி வந்த பண்பாடு.

அது மாத்திரமல்ல; அதற்கு முதல் நாள், 12-11-2008 அன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்மானத்தின் மீது பேரவையில் விவாதம் நடத்தப்பட்டு, அதற்கு என்னுடைய பதிலுரை முடியும்போது மதியம் 1.10 மணியாகிவிட்டது. அதற்குப் பின்னர் சில மசோதாக்களை அறிமுகம் செய்ய வேண்டிய அவசரத்தில் அமைச்சர்கள் இருந்தபோது, அ.தி.மு.க.வின் கொறடாவாக இருந்த திரு. செங்கோட்டையன், "மிகவும் முக்கியமான மின்வெட்டுப் பிரச்சினை குறித்து விவாதிக்க சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் ஆகியவற்றைக் கொடுத்துள்ளேன். அது பற்றி விவாதிக்க வேண்டும்" என்றார். அதற்கு பேரவைத் தலைவர், திரு. ஆவுடையப்பன் அவர்கள், "நேரமாகிவிட்டது, மின் வெட்டு குறித்து விவாதத்துக்கு அடுத்த நாள் எடுத்துக் கொள்ளப்படும்" என்றார். அதனை செங்கோட்டையனும் ஏற்றுக் கொண்டு அமர்ந்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பாலபாரதியும் மின்வெட்டு குறித்துப்பேச வேண்டுமென்றார். அப்போது மின் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி எழுந்து, "மதிய உணவையும் விட்டு விட்டு மின்சாரம் பற்றி விவாதிப்பதில் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால், எவ்வளவு நேரம் உறுப்பினர்கள் பேசினாலும் அதற்கு பதிலளிக்கத் தயாராக உள்ளேன்" என்றார். உடனே அ.தி.மு.க.வினர் விவாதத் துக்கு நாங்கள் தயார் என்றனர். ஆனால் பேரவைத் தலைவர், "இன்று நேரமாகி விட்டது, அடுத்த நாள் அதை எடுத்துக் கொள்ளலாம்" என்றார். ஆனால் அ.தி.மு.க. வினர் வெளிநடப்புச் செய்தனர். பேரவைத் தலைவரின் அறிவிப்பின்படியே மறுநாள் விவாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மறுநாள் மின்சாரப் பிரச்சினை பற்றிய விவாதம் வருவதற்கு முன்பு நடைபெற்ற சட்டக் கல்லூரி மாணவர்கள்

மோதல் காரணமான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டிருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு மின்சாரப் பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால், அ.தி.மு.க. உறுப்பினர்கள் அதிலே பேச வேண்டுமென்று அதற்கு முன்தினமே கேட்டுக் கொண்டார்களே என்பதற்காக, முதலமைச்சராக இருந்த நான், அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதாவின் அறைக்கே அமைச்சர்கள் மு.க.ஸ்டாலின், வீரபாண்டி ஆறுமுகம், கே.என். நேரு ஆகியோரை அனுப்பி அங்கேயிருந்த ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டை யன் போன்ற மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்களையெல்லாம் மீண்டும் அவைக்கு வந்து மின் வெட்டு குறித்த விவாதத்தில் பங்கேற்கு மாறு கேட்டுக்கொள்ளச் செய்தேன்.. ஆனால் அ.தி.மு.க.வினர் சபைக்கு வரவில்லை. அவர்கள் வராவிட்டாலும் மற்ற எதிர்க்கட்சிக் காரர்கள் எல்லாம் அந்த விவாதத்தில் பங்கேற்றார்கள். கழக ஆட்சியில் பேரவை விவாதங்கள் ஜனநாயக முறைப்படி இப்படித்தான் நடைபெற்றன என்பதற்கு இந்த ஒரு உதாரணம்போதும் என்று நினைக்கிறேன். வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் அவை விவாதத்தில் கலந்து கொள்ளும்படி நேரில் சென்று அழைத்தது தி.மு.கழக ஆட்சியின் பெருந்தன்மையும், அரசியல் பண்பாடும் ஆகும்.

அமைச்சர் ஆற்காடு வீராசாமி அப்போது பதிலளிக்கும்போது, 2007 ஆம் ஆண்டு வரையிலே உபரி மின்சாரம் தமிழகத்திலே இருந்ததைக் குறிப்பிட்டதோடு, அதற்குப் பிறகு மின் பற்றாக்குறை ஏன் ஏற்பட்டது என்பதையும், அதனைப்போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் விளக்கினார். அந்தப் பதிலில்,

"நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களே டெல்லிக்குச் சென்று, பிரதமரைச் சந்தித்து, அன்னை சோனியா காந்தி அவர் களையும் சந்தித்து, தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டபோது, 300 மெகாவாட் மின்சாரத்தை உடனடியாக முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்து இறங்கு வதற்கு முன்னாலேயே கொடுத்தார்கள். அதைப் போலவே அடுத்து இரண்டு மாதங்கள் கழித்து நான் (ஆற்காடு வீராசாமி) டெல்லிக்குச் சென்று மின் துறை அமைச்சரைச் சந்தித்து, மேலும் அதிகமாக மின்சாரம் வேண்டும் என்று கேட்டபோது, அப்போதும்

300 மெகாவாட் மின்சாரம் உடனடியாக வழங்கப்படும் என்று அறிவித்தார்" என்று குறிப்பிட்டு, இதுவும் அவை நடவடிக்கைக் குறிப்பிலே உள்ளது.

ஆகவே "அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்!" என்பது பழமொழி! அப்போது முதல் அமைச்சராகிய நானும், மின் துறை அமைச்சரும் நேரில் சென்று கோரிக்கை வைத்ததால் உடனடியாக மின்சாரம் கிடைத்தது என்பதற்காகச் சொல்கிறேன்.

தற்போதுள்ள மோசமான மின் வெட்டுக்குக் காரணமே முந்தைய தி.மு.க. அரசுதான் என்று முதல் அமைச்சர் ஜெயலலிதா, பேரவையில் சொல்லியிருக்கிறார். தி.மு.க. ஆட்சி நடத்தியபோது தற்போது உள்ளதைப் போல 15 மணி நேரம் மின் வெட்டா இருந்தது என்று கேட்டால் இல்லை, இல்லவே இல்லை.

மின் தட்டுப்பாடு நிலைமைக்கு அ.தி.மு.க. அரசுதான் காரணம் என்று ஒரு சில எதிர்க்கட்சிகள் கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் என்று முதல்அமைச்சர் சொல்லியிருக்கிறார். மின் தட்டுப்பாடு நிலைமைக்கு அ.தி.மு.க. அரசுதான் காரணம் என்று சில எதிர்க்கட்சிகள் அல்ல - தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் அனைவரும், ஒருமுகமாக இந்த மின் வெட்டுக்கும், அதைச் சமாளிக்க முடியாத இயலாமைக்கும் இந்த அ.தி.மு.க. அரசுதான் காரணம், காரணம் என்று அய்யம் திரிபற அழுத்தந் திருத்தமாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

தற்போது தமிழகத்தில் ஏற்பட்ட மின் பற்றாக்குறைக்கு, ஏற்கனவே இருந்த தி.மு.க. அரசுதான் காரணம் என்கிறாரே முதல் அமைச்சர், அப்படியென்றால் 1991 முதல் 1996 வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1,302 மெகாவாட் மின் நிறுவு திறனும், 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2,518 மெகாவாட் மின் நிறுவு திறனும் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்லியிருக்கிறாரே, இதற்கு மட்டும்; அவருடைய அந்த ஆட்சிக் காலத்திற்கு முன்பு நடைபெற்ற தி.மு.கழக ஆட்சி காரணம் இல்லையா? பற்றாக்குறை என்றால் கடந்த கால ஆட்சி தான் காரணம், மின் உபரி என்றால் அதற்கு மட்டும் கடந்த கால ஆட்சி காரணம் இல்லையாம்! இதற்குப் பெயர்தானே விதண்டாவாதம் என்பார்கள்!

2001 முதல் 2006 வரையிலான அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போது, மின் தட்டுப்பாடே தமிழகத்தில் இல்லை என்று ஜெயலலிதா சொல்கிறாரே, அதற்குக் காரணம் 2001 ஆம் ஆண்டுக்கு முன் நடைபெற்ற தி.மு. கழக ஆட்சியின் செயல்பாடுகள் அல்லவா? கழக ஆட்சியில் அப்போது மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணத்தால்தான் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் மின் தட்டுப்பாடே தமிழகத்தில் இல்லாத நிலை ஏற்பட்டது. இப்போதும்கூட, கடந்த கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட மின் திட்டங்கள் எல்லாம் முழுமை அடைந்து அவற்றிலிருந்து மின் உற்பத்தி கிடைத்திருக்குமேயானால், தற்போதுள்ள மின் பற்றாக்குறை இருக்காது. அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகம் மின்சாரத்தில் உபரி மாநிலமாக இருந்தது என்று சொல்கிற முதல் அமைச்சர், தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் மின் துறை அமைச்சராக இருந்த ஆற்காடு வீராசாமி 3-4-2007 அன்று அவையில் பேசியதையும் குறிப்பிட்டிருக்கிறார். அப்போது அவர் என்ன சொன்னார்? "....நாம் மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாகத்தான் இருக்கிறோம். இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான். இப்போது மராட்டிய மாநிலத்திற்கு உபரி மின்சாரத்தை விற்பனை செய்கிறோம். பஞ்சாப் மாநிலத்திற்கு விற்பனை செய்கின்றோம்..." என்றெல்லாம் பேசியிருப்பதில் இருந்தே, கழக ஆட்சிக் காலத்திலும் மின்சாரத்தில் தமிழகம் உபரி மாநிலமாகத்தான் இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது அல்லவா?

கடந்த தி.மு.கழக ஆட்சியில் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டது என்று ஒரு குறைபாட்டை ஜெயலலிதா சொல்கிறார். மக்களின் தேவைக்காக, நாட்டை இருண்ட நாடாக ஆக்காமல் இருக்க, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகக் கழக ஆட்சியில் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப் பட்டிருக்கலாம். உரியதைச் செய்து மக்கள் அல்லல்படாமல் பாதுகாப்பதுதான் ஒரு நல்லரசு.

உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் வழக்கறிஞர் வி.பாலாஜி அவர்கள் தாக்கல் செய்த மனுவிலேயே; தமிழ்நாடு மின் வாரியம் 1100 மெகாவாட் மின்சாரம் வாங்க பல்வேறு மாநிலங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது என்றும், ஆனால்

மாநிலங்களுக்கிடையே மின்சாரம் தடையின்றி கொண்டு வரப் போதுமான கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர மத்திய அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை; அதனால் அந்த மின்சாரம் வரவில்லை என்றும், மின் கடத்தி இடைவழிகளை உருவாக்க மத்திய அரசுக்கு உத்தரவிடவேண்டும் என்றும் கூறப் பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் நமது முதலமைச்சர் இந்த வழக்கைத் தொடுப்பதற்கு முன்பு பிரதமருக்கு மின்சாரம்கோரி கடிதம் ஒன்றை 24-10-2012 அன்று எழுதியதற்குப் பிறகு, மத்திய மின்சாரத் துறை இணை அமைச்சர் திரு.கே.சி. வேணுகோபால் அவர்கள் கூறும் போது, "மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழ கத்துக்கு மின்சாரம் கொண்டு வருவதற்கான மின் வழித்தடத்தில் பிரச்சினை உள்ளது. தற்போதுள்ள மின் வழித் தடத்தில் கொண்டு வந்தால் கடும் மின்சார இழப்பு ஏற்படும். எனவே ரெய்ச்சூர் வழியாக புதிய மின் வழித்தடம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் புதிய மின் வழித்தடம் அமைக்கும் பணி வரும் 2014ஆம் ஆண்டு ஜனவரிக்குள் நிறைவுபெறும். கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை நேரடியாக தமிழகத்துக்கு வழங்க இயலாது. மத்திய மின் தொகுப்புக்குக்கொண்டு சென்று அதிலிருந்து எந்த மாநிலத்துக்கு எவ்வளவு கொடுப்பது என்பதைப் பிரதமர் முடிவு செய்வார்" என்று கூறியிருக்கிறார்.

தற்போது தமிழக அரசின் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகத்தின் (டான்ஜெட்கோ) மூத்த அதிகாரி ஒருவரே 'டெக்கான் கிரானிக்கல்' நாளேட்டுக்கு அளித்துள்ள பேட்டியில்,

"தேசிய மின் இணைவமைப்பிலிருந்து மின்சாரத்தை இறக்குமதி செய்யவோ, தெற்கு மின் இணைவமைப்பில் வழியில் தற்போதுள்ள நெரிசல் நீங்கி சுலபமாவதற்கோ, 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தமிழகம் காத்திருக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

"தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, புதுவை மாநிலங்கள் அடங்கிய தெற்கு மின் இணைப்பு; தேசிய மின் இணைவமைப்புடன் ஒருங்கிணைக்கப்படவில்லை. தெற்கு மின் இணைப்பை; தேசிய மின் இணைவமைப்பின் பகுதியோடு இணைப்பதற்காக இந்திய மின்சார மின் இணைவமைப்புக் கார்ப்ப

ரேஷன் கர்நாடகாவிலுள்ள ரெய்ச்சூருக்கும், மகாராஷ்டிராவிலுள்ள ஷோலாப்பூருக்கும் இடையில் 800 கிலோ வோல்ட் மின் கடத்தி இணைவமைப்பை அமைத்து வருகிறது" என்று அந்த அதிகாரியே விளக்கினார்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்திக்காக என்னென்ன திட்டங்கள் தொடங்கப்பட்டன என்பது பற்றி முதலமைச்சர் ஜெயலலிதா தனது பேச்சில் ஏன் தெரிவிக்கவில்லை என்று நான் கேட்டதற்கு, முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் சில திட்டங்களின் பெயர்களைச் சொல்லியிருக்கிறார். நான் முதல்வரிடம் தெரிந்து கொள்ள விரும்பியது, அவருடைய ஆட்சிக் காலத்தில் எந்தெந்த மின் திட்டங்கள் தொடங்கப் பட்டன, அவற்றிலிருந்து எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது என்ற விவரங்களைத் தான்! ஆனால் அவர் என்ன பதில் அளித்திருக்கிறார் என்றால், அவரது ஆட்சியில் வல்லூரில் 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவிட 12-7-2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம்.ஓ.யு.) கையெழுத்திட்டோம் என்று சொல்லியிருக்கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம்.ஓ.யு.) கையெழுத்துப் போடுவதுதான் மின் உற்பத்திக்கான தொடக்கமா? 2002இல் புரிந்துணர்வில் கையெழுத்திட்டார்கள் என்றால், அதற்குப் பிறகு 2006ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சிதானே நடைபெற்றது. அந்த நான்கு ஆண்டுகளில் அந்தத் திட்டத்தை ஏன் தொடங்கவில்லை? புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதும், ஒப்புதல் வழங்குவதும் மின் உற்பத்திக்கான திட்டங்களைத் தொடங்கியதாக அர்த்தம் ஆகாது.

ஜெயலலிதா தனது அறிக்கையில், அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, புதிய மின் திட்டங்களை முழுமையான செயல்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததன் காரணமாக - 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம், மற்றும் 500 மெகாவாட் மின் திறன் கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் முதல் அலகு டிசம்பர் 2012இல் இருந்தும், 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மார்ச் 2013இல் இருந்தும், 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வட சென்னை அனல்மின் திட்டத்தின் முதல் அலகு ஏப்ரல் 2013இல் இருந்தும் முழு உற்பத்தியைத் தொடங்க

இருக்கின்றன, இவைகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு 1,900 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்.

நான் கேட்க விரும்புவது - அம்மையார் இங்கே சொல்லியிருக்கின்ற இந்த மின் திட்டங்கள் அனைத்தும் எந்த ஆட்சியில், யாரால் தொடங்கப்பட்டன? தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்கள்தானே இவை! எனவே தமிழ்நாட்டிற்கு இந்த 1,900 மெகாவாட் மின்சாரம் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களிலிருந்து கிடைப்பதுதான் என்பதை ஜெயலலிதா தனது பேச்சிலேயே ஒப்புக் கொள்கிறார் என்று தானே பொருள்.

மேலும் ஜெயலலிதா தனது உரையில் - 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் முதல் அலகு ஏப்ரல் 2013இல் இருந்தும், 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மே 2013இல் இருந்தும் முழு உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன என்றும் கூறியிருக்கிறார். இந்தத் திட்டங்களும் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்கள்தான். இதில் வடசென்னை முதல் அலகு 18-2-2008 அன்றும், இரண்டாம் அலகு 16-8-2008 அன்றும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப் பட்டவைகளாகும். கழக ஆட்சியில் இந்தத் திட்டங்கள் ஆரம்பித்த காரணத்தால், இதன் மூலம் 1,200 மெகாவாட் மின்சாரம் 2013ஆம் ஆண்டிலே தமிழகத்திற்குக் கிடைக்கவுள்ளது.

ஜெயலலிதா நேற்று பேரவையில் பேசும்போது, தனது ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட மின் திட்டங்களைக் காழ்ப்புணர்வோடு தி.மு.கழக ஆட்சியில் தொடராமல் விட்டதால்தான் தற்போது மின் வெட்டு ஏற்பட்டுள்ளதாகச் சொல்லியிருக்கிறார். எம்.ஜி.ஆர். தொடங்கிய சத்துணவுத் திட்டத்தை மேலும் விரிவாகவும், முனைப்பாகவும் நடத்திக் காட்டிய ஆட்சிதான் கழக ஆட்சி. வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு மின் திட்டத்தை தி.மு.கழக ஆட்சியில் 26-6-2007 அன்று தொடங்கினோம் என்று நான் எழுதியிருந்தேன். அந்தத் திட்டத்திற்கு ஜெயலலிதா ஆட்சியிலேயே ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்டது என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார்; ஏற்றுக் கொள்கிறேன். அந்தத் திட்டம் அ.தி.மு.க. ஆட்சியிலே ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டம்

என்பதற்காக, தி.மு.கழக ஆட்சியிலே அதைத் தூக்கிப்போட்டு விட்டோமா? அந்தத் திட்டத்தை மேற்கொண்டு செயல் படுத்தியிருக்கிறோம் என்பதற்கான உதாரணம்தான் இது. ஆனால் ஜெயலலிதா, அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதற்காக காழ்ப்புணர்வோடு நாங்கள் செயல்படுத்தவில்லை என்று சொல்லியிருக்கிறார். இப்படியெல்லாம் முரணான பல தகவல்களை இன்றைய தமிழக முதலமைச்சர் கூறி, தமிழ்நாட்டு மக்களை இன்னும் எத்தனைக் காலம் இப்படி ஏமாற்றுவார்?

குஜராத்திலிருந்து மின்சாரம் வாங்கிட ஒப்பந்தம் போட்டதைப் பற்றி - அப்படி வாங்கினால், அதைத் தமிழகத்திற்குக் கொண்டுவர முடியுமா என்பதைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்ளாமல் ஜெயலலிதா அரசு ஒப்பந்தம் போட்டதைப் பற்றி நான் எழுதியதற்கு; ஒப்பந்தம் போட்ட பிறகுதான் மத்திய அரசுக்கு விண்ணப்பிக்க முடியும் என்பது எனக்குத் தெரியாதா என்று கேட்டிருக்கிறார். மத்திய அரசுக்கு விண்ணப் பிப்பதைப் பற்றி நான் கேட்கவில்லை. ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக, அந்த மின்சாரத்தை நாம் வாங்கினால், அதைத் தமிழகத்திற்குக் கொண்டுவர இயலுமா என்பதைப் பற்றி ஏன் முன் ஆலோசனையுடன் செயல்படவில்லை என்றுதான் கேட்டிருந்தேன்.

2001 முதல் 2006 வரை அ.தி.மு.க. ஆட்சி - ஜெயலலிதா தலைமையிலான ஆட்சி - தமிழகத்தில் நடைபெற்றபோது மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் இல்லாத நிலைதான் நிலவியது என்று பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா பேசியிருக்கிறார். ஆனால் நான் என்னுடைய "உடன்பிறப்பு" கடிதத்தில் 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சி தானே நடைபெற்றது, அப்போது மின்வெட்டு இருந்தது உண்மையா இல்லையா என்றுதான் கேட்டிருந்தேன். ஜெயலலிதா தலைமையில் ஆட்சி நடைபெற்ற அந்தக் காலக்கட்டத்தில் 1991 செப்டம்பர் மாதம் 1ந்தேதி முதல் 30 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதம் வரையிலே மின் வெட்டு இருந்தது உண்மை. மறுக்க முடியுமா? அதைப் போலவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, கிட்டத்தட்ட ஆறு முறை மின்சாரவெட்டு அமல்படுத்தப்பட்டிருக்கிறது. 1982இல் நான்கு நாட்களுக்கு 100 சதவிகிதம் மின்சாரவெட்டு இருந்தது.

"பல்வேறு மின் திட்டங்கள் மூலமாக 2014 ஆம் ஆண்டுக்குள் சுமார் 7000 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதற்கு தி.மு.க. அரசு வழி செய்ததாக திரு. கருணாநிதி கூறியிருப்பது வெறும் கற்பனைக் கதை" என்று ஜெயலலிதா பேரவையில் சொல்லியிருக்கிறார்.

13-11-2008 தேதிய பேரவையின் நடவடிக்கைக் குறிப்பை எடுத்துப் படித்துப் பார்த்தாலே நான் சொன்னது உண்மையா, கற்பனைக் கதையா என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

வடசென்னை	1,200 மெகாவாட்
மேட்டூர்	600 மெகாவாட்
தூத்துக்குடி	1,000 மெகாவாட்
உடன்குடி	1,600 மெகாவாட்
வல்லூர்	1,200 மெகாவாட்
ஜெயங்கொண்டம்	1,500 மெகாவாட்

ஆக மொத்தம் இதிலிருந்து 7,100 மெகாவாட் மின்சாரம் கிடைக்க கழக ஆட்சியில் வழிவகை காணப்பட்டது. அன்றையதினம் அவையில் உரையாற்றிய மின் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களே, 7,400 மெகாவாட் மின்சாரத்தை மத்திய, மாநில அரசுகள் மூலமாக உற்பத்தி செய்யவிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார். தற்போது இந்தத் திட்டங்களில் ஒன்றிரண்டு செயல்படாமல் விட்டுப் போயிருக்கலாம். ஆனால் கழக ஆட்சியில் வழி வகை காணப்பட்டதைத்தான் நான் சொல்லியிருந்தேன். நான் சொல்வது கற்பனைக் கதையா? மக்கள் புரிந்து கொள்ளட்டும்.

அன்புள்ள,

மு.க.

3-11-2012

3670. துள்ளி வருகுது வேல்!
புள்ளி விவர மாய்மாலம் தூள்! தூள்!!

உடன்பிறப்பே,

20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் தொழில்கள் தொடங்குவதற்கென நேற்றைய முன்தினம் அ.தி.மு.க. அரசு சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. தமிழ், ஆங்கிலம் என அனைத்து நாளேடுகளிலும் முழுப்பக்கம் விளம்பரங்கள் அரசின் சார்பில் தரப்பட்டுள்ளன. அதற்கு மட்டும் எவ்வளவு ரூபாய் அரசுப் பணம் விரயமாகி யிருக்கும் தெரியுமா?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கையெழுத்திடுவதற்காகவே "ஐ.டி.சி. கிராண்ட் சோழா" ஐந்து நட்சத்திர ஓட்டலில் முதல் அமைச்சரே கலந்து கொள்ளும் விழா. ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து இடுவதென்றால் ஐந்து நிமிடங்களில் தலைமைச் செயலகத்திலேதான் இதுவரை நடந்துள்ளது. ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகும் விழா நடைபெறுவதே இதுதான் முதல்முறை.

இப்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கும் 12 நிறுவனங்களில் ஹுண்டாய் மோட்டார், செயின்ட் கோபைன், நோக்கியா, சான்மினா, டியூப் இன்வெஸ்ட் மென்ட்ஸ், டி.வி.எஸ். குழுமம் போன்ற நிறுவனங்கள் எல்லாம் ஏற்கனவே தமிழகத்திலே இயங்கி வருகின்றன. அந்த நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடும் விழா என்று அரசு விளம்பரங்களில் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனங்களின் சார்பில் ஆங்கிலப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வேறு! அந்த நிறுவனங்கள் எல்லாம் தங்கள் தொழிற் சாலையை விரிவாக்கிட மேலும் முதலீடு செய்கிறார்கள். அவ்வளவுதான்! இவற்றில் சிற்சில

தொழிற்சாலைகள் வேண்டுமானால் புதிய தொழிற்சாலைகளாக இருக்கக் கூடும்.

இன்றையதினம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள **"ஹுண்டாய் மோட்டார் தொழிற்சாலை"** தமிழகத்தில் எத்தனை ஆண்டுக் காலமாக நடந்து வருகிறது என்பதை அனைவரும் நன்கறிவார்கள். அந்தத் தொழிற்சாலை திருப்பெரும்புதூரில் அமைக்கப்பட்டு, நானும், மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறனும் சென்று திறப்பு விழா நடத்தி வைத்து, வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. அந்தத் தொழிற்சாலையில் இரண்டாவது கட்டத்தினை 4,000 கோடி ரூபாய் முதலீட்டில் 2-2-2008 அன்று கழக ஆட்சியில் திறந்து வைத்தோம். இந்தத் தொழிற்சாலையின் இரண்டு கட்டத் தொழிற்பிரிவுகளிலும் ஏற்கனவே 11 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகள் பெற்றுள்ளனர்.

இன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் மற்றொரு கம்பெனி **"சான்மினா"**. இந்தக் கம்பெனியுடன் 19-6-2007இல் கழக ஆட்சியில் ஒப்பந்தம் செய்யப்பட்டு, 100 ஏக்கர் நிலப்பரப்பில் 225 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டு 28-3-2010 அன்று திறந்து வைக்கப்பட்டு, அந்தத் தொழிற்சாலையும் நடந்து வருகிறது.

மற்றொரு தொழிற்சாலை **நோக்கியா.** அ.தி.மு.க. ஆட்சியில் இந்தத் திட்டத்திற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக ஜெயலலிதா பேசியிருக்கிறார். எனினும், ஒரகடத்தில் 300 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலைக்காக கழக ஆட்சியில் 26-6-2008இல் ஒப்பந்தம் நடைபெற்றது. இந்தத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து 16-10-2008 அன்றே திறக்கப்பட்டுள்ளது.

அதுபோலவேதான் **"செயின்ட் கோபைன்"** தொழிற்சாலையும் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இன்னும் சொல்ல வேண்டுமேயானால், டிட்கோ நிறுவனத்தின் மூலமாக மட்டும் கழக ஆட்சியில் கடந்த 2006 மே மாதம் முதல் 27 தொழில்கள் தொடங்கப்பட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. 24 அரசாணைகள் மூலம் 24 தொழில்கள் தொடங்கப்பட அனுமதிகள் வழங்கப்பட்டன. இவற்றின் விளைவாக தமிழகத்தில் 62 ஆயிரத்து 349 கோடி ரூபாய்

முதலீட்டில், 51 புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படவும், அவற்றின் மூலம் 2 இலட்சத்து 35 ஆயிரத்து 464 பேருக்கு வேலை வாய்ப்புகள்

கிடைத்திடவும் வழி வகுக்கப்பட்டது. 2011இல் மைய அரசின் மத்திய புள்ளி விவர நிறுவனம், (Central Statistical Organisation) தனது 2008-2009இல் தொழிற் சாலைகள் குறித்து ஆண்டு ஆய்வினை வெளியிட்டது. அந்த ஆய்வின்படி,

- தமிழ்நாடு மொத்தம் 26,122 தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளது; இதன் மூலம் தொழிற்சாலைகள் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது;
- தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதாவது தமிழ்நாட்டில் 17 லட்சத்து 74 ஆயிரத்து 19 பேர் தொழிற்சாலைகளில் மட்டும் பணி புரிகின்றனர்.
- "மொத்த முதலீட்டின்" வரிசையில் தமிழ் நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது.
- "மொத்த தொழில் உற்பத்தி"யில் தமிழ் நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது.
- மேலும் "நிகர மதிப்பு கூடுதல்" அளவில் தொழிற்சாலை வரிசையில் தமிழ்நாடு மூன்றாம் இடத்தை வகிக்கிறது.

என்றெல்லாம் கூறப்பட்டிருந்தது.

"Wall Street Journal", தனது 8-7-2010 நாளிட்ட இதழில், "தமிழ்நாடு வாகன உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலங்கள், சாலைகள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றை வழங்குவதில் மற்ற இந்திய மாநிலங்களை விடச் சிறப்பாகச் செயல்படுகிறது. மேலும், தொழில் தொடங்கவும், விரிவாக்கம் செய்யவும் 12க்கும் மேற்பட்ட அரசுத் துறை சார்ந்த அனுமதிகளை ஒற்றைச் சாளர முறையில் ஒரே இடத்தில் வழங்குகிறது" என்றும் கூறிப் பாராட்டியுள்ளது.

Oxford Analytica என்ற ஒரு பன்னாட்டுத் தனியார் ஆலோசனை நிறுவனம், India Deconstructed என்ற ஒரு ஆய்வை

நடத்தியது. அந்த ஆய்வின்படி, "தமிழகம் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே முதன்மையாக விளங்குகிறது" என்று கூறி அதற்குத் தமிழ்நாட்டின் தரமான உட்கட்டமைப்பு மற்றும் ஆளுமை ஆகியவையே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளது. அந்தப் பன்னாட்டு நிறுவனம், இந்தியாவிலுள்ள 28 மாநிலங்களையும் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களையும் பகுப்பாய்வு செய்து, "தமிழ்நாடே மிகச் சிறந்தது" என்று அறிவித்துள்ளது.

முதலீடுகளை வெற்றிகரமாக ஈர்ப்பதில் இந்தியாவில் சிறந்த மூன்று மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகத் திகழ்ந்ததை, "ASSOCHAMP" நிறுவனம் வெளியிட்ட "BIZCON" என்ற அறிக்கையில், வாகன உற்பத்தியிலும், ஏற்றுமதியிலும் இந்தியாவிலேயே மிகப் பெரிய மாநிலமாகத் திகழும் தமிழகம், வாகன உற்பத்தியில் சிறந்து விளங்கும் உலகின் முதன்மையான 10 மையங்களில் ஒன்றாக விளங்குகிறது" என்று குறிப்பிட்டிருந்தது. இது கழக அரசு அறிவித்த ஒருங்கிணைந்த மிகப் பெரும் வாகனத் திட்டக் கொள்கையின் விளைவாக சாத்தியமாயிற்று.

7-2-2000 நாளிட்ட "எகனாமிக் டைம்ஸ்" நாளிதழில் "இந்தியாவில் பெரிதும் தொழில் மயப்படுத்தப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஏற்றுமதிக்குத் தமிழ்நாட்டின் பங்களிப்பு மிகப் பெரிதாகும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

தொழில் துறையில், கழக ஆட்சியில் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றியும், அதை அப்போது ஏடுகள் எல்லாம் ஒருமுகமாகப் பாராட்டியது பற்றியும் எழுத ஆரம்பித்தால் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருக்க முடியும். ஆனால் அப்போது இதைப்பற்றியெல்லாம் கழக அரசிலே இருந்தவர்களுக்கு ஏடுகள் மூலமாகப் பக்கம் பக்கமாக விளம்பரங்களை ஒவ்வொன்றுக்கும் கொடுக்கத் தெரியவில்லை. அவ்வாறு முழுப் பக்க விளம்பரங்களின் மூலம் அரசின் பணத்தை வாரி இறைத்து, அரசை எதிர்த்து அவர்கள் எதுவும் எழுதாமல் அடக்கி வைத்திடவும் தெரியவில்லை.

6-11-2012 தேதிய "தினத்தந்தி" நாளிதழில் முதலமைச்சர் ஜெயலலிதா குறிப்பிடும்போது, "எனது தலைமையிலான

(ஜெயலலிதா) அரசுடன் கடந்த ஆண்டு மே 14ந்தேதி டெய்லர் இந்தியா, யமஹா மோட் டார், அசோக்லேலண்ட் நிசான் மோட்டார் நிறுவனம், எய்ச்சர் மோட்டார்ஸ், பிலிப்ஸ் கார்பன் பிளாக் ஆகிய நிறுவனங்கள் ரூ. 5,700 கோடிக்கு முதலீடு செய்யும் வகையில் ஒப்பந்தம் செய்தது, இதன் மூலமாக 9,500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு கிடைக்கும் நிலை உருவாகி இருக்கிறது" என்று பேசியதாக வெளியிட்டுள்ளது.

நான் கேட்க விரும்புவதெல்லாம், முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த ஆண்டு பதவி ஏற்றதே மே திங்கள் 16ஆம் நாள் தான்! அவ்வாறு இருக்கையில் மே 14ஆம் தேதி யன்றே மேலே குறிப்பிட்டுள்ள நிறுவனங்களோடு எவ்வாறு ஒப்பந்தம் செய்திருக்க முடியும் என்பதுதான்!

"Fortune 500" நிறுவனங்களைச் சேர்ந்த ஹுண்டாய், போர்டு, நிஸ்ஸான், டேம்லர், மோட்டரோலா, டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங், சான்மினா மற்றும் நோக்கியா சீமென்ஸ் போன்றவை தங்கள் தயாரிப்பு நிறுவனங்களைத் தமிழ்நாட்டில் கழக ஆட்சியிலேயே ஏற்படுத்தின.

2011-2012ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையில் அதுவரை தமிழகத்திலே ஆட்சி செய்த தி.மு. கழக ஆட்சியில், தமிழ்நாட்டில் 52,195 கோடி ரூபாய் அளவிற்கு பல முன்னணித் தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டுக்கான கழக அரசின் நிதிநிலை அறிக்கையில் "இந்த அரசு பொறுப் பேற்ற பிறகு, மோட்டரோலா, அப்போலோ டயர்ஸ், டெசால்வ், டெல் கம்ப்யூட்டர்ஸ், குரோத் லிங், சாம்சங், மகிந்திரா - ரெனால்ட் - நிஸ்ஸான் மற்றும் கபாரோ ஆகிய நிறுவனங்களோடு ரூபாய் 6,985 கோடி மதிப்பீட்டிலான தொழில் முதலீடுகளுக்கான எட்டு புரிந்துணர்வு ஒப்பந் தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இவற் றால், 96,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது" என்று அறிவிக்கப் பட்டது.

நேற்றைய மாலைப் பத்திரிகை ஒன்றில் அ.தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள இந்த 12 தொழிற்சாலைகளும் எவ்வளவு முதலீடு செய்யப் போகிறார்கள்

என்பதைப் பற்றியும், இதன்மூலம் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் விரிவாக வெளியிட்டிருக்கிறார்கள். அதன்படி ஹுண்ண டாய் மோட்டார் நிறுவனத்தில் 500 பேருக்கும், ஹர்ஷா குரூப் நிறுவனங்கள் மூலமாக 1,850 பேருக்கும், டி.வி.எஸ். குழும நிறுவனங்கள் மூலமாக 1,300 பேருக்கும், முருகப்பா குழுமத்தின் மூலமாக 1,130 பேருக்கும், டான்பாஸ் மூலமாக 1,200 பேருக்கும், சான்மினா மூலமாக 1,500 பேருக்கும், நோக்கியா நிறுவனத்தின் மூலமாக 500 பேருக்கும், ஆம்வே மூலமாக 475 பேருக்கும், இந்தோ ராமா குழுமத்தின் மூலமாக 500 பேருக்கும், பி.ஜி.ஆர். எனர்ஜி குழுமத்தின் மூலமாக 2,400 பேருக்கும், ஆட் இண்டஸ்ட்ரி பார்க் நிறுவனம் மூலமாக 2,000 பேருக்கும், செயின்ட் கோபையின் நிறுவனத்தின் மூலமாக 500 பேருக்கும் நேரடியாக வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த 12 தொழிற்சாலைகளிலும் மொத்தம் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கூட்டிப் பார்த்தால் 13,855 பேர்களுக்குத்தான் நேரடியாக வேலை வாய்ப்பு கிடைத்திடும். இதில் கோவையில் தொடங்கவுள்ள ஆட் இண்டஸ்டிரி பார்க் நிறுவனம் மூலமாக 2000 பேருக்கு உடனடியாக வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் படிப்படியாக 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று "மாலை முரசு" சொல்லியிருக்கிறது. ஆனால் இன்று காலை "தினமணி"யிலோ இதே தொழிற்சாலையில் நேரடி வேலை வாய்ப்பில் 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். இதில் மாலைமுரசில் வந்தது உண்மையா? தினமணியில் வந்தது உண்மையா? அந்த 25 ஆயிரம் பேரையும் உண்மை என்று கணக்கிட்டால் கூட மொத்தம் 36 ஆயிரம் பேர்தான் வருகிறது. ஆனால் அனைத்து விளம்பரங்களிலும், நாளேடுகளிலும் 1,36,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தருவதாக கொட்டை எழுத்துச் செய்திகள். எந்த அளவிற்கு நாட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இதைச் சமாளிப்பதற்காக நேரடியாக வேலை வாய்ப்பு இவ்வளவு பேருக்குக் கிடைத்தாலும் மறைமுகமாக வேலை வாய்ப்பு கிடைப்பதையும் சேர்த்துக் கணக்கிட்டோம் என்பார்கள். அதிலும் 14 ஆயிரம் பேருக்கு நேரடியாக வேலை என்றால் மீதி 1 லட்சத்து 22 ஆயிரம் பேருக்கு மறைமுகமாக வேலை கிடைக்கும் என்றால் அது நம்பக் கூடியதா என்பதையும் நீங்களே

யூகித்துக் கொள்ளுங்கள். இதையெல்லாம் யார் எண்ணிப் பார்த்து வெளியிடப்போகிறார்கள், அப்படி வெளியிட்டால் இருக்கவே இருக்கிறது அவதூறு வழக்கு, சமாளித்துக் கொள்ளலாம் என்று இந்த ஆட்சியினர் செய்கின்ற கெடுபிடிகளைப் பற்றியெல்லாம் நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். தொழில் துறையில் கழக ஆட்சியில் செய்யப்பட்ட அளப்பரிய சாதனைகளையும், அவை பற்றிய விவரங்களையும், இப்போது நடக்கின்ற புள்ளி விவர மாய்மாலங்களையும் கணக்கிட்டு ஒப்பிட்டுப் பாருங்கள்!

அன்புள்ள,

மு.க.

8-11-2012

3671. திசை திருப்பும் முயற்சியால் பிரச்சினை தீருமா?

உடன்பிறப்பே,

மின்சார நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போகிறது! இன்றைய தினம் வெளிவந்த "தினமணி" நாளிதழிலேயே "முடங்கியது காற்றாலை மின் உற்பத்தி: மாவட்டங்களில் 14 மணி நேர மின்வெட்டு" என்ற தலைப்பில் "காற்றாலை மின் உற்பத்தி முழுவதுமாக நின்று போனதைத் தொடர்ந்து சென்னையைத் தவிர்த்த பிற மாவட்டங்களில் அறிவிப்பில்லாத மின் வெட்டு நேரம் மீண்டும் 14 மணி நேரத்துக்கு மேல் அதிகரித்துள்ளது" என்று நீண்ட கட்டுரையில் வெளியிட்டுள்ளது.

ஆனால் இங்குள்ள அ.தி.மு.க. அரசோ ஏற்கனவே இருந்த தி.மு. கழக அரசின் மீது பழியைப் போட்டுத் தப்பிக்கப் பார்த்தது. ஆனால் அதுகுறித்து நான் இரண்டு கடிதங்கள் விரிவாக எழுதிய பின், மத்திய அரசின் மீது பழியைச் சுமத்திட முற்பட்டார்கள். பிரதமருக்கு கடிதம் எழுதினார்கள். ஆனால் பிரதமர் பதில் எழுதவில்லை என்று கூறி, உச்சநீதி மன்றத்தில் மத்திய அரசின் மீது திட்டமிட்டுக் குறை கூறி வழக்கு தொடுத்தார்கள்.

தமிழக அரசு தொடுத்த வழக்கில், "டெல்லி மாநில அரசு 1721 மெகாவாட் மின்சாரத்தை மத்திய தொகுப்புக்கு திருப்பிக் கொடுத்துவருகிறது. இந்த உபரி மின்சாரத்தை தமிழ் நாட்டிற்கு வழங்க வேண்டுமென மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும். அது மட்டுமன்றி டெல்லியிலிருந்து மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரும் வகையில் மின் தடத்தை ஏற்படுத்தித் தரவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள்.

உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு வைத்த இந்த இரண்டு கோரிக்கைகளில் உபரி மின்சாரத்தை மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஒதுக்குவது என்பது சுலபமாக உடனடியாகத்

தீர்க்கக் கூடிய ஒரு பிரச்சினை. ஆனால் அந்த மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரும் வகையில், மின் தடத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை நினைத்த வுடன் செய்துவிட முடியாது. இது பொறியாளர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும் நன்றாகவே தெரியும். ஆனாலும் தமிழக அரசு இந்தக் கோரிக்கையை உச்ச நீதி மன்றத்தில் தெரிவித்தது.

டெல்லியிலிருந்து தேவையான அரிசியைக் கொண்டு வர வேண்டுமென்றால், ரெயில் மூலமாகக் கொண்டு வந்துவிடலாம். அவசர அவசியம் கருதி மருந்து பொருள்களைக் கொண்டு வர வேண்டுமென்றால் விமானம் மூலம் உடனடியாகக் கொண்டு வரலாம். ஆனால் டெல்லியிலிருந்து மின்சாரத்தை ரெயில் மூலமாகவோ, விமானம் மூலமாகவோ கொண்டு வருவதற்கு வாய்ப்பு இல்லை. மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கு என்று பிரத்தியேகமான கட்டமைப்பு முன்கூட்டியே உருவாக்கப்பட்டிருந் தால் அது உடனடியாக சாத்தியமாகும்.

உச்ச நீதி மன்றத்தில் நமது முதலமைச்சர் இந்த வழக்கைத் தொடுப்பதற்கு முன்பு பிரதமருக்கு மின்சாரம் கோரி கடிதம் ஒன்றை 24-10-2012 அன்று எழுதியதற்குப் பிறகு அவர்கள் அந்தக் கோரிக்கைக்கு பதிலளிக்காமல் இருந்து விடவில்லை. மத்திய மின்சாரத் துறை இணை அமைச்சர் திரு. கே.சி. வேணு கோபால் அவர்கள் இந்தக் கோரிக்கை குறித்து விளக்கிக் கூறும்போது, "மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்துக்கு மின்சாரம் கொண்டு வருவதற்கான மின் வழித் தடத்தில் பிரச்சினை உள்ளது. தற்போதுள்ள மின் வழித் தடத்தில் கொண்டு வந்தால் கடும் மின்சார இழப்பு ஏற்படும். எனவே ராய்ப்பூர் வழியாக புதிய மின் வழித்தடம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் புதிய மின் வழித் தடம் அமைக்கும் பணி வரும் 2014ஆம் ஆண்டு ஜனவரிக்குள் நிறைவு பெறும்" என்று சொல்லி அது அப்போதே ஏடுகளிலேயே வெளிவந்திருக்கிறது.

தமிழக அரசின் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகத்தின் (டான்ஜெட்கோ) மூத்த அதிகாரி ஒருவரே 'டெக்கான் கிரானிக் கல்' நாளேட்டுக்கு அளித்துள்ள பேட்டியில்,

"தேசிய மின் இணைவமைப்பிலிருந்து மின்சாரத்தை இறக்குமதி செய்யவோ, தெற்கு மின் இணைவமைப்பின் வழியில்

தற்போதுள்ள நெரிசல் நீங்கி சுலபமாவதற்கோ, 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தமிழகம் காத்திருக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

மத்திய மின்சாரத் துறை இணை அமைச்சர் விளக்கிக் கூறியதில் இருந்தும், மின்வாரிய அதிகாரி "டெக்கான் கிரானிகல்" இதழுக்கு அளித்த பேட்டியில் இருந்தும், நாம் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை செய்தி என்னவென்றால், டெல்லியிலிருந்து உடனடியாக தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கு மத்திய அரசு முன் வந்தாலுங்கூட, அந்த மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான கட்டமைப்பு தற்போதுதான் உருவாக்கப்பட்டு வருகிறது, அது முழுமையடைய 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தமிழக அரசு காத்திருக்க வேண்டும் என்பதுதான். கடுமையான மின் பிரச்சினை வரும் என்பதற்கான அறிகுறிகள் ஓராண்டுக்கு முன்பே தெரிந்திருந்தும் அதற்கான முன் முயற்சியில் அ.தி.மு.க. அரசு ஈடுபடவில்லை என்பதை மறந்துவிட முடியாது. இதை மனதிலே கொண்டு தமிழக அரசு டெல்லியிலிருந்து மின்சாரத்தை வரவழைக்க எண்ணாமல், தமிழகத்திற்கு அருகிலே உள்ள மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து, தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தை மத்திய அரசிடமிருந்து கூடுதலாகப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுவதே சாலச் சிறந்ததாக இருக்கும்.

மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான கட்டமைப்பைப் பற்றி கருத்திலே கொண்டு தான் மத்திய அரசு சார்பில் உச்ச நீதி மன்றத்தில் வாதிட்ட மத்திய அரசின் அட்டார்னி ஜெனரல் திரு. ஜி. இ. வாகன்வதி அவர்கள், "கூடுதல் மின்சாரத்தை உட்கிரகிக்கும் திறனை தமிழ்நாட்டு மின் தொகுப்பு பெற்றிருக்கவில்லை. எனவே தமிழ்நாட்டிற்கு, கூடுதல் மின்சாரம் வழங்க இப்போது இயலாது. இதற்கு தமிழ்நாடே பொறுப்பு. மேலெழுந்தவாரியாக இந்த மனுவை தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது" என்று தெரிவித்திருக்கிறார்.

ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு அதிலும் குறிப்பாக டெல்லியிலிருந்து தமிழகத்திற்கு மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தற்போது இல்லை என்ற உண்மைகளை தமிழக அரசு தெரிந்து வைத்திருக்கிறதா? அல்லது தெரியாத நிலையில் உச்ச நீதி

மன்றம் சென்றிருக்கிறதா? என்றே தெரியவில்லை. உச்ச நீதி மன்ற நீதிபதிகள் நேற்றைய தினம் இறுதியாக இந்த விவகாரம் குறித்து "தொழில் நுட்ப நிபுணர்கள் ஆய்வு செய்ய வேண்டும், தமிழக அரசு கோரும் மின்சாரத்தை விநியோகிக்கும் அளவுக்குத் தென் மண்டல மின்பாதைத் திறன் உள்ளதா என்று நிபுணர்கள் மூலம் மத்திய மின்சார ஆணையம் ஆய்வு நடத்த வேண்டும். அதன் அறிக்கையை வழக்கின் அடுத்த விசாரணை நடைபெறும் நவம்பர் 29ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே அது வரை நாமும் காத்திருக்க வேண்டியதுதான்.

ஆனால் இதற்கிடையே தமிழ்நாட்டில் உள்ள சில நாளேடுகள் மத்திய அரசுதான் இந்த மின்சாரத்தை வழங்க மறுப்பதைப் போலவும், தமிழக அரசிடம் எந்தத் தவறும் இல்லை என்பதைப் போலவும், எப்படியாவது தமிழக அரசையும், குறிப்பாக தமிழக முதல் அமைச்ச ரையும் எந்தப் பழியும் வந்து விடாமல் காப்பாற்று கின்ற முயற்சியிலே ஈடுபட்டு, அவ்வாறே செய்திகளை தொடர்ந்து வெளியிடுகின்றன. உச்ச நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணை விவகாரங்களை உள்ளே விரிவாக வெளியிட்டாலுங்கூட, "தினமணி" நாளேடு தலைப்பில் "தமிழகத்துக்கு டெல்லி மின்சாரம் கிடையாது - உச்ச நீதி மன்றத்தில் மத்திய அரசு திட்டவட்டம்" என்று வெளியிட்டுள்ளது. அதைப்போலவே "தினமலர்" நாளேடு தலைப்பில் "முடியாது - தமிழகத்திற்கு உபரி மின்சாரத்தை வழங்க முடியாது - சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு திட்டவட்டம்" என்றும் வெளியிட்டுள்ளது. "தினத்தந்தி" நாளேடோ "கூடுதல் மின்சாரத்தை தமிழ்நாட்டுக்கு வழங்க இயலாது - சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு தகவல்" என்று வெளியிட்டுள்ளது. இப்படி;

"கிடையாது"

"இயலாது"

"முடியாது"

-என்று மத்திய அரசு கூறியதாக பழி சுமத்தி மாநில முதலமைச்சருக்கு துளி அளவு கெட்டப் பெயரும் வந்துவிடக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கின்றன இங்குள்ள சில நாளேடுகள்! எனவே மத்திய அரசுக்கு தமிழகத்திற்கு மின்சாரம்

வழங்கக் கூடாது என்பது எண்ணமல்ல. அந்த மின்சாரத்தை வழங்கினால், உடனடியாக அதை எடுத்துச் செல்ல வழியில்லை என்பதைத்தான் மத்திய அரசு தெரிவிக்கின்றது.

அதைத் தெரிந்து கொண்டுதான் மத்திய அரசு அந்த வழித்தடத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் உச்ச நீதி மன்றத்திலே தமிழக அரசு கோரிக்கை வைத்துள்ளது. மத்திய அரசுக்கும் அந்தக் கோரிக்கையை ஏற்பதில் சிரமம் இருக்காது. ஆனால் அந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டாலும், அது இன்று தொடங்கி நாளையே முடிவடைந்து விடுகின்ற ஒன்றா என்றால் நிச்சயமாக இல்லை. அதனால் பயன் உடனடியாக தமிழகத்திற்குக் கிடைக்குமா என்றால் கிடைக்காது. அதற்கு என்ன வழி? மத்திய அரசுடன் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை இது. அதைத்தான் விடுதலையில் கூட தமிழர் தலைவர் வீரமணி முன்பே எழுதியிருந்தார். எனவே எதிலும் பிறரைக் குற்றம் சாட்டி தான் தப்பித்துக்கொள்ளும் போக்கிலிருந்து விடுபட்டு தமிழக முதலமைச்சர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும். உடனடியாக முதல் அமைச்சரோ, மின் துறை அமைச்சரோ டெல்லி சென்று உரியவர்களோடு அமர்ந்து பேசி, தமிழகத்தின் மின் தேவையைத் தீர்க்க உடனடியாக என்ன செய்யலாம் என்று கலந்தாலோசித்து முடிவு காண வேண்டும். பள்ளிகளிலே சில சிறு பிள்ளைகள் எதற்கெடுத்தாலும் ஆசிரியரிடம் புகார் செய்வதைப் போல, "நான் உச்ச நீதி மன்றம் போகிறேன், வழக்கு தொடுக்கிறேன்," என்பது பிரச்சினையைத் தீர்க்க நிச்சயமாக உதவிடாது.

அன்புள்ள,

மு.க.

10-11-2012

3672. மறைமலை நகரில்
- இளைஞர் அணி கருத்தரங்கு!

உடன்பிறப்பே,

வரும் 18-11-2012 அன்று திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம் சென்னை, மறைமலைநகரில், அண்ணா திடலில் நடைபெறவுள்ளது. காலை நிகழ்ச்சியில் மாநிலங்களவை உறுப்பினர் தம்பி திருச்சி என். சிவா "மொழிப்போர்" பற்றியும், பேராசிரியர் சபாபதி மோகன் "சமூகநீதி" பற்றியும், தம்பி பேராசிரியர் சுப. வீரபாண்டியன் "திராவிட இயக்க வரலாறு" பற்றியும் உரையாற்ற இருக்கிறார்கள். மாலை 4 மணி அளவில் நகைச்சுவைத் தென்றல், தம்பி திண்டுக்கல் ஐ. லியோனி அவர்களின் பட்டிமன்ற நிகழ்ச்சி, "இளைஞர்கள் இன்று பெரிதும் பின்பற்ற வேண்டியது மொழி உணர்வா? பகுத்தறிவா?" என்ற தலைப்பிலே நடைபெறவுள்ளது. அதன்பின்னர் கழக இளைஞர் அணியின் செயலாளர் தம்பி மு.க.ஸ்டாலின் வரவேற்புரை யாற்ற நானும், இனமானப் பேராசிரியர் அவர்களும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மத்தியில் கருத்துரையாற்ற விருக்கிறோம்.

கழகத்தின் வயது 63 என்றால், கழக இளைஞர் அணியின் வயது 32 என்றுதான் கூற வேண்டும். ஆம் 1980ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 20ஆம் நாள்தான் மதுரை ஜான்சி ராணி பூங்கா திடலில் தி.மு.கழகத்தின் இளைஞர் அணியின் தொடக்க விழா நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பி.டி.ஆர். பழனிவேல் ராசன் பேசும்போது, நான் அதற்கு சில நாட்களுக்கு முன்பு முரசொலியில் எழுதிய "என்னுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன" என்ற கடிதத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, "ஏன் அவ்வாறு எழுதினீர்கள்?" என்று மனம் வருந்திப் பேசினார். அவரைத் தொடர்ந்து பேசிய அன்றைய

மாநிலங்களவை கழக உறுப்பினர் வைகோ, அந்தக் கடிதத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, "தலைவர் அவர்களே, உங்கள் கடிதத்தில் கூடவே இருந்து

குழிபறிப்போர், குத்தீட்டி கொண்டு முதுகிலே குத்துவோர், நரிக்குணம் படைத்தோர், நயவஞ்சகம் கொண்டோர், அசூயைக்காரர் இவர்கள் மத்தியில் வாழ்வதை விட முடிவு எவ்வளவோ மேல் என்று எழுதியிருக்கிறீர்கள்! கூடவே இருந்து குழிபறிப்போரை நீங்கள் லட்சியம் செய்ய வேண்டியது அவசியம்தானா? உங்களுக்காக குருதியைக் கொட்டுவதற்கு ஒரு பெரும் கூட்டம் காத்திருக்கிறதே, அதை ஏன் நீங்கள் நினைக்கவில்லை? நயவஞ்சகம் கொண்டோர், நரிக் குணம் படைத்தோர் நாட்டிலே எந்த இயக்கத்திலும் இருக்கலாம். ஒரு விபீஷணன் உருவாவதற்காக அதை உங்களுடைய பேனா லட்சியம் செய்கிறது என்று சொன்னால், ஒரு லட்சம் இந்திரஜித்துகள் உங்கள் பின்னால் அணி திரண்டு இருப்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்! ஒரு எட்டப்பன் உருவாகலாம். பல நூறு ஆயிரம் ஊமைத் துரைகள் உங்களுக்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழகத்துக்குப் பின்னாலே இலட்சியத்தைக் காப்பதற்காக இருக்கிறார்கள்" என்று பேசினார். யார் பேசியது என்பதைவிட, என்ன கருத்தைப் பேசினார்கள் என்பதுதான் நினைவில் கொள்ள வேண்டியதாகும்.

அந்த விழாவில் நான் நிறைவுரை ஆற்றும் போது, "இன்றைய இளைஞர்கள் மிகப் பலர், ஏதோ அன்றாடம் மகிழ்ச்சியாக பொழுது போனால் போதும் என்று எண்ணுகின்ற இளைஞர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் நம்முடைய தாய்மொழியை உணர, தாயகத்தை உணர, நம் நாட்டுப் பற்றினைப்பெற, ஏற்றத்தாழ்வுகளற்ற சமுதாயத்தை உருவாக்குகின்ற மனப் பக்குவத்தைப் பெற, சமத்துவ நிலை எல்லாவற்றிலும் வேண்டும் என்கின்ற அந்த உறுதிப்பாட்டைப் பெற அவர்களை நாம் பயிற்றுவித்தாக வேண்டும். அதற்குத்தான் தி.மு. கழகத்தின் சார்பிலே இளைஞர் அணி எல்லா இடங்களிலும் வட்ட வாரியாக ஊர் வாரியாக, சிற்றூர் - பட்டி தொட்டிகளில் எல்லாம் உருவாக வேண்டும். "எழுச்சியுகம் காண்பதற்கு எழுந்து வந்த காளைகாள்; வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் தீரம் மிக்க இளைஞர்காள்!" என்று இளைஞர்களை அழைத்து "விருப்பம் உள்ளவராம் பெரும்

பதவியில் பல பேர், அவர் வேண்டாம், நெருப்பின் பொறிகளே, நீங்கள்தான் தேவை" என்று ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்பு ஈரோடு 'குடியரசு' அலுவலகத்திலே நான் எழுதிய கவிதை வரிகள் இன்றைக்கும் எனக்கு நினைவுக்கு வருகின்றன. இளைஞர்களை நம்பித்தான் இந்தச் சமுதாயம் இருக்கின்றது. இந்த நாடு இருக்கின்றது. இந்த நாட்டினுடைய எதிர்காலம் இருக்கிறது. அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு வாக்குகளைப் பெற்றுவந்து அமர்கின்ற அரசுகளுக்கு இருக்கின்றது" என்று நான் குறிப்பிட்டேன்.

இளைஞர் அணி இவ்வாறு தொடங்கப்பட்ட பிறகு, அதன் இரண்டாம் ஆண்டு விழா திருச்சி மாநகரில் 1982ஆம் ஆண்டு ஜூலை 31, ஆகஸ்ட் 1 ஆகிய நாட்களில் மிகப் பெரிய மாநாட்டினைப்போல நடத்தப்பட்டது. அனைத்து மாவட்டங்களில் இருந்தும் வந்த மாணவர்கள், இளைஞர்கள், பிரதிநிதிகளோடு கலந்துரையாடல் என்ற வகையிலும், இரண்டாம் நாளன்று இளைஞர் அணியின் பேரணியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

10-4-1983 அன்றுதான் தி.மு.க. இளைஞர் அணிக்கு தம்பி தளபதி மு.க. ஸ்டாலின் அமைப்பாளராகவும், திருச்சி சிவா, பரிதி இளம்வழுதி, வாலாஜா அசேன், தாரைமணியன், முகவை பஞ்சவர்ணம், நெல்லை ஜெயம் ஜூலியஸ் ஆகியோர் அமைப்புக் குழு உறுப்பினர்களாகவும் பொதுச் செயலாளர் அவர்களால் நியமிக்கப்பட்டனர். அந்த இளைஞர் அணி அமைப்புக் குழு மாநிலம் முழுவதும் மாவட்டந்தோறும் சென்று அமைப்புக் கூட்டங்களை நடத்தி இளைஞர் அணி அமைப்புகளை உருவாக்கினர். அதே 1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25ஆம் நாள், இளைஞர் அணிக்கு தம்பி மு.க. ஸ்டாலின் செயலாளராகவும், திருச்சி சிவா, தாரை மணியன் இருவரும் துணைச் செயலாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர். 31-1-1990 அன்று மதுரையிலும், 21-6-1999 அன்று சென்னையிலும், 3-3-2001 அன்று திருச்சியிலும் இளைஞர் அணி கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

பல்வேறு கட்சிகள் தங்கள் கட்சியின் முக்கியப் பொறுப்புகளுக்கே நியமன முறையில் தான் அறிவிக்கிறார்கள். பொதுக்குழு அழைப்பு ஒவ்வொரு முறையும் அந்தக் கட்சிகளில் வெவ்வேறு நபர்களுக்கு அனுப்பப்படும். அழைப்புப் பெற்றவர்கள் எல்லாம் பொதுக் குழு உறுப்பினர்கள் ஆகிவிடலாம். ஆனால் தி.மு.

கழகத்தைப் பொறுத்தவரை கிளைக்கழகச் செயலாளருக்கான தேர்தல் முதல், கழகத் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் பதவி வரை தேர்வு நடத்தப்பட்டு அதிலேதான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த நடைமுறை நம்முடைய கழகத்திலேதான் நடைபெறுகிறது.

இந்த முறை இளைஞர் அணிக்கான அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களைக் கூட அவ்வாறு நியமனத்தின் மூலம் அறிவித்திடாமல், மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் பரிந்துரைகளைப் பெற்று, அவர்கள் சொல்கின்றவர்களையே நியமனம் செய்யாமல், இளைஞர் அணியின் செயலாளர் தன்னுடைய பல்வேறு பணிகளுக்கிடையே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நேரடியாகச் சென்று, தமிழ்நாடு தேர்வாணையக் கழகம், ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்துகின்ற தேர்வினைவிட மேலாக, இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் பணிகளுக்கு விண்ணப்பம் செய்தவர்களையெல்லாம் நேரிலே அழைத்து மணிக்கணக்கிலே அமர்ந்து அந்த விண்ணப்பதாரர்களையெல்லாம் - அவர்களிடம் கழகத்தைப் பற்றி கேள்விகளைக் கேட்டு, அவர்கள் குடும்பப் பின்னணி பற்றியெல்லாம் தெரிந்து ஆட்களை நேரில் கண்டு தேர்வுசெய்தார். அதில் குறிப்பாக வயது வரம்பை நிர்ணயித்து அதனைக் கடுமையாக நடைமுறைப்படுத்தினார். கட்சியில் மூத்த உறுப்பினர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எந்த வகையிலும் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் போன்ற நிர்வாகப் பொறுப்புகளில் இடம் பெற்று விடக் கூடாது என்பதையும் முக்கியமாகக் கருத்திலே கொண்டார்.

21-6-1999 அன்று சென்னையில் அண்ணா அறிவாலயத்தில், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணி மாவட்ட, ஒன்றிய, நகரக் கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நான் ஆற்றிய உரையும் "எழுமின் இளைஞர்காள்!" என்ற தலைப்பில் கழக இளைஞர் அணியினால் சிறு நூலாக வெளியிடப்பட்டது.

2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7ந்தேதி முதல் 15 நாள், முரசொலியில் "இளைஞர்களுக்கு வழி விடுவோம்" என்ற தலைப்பில் உடன்பிறப்புகளுக்கான கடிதங்களாக உலகச் சிந்தனையாளர்கள், புரட்சியாளர்களின் வரலாற்றுக் குறிப்புகளையெல்லாம் நான் தொகுத்து எழுதி, அதனை

கழக இளைஞர் அணியின் சார்பில் சிறு நூலாகவே வெளியிட்டிருக்கிறார்கள். அந்த நூலினை தற்போது இளைஞர் அணியின் அமைப்பாளர்களாக, துணை அமைப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தம்பிகள் எல்லாம் வாங்கிப் படித்திட வேண்டும். மேலும் நமது கழகத்தின் வரலாற்றினைப் புரிந்து கொள்ள உதவும் நூல்களை யெல்லாம் வாங்கிப் படிக்க வேண்டும்.

தி.மு.கழக இளைஞர் அணியின் வெள்ளி விழா மலர் 2006ஆம் ஆண்டு வெளியிட்ட போது, அந்த மாநாட்டு சிறப்பு மலரிலேதான் நான் எழுதும்போது,

"இளைஞர்காள்!
அண்ணா அமைத்த இல்வத்தில்
அகல் விளக்குகளாவீர்!
இகல் வெல்லும் இயக்கப் படையின்
ஈட்டி முனைகளாவீர்!
ஈடற்ற என் உடன்பிறப்புக்களாவீர்!
பெரும் படை திரட்டிடுவீர்!
அரும் பணி ஆற்றிடுவீர்!
இளைஞனே! நீயே இந்த மண்ணின் மானம்!
வானம் உனக்கு வணக்கம் தெரிவித்திட
வாளேந்திய பரம்பரையின்
வழித் தோன்றலென வாய்த்திடு!"

என்று என் கைப்பட எழுதிக் கொடுத்தேன்.

2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில்தான் நெல்லையில் தி.மு. கழக இளைஞர் அணியின் மாநில முதல் மாநாடு நடைபெற்றது. இந்தத் தொடர் வளர்ச்சியில் மற்றும் ஓர் கட்டமாகத்தான், அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கம் 18ந்தேதி மறைமலைநகரில் நடைபெறவுள்ளது. அந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளவுள்ள இளைஞர் அணியின் தம்பிமார்களையெல்லாம் வாரீர், வாரீர் என்று அழைக்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

17-11-2012

3673. கரும்பு விவசாயிகள் கவனத்திற்கு!

உடன்பிறப்பே,

2012-2013ஆம் ஆண்டுக்கான கரும்பு பருவத்திற்கு, கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 2,350 என்று விலை நிர்ணயம் செய்ய நான் உத்தர விட்டுள்ளேன் என்று முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்து, "எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும், மன மகிழ்ச்சியையும் அளிக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் இந்த அறிவிப்பு கரும்பு விவசாயிகளுக்கு உண்மையிலேயே ஊக்கத்தையும், உற்சாகத்தையும், மன மகிழ்ச்சியையும் அளித்திருக்கிறதா என்ற விவரம் இரண்டொரு நாட்களில் தெரியும். கரும்புக்கான கொள்முதல் விலையை ஜெயலலிதா அறிவித்தவுடன், அதை வெளியிட்டுள்ள தமிழக நாளேடுகள், அந்த விலை உயர்வு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடியதா என்பது பற்றி, அந்த விவசாயி களின் சங்கப் பிரதிநிதிகளிடம் கேட்டு வெளியிட வேண்டுமென்று எண்ணவில்லை. அக்கறை இருந்தால் அவர்கள் சொல்லட்டும், அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்றிருக்கிறார்கள். ஆனாலும் தென்னிந்திய கரும்பு உற்பத்தியாளர் சங்கத்தின் செயல் தலைவர் உடனடியாக இந்தக் கரும்பு விலை நிர்ணயம் பற்றி பேட்டி அளித்து, அது "தினகரன்" இதழில் மட்டும் வெளிவந்துள்ளது. அது வருமாறு :-

"கரும்பு உற்பத்தியாளர்கள் மிகக் கடுமையான நெருக்கடிகளுக்கு இடையே கரும்பு விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மின் பற்றாக்குறை, உற்பத்தி செலவு அதிகரிப்பு, தண்ணீர்ப் பற்றாக் குறை என பல நெருக்கடிகள் உள்ளன. எனவே, உற்பத்திச் செலவுகளை உரிய ஆதாரங்களுடன் பட்டியலிட்டு, கரும்பு டன்னுக்கு 3,000 ரூபாய் கொள்முதல் விலை வழங்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைத்துப் போராடி

வருகிறோம். ஆனால், தமிழக அரசு தற்போதுள்ள விலையை விட 250 ரூபாய் மட்டுமே உயர்த்தி, டன்னுக்கு 2,350 ரூபாய் என்று விலையை அறிவித்திருப்பது வேதனையாக இருக்கிறது. கரும்பு உற்பத்தியாளர்களுக்கு இது திருப்தி அளிக்கவில்லை" என்றெல்லாம் கரும்பு உற்பத்தியாளர் சங்கத்தின் செயல் தலைவர் தெரிவித்திருக்கிறார். எனவே, முதல்அமைச்சர் ஜெயலலிதா சொல்லியிருப்பதைப்போல, அவரது தலைமையிலான அரசின் இந்த "உத்தரவு" கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தையோ, உற்சாகத்தையோ, மன மகிழ்ச்சியையோ அளிக்க வில்லை.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், அதாவது 6-1-2012 தேதிய நாளேடுகளில் "கரும்புக்கான ஆதார விலை ரூ. 2,100 ஆக உயர்வு - ஜெயலலிதா உத்தரவு" என்ற தலைப்பில் வந்துள்ள அறிக்கையில், "எனது தலைமையிலான அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது" - "மானியம் வழங்க நான் உத்தரவிட்டேன்" - "நான் ஒதுக்கீடு செய்துள்ளேன்" - "என்னுடைய இந்த நடவடிக்கைகளின் மூலம்" என்றெல்லாம் அடைமொழி அலங்காரம் கொடுத்து "இந்த ஆண்டு கரும்புக்கான ஆதார விலையை போக்கு வரத்து செலவு 100 ரூபாய் உட்பட 2,100 ஆக உயர்த்த நான் உத்தரவிட்டுள்ளேன்" என்று ஜெயலலிதா தெரிவித்ததாக, அதனை தமிழகத்தின் நாளேடுகள் கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்தன. அந்த 2,100 ரூபாயைத்தான் இந்த ஆண்டு மேலும் 250 ரூபாய் மட்டுமே உயர்த்தி, 2,350 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார். (அதாவது வழக்கறிஞர் ஷேம நிதி அளித்ததைப்போல)

ஜெயலலிதா விடுத்துள்ள நீண்ட அறிக்கையில், கழக ஆட்சியில் எந்த அளவு கரும்பு கொள்முதல் விலையாக இருந்தது என்பதைப் பற்றி குறிப்பிடவே இல்லை. மேலும் "கரும்புக் கான ஆதார விலை உயர்த்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை மனதில் கொண்டு முதற்கட்டமாக இந்த ஆண்டு இந்த விலை உயர்வு" என்றும் ஜாக்கிரதையாகத் தெரிவித்திருக்கிறார். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே சொன்னது என்ன?

அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் பக்கம் 3இல் "கரும்பு உற்பத்தி புரட்சித் திட்டம்" என்ற தலைப்பில் "எத்தனால் எரிபொருள் உற்பத்தியைப் பெருக்குகிற வகையில், கரும்பு கொள்முதல் விலை; டன்னுக்கு 2,500/- ரூபாயாக

உயர்த்தப்படும் - அரசு கரும்பு ஆலைகள் நவீனப்படுத்தப்பட்டு நிர்வாகம் சீரமைக்கப்படும்" என்று கூறியிருந்தார்கள். தேர்தல் அறிக்கையிலே 2,500 ரூபாய் என்று சொல்லிவிட்டு, கடந்த ஆண்டும் 2,100 ரூபாய் என்றுதான் அறிவித்தார்கள். அப்போது கரும்பு விவசாயிகள் எல்லாம் இந்த ஆண்டாவது டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் என்று அ.தி.மு.க. அரசு அறிவிக்கும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த ஆண்டிலும் 2,350 ரூபாய் என்று மட்டுமே அறிவித்திருக்கிறார்கள்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில், 7.11.2009ஆம் நாளிட்ட தினமணி நாளிதழில் அறிக்கை வெளியிட்ட ஜெயலலிதா, "டன்னுக்கு ரூ. 2,500 வழங்க வேண்டும் என்று கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்திருக்கும் நிலையில் மத்திய அரசின் அறிவிப்பினால் டன்னுக்கு ரூ. 139 குறைவாகப் பெறக் கூடிய அவல நிலைக்கு கரும்பு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில் தமிழக அரசு என்ன முடிவெடுக்கப் போகிறது? அவர்களது கபட நாடகங்களை இனி நடத்த முடியாது!" என்றெல்லாம் அவருக்கே உரிய மொழியில் கேள்வி கேட்டிருந்தார். ஆனால் அப்படிக் கேள்வி கேட்ட ஜெயலலிதாவைப் பார்த்து இப்போது, இது என்ன கபட நாடகம்? கரும்புக்கு டன் ஒன்றுக்கு 2,500 ரூபாய் என்று ஏன் விலை நிர்ணயம் செய்யவில்லை? என்று கரும்பு விவசாயிகள் கேட்க மாட்டார்களா என்ன?

கரும்புக் கட்டுப்பாட்டு சட்டம் 1966ன்படி, மத்திய அரசு அறிவிக்கும் சட்டபூர்வ குறைந்தபட்ச விலை, தமிழக விவசாயிகளுக்கு கட்டுப் படியாகவில்லை என்பதால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் சர்க்கரை ஆலை உரிமையாளர்களையும், விவசாயிகள், விவசாயச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலை தனி அலுவலர்களையும் கொண்ட முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டி விவசாயிகளுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையை மாநில அரசின் பரிந்துரை விலையாக அறிவித்து வழங்கி வந்தது.

ஆனால், 2001ல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. 5 ஆண்டு காலம் முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டியோ, விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், ஆலை உரிமையாளர்கள், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் தனி அலுவலர்களின் கருத்துக்களைக் கேட்டோ முடிவெடுக்காமலேயே மத்திய அரசு

நிர்ணயித்த விலையை மட்டுமே வழங்கி வந்ததை கரும்பு விவசாயிகள் அனைவரும் அறிவார்கள்; அதனை அவர்கள் நிச்சயம் மறந்திருக்கமாட்டார்கள்.

2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி ஜெயலலிதா தலைமையில் அமைந்தபோது 9-11-2001 ஆம் நாள் அமைச்சரவை கூட்டத்தைக் கூட்டி, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் மத்திய அரசின் சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலை மட்டும் தரப்படும், மாநில அரசின் பரிந்துரை விலையை வழங்கமாட்டோம் என்று தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு ஜெயலலிதா தெரிவித்தார். அ.தி.மு.க. அமைச்சரவை நிறை வேற்றிய தீர்மானத்தின்படி 2001-2002 முதல் 2004-2005 வரை நான்காண்டு காலம் மத்திய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையான

ரூ. 795 மட்டும் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது என்பதையும் கரும்பு விவசாயிகள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

2009-2010ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு 9.5 சதம் சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1077.60/-ம் ஒவ்வொரு 0.1 சர்க்கரை பிழிதிறனுக்கும் ரூ.11.30/-ம் அளிப்பது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாது என மாநில அரசு கருதியதால், பரிந்துரை விலையாக ரூ.359.80/- ஐ கூட்டி மாநில அரசின் பரிந்துரை விலையாக 9.5 சத சர்க்கரை பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1437.40 என்றும், சராசரி பிழிதிறன் அடிப்படை யில் கூடுதலாக ரூ.22.60/-எனவும், வண்டி வாடகையாக டன் ஒன்றுக்கு ரூ.90/ம் சேர்த்து ஆகமொத்தம் ஒரு டன் கரும்புக்கு சராசரியாக ரூ.1550/- வழங்கிய அரசு - ஜெயலலிதா பாணியிலே சொல்ல வேண்டுமென்றால் "எனது தலைமையிலே நடைபெற்ற தி.மு. கழக அரசு தான்"!

மத்திய அரசு 9.5 சதம் பிழிதிறன் கொண்ட ஒரு டன் கரும்புக்கு ரூ.1298.40 என விலை நிர்ணயம் செய்து அறிவிப்பதற்கு முன்பே, நமது மாநிலத்தில் முத்தரப்பு கூட்டத்தைக் கூட்டி விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், ஆலை உரிமை யாளர்கள், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை தனி அலுவலர்கள் ஆகியோரின்

கருத்துக்களைக் கேட்டு ஒரு டன் கரும்புக்கு ரூ.1550/-விலை கிடைக்க 29.9.2009ல் ஆணையிடப்பட்டது.

உச்சநீதி மன்றம் கரும்பு விலை நிர்ணயம் சம்பந்தமாக அளித்த தீர்ப்பில் மத்திய அரசின் சட்டபூர்வ குறைந்தபட்ச விலையோடு மாநில அரசு கூடுதலாக பரிந்துரை வழங்கலாம் என 5-5-2004 அன்று தீர்ப்பு வழங்கிய பிறகு, அந்த தீர்ப்பை உடனடியாக அமல்படுத்தாமல், அதன் பிறகு 16 மாத காலம் சும்மாயிருந்துவிட்டு, 2006ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தல் வந்ததை முன்னிட்டு ஒரு டன் கரும்புக்கு 1014 ரூபாய் என்று ஜெயலலிதா ஆட்சியிலே அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டதே தவிர அந்தத் தொகை வழங்கப்படவில்லை. ஜெயலலிதா ஆட்சி புரிந்த அந்த நான்காண்டுகளுக்கு மட்டும் விவசாயி களுக்கு ஏற்பட்ட நட்டம் ஏறத்தாழ ரூ.440 கோடி என்பதையும் இன்றைய முதலமைச்சர் அவர் களுக்கு நினைவூட்டுகின்றேன்.

கரும்பு விலையைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமேயானால், 2006-2007இல் தி.மு. கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின், அந்த ஆண்டு மத்திய அரசு டன் ஒன்றுக்கு கரும்பு விலையை 802.50 ரூபாய் என்று நிர்ணயித்தபோது, தமிழக அரசு 221.50 ரூபாய் உயர்த்தி, டன் ஒன்றுக்கு 1,024 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தது.

2007-2008ஆம் ஆண்டு மத்திய அரசு நிர்ணயித்த கரும்பு விலையை டன் ஒன்றுக்கு ரூ. 811.80 என்பதை, ரூ. 222.20 உயர்த்தி, டன் ஒன்றுக்கு 1,034 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தோம்.

2009-2010ஆம் ஆண்டு ஏற்கனவே நான் மேலே குறிப்பிட்டதைப் போல போக்குவரத்துக் கட்டணம் மற்றும் ஊக்கத் தொகையெல்லாம் சேர்த்து டன் ஒன்றுக்கு 1,550 ரூபாய் என்று கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது, இது பின்னர் 1,650 ரூபாய் அளவிற்கும் உயர்ந்தது.

2010-2011ஆம் ஆண்டு மேலும் 350 ரூபாய் டன் ஒன்றுக்கு உயர்த்தி, 2000 ரூபாய் என்று கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ஆக ஒவ்வொரு ஆண்டும் தி.மு.கழக ஆட்சியில் 200 ரூபாய் என்றும், 300 ரூபாய் என்றும், 350 ரூபாய் என்றும்

கரும்புக்கு விலை கூடுதலாக நிர்ணயம் செய்யப்பட்டதற்கு மாறாக, கடந்த ஆண்டு ஜெயலலிதா அரசு டன் ஒன்றுக்கு 2000 ரூபாய் என்பதை 2100 ரூபாயாக, அதாவது 100 ரூபாய் மட்டுமே டன் ஒன்றுக்கு உயர்த்தியது. இந்த ஆண்டும் கடந்த ஆண்டைவிட வெறும் 250 ரூபாய் அளவிற்கு மட்டுமே உயர்த்தியுள்ளது.

வழக்கமாக விவசாயிகள், ஆலை அதிபர்கள், அரசு அதிகாரிகள் அடங்கிய முத்தரப்பு குழுவினர் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் தான் விலை அறிவிப்பது வழக்கம். ஆனால் தமிழக அரசு தன்னிச்சையாக விலை அறிவித்திருப்பது ஏமாற்றம் அளித்துள்ளது.

எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருந்த போது, தி.மு. கழக ஆட்சியிலே ஜனநாயக ரீதியாக கரும்பு விலை நிர்ணயம் செய்யப்பட்ட போதெல்லாம், அதைக் குறை கூறிக் குற்றம் சொன்ன ஜெயலலிதா, தற்போது கரும்பு விவசாயிகளின் செவிகளில் கசப்பான செய்தியைப் பாய்ச்சியதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

2001-2002இல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை ரூ.620.50. அதற்கு முந்தைய ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் கொடுத்த ரூ.775 என்ற விலையைத்தான் அ.தி.மு.க. அரசு அப்போது அறிவித்ததே தவிர, எந்தவிதமான உயர்வும் செய்யவில்லை.

2002-2003ஆம் ஆண்டிலும், அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை ரூ.695. அப்போதும் அ.தி.மு.க அரசு - தி.மு.கழக ஆட்சியில் கொடுத்த ரூ.775 என்று தான் விலை நிர்ணயம் செய்ததே தவிர, எந்த விதமான உயர்வும் செய்யவில்லை.

2003-2004இல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை ரூ.730. அப்போதும் அ.தி.மு.க அரசு தி.மு.கழக ஆட்சியில் கொடுத்த ரூ.775 என்றுதான் விலை நிர்ணயம் செய்ததே தவிர, எந்தவிதமான உயர்வும் செய்யவில்லை.

2004-2005இல் அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை ரூ.745. அப்போதும் அ.தி.மு.க. அரசு-தி.மு. கழக ஆட்சியில் கொடுத்த ரூ.775 என்றுதான் விலை நிர்ணயம் செய்ததே தவிர, எந்தவிதமான உயர்வும் செய்யவில்லை.

2005-2006இல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை ரூ.795. இந்த ஆண்டில்தான், நான் மேலே கூறியதைப்போல நாடாளுமன்றத் தோல்வியின் காரணமாகவும், சட்டமன்றத் தேர்தலை மனதிலே கொண்டும் 1014 ரூபாய் என்று அ.தி.மு.க. ஆட்சியினர் விலை நிர்ணயம் செய்தார்களே தவிர, அவர்கள் ஆட்சி செய்த ஐந்தாண்டு காலத்தில் நான்காண்டு காலத்திற்கு எந்த விதமான விலை உயர்வும் செய்யாதவர்கள்தான் அ.தி.மு.க. ஆட்சியினர். தி.மு.கழக ஆட்சியில் தான் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக விலையை அதிகரித்து நிர்ணயம் செய்தோம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த உண்மைகளை யெல்லாம் மறைத்துவிட்டு, அல்லது தமிழ்நாட்டு மக்கள் மறந்திருப்பார்கள் என்ற எண்ணத்தோடு கரும்புக்கு கொள்முதல் விலையை நிர்ணயம் செய்து ஜெயலலிதா உத்தரவிட்டிருக்கிறார் என்பதை கரும்பு விவசாயிகள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

21-11-2012

3674. விடைதான் என்னவோ; இந்த வினாவுக்கு!

உடன்பிறப்பே,

எத்தனையோ வழக்குகள் நீதி மன்றங்களில் ஒரு சில ஆண்டுகளில் முடிந்து விடுகின்றன. சில வழக்குகள் ஆண்டுக் கணக்கில் முடியாமல் நீடித்துக் கொண்டே செல்கின்றன. அப்படிப் பட்ட வழக்குகளில் ஒன்றுதான் 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஜெயலலிதா நான்கு தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்த வழக்காகும்.

ஜெயலலிதா 2001ஆம் ஆண்டு தேர்தலில் நான்கு தொகுதிகளில் ஏன் போட்டியிட்டார் என்பது பற்றி ஒரு சிறிய விளக்கத்தைத் தருகிறேன்.

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பு, டான்சி நில பேர ஊழல் வழக்கில் தனி நீதிமன்றம் 9-10-2000 அன்று ஜெயலலிதாவுக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனையை விதித்திருந்தது. இதையடுத்து இரண்டாண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்ற விதிமுறைப்படி ஜெயலலிதாவும் தேர்தலில் போட்டியிட முடியாது" என்று சட்ட நிபுணர்கள் கூறினார்கள். அந்த நிலையில் ஜெயலலிதா சென்னை உயர் நீதிமன்றத்தில் 3-11-2000 அன்று ஒரு மனுவைத் தாக்கல் செய்தார். அதில் தனி நீதி மன்றம் அளித்தத் தீர்ப்பை நிறுத்திவைத்து, தன்னைத் தேர்தலிலே போட்டியிட அனுமதிக்குமாறு கோரியிருந்தார். அந்த மனுவை விசாரித்த நீதிபதி மலை சுப்பிரமணியன், இந்தியத் தண்டனைச் சட்டம் 409வது பிரிவின்கீழ் குற்றவாளி என்று தீர்ப்பு கூறப்பட்டிருந்தால், அதனை தம்மால் நிறுத்தி வைக்க முடியும் என்றும், ஆனால் அந்த வழக்கில் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் தனி நீதி மன்றம் கூறியிருக்கும் தீர்ப்பை தன்னால் நிறுத்தி வைக்க முடியாது என்றும் நீதிபதி கூறி, ஜெயலலிதாவின் மனுவை 11-4-2001 அன்று தள்ளுபடி செய்தார்.

ஏற்கனவே தனி நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பால், ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டால், அதனால் ஏற்படும் பிரச்சினைகளை இந்த நீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டாம் என்றும், அதனை தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்குமாறும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறியிருந்தார்.

அந்தத் தீர்ப்பு குறித்து தேர்தல் ஆணையம் 9-4-2001 அன்று பரிசீலித்தது. தலைமை தேர்தல் ஆணையராக அப்போதிருந்த திரு. எம்.எஸ்.கில் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அந்த ஆலோசனைக் கூட்டத்தில், உயர் நீதிமன்ற நீதிபதி மலை சுப்பிரமணியம் அவர்கள் அளித்த தீர்ப்பு விரிவாக ஆராயப்பட்டது. மேலும், அந்தத் தீர்ப்பு குறித்து இந்தியாவில் உள்ள மூத்த வழக்கறிஞர்கள் தெரிவித்த கருத்துக்களையும் பரிசீலித்தனர். இறுதியாக, ஊழல் குற்றவாளி என்ற தீர்ப்புக்கு நீதிமன்றம் தடை விதிக்காத நிலையில், சட்டசபை தேர்தலில் போட்டியிட ஜெயலலிதாவுக்கு தகுதி இல்லை என்று முடிவெடுக்கப்பட்டது.

தேர்தல் ஆணையம் டெல்லியில் கலந்து பேசிக் கொண்டிருந்த அதே நாளில், கிருஷ்ணகிரி தொகுதியில் போட்டியிட ஜெயலலிதா வேட்பு மனுத் தாக்கல் செய்து விட்டார். மேலும் அதற்கடுத்த நாளான 17-4-2001 அன்று ஆண்டிப்பட்டி தொகுதியிலே வேட்பு மனு தாக்கல் செய்தார். வேட்பு மனு தாக்கல் செய்யும் கடைசி நாளான 23-4-2001 ஜெயலலிதா சார்பில் புதுக்கோட்டை தொகுதியிலும், புவனகிரி தொகுதியிலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

ஏற்கனவே முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவுக்கு ஒரு வேட்பாளர் இரண்டு தொகுதிகளுக்கு மேல் போட்டியிட முடியாது என்பது நன்கு தெரியும். இருந்தாலும், நான்கு தொகுதிகளிலே அவர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யக் காரணம், எப்படியும் தேர்தல் அதிகாரி தனது வேட்பு மனுவினைத் தள்ளுபடி செய்துவிடுவார் - மக்களிடம் சென்று தன்னைத் தேர்தலில் போட்டியிடாமல் செய்து விட்டார்கள் என்று பிரச்சாரம் செய்து, அதன் மூலம் மக்களின் அனுதாபத்தைச் சம்பாதிக்கலாம் என்று எண்ணி செயல்பட்டார்.

இந்திய அரசியல் வரலாற்றில், ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற காரணத்தால் தேர்தலில் போட்டியிட முடியாது என்று முன்னாள் முதல்வர் ஒருவரின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது அதுவே முதல் முறை.

அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை ஜெயலலிதா முதலமைச்சராக இருந்து கொண்டே, குறைந்த விலைக்கு வாங்கியவர்! அதற்காகத் தண்டனை விதித்தது நீதிமன்றம்! தண்டனைக் குரிய ஒருவர் தேர்தலில் போட்டியிட முடியாது என்று கூறியது தேர்தல் ஆணையம்! ஒருவர் இரண்டு இடங்களுக்கு மேல் போட்டியிடக் கூடாது என்ற விதிக்கு மாறாக நான்கு இடங்களில் போட்டியிட்டவர் ஜெயலலிதா! அந்த வேட்பு மனுக்கள் செல்லாது என்று நிராகரித்தனர் தேர்தல் அதிகாரிகள்!

ஆனால் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டவுடன், ஜெயலலிதா, தி.மு.க.தான் பல வழிகளில் சூழ்ச்சி செய்து அவருடைய வேட்பு மனுவை நிராகரிக்கச் செய்துவிட்டது என்றும், நீதிமன்றத்தை மிரட்டி, பல்வேறு தீர்ப்புகளை அவருக்கு எதிராக மாற்றச் செய்தது என்றும் குற்றஞ்சாட்டினார். திட்டமிட்டு, அவரைத் தேர்தலில் நிற்காத அளவிற்கு நாம் செய்து விட்டோம் என்று ஒவ்வொரு கூட்டத்திலும் ஒப்பாரி வைத்து மக்களின் அனுதாபத்தைப் பெற முயற்சித்தார். இறுதியாக அந்தத் தேர்தலில் அந்த அனுதாபம்தான் வெற்றி பெற்றது.

ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டது குறித்துச் செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது, "மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதில் எந்த மகிழ்ச்சியும் எனக்கு இல்லை!" என்று கூறினேன்.

ஜெயலலிதா வேட்பு மனு தாக்கல் செய்த நான்கு தொகுதிகளில் உள்ள தேர்தல் அதிகாரிகளை "முதலமைச்சர்" என்ற முறையில் நான் மிரட்டியதால் தான் அவர்கள் வேட்பு மனுக்களைத் தள்ளுபடி செய்தார்கள் என்று ஜெயலலிதா புகார் கூறினார். ஆனால், அந்த நேரத்தில் அந்தத் தேர்தல் அதிகாரிகளுக்கெல்லாம் தலைமை அதிகாரியாக இருந்தவரிடம் செய்தியாளர்கள் சந்தித்து, இது பற்றிக் கேட்டதற்கு, தலைமைத் தேர்தல் அதிகாரி, "ஆங்காங்குள்ள தேர்தல் அதிகாரிகள் தங்கள் கடமையினைச் சட்டப்படிச் செய்துள்ளனர் - அவர்கள் பணி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது - அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் கூற முடியாது!" என்று பதிலளித்தார்.

இன்னும் சொல்ல வேண்டுமேயானால், தற்போது அம்மையாருக்காக அடிக்கடி பரிந்து வாதாடிக் கொண்டிருக்கின்ற நடிகர் சரத்குமார், அந்த நேரத்தில் 26-4-2001 அன்று ஓர் அறிக்கை

வெளியிட்டார். அந்த அறிக்கையில், "அரசியலில் இதுவரை நடந்திராத ஒரு கோழை நாடகத்தை அரங்கேற்றியிருக்கிறார், செல்வி ஜெயலலிதா. படித்தவர் - ஒரு முன்னாள் முதலமைச்சர் - மத்திய நல்லாட்சியைத் தனது சுயலாபத்திற்காகக் கவிழ்க்கும் அளவிற்கு அரசியல் தெரிந்தவர் - நான்கு தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்தார். ஊழல் குற்றம் புரிந்த குற்றவாளி என்ற காரணம் சொல்லி அவரது வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. அரசியல் அரங்கிலே செல்லாக் காசாகி விடுவோம் என்று தெரிந்து கொண்டு அவர் அப்படிச் செய்தார்" என்றெல்லாம் அந்த அறிக்கையில் கூறி இருந்தார்.

எப்படியோ, 2001ஆம் ஆண்டு, அதாவது 11 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சட்டப் பேரவை தேர்தலில் ஜெயலலிதா புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, புவனகிரி, ஆண்டிப்பட்டி ஆகிய நான்கு தொகுதிகளில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தார். இரண்டு தொகுதிகளுக்கு மேல் ஒரு வேட்பாளர் வேட்பு மனு தாக்கல் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே ஜெயலலிதா நான்கு தொகுதிகளில் வேட்பு மனுதாக்கல் செய்ததற்காக அவர் மீது வழக்கு பதிவு செய்ய வேண்டுமென்று கோரி, தி.மு.கழக நாடாளுமன்ற உறுப்பினர் செ. குப்புசாமி சென்னை உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை உயர் நீதிமன்றம் விசாரித்து, ஜெயலலிதா மீது வழக்கு பதிவு செய்ய தேர்தல் அதிகாரிக்கு 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் உத்தரவிட்டது.

இதை எதிர்த்து ஜெயலலிதா உச்ச நீதி மன்றத்தில் அப்பீல் மனு தாக்கல் செய்தார். அதை விசாரித்த உச்ச நீதி மன்றம் ஜெயலலிதா மீது கிரிமினல் வழக்குகள் பதிவு செய்ய ஐகோர்ட் பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதித்து 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் உத்தரவு பிறப்பித்தது. இந்த மனுதான் நீதிபதிகள் தத்து, சந்திரமௌலி பிரசாத் ஆகியோர் முன் 20-11-2012 அன்று விசாரணைக்கு வந்துள்ளது.

அப்போது ஜெயலலிதா சார்பாக வாதாடிய மூத்த வழக்கறிஞர் திரு. லலித் அவர்கள், நான்கு தொகுதிகளில் ஜெயலலிதா வேட்பு மனு தாக்கல் செய்தது சரியானதுதான், அவரது மூன்று வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இதைக் கருத்தில் கொண்டுதான் தேர்தல் அதிகாரி அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் சென்னை உயர் நீதி மன்றம் தேர்தல்

அதிகாரி வழக்கு பதிவு செய்ய உத்தரவிட்டது தவறானது, அதை ரத்து செய்ய வேண்டும் என்று வாதாடினார்.

திரு. குப்புசாமி சார்பாக வாதாடிய மூத்த வழக்கறிஞர்கள் திரு. அல்டாப் அகமது அவர்களும், திரு. சண்முகசுந்தரம் அவர்களும், இரண்டு தொகுதிக்கு மேல் ஒருவர் போட்டியிடக் கூடாது என்று தெரிந்திருந்தும், உயர் பதவியில் இருப்பவர் நான்கு தொகுதிகளில் வேட்பு மனுதாக்கல் செய்தது தவறானது, எனவே ஜெயலலிதாவின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார்கள்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தேர்தலில் போட்டியிடும் ஒருவர் இரண்டு தொகுதிக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்யக் கூடாது என்று சட்டம் கூறும்போது, ஏன் ஜெயலலிதா நான்கு தொகுதிகளில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தார்? முதல்வராக இருந்த ஒருவர் இப்படி மனு தாக்கல் செய்தது ஏன்? கட்சியின் தலைவராக இருப்பவர், பொது ஊழியராக இருக்கும் ஒருவர் இப்படி வேட்பு மனு தாக்கல் செய்தது தவறானது. இதுபோல செய்திருப்பது நியாயமா? சரியா ? என்றெல்லாம் கேட்டதோடு வழக்கினை 21ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்கள்.

நமது வழக்கறிஞர் திரு. அல்டாப் அகமது மேலும் கூறும்போது, புவனகிரி தொகுதியில் ஜெயலலிதா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவில், அவர் ஏற்கனவே ஆண்டிப் பட்டி மற்றும் புதுக்கோட்டை தொகுதிகளில் மனு தாக்கல் செய்தது, மறைக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு மறைத்தது, தேர்தல் ஆணைய விதிமுறைப்படி ஆறு ஆண்டு சிறைத் தண்டனைக்குரிய குற்றம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் செய்தியை 21-11-2012 அன்று 'தினமலர்' நாளேடு தனது நான்காவது பக்கத்தில் "வர்த்தகச் செய்தி"களுக்கு இடையே யாரும் பார்த்துவிடக் கூடாது என்ற எண்ணத்தோடு வெளியிட்டது. 'தினமணி' நாளேடோ தனது ஒன்பதாவது பக்கத்தில் கீழே ஒரு மூலையில் போட வேண்டியிருக்கிறதே என்ற மனப்பான்மையோடு வெளியிட்டது. "நாம் தமிழர்" கட்சியின் நிறுவனர் நமது ஆதித்தனார் அவர்களின் 'தினத்தந்தி' நாளிதழோ, "அய்யோ! நமக்கு ஏன் வீண் வேலை" என்றெண்ணி, இந்தச் செய்தியையே வெளியிடாமல் இருந்து விட்டது. ஜெயலலிதா மீது நீதிபதிகள் கோபித்து கேள்வி கேட்ட செய்தியைப் புறக்கணித்த இந்த நாளேடுகள், 21ஆம் தேதியன்று விசாரணையின் போது, உச்ச நீதி

மன்ற நீதிபதிகள் இந்த வழக்கினை மீண்டும் உயர் நீதி மன்றமே நான்கு மாதங்களில் விசாரித்து முடிக்க வேண்டுமென்று அளித்த தீர்ப்பை மட்டும் தங்கள் இதழ்களில் முக்கியமாக வெளியிடத் தவறவில்லை. என்ன பத்திரிகாதர்மம்? என்ன நடுநிலை உணர்வு?

இறுதியாக, புவனகிரி, புதுக்கோட்டை தொகுதிகளின் தேர்தல் அதிகாரிகள் அளித்த அறிக்கைகளை, சென்னை உயர் நீதி மன்றம் முறையாகப் பரிசீலிக்காததால், அந்த அறிக்கைகளின் அடிப்படையில், உயர் நீதி மன்றமே மீண்டும் விசாரித்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்ட நீதிபதிகள், இந்தக் குற்றம் ஆறு மாத சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய குற்றம் என்றும் தெரிவித்துள்ளார்கள். திரு. செ.குப்புசாமி அவர்கள் தொடர்ந்த மூல வழக்கை நான்கு மாதங்களுக்குள் விசாரித்து முடிக்க வேண்டு மென்றும் உச்ச நீதி மன்ற நீதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள். மேலும் சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் அடிப்படையில் ஜெயலலிதா மீது தேர்தல் ஆணையம் தொடுத்த இரண்டு வழக்குகளையும் ரத்து செய்தும் உச்ச நீதி மன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளார்கள். இதைத்தான் தமிழகத்தில் உள்ள அனைத்து ஏடுகளும் மிகப்பெரிய அளவில் தலைப்பிட்டு வெளியிட்டுள்ளன.

ஆனால், இந்த வழக்கிலே நமக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எழுந்துள்ள கேள்வியே; இருதரப்பு வாதங்களையும் கேட்ட உச்ச நீதி மன்ற நீதிபதிகள், 20-11-2012 அன்று நீதி மன்றத்தில் கேட்டார்களே, "தேர்தலில் போட்டியிடும் ஒருவர் இரண்டு தொகுதிக்கு மேல் வேட்பு மனு தாக்கல் செய்யக் கூடாது என்று சட்டம் கூறும்போது, ஏன் ஜெயலலிதா நான்கு தொகுதிகளில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தார்? முதல்வராக இருந்த ஒருவர் இப்படி மனு தாக்கல் செய்தது ஏன்? கட்சியின் தலைவராக இருப்பவர், பொது ஊழியராக இருக்கும் ஒருவர் இப்படி வேட்பு மனு தாக்கல் செய்தது தவறானதல்லவா? இது நியாயமா? சரியா?" என்பதுதான் கேள்வி! இந்தக் கேள்விக்கு என்ன விடை?

அன்புள்ள,

மு.க.

23-11-2012

3675. வைர விழாவும்; மாண்புமிகு மரபுகளும்!

உடன்பிறப்பே,

தமிழக அரசின் சார்பில் நடைபெறும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழா அழைப்பிதழ் கிடைத்தது. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரும், எனது நீண்ட கால நெருங்கிய நண்பரும், கழகத்தின்பாலும், தமிழகத்தின்பாலும், தமிழர்களின்பாலும் மிகுந்த அன்பும் அரவணைப்பும் காட்டுபவருமான திரு. பிரணாப் முகர்ஜி அவர்களும், மேதகு தமிழக ஆளுநர் திரு.கே. ரோசய்யா அவர்களும், சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, நீதியரசர் எம்.ஒய். இக்பால் அவர்களும் கலந்து கொள்ளும் இந்த விழா சீரோடும் சிறப்போடும் நடந்திட; அறிஞர் அண்ணா அவர்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும் மற்றும் சி.சுப்ரமணியம், ஆர்.வெங்கட்ராமன், கே.டி.கே.தங்கமணி, வி.உமாநாத், மணலி கந்தசாமி, கோவைரமணி, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., பொன்னப்ப நாடார், கருத்திருமன், கே.வினாயகம், ஜோதி வெங்கடாசலம், அனந்த நாயகி போன்றவர்கள் எல்லாம் அமர்ந்து தமிழக நலன்களுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டிற்காகவும் சிந்தித்து உரை நிகழ்த்திய உயர்ந்த அவையில்; ஐம்பதாண்டுகளுக்கு மேலாக உறுப்பினராக - எதிர்க்கட்சித் துணைத்தலைவராக - எதிர்க் கட்சித் தலைவராக - ஐந்துமுறை முதல் அமைச்சராக இருந்து பணியாற்றியவன் என்ற முறையில் என்னுடைய இதயம் நிறைந்த வாழ்த்துகளை இந்தக் கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவிற்கான அழைப்பிதழை, "திரு.மு.கருணாநிதி, சட்டமன்ற உறுப்பினர், கோபாலபுரம்" என்று முகவரியிட்டு, அரசு சார்பில் யாரோ ஒருவர் கொண்டு வந்து என் வீட்டிலே கொடுத்து விட்டுச் சென்றிருக்கிறார். அழைப்பிதழைப் பார்த்தேன். "தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் வைரவிழா அழைப்பிதழ்" என்றிருந்தது.

ஆனால் 1997 ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி நடைபெற்றபோதே, 14-7-1997 அன்று, தமிழ்நாடு சட்டமன்றத்தின் பவள விழாவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் வைர விழாவும் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அப்போது இந்த விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக விழாக்குழு ஒன்று பேரவைத் தலைவராக இருந்த பண்பாளர் பி.டி.ஆர்.பழனிவேல்ராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் ஆர்க்காடு வீராசாமி, கோ.சி.மணி, பரிதி இளம்வழுதி, பேரவைச் செயலாளர் டி. சாலமன் ஜெயபால், எஸ்.ராஜரத்தினம், ஐ.ஏ.எஸ்., சந்திரசூடன், ஐ.ஏ.எஸ்., ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தனர். 12-6-1997 அன்று இந்தக் குழுவினர் என்னைச் சந்தித்து, விழாக்களை நடத்துவது பற்றி பல்வேறு யோசனைகளையெல்லாம் கூறி கலந்துரையாடினார்கள். ஆனால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வைர விழாவிற்கு எந்தக் குழுவும் அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நமது முதல் அமைச்சருக்குத்தான் எல்லாமும் தெரியும் என்கிறபோது எதற்காக குழு என்று நினைத்திருப்பார்கள்.

14-7-1997 அன்று சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அப்போது தமிழக ஆளுநராக இருந்த பாத்திமா பீவி அவர்கள் தலைமையில் என்னுடைய முன்னிலையில் விழா நடைபெற்றது. பேரவைத் தலைவர் பழனிவேல் ராஜன் வரவேற்புரை ஆற்றினார். சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மன்மோகன் சிங் லிபர்ஹென் துவக்க உரையாற்றினார். சட்டமன்றப் பவள விழா மற்றும் பேரவை வைர விழா மலரினை நான் வெளியிட - குடியரசு முன்னாள் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் அதனைப் பெற்றுக் கொண்டார். தமிழக அரசின் சார்பில் ஆர். வெங்கட்ராமன், பாத்திமா பீவி, மன்மோகன், சிங் லிபர்ஹென், சி.சுப்பிரமணியம், பா. ராமச்சந்திரன், அவை முன்னவர் பேராசிரியர் அன்பழகனார், சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன் (காங்.), பேரவைத் துணைத் தலைவர் இளம்வழுதி ஆகியோருக்கு முதலமைச்சர் என்ற முறையில் நான் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கினேன். 85 வயதுக்கு மேற்பட்ட உறுப்பினர் என்ற பட்டியலில் திருமதி லூர்தம்மாள் சைமன் (காங்.) மேடைக்கு

வர இயலாமல் எதிரே அமர்ந்திருந்ததால், அவர் அமர்ந்திருந்த இடத்திற்கே நான் சென்று விருதினை வழங்கினேன். அந்த விழாவில் அமைச்சர்கள், சென்னை மாநகர மேயர், சட்டமன்ற முன்னாள், அந்நாள் உறுப்பினர்கள், மேலவையின் முன்னாள் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நீதியரசர்கள், அரசு உயரதிகாரிகள் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மேலும் அந்த விழாவில் பேரவைக்கு 7 முறை தேர்ந்தெடுக்கப்பட்ட அன்றைய கல்வி அமைச்சர் பேராசிரியர், ஏ.எஸ்.பொன்னம்மாள் (காங்.), எம்.ஆண்டி அம்பலம் (காங்.), ஆகியோருக்கும்; பேரவைக்கு 6 முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பண்ருட்டி ராமச்சந்திரன் (அ.தி.மு.க.), எஸ்.திருநாவுக்கரசு (அ.தி.மு.க.), ப.உ.சண்முகம், ஆர்க்காடு வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், அ.இரகுமான்கான், எஸ்.அழகர்சாமி (சி.பி.ஐ.) அரங்கநாயகம் (அ.தி.மு.க.), துரை.ராமசாமி, (அ.தி.மு.க.), கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆகியோருக்கும்; மற்றும் 85 வயதிற்கு மேற்பட்ட முன்னாள் உறுப்பினர்கள் என்ற வகையில் எல். கிருஷ்ணசாமி பாரதி (அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்), ஆர்.கிருஷ்ணசாமி கவுண்டர், வி.பாலகிருஷ்ணன், பி.கே.நல்லசாமி, வி.அருணாசலம், லூர்தம்மாள் சைமன், கே.சக்திவடிவேல் கவுண்டர் ஆகியோருக்கும்; பேரவை முன்னாள் தலைவர்களான முனு ஆதி (அ.தி.மு.க.), முனைவர் தமிழ்க்குடிமகன் ஆகியோருக்கும்; பேரவை மேலவை முன்னாள் துணைத் தலைவர்களான ஜி.ஆர்.எட்மண்ட் (அ.தி.மு.க.), பெ.சீனிவாசன், வி.பி.பாலசுப்பிரமணியன் (அ.தி.மு.க.), வி.பி.துரைசாமி, பார்த்தசாரதி ஆகியோருக்கும்; முன்னாள் உறுப்பினர்கள் சங்கத் தலைவர் முத்துக் கண்ணப்பர், சங்கச் செயலாளர் ஆர். நாக சுந்தரம் ஆகியோருக்கும் முதலமைச்சர் என்ற முறையில் நான் பொன்னாடை அணிவித்து, நினைவுப் பரிசுகள் வழங்கி சிறப்பு செய்தேன்.

இவை அனைத்தும் அப்போதே ஏடுகளில் செய்திகளாக வெளிவந்தன. மேலும் காங்கிரஸ் இயக்கத்தின் மூத்த முன்னோடிகளும், சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்களுமான பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், வேலூர் ஞானசேகரன்

அவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, கழக ஆட்சியில் நடைபெற்ற வைரவிழா பற்றி எனக்கு நினைவூட்டினார்கள். "தமிழ்நாடு சட்டமன்றப் பவள விழா சட்டமன்றப் பேரவை வைர விழா" என்ற தலைப்பில் மிக அழகாகத் தயாரிக்கப்பட்டு, அப்போது வெளியிடப்பட்ட மலர் இப்போதும் சட்டப் பேரவை நூலகத்திலே உள்ளது.

இந்திய நாட்டுச் சட்டமன்ற வரலாறு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1833ஆம் ஆண்டில் தொடங்கியது. அப்போது நியமன உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இடம் பெற்றிருந்தனர். 1919ஆம் ஆண்டில் மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் இயற்றப்பட்ட இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அந்நாளைய மாகாண சட்ட மன்றங்களில் முதன்முதலாக இடம் பெறத் தொடங்கினர். அச்சட்டமே பின்னர் மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் உருவாவதற்கு வழிகோலியது.

அந்தச் சட்டத்தின்படி சென்னை மாகாண மன்றத்திற்கு 1920ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30ஆம் நாள் நிகழ்ந்த முதல் பொதுத் தேர்தலில் நீதிக் கட்சி பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி திரு. சுப்பராயலு ரெட்டி தலைமையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அமைச்சரவை பொறுப்பேற்றது. இதுகுறித்து, சென்னை மாகாணத்தின் நிர்வாக அறிக்கையில் பின்வருமாறு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

> "இந்திய வரலாற்றில் முதன் முறையாக சென்னை மாகாணத்தின் கீழ்ச்சாதி மக்கள், உயர்சாதி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக கிளர்ந்தெழுந்து அரசியல் அதிகாரத்தை அவர்களது சொந்தக் கரங்களைக் கொண்டு பறித்துக் கொண்டார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1921ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் பன்னிரெண்டாம் நாள் கன்னாட் கோமகன் அவர்களால் முதல் மாகாண சுயாட்சிச் சட்ட மன்றம் தொடங்கி வைக்கப்பட்டது. அப்போது கன்னாட் பிரபு பேசிய போது, "நிர்வாகத் திறனும் நல்ல பாரம்பரியமும் கொண்ட இந்தியர்கள் கையில் அதிகாரத்தை ஒப்படைப்பதில் பெருமையும் பூரிப்பும் அடைகிறேன். இது ஜனநாயக வரலாற்றின் ஆரம்பக் கட்டம் என்றாலும், முக்கியத் திருப்பத்திற்கு வழிகோலும்" என்று குறிப்பிட்டார்.

அவ்வாறு நீதிக்கட்சியால் தொடங்கி வைக்கப்பட்ட முதல் சட்டமன்றம் 75 ஆண்டுகள் முடிந்ததையொட்டித்தான், அதன் பவள விழா நிகழ்ச்சியும்,

அதேபோல 1935ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின்கீழ் முதன்முதலாக 1937ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றப் பேரவையின் அறுபதாண்டுகள் நிறைவையொட்டி வைர விழா நிகழ்ச்சியும் இணைக்கப்பட்டுத்தான் 14-7-1997 அன்று மிகப் பெரிய விழாவாகக் கொண்டாடப்பட்டது.

எனவே சட்டமன்றப் பவள விழாவும், பேரவை வைர விழாவும் ஏற்கனவே நடந்து முடிந்துவிட்ட நிலையில், தற்போது எப்படியாவது ஒரு விழாவினை நடத்த வேண்டும் என்பதற்காக வழி என்ன என்று பார்த்து, இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, குடியரசு பெற்ற பிறகு, 1952ஆம் ஆண்டு தமிழகச் சட்டமன்றம் அமைக்கப்பட்டது என்பதைக் கூறி, அது முதல் கணக்கிட்டால் அறுபதாண்டுகள் என்பதால் வைர விழாவினை நடத்துவதாக அறிவித்திருக்கிறார்கள். விழா சிறப்பாக நடக்கட்டும். அதைப் பற்றி நமக்கொன்றும் காழ்ப்பு இல்லை. ஆனால் திடீரென்று இந்த ஆட்சியில் இப்படியொரு வைர விழா கொண்டாடுவதற்கான உண்மையான காரணம் என்ன தெரியுமா?

நான் குறிப்பிட்டுள்ளவாறு 1920ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டப்படி சென்னை மாகாண சட்டசபைக்கு தேர்தல் நடைபெற்று, அந்தத் தேர்தலில் திராவிட இயக்கத்தின் வேர்க் கட்சியான நீதிக் கட்சி வெற்றி பெற்று, ஆட்சி அமைத்த வரலாற்று முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையிலேதான் கழக ஆட்சிக் காலத்தில் பவள விழா நடத்தப்பட்டது. ஆனால் திராவிட இயக்கத்தின் வெற்றியையும், நீதிக்கட்சியின் வெற்றியையும் திரை போட்டு மறைக்கவும், மக்களைத் திசை திருப்பவும், அதற்குப் பிறகு தற்போது தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் புதிய சட்டமன்ற வளாகத்தை உருவாக்கி, அங்கே நிதிநிலை கூட்டத் தொடர் உட்பட ஒரு சில சட்டமன்றக் கூட்டத் தொடர்கள் நடைபெற்று, தமிழகச் சட்டப்பேரவை வரலாற்றில் புதிய அத்தியாயம் நிலை பெற்ற பிறகும், தலைமைச் செயலகமும், சட்டப் பேரவையும் நிரந்தரமாக அங்கேயே அதாவது ஓமந்தூரார் வளாகத்திலேயே அமைந்து விடக் கூடாது என்பதற்காகத்தான்,

வைரவிழா வளைவு, வைர விழா போன்றவைகளை திடீரென்று நடத்த முற்பட்டுள்ளார்கள். கழக ஆட்சியில் நடைபெற்ற வைர விழாவில், அவை முன்னவர் பேராசிரியர், எதிர்க்கட்சித் தலைவர் சோ.பாலகிருஷ்ணன், மராட்டிய முன்னாள் ஆளுநர் சி. சுப்பிரமணியம், இந்தியக் குடியரசின் முன்னாள் தலைவர் ஆர்.வெங்கட்ராமன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

இப்போது நடைபெறும் விழாவில் அவை முன்னவருக்கோ, எதிர்க்கட்சித் தலைவருக்கோ உரையாற்றும் வாய்ப்பு இருப்பதாக அழைப்பிதழில் இல்லை. இன்னும் வேடிக்கை! நவம்பர் 30ஆம் தேதியன்று விழா நடைபெறப் போகிறது. நவம்பர் 27ஆம் தேதிதான் சிறப்பு விருந்தினரான குடியரசுத் தலைவருக்கும், மேதகு ஆளுநருக்கும் அழைப்பிதழே கொடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட விழாக்களை; முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், ஆன்றோர்கள், சான்றோர்கள் எல்லாம் கலந்துகொள்ளக் கூடிய வகையில் இடவசதி உள்ள பொதுமன்றங்களில் நடத்துவதுதான் வழக்கம். கழக ஆட்சியிலே நடைபெற்ற வைரவிழா, பவள விழாக்கள் கூட சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில்தான் நடைபெற்றது. ஆனால் இப்போது சட்டமன்றப் பேரவைக் கூடத்திலேயே இட நெருக்கடிக்கிடையே விழாவினை நடத்துகிறார்கள். அதன் காரணமாக ஒரு சில மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத் தவிர மற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கோ, முன்னாள் பேரவை உறுப்பினர்களுக்கோ அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை என்று ஏடுகளில் செய்தி வந்துள்ளது.

இந்த "இருண்ட ஆட்சி" நடத்தும் வைர விழாவில் முக்கியமான நிகழ்ச்சி, இதை யொட்டி வைக்கவுள்ள வைரவிழா வளைவாகும். ஆனால் இந்த வளைவுக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியை குடியரசுத் தலைவர் கலந்து கொள்ளும் விழாவிலே இணைக்காமல், அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியை மட்டும் முன்கூட்டியே வைத்துக் கொண்டு, அந்த அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியை முதல் அமைச்சரே நடத்தி முடித்து விட்டார். அந்த வளைவினையாவது கட்டி முடித்து, அதன் திறப்பு விழாவினையாவது குடியரசுத் தலைவர் கலந்து கொள்கிற நிகழ்ச்சியோடு நடத்தியிருக்கலாம். அது மாத்திரமல்ல; வைரவிழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் குடியரசுத் தலைவர் இந்தியாவின் முதல் குடிமகன். அவரே இந்த விழாவிற்காக வந்து

கலந்து கொள்கிறார். ஆனால் இந்த விழாவிற்காகத் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ள அழைப்பிதழிலும், அதன் கவரிலும் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் புகைப்படம்தான் இருக்கிறதே தவிர, விழாவிற்கு முக்கிய விருந்தினர்களான குடியரசுத் தலைவரின் படமோ, ஆளுநரின் படமோ இடம் பெறவில்லை என்பதும் அ.தி.மு.க. ஆட்சியில் அரசு மரபு "(ப்ரோட்டகால்)" இந்த அளவிற்குப் புறக்கணிக்கப்படுகிறது என்பதும் கண்டனத்திற்குரிய செய்தியாகும்.

அரசு விழா நிகழ்ச்சிகளிலேகூட, அதிலும் இந்தியக் குடியரசுத் தலைவர் பங்கேற்கும் நிகழ்ச்சியிலேயே, "எல்லாம் தானே" என்ற தன்முனைப்போடு; அரசு மரபுகள் போற்றப்படும் வகையில் குடியரசுத் தலைவர், மாநில ஆளுநர், உயர் நீதிமன்றத் தலைமை நீதியரசர் ஆகியோருக்கு முறைப்படி அளிக்கப்பட வேண்டிய "ப்ரோட்டகால்" மரியாதை காப்பாற்றப்பட்டால் என்ன, காப்பாற்றப்படாவிட்டால் என்ன; 'அம்மா'வை விட அவர்கள் உயர்ந்தவர்களா என்ன? என்ற போக்கில் சில உயர் அதிகாரிகளும் எண்ணி துணைபோய் விடக் கூடாது. இடித்துரைத்திட வேண்டிய பத்திரிகைகள் கூட வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருக்கின்றனவே தவிர, எதிர்த்து யார் வாலாட்டினாலும், ஒட்ட நறுக்கப்படும் என்கிற அச்சமும், நடுக்கமும் தமிழ்நாட்டுக்கு சாபக் கேடாக நேர்ந்துவிட்ட நிலையில் யார்தான் என்ன செய்ய முடியும்? நாம்தான் இதற்கு மேல் எழுதி என்ன பயன்?

அன்புள்ள,

மு.க.

30-11-2012

3676. நீதி கிடைக்கும் என்று நம்புகிறேன்!

உடன்பிறப்பே,

10-10-2011 என்ற தேதியில் "அய்யகோ! அ.தி.மு.க. ஆட்சியில் அரசு நிலம் அரோகரா!" என்ற தலைப்பில் நான் எழுதிய கடிதத்தில், சென்னை மாநகரத்தின் இதயம் போன்ற பகுதியில் அண்ணா மேம்பாலத்தை ஒட்டி அரசுக்குச் சொந்தமான 13 காணி 4 கிரவுண்ட் 1262 சதுர அடி நிலம் "தோட்டக்கலைச் சங்கம்" என்ற ஒரு அமைப்பின் பெயரில் தோட்டக்கலை வி. கிருஷ்ணமூர்த்தி என்ற அ.தி.மு.க. பிரமுகரால் சுயலாப வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்டு வருவதைப் பற்றியும், அதற்கு அ.தி.மு.க. ஆட்சியில் கொடுக்கப்படும் ஒத்துழைப்புகள் பற்றியும் தேதி வாரியாக விரிவாக எழுதியிருந்தேன். தி.மு.கழக ஆட்சிக் காலங்களில் எல்லாம் அந்த இடத்தை அரசுக்குச் சொந்தமாக்கிட முயற்சிகள் எடுக்கப்பட்டதையும், அதுபற்றிய நீதிமன்ற நடவடிக்கைகளையும் அந்தக் கடிதத்திலே எழுதியிருந்தேன்.

உதாரணமாக, தி.மு.க. ஆட்சியில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீட்டில் இறுதித் தீர்ப்பு வழங்கப்படாமல்; வழக்கு நிலுவையில் இருந்த நிலையில்; 21-1-2004 அன்று அ.தி.மு.க. ஆட்சியில் - அரசின் எழுத்துப்பூர்வமான அனுமதி எதுவும் இல்லாத நிலையிலேயே; அரசு வழக்கறிஞர் - "நான் பெற்றிருக்கும் அறிவுரைகளின்படி, அரசு சார்பில் செய்துள்ள மேல்முறையீடுகளைத் திரும்பப் பெறுவதற்கு அனுமதி தரவேண்டும்" (As per instructions, I may be permitted to withdraw appeals) என்று உயர் நீதிமன்றத்தில் தெரிவித்து, தி.மு.கழக ஆட்சியில் தொடுத்திருந்த வழக்கினைத் திரும்பப் பெற்றுவிட்டார். இதில் அரசு வழக்கறிஞர் பின்பற்றிய முறை, அரசின் அலுவல் நடைமுறைகளுக்குக் கிஞ்சிற்றும் பொருந்தாததும், பொருத்தமில்லாததும் ஆகும். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்; அரசு வழக்கறிஞரே அப்படிக் கேட்டதற்குப் பிறகு உயர் நீதிமன்றமும் வேறு வழியின்றி

தி.மு. கழக ஆட்சியில் தொடர்ந்த வழக்கினைத் திரும்பப் பெற அனுமதித்து; மேல்முறையீட்டினை ரத்து செய்து உத்தரவிட்டது. உடனடியாக 3-3-2006 அன்று, நிலத்தைத் திரும்பவும் தோட்டக் கலைச் சங்கத்திடமே ஒப்படைக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

2006 சட்டப் பேரவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியைக் கைப்பற்றிய பின் சென்னை உயர் நீதிமன்றத்தில் கழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களின் மீதான வழக்கில், உயர் நீதிமன்றம் 11-4-2008 நாளிட்ட தீர்ப்பில்;

> "அரசாங்கத்தின் முன் அனுமதி பெறாமல்; வேளாண் தோட்டக் கலைச் சங்கம் "உட்லண்ட்ஸ்-டிரைவ்-இன் ரெஸ்டாரண்ட்"க்கு இந்த நிலத்தில் ஒரு பகுதியை ஏற்கனவே உள்குத்தகைக்கு விட்டிருந்தது. திரு. கிருஷ்ண மூர்த்தி, சங்கத்தின் கௌரவச் செயலாளராக ஆன பிறகு அரசு சொத்தைத் தனது சொந்த சொத்து போலக் கையாள்வதாக நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இச்சங்கத்தின் நிதி முறைகேடுகள் குறித்து பல குற்றச்சாற்றுகள் சொல்லப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து மாவட்டப் பதிவாளர், தமிழ் நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொண்டார். சங்கத்தின் மீது இத்தகைய கடுமையான குற்றச்சாட்டுகள் இருக்கும்போது; அரசு பொது நோக்கங்களுக்காக நிலத்தைத் திரும்பப் பெறுவதற்குச் சொன்ன காரணங்களைப் புறக் கணித்துவிட்டு; நிரூபணமாகாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், "அரசியல் காழ்ப்புணர்வு காரணம்" என்று கூறி அவர்கள் தொடுத்த நீதிப் பேராரணைகளை தனி நீதிபதி அனுமதித்துள்ளார். அரசின் அனுமதி பெறாமல் மிகப் பெரிய விளம்பரப் பலகைகளை நிறு வியுள்ளதாகவும் மற்றும் தரைப்பகுதிக்கு சிமெண்ட் வேலைகள் செய்திருப்பதாகவும் கழக ஆட்சியின் போது, தலைமைச் செயலாளர், தனது மனுவில் குறிப் பிட்டுள்ளார். ஆண்டு ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் செலவில் மலர்க் கண்காட்சியை நடத்தியதைத் தவிர கடந்த 20 ஆண்டுகளில் எந்த முன்னேற்றமும்

சங்கத்தால் செய்ததாகக் காட்டப்படவில்லை. இத்துடன், மலர்க் கண்காட்சியை நடத்தியது தொடர்பாக அதிக அளவில் பணம் வசூல் செய்தும், அதில் குறைந்த அளவே செலவு செய்தும், நிதி முறை கேடுகள் நடைபெற்றுள்ளதால் அச்சங்கத்தின் மீதும், அதன் செயலாளர் மீதும் உரிய அலுவலரால் விசாரணை செய்யப்பட வேண்டும். வருவாய் நிலை ஆணைகளின் படியும், அரசு வழிகாட்டி நெறி முறைகளின் படியும் காலங்காலமாக குடியிருக்க வசதியின்றியுள்ள ஏழை யெளிய மக்களுக்கு இருப்பிடம் வழங்க வேண்டுமென்ற நெறி முறைகள் ஒரு புறம் இருக்க; இச்சங்கத்தின் வசம் நிலங்கள் உள்ளதாலும், அதன் ஒரு பகுதியை மட்டுமே தோட்டக்கலை வளர்ச்சிக்காக அவர்கள் பயன்படுத்தி வருவதாலும், அரசால் குத்தகைக்கு விடப்பட்ட நிலங்களை சங்கத்தின் கௌரவச் செயலாளர் திரு. வி.கிருஷ்ணமூர்த்தி தனது சொந்த உபயோகத்திற்காக அதாவது வாடகைக் கார் மற்றும் மீனா அட்வர்டைசர்ஸ் என்ற பெயரிலான விளம்பர நிறுவனத்திற்கும் பயன் படுத்தி வருவதாக ஆவணங்களின் மூலம் தெரிய வருவதால், மேற்படி நிலங்களைத் திரும்பப் பெறுவது குறித்த அரசின் நடவடிக்கையில் எவ்விதத் தவறும் இருப்பதாகக் கருத இயலாது. திரு. வி. கிருஷ்ணமூர்த்தி தனது மனுவில் கார் மற்றும் விளம்பர நிறுவன வியாபாரம் நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். நிலம் ஏற்கனவே அரசின் வசம் உள்ளதைக் கருத்தில் கொண்டும் அரசின் தலைமைச் செயலாளரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படை யிலும் இந்நிலங்கள் பொதுக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். உள்குத்தகைதாரர் தானாகவே இந்த இடத்தைக் காலி செய்ய வேண்டும்" - என்று கூறப்பட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த ஆணையின் தொடர்ச்சியாக; தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி, உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ததால், உச்ச நீதி மன்றம்

13-11-2009 அன்று வழங்கிய இடைக்கால ஆணையில் இந்த நிலம் ஏற்கனவே அரசின் கைவசம் உள்ளதால், தோட்டக்கலையின்

மேம்பாட்டிற்காக அதைத் தொடர்ந்து அரசு பயன்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை என்று கூறிவிட்டது. எனவே சென்னை மாவட்ட ஆட்சியர் தோட்டக்கலைச் சங்கத்திடமிருந்து நிலத்தை எடுத்து, அரசு-தோட்டக்கலைத் துறையிடம் ஒப்படைத்தார்.

இந்த நிலத்தில் - சுற்றுப்புறச் சூழலைப் பேணிக் காத்திடவும், மலர்கள் - மூலிகைகள் - தாவரங்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பொதுமக்கள் உணர்ந்திடவும், தோட்டக் கலை ஆராய்ச்சிகளை ஊக்குவித்திடவும், பெரிய பூங்கா ஒன்றினை உருவாக்கிடத் திட்டமிட்டு: அதனைப் படிப்படியாக நிறை வேற்றிட முடிவு செய்து; முதலில் "டிரைவ்-இன்-உட்லண்ட்ஸ்" இருந்த பகுதியில் மிகச் சிறந்த பூங்கா ஒன்றினை உருவாக்கி, அதற்கு "செம்மொழிப் பூங்கா" என்று பெயரிட்டு, அதனை நான் திறந்து வைத்தேன். அந்தப் பூங்காவை, அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் நல்ல முறையில் பராமரிக்கத் தவறிய பிறகும், இன்றும் ஆயிரக்கணக்கானவர்கள் அன்றாடம் கண்டு களித்து வருகின்றனர்.

பூங்காவுக்கு எதிர்ப்புறம், தோட்டக்கலைச் சங்கத்தின் அலுவலகம் செயல்பட்டு வந்த இடத்தில் பூங்காவினை விரிவாக்கம் செய்வதற்கு முன்; இடத்தைக் காலி செய்து அரசிடம் ஒப்படைக்கக்கோரி தோட்டக்கலைச் சங்கத்திற்கு 15-12-2010 அன்று தி.மு.கழக ஆட்சியின்போது அன்று நோட்டீஸ் அனுப்பப் பட்டது. நோட்டீஸ் அனுப்புவதற்கு முன் நூறாண்டுகளுக்கு வில்லங்கங்கள் சரி பார்க்கப்பட்டு அந்த நிலம், அரசு நிலம்தான் என்று சட்ட விதிமுறைகளின்படி உறுதி செய்யப்பட்டது. இந்த நோட்டீசுக்கெதிராக, தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி, சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். அதில் அந்தச் சங்கத்திற்கு நேரடி விசாரணைக்கு வாய்ப்பளித்திடும்படி தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்கிணங்க 2011 சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன்பும், பின்பும் நேரடி விசாரணைக்கு அவருக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன. ஆனால் மே திங்களில் பொதுத் தேர்தல் நடைபெறும் வரை நேரடி விசாரணைக்காக தோட்டக்கலை கிருஷ்ண மூர்த்தி ஆஜராக வில்லை. பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்ற பிறகு, 15-7-2011 அன்று அவர் சென்னை மாவட்ட ஆட்சியர் முன்பு திடீரென ஆஜராகி சில ஆவணங்களைத் தாக்கல் செய்திருக்கிறார்.

சென்னை மாவட்ட ஆட்சியரும், எங்கிருந்தோ ஏவப்பட்ட செல்வாக்கிற்கும், நெருக்கடிகளுக்கும், அரசியல் மேலாதிக்கத் திற்கும் பணிந்து - அரசு வழக்கறிஞரின் கருத்துரையினை ஒப்புக்காகப் பெற்று, தோட்டக்கலைச் சங்கம் அமைந்துள்ள 4 காணி 18 கிரவுண்ட் 1683 சதுர அடி நிலம் அந்தச் சங்கத்திற்கே உரியது என்று 22-8-2011 அன்று இப்போது, அ.தி.மு.க. ஆட்சியிலே உத்தரவிட்டுள்ளார். நிரந்தர நிலப்பதிவேட்டில் இந்த நிலம் அரசு நிலம் என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது.

100 ஆண்டுகளுக்கும் மேலாக வில்லங்கம் சரி பார்த்ததில் இந்த நிலம் அரசுக்குச் சொந்தமான தென்றே உறுதி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து பல ஆண்டுகளாக இந்த நிலம் சம்மந்தமாக நடந்து வரும் வழக்குகளில் எந்தக் கட்டத்திலும் இந்த நிலம் தோட்டக்கலை சங்கத்திற்குச் சொந்தமானது என்று சொல்லப் படவில்லை. இந்த நிலம் அரசு நிலம் என்பதால் தான் தோட்டக்கலைச் சங்கத்திடமிருந்து கைப்பற்றி, தமிழக அரசின் துறைகளில் ஒன்றான தோட்டக்கலைத் துறையிடம் 8-5-2008 அன்று கழக ஆட்சியில் ஒப்படைக்கப்பட்டது.

நிலைமைகள் இவ்வாறிருக்க, இந்த நிலம் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் சங்கத்திற்குச் சொந்தமானதென முடிவு செய்ய, எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லை. அரசுக்குச் சொந்தமான இடம் என்று ஏற்கனவே முடிவு செய்ததும் மாவட்ட ஆட்சித் தலைவர்தான். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்த இடம் அரசுக்குச் சொந்தமானதல்ல என்று கூறச் செய்து, தோட்டக்கலை கிருஷ்ண மூர்த்திக்குத் தாரைவார்க்க; அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த ஐந்தே மாதங்களில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இதைப்பற்றி நான் "முரசொலி"யில் விவரமாக 10-10-2011 அன்று எழுதியதோடு, நீதிமன்றத்தின் வாயிலாகவும் அந்த நிலம் மீண்டும் அரசுக்குக் கிடைத்திட முயற்சிகளை மேற்கொள்வோம் என்று கூறியிருந்தேன். அதன்படி தாக்கல் செய்த வழக்கு தலைமை நீதிபதி திரு. இக்பால் மற்றும் நீதியரசர் சிவஞானம் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்து, மூத்த வழக்கறிஞர் வில்சன் அவர்கள் வாதிட்டார். அப்போது அரசு வழக்கறிஞர், தோட்டக்கலை சங்கத்திடம் நிலத்தை ஒப்படைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பிலே இருந்தவர், பிறப்பித்த உத்தரவு அரசின்

நிலச்சீர்திருத்த ஆணையரால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், அது குறித்து நிலச் சீர்திருத்த ஆணையாளர் உரிய நடவடிக்கை மேற்கொண்டு தோட்டக்கலைச் சங்கத்திடம் விளக்கம் கேட்டிருக்கிறார் என்றும் அதன் மீதும் அவர்கள் வழக்கு ஒன்று தாக்கல் செய்திருப்பதாகவும் தெரிவித்ததின் பேரில், நீதியரசர்கள் நமது கோரிக்கை நிறைவேறி வருகிறது என்ற அடிப்படையில், நமது சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. புவனேஸ்குமார் தாக்கல் செய்த மனுவினை தள்ளுபடி செய்தார்.

நிலச் சீர்திருத்த ஆணையாளர் 2011ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இந்த ஆணையைப் பிறப்பித்ததோடு நிற்காமல், தோட்டக்கலைச் சங்கத்தின் கவுரவச் செயலாளருக்கு விளக்கம் கேட்டு நோட்டீசும் (Show Cause Notice) அன்றையதினமே அனுப்பியிருக்கிறார். அந்த நோட்டீசில் பல உண்மை ஆதாரங்களையெல்லாம் எடுத்துக்காட்டி பத்து நாட்களுக்குள் விளக்கம் அளிக்க வேண்டுமென்றும், தவறினால் கைவசமிருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் எழுதியிருக்கிறார். இதன் மீதும் தோட்டக்கலை சங்கத்தின் செயலாளர், தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி வழக்கு ஒன்று தொடர்ந்திருந்தார்.

நிலச் சீர்திருத்த ஆணையாளர் சென்னை மாவட்டக் கலெக்டர் இந்த இடத்தைத் தாரை வார்த்ததைத் தவறு என்று கூறி அதைத் தடுத்து நிறுத்தி வைத்த பிறகு இந்த ஆட்சியிலே நடைபெற்றது என்ன? இதிலே என்னென்ன உண்மைகள் மறைக்கப்படுகின்றன? அந்த இடம் தற்போது யாருடைய பொறுப்பிலே உள்ளது? தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்திக்கு சாதகமாக முடிவெடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் சென்னை மாவட்ட கலெக்டர்களே அடிக்கடி மாற்றம் செய்யப்பட்டு, அவருக்கு வேண்டிய மாவட்ட வருவாய் அலுவலரை கலெக்டர் பொறுப்பிலே நியமிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டு உண்மையா? நிலச் சீர்திருத்த ஆணையர் கடந்த ஆண்டு நவம்பரில் ஆணை பிறப்பித்து, ஓராண்டுக்கு மேலாகியும் இதுவரை அரசு சார்பில் இதிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? உண்மை ஊருக்குத் தெரிய வேண்டாமா? நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நிலம் காப்பாற்றப்பட வேண்டாமா? ஆட்சியாளர்கள் விளக்கம் அளிப்பார்களா?

உடன்பிறப்பே, இந்தக் கடிதம் வாயிலாக நான் எழுப்பியுள்ள வாதங்கள் எல்லாம், ஏதோ என்னுடைய சொந்த நிலம் பறி போய்விட்டது போலவோ, அல்லது அதை மீட்டு எனக்குச் சொந்தமாக்கவோ அல்லவே அல்ல! இது அரசு நிலம். எல்லோருக்கும் பொதுவான அரசு நிலம். சென்னை மாநகரத்தின் மத்தியிலே உள்ள 200 கோடி ரூபாய்க்கு மேல் மதிப்புடைய நிலம். அதைத்தான் யாரோ ஒரு அ.தி.மு.க. காரருக்கு தாரை வார்ப்பதைத் தடுத்து நிறுத்த நான் மேற்கொண்டுள்ள முயற்சி இதுவாகும். சட்டப்படி இதுபற்றி எடுக்கப்பட்டுள்ள முயற்சிக்கு நீதி கிடைக்கும் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

7-12-2012

3677. எந்த நிலையிலும் என் கடன்; பணிசெய்து கிடப்பதே!

உடன்பிறப்பே,

கடந்த 3-12-2012 அன்று “மாற்றுத் திறனாளிகள் தினம்” உலகம் முழுவதும் அனுசரிக்கப்பட்டதையொட்டி, ஐம்பதுக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் ஆண்களும், பெண்களுமாக அண்ணா அறிவாலயத்தில் என்னைச் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்கள். புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். ஆட்சிப் பொறுப்பில் இல்லாதபோதும் அவர்கள் என்னைக் காண வந்து, வாழ்த்து தெரிவித்ததும்; நன்றி என்றால் என்னவென்றும், அது எங்கே கிடைக்கும் என்றும், அதன் விலை என்ன என்றும் கேட்கின்ற இந்நாளில், மாற்றுத் திறனாளிகள் என்னைக் காண வந்ததும் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்தது. அப்போது அவர்கள் தி.மு.கழகம் ஆட்சியில் இருந்தபோது மாற்றுத் திறனாளிகளுக்காக அளித்த சலுகைகளையெல்லாம் தொகுத்து நான் எழுதி அனைவருக்கும் நினைவூட்டிட வேண்டுமென்ற வேண்டுகோளினைத் தெரிவித்தார்கள். அவர்களின் விருப்பத்திற் கிணங்க இந்தக் கடிதத்தில் அந்த விவரங்களைத் தந்துள்ளேன்.

மனித சமுதாயத்தில், காது கேளாதவராய், கண் தெரியாதவராய், வாய்பேச முடியாதவர்களாய், கை கால்களைப் பயன்படுத்த இயலாதவர்களாய், மனநோயாளிகளாய் உள்ள அனைவரையுமே “ஊனமுற்றோர்” என்பதற்குப் பதிலாக, “மாற்றுத் திறனாளிகள்” என்று அழைக்கின்ற முறைகுறித்து 2007 ஆம் ஆண்டிலேயே ஐக்கிய நாடுகள் அவையில் விவாதிக்கப்பட்டது. அந்த விவாதத்தின் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகள் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதில் நமது இந்திய நாடு ஏழாவது நாடாகக் கையொப்பம் இட்டுள்ளது.

அதன்படி, தமிழகத்தில் இனி “ஊன முற்றோர்” (Handicapped) என்ற சொல்லால் அழைக்கப்படுபவர்கள், “மாற்றுத் திறனாளிகள்”

(Differently Abled) என அழைக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

19.3.2010 அன்று புதிய சட்டப்பேரவையில் முதன்முதலாக அளிக்கப்பட்ட 2010-2011 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துறை முதலமைச்சரின் நேரடி மேற்பார்வையில் இயங்கும்" என அறிவிக்கப்பட்டு அன்றே அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது. அதன்பின்னர், துறையின் பெயரும், அலுவலகம் மற்றும் அலுவலர்கள் பெயர்களும் மாற்றி அமைக்கப்பட்டன.

2010-2011இல் முதன்முறையாக மாற்றுத் திறனாளிகள் நலத்துறைக்கெனப் பேரவையில் தனியே, "மானியக் கோரிக்கை" அளிக்கப்பட்டு, அதன்மீது மாற்றுத் திறனாளிகள் நலம் குறித்து விரிவாக ஆராய்ந்து புதிய திட்டங்களை உருவாக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

1969 இல் பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவைத் தொடர்ந்து முதலமைச்சர் பொறுப்பேற்றபின், தொழுநோயாளிகளின் அவலம் கண்டு நான் உருவாக்கிய "தொழுநோய் இரவலர்கள் மறுவாழ்வுத் திட்டம்" அண்ணல் காந்தி அடிகள் பிறந்த அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் 2.10.1971 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் பரனூரில் தொடங்கப் பட்டது. தொடர்ந்து 9 இடங்களில் மறுவாழ்வு இல்லங்கள் தொடங்கப்பட்டு இன்றும் அவை செயல்பட்டு வருகின்றன.

1972 ஆம் ஆண்டில் "கண்ணொளி வழங்கும் திட்டம்" செயல்படுத்தப்பட்டு, தமிழகம் முழுவதும் நடைபெற்ற இலவச கண்சிகிச்சை முகாம்களில் இலட்சக் கணக்கான ஏழை எளியவர்களுக்குக் கண் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு, கண்ணாடிகளும் இலவசமாக அணிவிக்கப்பட்டன.

1974 ஆம் ஆண்டில் மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு; கை, கால் இழந்தவர்களுக்கு மூன்று சக்கர சைக்கிள்கள், சக்கர நாற்காலிகள், அலுமினியத் தாங்கிகள் (Crutches), , பார்வை பழுதானவர்களுக்குக் கறுப்புக் கண்ணாடிகள், ஊன்றுகோல்கள், செவித்திறன் குறையுடை யோர்க்குக் காதுகேட்கும் கருவிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன.

1.11.1974 முதல் ஆதரவற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, 1.4.98இல் ரூபாய் 150; 1.4.2000இல் ரூபாய் 200; 1.8.2006 இல் ரூபாய் 400, 1.12.2010இல் ரூபாய் 500 எனக் கழக அரசினால் ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டது;

1989-1990 ஆம் ஆண்டு கழக அரசில் மாற்றுத் திறனாளிகளால் பெருமளவில் பயன்படுத்தப்படும் தாங்கிகள் (Crutches), , சக்கர நாற்காலிகள், மோட்டார் பொருத்தப்பட்ட வண்டிகள், மோட்டார் பொருத்தப்படாத மூன்று சக்கர வண்டிகள், பல்வேறு ஊன்றுகோல்கள் ஆகியவை மீதான வரிகள் மனிதநேய அடிப்படையில் முற்றிலும் நீக்கப்பட்டன.

அப்போதைய, சமூக நலத்துறை அமைச்சர் தலைமையில், குழு ஒன்று அமைக்கப்பட்டு, பார்வையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு 3 விழுக்காடு இட ஒதுக்கீட்டின் படி வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டன.

மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் 2005-2006 ஆம் ஆண்டில் 49 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில்; கழக அரசு மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி ஒதுக்கீட்டினைப் படிப்படியாக உயர்த்தி, 2010-2011ஆம் ஆண்டில் 176 கோடி ரூபாய் என நான்கு ஆண்டுகளில் மூன்றரை மடங்கு உயர்த்தி ஒதுக்கீடு செய்தது.

கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர பராமரிப்பு உதவித் தொகை 200 ரூபாய் என்பதை 1-9-2006 முதல் 500 ரூபாயாக உயர்த்தி, இத்திட்டத்தில் பயன்பெறும் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை 6400 என்பது 11.7.2000 அன்று 7400 எனவும், 1.9.2006 முதல் 10 ஆயிரம் எனவும் கழக அரசு உயர்த்தியது. மேலும் எண்ணிக்கை வரம்பின்றி விண்ணப்பிக்கும் அனைவர்க்கும் பராமரிப்பு உதவித் தொகை வழங்கிடவும் ஆணை யிடப்பட்டு; இத்திட்டத்தின்கீழ் கழக ஆட்சியில்

64 ஆயிரத்து 138 பேர் பயனடைந்து வந்தார்கள்.

தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள இயலாத மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளுக்கு 1-9-2007 முதல்

மாதம் 500 ரூபாய் வீதம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் கழக அரசினால் தொடங்கப்பட்டபோது, 20 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் மட்டுமே பயன்பெற்று வந்தனர். கழக ஆட்சியில், 2009-2010ஆம் ஆண்டு முதல், இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 50 ஆயிரத்து 609 மன வளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் பயன் பெற்றார்கள்.

இந்தியாவிலேயே முதன் முறையாக தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 1000 பேருக்கு மாதம் 500 ரூபாய் வீதம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் 2008-2009ஆம் ஆண்டில் திமு.க. அரசினால் தொடங்கப்பட்டு, மூன்றாண்டுகளில் ஒரு கோடியே 89 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

1996-2001 இல் கழக ஆட்சி காலத்தில், காதுகேளாத, வாய் பேசாதவர்களை மணம் செய்துகொள்ளும் உடற்குறை இல்லாதவர் களுக்கும்; ஒரு கை அல்லது கால் இழந்தோரைத் திருமணம் செய்து கொள்ளும் உடற்குறை இல்லாதவர்களுக்கும் நிதியுதவி வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி 5,000 ரூபாய் என்பதை 7,000 ரூபாய் என 2000ஆம் ஆண்டில் உயர்த்திய கழக அரசு; 2006இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு, இத்திட்ட உதவித் தொகை 10 ஆயிரம் ரூபாய் என்பதை 20 ஆயிரம் ரூபாய் என 19.12.2006 இல் உயர்த்தியது.

மாற்றுத் திறனாளியை இன்னொரு மாற்றுத் திறனாளி திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்தை கழக அரசு 2009-2010ஆம் ஆண்டு முதல் தொடங்கிச் செயல்படுத்தியது.

இந்த மாற்றுத் திறனாளிகளுக்கான திருமணத் திட்டங்களின்கீழ் 5357 பேருக்கு 2006க்குப்பின் 6 கோடியே 96 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

இந்தியாவிலேயே முதன்முறையாக கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறன் மாணவ, மாணவிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனங்கள் வழங்கும் திட்டம் 2007-2008 முதல் கழக ஆட்சியில் நடை முறைப்படுத்தப்பட்டது.

பணிக்குச் செல்லும் மாற்றுத் திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் வாங்குவதற்கு வண்டியின் விலையில் 30 சதவீதத் தொகை மானியமாக வழங்கப்பட்டது.

5 ஆண்டு கால கழக ஆட்சியில், மொத்தம் 1961 பேருக்கு 3 கோடியே 34 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்ச் செலவில் மோட்டார் பொருத்திய ஸ்கூட்டர் வண்டிகள் வழங்கப்பட்டன.

2009-2010 ஆம் ஆண்டு முதல் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் உட்பட 2700 பேருக்கு 1 கோடி ரூபாய்ச் செலவில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகப் பேருந்துகளில் 1997இல் எவ்வித நிபந்தனைகளும் இன்றி 100 கி.மீ. தூரம் வரை பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோர் இலவசப் பேருந்துப் பயணச் சலுகைத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

பார்வைத் திறன் பாதிக்கப்பட்டோர் - கை, கால் பாதிக்கப்பட்டோர் ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் அரசு விரைவுப் பேருந்துகளில் தங்களது சொந்த ஊர்களுக்கு சென்று வர இலவசப் பயண அனுமதி வழங்கப்பட்டது.

மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகள் தமது உதவியாளர் ஒருவருடன் அரசுப் பேருந்துகளில் இலவசமாகச் சென்று வர பயணச்சலுகை வழங்கப்பட்டது.

2006-2011 ஐந்து ஆண்டுக் கால கழக ஆட்சியில் இவ்வாறு இலவசப் பேருந்து பயணச்சலுகைத் திட்டங்களில் 62 கோடியே 28 இலட்ச ரூபாய்ச் செலவில் 1 இலட்சத்து 12 ஆயிரத்து 471 மாற்றுத் திறனாளிகள் பயனடைந்துள்ளனர்.

மனவளர்ச்சி குன்றியோரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, உரிய பயிற்சிகள் அளிக்க மாவட்டந்தோறும் ஒரு பயிற்சிமையம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் 2007 ஆம் ஆண்டு முதல் நிறுவப்பட்டு, 0-6 வயதிற்குட்பட்ட 6000 குழந்தைப் பயனாளிகளுக்கு 6 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது.

குழந்தை பிறந்தவுடனேயே செவித்திறன் குறைபாடுகளைக் கண்டறியும் பரிசோதனையும், பின்னர் குழந்தைப் பருவத்தின்போது தொடர் செவித்திறன் பரிசோதனைகளையும் மேற்கொள்ளவும் அதன் மூலம் இக்குறை பாட்டைக் கட்டுப்படுத்தவும், "ஆரம்பநிலை பரிசோதனை மையம்" ஒன்று தூத்துக்குடியில் அமைக்கப்படும் என 2010-2011 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு, இந்த மையம் 17.2.2011 அன்று தொடங்கப்பட்டது.

பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் வேலூர், திருவண்ணாமலை, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் மதுரை ஆகிய 5 மாவட்டங்களில் தொடங்கப்பட்டன.

தொண்டு நிறுவனங்கள் நடத்தி வரும் 200 மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 1762 சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளருக்கு 2007-08 முதல் மாதம் ஒன்றுக்குத் தலா ரூ.3000/- வீதமும் 2010-2011ஆம் ஆண்டு முதல் ரூ.5000/- வீதமும் மொத்தம் 8 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் ஊதிய மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பட்டமேற்படிப்பு வரை பயிலும் மாற்றுத் திறனுடைய மாணவ, மாணவியரின் கல்வி வளர்ச்சிக்காக கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது.

9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ரூ.750/- 1.10.2007 முதல் ரூ.1500/- ஆகவும் பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப் பட்டு வந்த ரூ.1250/- ரூபாய் ரூ.2500/- ஆகவும் தொழில் மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 1500 ரூபாய் என்பது 3000 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டது.

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில - மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெறும் மாணவ மாணவியர்க்கு ரொக்கப் பரிசும், உயர்கல்வி பெற உதவித்தொகையும் 2006-2007ஆம் ஆண்டி லிருந்து வழங்கப்பட்டது.

அரசு - அரசு உதவி பெறும் நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் டிசம்பர் 3ஆம் நாள் அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் கொண்டாடுவதற்காக சிறப்பு தற்செயல் விடுப்பு வழங்க அரசு ஆணை 2007ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

மேலும், மாற்றுத் திறனாளி அரசு ஊழியர்களை அவர்களின் சொந்த ஊருக்கு அருகில் பணியமர்த்த ஆணையிட்டு; அவர்கள் அலுவலகம் சென்று வருவதில் உள்ள சிரமங்களை உணர்ந்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த போக்குவரத்துப்படி மாதம் 300 ரூபாய் என்பதை 1000 ரூபாயாக கழக ஆட்சியில் உயர்த்தி வழங்கப்பட்டது.

சமூகநலத் துறை அமைச்சர் தலைமையில், மூன்று அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் 15 அலுவல் சாராதவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் 2007ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

பின்னர் தமிழக முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு மாற்றுத் திறனாளிகள் நலவாரியம் 26.4.2010 அன்று திருத்தி அமைக்கப்பட்டது.

10 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள், நல வாரிய உறுப்பினராக பதிவு செய்யப்பட்டனர். கழக ஆட்சிக் காலத்தில் 1 இலட்சத்து 99 ஆயிரத்து 856 மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். கழக ஆட்சிக் காலத்தில் மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் மூலம் 2 கோடியே 99 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அளவில் 5168 மாற்றுத் திறனாளிகள் சமூக பாதுகாப்பு மற்றும் பிற திட்டங்களில் பயனடைந் துள்ளனர்.

"இளைஞன்" திரைப்படத்திற்குக் கதை, வசனம் எழுதியதற்காக எனக்குக் கிடைத்த 45 இலட்சம் ரூபாய் தொகையினை "முதலமைச் சரின் பொது நிவாரண நிதி"க்கு வழங்கி, பின்னர் அதனை 2010-2011ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு அளித்திட தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலவாரியத்திற்கு வழங்கப்பட்டது.

என்னைக் காண வந்த மாற்றுத் திறனாளிகளில் ஒருவர், கழக ஆட்சிக் காலத்தில் மாற்றுத் திறனாளிகளான அவர்கள் சென்னை

ராஜீவ் காந்தி பொது மருத்துவ மனையில் நான்கைந்து நாட்களாக உண்ணாவிரதம் இருந்த போது, அதுபற்றி காலைப் பத்திரிகையில் செய்தி பார்த்தவுடன், காலை உணவு கூட அருந்தாத நிலையில் நேராக பொது மருத்துவ மனைக்கே வந்து அவர்களைச் சந்தித்து, அவர்களின் கோரிக்கை ஓரிரு நாட்களில் தீர்க்கப்படும் என்று நான் நேரில் அளித்த உறுதிமொழியை நினைவூட்டியதோடு, உண்ணா விரதத்தை கைவிட்டு வீடு திரும்பிய தையும் எடுத்துக்கூறினார். ஒரே நாளில் அவர்களின் கோரிக்கையை ஏற்று ஆணையும் பிறப் பிக்கப்பட்டது.

கழக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியும் டெல்லியில் மத்திய அரசிடம் வாதாடி, இந்திய அளவில் மாற்றுத் திறனாளிகளுக்காக தனித் துறையே உருவாக வழி கண்டிருக்கிறார்.

கழக ஆட்சியில் ஏராளமான சாதனைகள் செய்யப்பட்டது. அதற்காக ஏனையோர் நன்றி பாராட்டாவிட்டாலும், இந்த மாற்றுத் திறனாளிகள் நம்மைச் சந்தித்து நன்றி பாராட்டியதால் அவர்கள் விரும்பியவண்ணம் இந்த பட்டியலையும் வெளியிட்டுள்ளேன். எனது வாழ்க்கைத் தொடரான "நெஞ்சுக்கு நீதி" முதல் தொகுதியை, தமிழக விழியிழந்தோர் சங்கத் தலைவரும், கண்ணொளி இழந்தவருமான தோழர் திரு. ஆசிர் நல்லதம்பி அவர்கள் தலைமையில், தொழுநோய் மறுவாழ்வுச் சங்கத்தின் பொதுச் செயலாளர் கவிஞர் முகமது அலி அவர்களைக் கொண்டு வெளியிடச் செய்தேன். மாற்றுத் திறனாளிகளை - ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் - மனதார நேசித்துப் போற்றி வருபவன் நான். எனினும் மாற்றுத் திறனாளிகளுக்கு நான் எதுவும் செய்யவில்லை என அறிக்கை வெளியிடுவோர் - உண்மைகளை அறியாதவர்கள் அல்லது உண்மைகளை மறைத்திட முயற்சிப்பவர்கள். பாவேந்தரின் கூற்றுப்படி "காரிருளால் சூரியன் தான் மறைவதுண்டோ?" - போற்றுவார் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுவார் தூற்றட்டும், என் கடன் பணி செய்து கிடப்பதே!

அன்புள்ள,

மு.க.

8-12-2012

3678. இருளின் ஆட்சி; இன்னும் எத்தனை காலமோ?

உடன்பிறப்பே,

தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு தற்போது நடைபெற்று வரும் “இருண்ட ஆட்சி”யில் எந்த அளவிற்கு மின்வெட்டுப் பிரச் சினை தலை விரித்தாடுகிறது; எந்த அளவுக்குத் தமிழக மக்களை அனைத்து வகையிலும் சங்கிலித் தொடர் போன்ற சங்கடங்களுக்கு உள்ளாக்கி வருகிறது என்பதைப் பற்றிக் கலந்து பேசி முடிவெடுப்பதற்காக, கழகத்தின் தலைமைச் செயற்குழு கூட்டம், வரும் 13ஆம் தேதியன்று காலையில், அண்ணா அறிவாலயத்தில் நடை பெறவுள்ளது.

தமிழகத்தில் ஏற்கனவே பல முறை மின் வெட்டுப் பிரச்சினை இருந்த போதிலும், தற்போது இருப்பதைப் போல எந்தக் காலத்திலும் இப்படித் தமிழகத்தின் வாழ்க்கை முறையையும் பொருளாதாரத்தையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கிடும் வகையில் மின் வெட்டு இருந்ததில்லை. கடந்த பத்து நாட்களாக ஏடுகளில் இந்த மின்வெட்டு பற்றி வந்துள்ள செய்திகளின் தலைப்புகளைப் படித்துப் பார்த்தாலே எந்த அளவிற்கு இந்தக் கொடுமை நிலவி வருகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

- மின் வெட்டு காரணமாக தமிழக ஜவுளித் துறையின் எதிர்காலம்? - தினமும் 100 கோடி ரூபாய் உற்பத்தி இழப்பு.
- குத்தாலம் எரிவாயு நிலையத்தில் ஜெனரேட்டர் இல்லாததால் மின் உற்பத்தி பாதிப்பு.
- காற்றாலை மின்சாரத்தை விற்றதில் 18 ஆயிரம் கோடி ரூபாய் வாரியத்துக்கு இலாபம். ஆனால் உற்பத்தி யாளர்களுக்குப் பணம் தரப்படவில்லை.

- மின் பழுது நீக்க உபகரணங்கள் இல்லை - அதிகரிக்கும் மின் வெட்டு.
- தமிழகத்திற்கு கூடுதல் மின்சாரம் கொண்டு செல்ல தென் மண்டல வழித் தடத்தில் போதிய கட்டமைப்பு வசதி இல்லை - உச்ச நீதி மன்றத்தில் மத்திய அரசு தகவல்.
- தடையில்லாத மின்சாரம் கேட்டு தொழில் துறையினர் திருப்பூரில் ஆர்ப்பாட்டம்.
- மின்வாரிய அதிகாரிகளை சிறை பிடித்த பொதுமக்கள்.
- மின்வெட்டு காரணமாக நூற்பாலைகள் வெளி மாநிலங்களுக்கு இடம் பெயர முடிவு.
- மாநிலம் முழுவதும் மின் வெட்டு நேரம்குறித்து முறையான தகவல் அளிக்காதது ஏன்? - சென்னை உயர் நீதி மன்றம்.
- மாவட்டங்களில் 16 மணி நேரம் மின் வெட்டு
- நிர்வாகச் சீர்கேட்டினால் 1800 மெகாவாட் மின் உற்பத்தி முடக்கம்

இவைகள் எல்லாம் ஏடுகளில் வெளி வந்த செய்திகளுக்கான தலைப்புகள்.

அல்ல, அல்ல - நடைபெறும் ஆட்சிக்கு தமிழ்நாட்டு பத்திரிகைகள் கொடுத்துள்ள “நற்சான்றிதழ்”கள்.

மின்சாரம் முறையாக வழங்காமல், காவிரியிலும் நீரைப் பெற முடியாமல் குறுவை பயிர்ச் சாகுபடி அறவே இல்லை என்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டு, சம்பாப் பயிராவது பிழைக்குமா என்று விவசாயிகள் கேள்விக்குறியோடு இருக்கின்றபோது, நான்கு விவசாயிகள், நாகை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று பேரும், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரும் இந்த ஆட்சியின் அவலத்துக்குத் தங்கள் இன்னுயிரைத் தாரை வார்த்து விட்டுத் தற்கொலை செய்து கொண்டு மடிந்திருக்கிறார்கள்.

மயிலாடுதுறையைச் சேர்ந்த கரும்பு விவசாயி பூமிநாதன் என்பவர் தற்கொலை செய்து கொண்டு மறைந்து சில மாதங்கள் முடிவதற்குள், அதே மாவட்டத்தில் கீழ்வேளூர் வட்டத்தில்,

கூரத்தாங்குடி கிராமத்தில் நெல் விவசாயி ராஜாங்கம் தற்கொலை செய்து கொண்டு இறந்திருக்கிறார். ராஜாங்கம் தன் மனைவி தேவிகாவையும், மனோஜ், விஷ்வா என்ற இரண்டு மகன்களையும் அனாதைகளாக்கி விட்டு மறைந்திருக்கிறார். சம்பா பயிர் கருகியதால் நாகை மாவட்டத்தில் கீழையூரை அடுத்துள்ள மகிலி கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜ் என்ற "தலித்" விவசாயி 29-11-2012 அன்று தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டார். கடலூர் மாவட்டத்தில், பூலாமேடு கிராமத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தி என்பவர் தண்ணீர் இல்லாமல் நெற்பயிர்கள் காய்ந்து கருகிக் கிடப்பதைப் பார்த்து கண்ணீர் விட்டதோடு, அந்த நிலத்திலேயே சுருண்டு விழுந்து 7-12-2012 அன்று இறந்திருக்கிறார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு, சென்னை அசோக் நகரைச் சேர்ந்த குடிமக்கள் பாதுகாவலர்கள் அமைப்பின் தலைவர் திரு.வி.ரவிச்சந்திரன் சென்னை உயர் நீதி மன்றத்தில் பொது நல மனு ஒன்றினைத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனு வில், சென்னை மாநகரிலும், மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளிலும் அடிக்கடி மின்சார விநியோகம் தடை செய்யப்படுகிறது; மின்சாரம் வழங்கப்படும் நேரத்திலும் கூட மின் அழுத்தம் குறைவாகவே உள்ளது; இதனால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்; எனவே இப்பிரச்சினையில் நீதி மன்றம் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று கேட்டிருந்தார்.

> இந்த மனு தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால், நீதிபதி டி.எஸ். சிவஞானம் ஆகி யோரைக் கொண்ட முதன்மை அமர்வு முன்னிலையில் 26-11-2012 அன்று விசாரணைக்கு வந்தபோது, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், "மாநிலத்தின் பல மாவட்டங்களில் தினமும் சில மணி நேரத்துக்கு மட்டுமே மின்சாரம் வழங்கப்படுவதாகவும், கோவை உள்ளிட்ட பல மாவட்டங்களில் தினமும் 12 மணி நேரத்துக்கும் மேலாக மின்சாரம் தடை செய்யப்படுவதாகவும் எங்களது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் தினமும் எத்தனை மணி நேரத்துக்கு மின்சாரம் நிறுத்தப்படுகிறது என்பது பற்றிய விரிவான அறிக்கையை தமிழ்நாடு மின்சார

வாரியம் நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். மேலும் மின்சாரம் நிறுத்தப்படும் நேரங்கள் பற்றிய தகவலை ஊடகங்கள் மூலமாக மக்களுக்கு முன்ன தாகவே தெரியப்படுத்தாதது ஏன் என்பது பற்றியும் மின்சார வாரியம் தனது அறிக்கையில் விளக்கம் அளிக்க வேண்டும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் உள்ள நூற்பாலைகள் மேலும் இந்த மின்வெட்டினைச் சமாளிக்க முடியாமல், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு மாற்றிக் கொள்வதைப் பற்றித் தீவிரமாக ஆலோசித்து வருவதாகவும், அன்றாடம் இந்தத் தொழில் மூலமாக மட்டும் 100 கோடி ரூபாய் வரை உற்பத்தி இழப்பு ஏற்படுவதாகவும், இந்த ஆட்சியில் ஜவுளித் தொழிலே சவக்குழிக்குப் போய்விடுமோ என்ற அளவிற்கு நிலைமை மிக மோசமாக உள்ளதாகவும் செய்திகள் அன்றாடம் வந்து கொண்டே இருக்கின்றன. மராட்டிய மாநில அரசும், குஜராத் மாநில அரசும் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் முறையே 40 ஆயிரம் கோடி ரூபாய்; 20 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஜவுளித் துறையில் ஈர்ப்பதற்கேற்ப புதிய திட்டங் களை வகுத்து அறிவித்துள்ளன. ஆனால் அதே நேரத்தில் கடந்த 150 ஆண்டுகளுக்கு மேலாக "தென்னிந்திய மான்செஸ்டர்" எனப் போற்றிப் புகழப்பட்ட கோவைப் பகுதி ஜவுளித் துறை அ.தி.மு.க. ஆட்சியில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி விட்டதென பத்திரிகைகள் கவலை கொண்டு எழுதி வருகின்றன. ஆனால் கவலை கொள்ள வேண்டிய இந்த ஆட்சியினருக்குத்தான் அதைப் பற்றிய கவலை இருப்பதாகத் தெரியவில்லை. தென்னிந்திய நூற்பாலைக் கழகத்தின் செயலாளர் கூறும் போது, "2008ஆம் ஆண்டிலிருந்து மின் பிரச்சினை இருந்த போதும் தற்போது இருப்பதைப் போன்ற மோசமான நிலை எப்போதும் இருந்ததில்லை" என்று கூறியிருக்கிறார். குஜராத் மாநிலத்தில் சட்டப்பேரவை தேர்தல் முடிந்த பிறகு, ஏராளமான நூற்பாலைகள் தமிழகத்திலிருந்து குஜராத் மாநிலத்திற்கு மாறக் கூடிய நிலைமை இருப்பதாகச் சொல்கிறார்கள்.

காற்றாலைகள் மூலமாக மின் உற்பத்தி ஓரளவுக்கு கிடைக்கும் என்ற போதிலும், கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக காற்றாலை உற்பத்தியாளர்களுக்கான மின் கட்டணம் மின் வாரியத்தினால்

செலுத்தப்படவில்லை என்றும் ஏடுகளில் பெரிதாக செய்தி வந்துள்ளது.

திருப்பூர் மாநிலத்தில் பனியன் தொழில் தற்போது அப்படியே ஸ்தம்பித்துக் கிடப்பதாகவும், அதன் காரணமாக பல கோடி ரூபாய்க்கான ஏற்று மதியினை நிறைவேற்ற முடியாத நிலை இருப்பதாகவும், சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் போட்டி காரணமாக தற்போதுள்ள சூழ்நிலை மாறக் கூடும் என்ற நம்பிக்கை இல்லாமல் அந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் இருக்கிறார்களாம். தீபாவளி விடுமுறைக்காக தங்கள் ஊர்களுக்குச் சென்ற 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பனியன் தொழிலாளர்கள் இதுவரை மீண்டும் திருப்பூருக்கு வரவே இல்லையாம். ஈரோடு மாநிலத்திலும் இதே நிலைதான் இருக்கிறதாம். பிழைப்புக்கு வழி தேடிப் பிற இடங்களுக்குச் சென்று விட்டார்கள்.

"தானே" புயல் காரணமாக ஏற்பட்ட அழிவிலிருந்து தற்போது தான் எழுந்துள்ள கடலூர் மாவட்டத்தில் 14 மணி நேர மின் வெட்டு என்பது 18 மணி நேரமாக அதிகரித்துள்ளதாம். அந்த மாவட்டத்தில் மட்டும் சிறு தொழிலில் ஈடுபட்டுள்ள பத்தாயிரம் பணியாளர்கள், பத்தாயிரம் நெசவாளர்கள், வணிக நிறுவனங்களில் பணியாற்றும் ஆறாயிரம் பேர், பத்தாயிரம் விவசாயிகள் உட்பட சுமார் ஒரு லட்சம் பேர் மின் வெட்டு காரணமாக பணியில்லாமல் இருக்கிறார்களாம். விழுப்புரம் மாவட்டத்திலோ வேளாண்மை முழுவதுமாகப் பாழாகி விட்டது. இரும்பு உருக்காலைகள் எல்லாம் மூடப்பட்டு விட்டன.

சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நெசவாலைகள், அரிசி ஆலைகள், சிறு சிறு வணிகக் கூடங்கள் என்று மின் வெட்டில் பெரிதும் பாதிக்கப்பட்டு, நான்கு இலட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்திருப்பதாகவும், மாதம் ஒன்றுக்கு 600 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு என்றும் சொல்லப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் சர்க்கரை மற்றும் நெல் சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டதால், 40 சதவிகித உற்பத்தி தான் கிடைக்கும் என்று கூறப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் 1,500 பெரிய மற்றும் சிறிய வர்த்தக நிறுவனங்கள் மின்வெட்டு காரணமாக பாதிக்கப்பட்டு, 15 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்த நிலையில் இருக்கிறார்களாம். திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசி ஆலைகள் மூடிக்

கிடக்கின்றன. குமரி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டிடப் பணிகளை ஆற்றுவதற்காக கேரளாவுக்குச் சென்றுவிட்டார்களாம்.

டெல்டா மாவட்டங்களைப் பற்றி எழுதவே தேவையில்லை. நேற்றைய தினம் அங்கே மிகப் பெரிய போராட்டம் நடைபெற்று, சுமார் பத்தாயிரம் பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். முதல மைச்சர் 12 மணி நேரத்திற்கு மும்முனை மின்சாரம் தருவதாக வாக்களித்திருக்கிறார். வந்தால்தான் நிச்சயம்.

சென்னையிலோ அன்றாடம் இரண்டு மணி நேரம் மின் வெட்டு! மாநகரில் உள்ள லட்சக்கணக்கான அலுவலகங்களில் இரண்டு மணி நேரம் மின்சாரம் இல்லை என்பது எந்த அளவிற்குப் பணிகளைப் பாதிக்கும் என்று சொல்லத் தேவையில்லை. உதாரணமாக ஐந்து மாடி, ஆறு மாடிக் கட்டிடங்களில் மின்சாரம் இல்லாமல் "லிப்ட்" இரண்டு மணி நேரத்திற்கு வேலை செய்யாது என்ற நிலையில், அந்த அலுவலகங்களுக்கு வருகின்றவர்களும் சரி, அங்கே பணியாற்றுகின்றவர்களும் சரி, எந்த அளவிற்கு இன்னலடைகிறார்கள் என்பதை அனுபவப்பூர்வமாக தெரிந்தவர்களுக்குத்தான் இந்தச் சிரமம் புரியும்.

இந்த நிலைமைகளையெல்லாம் பற்றித் தமிழக அரசு ஏதாவது கவலைப்படுகிறதா? தி.மு. கழக ஆட்சியில் ஓரளவுக்கு மின்சார வெட்டு இருந்தபோது, இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா எப்படியெல்லாம் அறிக்கை விடுத்தார், பதவியை விட்டு என்னை உடனடியாக விலகும்படி ஆணையிட்டார், என்னென்ன வார்த்தைகளால் அர்ச்சனை செய்தார் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நிச்சயமாக மறந்திருக்க மாட்டார்கள். நிலக்கரி இல்லாததால் மின் உற்பத்தி பாதிப்பு - ஜெனரேட்டர் இல்லாததால் மின் உற்பத்தி பாதிப்பு - மின் பழுது நீக்க உபகரணங்கள் இல்லை, அதனால் மின் உற்பத்தி பாதிப்பு என்று தொடர்ந்து வரும் செய்திகள் - மின் உற்பத்தியை அதிகரித்து, மின் வெட்டினை சமாளிப்பதிலே இந்த அரசுக்கு உள்ள அக்கறையின்மையினைத் தான் வெளிப்படுத்துகிறது. பிரச்சினையை யாராவது எடுத்துக் கூறினால், மத்திய அரசு ஒத்துழைப்பு தரவில்லை, டெல்லியிலே மிச்சப் படும் மின்சாரத்தைத் தமிழகத்திற்கு ஒதுக்க மத்திய அரசுக்கு மனமில்லை, ஏற்கனவே இருந்த தி.மு.கழக அரசுதான் காரணம் என்று மற்றவர் கள் மீது பழியைத் தூக்கிப் போடுவதில்தான் காலத்தைக் கழித்து கவனத்தைச் செலுத்துகிறதே தவிர,

நிலைமையை உணர்ந்து அதனை சரி செய்வதிலே அக்கறை காட்டுவதாகத் தெரிய வில்லை. மக்கள் நலன் கருதி, எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஆட்சியினர் மீது குற்றம், குறைகளைச் சுட்டிக்காட்டுவது என்பதுதானே ஜனநாயகம். எதிர்க் கட்சிகளுக்கே வாய்ப்பூட்டுப் போடுவதைப் போல இந்த ஆட்சியினர் மீது யார் குறை சொன்னாலும், காவல் துறையை ஏவிவிட்டு, உடனே அவர்கள் மீது அவதூறு வழக்குப் போட்டு மிரட்டி அலைக்கழித்திடும் பணிகளிலே அன்றாடம் ஈடுபடுகிறது.

இதைப்பற்றியெல்லாம் கலந்துரையாடவும், மேற்கொண்டு முடிவுகளை எடுக்கவும்தான் கழகத்தின் தலைமைச் செயற்குழு வரும் 13ஆம் தேதியன்று கூட்டப்பட்டுள்ளது. செயற் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் அந்தக் கூட்டத்திற்கு வரும்போது, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மின் பற்றாக்குறை எந்த அளவிற்கு உள்ளது என்பதைப் பற்றியெல்லாம் முழு விவரங்களையும் தெரிந்து கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தின் வாழ் வாதாரத்திற்கு அடிப்படையான வேளாண்மை, வணிகம், சிறு தொழில் மற்றும் பெருந் தொழில்கள் என அனைத்தும் மின் வெட்டுக் காரணமாக பெரும் பாதிப்புக்கு ஆளாகி தமிழகத்தின் பொருளாதாரமே வெகுவேகமாக பின்னோக்கி இழுத்துச் செல்லப்படும் கொடுமையை மக்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஜனநாயக ரீதியாக நாம் ஆற்றிட வேண்டிய கடமைகளை வகுத்து நடைமுறைப்படுத்திட வேண்டிய தருணம் இது!

அன்புள்ள,

மு.க.

9-12-2012

3679. பத்திரிகையாளர்களும் ரசித்துச் சிரிக்கட்டும்!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சியில் அன்றாடம் புதுப் புது விநோதங்கள், வேடிக்கைகள், கோமாளித்தனங்கள் நடைபெறுகின்றன. அவற்றில் ஒன்றுதான் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி. 9-12-2012 காலை ஏடுகளில் ஒரு செய்தி, புகைப்படத்துடன் வெளிவந்தது. **"தினமணி" நாளேட்டில் வந்த அந்தச் செய்தியில், எம்.ஜி.ஆரின் நினைவிடத்தைப் புதுப்பிக்கும் பணிகள் விரைந்து முடிக்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். புதுப்பிக்கப்பட்ட நினைவிடம் ஓரிரு வாரங்களுக்குள் திறக்கப்படும் எனப் பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். புதுப்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆரின் நினைவிடத்தை ஓரிரு வாரங்களுக்குள் முதல்வர் ஜெயலலிதா திறந்துவைப்பார் எனத் தெரிகிறது. நினைவிடத்தை அவர் ஞாயிற்றுக்கிழமை அல்லது திங்கள்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்வார் என பொதுப் பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர் என்று குறிப் பிடப்பட்டிருந்தது.**

காலையில் ஏடுகளிலே இந்தச் செய்தி வந்ததற்கு மாறாக அன்று மாலையில் அண்ணா அறிவாலயத்தில் என்னைச் சந்தித்த செய்தியாளர்கள், புதுப்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நினைவிடத்தை எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் அவசர அவசரமாக இன்று மதியம் முதலமைச்சர் திறந்து வைத்திருக்கிறாரே என்று கேட்டபோது, அ.தி.மு.க.வின் தேர்தல் சின்னமான இரட்டை இலைச் சின்னத்தை அரசு சார்பாக உள்ள ஒரு கட்டிடத்தில் அல்லது ஒரு மண்டபத்தில் வைப்பதை ஆட்சேபித்து, சிலர் வழக்குத் தொடுத்திருப்பதாக பத்திரிகைகளில் செய்திவந்துள்ளது. அதற்காக அவசர அவசரமாகத் திறந்திருக்கக் கூடும் என்று சுருக்கமாகப் பதிலளித்தேன். ஆனால் இதிலே உள்ள சில விவரங்களைத் தமிழ்நாட்டு மக்களுக்கு விளக்கிட அல்லது நினைவூட்டிட விரும்புகிறேன்.

இன்று (10-12-2012) காலையில் வெளிவந்த தமிழ்நாட்டு ஏடுகளில் பிரதானச் செய்தியே, சென்னை மெரினாவில் ரூபாய் எட்டு கோடியில் புதுப்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நினைவிடத்தை ஜெயலலிதா திறந்துவைத்தார் என்பதுதான். ஏன் இந்த அவசரம்? நேற்று காலையில்தான் அந்த நினைவிடப் பணிகள் நடந்து வருவதாகவும் இன்னும் ஓரிரு வாரங்களில் முதலமைச்சர் திறந்து வைப்பார் என்றும் செய்தி வந்திருக்கிறது. இந்த நிலையில் அந்த புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தை நேற்று பிற்பகல் 2.35 மணிக்கு முதலமைச்சர் திறந்துவைத்தார் என்றால் அதற்குக் காரணம் என்ன? அதிலே உள்ள மர்மம் என்ன? ஏன் அதற்கான முன்னறிவிப்பு எதுவும் செய்யப்படவில்லை? 8 கோடி ரூபாய் செலவில் புதுப்பித்துவிட்டு, அதற்காக ஓர் அழைப்பிதழ் கூட இல்லாமல், அவசர அவசரமாகச் செய்தியாளர்களை நேற்று மதியம் வரச்சொல்லிவிட்டு என்ன காரணத்தால் முதல் அமைச்சர் திறந்துவைத்தார். நடப்பது அரசு தானா? அல்லது தான்தோன்றித் தர்பாரா?

பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா அண்ணா நினைவிடத்தைப் புதுப் பொலிவுடன் புனரமைத்திட 1 கோடியே 20 லட்சம் ரூபாயும், எம்.ஜி.ஆர். நினைவிடத்தை புனரமைத்திட 7 கோடியே 70 லட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கப் படும் என்று அறிவித்தார். 1 கோடியே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்ட அண்ணா நினைவிடத் தைப் புனரமைத்தார்களா? அதற்கான பணிகள் முடிவுற்றதா? அது திறக்கப்பட்டு விட்டதா? இல்லையா? அதைப்பற்றி எந்த விவரமும் இல்லை. ஆனால் அதற்கு முன்பாகவே எட்டு கோடி ரூபாய், எம்.ஜி.ஆர். நினைவிடத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டுப் பணிகள் முடிவுற்று நேற்றையதினம் திறப்பு விழா நடந்து முடிந்துள்ளது.

இந்தத் திறப்பு விழாவினை முன்னிட்டு, நேற்றையதினம் அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அரசு செய்திக்குறிப்பில், எம்.ஜி.ஆர். அவர்களைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் எப்படிப்பட்ட வள்ளல் என்று புகழ்ந்துரைத்தார் என்பதைத்தான் முன்னுரையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த அண்ணாவின் நினைவிடத்தைப் புதுப்பிக்க இந்த ஆட்சியில் எம்.ஜி.ஆர். நினைவிடத்தைவிட மிகவும் குறைந்தத் தொகையே ஒதுக்கப்பட்டு, அதன் பணிகளும் நிறைவுற்றுவிட்டனவா என்று தெரியாத நிலையில் இருக்கிறோம்.

எம்.ஜி.ஆர். நினைவிடத்தை நேற்று முதலமைச்சர் ஜெயலலிதா திறந்துவைத்தது பற்றி இன்றையதினம் காலையில் "இந்து" நாளிதழ் செய்தி வெளியிட்டபோது, சில தகவல் களைத் தெரிவித்துள்ளது. அந்த நாளிதழ் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ள அந்தச் செய்திக்கு தலைப்பே, ""Two Leaves" adorns facade of renovated MGR Memorial - No prior announcement of inauguration by Chief Minister Jayalalithaa" (புதுப்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நினைவிடத்தில் "இரட்டை இலை" அலங்கரிக்கிறது - முதல் அமைச்சர் ஜெயலலிதா திறந்துவைத்தது பற்றி முன்கூட்டி அறிவிப்பு இல்லை) என்பதுதான்!

இந்தத் தலைப்பின்கீழ் வந்த செய்தியில், "முதலமைச்சர் ஜெயலலிதா ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்த புதுப்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். நினைவிடத்தின் முகப்பில் அ.தி.மு.க.வின் மிகப் பெரிய இரட்டைஇலைச் சின்னம் அலங்கரிக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் திறந்து வைக்க அங்கே வருவதைப் பற்றிச் செய்தியாளர்களுக்கே பிற்பகலில்தான் தெரிவிக்கப்பட்டது. சில நாட்களுக்கு முன்பு, தி.மு.க.வின் வழக்கறிஞர் அணி செயலாளரான ஆர்.எஸ். பாரதி சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட "இரட்டை இலை"

சின்னத்தை மாநில அரசு அங்கே நிறுவுவதைத் தடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார். இந்த வழக்கு செவ்வாய்க்கிழமை (11-12-2012) விசாரணைக்காக வரலாம். ஒரு வாரத்திற்கு முன்பு, ஆர்.எஸ். பாரதி அ.தி.மு.க. வின் இரட்டை இலை சின்னத்தை அங்கே வைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாநில அரசுக்கும் எழுதியிருந்தார்" என்றெல்லாம் "இந்து" விவரித்ததோடு, சில ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியையும் விளக்கியுள்ளது.

"When the DMK was in power during 1996-2001, it remodeled the Anna mausoleum and the entrance arch carried the design of "Rising Sun", a symbol of the DMK. After the AIADMK returned to power in May 2001, the design was removed"

(அதாவது 1996-2001ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, அண்ணா நினைவிடம் புதுப்பிக்கப்பட்டபோது, அங்கே தி.மு. கழகத்தின்

சின்னமான "உதய சூரியன்" போல ஓரிடத்தில் "டிசைன்" இருந்தது. 2001ஆம் ஆண்டு மே மாதம் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் அந்த "டிசைனை" அகற்றிவிட்டது)

இவ்வாறு "இந்து" இன்று எழுதியுள்ளது. ஆனால் இந்தச் சம்பவம் பற்றி 20-3-2002 தேதிய "முரசொலி"யிலே "இதையும் கொஞ்சகாலம் ரசிப்போம்" என்ற தலைப்பில் நான் எழுதிய உடன்பிறப்பு மடலில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன். அது வருமாறு :-

"1987ல் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு ஜானகி அம்மையார் ஆட்சி 24 நாட்களும்; அதன் பிறகு கவர்னர் ஆட்சி சுமார் ஓராண்டும் நடைபெற்றுங்கூட எம்.ஜி.ஆர். நினைவிடம் வெறும் செங்கற்கள் அடுக்கிய நிலையில் இருந்ததே தவிர யாரும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. 1989ல் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் எம்.ஜி.ஆர். நினைவிடத்தை அண்ணா நினைவிடத்துக்கு அடுத்த நிலையில் பொலிவுடன் அமைத்தோம். 1991இல் ஆட்சிக்கு வந்த செல்வி ஜெயலலிதா அந்த நினைவிடத்தை மேலும் விரிவுபடுத்திக் கட்டி; நினைவிட வாசலில் "பிர்மாண்டமான" இரட்டை இலை சின்னத்தைத் தோரணவாயிலாக அமைக்கச் செய்தார். 1996இல் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்த பிறகு கடந்த ஐந்தாண்டு காலமும் அந்த இரட்டை இலை வாசல் முகப்பை நாம் மாற்றி அமைக்கவோ, அகற்றிவிடவோ நினைக்கக்கூட இல்லை. ஆனால் இப்போது இந்த அம்மையார் ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக அண்ணா நினைவிடத்து முகப்பு வாசலில் உள்ள தோரண வாயிலில் இருபுறமும் உள்ள உதயக் கதிர் போன்ற கோடுகளை "உதயசூரியன்" சின்னமெனக்கூறி அவற்றை ஒரே நாளில் இடித்தும் தேய்த்தும் அகற்றி விட்டார்கள். அது உதய சூரியன் சின்னம் என்று அந்த வளைவுகளில் அமைக்கப்பட்டதல்ல! பொதுவாகக் கட்டிடங்கள், வீடுகள் இவற்றின் வளைவுப் பகுதிகளில் மேலெழும் கதிர்கள் போல அமைப்பது கட்சிச் சார்பற்ற இடங்களிலும் இயற்கையானதே! இதோ; சென்னை எழும்பூர் கண் மருத்துவமனைப் படத்தையும், ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள வீடு ஒன்றின் முகப்பு படத்தையும், "கதீட்ரல் சர்ச்" முகப்பின் படத்தையும் இங்கே வெளியிட்டுள்ளேன். (நல்லவேளை; தமிழ் நாடு முழுதும் யார் வீட்டு முகப்பிலும் இதுபோன்ற உதயக் கதிர் அமைப்புகள் இருத்தலாகாது என்று உத்திரவு போடாமல்

இருக்கிறார்களே; அதற்காக மகிழ்ச்சி அடையலாம்). ஆரோக்கிய அரசியல் - அ.தி.மு.க. - தி.மு.க. - இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து நடுநிலையாளர்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்பதற்காகவே எல்லாப் படங்களையும் பார்வைக்கு வைத்துள் ளேன்" என்று அப்போது எழுதியிருந்தேன்.

இதைத்தான் "இந்து" நாளிதழ் கழக ஆட்சியிலே இருந்த "உதயக் கதிர்" போன்ற அமைப்பினை, அ.தி.மு.க. 2001இல் ஆட்சிக்கு வந்தவுடன் எடுத்துவிட்டது என்று எழுதியுள்ளது. அவ்வாறு "உதயக் கதிர்" போன்ற டிசைனையே எடுத்த அ.தி.மு.க. ஆட்சியினர் தான் தற்போது, எம்.ஜி.ஆர். நினைவிடத்தில், மிகப் பெரிய அளவில் "இரட்டை இலை" சின்னத்தை அமைத்து, அதுபற்றி தி.மு.கழகம் சட்ட ரீதியாகவும், தலைமைச் செயலாளர் அளவிலும் எடுத்துச் செல்ல முனைந்துள்ள நிலையில் - யாருக்கும் முன்கூட்டியே தெரிவிக்காமல் - எம்.ஜி.ஆர் அவர்களையே அசிங்கப்படுத்துவதைப்போல இந்தக் காரியத் தைச் செய்திருக்கிறார்கள்.

2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் அண்ணா நினைவிடத்திலே இருந்த "உதயக் கதிர்" போன்ற டிசைனை அகற்றியதை; 2006ஆம் ஆண்டு மறுபடியும் தி.மு. கழக ஆட்சி அமைந்தவுடன், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த தம்பி துரைமுருகன் மீண்டும் அந்த "உதயக் கதிர்" அமைப்பினை அண்ணா நினைவிடத்திலே அமைத்திட என்னிடம் கேட்டபோது, தேவையில்லை, அதை வைத்தால் தி.மு. கழகத்தின் சின்னமான "உதய சூரியன்" சின்னத்தைத் தான் அங்கே வைப்பதாகச் சொல்வார்கள். உதய சூரியன் சின்னத்தை வைக்க நமக்கு இடமா இல்லை, நமக்கு என்று கட்சி அலுவலகங்கள் இருக்கின்றன, அங்கே வைத்துக் கொள்ளலாம். அண்ணா நினைவிடம் என்பது பொதுவான இடம். அரசின் பராமரிப்பிலே உள்ளது. அங்கே நம்முடைய கட்சியின் சின்னத்தை வைப்பது என்பது தவறான ஒன்றாகி விடும் என்றெல்லாம் கூறி அதனைத் தடுத்துவிட்டேன். அது நமது பண்பாடு! நாம் கட்டிக் காத்திடும் அரசியல் நாகரிகம்! அதே நேரத்தில் அவர்களுக்கு என்று சில பண்பாடுகள் உண்டு. உதாரணம் வேண்டுமா?

தலைமைச் செயலகம் ஒன்று போதாதா?

பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம் போதாதா?

பாவேந்தர் செம்மொழி ஆய்வு நூலகம் எங்கே?

1991இல் முதன் முதலாக ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன், பாஞ்சாலங்குறிச்சியில் தி.மு.கழக ஆட்சியில் உருவாக்கப்பட்ட கட்டபொம்மன் கோட்டைவாசல் சாலையில் வைக்கப்பட்டிருந்த "கருணாநிதி தோரணவாயில்" என்பதை அகற்றிவிட்டு "சுந்தர லிங்கம் தோரண வாயில்" அமைக்கப் போகிறேன் என்று அறிவித்தார். உண்மை என்னவென்றால், என் தலைமையிலான தி.மு.கழக ஆட்சியில் பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை அமைத்தபோதே "சுந்தரலிங்கம் தோரண வாயிலும்" அமைக்கப்பட்டுவிட்டது என்பது தான்!

1992இல் ஜூன் 3ஆம் தேதி என் பிறந்த நாளுக்காக வழக்கம்போல விழா நடத்த கலைவாணர் அரங்கம் கேட்டு 1992 ஏப்ரல் 30ஆம் தேதியே மனு தரப்பட்டது. ஆனால் அதற்கு அப்போது அனுமதி மறுக்கப்பட்டது.

அ.தி.மு.க. ஆட்சியில் தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டு மதுரை சிறையிலே இருந்த சுப்பு லட்சுமி ஜெகதீசன், ஜெகதீசன் ஆகியோரைச் சந்திக்க நான் மதுரை சென்று இறங்கியதும், அவர்களைப் பார்க்கக் கூடாதென்று திடீர் தடை உத்தரவு பிறப்பித்தார்கள். அதன் பிறகு நான் சென்னை திரும்பி, நீதி மன்றத்தில் வழக்காடி, அதன் தீர்ப்புக்குப் பிறகே மதுரை சென்று சிறையில் அவர்களைப் பார்த்தேன்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தேர்தல் பிரச்சாரத்திற்காக நான் சென்றபோது குடகனாறு அரசினர் விடுதியில் தங்குவதற்கு 5-2-2002 அன்று அனுமதி தரப்பட்டது. ஆனால் அந்த அனுமதியை 6-2-2002 அன்று ரத்து செய்து கடிதம் அனுப்பினார்கள்.

இவைகள் எல்லாம் இந்த ஆட்சியாளர்களின் பெருந்தன்மையான நடைமுறைகள், விநோதங்கள்! வேடிக்கைகள்! சிரிக்காமல் இவைகளை எல்லாம் கண்டு ரசிப்போம்! நம்மோடு சேர்ந்து பத்திரிகையாளர்களும் ரசித்துக் கொண்டே சிரிக்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

11-12-2012

3680. வெங்கிடங்கால்,
வாழக்கரையை எங்ஙனம் மறப்பேன்!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதத்திற்கு இடையே ஒரு புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது. அது ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சி. தற்போதைய கழக நண்பர்களுக்கும், இளைஞர்களுக்கும் இது யாருடைய இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி என்பது தெரியாது. திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் பகுதி வாரியாகவும், மாவட்ட வாரியாகவும் இதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர்கள் பலர் உண்டு. தொடங்கப்பட்ட காலத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் பெரும்பாலானவர்கள் தற்போது உயிரோடு இல்லை என்ற போதிலும், அவர்களின் வாரிசுகளும் மற்றும் லட்சக்கணக்கான இளைய சமுதாயத்தினரும் தற்போது கழகத்தை வளர்க்கும் பெரும் பணியிலே ஈடுபட்டுள்ளார்கள். ஆரம்பக் காலத்தில் நமது கழகத்தை வளர்க்க அரும்பாடுபட்ட ஒரு குடும்பத்தின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்கு நான் சென்றிருந்தேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் நிச்சயதார்த்த மாலை தூக்கிய மணமக்கள் சந்தானத்தின் புதல்வி தமிழரசி குமரனின் இளைய மகன் திலீபன் – நேமிதா ஆகியோர் மணவிழா வரவேற்பில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். மேலே: தலைவர் சந்தானத்தின் துணைவியார் திருமதி தேவகி, மணமக்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் உடன் உள்ளனர்.

இந்த திருமண வரவேற்பு யாருடைய இல்லத்தில் என்றால், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில், நமது நாகைப் பகுதியில் தொடக்கக் காலத்தில் சுயமரியாதை இயக்கத்திலும், அதன் பிறகும் கழகத்தை வளர்க்க என்னோடு இணைந்து அரும்பாடுபட்ட வெங்கிடங்கால் சந்தானம், வாழக்கரை ராஜகோபால், அவருடைய இளவல் நாகை ராஜமாணிக்கம் ஆகியோரின் குடும்பத்தினரின் திருமண வரவேற்பு விழா நிகழ்ச்சி. இந்தக் குடும்பத்தினர் நாகை மாவட்டத்தில் கீவளூர் வட்டாரத்தில் ஓரளவு வசதி படைத்த "சைவ முதலியார்" வகுப்பைச் சேர்ந்தவர்கள். நாவலர், பேராசிரியர் போன்றவர்களுக்கு உறவினர்களும்கூட. ஆனால் அவர்களைவிட என்னைத்தான் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற எண்ணத்தோடும், பாசத்தோடும் பழகுவார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கெல்லாம் அந்தக் காலத்தில் நான்தான் பெயர் சூட்ட வேண்டும். அந்த வீட்டுக் குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை என்னிடம் அந்தக் காலந்தொட்டு, இந்தக் காலம் வரை எந்த அளவிற்கு அன்போடும், நேசத்தோடும் பழகுவார்கள் என்பதை நான்தான் அறிவேன். அதனால்தான் அந்தக் குடும்பத்தின் திருமண வரவேற்பு என்றதும் நான் பிடிவாதமாகப் புறப்பட்டுச் சென்றேன். அது மாத்திரமல்ல; அந்த விழாவிற்கான அழைப்பிதழை எனக்குக் கொண்டு வந்து கொடுத்தபோது, அந்தக் குடும்பமே நேரில் வந்து நான் அவசியம் வரவேண்டுமென்று அழைத்து விட்டுச் சென்றது.

அந்த நேரத்தில் என்னுடைய நினைவு வேறெங்கும் செல்லவில்லை. இந்தத் திருமண வரவேற்பு விழாவிற்கு மட்டும் வெங்கிடங்கால் சந்தானமோ, வாழக்கரை ராஜகோபாலோ இருந்திருந்தால் எவ்வாறு இருந்திருக்கும்? என்னை எப்படி வரவேற்று அழைத்துச் சென்றிருப்பார்கள்? அந்தக் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் எந்த அளவிற்கு மகிழ்ச்சியில் திளைத்திருப்பார்கள் என்றெல்லாம் எனக்கு நானே நினைத்துக் கொண்டேன்.

திருமண வரவேற்பு வடபழனியில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் என்று கூறியபோது, மாலையில் கோடம்பாக்கம் சாலையில் போக்குவரத்து நெரிசல் இருக்கும், அங்கே செல்வது சிரமமாக இருக்குமே என்ற போதிலும், அந்த இல்லத்தின்

முக்கியத்துவம் கருதி நான் அதற்குச் சென்றே ஆக வேண்டும், மணமக்களுக்குப் பூச்செண்டுகளையும், அன்பளிப்பு கொடுக்க ஏதாவது ஒரு பொருளையும் வாங்கிவைக்குமாறு கூறிவிட்டேன்.

நான் வரவேற்புக்குப் புறப்பட்டபோது, என்னுடன் தம்பிகள் அமைப்புச் செயலாளர் கல்யாணசுந்தரமும், தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் அன்பழகனும் மட்டுமே உடன் வந்திருந்தார்கள். போக்குவரத்து நெரிசலோ மிகவும் கடுமையாக இருந்தது. எனக்காக வந்த பாதுகாவலர்களோ மிகுந்த சிரமப்பட்டு அந்தப் போக்குவரத்துக்கு இடையே என்னை அழைத்துச் சென்றார்கள். நான் அந்த நிகழ்ச்சிக்குப் புறப்பட்டது முதல், அங்கே சென்றுவிட்டு என் இல்லம் திரும்பிய பிறகும் கூட நீண்ட நேரம் என்னுடைய நினைவுகள் எல்லாம் - எனது இளமைக் காலத்தில் வெங்கிடங்கால் சந்தானம், வாழக்கரை ராஜகோபால் போன்றவர்களோடு இணைந்து கழகம் வளர்க்கப்பட்ட பாட்டினை எல்லாம் நினைத்துக் கொண்டிருந்தேன்.

ஒரு முறை அண்ணா அவர்கள் திருவாரூர் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிவிட்டு காஞ்சிபுரம் திரும்புகிறார்கள். பேச்சுத் துணையாக இரண்டு பேரை என்னுடன் காரில் வர அனுப்பிவை என்று என்னிடம் கூறியபோது, நான் வெங்கிடங்கால் சந்தானத்தையும், வாழக்கரை ராஜகோபாலையும்தான் அண்ணா அவர்களின் பயணத் துணையாக அனுப்பி வைத்தேன். அதற்கு இரண்டு நாட்கள் கழித்து அண்ணா அவர்களை நான் காஞ்சிபுரத்தில் நேரில் சந்தித்தபோது, "என்ன அண்ணா? பயணத்திற்குத் துணையாக வந்தார்களா?" என்று கேட்டபோது, "திருவாரூரில் கார் புறப்பட்டவுடன் பேச ஆரம்பித்தவர்கள்தான், காஞ்சிபுரம் வந்து நான் காரிலிருந்து இறங்குகின்றவரை பேச்சை நிறுத்தவே இல்லை; சரியான நபர்களாகப் பிடித்து அனுப்பிவைத்தாய்" என்று கூறினார்கள். நான் இதை வெங்கிடங்கால் சந்தானத்திடமும், ராஜகோபால் இடத்திலும் கூறியபோது, அவர்களுக்கு எந்த அளவிற்கு மகிழ்ச்சி ஏற்பட்டது என்பதையெல்லாம் தம்பிகள் அமைப்புச் செயலாளர் கல்யாணத்திட மும், தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் அன்பழகனிடமும் காரிலே சொல்லிக்கொண்டே வந்தேன்.

போக்குவரத்து நெரிசலைச் சமாளித்து, முக்கால் மணி நேர பயணத்திற்குப் பிறகு வடபழனி திருமண மண்டபத்தை அடைந்தோம். நான் காரிலிருந்து இறங்குவதற்கு முன்பாகவே, எனக்கு சிரமம் கொடுக்கக் கூடாது என்பதற்காக, மணமக்கள் இருவரும் கையிலே பூச்செண்டோடு என்னை வரவேற்க மண்டப வாயிலில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றி வெங்கிடங்கால் சந்தானத்தின் குடும்பமே நின்றுகொண்டிருந்தது. வயதானவர்கள் முதல் குஞ்சு குளுவான் என்பார்களே அனைவரும் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன், வெளிநாட்டிற்குப் போய்விட்டுப் பல நாட்கள் கழித்து ஊர் திரும்பினால் அந்தக் குடும்பத்தினர் எந்த அளவிற்கு மகிழ்ச்சிக் கடலில் ஆழ்வார்களோ, அதுபோன்ற மகிழ்ச்சி அங்கே ஒவ்வொருவருடைய முகத்திலும்! ஏன் அவர்களை யெல்லாம் பார்த்தவுடன் எனக்கும் இளம் வயதில் வெங்கிடங்காலுக்கு நான் சென்றால் என்னை எப்படி வரவேற்பார்களோ, அந்த நினைவுகள் எல்லாம் மனதிலே அலைபாய்ந்தன.

அந்தக் கூட்டத்தினர் ஒவ்வொருவரும் என்னிடம் தாங்கள் யார் என்று சொல்லியபோது, அவர்கள் இளம் வயதிலே எப்படி இருந்தார்கள், இப்போது இப்படி ஆகிவிட்டார்களே என்று நினைத்துக் கொண்டேன். அந்தக் கூட்டத்திற்கிடையே திடீரென்று ஒரு முகம்... என்று நான் யோசித்த நிலையில், அந்த உருவம், "அய்யா என்னைத் தெரிகிறதா? நான் ராஜமாணிக்கத்தின் மகன், நீங்கள்தானே எனக்குத் தங்கதுரை என்றும், என் தம்பிகளுக்கு தம்பிதுரை, அன்புதுரை என்றும் பெயர் வைத்தீர்கள்; இதோ பாருங்கள் தம்பிகள்!" என்றெல்லாம் சொல்லிக்கொண்டே இருந்தபோதே, நான் பெயர் சூட்டிய அந்தக் குழந்தை, இப்போது நாற்பத்தைந்து வயதுள்ள ஒரு உருவமாக எதிரிலே நிற்பது கண்டு நான் மெய் சிலிர்த்துப் போனேன். ராஜமாணிக்கத்தின் மகள் குந்தவையின் திருமணத்தை நான்தான் இருபதாண்டுகளுக்கு முன்பு 10-2-1992 இல் நடத்தி வைத்தேன் என்று பெருமையோடு குறிப்பிட்டார்கள். அந்தக் குடும்பமே என்னைச் சூழ்ந்து கொண்டு புகைப்படம் எடுத்துக் கொள்வதிலே போட்டி போட்டனர்.

திருமண மாப்பிள்ளை யார் என்றால், வெங்கிடங்கால் சந்தானத்தின் மகள் வயிற்றுப் பேரன்! சந்தானத்தோடு நான்

பழகிய காலத்தில் அவருடைய மகளே ஒரு குழந்தை. அதற்குப் பெயர் தமிழரசி! அவரது தங்கை கலையரசி! வாழக்கரை ராஜகோபால் மகள் மாதவி! தற்போது அந்தக் குழந்தை தமிழரசி பெரியவளாகி, திருமணம் முடிந்து, அந்தக் குழந்தைக்கு ஒரு குழந்தை பிறந்து, அந்தக் குழந்தை வாலிபனாகி அவருக்குத்தான் திருமண வரவேற்பு நடைபெறுகிறது. அந்த உற்சாகக் கடலிலே இருந்து விடுபட்டு, சக்கர நாற்காலியில் வேனுக்குள் நுழைந்தேன். அப்போதுதான் என்னுடைய வயதே நினைவுக்கு வந்தது. ஆம், அதுவரை நான் திருக்குவளையிலும், திருவாரூரிலும், வெங்கிடங்காலிலும், வாழக்கரையிலும், நாகையிலும் சுற்றிச் சுழன்று வந்த அந்தக் காலத்திலேதான் இருந்தேன்.

வெங்கிடங்கால் சந்தானம், வாழக்கரை ராஜகோபால், நாகை ராஜமாணிக்கம் போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் நமது கழகத்திற்காக உழைத்த உழைப்பும், பட்ட பாடும் வீண் போகாமல் இன்று நமது கழகம் வளர்ந்திருக்கின்றது. அத்தகையோர் சிந்திய வியர்வை, சிறைச் சாலைகளிலே அனுபவித்த கொடுமைகள் - அதற்கெல்லாம் பிறகுதான் கழகம் ஆட்சிக் கட்டிலிலே ஏறியது. எங்கிருந்தோ வீசிய புயல் காற்றில், எப்படியோ சிலர் மேலே வந்து விடலாம். ஆனால் அந்த உயர்வு தற்காலிகமானது; உழைப்பிலே, தியாகத்திலே உயர்வதே நிரந்தரமானது. எனவே எது நிரந்தரம், எது தற்காலிகம் என்பதை வருங்காலச் சமுதாயம் உணர்ந்து, அதற்கேற்ப தங்கள் வாழ்க்கையினை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்தத் திருமண வரவேற்பு விழா நிகழ்ச்சி பற்றிய நினைவுகள்; இந்தக் கடிதமாயிற்று!

அன்புள்ள,

மு.க.

12-12-2012

3681.இருள் தொலைந்திட வா!
விரைந்து வா! வா!

உடன்பிறப்பே,

கடந்த 13ஆம் தேதியன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட கழகத்தின் முன்னணியினர் மற்றும் மாவட்டச் செயலாளர்கள், ஏனைய செயற்குழு உறுப்பினர்களாம் என் உடன்பிறப்புக்கள், காலையில் 10.00 மணிக்குத் தொடங்கிய செயற்குழுக் கூட்டம் பிற்பகல் 1.00 மணி அளவுக்கு நிறைவுற்ற பிறகு, என்னைச் சந்தித்தவர்கள் அனைவருமே என்னை நெருங்கி வந்து, அதிர்ச்சியும் ஆவலும் கலந்த முகத்தினராய்ப் பின்வருமாறு கேட்டார்கள்; "என்ன தலைவரே! எல்லாச் செயற்குழுக் கூட்டங்களிலும் - பொதுக்குழுக் கூட்டங்களிலும், பொதுவாகவே பொலிவுடன் காணப்படும் உங்கள் முகம், இன்று இவ்வளவு வாட்டமாக இருப்பதற்கு என்ன காரணம்?"

இந்தக் கேள்வியைக் கேட்காதவர்கள் அந்தச் செயற்குழுவில் கலந்து கொண்டவர்களில் யாருமே இல்லை.

அந்தக் காரணத்தை வாய்விட்டுச் சொல்ல முடியாமல், என் நா தழுதழுத்ததை அவர்களுக்கு விளக்கிச் சொல்லவா முடியும்?

சிங்க நடைபோட்டு, சிரித்த முகத்தோடு, செம்மாந்து நடந்து வரும் சேலத்து வேங்கை தம்பி வீரபாண்டியும், சட்ட நுணுக்கங்களோடு சாதுரிய மிக்க வாதங்களை எடுத்துவைத்து, சமூக நீதி வென்றிட காலமெல்லாம் பாடுபட்டு, கழகத்தின் தொண்டனாய், என் தோழனாய், அண்ணாவின் தம்பியாய் அரும்பணி ஆற்றிய தென்பாண்டிச் சிங்கமாம் ஏ.எல். சுப்பிரமணியனும் - கழகத்தின் கட்டளை எதுவாயினும் சிரமேற்கொண்டு, அதனைச் சிரமம் பார்க்காமல் செய்து முடிக்கும் செயல்வீரர் காதர்பாட்சா (எ) வெள்ளைச் சாமியும் - கொள்கைத்

தங்கம் கோட்டூர் இராசசேகரனும் - சந்ததமும் கழகத்தின் புகழ் பாடி, சமுதாய நலனுக்கு கீதம் ஒலித்துக் கொண்டிருந்த - எந்நாளும் நினைவில் நிற்கும் முன்னாள் அமைச்சராம் சமயநல்லூர் செல்வராஜும் - சூராதி சூரன், சுயமரியாதை வீரன் சூலூர் பொன்முடியும், இன்னும் என் நெஞ்சை விட்டு அகலா இளைய உடன் பிறப்புக்களாம் இனிய கழக வீரர்கள் சிலரும் இடம்பெறாமல் இந்தச் செயற்குழு நடைபெற்றிருக்கிறதே என்ற கவலைதான் என்னை வாட்டிவதைக்கிறது என்பதை அறிந்து கொள்ளாதவர்களைப்போல, எனக்கு ஆறுதல் சொல்பவர்களாக அந்த உடன்பிறப்புக்கள் என்னிடத்திலே நெருங்கி வந்து விசாரிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரிந்தாலும் இந்தக் கவலைகளோடு கவலையாக, தமிழ்நாட்டு மக்கள், சுனாமி அலைகளின் நடுவே கடலில் தள்ளப்பட்டு திணறித் தவிப்பதுபோல் திண்டாடுகின்ற காட்சியன்றோ இந்த ஆட்சியில் அனுதினமும், அல்லும் பகலும் ஓயாமல் ஒழியாமல், தோன்றித் தோன்றி மக்களுக்குத் தொல்லை பல கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, அந்தக் கொடுமையை, கொடிய வேதனையை இளமை முதல் என் மண்ணின் மைந்தர்களுக்காக உழைத்து வரும் என்னால் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்?

எத்தனை லட்சோப லட்சம் தமிழ் மக்கள் இந்த மண்ணில், கண்ணில் ரத்தம் வழிய திக்கற்றுத் தவிக்கிறார்கள். அவர்கள் போற்றி வளர்த்த கலை, நாகரிகம், மொழி, பண்பாடு, அனைத்தும் இன்று காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் பொருள்களாகவன்றோ ஆக்கப்பட்டுவிட்டன. இதற்கெல்லாம் மீட்சி எப்போது? என்ற கேள்விக்கு விடை காணவும், அதுவரையில் இந்த பூமியில் புழுக்களாகத் துடித்துத் தவிக்கின்ற ஏழை எளிய தமிழ்மக்களைக் காப்பாற்ற வழிகாணும் வகையறிந்து செயல்படவே துடிக்கின்றோம்.

அதற்குக் குறைந்த காலப் போராட்டம் போதுமா? நீண்டகாலப் போராட்டம் தேவையா? என்ற கேள்விகளுக்கு விடை கிடைப்பது எதிர்கால இளையதலைமுறையினர் கையில் இருக்கிறது என்றாலும், அதுவரையில் இந்தத் தலைமுறையில் அந்தத் தலைமுறைக்காக என்ன செய்தாய்? என்ற கேள்விக்கு விடையளிக்கும் வகையிலேதான் செயற்குழுவில்

ஆறு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அந்த ஆறும் அத்தியாவசியத் தீர்மானங்கள் என்றாலுங்கூட, அவற்றையெல்லாம் செயல்படுத்தத் தேவையான இடநேரங்கள், அவற்றுக்கான ஆக்கப்பூர்வப் பணிகள், வாதாடிப் போராட வேண்டிய காலவேளைகள், இவை அனைத்தையும் சிந்தித்துச் செயல்பட வேண்டிய வழிமுறைகள் தவிர்க்க முடியாதவை எனக் கருதி, அதற்கான முயற்சிகளில் இறங்குவது ஒருபுறம் இருக்க, அவற்றையெல்லாம் முந்திக்கொண்டு நடைபெற வேண்டிய அல்லது நடத்தித் தீரவேண்டிய ஒரு பெருங்காரியமாக, ஒளியிழந்து இருட்டில் தவித்துக் கொண்டிருக்கின்ற இந்த மாநிலத்தை இருட்டிலேயிருந்து காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு, கட்சி சார்பற்ற முறையில் தமிழ் மக்களாம் நம் அனைவருக்கும் உண்டு.

அந்தப் பொறுப்பை ஆளவந்தாருக்கு - ஆட்சிச் சக்கரத்தை சுழற்ற முடியாமல், அகந்தைச் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டிருப் போருக்கு ஓர் எச்சரிக்கையாக, அண்ணா கற்றுத்தந்த அறவழிப் போராட்டத்தை வருகிற 18ஆம் தேதியன்று தமிழகமெங்கும் மாநிலம் முழுவதும் மாநகரங்கள், நகரங்கள், பேரூர், சிற்றூர், குக்கிராமங்கள் என்று அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நடத்துவதென்று செயற்குழுவில் முடிவெடுத்திருக்கிறோம்.

அதற்கான தீர்மானத்தை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்துகிறேன். இதோ அந்த ஆறாவது தீர்மானம்:-

“தமிழகத்தில் ஏற்கனவே ஓரளவு மின் வெட்டுப் பிரச்சினை சில நேரங்களில் இருந்த போதிலும், தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் இருப்பதைப்போல எந்தக் காலத்திலும் இப்படித் தமிழகத்தின் வாழ்க்கை முறையையும் பொருளாதாரத்தையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்கிடும் வகையில் 16 மணிநேரம்,18 மணிநேரம் என்று மின்வெட்டு இருந்ததில்லை.

மின் வெட்டுக் காரணமாகத் தமிழக ஜவுளித் துறையின் எதிர்காலம் இருளடைந்து, தினமும் 100 கோடி ரூபாய் வீதம் உற்பத்தி இழப்பு!

குத்தாலம் எரிவாயு நிலையத்தில் ஜெனரேட்டர் இல்லாததால் மின் உற்பத்தி பாதிப்பு!

காற்றாலை மின்சாரத்தை விற்றதில் 18 ஆயிரம் கோடி ரூபாய் வாரியத்துக்கு இலாபம் ஏற்பட்ட போதிலும், உற்பத்தியாளர்களுக்குப் பணம் தரப்படவில்லை!

தடையில்லாத மின்சாரம் கேட்டுத் தொழில் துறையினர் திருப்பூரில் ஆர்ப்பாட்டம்!

மின்வாரிய அதிகாரிகளை மின்வெட்டுக்காகப் பொதுமக்கள் சிறைப் பிடித்த சம்பவங்கள்!

மின்வெட்டுக் காரணமாக நூற்பாலைகள் வெளி மாநிலங்களுக்கு இடம்பெயர முடிவு!

மாநிலம் முழுவதும் மின்வெட்டு நேரம் குறித்து முறையான தகவல் அளிக்காதது ஏன் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் கேள்வி!

அறிவை வளர்க்க வேண்டிய மாணவர்கள், அகல் விளக்கை வைத்துக்கொண்டு படிக்க வேண்டிய பரிதாபம்!

இவ்வாறு கடந்த சில நாட்களாகத் தமிழ்நாட்டில் உள்ள நாளேடுகள் எல்லாம் நடைபெறும் இந்த ஜெயலலிதா ஆட்சிக்கு "சான்றிதழ்"(?) வழங்கியுள்ளன.

மும்முனை மின்சாரம் முறையாக வழங்காத காரணத்தால், குறுவைப் பயிர்ச் சாகுபடி அறவே இல்லை என்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டு, சம்பாப் பயிராவது பிழைக்குமா என்ற கேள்விக்குறியோடு இதுவரை ஆறு விவசாயிகள் - இந்த ஆட்சியின் அவலத்துக்குத் தங்கள் இன்னுயிரைத் தாரைவார்த்து தற்கொலை செய்து கொண்டு மடிந்திருக்கிறார்கள்.

இந்த நிலைமைகளையெல்லாம் பற்றித் தமிழக அரசு ஏதாவது கவலைப்படுகிறதா? தி.மு. கழக ஆட்சியில் ஓரளவுக்கு மின்சார வெட்டு இருந்தபோது, இன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா எப்படியெல்லாம் அறிக்கை விடுத்தார், பதவியைவிட்டு உடனடியாக விலகும்படி ஆணையிட்டார், என்பதைத் தமிழ்நாடு மக்கள் நிச்சயமாக மறந்திருக்க மாட்டார்கள். நிலக்கரி இல்லாததால் மின் உற்பத்தி பாதிப்பு - ஜெனரேட்டர் இல்லாததால் மின் உற்பத்தி பாதிப்பு - மின் பழுது நீக்க உபகரணங்கள் இல்லை, அதனால் மின் உற்பத்தி பாதிப்பு என்று தொடர்ந்து வரும் செய்திகள் மின்வெட்டினைச் சமாளிப்பதிலே இந்த அரசுக்கு உள்ள அக்கறையின்மையினைத்தான் வெளிப்படுத்துகின்றன.

அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகத்தின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையான வேளாண்மை, வணிகம், சிறுதொழில் மற்றும்

3682. அன்பே வா! அந்தகார இருள் போக்க அரிமாவே வா!

உடன்பிறப்பே,

இடையில் இன்னும் இரண்டு நாட்கள்தான்...! நேற்று செய்த கொடுமைகளையெல்லாம் இன்று மக்கள் மறந்திருப்பர் என்றெண்ணி; தீட்டுகின்றோம் திட்டங்கள் ஆயிரத்தை என்று நீட்டி முழக்குகின்றார்; நீலிக் கண்ணீர் வடிப்பதிலே நிகரற்ற ஆட்சியாளர்!

அம்மையாரின் ஆட்சியிலே அந்தகார இருள் சூழந்து; அவதிப்படும் மக்கள் நிலை எண்ணிப் பாராய்! இன்று எத்தனைக் கொலைகள்! எத்தனை களவு! தாலிச் சங்கிலி அறுப்புக்குத் தடையில்லை! செய்யாத குற்றத்துக்கு எதிர்க் கட்சிக்காரர்கள் என்றால் எத்தனை எத்தனை அடக்கு முறை? எத்தனை கொடுந் தண்டனை? எத்தனை குண்டர் சட்டங்கள்? இப்படி எத்தனை கொடுமைகளை அ.தி.மு.க.வின் அன்றைய ஆட்சியிலும் - இன்றைய ஆட்சியிலும் தமிழகம் அனுபவிக்க நேர்ந்தது என்பதை அருமை உடன் பிறப்பே! எண்ணிப் பாராய்!

"சொல் ஒன்று; செயல் ஒன்று!" என்பதற்குச் சான்றாக விளங்குகின்ற அவல ஆட்சியன்றோ இன்றைய ஆட்சி! அன்று அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் ஆயிரமாயிரம் பேர்; அவர்கள் உரிமைகளைக் கேட்டதற்கு, அவர்களின் வீடுபுகுந்து அடித்து விரட்டி; "ஏனென்றா கேட்கின்றாய்? எதிர்த்தாப் பேசுகின்றாய்? வாலைச் சுருட்டிக்கொள்! இல்லையேல் வாயைக் கிழித்தெறி வோம்!" என்று குண்டாந் தடிகளாலும், துப்பாக்கி முனைகளாலும் பதம் பார்த்தவர்கள் - இன்றைக்கும் அந்த முறை பலிக்குமென்று அடக்குமுறை ஆயுதங்களைக் கூர்தீட்டிப் பார்க்கின்றனர்! சிறைக் கதவைத் திறப்போம் எனச் சீறிப் பாய்கின்றனர்!

சிலிர்த்தெழும் சிங்கக் கூட்டமே!
மாணவர் அணியே!
மகளிர் அணியே!
இனஎழுச்சி முழக்கமிடும்
இளைஞர் பட்டாளமே!

"இருப்பது ஒரு உயிர்; அது - என்னரும் ஏழைத் தமிழர்களை வாழ வைக்கவும் - இந்த இனத்தின் வெற்றியை நிலைநாட்டவும் பயன்படட்டும்" என்று அறிஞர் அண்ணா சொன்னாரே - இன்று அதனை அவர் தம்பி நினைவூட்டுகின்றேன்!

தடை பல கடந்து எங்கள் படை பெருகும்; என்பதை மெய்ப்பிக்க - என்னுயிர் உடன்பிறப்பே! இன்றே தயாராகுக! இடையில் இன்னும் இரண்டே நாட்கள்!

நான் சென்னையிலும்; பேராசிரியர் மாதவரத்திலும்; தளபதி ஸ்டாலின்; அண்ணன் பிறந்த காஞ்சியிலும் தலைமையேற்று, பெருகிவரும் இளைஞர் பட்டாளத்தை - மகளிர் அணியை - மாணவர் சேனையை - விவசாயிகளின் அணிவகுப்பை - பாட்டாளிகள் முழக்கும் எழுச்சி முரசத்தை - கண்டிடக் காத்திருக்கின்றோம்!

எமது விழிகள்; உமது அறநெறிப் போருக்கான வழிகளை அமைக்கட்டும்!

இருளில் தவிக்கும் தமிழகத்திற்கு; அந்த இருள் போக்கும் பேரொளியாக - நீ எழுப்பும் அறப்போர் ஒலி அமையட்டும்!

அன்பே வா!
அந்தகார இருள் போக்க அரிமாவே வா!

அன்புள்ள,
மு.க.
16-12-2012

3683. "வெள்ளை அறிக்கை" வெளியிட முன்வருவார்களா?

உடன்பிறப்பே,

தமிழகத்திலே நடைபெறும் ஜெயலலிதாவின் இருண்ட ஆட்சிக்கு எதிராகவும்; நிலவி வரும் வரலாறு காணாத மின்வெட்டைக் கண்டித்தும்; கழகத்தின் தலைமைச் செயற்குழு எடுத்த முடிவிற்கிணங்க நாளை தமிழகமெங்கெணும் (தர்மபுரி மாவட்டம் தவிர்த்து) ஜனநாயக ரீதியான "அறப்போர் ஆர்ப்பாட்டம்" நடத்துவதாக முறைப்படி அறிவித்து, அதற்கான அனைத்து ஏற்பாடுகளிலும் ஆர்வத்தோடு நீ ஈடுபட்டிருப்பதை தொலைபேசி வாயிலாக வரும் செய்திகள் அறிவிக்கின்றன.

இரண்டு நாட்களாக நான் எழுதிய மடல்களைப் படித்திருப்பாய். மின்வெட்டுக் காரணமாக தமிழ்நாடே ஸ்தம்பித்துக் கிடக்கின்றது. அம்மையாரின் ஆட்சியிலே குறுவைப் பயிர் அறவே பொய்த்துப் போய்விட்டது. 15 லட்சம் ஏக்கர் சம்பாப் பயிரைக் காப்பாற்ற 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என்று கடந்த அக்டோபர் மாதத்தில் பேரவையில் முதலமைச்சர் முழங்கி, அதனை "அம்மா உத்தரவு" என்று அனைத்து ஏடுகளும் "போற்றிப்" பாடின. இன்று 12 மணி நேரமல்ல, 3 மணி நேரம் கூட மும்முனை மின்சாரம் கிடையாது. கருகி வரும் சம்பாப் பயிரையாவது காப்பாற்ற தண்ணீரும் மின்சாரமும் கேட்டு விவசாயிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இன்றைய நாளேட்டில் வந்துள்ள செய்திப்படி, "மின் தடையால் பருப்பு ஆலைகள் முடங்கின - விருதுநகரில் இழப்பு 13 கோடி ரூபாய்" என்றும் மேலும் "உற்பத்திக் குறைவால் தமிழகத்தில் அரிசி விலை ஏற்றம்" என்றும் கூறப்பட்டுள்ளது.

காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்க மாவட்டத் தலைவர் சுவாமிமலை விமலநாதன், தமிழக விவசாயிகள் சங்கத் தஞ்சை மாவட்டத் தலைவர் கக்கரை சுகுமாறன், தமிழக விவசாயிகள்

சங்க மாநிலச் செயலாளர் பெரம்பலூர் ராஜா சிதம்பரம் ஆகியோர், "இப்போதே வயல்களில் விவசாயிகள் ஆடுமாடுகளை விட்டு மேய்க்கத் தொடங்கி விட்டனர். வயல்கள் வெடித்துக் காணப்படு கின்றன. இந்த ஆட்சியில் எல்லாம் பாழாகிவிட்ட"தாகக் கூறியிருக்கிறார்கள்.

விவசாயிகள் போராட்டம் நடத்தினால், ஆட்சியிலே இருப்போர் அதைப் பற்றி கவலைப்படுவதாக இல்லை. நிலைமைகளைப் பற்றி அரசுத் தரப்பிலிருந்து விளக்கிடவில்லை. முதலமைச்சருக்கோ எத்தனையோ வேலைகள்! விவசாயிகளைப் பற்றியா கவலைப்பட முடியும் என்பார்கள். மின்துறைக்கு என்று ஒரு அமைச்சர் இருக்கிறார். அவர் சேலத்தில் நடை பெற்ற அ.தி.மு.க. ஆலோசனைக் கூட்டத்தில் பேசும்போது, "ஜூன் மாதத்திற்குப் பிறகு மின் தட்டுப்பாடு என்பது வானத்தில் இருக்கலாம், தமிழகத்தில் இருக்காது. மேட்டூரில் இன்னும் பத்து நாட்களில் 600 மெகாவாட் மின் உற்பத்தி தொடங்கிவிடும்" என்று பேசியிருக்கிறார்.

அமைச்சர் குறிப்பிட்டுள்ள மேட்டூர் சுரங்க மின் நிலையத்தில் 200 மெகாவாட் உற்பத்தி நிறுத்தம் என்று இன்றைய ஏடுகளிலேயே வேறொரு செய்தியும் வந்துள்ளது. அந்தச் செய்தியில் "நீர் மட்டம் 44 அடியாகக் குறைந்ததால், சுரங்க மின் நிலையம் வழியாக தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. இதனால் சுரங்க மின் நிலையத்தில் மின் உற்பத்தி செய்யப்படவில்லை. மேட்டூர் அணையின் சுரங்க மின் நிலையத்தில் 200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இந்நிலையில், சுரங்க மின் நிலையம் வழியாக தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டதால், 200 மெகாவாட் மின்சார உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது" என்று வந்துள்ளது. மற்றொரு நாளிதழில் "மேட்டூர் மின் உற்பத்தி படிப்படியாக நிறுத்தம் - 8 ஆண்டுக்குப் பின் 5 கண் மதகில் நீர்திறப்பு" என்று செய்தி வந்துள்ளது. அமைச்சர் பேசியது உண்மையா? ஏடுகளிலே வந்துள்ள இந்தச் செய்தி உண்மையா?

ஆனால், துறையின் அமைச்சரோ; ஜூன் மாதத்திற்குப் பிறகு மின்வெட்டு வானத்தில்தான் இருக்கும் என்கிறார். முதல் அமைச்சரோ கடந்த ஆண்டு ஆளுநர் உரை மீதான விவாதத் திற்குப் பதிலளித்தபோது, தற்போதுள்ள 3 மணி நேர மின்

வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம் என்றும், கடந்த ஆண்டு ஜூலை முதலே தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்றும் சொன்னார். அதே ஜெயலலிதா கடந்த மாதம் கூறும்போது, அடுத்த ஆண்டு இறுதிக்குள் அதாவது 2013ஆம் ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அமைச்சர் ஜூன் மாதத்திற்குப் பிறகு மின் வெட்டை வானத்தில் சென்று தேட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். முதலமைச்சர் சொல்வது உண்மையா? துறை அமைச்சர் சொல்வது உண்மையா?

அது மாத்திரமல்ல; இன்றைய நாளேட்டிலேயே தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய முன்னாள் தலைவர் திரு. கபிலன் ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது "இன்னும் இரண்டு ஆண்டுகளில், மின்சாரத் தேவையில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக தமிழகம் விளங்கும்" என்று சொல்லியிருக்கிறார். முதலமைச்சர் சொன்னது உண்மையா? மூத்த அதிகாரி சொல்வது உண்மையா?

வரலாற்றிலேயே இல்லாத மின் வெட்டுக் காரணமாக தமிழகத்திலே உள்ள பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள் எல்லாம் வேறு மாநிலங்களை நோக்கிச் சென்றிட நேரம் பார்த்துக் கிடக்கின்றன. அப்படிச் சென்று விட்டால் அந்தத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் லட்சக்கணக்கான தொழிலாளர்களின் கதி என்ன ஆவது? தற்போதே கோவை, திருப்பூர், ஈரோடு, கன்னியாகுமரியில் உள்ள தொழிலாளர்கள், வேலையில்லாத காரணத்தால் அண்டை மாநிலங்களுக்கு வேலை தேடிச் சென்று விட்டார்கள். தேர்வு நெருங்கிக் கொண்டிருக்கும் மாணவர்கள் எப்போது மின்சாரம் வரும் என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நிலை. இந்த நிலைமைகளை எல்லாம் எடுத்து விளக்கிடத்தான் கழகத்தின் சார்பில் அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டு, தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

1967ஆம் ஆண்டுவாக்கில் பெரியவர், முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கழகத் தோழர்களின் தேர்தல் பணிகளைப் பார்த்துவிட்டு, "சிங்கிள் டீயைக் குடித்து விட்டு மணிக்கணக்கில் தேர்தல் பணியாற்றக் கூடியவர்கள் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர்கள்" என்று பாராட்டினார். அதிலே ஒரு சின்ன மாறுதல். தேர்தல் பணியாற்று வதிலே மாத்திரமல்ல, தி.மு.கழகம் நடத்துகின்ற போராட்டங்களில் கலந்து கொள்ளப்

புறப்படுவதிலும் கழகத்தினர் வேறு யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை எத்தனையோ முறை நீ நிரூபித்துக் காட்டியிருக்கிறாய். அதனை மேலும் நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம்தான் நாளை நடைபெறும் அறப்போர் ஆர்ப்பாட்டம்.

மின் உற்பத்தி பற்றியும், மின் வெட்டு பற்றியும் நான் எழுப்பிய எத்தனையோ கேள்விகளுக்கு இந்த ஆட்சியாளர்கள் நேரடியாகப் பதில் சொல்லாமல் திசை திருப்பக் கூடிய வகையில் பதில்களைச் சொல்வது மட்டுமல்லாமல், கழகத்தையும், மத்திய அரசையும் பழி தூற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். இன்னும் சில மாதங்களில் மின் உற்பத்தி கிடைக்கப் போகிறது என்று ஆட்சியாளர்கள் பலமாகக் குரல் கொடுக்கிறார்களே, அந்த மின் உற்பத்திக்குக் காரணமே தி.மு. கழக ஆட்சிதான். கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்கள்தான் தற்போது மின் உற்பத்தியை அளிக்கப் போகின்றன. அதைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நன்கறிவார்கள். எனவே இனியும் அந்தக் குற்றச்சாட்டினைக் கூற முடியாது என்ற அளவில்தான் ஆளுங்கட்சிக்காரர்கள் மின் உற்பத்தி, மின் வெட்டு பற்றி நாம் வைக்கின்ற எந்தக் குற்றச்சாட்டிற்கும் பதிலளிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

அ.தி.மு.க. அரசு தற்போது பதவிக்கு வந்து 19 மாதங்கள் ஆகிவிட்டன. எந்தக் காலத்திலும் இந்த அளவிற்கு தமிழகம் இருண்ட பூமியாக இருந்ததில்லை. மின்வெட்டுக் காரணமாக - தொழில் துறை, வேளாண்மைத் துறை, ஜவுளித் துறை, பொது மக்களின் அன்றாட வாழ்க்கை முறை என அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் புதிதாக வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாக பல முறை உறுதி மொழி வழங்கினாலும், அதில் எந்த உறுதிமொழியும் இதுவரையில் உருப்படியாக நிறைவேறவில்லை. மாறாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஏற்கனவே இருந்த வேலை வாய்ப்புகளை இழந்து தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். - மேட்டூர் அணை வறண்ட நிலையில், அணைக்குள்ளேயே அங்குள்ள விவசாயிகள் சோளம் விதைத்திருக்கிறார்களாம். நூற்றுக்கணக்கான ஆலைகள் தொடர்ந்து மூடிக் கிடப்பதால் ஏற்பட்ட உற்பத்தி பாதிப்பாலும், வேலை வாய்ப்பு இழப்பாலும், தமிழகத்தின் பொருளாதாரமே ஜெயலலிதா ஆட்சியில் தலைகீழாகக் கவிழ்ந்து அழிந்து கொண்டிருக்கின்றது. - "ஓராண்டுக் காலத்தில் நூறாண்டு சாதனை

என்று ஏடுகளில் பக்கம் பக்கமாக விளம்பரங்களை வாரி இறைத்து, அதற்காக சுமார் 100 கோடி ரூபாய் அளவிற்கு பணத்தைச் செலவழித்து நாட்டை நாசம் செய்தார்களே தவிர, எந்தத் துறையிலும் எழுச்சி இல்லை. அமைச்சர்கள் மீது சுமத்தப்படும் அடுக்கடுக்கான புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படாததைப் பற்றி நீதிமன்றங்களிலேயே பல வழக்குகள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் தமிழகத்திலே உண்மையான மின்சார நிலைமை என்ன? மின் வெட்டுப் பிரச்சினை எப்போது நீங்கும்? தி.மு.கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட மின்திட்டங்கள் என்னென்ன? அவற்றிலிருந்து மின்சாரம் எப்போது கிடைக்கத் தொடங்கும்? தற்போது அம்மையார் ஆட்சியில் தொடங்கப்பட்ட மின் திட்டங்கள் என்னென்ன? இதைப்பற்றி எல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒளிவுமறைவற்ற, வெளிப்படையான உண்மை விவரங்களைத் தெரிவிக்கின்ற வகையில், அ.தி.மு.க. அரசு உடனடியாக ஒரு "வெள்ளை அறிக்கை"யை அளித்திட முன்வருமா?

தமிழகத்து மக்களின் துன்ப துயரங்களை பிரதிபலித்து எதிரொலிக்கும் வகையில் நாளை நமது அறப்போர் ஆர்ப்பாட்டம் நடைபெறட்டும்.

அன்புள்ள,

மு.க.

17-12-2012

3684. பெறற்கரிய திருநாள்
பேராசிரியர் பிறந்த நாள்!

உடன்பிறப்பே,

நாளை நம்முடைய இனமானப் பேராசிரியர் பெருந்தகையின் 91வது பிறந்த நாள் விழா! எனக்கு இன்று முதலே மனதிலே ஒரு பரபரப்பு! மனதிற்குள் எத்தனை எத்தனையோ எண்ணங்கள்! அவற்றில் எதையெல்லாம் எழுத்திலே வடிப்பது? இந்த ஆண்டு பேராசிரியர் பிறந்த நாள் விழாவுக்கான ஏற்பாடுகள் எல்லாம் நடக்கின்றனவா என்று நான் கேட்டபோது, பேராசிரியர் அவர்களே துணைவியாருக்கு உடல் நலம் சரியில்லை என்பதைக் காரணமாகக் காட்டி, விழா ஏற்பாடுகள் எதுவும் வேண்டாமென்று கூறி விட்டார்கள் எனத் தெரிவித்தார்கள். உடனே நான் அவர்களைக் கோபித்துக்கொண்டு, அவர் அப்படிக் கூறினால், நீங்கள் உடனே ஏற்றுக்கொண்டு வந்துவிடுவதா, உடனடியாக ஏற்பாடுகளைத் தொடங்குங்கள், நான் அவரைச் சமாதானம் செய்து கொள்கிறேன் என்று கூறினேன். பொருளாளர் தம்பி ஸ்டாலின் உடனடியாக வடசென்னை, தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்களை வரவழைத்து விட்டார். இருவருக்குள் போட்டி - தங்கள் பகுதிக்குள்தான் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தை வைத்துக் கொள்ள வேண்டுமென்று! பின்னர் இருவருமே சமாதானமாகி வடசென்னை, தென்சென்னை இரண்டு மாவட்டக் கழகங்களும் இணைந்து கூட்டத்தைப் புகழ்பெற்ற தங்கசாலை மணிக்கூண்டு அருகே நடத்துவதென்று முடிவுசெய்தனர். 2002ஆம் ஆண்டு, பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களின் 81வது பிறந்த நாள் விழாவினையும், இதே இடத்தில்தான் நாம் நடத்தினோம். மீண்டும் பத்தாண்டுகளுக்குப் பிறகு இன்றைய தினம் 91வது பிறந்த நாள் விழாவினை நடத்துகிறோம்.

பேராசிரியர் அவர்களின் போர்க்குணத்திற்கு ஆக்கம் தந்திடும் வகையில் அவருடைய பிறந்த நாளுக்கு முந்தைய நாளில் நாம்

மக்கள் பிரச்சினைக்காக அறப்போர் ஆர்ப்பாட்டத்தை அறிவித் திருக்கிறோம். மாதவரத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்திற்கு பேராசிரியர் அவர்களே தலைமை தாங்குகிறார். பிறந்தநாள் விழாவிற்கு முன்பாக அறப்போர் ஆர்ப்பாட்டம், அதற்குத் தலைமை! பேராசிரியரை முதன் முதலாக நான் எப்போது சந்தித்தேன்?

திருவாரூரில் நடைபெற்ற இஸ்லாமியர் விழா, சிக்கந்தர் விழா ஒன்று. 100 பேர் மட்டுமே அமர்ந்திடக் கூடிய - சிறிய மண்டபம். அண்ணா அவர்கள்தான் சிறப்புப் பேச்சாளர். அவரைப் பேசுவதற்காக அழைத்தவுடன், அவர் ஒலிபெருக்கியிடம் வந்து, "நான் ஒரு இளைஞரை இங்கே அழைத்து வந்திருக்கிறேன். அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். நான் பேசுவதற்கு முன் அவர் பேசுவார்" என்று கூறி அந்த இளைஞரை அங்கே அறிமுகப்படுத்தினார். ஒல்லியான உருவம். ஒளியுமிழும் கண்கள். ஓடைப் புனலெனக் கருத்துக்கள் அப்போதே வெளிவந்தன. மண்டபத்திற்குள்ளும் வெளியிலும் குழுமியிருந்தோர் வியப்பால் விழிகளை விரித்து நிற்கின்றனர். அந்த இளங்குருத்துத்தான் நம்முடைய பேராசிரியர்.

ஏ, அப்பா, காலில் சக்கரம் கட்டிக் கொள்ளாமல் காலம்தான் எவ்வளவு வேகமாக ஓடி விட்டது? துள்ளித் திரியும் பருவத்திலே தான் நான் அவரைப் பார்த்தேன். அப்போது அவரும் என்னைப் போன்ற இளைஞரேதான். இன்று இருவரும் தள்ளாத கிழங்களாக அன்றாடம் அலுவலகத்தில் அருகருகே அமர்ந்து ஒன்றாகச் சிந்திக்கின்றோம். ஒருமனதாக முடிவெடுக்கின்றோம்.

1942ஆம் ஆண்டு திருவாரூரில் தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் ஆண்டு விழாவினை நடத்தினேன். அந்த மாநாட்டில் கலந்து கொள்ள பல பேரை அழைத்திருந்தேன். பெரும்பாலோர் வரவில்லை. அவர்களை வரவேற்கப் புகைவண்டி நிலையத்திற்கு நண்பன் தென்னனுடன் சென்றிருந்தபோதுதான் அவர்கள் வரவில்லை என்று தெரிந்து, விழியிலே நீர் பெருக நின்றேன். நல்லவேளை, அந்த நேரத்தில் பேராசிரியர் - அப்போது அன்பழகன், மதியழகன் இருவரும் வந்து எனக்கு ஆறுதல் அளித்தனர். அன்று எனக்குத் தோன்றாத் துணையாய் வந்த பேராசிரியர் இன்றளவும் துணையாய் வருகிறார்! எனக்குத்தான் எவ்வளவு பெருமகிழ்ச்சி.

அதனால்தான் அவருடைய மணிவிழா மலரிலே "பல்லாண்டு பாடுகிறேன், பரவசத்தால் ஆடுகிறேன்" என்று எழுதினேன்.

பேராசிரியர் ஒரு முறை அவருடைய பிறந்த நாள் விழா ஏற்புரையிலே பேசும்போது, "திருமணம் செய்துகொண்ட மணமகனும், மணமகளும் கூட அறுபதாண்டு காலம் சண்டை சச்சரவு இல்லாமல் ஒன்றாக இருந்தார்கள் என்ற வரலாற்றை நீங்கள் காண முடியாது, ஆனால் நாங்கள் ஒன்றாக இருக்கிறோம்" என்று சொன்னார். ஆம், எழுபதாண்டு காலத்திற்கு மேலாக நாங்கள் ஒன்றாகத்தான் இருக்கிறோம்.

ஏன் கழகத்தை விட்டு, நமது நாவலர், ஆம் நமது நாவலர்தான்; பிரிந்தபோது கூட, பேராசிரியர் அவர்கள், நாவலரோடு சென்று விடுவார் என்றுதான் தமிழ்நாடே எதிர்பார்த்தது. சாதிப் பற்று என்றெல்லாம் இப்போதும் பேசுகிறார்களே, அதையெல்லாம் தூக்கிக் குப்பையிலே வீசிவிட்டு, பேராசிரியர் எனக்குத் துணையாகத் தோள் கொடுத்தார். இன்றைக்கும் அந்தத் தோள்களிலே தொத்திக் கொண்டுதான் நான் இருக்கிறேன்.

பேராசிரியப் பெருந்தகை - தமிழகம் முழுதும் சுற்றிச் சுற்றித் தன்மான உணர்வை வளர்த்த வீறுகொண்ட சொற்பொழிவாளர்! பச்சையப்பன் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர்! சென்னைக்கு அண்ணா வந்தாலே, அவருக்கு விருந்தோம்பல் நம்முடைய பேராசிரியர் வீட்டிலேதான்! சட்டப் பேரவை உறுப்பினராக - நாடாளுமன்ற உறுப்பினராக - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக - நிதி அமைச்சராக அரும்பணியாற்றியவர்.

சோதனைச் சூறாவளி நமது கழகத்தின் மீது வீசிய நேரத்தில் ஒடிந்து விழுந்த ஒதியமிலார்களைப் போலன்றி - அந்த நேரத்தில் எல்லாம் கழக மாளிகையைக் காப்பவனே உண்மையான அண்ணாவின் தம்பியாவான் எனக் கூறி, உறுதிமிக்க தூணாக நின்று கழகத்தைக் காத்தவர் நம்முடைய பேராசிரியர்.

ஒருசில சமயங்களில் கழகம் எடுத்த பிரச்சினைகளிலே கருத்து மாறுபாடுகள் தோன்றியதுண்டு - ஆனால் கவிழ்க்கும் ஏற்பாடுகளை ஒருவருக்கொருவர் நினைத்ததே இல்லை. கழகத்தின் வெற்றிக்கு எம்முறை சிறந்தது? எவ்வழி போகலாம்? இந்த விவாதங்கள் இடம்பெற்றிருக்குமே தவிர விரோதங்கள் தலைகாட்டியதில்லை, அன்றும் சரி, இன்றும் சரி.

பெரியாரால் உருவாக்கப்பட்டு, அண்ணா அவர்களால் வலிவும் பொலிவும் ஏற்றப்பட்டு, அவர்களின் வழித்தோன்றல்களால் வளர்க்கப்படும் இந்தப் பேரியக்கம் எத்தனை எத்தனை வீரர்களின் வியர்வையை, குருதியை, உயிரையே காணிக்கையாக்கி கடமை ஆற்றி வருகிறது. பதவிகள் வரும், போகும், பருவக் காற்றுக்கு ஏற்றவாறு மழை வருவதுபோல! இந்த ஆட்சியில் அந்த மழை வரக் கூட அஞ்சுகின்ற நிலை!

பதவியோ மடு போன்றது! இதனைப் புரியாதோர் புன்மைச் செயல்களில் ஈடுபட்டபோது, புண் பெற்ற நெஞ்சுடனே கண்கலங்கியவர்தான் நாளைய விழா நாயகர், நம் பேராசிரியர்!

மணவழகர் ஈன்றெடுத்த செல்வன் - மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை எனக்கூறி மாத்தமிழ் காக்கும் 90 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த அரிமா - பெரியாரின் தொண்டர் - அண்ணாவின் அருமைத் தம்பி - எனது உடன்பிறப்பு - பேராசிரியர் அன்பழகன்.

நேர்மையான சிந்தனை - நிதானமான போக்கு - ஆழமான நீர்நிலைக்குரிய அமைதி - ஆபத்து தமிழ் இனத்துக்கு என்றால் அனலாகக் கொதிக்கின்ற உள்ளம் - இவற்றின் மொத்த உருவம்தான் இனமானப் பேராசிரியர் என்கிறபோது நமது கழகப் பாசறைக்குக் கிடைத்திட்ட ஒப்பற்ற கருவூலம் நமது பேராசிரியரே என்றெண்ணி பேருவகை கொள்கிறேன்.

நெருப்பாற்றில் மெழுகுவத்தி மனிதர்கள் நீந்திக் கரையேற முடியாதுதான் - கதை கூட அப்படி எழுத முடியாதுதான் - ஆனால் இதோ பேராசிரியர் துணையுடன் நானும் கழகக் கண்மணிகளும் நீந்திக் கரையேறி நின்று கொண்டிருக்கிறோமே! கனி குலுங்கும் மரமாயினும் தனி மரம் தோப்பு ஆகாது! பயன்தரும் பல மரங்கள் இருந்திட வேண்டும் தோப்பு எனும் இலக்கணத்திற்கு! ஒரு இயக்கமும் அப்படித்தான். அடுத்தடுத்த வரிசையினர் ஆற்றலாளர்களாக உருவாக்கப் படல் வேண்டும், அந்த இயக்கம் பலன் அளித்திட நாட்டுக்கு! இந்த எண்ணம் அண்ணன் காலத்தில் செயல்படுத்தப்பட்டது. இன்னமும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.

அவர் உருவாக்கிய தோப்பில் கிளையிலும், மரத்திலும், வேரிலும் சுனைக் கனி - சுவைக்கனி வழங்கிடும் பலாவாகத்தான்

நமது பாசத்திற்குரிய பேராசிரியர் காட்சி அளிக்கிறார். கனி தரும் பலா மட்டுமல்ல, காரிருளில் கரை காட்டும் கலங்கரை விளக்கமாகவும் இருக்கின்ற அவருக்குத்தான் நாளை 91ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா. அந்த நாளைக் கொண்டாடுவோம். அதுவே நமக்கு திருநாள் என்று! ஆம், பெறற்கரிய திருநாள் பேராசிரியர் பிறந்த நாள்! வாழ்க பேராசிரியர்! வாழ்க வாழ்கவே!

அன்புள்ள,

மு.க.

19-12-2012

3685. ஏன்; இந்த இரட்டை அளவுகோல்?

உடன்பிறப்பே,

13-12-2012 ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கூடி ஆறு தீர்மானங்களை நிறைவேற்றி - அதில் கடைசித் தீர்மானமாகத் தமிழகத்தில் நிலவி வரும் மின்வெட்டினைப் பற்றியும், அதன் காரணமாக அனைத்துத் தரப்பு மக்களும் படுகின்ற சிரமங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறி, அதனைக் கண்டித்து தமிழக மெங்கும் 18-12-2012 அன்று கண்டன அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்று முடிவெடுத்து அறிவித்தோம். இடையிலே நான்கே நாட்கள்! நான்கு நாட்கள் போதுமா என்றனர் - நான்கு நாட்கள் என்ன, நான்கே மணி நேரத்தில், நீங்கள் வெட்டிவா என்றால் கட்டி வரும் தம்பிகள்தான் என்பதை மீண்டும் ஒரு முறை மெய்ப்பிக்கும் வகையில், நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் பம்பரமெனச் சுழன்று தமிழகமெங்கும் ஆர்ப்பாட்டத்தினை, அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் அதிர்ந்து போகும்வண்ணம் மிகவும் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார்கள். அதனால் தான் செய்தியாளர்கள் அதைப் பற்றி என்னைக் கேட்டபோது "அமோக எழுச்சி, அமோக வெற்றி" என்று குறிப்பிட்டேன்.

நான் சென்னையில் வள்ளுவர் கோட்டத்திற்கு அருகில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதாகத்தான் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அண்ணா மேம்பாலம் தாண்டி, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை எனும் எம்.ஜி.ஆர். சாலையிலேயே ஆர்ப்பாட்டம் தொடங்கிவிட்டது. வள்ளுவர் கோட்டம் அருகே தானே ஆர்ப்பாட்டம், இங்கேயே இவ்வளவு பேர் திரண்டிருக்கிறார்களே என்று நான் கேட்டுக்கொண்டே இருந்தபோது, கார் நகர்ந்தது. வள்ளுவர் கோட்டம் எங்கே

இருக்கிறது என்றே தெரியவில்லை. எப்படியோ என்னைக் காரிலிருந்து இறக்கி, மேடைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். மேடையிலே ஒரு கூட்டம். எதிரே ஒரு மாநாடு. அதிலும் ஆண்களை விஞ்சி, பெண்களின் கூட்டம். அத்தனை பேரும் உணர்ச்சிக் கொந்தளிப்பாய் உருமாறி இருந்தார்கள். அரை மணி நேரம் ஆர்ப்பாட்ட முழக்கமிட்டனர். முன்னாள் மேயர் மா. சுப்பிரமணியமும், முன்னாள் அமைச்சர் தம்பி பொன்முடியும் "கணீர்" என்ற குரலில் மின்வெட்டு காரணமாக எழுந்துள்ள அவலங்களை எல்லாம் தொகுத்து முழக்கமாக எடுத்து முழங்கினார்கள். தொடர்ந்து பேராசிரியர் தம்பி சுப. வீரபாண்டியன், நடிகர் சந்திரசேகர், துணைப் பொதுச் செயலாளர் சற்குணப் பாண்டியன், குஷ்பூ சுந்தர், மாவட்டச் செயலாளர் அன்பழகன் ஆகியோர் உரையாற்றிய பிறகு நான் அங்கே ஆர்ப்பாட்டம் பற்றி உரையாற்றினேன்.

ஆர்ப்பாட்டத்தை முடித்துவிட்டு அறிவாலயம் நான் வந்து சேருவதற்குள் தொடர்ந்து தொலைபேசிகள்! மாதவரத்திலும், காஞ்சிபுரத்திலும் ஆர்ப்பாட்டம் மிகப் பெரிய வெற்றி என்றும், பேராசிரியரும், தளபதி ஸ்டாலினும் கலந்து கொண்டார்கள் என்றும் செய்திகள். மற்ற மாவட்டங்களிலிருந்து மாவட்டச் செயலாளர்கள் தொலைபேசியில் ஆர்ப்பாட்டம் சிறப்பாக நடைபெற்றது என்று எடுத்துக் கூறினார்கள். "கலைஞர் தொலைக்காட்சி"யிலும் ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்து விவரமாகத் தெரிவித்ததைப் பார்த்தேன்.

இவ்வளவு வெற்றிகரமாக நாம் நடத்திய இந்த அறப்போர் ஆர்ப்பாட்டம் பற்றித் தமிழகத்திலே உள்ள நாளேடுகள் எல்லாம் எந்த அளவிற்குச் செய்தியாக அதனைத் தந்துள்ளன என்பதைப் பார்த்தால் "அண்ணாவும் பேசினார்" என்று அந்தக் காலத்தில் "இந்து" நாளிதழ் செய்தி வெளியிட்டதே, அந்தப் பாணியிலேதான் பெருமளவுக்கு இருட்டடிப்பு செய்து வெளியிட்டுள்ளார்கள். தி.மு.க.வின் ஆர்ப்பாட்டத்திற்கு இவ்வளவு பேர் வந்திருக்கிறார்களே என்பதை ஆட்சியாளர்களோடு சேர்ந்து அவர்களாலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. "முடிந்து விடும் சகாப்தம் என்று கனவு கண்டோமே, மூலைக்கு மூலை இப்படி அணிஅணியாகத் திரண்டு வந்திருக்கிறார்களே" என்ற வயிற்றெரிச்சலில் தான் அறப்போர் ஆர்ப்பாட்ட செய்திகளை

அரைகுறையாக வெளியிட்டிருக்கிறார்கள். நமது எழுச்சியையும் வளர்ச்சியையும் அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

டெல்டா மாவட்டங்களில் கருகும் பயிர்கள் பற்றியும் பலியாகும் உயிர்கள் பற்றியும் "கருணாநிதியும் கண்டு கொள்ளவில்லை" என்று "ஜனசக்தி" நாளிதழ் - ஜூனியர் விகடன் வார இதழிலே வெளிவந்த ஒரு செய்தியை எடுத்துப் பெரிதாக வெளியிட்டுள்ளது.

காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி 13ஆம் தேதியே நமது கழகச் செயற்குழு தீர்மானத்தில் நாம் தீர்மானம் நிறைவேற்றவில்லையா? விவசாயிகளைத் தி.மு.க கண்டுகொள்ளவே இல்லையா? 17-12-2012 அன்று நான் விடுத்த நீண்ட அறிக்கையில் விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு நாற்பதாயிரம் ரூபாய் வீதம் இழப்பீடு வழங்க வேண்டுமென்றும், டெல்டா மாவட்டங்களைப் "பேரிடர் பாதித்த மாவட்டங்களாக" அறிவிக்க வேண்டுமென்றும், தற்கொலை செய்துகொண்டு இறந்த விவசாயிகளின் குடும்பங்களில் தலா ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ள வில்லையா? காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பினை அரசிதழில் வெளியிட வேண்டுமென்று கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பிரதமரைச் சந்தித்து முறையிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதின் பேரில், 17ஆம் தேதியே பிரதமரை, அவர்கள் சந்தித்துக் கோரிக்கை வைக்கவில்லையா? தமிழகத்தில் இறந்த விவசாயிகளைப் பற்றிக்கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களவையிலும், மாநிலங்களவையிலும் குரல் கொடுக்க வில்லையா? இதற்கெல்லாம் முன்பாகவே தற்கொலை செய்து கொண்டவர்களைப் பற்றி நான் கேள்வி-பதில் பகுதியிலேயே பட்டியல் இட்டுக் காட்டவில்லையா?

தற்கொலை செய்துகொண்டு இறந்துபோன ஏழு விவசாயிகளின் குடும்பங்களுக்கும் தலா ஐம்பது ஆயிரம் ரூபாய் வீதம் தி.மு.கழகத்திலிருந்து உதவி நிதி வழங்கப்படும் என்று தங்கசாலை மணிக்கூண்டு அருகே நடைபெற்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்ட பேராசிரியர் அவர்களின் 91வது பிறந்த நாள் விழா மேடையில், அறிவித்ததோடு, அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணனிடம் அந்த மாவட்டத்தில் தற்கொலை செய்துகொண்ட விவசாயியின் குடும்பத்திற்

கான நிதிக்கான காசோலையை அளித்து, உடனடியாக அந்தக் குடும்பத்தினரிடம் அதனைக் கொண்டுபோய்ச் சேர்த்து "ரசீது" பெற்றுத் தலைமைக் கழகத்திடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொண்டேன். மற்ற மாவட்டங்களில் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கான நிதியினை; நாகை, கடலூர், விருதுநகர், நெல்லை ஆகிய மாவட்டக் கழகச் செயலாளர்களிடம் அதற்கான காசோலைகளை வழங்கி, தற்கொலை செய்துகொண்ட மற்ற விவசாயிகளின் குடும்பத்திடம் அளிக்கும்படி தலைமைக் கழகத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தனையையும் மறைத்துவிட்டு, "இந்தப் பிரச்சினை பற்றியும், தற்கொலை செய்து கொண்டவர்கள் பற்றியும் கருணாநிதி வாயைத் திறக்காமலே இருக்கிறார், அவரது கட்சி எம்.பி.க்களும் நாடாளுமன்றத்தில் பேசாமல் இருக்கிறார்கள்" என்றெல்லாம் "ஜூனியர் விகடனும்", "ஜனசக்தி"யும் வெளியிட்டிருக்கிறார்கள் என்றால் எந்த அளவிற்கு அவர்களுக்குக் காழ்ப்புணர்ச்சி நம்மீது கனன்று கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள லாம். அதைத்தான் நான் பேராசிரியரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் பேசினேன். அந்தப் பொதுக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டார்கள். அந்தக் கூட்டத்தைப் பற்றியோ, அதிலே பேசியது பற்றியோ ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளேடுகள் சிலவற்றில் வெளியிடப்படவில்லை.

"தினமலர்" நாளேடு தமிழகம் முழுவதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் பற்றி ஒரு வார்த்தை கூட செய்தி வெளியிடவில்லை. நான் பேசியது பற்றி மாத்திரம் ஒரு சின்ன பெட்டிச் செய்தி அதுவும் 12வது பக்கத்திலே வந்துள்ளது. தினமணியிலோ 9வது பக்கத்தில் படமும், செய்தியும் வந்துள்ளது. ஆனால் முதல் பக்கத்தில் டெல்டா மாவட்டங்களை முதல்வர் பார்வையிடப் போவதாகத் தகவல் வந்துள்ளதாக அரைப் பக்கத்திற்கு ஊகமாகச் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். டெல்டா மாவட்டங்களில் ஆளுங்கட்சிக்கு நிலைமை சரியில்லை, முதலமைச்சர் அங்கே சென்று பார்வையிடுவது நல்லது என்பதைத் தங்கள் செய்தியின் மூலமாக ஆளுங்கட்சிக்கு ஆலோசனையாக உணர்த்த, படாத பாடுபடும் "தினமலர்" தமிழகம் எங்கும் எழுச்சியோடு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தைப் பற்றி செய்தி வெளியிடாமல் விட்டுவிட்டால், தமிழ்நாட்டு மக்களுக்கு உண்மை தெரியாமலேயே போய்விடுமா?

"சீப்பை ஒளித்து விட்டால் திருமணமே நின்றுவிடுமா" என்பார்களே, அதைப்போலத்தான் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம் நாம் நடத்திய அறப்போராட்டத்தைத் திரைபோட்டு மறைக்கப் பார்க்கின்றார்கள். அதைத்தான் நான் பேராசிரியர் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்தில் விரிவாக எடுத்துக் கூறினேன்.

மேலும் அதே "தினமலர்" நாளேட்டில் மற்றொரு செய்தி. பேராசிரியர் பிறந்த நாளைப் பற்றி நான் முரசொலியில் எழுதிய கடிதத்தில் "அலுவலகத்தில் அருகருகே அமர்ந்து ஒன்றாக சிந்திக்கிறோம், ஒருமனதாக முடிவெடுக்கிறோம்" என்று நான் எழுதியதை "தினமலர்" ஏட்டினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதைக் கிண்டல் செய்து, ஐந்து தடவை முதலமைச்சராக இருந்தபோது, பேராசிரியருக்கு எந்தப் பதவியும் கொடுக்காமல் ஏமாற்றி விட்டேன் என்பதைப்போலத் துணுக்குச் செய்தி வெளியிட்டுள்ளது.

1967ஆம் ஆண்டு முதன் முதலாக தி.மு. கழக அமைச்சரவை அமைந்தது. அண்ணா தலைமையில் அமைந்த அந்த அமைச்சரவையில் பேராசிரியர் இடம்பெறவில்லை. 1969ஆம் ஆண்டில் அண்ணா மறைந்தபோது, அண்ணா அமைத்த அமைச்சரவைதான் நீடித்தது. ஆனால் 1971ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெற்று, நான் முதல்வராகப் பொறுப்பேற்று அமைச்சரவையை அமைத்தபோது, பேராசிரியர் அவர்களை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்கச் செய்தேன். அடுத்து 1989ஆம் ஆண்டு என் தலைமையில் அரசு அமைந்த போதும், பேராசிரியரை கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்கச் செய்தேன். அமைச்சரவையிலே பேராசிரியருக்கு இரண்டாவது இடம்.

1996ஆம் ஆண்டிலும் அவர்தான் கல்வி அமைச்சர். அப்போது பள்ளிக் கல்வி, உயர் கல்வி ஆகிய இரண்டு துறைகளுக்குமே பேராசிரியர் தான் அப்போது அமைச்சர். 2006ஆம் ஆண்டிலோ பேராசிரியர் தான் நிதி அமைச்சர். ஆனால் "தினமலர்" பேராசிரியருக்கு நான் எந்தப் பதவியும் கொடுக்கவில்லை என்பதைப்போல நஞ்சு தடவிய துணுக்குச் செய்தி வெளியிடுகிறது என்றால், எந்த அளவிற்கு நம்மீது அந்த ஏட்டிற்கு "வஞ்சம்" உள்ளது என்பது தெரிகிறது அல்லவா?

மத்தியிலே ஆட்சி செய்து வரும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை நாள்தோறும் கடுமையாக விமர்சனம் செய்து பத்திரிகைக்காரர்கள் பக்கம் பக்கமாகச் செய்திகள் வெளியிட்டு நாட்டையே குழப்பத்தில் ஆழ்த்துகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலோ ஆட்சி செய்து வரும் அ.தி.மு.க.வைத் தாங்கிப் பிடிக்கிறார்கள். எதிர்க்கட்சியான தி.மு.க.வைத் தொடர்ந்து தாக்கி, கற்பனை கலந்து எழுதி வருகிறார்கள். பத்திரிகைகளுக்கு மட்டும் டெல்லிக்கு ஓர் அளவுகோல்; சென்னைக்கோ வேறொரு அளவுகோல்! பொதுமக்கள் இந்த அளவுகோல்களைக் கண்டு அதிசயித்து நிற்கிறார்கள்! ஏன்; இந்த இரட்டை அளவுகோல்?

அன்புள்ள,

மு.க.

22-12-2012

3686. அங்கும் - இங்கும் ஏன் இந்த ஏற்றத்தாழ்வு?

உடன்பிறப்பே,

டெல்லியில் பேருந்து ஒன்றில், 23 வயதான மருத்துவக் கல்லூரி மாணவி ஒருவர் கற்பழிக்கப்பட்ட சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. மாணவி கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சிக்கு நீதி கோரி மாணவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்கள் மீது போலீஸ் தடியடி நடத்தியதில் மாணவர்கள் 100 பேர் காயமடைந்துள்ளனர். அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்கள் வீட்டிற்கு முன்பு மாணவர்கள் தர்ணா நடத்தியிருக்கிறார்கள். நள்ளிரவு 12.30 மணியளவில் திருமதி சோனியா காந்தி அவர்களே வீட்டிலிருந்து வெளியே வந்து, போராட்டம் நடத்திய மாணவர்களோடு தரையிலே அமர்ந்து, "நான் உங்களோடு இருக்கிறேன், இந்தப் பிரச்சினையில் விரைவிலே நீதி கிடைக்கும்" என்று ஒரு பெண்ணுக்கே உரிய மாண்பு குறையாமல் பதிலளித்திருக்கிறார். அதற்குப் பிறகும் போராட்டம் நடத்திய மாணவர்கள் விடிய விடிய கொட்டும் பனியையும் பொருட்படுத்தாமல் அங்கேயே அமர்ந்திருந்திருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தில் போலீஸ்காரர் ஒருவரும் பலத்த காயமடைந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்.

போராட்டம் நடத்திய மாணவர்கள் ஐந்து பேர் சோனியா காந்தியையும், ராகுல் காந்தியையும் அவரது இல்லத்தில் சந்தித்து தங்கள் கோரிக்கைகளையெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். கோரிக்கைகள் அனைத்தையும் அனுதாபத்தோடு கேட்டுக் கொண்ட சோனியா காந்தி அவர்கள், அவர்களது முக்கிய கோரிக்கையான பலாத்காரக் குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்க சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதை ஏற்கத் தயார்

என்று உறுதி அளித்திருக்கிறார். இந்தச் சம்பவம் குறித்து பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், "இந்தப் பிரச்சினையில் பொது மக்களின் கோபம் நியாயமானதுதான். இந்தக் கற்பழிப்பு வழக்கிலே சம்பந்தப்பட்ட குற்றவாளி கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள். அவர்களை விட்டு விட மாட்டோம்" என்று உறுதி கூறியிருக்கிறார்.

இந்தக் கற்பழிப்பு பற்றி விசாரணை நடத்தவும், பாலியல் பலாத்கார குற்றங்களுக்கான தண்டனையை அதிகரிக்கும் வகையில் சட்டத் திருத்தம் செய்வது பற்றி பரிந்துரைக்கவும் உச்ச நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி ஜே.எஸ். வர்மா அவர்கள் தலைமையில் மூன்று பேர் கொண்ட குழு ஒன்றினை மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்தக் குழுவிலே இமாசல பிரதேச உயர்நீதி மன்ற முன்னாள் தலைமை நீதிபதி லீலா சேத், மத்திய அரசின் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் கோபால் சுப்பிரமணியன் ஆகியோர் இடம் பெற்றுள்ளார்கள்.

மேலும் இந்த வழக்கில் டெல்லி உயர் நீதி மன்றம் தானாகவே முன்வந்து நடவடிக்கை மேற்கொண்டு, விசாரணை அறிக்கை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டுள்ளது. டெல்லி உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி டி. முருகேசன் அவர்கள் தலைமையிலான பெஞ்ச் முன்பு டெல்லி போலீசார் விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தனர். அந்த அறிக்கை முழுமை யாக இல்லை என்பதால், அனைத்து விவரங்களும் அடங்கிய விரிவான அறிக்கை ஒன்றினைத் தாக்கல் செய்யும்படி டெல்லி உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

டெல்லியில் பேருந்தில் நடைபெற்ற கற்பழிப்பு பற்றி இவ்வாறு அனைத்து முனைகளிலும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் அங்கே போராட்டம் நின்ற பாடில்லை, தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கற்பழிப்பு எங்கே நடைபெற்றாலும் அது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றுதான். அது டெல்லியிலே நடைபெற்றாலும் எதிர்க்க வேண்டியது தான், தமிழகத்திலே நடைபெற்றாலும் எதிர்க்க வேண்டியதுதான். ஆனால் தமிழகத்திலே நடைபெறுவது என்ன?

டெல்லியிலே கற்பழிப்புச் சம்பவம் நடைபெற்ற அடுத்த இரண்டாம் நாள், அதாவது 20-12-2012 அன்று தூத்துக்குடி

மாவட்டத்தில், செய்துங்க நல்லூரை அடுத்த கிளாக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் சவுந்தரராசன். அவருடைய மனைவி இசக்கியம்மாள். அவர்களுக்கு இரண்டே மகள்கள். மூத்த மகள் புனிதா (வயது 13), இளைய மகள் ரோகினி (வயது 10). இதில் மாணவி புனிதா, நாசரத்தில் உள்ள மகளிர் பள்ளியில் 7ஆம் வகுப்பு படித்து வந்தார். இவர்களின் தந்தை சவுந்தரராசன் ஓராண்டிற்கு முன்பு மறைந்து விட்டார். தாத்தா வீட்டில் தங்கிப் படித்து வந்த 13 வயதான, ஏழாம் வகுப்பு மாணவியான புனிதா பள்ளிக்குச் சென்றவர் வீடு திரும்பவில்லை. பல்வேறு இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. பள்ளியில் விசாரித்தபோது அங்கும் வரவில்லை என்று கூறிவிட்டார்கள். காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டது.

21ஆம் தேதி காலையில் பள்ளி செல்லும் வழியில் உள்ள ஒரு காட்டுப் பகுதியில், சீருடை அணிந்த மாணவி கலைந்த ஆடையோடு பிணமாகக் கிடப்பதாகச் செய்தி பரவியது. அந்த மாணவியின் முகத்தை பலவந்தமாக தாக்கியதற்கான காயங்களும், நகக் கீறல்களும் இருந்திருக்கின்றன. அவள் பள்ளிக்குச் சென்ற போது வழி மறித்து காட்டுப் பகுதிக்குத் தூக்கிச் சென்று பாலியல் பலாத்காரம் செய்திருப்பதும், பின்னர் சுடிதாரின் துப்பட்டாவினால் அவளது கழுத்தை நெரித்து கொடூரமாக கொலை செய்யப்பட்டிருப்பதும் வெளிப்பட்டது.

டெல்லியிலே கற்பழிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மாணவி நல்ல வேளையாக உயிரோடு இருக்கிறார். ஆனால் தமிழகத்திலே 13 வயதே நிரம்பிய, ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த புனிதா கற்பழிக்கப்பட்டதோடு, கொலையும் செய்யப்பட்டிருக்கிறாள். புனிதாவின் கொலைக்காக கிளாக்குளம் கிராம மக்கள் சம்பவத்தைக் கண்டித்து சாலை மறியல் நடத்தியிருக்கிறார்கள். புனிதா படித்த பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் வகுப்புகளைப் புறக்கணித்து விட்டு போராட்டத்திலே ஈடுபட்டுள்ளார்கள். டெல்லியில் கற்பழித்தவர்களும் காவலர்களால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் புனிதாவைக் கற்பழித்தவனையும் காவலர்கள் கைது செய்துள்ளார்கள். ஆனால் டெல்லியிலே மத்திய அரசும், அந்த மாநில அரசும் அங்கே நடைபெற்ற சம்பவத்திற்காக நடவடிக்கை எடுத்துள்ள நிலையில்,

"தமிழகத் திலே ஓர் அரசு இருக்கிறதா? கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட ஏழை புனிதாவிற்காக தமிழக அரசு சார்பில் ஏதாவது நடவடிக்கை உண்டா? டெல்லியில் நடைபெற்றதும் கற்பழிப்பு தான், தமிழகத்திலே நடைபெற்றதும் கற்பழிப்பு தானே? டெல்லி சம்பவத்திற்காக பிரதமரே அறிக்கை வெளியிடுகிறார். ஆனால் தமிழகத் திலே கொலையே செய்யப்பட்ட புனிதாவின் குடும்பத் தாருக்கு அரசின் சார்பில் யாரோ ஒரு அமைச்சராவது சென்று ஆறுதல் கூறியது உண்டா? தமிழகத்திலே அரசு என்ற ஒன்று இருக்கிறதா? தமிழ்ச்சாதி என்பதால் புனிதாவின் கொலை சாதாரணமாகி விட்டதா?" இந்தக் கேள்வி வன் நெஞ்சில்தான் எழாது!

பாலியல் குற்றங்கள் கொடுமையானவை மட்டுமல்ல; கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டியவை என்பதிலே கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. எனினும் குற்றத்தின் தன்மை ஒரேமாதிரியாக இருக்கும் போது, இடத்துக்கு இடம், அதனைக் கண்டித்திடும் தொனியில் சில அரசியல் கட்சிகள், வேறுபாடு காட்டுவது வினோதமாக மட்டுமல்ல - வேதனை தருவதாகவும் இருக்கிறது. உரிய நடவடிக்கைகள் அனைத்தும் டெல்லியிலே மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில்; மத்திய அரசைத் தொடர்ந்து செய்யப்படும் விமர்சனம் துளியேனும் குறையவில்லை. ஆனால் தமிழகத்திலோ - நமக்கு வெகு அருகில் உள்ள ஊரிலே நடந்த குற்றத்தை ஆட்சியாளர்கள் வெளிப்படையாகக் கண்டித்திட முன்வராத நிலையிலும் கூட சில அரசியல் கட்சிகள் அதுகுறித்து உரிய அளவுக்குக் கண்டு கொள்ளாமல் இருப்பதுதான் கவலை தருவதாகவும்,வேடிக்கையாகவும் இருக்கிறது. சமூக வக்கிரங்களைக் கண்டிப்பதில், அரசியல் கலப்பு கூடாது என்பதே எனது கருத்து!

உதாரணத்திற்கு ஒன்றைக் கூற வேண்டுமேயானால், இன்றைய "ஜனசக்தி" நாளேட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் ஒரு நீண்ட கட்டுரை "விம்மி அழாதீர், பொங்கி எழுவீர்" என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரை முழுவதுமே டெல்லியிலே நடைபெற்ற கற்பழிப்பு சம்பவத்திற்காக அனைவரும் பொங்கி எழ வேண்டும் என்பதைப் பற்றித்தான். ஆனால் அந்த நீண்ட கட்டுரையில் ஒரு சிறு பத்தி மட்டுமே, எழுத வேண்டியிருக்கிறதே

என்பதற்காக மாணவி புனிதா கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது பற்றி எழுதியிருக்கிறார். அந்த சிறு பத்தியிலே கூட, பரிதாபத்திற்குரிய அந்தத் தமிழ் மாணவியின் பெயரை எழுதக்கூட அவருக்கு விருப்ப மில்லை போலும்!

தா. பாண்டியன் மாத்திரமல்ல; நம்முடைய திரைப்படத் துறையைச் சார்ந்த ஒரு சிலர் டெல்லியில் நடைபெற்ற கற்பழிப்பு சம்பவத்தைக் கண்டித்து போராட்டத்தில் குதித்து மாணவ, மாணவிகளோடு ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள். அவர்களுக்குக்கூட தூத்துக்குடி மாவட்டத்தில் கற்பழிக்கப்பட்டு கொலையும் செய்யப்பட்ட புனிதாவைப் பற்றிய ஞாபகம் வரவில்லையே என்பதுதான் வருத்தத்திற்குரியதாகும். ஆனால், நான் எதிர்பார்த்ததைப்போல மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏடான 'தீக்கதிரில்' டெல்லி சம்பவத்தையும், தூத்துக்குடி நிகழ்ச்சியையும் கண்டித்து தலையங்கம் ஒன்றைத் தீட்டியிருக்கிறார்கள்.

டெல்லியிலே கற்பழிப்பு என்றால் போராட்டம் - தமிழகத்திலே கற்பழித்துக் கொலையும் செய்திருக்கிறார்கள் என்கிறபோது அதைப் பற்றி யாரும் கவலைப்பட முன் வராத நிலையில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாளை 26-12-2012 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு முன்னால், இந்தக் கொடுமையான வன்முறையைக் கண்டிக்கும் வகையில் மிகப் பெரிய கண்டன ஆர்ப்பாட்டத்தை கழகத்தின் தலைவன் என்ற முறையிலே அறிவித்திருக்கிறேன்.

எனது அறிக்கையைப் பார்த்தவுடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர், சற்குணப் பாண்டியன் ஓடோடி வந்து, கழக மகளிர் அணி சார்பில் தமிழகத் தலைநகரிலேயே உண்ணா விரதம் இருப்பதாக இருந்தோம், தலைவர் அறிக்கையைப் பார்த்தவுடன் தூத்துக்குடி புறப்படுகிறேன், கண்டன ஆர்ப்பாட்டத்தை சிறப்பாக நடத்துகிறோம் என்று கூறி விட்டுச் சென்றார்.

தூத்துக்குடி மாவட்டக் கழகச் செயலாளர் பெரியசாமி தொலைபேசியில் பலமுறை தொடர்பு கொண்டு, ஆர்ப்பாட்டத் திற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு வருவதாகத் தெரிவித்ததோடு, கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட மாணவி புனிதாவின் இல்லத்திற்குச் சென்று ஆறுதல் கூறியதாகவும், கழகத்தின் சார்பில் 50 ஆயிரம் ரூபாய் உதவி நிதி

அளித்ததாகவும் தெரிவித்தார். மாணவர் அணியின் செயலாளர் கடலூர் இள. புகழேந்தி எனது அறிக்கையைப் பார்த்தவுடன் தூத்துக்குடி புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

நாளையதினம் தூத்துக்குடியில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. திருவை குண்டம் புனிதா, அ.தி.மு.க. ஆட்சியில், கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து கழகம் நடத்துகின்ற போராட்டம் இது. இந்தப் போராட்டத்தை எப்போதும்போல நமது கழக உடன்பிறப்புகள் வெற்றிகரமாக நடத்திடுவார்கள், நடத்திட வேண்டுமென்று பெரிதும் விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

25-12-2012

3687. கர்நாடகம் தடுக்கும் தண்ணீரும்; தமிழகம் வடிக்கும் கண்ணீரும்!

உடன்பிறப்பே,

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழக முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு இந்த டிசம்பர் மாதம் 20ஆம் தேதி ஒரு கடிதம் எழுதினார். மீண்டும் சில விவரங்களைத் தெரிவித்து 22ஆம் தேதி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இந்த இரண்டு கடிதங்களுக்கும் முன்பாகவே, 13-12-2012 அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு நடைபெற்று; அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், உச்ச நீதி மன்றம், காவிரி நதி நீர் ஆணையம், காவிரி கண்காணிப்புக்குழு, மத்திய அரசு ஆகிய அனைத்தும் தமிழகத்திற்குத் தண்ணீர் விடுமாறு தொடர்ந்து வலியுறுத்தியும், வரவிருக்கின்ற கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலை மனதிலே கொண்டு, கர்நாடக மாநில அரசு தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீரை வழங்க மறுத்து வருவதை வன்மையாகக் கண்டித்திருக்கிறோம். மேலும் அதே தீர்மானத்தில், தண்ணீ ரைத் தர வேண்டிய பொறுப்பிலே உள்ள கர்நாடக மாநில அரசு, இந்தக் கால கட்டத்திற்குள் மூன்று முறை அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி முடிவுகளை எடுக்கின்ற நிலையில், தண்ணீரைப் பெற வேண்டிய நிலையிலே உள்ள தமிழக அரசு யாரையும் கலந்தாலோசிக்காமல், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் தமிழகத்திலும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுக்க வேண்டுமென்று வெளிப்படையாக வலியுறுத்தித் தெரிவித்த பிறகும், அ.தி.மு.க. அரசு அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஜனநாயக வழிமுறைகளை வேண்டுமென்றே தவிர்த்து விட்டு தன்னிச்சையாக முடிவெடுப்பது பற்றியும் வருத்தத்தைத் தெரிவித்திருந்தோம்.

கழகத்தின் செயற்குழு நிறைவேற்றிய இந்தத் தீர்மானத்தை கர்நாடக மாநில அரசும் காதில் போட்டுக் கொள்ளவில்லை, ஏன் நமது தமிழக அரசே கவனத்தில் கொள்ளவில்லை. இங்கே இவர்களே கேட்கவில்லை என்கிறபோது, அங்கே அவர்கள் எங்கே கேட்கப் போகிறார்கள்? அதற்குப் பிறகும் தி.மு. கழகம் சும்மாயிருந்து விடவில்லை. 17-12-2012 அன்று நான் விடுத்த அறிக்கையில், டெல்டா மாவட்டங்களை "பேரிடர் பாதித்த மாவட்டங்களாக" தமிழக அரசு அறிவிக்கவேண்டுமென்றும், கருகிய சம்பா பயிர்களுக்கு இழப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு

40ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கிட வேண்டு மென்றும், தற்கொலை செய்து கொண்டு இறந்த விவசாயிகளின் குடும்பங்களில் தலா ஒருவருக்கு அரசு வேலை கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதோடு, கழக நாடாளுமன்ற உறுப்பினர்களையெல்லாம் அன்றையதினமே (17-12-2012) பிரதமரைச் சந்தித்து நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை அரசிதழிலே வெளியிடச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளவும் செய்தேன். அவர்களும் அவ்வாறே பிரதமரைச் சந்தித்து முறையிட்டபோது, அதுகுறித்து உரிய முறையில் பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்று பிரதமரும் உறுதி அளித்திருக்கிறார்.

கழகத்தின் சார்பில் இந்த முயற்சிகள் எல்லாம் எடுத்த பிறகு, நமது மாநில முதல் அமைச்சர் அவர்கள் 20ஆம் தேதி ஒரு கடிதம், 22ஆம் தேதி ஒரு கடிதம் என்று பிரதமருக்கு எழுதியிருக்கிறார்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தி.மு. கழக ஆட்சியிலேதான் 5-2-2007 அன்று வெளியிடப்பட்டது. இந்தத் தீர்ப்பினை தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் வரவேற்று அறிக்கை வெளியிட்டனர். இறுதித் தீர்ப்பு பற்றி அப்போதே நான் கூறும்போது, "தமிழகத்தைப் பொறுத்தவரை காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு ஆறுதலை அளிக்கக் கூடியதாக உள்ளது. அதே நேரத்தில் தமிழகத்திலும், கர்நாடகத்திலும் உள்ள விவசாயப் பெருமக்கள் அனைவரும் இதனை ஏற்றுக் கொண்டால்தான் மகிழ்ச்சி அடைவேன். நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு காரணமாக கர்நாடகத் துக்குத் தண்ணீர் குறைந்து விடவுமில்லை, தமிழகத்துக்கும் தண்ணீர் அளவு அதிகமாக உயர்ந்து விடவுமில்லை. இதனை

இரு மாநிலத்தாரும் சிந்தித்தால் அமைதிக்கு வழி காணலாம்" என்று கூறினேன். ஆனால் அ.தி.மு.க.வின் சார்பில் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், இறுதித் தீர்ப்பை "ஏற்க முடியாத தீர்ப்பு" என்றார். நான் "ஆறுதல் தருகிறது" என்று சொன்னதை "மகிழ்ச்சி தருகிறது" என்று சொன்னதாக ஜெயலலிதா அவரே கற்பனை செய்து கொண்டு, "அது வருந்தத்தக்கது" என்று அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையில் ஜெயலலிதா, "கருணாநிதியால் காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் மூலம் தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தீர்ப்பை முழுமையாகப் பெற்றுத் தர முடியவில்லை . இந்த இறுதித் தீர்ப்பு தமிழகத்திற்கு பாதகமாக வந்துள்ளது. இதற்கு தார்மீகப் பொறுப்பேற்று தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்" என்று எப்போதும் போல நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளிவந்த போது என்னை ராஜினாமா செய்ய வேண்டுமென்று அறிக்கை விடுத்தார். தற்போது அந்த இறுதித் தீர்ப்பைத்தான் அரசிதழிலே வெளியிட வேண்டுமென்று பிரதமருக்கு கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதுகிறார். ஜூன் மாதம் 12ஆம் தேதி திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை செப்டம்பர் 17ஆம் தேதிதான் அ.தி.மு.க. ஆட்சியில் திறக்கப்பட்டது. அதனால் குறுவை சாகுபடி இந்த ஆண்டு பொய்த்துப்போய், அறவே இல்லை என்று ஆயிற்று. இந்த ஆண்டு இவ்வாறு தாமதமாக அணை திறக்கப்பட்டதால், பிப்ரவரி மாதம் இறுதி வரை நீர் தேவைப்படும் என்று விவசாயிகள் கோரியிருந்தனர். டெல்டா பாசனத்திற்கு வழக்கமாக ஜனவரி 28ஆம் தேதி வரை அணை திறந்து வைக்கப்பட்டிருக்கும். ஆனால் இன்று அ.தி.மு.க. ஆட்சியில் ஜனவரி மாதம் பிறப்பதற்கு முன்பாகவே டிசம்பர் 21ஆம் தேதி இரவு 8 மணியோடு பாசனத்திற்கு அணை திறப்பு நிறுத்தப்பட்டு கதவுகள் மூடப்பட்டுவிட்டன. விவசாயிகள் என்ன செய்யப் போகிறார்களோ, வாழ்வாதாரத்தை எப்படித் தேடிக் கொள்ளப் போகிறார்களோ, வாழ்க்கையை எப்படி நகர்த்திடப் போகிறார்களோ, அடமானம் வைத்த நகைநட்டுகளை எப்படி மீட்கப் போகிறார்களோ தெரியவில்லை. இதற்காக யார் ராஜினாமா செய்வது? நடுவர் மன்றம் அமைந்திடவும், நடுவர் மன்றத்தின் மூலமாக இடைக்காலத் தீர்ப்பு பெற்றிடவும் காரணமாக இருந்த தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டுமென்று அவசரப்பட்டு அறிக்கை விட்ட ஜெயலலிதா இப்போது என்ன சொல்கிறார்? 10-2-2007 அன்று நான் விடுத்த விளக்க அறிக்கையில்,

"நீர்ப்பாசனத் துறை வல்லுநர்கள், வழக்கறிஞர்கள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்து பேசி, அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் விவாதிக்கப்படும் என்றும் நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பால் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நீக்கிட மறு ஆய்வு மனு தாக்கல் செய்வதற்கும், சட்ட ரீதியாக நல்ல தீர்வு காண்பதற்கும் தமிழக அரசு தயங்காது" என்றும் கூறியிருந்தேன்.

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்த பிறகும் கூட, தி.மு. கழக அரசு அந்தக் கட்டத்திலும், இந்த இறுதித் தீர்ப்பு குறித்து தன்னிச்சையாக முடிவெடுக்க விரும்பாமல், 19-2-2007 அன்று, ஜனநாயக ரீதியாக அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியது. அந்தக் கூட்டத்தில் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளின் சார்பிலும் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். குறிப்பாக அ.தி.மு.க. சார்பில் ஓ. பன்னீர்செல்வம், என்.ஜோதி இருவரும் பங்கேற்றார்கள். விரிவான விவாதத்திற்குப் பிறகு தமிழக மக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் காவிரி நடுவர் மன்றத்தின் முன் தமிழ்நாடு அரசு விளக்கம் கோரி ஒரு மனுவினைத் தாக்கல் செய்வதென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அது மாத்திரமல்ல; மீண்டும் ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டம் 15-4-2007 அன்று மறு ஆய்வு மனுவில் வலியுறுத்தப்பட வேண்டிய அம்சங்கள் குறித்துக் கலந்தாலோசிப்பதற்காகவும், விவாதிப்பதற்காகவும் கழக ஆட்சியில் என்னுடைய தலைமையில் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்திலும் அ.தி.மு.க. சார்பில் ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் வழக்கறிஞர் என். ஜோதி அவர்களும் கலந்து கொண்டார்கள்.

இவ்வாறு 2007ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் இறுதித் தீர்ப்பு வெளிவந்த போது, என்ன மேல் நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து வைத்து, கருத்துக்களைப் பெற்று விவாதித்து, அதன் பிறகே முறையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் தற்போது எதிர்க்கட்சிகள் எடுத்துச் சொல்லியும்கூட, அவ்வாறு எந்த அனைத்துக் கட்சிக் கூட்டமும் கூட்டப்படாமல், தமிழக முதலமைச்சர் தான் நினைத்ததே முடிவு, தான் எடுப்பதே நடவடிக்கை என்பதைப்போல, மக்களாட்சி மாண்புகளுக்கு மதிப்பளிக்காமல் செயல்பட்டு வருகிறார்.

ஜெயலலிதா எப்போது ஆட்சிக்கு வந்தாலும் தமிழகத்திலே வறட்சி இயற்கையாகவே வருகிறது. சம்பா பயிர் கருகிய காரணத்தால் இதுவரை பத்து விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். ஆனால் முதல் அமைச்சர், "அவர்கள் எல்லாம் தற்கொலை செய்து கொண்டு மறையவில்லை, இரண்டு மூன்று பேர்தான் தற்கொலை செய்து கொண்டதாக அதிகாரிகள் கூறுகிறார்கள்" என்று சொல்கிறார்.

நேற்றையதினம் திருத்துறைப்பூண்டியில் கோபாலகிருஷ்ணன் என்ற விவசாயி தூக்கில் தொங்கி உயிர் விட்டிருக்கிறார். ஆனால் அங்கேயுள்ள காவல் துறை வழக்குப் பதியவே மறுக்கிறதாம். என்ன செய்வது? மேலிடத்தின் எண்ணத்தை அறிந்து அதன்படியே அவர்கள் நடக்க வேண்டிய நிலைமை உள்ளது.

2002-2003ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்த போதும், இது போன்ற வறட்சி நிலை தமிழகத்திலே ஏற்பட்டது. மழை இல்லை. இன்னும் சொல்லப் போனால் டெல்டா மாவட்டங்களில் எலிக்கறி சாப்பிடுகின்ற நிலை. அதற்கான புகைப்படங்கள் எல்லாம் அப்போது ஏடுகளில் வெளிவந்தன. குறுவை சாகுபடிக்கே தண்ணீர் வரவில்லை. சம்பா பயிரும் கருகியது. வறுமை தாங்காமல் மன்னார்குடியில் பாலையக் கோட்டையைச் சேர்ந்த சண்முகம் என்ற விவசாயி அரசைக் குறை கூறி கடிதம் ஒன்றை எழுதிவைத்து விட்டுத் தற்கொலை செய்து கொண்டார். அந்தக் கடிதத்தை எப்படியாவது கைப்பற்ற வேண்டுமென்று அப்போது இருந்த போலீசார் படாதபாடுபட்டனர். மன்னார்குடி தொகுதியில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த தோழர் சிவபுண்ணியம் இல்லத்திற்கு நள்ளிரவில் சென்ற போலீசார் சோதனை என்ற பெயரில் அவரது வீட்டை அடித்து உடைத்து வெறியாட்டம் போட்டனர்.

சம்பா பயிர் கருகியதின் காரணமாக 2003ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 15க்கும் மேற்பட்ட விவசாயிகள் மாண்டனர். 26-1-2003 தேதிய "ஜூனியர் விகடன்" வார இதழில் எலிக்கறி கூடக் கிடைக்காமல் ஜெயலலிதா ஆட்சியில் விவசாயிகள் நத்தைகள் உண்ணும் பரிதாபத்தைப் புகைப்படமாகவே எடுத்து பேட்டிகளையும் பெற்று வெளியிட்டது.

தற்போதும் அதே நிலை என்ற போதிலும், அதனை மறைக்கவும், திசை திருப்பவும் இந்த ஆட்சியினர் முயற்சிக்கிறார்கள். இயற்கை பொய்க்கின்ற நிலை எல்லா ஆட்சிக் காலங்களிலும் ஏற்படலாம். அதனை மறைக்கின்ற முயற்சியிலே அரசாங்கம் ஈடுபடுவதுதான் மாபாதகம்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில் வருவாய் அதிகமாகவே உள்ளது. இந்த நிலையில் தமிழ் மாநிலத்திலே உள்ள விவசாயிகளைச் சாக விடாமல் காப்பாற்றி, அவர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிகாண வேண்டிய பொறுப்பு அரசுக்குத் தான் உள்ளது.

எனவே அரசு இதிலே ஈர நெஞ்சத்தோடும், பெருந்தன்மையோடும் செயல்பட வேண்டும். இழப்புக்கு ஆளாகியுள்ள விவசாயிகளுக்குத் தாராளமாக இழப்பீட்டுத் தொகை வழங்கிட உடனடியாக முன்வர வேண்டும்; அதைப் போலவே வேலை இழந்து வாடும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்; தற்கொலை செய்து உயிர்விட்ட விவசாயிகளின் எண்ணிக்கையை மறைக்க முற்படாமல், அவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணத் தொகையைத் தாமதமின்றி வழங்கிட வேண்டும்; அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த ஒருவருக்கு அரசுப் பணி அளித்திட வேண்டும். அதுதான் ஒரு நல்ல ஜனநாயக அரசின் கடமை. பரிதவிக்கும் மக்களுக்குப் பரிவு காட்டுவதே பண்பாடு!

அன்புள்ள,

மு.க.

27-12-2012

3688. பள்ளிக் கல்வித் துறையும் பாழாகும் பரிதாபம்!

உடன்பிறப்பே,

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு, கல்வித் துறையின் மேம்பாடு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அதனால் எந்தவொரு நாட்டிலும் கல்வித் துறையின் வளர்ச்சிக்காக அரசுகள் அதிகத் தொகையினை ஒதுக்கீடு செய்ய முன்வருவார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் 2005-2006இல் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பள்ளிக் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு 4,348 கோடி ரூபாய் என்பது 2010-2011இல் தி.மு.கழக ஆட்சியில் 10,148 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டது. இந்த ஒதுக்கீட்டினை அ.தி.மு.க. ஆட்சியிலும் 14,553 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்திக் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கிய போதிலும்கூட, அதன் பயன்கள் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உரிய நேரத்தில் கிடைக்கின்ற அளவிற்குச் செயல்பாடுகள் அமைந்திடவில்லை.

2001-2006இல் அ.தி.மு.க. ஆட்சியில் 45 ஆயிரத்து 987 ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில், அதாவது அவர்கள் பெறவேண்டிய ஊதியத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு ஊதியம் மட்டுமே பெறும் நிலையில் நியமிக்கப் பட்டிருந்தவர்களுக்கெல்லாம், 2006இல் தி.மு. கழக அரசு பொறுப்பேற்றவுடன் காலமுறை ஊதியம், அதாவது அவர்கள் பெற்று வந்த ஊதியத்தைவிட மூன்று மடங்கு அதிக ஊதியம் கொடுத்து ஆசிரியர்களை மகிழச் செய்தது. அத்துடன் 2006க்குப் பின், தொடக்கக் கல்வித் துறையில் 12 ஆயிரத்து 426 இடைநிலை ஆசிரியர்கள், 14 ஆயிரத்து 115 பட்டதாரி ஆசிரியர்கள் என 26 ஆயிரத்து 541 ஆசிரியர்களும், பள்ளிக் கல்வித் துறையில் 70 இடைநிலை ஆசிரியர்கள், 17 ஆயிரத்து 45 பட்டதாரி

ஆசிரியர்கள், 4 ஆயிரத்து 665 ஆசிரியர் பயிற்றுநர்கள், 3002 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், 525 தமிழாசிரியர்கள், 1131 சிறப்பாசிரியர்கள், 140 தொழில் ஆசிரியர்கள், 1686 கணினி ஆசிரியர்கள் என 27 ஆயிரத்து 739 ஆசிரியர்களும்; மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் 216 விரிவுரையாளர்களும், 32 முதுநிலை விரிவுரையாளர்களும் என மொத்தம் 55 ஆயிரத்து 53 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டார்கள்; கழக ஆட்சியில்!

இவர்கள் தவிர, ஆசிரியர் அல்லாத 1140 பணியாளர்களும், கருணை அடிப்படையில் 449 பணியாளர்களும், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் விவசாயம் கற்பிக்க 176 விவசாயப் பயிற்றுநர்களும் நியமிக்கப்பட்டார்கள். 2006 முதல் 2010 வரை நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் ஆசிரியர் கல்வித் தகுதி பெற்ற 1114 மாற்றுத் திறனாளிகள் முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியர்களாக அரசுப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டார்கள்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் இத்தனை பேர் நியமிக்கப்பட்டார்களே, அப்போது ஏதாவது புகார்கள் வந்ததுண்டா? ஏதாவது முறைகேடு சொன்னதுண்டா? ஏதாவது குளறுபடிகள் நடந்ததுண்டா? ஆனால் இப்போது அ.தி.மு.க. ஆட்சியிலே என்ன நிலைமை?

நேற்றைய (26-12-2012) "தினமலர்" நாளேட்டின் முதல் பக்கத் தலைப்புச் செய்தி என்ன தெரியுமா? "இரண்டாயிரம் முதுகலை ஆசிரியர்கள் தேர்வில் குளறுபடி! தகுதியில்லாதவர்களுக்குப் பணி வழங்கியது அம்பலம்!". அந்தத் தலைப்பில் வந்துள்ள செய்திக் குறிப்பில் சில முக்கியப் பகுதிகள் வருமாறு :-

- இடைநிலை, பட்டதாரி ஆசிரியர் தேர்வில் நடந்த, குளறுபடிகளைத் தொடர்ந்து, முதுகலை ஆசிரியர் தேர்விலும் பெரும் குளறுபடி நடந்திருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.
- உடல் தகுதி நன்றாக இருப்பவர்கள் பலர், ஊனமுற்றோர் பிரிவில் தேர்வாகி உள்ளனர். சரியான கல்வித் தகுதி இல்லாதவர்களும் இறுதிப் பட்டியலில் தேர்வாகி உள்ளனர்.

- **அதிகார வட்டாரத்திலிருந்து வந்த நெருக்கடி காரணமாக டி.இ.டி. ஆசிரியர் தேர்வுப் பணி இடியாப்பச் சிக்கலாக மாறித் தேர்வு வாரியம் தவியாய்த் தவித்து வருகிறது.**
- **பணி நியமனத்திற்கு முன் சான்றிதழ்களைச் சரியாகச் சரிபார்க்காமல் கோட்டைவிட்டு விட்டு, 18 ஆயிரம் பேருக்குப் பணி நியமனம் வழங்கியாகிவிட்டது. உத்தரவுகளைப் பெற்றோர் பணியிலும் சேர்ந்து விட்டனர். இப்போது மீண்டும் சான்றிதழ்களைச் சரிபார்க்கும் பணி நடந்து வருகிறது.**

"தினமலர்" வெளியிட்ட இந்தக் குற்றச்சாட்டுகள் நீண்டு கொண்டே போகிறது. இது மாத்திரமல்ல; அதே தினமலர் ஏட்டில், வேறொரு பக்கத்தில், "1,000 தொழில் கல்வி ஆசிரியர் பணியிடங்கள் காலி; - மேல்நிலை பள்ளிகளில் பாடப் பிரிவுகள் மூடல்" என்ற செய்தியும் பெரிதாக வந்துள்ளது.

"தினமலர்" நாளிதழில் இவ்வளவு குறைகூறி 26ஆம்தேதி செய்திவந்த போதிலும், 27ஆம் தேதிய "தினமணி" நாளிதழில் பணி நியமனம் பெற்ற பெரும்பாலோர் பணியிலே சேருவதில் எந்த விதமான தடையும் இல்லை என்றும், ஓரிருவர் மட்டுமே உரிய தகுதிகளுடன் இல்லை என்றும், இறுதி நேரத்தில் சற்று அவசரமாக இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டதால் மீண்டும் பட்டியல் சரிபார்க்கப்பட்டது என்றும், எந்தவொரு மிகப் பெரிய பணி நியமனத்திலும் சிறிய பிரச்சினைகள் இருப்பது இயல்புதான் என்றும், தமிழ் வழி முன்னுரிமை கோருவோர் தவறான சான்றிதழ்களை அளித்துள்ளதால் அந்தப் பிரிவினருக்கு மட்டும் மற்றுமொரு சான்றிதழ் சரிபார்ப்பு நடத்தப்பட வேண்டியுள்ளது என்றும் **அதிகாரிகள் தெரிவித்ததாகச் செய்தி வந்துள்ளது.**

நாம் கேட்பதெல்லாம் சான்றிதழ்களைச் சரிபார்க்காமல் கூட எதற்காக அவசர அவசரமாகப் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன? அதனால் எந்த அளவிற்குக் குழப்பங்கள், குளறுபடிகள்?

கடந்த 13ஆம் தேதியன்று முதலமைச்சரே நேரடியாக 26 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பணி நியமன ஆணையினை

வழங்குவார் என்று முழு பக்க விளம்பரங்கள் அனைத்து ஏடுகளிலும் செய்யப்பட்டு, மிகப் பெரிய அளவில் விழா நடைபெற்றது. அந்த விழாவில் பங்கேற்ற முதலமைச்சர் 36 ஆசிரியர்களுக்கு மட்டுமே நேரடியாகப் பணி நியமன ஆணையினை வழங்க, ஏனையோர்க்கு மற்றவர்கள் பணி நியமன ஆணையினை வழங்கினார்களாம். "முதல்வர் விழாவில் தவித்த ஆசிரியைகள்" என்ற தலைப்பிலே அதைப் பற்றியும் 14ஆம் தேதியன்றே தினமலரில் செய்தி வந்தது.

அந்தச் செய்தியில், "பணி நியமன ஆணை வழங்கும் விழா, 13ஆம் தேதி நடந்த நிலையில், 12ஆம் தேதி காலை முதலே 650 பஸ்கள் மூலம் ஆசிரியர்கள் சென்னைக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் அனைவரும், 12ஆம் தேதி இரவு சென்னை, பல்லாவரம் உள்ளிட்ட பகுதிகளில் பெரிய தனியார் பள்ளிகளில் தங்கவைக்கப்பட்டனர். இரவு நேரத்தில் வந்திறங்கிய அவர்களுக்குச் சிறிது நேர ஓய்வு கூட அளிக்கப்படவில்லை. உடனடியாகக் குளித்துத் தயாராக அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து இரவு 2 மணி முதலே அவர்கள் நந்தனம் விழா அரங்கிற்கு பஸ்கள் மூலம் அழைத்து வரப்பட்டு அரங்கில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அமரவைக்கப்பட்டனர். தேர்வு செய்யப்பட்டவர்களில் பெண்களே அதிகம் இருந்த நிலையில், அவர்களுக்குப் போதுமான கழிப்பிட வசதிகள் இல்லை. ஆங்காங்கே இருந்த "மொபைல்" கழிப்பிடங்களில், தண்ணீர் வசதி இல்லை. ஒவ்வொரு "மொபைல்" கழிப்பிடத்திற்கும் 20க்கும் மேற்பட்டவர்கள் வரிசையில் நின்றே சென்று வந்தனர். முதல் நாள் இரவு முதலே அவர்கள் அங்கு அமர வைக்கப்பட்டதால், பெண்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியிருந்தனர். கொசுக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்டதாகப் பயனாளிகள் புலம்பினர்" என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருந்தது. இது ஆசிரியர்கள் பணி நியமனம் வழங்கப்பட்ட விழாவிலே நடந்த சம்பவங்கள்.

13ஆம் தேதியன்று பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்ட போதிலும், வழக்கமாகப் பணி நியமன ஆணைகள் வழங்குவதற்கு முன்பு, பலமுறை அவர்களுடைய சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்ட பிறகே, ஆணைகள் வழங்கப்படும். ஆனால் இந்த முறை நேரம் இல்லாத காரணத்தால், சான்றிதழ்கள் சரி பார்க்கப்படும் பணிகளை நிறைவேற்றாமலே பணி நியமன ஆணைகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுவிட்டன. பணி நியமன ஆணைகள் வழங்கிவிட்டு

சான்றிதழ்களைச் சரிபார்ப்பதால், அதிலே தகுதி இல்லாதவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுடைய தேர்வு ஆணையை ரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

சான்றிதழ் சரிபார்க்கும் பணிகள் நடப்பதற்கு முன்பாக, எந்தெந்தப் பாடங்களை, வேலைக்குத் தகுதியாக ஏற்க வேண்டும் என்றும், எந்தப் பாடங்கள் தகுதியில்லை என்றும், மற்றும் தமிழ் வழியில் படித்தவர்களைத் தேர்வு செய்வதற்கான விதிமுறைகள் குறித்துத் தெளிவான சுற்றறிக்கையைச் சான்றிதழ் சரிபார்ப்பில் ஈடுபட்ட குழுவினருக்கு அரசு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் இதைச் செய்யாததால், ஒவ்வொரு குழுவும், ஒவ்வொரு அணுகுமுறையுடன் சான்றிதழ்களைச் சரி பார்த்திருக்கிறார்களாம்.

கடந்த வாரத்தில் மற்றும் ஓர் செய்தி. "ஆசிரியர் அல்லாத 7 ஆயிரம் பணி இடங்கள் காலி" என்பதுதான் அதன் தலைப்பு. அதாவது அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆசிரியர் அல்லாத பணி இடங்களை நிரப்புவதில் அரசு சுத்தமாகக் கவனம் செலுத்துவதில்லை என்பது குற்றச்சாட்டு. இந்தப் பணி இடங்களை நிரப்பாத காரணத்தால், அந்தப் பள்ளிகளில் இவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளை ஆசிரியர்கள் மூலமாக நிறைவேற்றுவதால், மாணவர்களுக்கு அவர்கள் போதிக்கும் பணி பாதிக்கப்படுகிறதாம்.

அடுத்து ஒரு செய்தி. அதாவது பத்தாம் வகுப்பு தேர்வு எழுதும் மாணவர்கள் தங்கள் தொடர்பான விவரங்களையெல்லாம் "ஆன்-லைன்" வழியாக ஜனவரி 4ஆம் தேதிக்குள் பதிவுசெய்ய வேண்டும் என்று ஓர் உத்தரவு. இன்னும் 5 நாட்கள் மட்டுமே உள்ளன. பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதும் மாணவர்கள் சுமார் 11 லட்சம் மாணவர்கள் உள்ளனர். 18 மணி நேரம் மின்வெட்டு! சில பள்ளிகளில் கம்ப்யூட்டர் வசதிகள் மற்றும் இண்டர்நெட் வசதிகள் இல்லை. இதிலே எவ்வாறு ஜனவரி 4ஆம் தேதிக்குள் மாணவர்கள் தங்களைப் பற்றிய முழு விவரங்களை "ஆன்-லைன்" மூலமாகத் தெரிவிக்க இயலும். இந்தத் தேதியை நீடிக்க வேண்டுமென்று நான் எழுதியிருந்தேன். அதன் பிறகு கூட அரசுத் தரப்பில் எந்த விதமான நடவடிக்கையும் இல்லை.

இப்படி எழுதிக் கொண்டேபோகலாம். அ.தி.மு.க. அரசு கடந்த ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு சமச்சீர்

கல்வித் திட்டத்தில் ஆரம்பித்து; முதல் கோணல் - முழுவதுமே கோணல் என்ற அளவில்தான் கல்வித் துறை செயல்பட்டு வருகிறது. இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் அந்தத் துறைக்கு இதுவரை எத்தனை அமைச்சர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்பதும், அந்தத் துறையிலே உள்ள மூத்த அதிகாரிகள் எத்தனை பேர் இடமாறுதல் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதும், எத்தனை இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதும் அ.தி.மு.க. ஆட்சியில் பள்ளிக் கல்வித் துறை எவ்வாறு இயங்கி வருகிறது என்பதற்கான சான்றுகளாகும். பள்ளிக் கல்வித் துறை பாழ்பட்டால், பாதிப்புக்குள்ளாவது மாணவர்களின் எதிர்காலம்தான். இன்று வற்றிப் போகும் குளமாகவல்லவா குளறுபடிகளும், குறைபாடுகளும் நிறைந்த பள்ளிக் கல்வித் துறை காட்சியளிக்கிறது!

அன்புள்ள,

மு.க.

28-12-2012

3689. அவமானம்; யாரால் என்பதுதான் கேள்வி!

உடன்பிறப்பே,

"ஜெயலலிதா வெளிநடப்பு" - அனைத்து நாளேடுகளிலும் இன்று தலைப்புச் செய்தி, முக்கியச் செய்தி இதுதான்! தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளத் தமிழக முதலமைச்சர் டெல்லி செல்கிறார் என்றெல்லாம் ஒரு வார காலமாக விளம்பரப்படுத்தப்பட்டு, நேற்றையதினம் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழக முதலமைச்சர் பத்து நிமிடத்திற்கு மேல் பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவித்து, அது தமிழக மக்களை மத்திய அரசு அவமானப்படுத்தி விட்டதாகக் குற்றச்சாட்டு கூறியிருக்கிறார். இந்தச் செய்தியைச் செய்தியாளர்கள் நேற்றையதினமே என்னிடம் வந்து பரபரப்பாகத் தெரிவித்த போது, ஜெயலலிதாவையோ, தமிழகத்தையோ மத்திய அரசு அவமானப்படுத்தியிருந்தால், அதை நான் கண்டிக்கிறேன், ஆனால் என்ன நடந்தது என்பதை விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறி அதுவும் ஏடுகளிலே வந்துள்ளது.

தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டம், முதலமைச்சர்கள் மாநாடு போன்றவற்றில் பொதுவாக மாநிலங்களின் அகர வரிசையிலேதான் முதலமைச்சர்களைப் பேசுவதற்கு அழைப்பார்கள். அதிலே சில நேரங்களில் வயதில் மூத்தவர்களாக இருந்தால் அவர்களுக்கு முன்னுரிமையும் வழங்குவார்கள். அதுபோல் நான் முதல்வராக இருந்தபோது எனக்கு வழங்கியிருக்கிறார்கள். நேற்றைய தினம் அகர வரிசையில்தான் பேசுவதற்கு முதலமைச்சர்கள் அழைக்கப்படுவதாக இருந்தபோது, தமிழக முதலமைச்சரின் பெயர், தமிழ்நாடு என்பதில் ஆங்கில எழுத்தான ''டி'' என்று இருப்பதால் கடைசியாகப் பேச வேண்டியிருக்கும் என்பதால், தான் உடனடியாகச் சென்னைக்குத் திரும்ப வேண்டியிருக்கிறது என்று கூறி, முதலிலே பேச வேண்டுமென்று கோரியதன் பேரில் அதனை ஏற்றுக்கொண்டு, பிரதமர் தலைமை உரையாற்றிய பிறகு, முதலில் பேசுவதற்குத் தமிழக முதல் அமைச்சரைத்தான் அழைத்திருக்கிறார்கள்.

பத்து நிமிடம் பேசியவுடன் மணி அடிக்கப் பட்டது என்றும், அது தனக்கும், தமிழகத்திற்கும் ஏற்பட்ட அவமானம் என்றும் செய்தியாளர்களிடம் தமிழக முதல் அமைச்சர் தெரிவித்திருக்கிறார். 30க்கு மேற்பட்ட முதல் அமைச்சர்களும், மத்திய அமைச்சர்களும் உட்பட 40 பேர் பேச வேண்டியிருப்பதால், அனைவரும் பேசுவதன் அவசியத்தைக் கருதி ஒவ்வொருவருக்கும் பத்து நிமிடம் என்றால் கூட 400 நிமிடம், அதாவது அனைவரும் பேசுவதற்கு ஆறு மணி நேரத்திற்கு மேல் தேவைப்படும் என்பதால் முன்கூட்டியே ஒவ்வொருவரும் பத்து நிமிடத்திற்குள் தங்கள் பேச்சினை முடித்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் பத்து நிமிடத்திற்கு மேல் பேச வேண்டுமென்று விரும்பியிருந்தால் முன்கூட்டியே தனக்குக் கூடுதலாகச் சற்று நேரம் ஒதுக்கித்தர வேண்டுமென்று கோரியிருக்கலாம். அல்லது தன் பேச்சிலே முக்கியமான பகுதிகளை மட்டும் சுருக்கிப் பத்து நிமிடத்திற்குள் பேசிவிட்டு, மற்ற பகுதிகளைப் பேசியதாக அவையின் நடவடிக்கைகளிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கூறிவிட்டு, ஏடுகளுக்கு முழுப் பேச்சினையும் வழங்கியிருக்கலாம். ஆனால் தமிழக முதலமைச்சர் பத்து நிமிடம் முடிந்து மணி அடித்தவுடன் வெளியேறியிருக்கிறார். மணி அடித்த காரணத்தினாலே பேச்சினை உடனடியாக முடித்துக் கொள்ள வேண்டுமென்பது இல்லை. மேலும் சில மணித்துளிகள் தொடர்ந்து தன் பேச்சினைத் தொடர்ந்து அதன் பின்னர் முடித்துக் கொண்டிருக்கலாம். அதை யாரும் தடுத்திருக்கப் போவதில்லை. ஆனால் நம்முடைய முதல் அமைச்சர் அவருக்கே உரிய முன் கோபம் காரணமாக வேகவேகமாக வெளியே வந்து நிருபர்களிடம், தமிழக மக்களை மத்திய அரசு அவமானப்படுத்தி விட்டதாக ஒரு குற்றச்சாட்டினைத் தெரிவித்துவிட்டுத் தனி விமானத்தில் ஏறி சென்னைக்கு வந்துவிட்டார்.

பேச்சினை விரைவாக முடிக்கச் சொல்வதற்காக மணி அடிப்பது என்பது ஒன்றும் அவமானகரமான காரியமல்ல. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமேயானால், தமிழகச் சட்டப்பேரவை நடைபெறுகிறதே, அங்கே மணி வைக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தால் அப்போது மணி அடிப்பார்கள். அதனைக் காதிலே வாங்கிக் கொள்ளாமலே உறுப்பினர்கள் பேசிக் கொண்டே இருப்பார்கள். அது பல ஆண்டுக் காலமாக எல்லா ஆட்சிக் காலத்திலும் இருந்து வரும் நடைமுறை.

அதை அவமானகரமானது என்று யாரும் கூறுவது கிடையாது. அது மாத்திரமல்ல; பல்வேறு துறைகளின் மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்படவிருக்கையில், "இன்றையதினம் இத்தனை பேர் பேச வேண்டியிருக்கிறது, அதற்குப் பிறகு முதல் அமைச்சர் பதில் சொல்ல வேண்டும், எனவே பேசுகின்ற ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து நிமிடத்திற்குள் தங்கள் பேச்சினை முடித்துக்கொள்ள வேண்டும்" என்று பேரவைத் தலைவரே கூறுவார். இப்போதும் அந்த நடைமுறைதான் இருந்துவருகிறது. அதிலே எந்தத் தவறும் கிடையாது. ஆனால் முதல் அமைச்சர், பள்ளிகளிலே மணி அடித்து பிள்ளைகளை உட்கார வைப்பதைப் போல என்று சொல்லியிருக்கிறார். அப்படியென்றால் பேரவையில் மணி அடித்து உட்கார வைப்பதும் பள்ளிகளிலே மணி அடித்துப் பிள்ளைகளை உட்கார வைப்பதைப் போலத்தானா?

ஒரு சில நாட்களுக்கு முன்பு அம்மையார், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டினை நடத்தியபோது, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும் அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் என்று தொடர்ந்து தங்கள் மாவட்டத்திற்கு தமிழக அரசு அது செய்யவில்லை, இது செய்யவில்லை என்று பட்டியலிட்டுக் கொண்டே இருந்தால், மாநாடு எப்போது முடியும்?

முதலமைச்சர் ஜெயலலிதா அளித்த பேட்டியிலேயே, அவர் பேசுவதற்கு முன்பாகவே ஒவ்வொரு முதல் அமைச்சருக்கும் பத்து நிமிடங்கள்தான் கால அவகாசம் அளிக்கப்படும், அந்த பத்து நிமிடங்கள் முடிந்து விட்டால் ஒரு மணி அடிக்கப்படும் என்று சொன்னார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார். அப்படியானால் அவ்வாறு தெரிவிக்கப்பட்டவுடனேயே, பேச்சைத் தொடங்குவதற்கு முன்பாகவே, பத்து நிமிடம் என்பது ஒவ்வொரு முதல் அமைச்சருக்கும் நேரம் போதாது, அதனை அதிகப்படுத்த வேண்டும், மேலும் முதல் அமைச்சர்கள் பேசும்போது முடிக்கச் சொல்லி மணி அடிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கலாம் அல்லவா? அப்படிச் சொல்லியிருந்தால் நேரத்தை அதிகப்படுத்தி, மணி அடிக்காமல் இருந்திருப்பார்கள் அல்லவா? தமிழக முதல் அமைச்சர் அதைச் செய்தாரா என்றால் இல்லை.

பொதுவாக நேற்றையதினம் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டம் 12வது ஐந்தாண்டுத் திட்ட வரைவினை இறுதி செய்வதற்கான கூட்டம். அந்தக் கூட்டத்தில் அந்தத்

திட்டத்தில் என்னென்ன செய்ய வேண்டும், எதை மாற்ற வேண்டும் என்பது பற்றி மட்டும் பேசினால் குறிப்பிட்ட பத்து நிமிடம் போதும். ஆனால் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசுவது போல் அரசியல் ரீதியாக மத்திய அரசு அதைச் செய்யவில்லை, இதைச் செய்யவில்லை என்று அந்தக் கூட்டத்தில் பேசுவதென்றால் நேரம் போதாதுதானே?

தமிழக முதலமைச்சர் செய்தியாளர்களிடம், மத்திய அரசு தனக்கு ஆதரவாக இல்லாத - எதிர்ப்புத் தெரிவிக்கும் முதல் அமைச்சர்களைப் பேச அனுமதிக்காமல் இப்படியொரு புதிய அடக்குமுறையைத் தொடங்கியிருக்கிறார்கள், அதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார். கூட்டத்தில் முதலில் பேசியதே தமிழக முதல் அமைச்சர்தான். அந்த நிலையில் மத்திய அரசு தனக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முதல் அமைச்சர்களுக்கு மட்டும் நேரத்தைக் குறைத்து, ஆதரவு தெரிவிக்கும் முதல் அமைச்சர்களுக்கு நேரத்தை அதிகப்படுத்திக் கொடுத்ததாக எவ்வாறு பழி சுமத்திட இயலும்? மத்திய அரசின் சார்பில் எல்லா முதல் அமைச்சர்களுக்கும் ஒரே அணுகுமுறைதான் கடைப்பிடிக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார்கள். மத்திய அமைச்சர் ராஜீவ் சுக்லா அவர்கள், காங்கிரஸ் மாநில முதல்வர்கள் பேசும்போதும் பத்து நிமிடம் முடிவடைந்தவுடன் மணி அடிக்கப்பட்டது என்று தெளிவாக்கியிருக்கிறார். எனவே மத்திய அரசு பாரபட்சமாக நடந்து கொண்டது என்ற குற்றச்சாட்டும் சரியானதல்ல. மத்திய சட்டத் துறை அமைச்சர் அஸ்வனி குமார், "சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட முதல்வர்கள் பேச வேண்டும். ஒருவருக்கு பத்து நிமிடம் என்றாலே 5 மணி நேரத்துக்கு மேலாகும். ஆகையால் தமிழக முதல்வர் தெரிவிக்கும் காரணம் ஏற்கும்படியாக இல்லை. மாநிலத்தின் குரல் வளையை மத்திய அரசு நெரித்து விட்டது என்று ஜெயலலிதா கூறுவது தவறு" என்று சொல்லியிருக்கிறார்.

நமது தமிழக முதல் அமைச்சர் வெளி நடப்புச் செய்வது இப்போது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலிருந்து மாத்திரமல்ல; அண்மையில் பெங்களூரில் காவிரிப் பிரச்சினைக்காகக் கர்நாடக முதல் அமைச்சரும், தமிழக முதல் அமைச்சரும் கலந்துகொண்ட கூட்டத்திலிருந்தும் இப்படித்தான் நம்முடைய முதல் அமைச்சர் வெளிநடப்பு செய்துவிட்டு, சென்னை திரும்பினார். ஏன் காவேரி நதி நீர் ஆணையக் கூட்டம் ஏற்கனவே ஒரு முறை நடந்தபோது,

அங்கிருந்தும் இப்படித் தான் வெளிநடப்புச் செய்தார். எனவே வெளிநடப்பு செய்திருப்பது ஒன்றும் புதிதல்ல. ஆனால் வெளி நடப்புச் செய்துவிட்டு மத்திய அரசு மீது சகட்டுமேனிக்குக் குற்றச்சாட்டுகளைக் கூறுவது முறையானதுதானா?

தமிழக அரசு கேபிள் டி.வி. நிறுவனத்துக்கு மத்திய அரசு உரிமம் வழங்காததற்குக் காரணம் ஒரு குடும்பத்தினர் நடத்தும் டி.வி. ஒளிபரப்பு சேவைக்குச் சாதகமாக செயல்பட வேண்டும் என்பதுதான் காரணம் என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்ட உரையில் தமிழக முதல் அமைச்சர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். இதைப் பற்றி ஜெயலலிதா அங்கே குதர்க்கமாக உரையாற்றுவதற்கு முன்பாகவே மத்திய அரசின் தகவல் ஒளிபரப்புத் துறை அமைச்சர் மணீஷ் திவாரி அவர்கள் தெளிவாகப் பதிலளித்துள்ளார். டெல்லியில் செய்தியாளர்கள் இதுபற்றி அவரிடம் கேள்வி கேட்டபோது, "தமிழக அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தக்கு டிஜிட்டல் மயமாக்கலுக்கான உரிமம் வழங்குவது தொடர்பாக மத்திய தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையத்தின் (டிராய்) பரிந்துரைப்படிதான் மத்திய அரசு முடிவு எடுக்கும். கேபிள் டி.வி. ஒளிபரப்புச் சேவையில் மத்திய, மாநில அரசுகள் ஈடுபடக் கூடாது என்று டிராய் பரிந்துரை செய்திருக்கிறது. எனினும் தமிழக அரசு கேபிள் டி.வி. நிறுவனத்துக்கு டிஜிட்டல் மயமாக்கலுக்கான உரிமம் வழங்குவதற்காக டிராயின் பரிந்துரையை மறு பரிசீலனை செய்யும்படி அந்த அமைப்பைக் கேட்டுள்ளேன்" என்று பதிலளித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை குறித்து அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திக்க நேரம் கேட்டதாகவும், தரப்படவில்லை என்றும் ஜெயலலிதா நிருபர்களிடம் நேற்று கூறியிருக்கிறார். ஆனால் மத்திய அமைச்சர் மணீஷ் திவாரி அவர்கள், இதுகுறித்து அ.தி.மு.க. வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னிடம் நேரில் முறையிட்டதாகச் சொல்லியிருக்கிறார்.

மத்திய அரசு சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கூறவில்லை. நான் முதல் அமைச்சராக இருந்தபோது பல முறை தேசிய வளர்ச்சிக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறேன். அப்போதும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறேன். உதாரணத்திற்கு இரண்டைத் தெரிவிக்கிறேன்.

1969ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக ஆன பிறகு முதல் முறையாகத் தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில்

கலந்துகொண்டேன். அப்போது என்னுடன் நிதியமைச்சர் மதியழகன் அவர்களும் வந்திருந்தார். அந்தக் கூட்டத்தில் நான் பேசும்போதுதான் மத்திய மாநில அரசுகளின் உறவுகள் குறித்து ஆராய வேண்டும் என்று கூறினேன். அப்போது யு.என்.ஐ. "இந்தக் கூட்டத்திலேயே மத்திய மாநில அரசுகளின் உறவு பற்றி யோசனை கூறியது தமிழக முதல்வர் ஒருவர் தான்" என்று குறிப்பிட்டிருந்தது. அந்தக் கூட்டத்திலேதான் "வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்" என்று நான் பேசி, மத்திய நிதியமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய் அதை எதிர்த்துக் காரசாரமாகப் பேசினார். ஆனால் பிரதமர் இந்திராகாந்தி ஒருசில மாதங்கள் கழித்து 14 வங்கிகளை தேசியமயமாக்கி அறிவித்து, அதற்காக அம்மையார் அவர்களைச் சென்னைக்கு வரவழைத்துப் பாராட்டு விழா நடத்தினேன்.

அடுத்து 21-3-1970 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டபோது, "சேலத்திற்காக பல ஆண்டுக் காலம் போர்க் குரல் எழுப்பிய நாங்கள் தமிழகத்தில் இன்று ஆளுங்கட்சியாக வந்திருக்கிறோம். ஆனால் சேலம்தான் இன்னும் வரவில்லை. சேலத்தைப் பற்றிய அறிவிப்பைத் தமிழ்நாடு மிகுந்த பரபரப்போடும், உணர்ச்சியோடும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அந்த ஆசையில் கல்லைப் போடாமல் சேலம் திட்டத்திற்கான அடிக்கல்லைப் போடுமாறு கேட்டுக் கொள்கிறேன். பிரதமருக்கு நான் இறுதியாகவும், உறுதியாகவும் கூறிக் கொள்வேன். இந்தக் கூட்டத்தில் சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பற்றித் தங்களது அறிவிப்புத் தேவை. இன்னமும் அறிவிக்காமல் இருப்பதன் நோக்கமென்ன? யார் ஆட்சிக்கு வந்தபிறகு அறிவிக்கலாம் என்று இருக்கிறீர்கள்? கூடுதலாக மாநிலங்களுக்கு ஒதுக்கியுள்ள 175 கோடி ரூபாய் எல்லா மாநிலங்களுக்கும் எங்களுடைய தமிழ்நாட்டிற்கும் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். வறட்சிப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்கு ஒதுக்கப்படும் நூறு கோடி ரூபாயில் தமிழ் நாட்டை வஞ்சிக்கக் கூடாது. இந்த மூன்றிற்கும் தங்களிடமிருந்து ஒப்புதல் கிடைக்காத வரையில் இந்தத் திட்டத்தை நான்கு கோடி தமிழ்மக்களின் சார்பில் நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும், திட்டத்திற்கான சம்மதம் தர முடியாது என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறினேன்.

அதன் விளைவாக உடனடியாக அதே 1970ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17ந்தேதி நாடாளுமன்றத்தில் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், தமிழகத்தின் கோரிக்கையை ஏற்று நான்காம் திட்டத்திலேயே சேலம் உருக்காலை துவக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி சேலத்தில் என் தலைமையில் விழா நடைபெற்று இந்திரா காந்தி அவர்களே அடிக்கல்லும் நாட்டினார்கள். அந்தத் திட்டம் உடனடியாகத் தொடங்கியது.

எனவே மத்திய அரசு கூறுவதற்கெல்லாம் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்பதல்ல; கோபித்துக் கொண்டாலும், பண்பாடு காப்பது மிகவும் முக்கியம். 1971-72ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே "உரிமைக்குக் குரல் கொடுப்போர் மாநில அரசிலும், உறவுக்குக் கை கொடுப்போர் மத்திய அரசிலும் இருந்திடும் இந்தக் காலத்திலேயே, தமிழகத்தின் முறையீடுகள் பல தட்டிக் கழிக்கப்படுகின்றன வென்றால், தயவுக்குத் தவம் கிடப்போர் மாநிலத்திலும், தாராள சிந்தையற்றோர் மத்திய அரசிலும் இருந்திட்டால் மாநிலத்தின் வேண்டுகோள்கள் விழலுக்கு இறைத்த நீராகும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?" என்றும், "வரம் கொடுக்கும் தெய்வமாக மத்திய அரசும், தவம்கிடக்கும் பக்தர்களாக மாநிலங்களும் இருக்க முடியாது" என்றும் பேசியிருக்கிறேன். எனவே மத்திய அரசு மீது குற்றச்சாட்டுகளைக் கூறுவது தவறல்ல.

இன்றைய முதல் அமைச்சரின் முழுப் பேச்சு ஏடுகளில் எல்லாம் வெளிவந்திருக்கிறது. அவ்வளவையும் அங்கே அவர் படித்திருந்தால் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகியிருக்கும். ஒவ்வொரு முதல் அமைச்சரும் தமிழக முதல்வரைப் போல நாங்களும் பேசுவோம் என்று ஆரம்பித்தால் எவ்வளவு நேரமாகியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? எனவே தமிழ்நாட்டிற்கே அவமானம் நேர்ந்து விட்டதாகக் கூறுவது என்பது மிகைப்படுத்தப்படும் ஒன்றே தவிர உண்மையான குற்றச்சாட்டு அல்ல! அவமானம்; யாரால் என்பதுதான் முக்கியமான கேள்வி!

அன்புள்ள,

மு.க.

29-12-2012

3690. கபட நாடகமாடிகளைக் கண்டுகொள்வீர்!

உடன்பிறப்பே,

முதல் அமைச்சர், ஜெயலலிதா டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு, வெளியே வந்து செய்தியாளர்களிடம், வெளிநடப்புச் செய்திருப்பதாகக் கூறியதோடு, அவசர அவசரமாகச் சென்னைக்கு வந்து 27ஆம் தேதியன்று "கர்நாடகம் தடுக்கும் தண்ணீரும்; தமிழகம் வடிக்கும் கண்ணீரும்" என்ற தலைப்பில் நான் எழுதிய கடிதத்திற்கு நீண்ட பதில் அறிக்கை விடுத்திருக்கிறார். அதை அறிக்கை என்று சொல்வதைவிட "வசைபாடல்" என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். என்ன செய்வது? அவர் ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் பண்பாட்டோடு, நாகரிகமாக அறிக்கை விடத் தெரியாது போலும்! அவருடைய பாணியே அதுவாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் அவர் எழுதியதையும், நான் எழுதியதையும் இங்கே ஒப்பிட்டுக் காட்டுகிறேன். தமிழ்நாட்டு மக்களே எது உண்மை என்பதைத் தீர்மானித்துக் கொள்ளட்டும்!

ஜெயலலிதா இன்றைய அறிக்கையின் துவக்கத்தில், "கருணாநிதி தனது அறிக்கையில், காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளிவந்தபோது, இது தமிழகத்திற்குப் பாதகமானது என்று நான் (ஜெயலலிதா) அறிக்கை வெளியிட்டதாகவும், அந்த இறுதித் தீர்ப்பைத்தான் அரசிதழிலே வெளியிட வேண்டும் என்று தற்போது பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியதாகவும் குறிப்பிட்டு இருக்கிறார். காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு 5-2-2007 அன்று வெளியிடப்பட்ட பிறகு, 19-2-2007 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது" என்று நான் ஏதோ தவறான தகவலைத் தெரிவித்து விட்டதாகக் கூறுகிறார். அதாவது 5-2-2007 அன்று காவேரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு

வந்த பிறகு, 19-2-2007 அன்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது என்று, இடையிலே எதுவுமே நடைபெறாததைப் போலச் சொல்லியிருக்கிறார். நான் உண்மையைக் கூறுகிறேன்.

5-2-2007 அன்று காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியான பிறகு, அதிலே என்ன இருக்கிறது என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாமல், 6-2-2007 அன்றே ஜெயலலிதா ஒரு நீண்ட அறிக்கை விடுத்து, அந்த அறிக்கை அ.தி.மு.க. வின் அதிகாரப்பூர்வமான "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகையில் 7-2-2007 அன்று முதல் பக்கத்திலேயே வெளிவந்துள்ளது.

அந்த அறிக்கையும் முழுக்க முழுக்க என்மீது வசைபாடல்தான்! அதற்காக எத்தனை "அவதூறு வழக்குகளை" வேண்டுமானாலும் தொடரலாம். 7-2-2007 அன்று வெளிவந்த ஜெயலலிதாவின் அறிக்கை வருமாறு :-

> "ஓட்டைக் கப்பலுக்கு ஓராயிரம் மாலுமிகள் என்பதைப் போல, மத்தியிலும் மாநிலத்திலும் அதிகாரத்தையும் அமைச்சர்களையும் வைத்திருக்கிற கருணாநிதியால் காவேரிப் பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் மூலம் தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய தீர்ப்பை முழுமையாகப் பெற்றுத் தர முடியவில்லை"

இதற்கு என்ன பொருள்? இறுதித் தீர்ப்பில் தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதை முழுமையாகப் பெற்றுத் தரவில்லை என்று தானே குறை சொல்லியிருக்கிறார். அப்படியானால் அந்த இறுதித் தீர்ப்பு சரியில்லை என்று அவர் சொல்வதாகத்தானே பொருள்? அப்படிப்பட்ட இறுதித் தீர்ப்பைத்தானே அரசிதழில் வெளியிட வேண்டுமென்று இப்போது ஜெயலலிதா கோரிக்கை வைக்கிறார்.

7-2-2007 தேதிய அறிக்கையில், ஜெயலலிதா மேலும் கூறியிருப்பதாவது :-

> "கருணாநிதியின் தொடர் துரோகச் செயலால்தான் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தமிழகத்திற்கு இன்று பாதகமாக வந்துள்ளது. இதற்கு தார்மீகப் பொறுப்பேற்று "மைனாரிட்டி" தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்".

தமிழகத்திற்குப் பாதகமாக இறுதித் தீர்ப்பு வந்துள்ளது என்று 7-2-2007 அன்று அறிக்கை வெளியிட்ட ஜெயலலிதா, தற்போது ; அப்படி ஒரு அறிக்கையையே வெளியிடாததைப் போல, நான் ஏதோ எனது கடிதத்தில் கற்பனையாகச் சொல்லியுள்ளதைப் போல எழுதுகிறார் என்றால், எது உண்மை, எது பொய் என்பது தெளிவாகிறதா? அல்லவா?

மேலும் ஜெயலலிதா 7-2-2007இல் வெளியிட்ட அறிக்கையில், "நடுவர் மன்றத்தின் இந்த இறுதித் தீர்ப்பை, தான் வரவேற்பதாகவும், இதனால் மகிழ்ச்சி அடைவதாகவும் தமிழக முதலமைச்சர் கருணாநிதி கூறியிருக்கிறார். ஆனால் உண்மையில் இது வரவேற்கத்தக்க தீர்ப்பு அல்ல" என்று கூறி, அது அவர்கள் பத்திரிகையிலேயே வெளிவந்துள்ளது. அந்தப் பத்திரிகை என் கைவசமும் உள்ளது. எங்கேயும் அதைக் காட்டுவதற்கு நான் தயார்.

இவ்வாறு இறுதித் தீர்ப்பை வரவேற்கத்தக்க தீர்ப்பு அல்ல என்று கூறிய ஜெயலலிதா, தற்போது அதே தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்று பிரதமருக்குக் கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதுகிறார் என்று நான் எழுதியிருந்தேன். அதைத்தான் தவறு என்று இன்றையதினம் ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இவ்வாறு 7ஆம் தேதி அறிக்கையில் ஜெயலலிதா ; "இறுதித் தீர்ப்பு வரவேற்கத் தக்கது அல்ல" என்றும், "ஏற்கத் தக்கது அல்ல" என்றும் தெரிவித்த போதிலும், அப்போது தி.மு. கழக அரசில் 19-2-2007 அன்றும், 15-4-2007 அன்றும் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அ.தி.மு.க. கலந்து கொண்டது. ஆனால் தற்போது குறுவை முழுவது மாகப் பாழாகி, சம்பாவும் என்னவாகுமோ என்று டெல்டா விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், கர்நாடக அரசு உச்சநீதிமன்றமும், காவேரி நதி நீர் ஆணையமும் தமிழகத்திற்கு நீர் வழங்குமாறு கூறிய பிறகும், அதனைக் கர்நாடக அரசு அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டங்களை அடிக்கடி கூட்டி அவர்களின் ஒப்புத லோடு தமிழகத்திற்கு நீரே வழங்க மறுத்துள்ள நிலையிலே, தமிழகத்திலே உள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகள் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று சொல்லிய பிறகும், அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளாமல், தன்னிச்சையாக அனைத்துக் கட்சித் தலைவர்களின்

கூட்டத்தையே கூட்ட மறுத்து, தான் எடுத்ததே முடிவு என்ற தன்மையோடு செயல்படுகின்ற ஜெயலலிதா ; நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வந்த நேரத்தில் தி.மு. கழக அரசு இரண்டு முறை அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, தீர்மானம் நிறைவேற்றி, அந்த அடிப்படையிலே செயல்பட்டதைக் கண்டிப்பதற்கு ஏதாவது தகுதி இருக்கிறதா என்பதையும் தமிழ்நாட்டு மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பு 5-2-2007 அன்று வெளிவந்தது. 19-2-2007 அன்று பதினைந்து நாட்களுக்குள் கழக அரசு அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி அனைவரின் கருத்துக்களையும் கேட்டு ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் அதற்கே அப்போது ஜெயலலிதா 21-2-2007 அன்று விடுத்த அறிக்கையில் தீர்ப்பு வந்து பதினைந்து நாட்கள் கழித்துத்தான் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியதாகக் குறைபட்டுக் கொண்டார். ஆனால் இப்போது என்ன நிலை?

நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளிவந்தவுடன் அவசர அவசரமாக ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில், இறுதித் தீர்ப்பு வரவேற்கத் தக்கது அல்ல என்று கூறிய போதிலும், அதன் பின்னர் அந்த இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டுமென்று பலமுறை அவர்களுடைய அறிக்கைகள் வாயிலாகவும், பிரதமருக்குக் கடிதங்கள் வாயிலாகவும் தெரிவித்தார்கள் என்பதை நான் மறுக்கவில்லை.

மேலும் ஜெயலலிதா அப்போது விடுத்த அறிக்கையில், நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மகிழ்ச்சி தருகிறது என்று நான் சொன்னதாகவும், நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பைவிட இறுதித் தீர்ப்பில் தண்ணீரின் அளவு குறைவாகக் கிடைத்துள்ளது என்றும் கூறியிருந்தார். இதற்கு அப்போதே 8-2-2007 அன்று நான் அளித்த பதிலில், “காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு குறித்து ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கை முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. “ஆறுதல் தருகிறது” என்று நான் சொன்னதை “மகிழ்ச்சி தருகிறது” என்பதாக அர்த்தப்படுத்திக் கொண்டு அம்மையார் அறிக்கை விட்டது மாத்திரமல்லாமல், நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை விட தண்ணீர் அளவு குறைவாக இறுதித் தீர்ப்பில் கிடைத்துள்ளது என்கிறார்

ஜெயலலிதா. இடைக் காலத் தீர்ப்பு 205 டி.எம்.சி. இறுதித் தீர்ப்பு 210 டி.எம்.சி. இது எப்படி இடைக்காலத் தீர்ப்பை விட இறுதித் தீர்ப்பிலே குறைந்து விட்டது என்று பொருள் ஆகும்?" என்று தெளிவுபடுத்தியிருந்தேன்.

19-2-2007 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அ.தி.மு.க. சார்பில் கலந்து கொண்டவர்கள் அப்போது நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை ஏற்றுக் கொண்டார்களா என்றால், "நடுவர் மன்றம் அத்துமீறி கர்நாடகத்தில் கட்டப்பட்ட ஆயக் கட்டுகளை அங்கீகரிக்கும் அளவில் உத்தரவினைத் தந்துள்ளது, இது விவாதத்திற்குரிய, கண்டிப்பாக எதிர்த்தே தீர வேண்டிய ஒரு விஷயமாகும். தவறு களுக்கு அங்கீகாரம் அளிக்கும் விதமாக நடுவர் மன்றத்தின் தீர்ப்பு அமைந்துள்ளது" என்றுதான் சொன்னார்கள். (நமது எம்.ஜி.ஆர். நாளிதழின் 20-2-2007 தேதியில் 4வது பக்கத்தில் இது வெளிவந்துள்ளது.) "நடுவர் மன்றத் தீர்ப்பில் தமிழகத்திற்குப் பாதகமான அம்சங்கள்" என்றே தலைப்பிட்டு அப்போது அந்தப் பத்திரிகையில் செய்திகள் வெளிவந்தன. அப்படிப் பாதகமான அம்சங்கள் அடங்கிய நடுவர் மன்றத் தீர்ப்பைத் தான் தற்போது அரசிதழில் வெளியிட வேண்டுமென்று ஜெயலலிதா வலியுறுத்துகிறார்.

அடுத்து ஜெயலலிதா தி.மு. கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்து நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை உடனடியாக வெளியிட வேண்டுமென்று 17-12-2012 அன்று கேட்டுக்கொண்டதைப் பற்றி, மிகவும் அநாகரிகமாக, அவர்கள் இறுதித் தீர்ப்பினை அரசிதழில் வெளியிட வேண்டுமென்று உண்மையிலேயே வலியுறுத்தினார்களா அல்லது கேட்பது போல ஒரு கபட நாடகமாடி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளியிடப்படுவதற்கு முட்டுக்கட்டை போட்டனரா என்பது புரியாத புதிராக இருக்கிறது என்று இன்றைய அறிக்கையில் சாடியிருக்கிறார். இது கழக நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரமல்ல, பிரதமர் அலுவலகத்திற்கே களங்கத்தை ஏற்படுத்துவது போல உள்ளது.

கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்த அதே 17-12-2012 அன்று நான் அனைத்து நாளேடுகளுக்கும் விடுத்த அறிக்கையிலேயே நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை

மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்று வெளிப்படையாக வேண்டுகோள் விடுத்ததோடு, அந்த வேண்டுகோள் பற்றி உடனடியாகக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரைச் சந்தித்து முறையிடுவார்கள் என்றும் தெரிவித்ததோடு, உடனடியாக டெல்லியில் உள்ள கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலுவைத் தொடர்பு கொண்டு, பிரதமரைச் சந்தித்து வேண்டுகோள் விடுக்கக் கேட்டுக்கொண்டு, அவர்களும் அவ்வாறே அன்றைய தினமே பிரதமரைச் சந்தித்து வேண்டுகோள் விடுத்து, அதனைப் பிரதமர் அவர்களும் கேட்டு, உடனடியாக அது பற்றி கவனிப்பதாக உறுதி அளித்திருக்கிறார். அந்தச் செய்தி 18-12-2012 தேதிய நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது. ஆனால் ஜெயலலிதா அவருக்கே உரிய பாணியில் இதைப் பற்றியும் தவறாகத் தனது அறிக்கையிலே குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

வாதத்திற்கு வாதம் பதில் சொல்லலாம். கபட நாடகமாடிகளின் விதண்டாவாதத்திற்கு என்ன பதில் சொல்வது? தமிழ்நாட்டு மக்கள்தான் புரிந்துகொள்ள வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

31-12-2012

3691. வள்ளுவர் சிலை காத்திட வாய்மைப்போர்!

உடன்பிறப்பே,

நேற்றையதினம் 1-1-2013; ஏன் அதற்கு முதல் நாள் இரவு முழுவதும் நான் தூங்கவே இல்லை ! குமரி முனையில் முக்கடலும் சங்கமிக்கின்ற அலைகடல் பரப்பில் வேறெங்குமில்லாத அளவிற்கு 133 அடி உயரத்தில் கம்பீரமாக எழுந்து நிற்கும் அய்யன் வள்ளுவருடைய சிலை கடந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக - தமிழ் உணர்வே இற்று அற்றுப் போய் விட்ட இந்த ஆட்சியில் - செம்மொழியின் சிறப்பைப் போற்றி மதிக்கத் தெரியாத இந்த ஆட்சியில் - பராமரிப்பின்றி, கடல் காற்றின் உப்புத் தன்மை காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேதமடைந்து வருவதாகவும், தமிழ் உணர்வு மிகுந்தோர் - வள்ளுவரின் வாய்மொழியில் மனம் பறி கொடுத்தோர் என அன்றாடம் சுமார் நான்காயிரம் பேர், படகில் சென்று அய்யன் வள்ளுவரின் சிலை அற்புதத்தைக் கண்டு, ஆச்சரியப்பட்டு மகிழ்ந்து வருவதாகவும், பார்வையாளர்கள் கட்டணம் மூலமாகவே ஆண்டுக்கு அறுபது இலட்சம் ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைக்கிறது என்றும், அந்த நிலையிலே கூட அந்தச் சிலையை அரசாங்கம் கவனிக்க மனமிரங்கவில்லை என்றும், அரசு ஆதரவுப் பத்திரிகையான "தினமணி"யிலேயே அரைப் பக்க அளவிற்குப் பெரிதாகச் செய்தி வந்திருந்தது. "தினமணி"யைப் பொறுத்த வரை, அந்தப் பத்திரிகையிலே வெளிவருகின்ற "மக்கள் கருத்து" ஆனாலும், "தலையங்கம்" ஆனாலும், "கேலிச் சித்திரம்" ஆனாலும்; திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அதன் தலைமைப் பொறுப்பிலே இருக்கும் என்னையும் தாக்கிவரக் கூடியவைகளாக இருந்த போதிலும், அதன் ஆசிரியர் வைத்திய நாதனைப் பொறுத்தவரை நான் எப்போதும் அவருடைய தமிழ் ஆர்வத்தை குறைத்து மதிப்பிடுபவனல்ல. தமிழ் மொழியின் தாக்கத்தால் திரு. வைத்தியநாதன் அவர்களே மனம் வெதும்பி அந்தச் செய்தியினை வெளி யிட்டுள்ளார்.

இதே "தினமணி"யில் 4-1-2000 அன்று ஒரு தலையங்கம் எழுதப்பட்டிருந்தது. ஆம், அய்யன் வள்ளுவரின் சிலை திறப்பு

விழா முடிந்த நேரத்தில் வெளிவந்த தலையங்கம் அது. அதனையும் இப்போது தவறாமல் நினைவு கூர்ந்திட விரும்புகிறேன். அதில், -

> "குமரி முனையில் நடைபெற்ற இவ்விழாவில் உலகெங்கும் வாழ்ந்து வரும் தமிழ்ச் சமூகங்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டிருக்கிறார்கள். முதல்வர் கருணாநிதி முன்னின்று எடுத்த இவ்விழா சர்வ கட்சி விழாவாகவே நடைபெற்றிருக்கிறது. சென்னையில் தனித்த வடிவத்தில் வள்ளுவர்கோட்டத்தை எழுப்பிய கருணாநிதியே - திருவள்ளுவர் சிலையையும் திட்டமிட்டு எடுத்திருக் கிறார். இச்சிலை கணபதி ஸ்தபதியின் கைவண்ணத்துக்கு மட்டுமின்றி, முதல்வர் கருணாநிதியின் தமிழ் உள்ளத்துக்கும் நிலைத்த சான்றாக விளங்கக் கூடியது!"

என்று எழுதியிருந்ததை மறந்திடக் கூடுமோ?

மழை மற்றும் உப்புக் காற்றினால் அய்யன் வள்ளுவரின் சிலை பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமேயானால், அவ்வப்போது இரசாயனக் கலவை பூசப்பட வேண்டும். தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் சுமார் 65 லட்ச ரூபாய்க்கு மேல் செலவு செய்து ரசாயனக் கலவை பூசப்பட்டது. 2011ஆம் ஆண்டு ஆட்சி மாறிய பிறகு இந்த ஒன்றரை ஆண்டுக் காலமாக மிகவும் அவசியமான அந்த ரசாயனக் கலவை பூசப்படாமல், சிலை சேதமடைந்து வருவதாக அந்தச் செய்தியிலே குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தியைப் படித்த பிறகுதான் - அது என் மனதில் பெரும் பாரமாக இறங்கி வருத்தப்படச் செய்தது. அதன் விளைவாக நேற்றையதினம் என்னிடம் வாழ்த்துப் பெற வந்த உரிமையோடு கூடிய ஒரு சிலரிடம் நான் சிரித்துப் பேச முடியாத சூழ்நிலை உருவாயிற்று. ஏனென்றால் குமரி முனையிலே உள்ள அந்த அய்யன் வள்ளுவர் சிலைக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு.

1989ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தேர்தலில் வென்று நமது கழக அரசு பதவியேற்றது. 17.3.1990 அன்று நிதிநிலை அறிக்கையைச் சட்டமன்றப் பேரவையில் வைத்தபோது, கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தில் நிறுவப்படும் என்று அறிவித்தேன். அதன்படி, கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு 133 அடி சிலை அமைக்கும் பணியைத்

திரு.கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்க முடிவு செய்து ஆணை வழங்கப்பட்டது. 6.9.1990 அன்று கன்னியாகுமரியில் சிலை வடிக்கும் பணியை உளி எடுத்துச் செதுக்கி நான் தொடங்கிவைத்தேன்.

வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், உலகில் வியப்புக்குரியதுமான 133 அடி உயரம் உள்ள திருவள்ளுவர் சிலை திறக்கின்ற விழா நிகழ்ச்சியினை, கன்னியாகுமரியில், 1999ஆம் ஆண்டு, டிசம்பர்த் திங்கள், 31ஆம் நாள் - மற்றும் 2000ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1ஆம் நாள் ஆகிய இரு நாட்களிலும், தமிழக அரசின் சார்பில், மிகச் சிறப்பாக நடத்துவதென்றும், அந்த விழா நிகழ்ச்சியின்போது பல்வேறு நாடுகளிலே உள்ள தமிழறிஞர்களை எல்லாம் அழைத்துச் சிறப்பு செய்வது என்றும் கழக அமைச்சரவையில் முடிவெடுத்து அறிவிக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் நாளன்று, திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தொடங்கின. காலை முதல் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று, விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சிலை திறக்கும் விழா மாலை 4.30 மணி அளவில் தொடங்கியது. கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். சீர்காழி சிவசிதம்பரம், டி.கே.எஸ். கலைவாணன் ஆகியோர் தங்களது வெண் கலக் குரலில் தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடினர். செய்தித் துறை அமைச்சராக இருந்த வ. முல்லை வேந்தன் வரவேற்புரையாற்றினார்.

குமரிமுனை விழா அரங்கத்தில் குவிந்திருந்த இலட்சக்கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களின் விண்ணதிரும் வாழ்த்துக்களுடன் வான்முட்டும் திருவள்ளுவர் சிலையினை நான் திறந்து வைத்தேன். விழாவினை நேரில் கண்ணுற்றோர் வாழ்வில் பெரும் பேறு பெற்றோம் என்று பெருமிதம் கொள்ளும் அளவிற்கு எழுச்சிக் கோலம் பூண்டிருந்தது ஏற்றமிகு அந்த விழா.

வழக்கமாகக் கதைகளிலும், புராணங்களிலும் வரம் பெறுவோர் எல்லாம் தம்மை வலுப்படுத்திக் கொண்டு, தமது ஆதிக்கத்தை அகல விரிப்பதிலேயே வாழும் நாள் வரை அக்கறை செலுத்துவர். ஆனால் எனக்கோ, கிடைத்த வரம், என் அய்யன் திருவள்ளுவனைச் சிலையாகக் கண்டிட - அதுவும் அவர் குறளில்

எத்தனை அதிகாரம் இயற்றினாரோ - அத்தனை உயரம் - அதாவது 133 அதிகாரங்களைக் குறிக்கும் 133 அடி உயரச் சிலையை - இந்தியப் பூபாகத்தில் வட இமயத்துக்கு நிகராகத் திகழும் சூழும் தென் கடல் ஆடும் குமரியில் நிறுவிட வேண்டும் என்ற வரமல்லவா?

அந்தச் சிலை திறப்பதற்கான பொத்தானை அழுத்தியபோது, என் விரல் என்னை அறியாமல் அசைவற்றுப் போனது மட்டுமல்ல - என்னையே நான் மறந்துவிட்டேன். இளமைப் பருவ முதல் எந்தவொரு தத்துவ வித்தகனை இமைப் பொழுதும் மறவாமல் - எழுத்தில், பேச்சில், குருதி இயக்கத்தில் நினைவுபடுத்திக் கொண்டே இருந்தேனோ - யாருக்கு வரலாறு போற்றும் வள்ளுவர் கோட்டம் ஒன்றைத் தலைநகராம் சென்னையில் அமைத்தேனோ - யாருக்காக ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்கு மறுநாள் வள்ளுவர் திருநாள் என அறிவித்தேனோ - பேருந்துகளிலும், பயணியர் விடுதிகளிலும், ஒழுக்கம் போதிக்கும் குறளை எந்த ஒளிமிகு ஏந்தலுக்காக எழுதச் செய்து உருவப்படத்துடன் அமைத்தேனோ - யாருடைய குறளுக்குக் குறளோவியம் தீட்டி - பின்னர் 1330 குறளுக்கும் உரையும் எழுதினேனோ - அந்த அய்யன் திருவள்ளுவருக்கு இருபத்தி ஐந்து ஆண்டு காலப் பெரு மூச்சுக்குப் பிறகு சிலை அமைந்தது - அதைத் திறந்து வைக்க எனக்கு ஆயுளும் இருந்தது என்கிறபோது என் மன நிலையை வர்ணித்திட தமிழ்த்தாய், தன்னிடமும் சொற்களுக்குப் பஞ்சமென்று சொல்லி விட்டாளே, நான் என்ன செய்ய!

அய்யன் வள்ளுவரின் சிலை திறப்பு விழாவில், பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் - அருமை நண்பர் ஜி.கே. மூப்பனார், இல.கணேசன், என். சங்கரய்யா, வைகோ, வாழப்பாடி ராமமூர்த்தி, ஆர். நல்லக்கண்ணு, எஸ். திருநாவுக்கரசு, ஆர்.எம். வீரப்பன், குமரி அனந்தன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மற்றும் தமிழறிஞர்கள், மலேசிய அமைச்சராக இருந்த டத்தோ ஸ்ரீசாமிவேலு, இலங்கை அமைச்சர் ஆறுமுகம் தொண்டைமான், மொரீசியஸ் அமைச்சர் இராமசாமி சிதம்பரம் பிள்ளை , சிங்கப்பூர் வை. திருநாவுக்கரசு, ஸ்காட்லாந்து ஆர்.ஈ. ஆஷர், ஜெர்மனியைச் சேர்ந்த முனைவர் தாமஸ் மால்டன், பேராயர் முனைவர் ஆரோக்கியசாமி, பேரூர் சாந்தலிங்க அடிகளார், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், திருமதி இராதா தியாகராஜன், பேராயர்

எஸ்றா சற்குணம், ஆசிரியர் சாவி ஆகியோர் உரையாற்றிப் போற்றிப் பாராட்டினர்.

இந்த அளவிற்கு எனக்குக் கிடைத்த பாராட்டைத் தாங்கிக் கொள்ள முடியுமா? அதனால்தான் அய்யன் வள்ளுவரின் சிலையினை பராமரிக்காமல் இந்தக் கதிக்குள்ளாக்கி இந்த ஆட்சியினர் சீரழித்து வருகிறார்கள். தமிழகத்திலே உள்ள புலவர்களும், சான்றோர்களும், குமரி வாழ் தமிழர்களும் இதற்காக ஓரிரண்டு முறை போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் நடத்தியும் இந்த ஆட்சியினர் அதைப்பற்றிக் காதில் போட்டுக் கொள்ளாமல் காலம் கடத்தி வருகின்றனர்.

நேற்றையதினம் என்னைச் சந்தித்த கழக நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எல்லாம் இதைப் பற்றிக் கூறி நாடாளுமன்றத்திலும் இது குறித்துப் பேசச் சொல்லியிருக்கிறேன். அய்யன் வள்ளுவர் சிலை பராமரிப்புப் பணிக்காக உரிய நிதி ஒதுக்கீடு செய்து பணியை விரைந்து மேற்கொள்ள அ.தி.மு.க. அரசு முன்வராவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலேயே, அந்தப் பணியினை மேற்கொள்ளலாமா அல்லது குமரி மாவட்டத்தில் கழகத்தின் சார்பில் மிகப் பெரிய போராட்டம் ஒன்றினை நடத்தி ஆட்சியாளர்களின் கவனத்தை ஈர்க்கலாமா என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். நேற்றைக்கு என்னைச் சந்திக்க வந்த நம்முடைய கவிப்பேரரசு வைரமுத்து, குமரி மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி சுரேஷ்ராஜன் ஆகியோர் மிகப் பெரிய அளவில் குமரியில் ஒரு கருத்தரங்கம் நடத்தலாம் என்று கூடத் தெரிவித்தார்கள். இதற்கெல்லாம் இடம் அளிக்காமல், தமிழக அரசே முன் வந்து இந்தப் பணியினை மேற்கொள்ளுமா என்றும் அது பற்றி அரசின் சார்பில் அறிவிக்கப்படுகிறதா என்றும் ஒரு சில நாட்கள் பொறுத்திருந்து பார்ப்போம். ஆனால் எப்போதும்போல அ.தி.மு.க. அரசு இதிலும் மௌனமாக இருக்குமேயானால், சிலை பராமரிப்புக்கு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவெடுத்து அறிவிப்போம்! அய்யன் வள்ளுவர் சிலையைக் காத்திட அணி வகுப்போம்! வள்ளுவர் சிலையைக் காத்திட வாய்மைப் போருக்குத் தயாராவோம்!

அன்புள்ள,

மு.க.

03-01-2013

3692. பாலியல் கொடுமைக்கு தனிமைச்சிறையே தக்க தண்டனை!

உடன்பிறப்பே,

தூத்துக்குடியில் மாணவி புனிதா, பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கோரக் கொலை.

அரூர் தாதராவலசை கிராமத்தில் பழங்குடியினப் பெண் மேனகா பாலியல் படுகொலை.

திருப்பத்தூர் அருகே 9 வயது சிறுமி காயத்ரி கற்பழித்துக் கொலை.

விருத்தாசலம் அருகே சுகுணா,

சிதம்பரத்தில் 21 வயதான இளம்பெண் சந்தியா,
தூத்துக்குடியில் மாரியம்மாள் (27) பாலியல் பலாத்காரம்,

நன்னிலம் அருகே விமலா,

கோயம்பேட்டில் இளம் பெண் மலர்

என்று டெல்லியில் ஒரு மாணவிக்கு நடந்த கொடிய நிகழ்ச்சியைப்போல - கடந்த சில நாட்களாக - தமிழகத்தில் பாலியல் பலாத்காரம் பற்றிய செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன.

இவ்வாறு தமிழகத்திலும் தொடர்கதையாகி வரும் பாலியல் வன்முறைச் சம்பவங்களை, உயர் நீதிமன்றம் தாமாகவே முன்வந்து விசாரணை நடத்த வேண்டுமென்று பொது நல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கில், தொடரும் பாலியல் பலாத்காரச் சம்பவங்கள் தொடர்பாக காவல்துறை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து விரிவான விசாரணை நடத்த வேண்டுமென்று கோரப்பட்டிருந்தது. அந்த வழக்கினை விசாரித்த நீதிபதிகள் வெங்கட்ராமன், வாசுகி ஆகியோர் தமிழக அரசு 41-2013க்குள் பதில் அளிக்க வேண்டுமென்று 28-12-2012 அன்று நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள்.

டெல்லியில் மருத்துவக் கல்லூரியில் படித்து வந்த மாணவி பாலியல் வன்முறைக்கு ஆளாகி மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த நான் அதற்காக 30-12-2012 அன்று இரங்கல் செய்தி விடுத்தபோது,

"ஏதோ ஒரு இடத்தில் மாத்திரமன்றி இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் அண்மைக்காலமாக இத்தகைய கொடுமையான பாலியல் வன்முறைக்கு மாணவிகளும் ஏழைப் பெண்களும் ஆளாக்கப்படும் செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய செயல்களில் ஈடுபடும் கொடியவர்களுக்குக் கடுமையான தண்டனை என்பது அவர்களை ஆயுள் முழுவதும் தனிமைச் சிறையில் அடைத்துவைக்க வேண்டும் என்பதுதான். இதுபற்றி மத்திய, மாநில அரசுகள் உறுதியான முடிவு எடுக்க வேண்டும்"

என்று அப்போதே கேட்டுக் கொண்டேன்.

பாலியல் கொடுமை செய்தவர்களுக்குத் தூக்குத் தண்டனைதான் வழங்க வேண்டுமென்று பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கூறிவரும் நிலையில், நான் ஒருவன்தான் இத்தகைய செயல்களில் ஈடுபடும் கொடியவர்களுக்குக் கடுமையான தண்டனை என்பது, அவர்களை ஆயுள் முழுவதும் தனிமைச் சிறையில் அடைத்து வைக்க வேண்டும்; அதைப் பற்றி மத்திய, மாநில அரசுகள் உறுதியான முடிவெடுக்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருந்தேன். நான் இப்படிச் சொன்னால் அம்மையார் ஏற்றுக் கொள்வாரா? உடனே பாலியல் குற்றவாளிகளைக் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டுமென்கிறார். அந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்தால் ஓராண்டுக் காலத்தில் அந்தக் குற்றவாளிகள் வெளியே வந்து விடுவார்கள். வெளியே வந்து மீண்டும் பாலியல் குற்றம் புரிய மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. சமூக சிந்தனையாளர்கள், சட்ட வல்லுநர்கள் ஆகியோரைப் போலவே தூக்குத் தண்டனை என்பதை நானும் எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை. அதனால்தான் இந்தக் குற்றத்திற்கு ஏற்ற தண்டனையாக "ஆயுள் முழுவதும் தனிமைச் சிறையிலே அடைக்க வேண்டும்" என்பதை என் கருத்தாகத் தெரிவித்தேன். இந்தக்

கருத்து பற்றி மாநில அரசு சீர்தூக்கிப் பார்க்க மறுத்துவிட்டாலும், மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையில் இந்த பாலியல் வழக்குகளில் நடவடிக்கை எடுப்பது என்பது, காவல் நிலையத்தில் பெயருக்கு ஒரு வழக்குப் பதிவு என்ற அளவிலேதான் உள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் புனிதா என்ற 13 வயது ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவி கற்பழிக்கப்பட்டு கொலையும் செய்யப்பட்ட வழக்கில் தி.மு.கழகம் கண்டன அறப் போராட்டம் அறிவித்து, அதனை நடத்தி, கழகத்தின் சார்பில் இரண்டு இலட்ச ரூபாய் நிதியினையும், மாவட்டக் கழகச் செயலாளர் பெரியசாமி ஐம்பதாயிரம் ரூபாய் நிதியினையும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயதுரை ஒரு லட்ச ரூபாய் நிதியினையும் மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி நேரில் சென்று அளித்து, அந்தப் பெண்ணின் தாயாருக்கு ஆறுதல் கூறிய பிறகு, தமிழக அரசாங்கம் விழித்துக் கொண்டு யாரோ ஒரு அமைச்சரை அனுப்பிவைத்தது. ஆனால் அந்த ஒரு சம்பவத்தைத் தவிர்த்து மற்ற பாலியல் பலாத்காரம் குறித்த நிகழ்ச்சிகளில் தமிழக அரசு வழக்கு பதிவு செய்ததைத் தவிர வேறு எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

ஓசூரில் 18-12-2012 அன்று பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பழங்குடியினச் சிறுமி மேனகாவின் குடும்பத்திற்கு பத்து இலட்சம் ரூபாய் நிவாரணம் அளிக்க வேண்டுமென்று சி.பி.எம். கட்சியின் சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை தரப்பட்டுள்ளது. இதைப் போலவே தமிழகத்திலே பாலியல் கொடுமைக்கு ஆளான குடும்பங்கள் அனைத்துக்கும் தமிழக அரசின் சார்பில் விரைவில் உரிய நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். அதையெல்லாம் விட்டு விட்டு 13 அம்சத் திட்டத்தை ஏட்டளவில் அறிவித்தால், அதற்கு ஒரு சிலரின் வரவேற்பு அறிக்கைகள்தான் ஏடுகளில் வெளி வருமே தவிர, உண்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணங்களாகவோ பாலியல் கொடுமைகள் நடந்துவிடாமல் தடுக்கவோ அவை பயன்படுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

1-1-2013 அன்று ஜெயலலிதா கொடநாடு புறப்பட்டுச் சென்ற பிறகு, அவர் பெயரால் ஒரு நீண்ட அறிவிப்பு வந்துள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்களை ஒடுக்கிட 13 அம்சத் திட்டம்

என்ற பெயரால் வெளியாகியுள்ள அந்த அறிவிப்புக்கு எப்போதும் போல பாராட்டுகள் - விளம்பரங்கள்! கடந்த சில நாட்களில் நடை பெற்ற பாலியல் பலாத்காரங்கள் - கொலைகள் பற்றி இந்த கடிதத்தின் தொடக்கத்தில் நான் பட்டியல் இட்டுள்ளேன். இந்த இலட்சணத்தில் அம்மையார் பாலியல் பலாத்காரம் இல்லாத மாநிலமாக தமிழகத்தை ஆக்கப் போகிறார்களாம்! நிறை வேற்றப்படாத பல உறுதிமொழிகளின் பட்டியலில் இதையும் இணைத்துக் கொள்ளலாம்.

முதலமைச்சர் அறிவித்துள்ள 13 அம்சத் திட்டங்களில் முதல் மூன்று திட்டங்கள் பாலியல் வன்முறை வழக்குகளை - இனி நடப்பவை, மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகளை - யார் விசாரித்து நடவடிக்கை மேற்கொள்வது என்பது பற்றிய நிர்வாக அறிவிப்புகளாகும். நான்காவது அம்சம்தான் "குண்டர் தடுப்புச் சட்டம்" - ஏற்கனவே இந்த ஆட்சியில் இந்தச் சட்டம் படாதபாடு பட்டுக் கொண்டிருக்கின்றது. தங்களுக்குப் பிடிக்காதவர்கள்-எதிர்க்கட்சியினர் மீதெல்லாம் இந்தச் சட்டத்தைப் பிரயோகித்து, கைது செய்து, சிறையில் போட்டு வாட்டி வதைத்து - அவர்கள் எல்லாம் நீதி மன்றங்களின் மூலமாக நியாயம் பெற்று வருகிறார்கள். இந்த நிலையில் பாலியல் பலாத்காரம் என்ற பெயரால் இதற்கும் குண்டர் தடுப்புச் சட்டத்தைத் திருத்தி அமைத்து, தங்களுக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் கொடும்பழி தீர்க்க இந்தப் பிரிவினைப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறார்கள்.

இந்தக் குண்டர் சட்டம் நம்முடைய முதலமைச்சரிடம் சிக்கிக் கொண்டு படாதபாடு படுகிறது. எதற்கெடுத்தாலும் தமிழகத்தில் குண்டர் சட்டம்தான். முன்பு ஆட்சிக்கு வந்தபோது "பொடா" சட்டத்தைக் கையிலே வைத்துக் கொண்டு தன்னை எதிர்ப்பவர்களையெல்லாம் பிடித்து ஆறு மாதம், ஒன்பது மாதம் சிறையிலே பூட்டி மகிழ்ந்தார். அப்போது சிறையில் இருந்தவர்கள் எல்லாம் தற்போது அதை நினைத்துக் கொண்டு, "அம்மா"வைப் புகழ்வதிலே பாவ விமோசனம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி குற்றத்திற்கு மேல் குற்றம் செய்பவர்களின் மீதுதான் - குற்றம் புரிவதையே பழக்கமாகக் கொண்டிருப்பவர் மீது தான் பொதுவாக குண்டர் சட்டம் பயன்படுத்தப்பட்டு வந்தது. அதை மாற்றும் வகையில் சில நாட்களுக்கு முன்பு பொது அமைதியைக் குலைக்கும் வகையில் ஏதோ ஒரு குற்றச் செயலை முதல் முறை

செய்தாலே குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படலாம் என்றும், "சைபர்" குற்றங்களைப் புரிவோரும் குண்டர் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவார்கள் என்றும் அதற்கேற்றவாறு சட்டத்திலே திருத்தம் கொண்டு வரப்போவ தாகவும் அறிவித்தார். அந்தச் சட்டத் திருத்தமே இன்னும் கொண்டு வரப்படவில்லை. அதற்குள் பாலியல் வன்கொடுமை புரிந்தவர்கள் மீதும் குண்டர் சட்டத்தைப் பாய்ச்சலாம் என்று கூறியிருக்கிறார். இப்படியெல்லாம் ஒவ்வொன்றுக்கும் குண்டர் சட்டம் என்பதற்குப் பதிலாக, நமது முதலமைச்சருக்கு யார் யாரைப் பிடிக்காதோ அவர்கள் மீதெல்லாம் பொத்தாம்பொதுவில் குண்டர் சட்டத்தைப் பிரயோகப்படுத்த ஒரு திருத்தம் கொண்டு வரலாமா என்று யோசிக்கலாம் அல்லவா? அப்படியே முடிவெடுத் தாலும், அதையும் வரவேற்று அறிக்கை வெளியிடவும், பத்திரிகை களில் பெரிதாக விளம்பரப்படுத்தி செய்திகள் வெளியிடவும் தமிழகத்தில் சிலர் தயாராகவே இருக்கிறார்கள்.

இந்தக் கருத்தினை நான் தெரிவிக்க வில்லை. "கல்கி" வார இதழில் "ப்ரியன்" என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையில் தமிழகத்தில் குண்டர் சட்டம் பற்றி எழுதியிருக்கிறார். "முதல்வரின் இந்த அறிவிப்பு நீதிமன்ற வட்டாரங்களில் பரபரப்பைக் கிளப்பி இருக்கிறது. இப்போதே குண்டர் சட்டம் அரசியல் பழி வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே இந்தத் திருத்தம் கொண்டு வருவதற்கு முன் தீவிர ஆலோசனை நடத்த வேண்டும்" என்கிறார் சென்னை உயர் நீதி மன்ற வழக்கறிஞர் பாலு - என்று "கல்கி" கட்டுரை கூறுகிறது. அந்தக் கட்டுரை மேலும் கூறுகிறது.....

"குண்டர் சட்டம் 1982ஆம் வருடம் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலிருந்து நடை முறையில் இருந்து வருகிறது. அடிப்படையாக கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், கஞ்சா விற்பவர்கள், தடைசெய்யப்பட்ட லாட்டரி டிக்கெட் விற்பவர்கள், பொது இடங்களில் அமைதியைக் குலைப்பவர்கள் என்று பல குற்றச்செயல்களை ஒருவர் தொடர்ந்து செய்தால் அந்த நபரை குண்டர்கள் சட்டத்தில் ஒரு வருடம் வரை ஜாமீன் பெற்று வெளியே வர இடம் கொடுக்காமல் கைது செய்து சிறையில் அடைக்க வழி செய்கிறது இந்தச் சட்டம். ஆனால் நடைமுறையில் என்ன நடக்கிறது? ஆளும் அரசியல்வாதிகள், காவல் துறை

அதிகாரிகள் ஆகியோரின் விருப்பு, வெறுப்புக்கேற்ப இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது" என்று "கல்கி" எழுதியுள்ளது.

பாலியல் வன்முறை வழக்குகளை விசாரிக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் மகளிர் விரைவு நீதி மன்றங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப் போகிறார்களாம். இது முதலமைச்சரின் அறிவிப்பில் ஒரு அம்சம். பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மருத்துவச் சிகிச்சைக்கான செலவை ஏற்பதும் ஒரு திட்டமாகும். இந்த ஆட்சியில் இதுவரை பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மருத்துவச் சிகிச்சைக்கான செலவை ஏற்பதோடு, அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கவும் முன் வர வேண்டும்.

ஏதோ அன்றாடம் வெளிவரும் பத்திரிகைகளைப்போல, அன்றாடம் அறிவிக்கின்ற அறிவிப்புகளில் ஒன்றாக இந்த 13 அம்சத் திட்டங்களும் ஆகிவிடாமல், பாலியல் கொடுமையால் பாதிக்கப்பட்ட மகளிருக்கு உண்மையாகவே உரிய முறையில் உதவிடவும், பாலியல் நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்திடவும் இந்த அரசு முன் வர வேண்டும். இந்த அரசு எவ்வாறு செயல்படுகிறது என்பதை மேலும் சில நாட்கள் பொறுத்திருந்து பார்ப்போம்! சட்டத்தை மதிக்காததும், நீதி பரிபாலன முறைகளுக்கு உரிய மரியாதை வழங்காததும், சட்ட விதிமுறைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டு, சட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்வதில், தனித் திறமை காட்டுவதும், அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் கடந்தகாலப் பின்னணி என்பதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது; பாலியல் குற்றம் தொடர்பான அறிவிப்புகளை எந்தவிதம் நடைமுறைப்படுத்தப் போகிறார்கள் என்ற சந்தேகம் யாருக்கும் எழுவது இயற்கைதானே?

அன்புள்ள,

மு.க.

06-01-2013

3693. மத்திய அரசு தலையிட வேண்டும்; உடனடியாக!

உடன்பிறப்பே,

சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழை வழக்காடும் மொழியாகப் பயன்படுத்த அங்கீகாரம் வழங்கும்படி தமிழக ஆளுநரிடம் வழக் கறிஞர்கள் எல்லாம் சென்று மனு கொடுத்துள்ளார்கள். தி.மு.கழக ஆட்சி நடைபெற்றபோது, 22-11-2006 அன்று என்னைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடம்,

"சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும், இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. அரசியல் சாசனச் சட்டப்பிரிவு 348ல் உயர் நீதிமன்றத்திலும் மற்றும் உச்ச நீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் நடத்தப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி ஆங்கில மொழியே சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எனினும், அரசியல் சாசனச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு (2)இல் மாநில மொழியில் உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் நடைபெற வேண்டுமென்று குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று மாநில அரசு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள அரசியல் சாசனச் சட்டப்பிரிவைப் பயன்படுத்திச் சென்னை உயர் நீதிமன்றத்தில் அனைத்து நடவடிக்கைகளிலும் வழக்கு மொழியாகத் தாய்மொழி தமிழை அறிமுகப்படுத்திடத் தமிழக அரசு முடிவெடுத்துள்ளது" என்று அறிவித்தேன்.

இந்த என் அறிவிப்பு தமிழக அரசின் செய்திக் குறிப்பாகவும் வெளியிடப்பட்டது. தமிழக அரசின் அறிவிப்புக்கு உயர் நீதிமன்றமும், வழக்கறிஞர்கள் சங்கமும் வரவேற்புத் தெரிவித்தது.

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் இந்த முடிவினை ஆதரித்ததோடு, அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்ற வழிமுறைகளையும் அவரே தெரிவித்திருந்தார். நான் அதற்கு நன்றி தெரிவித்துக் கடிதமும் அவருக்கு அப்போதே எழுதினேன்.

இந்திய அரசியல் சட்டம் வழங்கியுள்ள சலுகையைப் பயன்படுத்தி, குடியரசுத் தலைவரின் அனுமதி பெற்று, உத்திரப்பிரதேச உயர் நீதிமன்ற வழக்கு மொழியாக இந்தி மொழி இருந்து வருகிறது.

அந்த அறிவிப்பு வந்தவுடன் "அன்றைய" டாக்டர் ராமதாஸ் "எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலைப்பாட்டைக் கலைஞரை விட்டால் வேறு யார் நிறைவேற்ற முடியும்? அதன் தொடக்கத்தை அவர் ஆரம்பித்துவிட்டார்" என்று அறிக்கை விடுத்தார்.

உயர்நீதிமன்றத்திலே உள்ள வழக்கறிஞர்களின் தமிழ் மன்றத்தின் சார்பில் 2001ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இதே பிரச்சினைக்காக ஒரு ரிட் மனு தாக்கல் செய்தார்கள். ஆனால் அப்போது அதனை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. அப்போது என்ன காரணம் சொன்னார்கள் என்றால், "இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், பிரிவு 348(2)இன் கீழ் ஆணை பிறப்பிக்கக் கூடிய அதிகாரம் ஆளுநருக்கு மட்டும் தான் உள்ளது, எனவே அவர் ஆணை பிறப்பிக்க வேண்டுமே தவிர, நீதிமன்றத்தில் வாதாடிப் பயனில்லை" என்று கூறினார்கள். அப்போது ஆட்சியிலே அ.தி.மு.க. இருந்தது எனினும், தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

22-11-2006 அன்று நான் செய்த அறிவிப்பினைத் தொடர்ந்து, 6-12-2006 அன்று உயர் நீதிமன்றத்தில் தமிழ் வழக்கு மொழி என்ற அரசினர் தீர்மானத்தை நானே தமிழகச் சட்டப்பேரவையில் முன் மொழிந்தேன். அந்தத் தீர்மானம், நிகழ்ச்சி நிரலில் கடைசியாகத்தான் இடம்பெற்றிருந்தது. ஆனால் அன்றைய தினம் பிற்பகலில் பிரதான எதிர்க்கட்சிக்காரர்களான அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்கள் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். சிலை திறக்கின்ற விழாவிற்கு டெல்லிக்குத் தனி விமானத்தில், செல்லவிருந்ததால், முற்பகலிலேயே தமிழ் மொழி பற்றிய முக்கியமான தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டால், அவர்களும் அவையிலே இருந்து இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க

வாய்ப்பு ஏற்படும் என்று நானும் அவை முன்னவராக இருந்த பேராசிரியரும் கலந்து பேசி, அதற்காகவே நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்து, தீர்மானத்தை முன்னதாகவே எடுத்து விவாதித்தோம்.

நாங்கள் அவ்வாறு செயல்பட்ட போதிலும், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் கலந்துகொள்ளக் கூடாது என்று கருதியோ என்னவோ, அ.தி.மு.க.வும், அதன் தோழமைக் கட்சியாக அப்போது இருந்த ம.தி.மு.க.வும் அவையிலேயும் இல்லை, விவாதத்திலும் கலந்து கொள்ளவும் இல்லை. அவர்கள் இல்லாவிட்டாலும், அந்த முக்கியமான தீர்மானம் விவாதிக்கப்பட்டபோது, காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஈ.எஸ்.எஸ். ராமனும், பா.ம.க. சார்பில் கோ.க. மணியும், தி.மு.க. சார்பில் ராஜகண்ணப்பனும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கு.செல்வமும் கலந்துகொண்டு பேசினார்கள்.

கழக ஆட்சியில் 6-12-2006 அன்று நிறைவேற்றப்பட்ட வரலாற்றுச் சிறப்புக்குரிய அந்தத் தீர்மானத்தின் வாசகங்கள் வருமாறு :-

"சென்னை உயர்நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்துவருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 348 (1) ஆவது பிரிவின்படி உயர் நீதிமன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் இருந்திட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. எனினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப்பிரிவு 7இன்படி, உயர்நீதிமன்ற நடவடிக் கைகள் அனைத்தையும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, மாநில ஆட்சி மொழியிலேயே நடத்த மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் தமிழிலேயே அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில், அரசமைப்புச் சட்டப்பிரிவு 348 உட் பிரிவு (2) உடன் இணைந்த 1963ஆம் ஆண்டு

ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7ன்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் நமது மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இம்முடிவினைச் செயற்படுத்த விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதென இந்தச் சட்டமன்றப் பேரவையில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படுகிறது"

இந்தத் தீர்மானத்திற்குப் பதிலளித்து நான் பேசுவதற்கு முன்பு அப்போது பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த தம்பி துரைமுருகன் என்னை வாழ்த்திப் பேசினார். இந்த முக்கியமான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நேரத்தில் தானும் இந்த அவையிலே இருந்ததாக, தன் சந்ததியினர் பேசுவார்கள் என்றெல்லாம் பெருமைப்பட்டுக் கொண்டார்.

நாடாளுமன்ற வளாகத்தில் தம்பி முரசொலிமாறனின் திருவுருவச் சிலை 8-12-2006 அன்று திறந்து வைக்கப்பட்ட நிகழ்ச்சிக்காகச் சென்றிருந்த நான், 6ஆம் தேதியன்று நிறைவேற்றப்பட்ட "உயர்நீதிமன்றத்தில் தமிழ் வழக்கு மொழி" எனும் அரசின் தீர்மான நகலை, தமிழக ஆளுநர் அவர்களின் பரிந்துரையுடன், குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்து வழங்கியதோடு; அந்தத் தீர்மானத்தை சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைமுறைக்குக் கொண்டு வர அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொண்டேன். குடியரசுத் தலைவர் அவர்களும் அதனைக் கவனிப்பதாக உறுதி அளித்தார்கள்.

ஆனால் மத்திய அரசின் சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் நீதித்துறை 27-2-2007 தேதிய கடிதத்தில், "உச்ச நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்து இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட்டதாகவும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவுகள், ஆணைகள் மற்றும் இதர நடவடிக்கைகளில் பிராந்திய மொழியைத் தற்போது அறிமுகப்படுத்துவது உகந்ததாக இருக்காது என்று இந்தியத் தலைமை நீதிபதி கருதுவதாகவும்" தெரிவிக்கப்பட்டிருந்தது.

11-3-2007 அன்று நான் இதுபற்றி விளக்கமாகப் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கும், உள்துறை அமைச்சராக இருந்த சிவராஜ் பட்டீல், சட்டத்துறை அமைச்சராக இருந்த பரத்வாஜ் ஆகியோருக்கும் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் ராஜஸ்தான், பீகார், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநில உயர் நீதிமன்றங்களில் பிராந்திய மொழியான இந்தி மொழி பயன்படுத்தப்பட்டு வருகிற முன் மாதிரிகளை யெல்லாம் சுட்டிக்காட்டிவிட்டு, இறுதியாகத் தமிழக மக்களின் நீண்ட கால விருப்பத்திற்கு வடிவம் கொடுக்க அவசர நடவடிக்கைகளை எடுத்து, குடியரசுத் தலைவரின் ஒப்புதலை விரைவாகப் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டேன்.

11ஆம் தேதி நான் எழுதிய கடிதத்திற்கு, அடுத்த நாளான 12ஆம் தேதியே மத்திய சட்டத் துறை அமைச்சராக இருந்த எச்.ஆர். பரத்வாஜ் அவர்கள் எழுதிய பதிலில் "நான் தங்கள் கடிதத்தைக் கவனமாகப் படித்து, இந்த விஷயத்தில் தாங்கள் எழுப்பியுள்ள கருத்துக்களை மனதில் கொண்டு இந்த விஷயத்தைப் புதிதாகப் பரிசீலித்து, கூடிய விரைவில் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறுமாறு என்னுடைய துறையை நான் கேட்டுக் கொண்டுள்ளேன்" என்று தெரிவித்திருந்தார்.

12-3-2007 அன்று மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், டி.ஆர்.பாலு, ஆ.இராசா, எஸ்.ரகுபதி, க.வேங்கடபதி, சுப்புலட்சுமி ஜெகதீசன், மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, "சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு மொழியாகத் தமிழ்மொழி என்பதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தர வேண்டும்" என்று பிரதமரைத் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து மனுக் கொடுத்தனர்.

கழக அரசு இந்தப் பிரச்சினையில் மேற் கொண்டு வந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக 2010ஆம் ஆண்டு சூன் மாதம் கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், "சென்னை உயர்நீதி மன்றத்தில், தமிழ் பயன்பாட்டு மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்காக; 2006ஆம் ஆண்டு தமிழக அரசு, சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி, மேதகு தமிழக ஆளுநரின் பரிந்துரையினையும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின்

பரிந்துரையினையும் பெற்று, மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. எனவே தாமதமின்றி உடனடியாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்ப் பயன்பாட்டு மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று இந்த மாநாடு; மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது" என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதே மாநாட்டில், "மத்தியில் தமிழ் ஆட்சிமொழியாக்கப்பட வேண்டும் என்பது தமிழக மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாகும். இந்தியாவின் அனைத்து மாநில மொழிகளையும், மத்திய ஆட்சி மொழிகளாக ஆக்குவதில் தாமதம் ஏற்படுமேயானால், முதற்கட்டமாக - செம்மொழியாம் எம் தமிழ்மொழியை மத்திய ஆட்சிமொழியாக ஆக்க வேண்டுமென்று மத்திய அரசை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வளவிற்குப் பிறகும், உச்ச நீதிமன்றம் இதற்கு ஆட்சேபணை தெரிவித்த காரணத்தினால் மத்திய அரசினால் அப்போது தமிழக அரசின் தீர்மானத்திற்கு ஒப்புதல் வழங்க முடிய வில்லை. இருந்தாலும் தமிழகத்திலே அப்போது தி.மு.கழக அரசு இருந்த காரணத்தினால் சென்னை உயர்நீதிமன்றத்திலே பெரும்பாலான வழக்குகளின் விசாரணைகள் எல்லாம் தமிழிலேயே நடைபெற்றன. தலைமை நீதிபதியாக இருந்த எம்.ஒய் இக்பால் அவர்களும் கழக ஆட்சியிலே இருந்த காலத்தில், 2010ஆம் ஆண்டு, உயர் நீதி மன்றத்தில் தமிழில் வாதம் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட்டார். ஆனால் தற்போது உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர், ஜனவரி 3ஆம் தேதியன்று ஒரு வழக்கறிஞரிடம் தமிழில் வாதம் செய்ய அனுமதி மறுத்ததோடு; "தமிழில் வாதம் செய்ய அரசியல் சட்டத்தில் அனுமதி வழங்கப்படவில்லை" என்றும் கருத்துக் கூறியுள்ளார். இதனை எதிர்த்துத்தான் உயர் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகத் தமிழை அறிவிக்கக்கோரி, வழக்கறிஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்களின் போராட்டம் மிகவும் நியாயமான போராட்டம் என்பதை மத்திய, மாநில அரசுகள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

குறிப்பாக மத்திய அரசு இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு, வேறு சில வட இந்திய மாநிலங்களில் தற்போது நடைமுறையிலே உள்ளதைப்போலவே, தமிழகத்திலே

உள்ள உயர் நீதிமன்றத்திலும் வழக்காடும் மொழியாக தமிழைச் சட்டப்படி கையாளுவதற்கு, உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று, குடியரசுத் தலைவரிடம் தி.மு.கழக ஆட்சிக் காலத்திலிருந்து ஒப்புதலுக்காக நிலுவையிலே உள்ள சட்டத்திருத்தத்திற்கு அனுமதி பெற்றுத்தர வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

10-01-2013

3694. கெடுமதி கொண்டு “நெடு” எழுதிய கட்டுரை!

உடன்பிறப்பே,

2-1-2013 அன்று சில பத்திரிகையாளர்கள், “மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ராமகிருஷ்ணன் உங்களைப் பற்றிப் பேசியதற்கு நீங்கள் விளக்கமாகப் பதில் அளித்திருந்தீர்கள். அதற்குப் பிறகும் அவர் இன்று விடுத்துள்ள அறிக்கையிலே அதையே கேட்டிருக்கிறாரே?” என்று கேட்டபோது, “அவர் தனிப்பட்ட முறையில் தொடக்கம் முதல் என்னை வெறுப்பவர் என்று எனக்குத் தெரியும். இளம்பிராயத்திலிருந்தே நானும் ஒரு கம்யூனிஸ்ட் என்றும், அந்தக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டவன் என்றும் பலமுறை சொல்லியிருக்கிறேன். ராமகிருஷ்ணனுக்கு உண்மையான கம்யூனிஸ்ட்களை ஏற்றுக் கொள்ள முடியாது” என்று நான் பதிலளித்தேன்.

இந்தப் பதில் குறித்து தோழர் ராமகிருஷ்ணனோ, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களோ எதுவும் கூறவில்லை. நான் கம்யூனிசக் கொள்கைகளில் சிறு வயதிலிருந்தே ஈர்க்கப்பட்டவன் என்பதை மறுக்கவில்லை. ஆனால் பழ.நெடுமாறன் என்னுடைய கருத்துக்களை மிகவும் மூர்க்கத்தனமாக எதிர்த்து எழுதிய கட்டுரை ஒன்றினை “தினமணி” வெளியிட்டுள்ளது.

அதில் ராமகிருஷ்ணன் கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லவில்லை என்கிறார் நெடுமாறன். காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடாதது பற்றி நான் மௌனமாக இருப்பது ஏன் என்று அவர் கேட்டதற்கு, 17-12-2012 அன்றே அதைப் பற்றி நான் அறிக்கை கொடுத்திருந்தேன் என்பதை அவருக்குப் பதிலாக அளித்து விட்டேன். அதற்குப் பிறகும், அதைப் பற்றியே அவர் கேள்வி கேட்டிருந்த காரணத்தால், தனிப் பட்ட முறையில் என்னை வெறுப்பவர் அவர் என்றும், கம்யூனிசக் கொள்கையில் இளம் பிராயத்திலிருந்தே ஈர்க்கப்பட்டவன் நான் என்றும் கூறினேன். அதற்கும் நெடுமாறனுக்கும் என்ன

சம்மந்தம்? ஆடு நனைகிறதே என்று ஓநாய்க்கு ஏன் கவலை? நான் கம்யூனிஸ்ட் கொள்கையால் ஈர்க்கப்பட்டவனா இல்லையா என்பதை கம்யூனிஸ்ட் தோழர்களே நன்றாக அறிவார்கள். இவருக்கு என்ன தெரியும்? இந்தப் பிரச்சினையிலே இவரை யார் மூக்கை நுழைக்கச் சொன்னது? கருணாநிதி உண்மையாக யார் என்பதைத் தமிழக மக்கள் அறிவார்கள் என்று நெடுமாறன் எழுதுகிறார். தமிழக மக்கள் நான் யார் என்பதையும் அறிவார்கள், நெடுமாறன் எப்படிப்பட்டவர் என்பதையும் அறிவார்கள். நான் கம்யூனிசக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவன் என்பதை இப்போது சொல்லவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் கலந்து கொண்ட பல கூட்டங்களிலேயே அதைச் சொல்லியிருக்கிறேன். நான் கம்யூனிஸ்டா இல்லையா என்பதற்கு நெடுமாறனின் சான்றிதழை நான் கேட்டேனா? பெரியண்ணன் வேடம் போடும் இந்த முந்திரிக் கொட்டையிடமா சான்றிதழ் கேட்டேன்? மாசேதுங் கம்யூனிஸ்ட்கள் பற்றிக் கூறியதை எங்கிருந்தோ தேடிக் கண்டுபிடித்து தன் கட்டுரையில் இடம் பெறச் செய்து, அவர் கூறியது எனக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்பதற்கு என் மனசாட்சி பதில் கூற வேண்டும் என நீட்டி முழக்கியிருக்கிறார் நெடுமாறன். என்னுடைய மனசாட்சி என்னைப் பற்றிக் கூறியதைத்தான், நான் பல முறை வெளிப்படையாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதெல்லாம் "பொடா"வில் மாதக் கணக்கில் புழுங்கிக் கிடந்ததையே மறந்து, மனசாட்சியைப் புதைகுழிக்கு அனுப்பிவிட்ட இன்றைய நெடுமாறனுக்குத் தெரியாது.

தோழர்கள் நம்பூதிரிபாத் அவர்களும், கே.டி.கே. தங்கமணி அவர்களும் தங்கள் சொத்து முழுவதையும் கட்சிக்காக அளித்தவர்கள் என்றும், சிறைக் கொடுமைகளை இன்முகத்தோடு ஏற்றுக் கொண்டவர்கள் என்றும் நெடுமாறன் உதாரணம் காட்டுகிறார்.

அவர்கள் அளவிற்கு நான் கம்யூனிஸ்ட் என்று சொல்லிக் கொள்ள முன் வராவிட்டாலும், என்னால் முடிந்த அளவிற்கு ஏழை மக்களுக்காகத் தொடர்ந்து தொண்டாற்றியிருக்கிறேன். எனக்கு இருக்கும் ஒரே சொத்தான வீட்டைக் கூட நான் மக்களுக்காக எழுதிக் கொடுத்து விட்டேன். எனக்கென்று எந்த எஸ்டேட்டுகளையும், மாட மாளிகைகளையும் சம்பாதித்தவன் இல்லை . கழக நிகழ்ச்சிகளில் எனக்குத் தனிப்பட்ட முறையிலே வழங்கிய அனைத்துப் பொருள்களையும் கழகத்திற்காக நான் வழங்கி,

அவ்வளவும் இன்றையதினம் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் கருவூலத்தை அலங்கரித்துக் கொண்டிருப்பதை யாரும் காணலாம். பாளையங்கோட்டை தனிமைச் சிறையிலே இருந்தவன்தான் நான். எந்த விதமான ஆடம்பர வாழ்வையும் நான் எப்போதும் மேற்கொண்டவன் இல்லை.

"திராவிட நாடு கோரிக்கையை அடியோடு கை கழுவியவர் கருணாநிதி. இன்றளவும் அதைப்பற்றி வாய் திறக்கவில்லை" என்று நெடுமாறன் எழுதியிருக்கிறார். திராவிட நாடு கோரிக்கையை அண்ணா அவர்கள் உயிரோடு இருந்த போதே தி.மு.க. கை விட்டது உண்மைதான். அப்போதே அதற்கான எத்தனையோ விளக்கங்களை, காரணங்களை அண்ணா அவர்களே கூறிவிட்டார்கள்.

அம்பானி, டாடா, பிர்லா போன்ற பெரு முதலாளிகளுடன் கருணாநிதி தன்னை ஒப்பிடுவது தான் பொருத்தமானது என்கிறார் நெடுமாறன். எந்த அளவிற்கு நஞ்சைக் கக்கிக் கக்கிப் பழக்கப்பட்ட நெடுமாறன் கொடிய நஞ்சாகவே மாறிவிட்டார் என்பதுதான் இதிலிருந்து புரிகிறது. அம்பானி, டாடா, பிர்லா போலவா கருணாநிதி வாழ்க்கை நடத்துகிறார் என்பதைத் தமிழ்நாட்டு மக்களே நீங்கள்தான் கூற வேண்டும்!

ஐந்து முறை முதல் அமைச்சராக இருந்திருக்கிறேன். 1957ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற அனைத்து சட்டமன்றத் தேர்தல்களிலும் தோற்காமல் வெற்றி பெற்றிருக்கிறேன். 75 திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதியிருக்கிறேன். ஆனால் இன்றளவும் மாட மாளிகை போன்ற தொரு வீட்டைக்கூட நான் குடியிருப்பதற்கு வாங்கிக் கொண்டவனல்ல. பதவிக்கு வராததற்கு முன்பு நான் வாங்கிய "தெரு வீடு" (Street House) என்று சொல் வார்களே, அதே வீட்டிலேதான் உதவியாளர்கள் உட்கார்ந்து பணியாற்றிடக் கூடப் போதிய வசதி இல்லாத நிலையிலேதான் இன்றளவும் வாழ்ந்து வருகிறேன். ஆனால் இரக்கமில்லாமல் என்னை டாடா வோடு நெடுமாறன் ஒப்பிடுகிறார் என்பதை நினைக்கும்போது அவர் தனது மனசாட்சிக்கு "டாட்டா" கொடுத்து விட்டாரே என்றெண்ணி, வேதனைதான் எனக்கு ஏற்படுகிறது.

பொதுவாழ்வில் ஈடுபட்டு அதற்குப் "பொன்" விழா கொண்டாடிய ஒரே குடும்பம் என் குடும்பம் என்கிறார். "பொன்"

விழாவிற்காகப் பொன்னென்றும் வைரமென்றும் சம்பாதித்துக் கொண்டு விட்டேன் என்கிறாரா? என்னிடம் பற்றும் அன்பும் கொண்ட தோழர்கள் எனக்கு விழா எடுக்கிறார்கள். அது கண்டு வக்கற் றோர் வயிற்றெரிச்சல்படுவதா? என் குடும்பத்தினர் யாரோ முதல் ரகப் பணக்காரர்கள் ஆகி விட்டார்கள் என்கிறார். அதற்கு நான் என்ன செய்வது? அவர்கள் நேர்மையாகத் தொழில் செய்து சம்பாதித்தால் அதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைய முடியுமே தவிர, நானே அதற்கெல்லாம் உரிமை உடையவன் ஆகி விடுவேனா?

ஐந்து முறை முதலமைச்சராகப் பதவி வகித்த கருணாநிதி தனது ஆட்சிக் காலத்தில் கம்யூனிஸ்டாக எப்போதாவது நடந்து கொண்டதுண்டா என்று நெடுமாறன் கேட்கிறார். தோழர் மணலி கந்தசாமியை நெடு மாறனுக்குத் தெரியாதா? கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் தலைவர் அவர். திருத்துறைப்பூண்டியில் நடைபெற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கிய விழாவில் மணலி பேசும் போது, "எத்தனையோ ஆண்டுக் காலமாக கம்யூனிஸ்ட் கட்சி ரத்தம் சிந்திப் போராடிய போதும் கிடைக்காத உரிமையை, கலைஞர் தன்னுடைய பேனாவின் ஒரு துளி மையினால் நிறைவேற்றிவிட்டார்; இன்றிரவு இந்த லட்சக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த இடத்தில் தூங்குகிறோம் என்ற மன நிறைவோடு தூங்குவார்கள்" என்று பாராட்டினார்.

என்னைக் கம்யூனிஸ்டா என்று கேட்ட நெடுமாறனுக்குப் பதிலளிக்க நீண்ட கால கம்யூனிஸ்டான தம்பி க. சுப்பு இன்று இல்லாமல் போய் விட்டாரே?

பேருந்துகளை நாட்டுடைமை ஆக்கி போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கியது கம்யூனிசத்திற்கு விரோதமானதா?

பதினைந்து ஏக்கர் உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது கம்யூனிசத்திற்கு எதிர்ப்பானதா?

இந்திரா காந்தி அம்மையார் வங்கிகளை நாட்டுடைமையாக்கி அறிவித்திடத் தூண்டுகோலாகவும் துணையாகவும் இருந்தேனே; அது கம்யூனிசத்திற்கு எதிரானதா?

பழம்பெரும் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் அண்ணன் ப.ஜீவானந்தம் அவர்களின் நினைவை என்றென்றும் போற்றும்

வகையில் நாகர்கோவிலில் அவருக்கு நினைவகம் அமைத்து, நானே சென்று திறந்து வைத்தேனே, அது கம்யூனிசத்திற்கு எதிரானதா?

என்னுடைய இளமைக் காலத்திலிருந்து ரஷ்ய எழுத்தாளர் மேக்சிம் கார்க்கி எழுதிய "தாய்" காவியத்தால் கவரப்பட்டு, அதை தமிழில் கவிதை நடையில் எழுதியதோடு, அது திரைப்படமாகவும் வெளிவரச் செய்தேனே, அது கம்யூனிசத்திற்கு விரோதமானதா?

குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், கண்ணொளி வழங்கும் திட்டம், இரவலர்கள் மறுவாழ்வுத் திட்டம், கைரிக்ஷாக் களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம், ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம், தாழ்த்தப்பட்டோருக்கு இலவச கான்கிரீட் வீடுகள் வழங்கும் திட்டம், காவல் துறையிலே பணியாற்றுவோருக்காக போலீஸ் கமிஷன்கள் அமைத்தது, மே தினத்திற்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறை அளித்தது, சென்னையில் மே தினப் பூங்கா உருவாக்கியது, அரசு அலுவலர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம், மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம், புன்செய் நிலவரி அறவே நீக்கம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கியது, ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம், விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயச் சட்டம், அவர்கள் குடியிருக்கும் வீட்டு மனைகளை அவர்களுக்கே சொந்தமாக்கிய சட்டம், தரிசு நிலங்களைப் பண்படுத்தி நிலமற்ற விவசாயிகளுக்கு ஒப்படை செய்யும் சட்டம், இவைகள் எல்லாம் நெடுமாறன் அகராதியில் கம்யூனிசத்தை மறுக்கும் திட்டங்களா?

என்னுடைய மகன்களில் ஒருவருக்கே "ஸ்டாலின்" என்று இப்போதல்ல; அறுபதாண்டுகளுக்கு முன்பே பெயர் சூட்டிய என்னைப் பார்த்து, கம்யூனிசத்திற்கு ஆதரவாக எப்போதாவது கருணாநிதி நடந்து கொண்டதுண்டா என்று நெடுமாறன் கேட்கிறார் என்றால்; அவர் எந்த அளவிற்குத் தனது அறிவை அடமானம் வைத்து விட்டார் என்றல்லவா கேட்பார்கள்!

கம்யூனிஸ்ட் கட்சியிலே உள்ள உண்மையானவர்கள் என்னிடம் எந்த அளவிற்கு பற்றுக் கொண்டவர்கள் என்பதற்கு 8-1-2013 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வே தக்க சான்றாகும்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான தோழர் ஏ.எம்.கோபு அவர்கள் மறைந்து விட்டார்கள். அவரது திருவுருவச் சிலையினை அவரது குடும்பத்தார் சேலம் மாவட்டத்தில் ஆத்தூரில் நிறுவுகிறார்கள். அதனை நான்தான் திறந்து வைக்க வேண்டுமென்று விரும்பி, என் உடல் நிலை கருதி, அவர்கள் அந்தச் சிலையினை அண்ணா அறிவாலயத்திற்கே எடுத்து வந்து என் கையினால் அதனைத் திறக்கச் செய்து எடுத்துச் சென்றார்கள் என்றால், அவர்களின் அந்த அன்பு எங்கே? இந்த நெடுமாறனின் கபடமான நெஞ்சம் எங்கே?

தோழர் பி. ராமமூர்த்தி கம்யூனிஸ்ட் கட்சியின் மாபெரும் தலைவர்களில் ஒருவர். நான் முதலமைச்சராக இல்லாதபோதே, 30-3-1991 அன்று நடைபெற்ற அவருடைய நினைவகத் திறப்பு நிகழ்ச்சியில் மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதிபாசு அவர்களோடு இணைந்து கலந்து கொண்டவன் நான்.

1998இல் என்னுடைய பவள விழா நடை பெற்றபோது, அதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர். நல்லகண்ணு, ஏ.எம். கோபு, ஜி.பழனிச்சாமி, கே.சுப்பராயன், நா.பெரியசாமி, வை.சிவபுண்ணியம், நாங்குனேரி கிருஷ்ணன் ஆகியோரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் என்.வரதராசன், டி.கே. ரெங்கராஜன், மீனாட்சி சுந்தரம் ஆகியோரும் வந்து கலந்து கொண்டார்கள்.

மாநிலங்களவை உறுப்பினர்களாக தோழர் டி.கே. ரெங்கராஜன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும், டி. ராஜா இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் வெற்றி பெற உறுதுணையாக இருந்ததும் என் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

12-5-2007 அன்று பேரவையில் எனது பொன் விழா நிகழ்ச்சி நடைபெற்ற போது, விழாவிற்குத் தலைமையேற்று என்னை பலபடப் பாராட்டியவர் நாடாளுமன்ற அவைத் தலைவராக இருந்த மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள்தான்.

இவ்வளவையும் மறைத்து விட்டு நெடுமாறன் என்மீது இந்த அளவிற்கு காழ்ப்பையும், வெறுப்பையும் கக்கிக் கட்டுரை தீட்ட என்ன காரணம் தெரியுமா?

அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, 18-12-2003 அன்று சென்னை உயர் நீதி மன்றம், "பொடா" சட்டத்தில் கைது செய்யப்பட்ட பழ. நெடுமாறன், சுப. வீரபாண்டியன் ஆகியோரை 17 மாத சிறை வாசத்துக்குப் பிறகு ஜாமீனில் விடுதலை செய்தது. பழ.நெடுமாறனுக்கு சென்னை உயர் நீதி மன்றம் அளித்த ஜாமீனை ரத்து செய்யக் கோரி, அ.தி.மு.க. அரசு உச்ச நீதி மன்றத்தில் 19-12-2003 அன்று தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

அதற்குப் பிறகும் நெடுமாறனை அ.தி.மு.க. அரசு விடுதலை செய்யவில்லை. அவர் மீது வேறொரு வழக்கினைத் தொடுத்தார்கள். அதிலும் ஜாமீன் பெற்று, 8-1-2004 அன்று தான் கடலூர் சிறையிலிருந்து பழ.நெடுமாறன் விடுதலையானார். அவரை சிறை வாயிலில் கழக மாவட்டச் செயலாளர் தம்பி எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், கடலூர் எம்.எல்.ஏ., இள. புகழேந்தி மற்றும் கழகத் தோழர்கள் வரவேற்றனர். சிறையிலிருந்து வெளியே வந்த மறுநாளே கோபாலபுரத்தில் என்னை நெடுமாறன், சுப. வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள். அதேநாளில் நெடுமாறன் விடுதலை பற்றி முரசொலியில் நான் ஒரு கவிதை எழுதினேன். அந்தக் கவிதையை இவ்வாறு தொடங்கியிருந்தேன்.

> "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை"யில் மாதங்கள்
> பதினெட்டு உலவியபின் மாவீரனாகவே நெஞ்சுயர்த்தி
> வெளி வந்து மனமொன்றித் தழுவி மகிழ்ந்த
> நெடுமாறனுக்கு வாழ்த்துச் சொல்லிக் கொடி கொடுத்து
> நான் வரவேற்பு வழங்கிய பின் வடித்த கவிதை!"

அன்றைய கழகத் துணைப் பொதுச் செயலாளர், தம்பி மு.க.ஸ்டாலின் நெடு மாறனின் இல்லம் சென்று பொன்னாடை அணிவித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

இதற்கெல்லாம் நா மணக்க நன்றி தெரிவிக்க வேண்டாமா? அதற்குத்தான் நெடுமாறன் "தினமணி"யில் நாகரிகத்தில் தோய்த்து எழுதியுள்ள விமர்சனக் கட்டுரை!

அன்புள்ள,

மு.க.

11-01-2013

3695. துணிச்சலான செயலா? துவள வைக்கும் காரியமா?

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா 27-12-2012 அன்று டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பேசிவிட்டு, அவசர அவசரமாக வெளிநடப்பு செய்வதாகச் செய்தியாளர்களிடம் மட்டும் தெரிவித்துவிட்டுச் சென்னை திரும்பிய போதிலும், அவருடைய முழு உரை அனைத்து ஏடுகளிலும் வெளிவந்தது. சென்னையில் அவசர வேலை இருப்பதாகக் கூறி, அந்தக் குழு கூட்டத்தில் முதன் முதலாகப் பேசுவதற்கு அனுமதி பெற்று, அவ்வாறே முதலிலே பேசிவிட்டு, உடனடியாகத் தனி விமானம் மூலம் சென்னை திரும்பிய போதிலும், இங்கே அவர் என்ன அப்படிப்பட்ட அவசர வேலையில் கலந்து கொண்டார் என்று எந்தவிதமான செய்தியும் இல்லை. ஆனால் அவர் அங்கே பேசும்போது,

"என்னுடைய தலைமையின் கீழ் உள்ள மாநில அரசு பத்தாண்டுகளுக்குப் பின்னர், மின் கட்டணங்களை உயர்த்துவது என்ற **துணிச்சலான முடிவை** எடுத்தது. இது நமது மாநிலத்தில் மின் சக்தி இடர்ப்பாட்டைச் சமாளிப்பதற்காக என்னுடைய அரசு மேற்கொண்ட உறுதியான தீர்வினைக் காட்டுகிறது" என்று சொல்லியிருக்கிறார்.

(The State also took courageous decisions under my leadership to raise power tariffs after ten years)

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பத்து மாத காலத்தில் மின் கட்டண உயர்வினை 5 சதவிகித உயர்வு, 10 சதவிகித உயர்வு அல்ல, ஒரேயடியாக ஒரே நேரத்தில் 37 சதவிகித அளவிற்கு உயர்த்தி அறிவித்தார். இதைத்தான் ஜெயலலிதா "துணிச்சலான

முடிவு" என்று கூறித் தன்னைத்தானே பாராட்டிக் கொள்கிறார்; டெல்லியில் முதலமைச்சர்கள் கலந்துகொண்ட மாநாட்டில்!

2001ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல்அமைச்சராக வந்த போதும், 1-12-2001 முதல் மின் கட்டணங்களை உயர்த்தினார். மீண்டும் 2003ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் 15-3-2003 அன்று 1398 கோடி ரூபாய்க்கு மின் கட்டண உயர்வுகளைச் செய்தார். அன்றைய தினம்தான் தி.மு. கழக ஆட்சியில் வழங்கப்பட்ட விவசாயம், ஏழைக் குடிசைகளுக்கான இலவச மின்சாரத்தை ரத்து செய்தார். வீடுகளுக்கான மின் கட்டணத்தை 22.13 சதவிகிதமும், கல்வி நிலையங்களுக்கு 16.61 சதவிகிதமும் உயர்த்தினார். இதெல்லாம் கடந்த காலத்தில் ஜெயலலிதாவின் துணிச்சலான முடிவுகள்தான்!

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில்; மின் கட்டண உயர்வு 1,651 கோடி ரூபாய் அளவிற்கும், தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் 7,874 கோடி ரூபாய் அளவிற்கும் என்பதை ஒப்பிட்டுப் பார்த்தாலே எந்த அளவிற்கு ஜெயலலிதாவின் "துணிச்சலான முடிவு" தமிழ்நாட்டு மக்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ளலாம். ஆனால் அதைத்தான் டெல்லி தேசிய வளர்ச்சிக் குழுவில்தான் துணிச்சலான முடிவினை மேற்கொண்டதாக ஜெயலலிதா தனக்குத்தானே பாராட்டிக் கொண்டுள்ளார்.

தி.மு.கழக ஆட்சியில் வீடுகளுக்கு மின்சாரம் உபயோகிப்போர் மொத்தம் 149.86 இலட்சம் பேரில் 134.67 இலட்சம் பேருக்கு எந்தவிதமான மின் கட்டண உயர்வும் செய்யப்படவில்லை.

600 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் 3 லட்சத்து 21 ஆயிரம் பேர்களுக்கு மட்டுமே யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற அளவிற்குக் கழக ஆட்சியிலே மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டது. அப்போது தி.மு. கழகம் இந்த முடிவினை எடுத்த நேரத்திலேகூட மிகவும் பயந்து கொண்டுதான், அதனால் தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்டு விடுவார்களோ என்று அதிகாரிகளிடம் கேள்வி மேல் கேள்வி எழுப்பி, அதற்குப் பிறகுதான் அந்த உயர்வினைக் கழக அரசு அறிவித்தது. ஆனால் 7,874 கோடி ரூபாய்க்கான மின் கட்டண உயர்வு முடிவினைத் தனது தலைமையிலான அரசு துணிச்சலாக எடுத்து அறிவித்தது என்று டெல்லியில் ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

தி.மு. கழக ஆட்சியில் தயங்கித் தயங்கி முடிவெடுத்த நிலையிலேகூட, இன்றைய முதலமைச்சர், ஜெயலலிதா அவர்கள் 2-8-2010 அன்று விடுத்த அறிக்கையில்,

"விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கச் சொன்னால், விலைவாசியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கிறார் முதல்வர் கருணாநிதி. இரண்டு மாதத்துக்கு 600 யூனிட் மின்சாரத்துக்கு மேல் பயன்படுத்தும் வீடுகளுக்கு மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வீடுகளில் மாதம் 300 யூனிட் மின்சார பயன்பாடு என்பது சர்வ சாதாரணம். மேலும் வாடகை வீடுகளில் குடியிருக்கும் ஏழை எளிய மக்கள் கூடுதல் மின்சார கட்டணத்துக்கு ஆளாக்கப்படுவார்கள். மின் கட்டண உயர்வால் வீட்டு வாடகையும் உயரலாம். தொழிற்சாலைகள், சிறு, குறுந்தொழில்கள், குடிசைத் தொழில்கள், கல்வி நிறுவனங்கள் என எல்லாத் தரப்புக்கும் மின் கட்டண உயர்வால் கடும் பாதிப்பு ஏற்படும். மின் கட்டண உயர்வால் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் மேலும் உயரக் கூடும். சாமானிய மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இந்தக் கூடுதல் சுமையை உடனடியாக நீக்க தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

என்று என்னைக் கேட்டுக்கொண்ட அம்மையார் ஜெயலலிதா, இப்போது அவருடைய இந்தப் பழைய அறிக்கையினை நினைவுபடுத்திக் கொள்ளாமல், டெல்லியிலே சென்று முழக்கமிட்டிருக்கிறார்.

கழக ஆட்சியில் 600 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் உபயோகித்தவர்களுக்குக் கூட யூனிட் ஒன்றுக்கு ஒரு ரூபாய் மட்டுமே கட்டணம் உயர்த்தப்பட்டது. ஆனால் தற்போது 600 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் உபயோகிப்போருக்கு யூனிட் ஒன்றுக்கு 5 ரூபாய் 75 காசு என்ற அளவிற்கு கட்டணம் உயர்த்தப்பட்டது. கழக ஆட்சியில் வாங்கும் சக்தி ஓரளவிற்கே பெற்றுள்ள சாதாரண நுகர்வோருக்கு எவ்விதக் கட்டணமும் உயர்த்தப்படவில்லை. ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் சகட்டு மேனிக்கு ஏழையெளியோர், நடுத்தர வர்க்கத்தினர், வசதி

படைத்தோர் என்ற எவ்வித வேறுபாடும் இன்றி அனைவருக்கும் கட்டண உயர்வு செய்யப்பட்டது. இன்னும் சொல்லப் போனால் ஏழையெளிய, நடுத்தர மக்கள் பயன்படுத்தும் குறைந்த மின்னழுத்த இணைப்புகள் மூலம் 5,300 கோடி ரூபாயும், வசதி படைத்தோர், தொழிலதிபர்கள் பயன்படுத்தும் உயர் மின்னழுத்த இணைப்புகள் மூலம் ரூ. 2,574 கோடியும் கூடுதலாக அரசுக்குக் கிடைக்கத் தக்க வகையில் கட்டண உயர்வைச் செய்திருக்கிறார்கள். என்ன சமதர்மமோ இது?

இவ்வாறு கட்டணங்களை உயர்த்தி வாக்களித்த மக்களைக் கஷ்டப்படுத்துவது என்பது ஜெயலலிதாவுக்குப் புதிய கதையல்ல; கை வந்த கலை!

தமிழ்நாட்டு மக்களின் ஏமாளித்தனத்தின் காரணமாக எப்படியோ ஆட்சிக்கு வந்துவிட்ட ஜெயலலிதா, வந்ததும் வராததுமாக வரவு செலவு திட்டத்தை அவையிலே வைப்பதற்கு முன்பாகவே தமிழக மக்கள் தலையில் சுமார் 4000 கோடி ரூபாய் அளவிற்கு வரியைச் சுமத்திவிட்டு; மேலும் தொடர்ந்து; "ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடிக்கின்ற" செயலாக எல்லா மட்டத்திலும் வரி உயர்வு - கட்டண உயர்வு - பால் விலை உயர்வு - என்று இருபதாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பல உயர்வுகளை அறிவித்து விட்டார். அதெல்லாம் அம்மையாரின் துணிச்சலான செயல்கள்தான்!

தி.மு. கழகம் ஆட்சியில் இருந்தபோது பெட்ரோல் விலையை, டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தவில்லையா? உயர்த்திக் கொண்டுதான் இருந்தார்கள். இருந்தாலும் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக அந்தச் சுமையையெல்லாம் அரசு தாங்கிக் கொண்டு பொது மக்கள் பாதித்து விடக் கூடாது என்பதற்காகப் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல் பார்த்துக்கொள்ள வில்லையா? ஆவின் கட்டணத்தை அதிகமாக உயராமல் பார்த்துக் கொள்ளவில்லையா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. அதை விடுத்து, நமக்கென்ன, சிரமப்படப் போவது மக்கள்தானே என்ற பாணியில் கண்ணை மூடிக் கொண்டு கட்டணங்களை ஜெயலலிதா உயர்த்தினார். உயர்த்தியது மாத்திரமல்ல; அதை மிகப் பெரிய துணிச்சலான செயல் என்றும் இப்போது டெல்லியிலே சென்று பேசியிருக்கிறார்.

பேருந்துக் கட்டணங்களைப் பொறுத்த வரையில், சாதாரண புறநகர் பேருந்துகளுக்கு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 28 பைசா வீதம் வசூலிக்கப்பட்டு வந்த கட்டணத்தை, 50 சதவிகித அளவிற்கு அதாவது மேலும் 14 பைசா என்ற அளவிற்கு உயர்த்தி, இனி கிலோ மீட்டர் ஒன்றுக்கு 42 பைசா என்று நிர்ணயித்திருக்கிறார். 2006ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பையேற்றபோது சாதாரண புறநகர் பேருந்துகளுக்குக் கிலோ மீட்டர் ஒன்றுக்கு 28 பைசா என்றிருந்த கட்டணத்தை ஐந்தாண்டு கால தி.மு.கழக ஆட்சியில் ஒரு பைசா கூட உயர்த்தவில்லை என்பதையும், ஆனால் ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஆறு மாத காலத்திலேயே கிலோ மீட்டர் ஒன்றுக்கு 42 பைசா அளவிற்குப் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார் என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆனால் ஜெயலலிதாவோ இந்த உயர்வுகளை யெல்லாம் சர்வசாதாரணமாக, துணிச்சலான செயல்கள் என்று வர்ணனை செய்திருக்கிறார்.

2006ஆம் ஆண்டு முதல் 2011 மே திங்கள் வரை நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பேருந்துக் கட்டணம் ஒரு பைசா கூட உயர்த்தப்படவில்லை என்பதையும், ஜெயலலிதா பதவியிலே இருந்தபோது பேருந்துக் கட்டணத்தை உயர்த்திய பிறகு மீண்டும் அவர் 2011இல் பொறுப்புக்கு வந்த ஒரு சில மாதங்களிலேயே பேருந்துக் கட்டணத்தை உயர்த்திப் பொதுமக்களை வாடச் செய்திருக்கிறார் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

பால் விலையையும் ஜெயலலிதா உயர்த்தியிருக்கிறார். 14-2-2011 அன்று ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் “பால் தட்டுப்பாட்டினை உருவாக்கி, தட்டுப்பாடுகளை உருவாக்கும் தறிகெட்ட அரசாக மைனாரிட்டி தி.மு.க. அரசு விளங்குகிறது. பால் உற்பத்தியாளர்களை அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய தி.மு.க. அரசு வழிப்பறி கொள்ளையர்களைப் போல நடந்து கொள்கிறது” என்றெல்லாம் கூறியதற்கு மாறாக, பால் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசாமல் தன்னிச்சையாகவே கொள்முதல் விலையையும், விற்பனை விலையையும் உயர்த்தினார். தமிழ்நாட்டு மக்களை வாட்டி வதைக்கும் அளவிற்கு ஒன்றரை ஆண்டுகளில் சுமையை வைத்துவிட்டு, அதைத் தன்னுடைய

துணிச்சலான செயல்கள் என்று டெல்லியிலே பேசியிருக்கிறார் என்றால் எத்தகைய இரட்டை வேடம் இது?

"இரட்டைவேடம்" என்பது ஜெயலலிதாவுக்குப் பழகிப் போய்விட்ட கலை. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதும், முன்னுக்குப் பின் முரணாகக் கருத்து வெளியிடுவதும், நேற்று சொன்னதை இன்று மறுப்பதும் ஜெயலலிதாவின் அரசியல் பாணி. அவர் பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன் என்ற நிலைப்பாட்டை மேற்கொள்வதும்; பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும் காட்டும் விலாங்கு மீன் போக்கைப் பின்பற்றுவதும்; அவரது அரசியல் குணம்! அவரிடம் அழுத்தமாகப் பதிந்துவிட்ட அந்தக் குணமும் - பழக்கமும் தான்; தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் அப்படி வீர தீர (?) உரையாற்ற வைத்து; இப்போது மத்திய அரசு ரெயில் கட்டணத்தை, தமிழக அரசின் பேருந்துக் கட்டணத்தைவிடக் குறைந்த அளவிற்கே உயர்த்திய போதிலும், அதனை "வெந்த புண்ணிலே வேல்" என்று முதலைக் கண்ணீர் வடிக்கச் செய்கிறது. தமிழக அரசு கட்டணத்தை உயர்த்தினால் அது துணிச்சலான செயல், ஆனால் மத்திய அரசு உயர்த்தினால் அது மட்டும் "வெந்த புண்ணிலே வேலா?" என்று பொதுமக்கள் கேட்கிறார்கள்! இது துணிச்சலான செயலா? மக்களைத் துவள வைக்கும் காரியமா?

அன்புள்ள,

மு.க.

16-1-2013

3696. "யாகாவாராயினும் நா காக்க!"

உடன்பிறப்பே,

"திருவள்ளுவர் சிலை பராமரிப்பில் கருணாநிதியைவிட எனக்கு அதிக அக்கறை உண்டு"

என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பென்னி குவிக் நினைவு மண்டபத் திறப்பு விழாவில் திருவாய் மலர்ந்திருக்கிறார். பெரியார் அணையைக் கட்டிய பொறியாளர் பென்னி குவிக்கின் நினைவினைப் போற்றும் வகையில் அவரது சிலையினைத் தி.மு.கழக ஆட்சியிலேயே 15-6-2000 அன்று மதுரை பொதுப்பணித் துறை வளாகத்தில் நான் திறந்து வைத்து, அந்தச் சிலை இன்றளவும் அங்கேதான் உள்ளது. அந்தப் பொறியாளர் பென்னி குவிக் அவர்களுக்குத்தான் இப்போது மீண்டும் மணிமண்டபம் எழுப்பியிருக்கிறார்கள்.

கழக ஆட்சியில் வள்ளுவருக்குக் சென்னையிலே கோட்டம் எழுப்பியது மட்டும் போதாது என்று 31-12-1975 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே குமரி முனையில் வள்ளுவர் சிலை ஒன்றினை வைப்பதென முதன்முதலாக முடிவெடுக்கப்பட்டது. ஆனால் முடிவெடுத்த ஒரு மாதத்திற்குள்ளேயே கழக ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால், அது உடனடியாக நிறைவேற்றப்பட வில்லை. பிறகு எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது அதற்காக முயற்சி மேற்கொள்ளப்பட்டபோதும், அது செயல்வடிவம் பெறவில்லை. இந்தச் செய்தியை நான் மூடிமறைத்ததாக ஜெயலலிதா பேசியிருக்கிறார். ஏற்கனவே நான் பல முறை இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

7-10-2003 அன்று நான் "முரசொலி"யில் எழுதிய கடிதத்திலேயே "எம்.ஜி.ஆர். ஆட்சியிலே இருந்தபோது சிலை அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு, அது முழுமை வடிவம் பெற வில்லை" என்று எதையும் மூடி மறைக்க எண்ணாமல் குறிப்பிட்டிருக்கிறேன்.

1989இல் கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, குமரி முனையில் வள்ளுவர் சிலை வைக்கும் பணிக்கான தொடக்கவிழா நடைபெற்றது. மறுபடியும் இரண்டாண்டுகளில் ஆட்சி பறிக்கப்பட்டதால் அந்தப் பணியிலே தொய்வு ஏற்பட்டது. இதுதான் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணி பற்றிய வரலாற்றின் தொடக்கம்.

தற்போது வள்ளுவர் சிலை பராமரிப்பில் தனக்கு அதிக அக்கறை என்று சொல்லிக்கொள்ளும் ஜெயலலிதா 1991 முதல் 1996 வரை ஐந்தாண்டுக் காலம் ஆட்சியில் இருந்தபோது உண்மையிலேயே அக்கறை காட்டியிருந்தால், ஏற்கனவே கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட சிலை நிர்மாணிக்கும் பணியை நிறைவேற்றி முடித்திருக்க வேண்டும். ஆனால் அது நடைபெற வில்லை.

பின்னர் 1996ஆம் ஆண்டு கழக ஆட்சி மலர்ந்தவுடன் சுமார் பத்து கோடி ரூபாய் செலவில் சிலை அமைத்திடும் பணியைக் கணபதி ஸ்தபதி மற்றும் அவரது குழுவினரின் சீரிய முயற்சியோடு விரைந்து நிறைவேற்றி 1999ஆம் ஆண்டு டிசம்பர் 31, 2000ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆகிய இரு நாட்களில் சிலை திறப்பு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்த விழாவில் அருமை நண்பர் ஜி.கே. மூப்பனார், இல.கணேசன், என். சங்கரய்யா, வாழப்பாடி ராமமூர்த்தி, ஆர்.நல்லகண்ணு, எஸ். திருநாவுக்கரசு, குமரி அனந்தன், ஆர்.எம். வீரப்பன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மலேசியா டத்தோ சாமிவேலு, இலங்கை ஆறுமுகம் தொண்டைமான், மொரீஷியஸ் ராமசாமி சிதம்பரம் பிள்ளை, சிங்கப்பூர் திருநாவுக்கரசு, ஸ்காட்லாந்து ஆஷர், ஜெர்மனி தாமஸ் மால்டன் மற்றும் தமிழறிஞர்கள், கவிஞர்கள், புலவர் பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருவள்ளுவர் சிலை பராமரிப்பில் என்னைவிடத் தனக்கு அதிக அக்கறை உண்டு என்று ஜெயலலிதா எனக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார். ஆனால் 2001ஆம் ஆண்டு மே திங்களில் அ.தி.மு.க. ஆட்சி தமிழகத்திலே ஏற்பட்ட பிறகு, தி.மு. கழக ஆட்சியினால் இந்தச் சிலை வைக்கப்பட்டது என்பதால் இந்தச் சிலையினைப் பராமரிக்கும் பணியினை அப்போதே ஜெயலலிதா அரசு கைவிட்டுவிட்டது. அதுபற்றி 2003ஆம் ஆண்டிலேயே நான் “முரசொலி”யில்,

"இந்தச் சிலையின் அழகை அனைவரும் காணக் கூடிய அளவில் 65 ஒளி விளக்குகள் இந்தச் சிலை வைக்கப்பட்டபோது அமைக்கப்பட்டிருந்தன. அந்த விளக்குகளில் தற்போது 11 விளக்குகள்தான் எரிகின்றன. மற்ற விளக்குகள் புதுப்பிக்கப்படவே இல்லை. அதன் காரணமாக இரவு நேரத்தில் வள்ளுவர் சிலையைப் பார்க்க வருபவர்கள் முழுமையாகச் சிலையின் அழகைக் காணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அய்யன் வள்ளுவரின் அந்தச் சிலையை அன்றாடம் சுமார் 3 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரம் பேர் வந்து பார்க்கின்றார்கள். விடுமுறை நாட்களில் மூன்று படகுகளும், மற்ற நாட்களில் ஒரு படகும் என்ற அளவில் பார்வையாளர்கள் அந்தப் படகுகளில் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். நாள் ஒன்றுக்கு படகு 18 முறை சென்று திரும்புகிறது. கரையிலிருந்து செல்லும் படகு நேராகத் திருவள்ளுவர் சிலைக்குச் சென்று, பிறகு அங்கிருந்து விவேகானந்தர் மண்டபத்திற்குச் சென்று கரை திரும்புகின்றது. ஒரு படகில் ஒரு முறை 200 பேர் ஏற்றிச் செல்லப்படுகிறார்கள். ஒருவருக்கு படகு கட்டணமாக இருபது ரூபாய் வசூலிக்கப்படுகின்றது. படகு செலுத்துவது அரசின் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக நிறுவனத்தின் பொறுப்பிலே உள்ளது. இவ்வாறு பார்வையாளர் கட்டணம் மூலமாக மட்டுமே ஆண்டு ஒன்றுக்குத் திருவள்ளுவர் சிலையினை காண வருபவர்கள் வாயிலாகச் சுமார் 60 லட்சம் ரூபாய் அரசுக்கு வருவாயாகக் கிடைக்கப் பெறுகின்றது. விவேகானந்தர் மண்டபம் கண்டிடத் தனிக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த 60 இலட்சம் ரூபாயிலிருந்து கணிசமான ஒரு தொகையை இந்தச் சிலையின் பராமரிப்புச் செலவிற்காக அரசு ஒதுக்கினால்கூட போதும்! கடற்கரையோரத்தில் சிலை அமைக்கப்பட்டிருப்பதால் கடலின் உப்புக் காற்று சிலையைப் பாதித்து விடாமல் இருக்க ரசாயனப் பூச்சு ஒன்று செய்யவேண்டும். ஆனால் இதனை இந்த அரசு செய்யவில்லை. அதன் காரணமாகவும் சிலை பாதிக்கப்படக் கூடும். எங்களையெல்லாம் ஆளாக்கிய

தந்தை பெரியார் அவர்கள் திருவள்ளுவருடைய பெருமையைச் சொல்ல, திருக்குறளின் தத்துவங்களை எடுத்துக்காட்ட சென்னை மாநகரத்திலே 1942ஆம் ஆண்டுவாக்கில் திருக்குறள் மாநாடு ஒன்றை நடத்திய பிறகுதான் பண்டிதர்களுடைய நூலகங்களில் மாத்திரம் இருந்த திருக்குறள் பாமர மக்களுடைய கைக்கு வந்தது என்பதை யாரும் மறக்க முடியாது. இருப்பினும் திராவிட இயக்கத்துக்கு மட்டும் வள்ளுவரை உரிமை கொண்டாட நான் விரும்பவில்லை. கட்சி வித்தியாசம் இல்லாமல் ஒவ்வொரு கட்சியிலும் உள்ளவர்கள் திருக்குறளின் சிறப்பை நன்குணர்ந்து அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் அதிலும் கட்சிமாச்சரியமும் அரசியல் கசப்புணர்வும் புகுந்து விடுவதுதான் வேதனையானது.

குமரி முனையில் நிறுத்தப்பட்டுள்ள வள்ளுவரின் சிலைக்குக் கடல் காற்றினால் மெல்ல மெல்ல ஏற்படும் சேதாரத்தை நிரந்தரமாகத் தடுத்திட ஆண்டுதோறும் ரசாயனக் கலவை பூசுகிற பராமரிப்புப் பணியைத் தொடர்ந்து நடத்திட இந்த அரசு முன்வந்தாலே போதுமென வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்”

என்று 2003ஆம் ஆண்டிலேயே எழுதினேன். அதையெல்லாம் மறைத்துவிட்டு, தற்போது திருவள்ளுவர் சிலை பராமரிப்பில் என்னை விட அவருக்கு அதிக அக்கறை என்று பேசினால், யார் அண்டப் புளுகு, ஆகாசப் புளுகு புளுகுகிறார்கள் என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியாமலா போய்விடும்?

கழக அரசில் ஆற்றிய பணிகளில் தலையாய பணி, குமரியில் அய்யன் திருவள்ளுவருக்கு அகிலமே கண்டு வியக்கும் அளவுக்கு 133 அடி உயரத்தில் 7000 டன் எடை கொண்ட மாபெரும் சிலை 9 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திட்ட பணியாகும். அதுமட்டுமல்லாமல், சென்னையில் வள்ளுவர் கோட்டம் எழுப்ப திட்டமிட்டு நிறைவேற்றியதும்; தேசிய அளவிலான தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் தொல்காப்பியர் பெயரில் விருது வழங்கிட வேண்டும் என்றும்; உலக அளவிலான தமிழறிஞர் ஒருவருக்கு ஆண்டுதோறும் ‘குறள் பீடம் விருது’ வழங்கிட வேண்டும் என்றும்; மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்து

செம்மொழி பிரகடனம் செய்யப்பட்டது தொடர்ச்சியாக அந்த விருதுகளை மத்திய அரசு அறிவிக்கச் செய்ததும் அடியேன்தான் என்பதைத் தமிழ் ஆர்வலர்கள் நன்கறிவர்.

திருவள்ளுவர் சிலை பராமரிப்பு பணிகள் நடைபெற்று வந்ததாகவும்; "2011ஆம் ஆண்டு ஆட்சி மாறிய பிறகு ஒன்றரை ஆண்டுக் காலமாக இந்த ரசாயனக் கலவை பூசப்படவில்லை என்று கருணாநிதி கூறுவது விஷமத்தனமானது" என்றும் அவருக்கே உரிய வாய்த் துடுக்கோடு ஜெயலலிதா பேசியிருக்கிறார்.

இந்தக் கூற்றாவது உண்மையா என்றால், ஆட்சியினரை ஆதரிக்கும் "தினமணி" நாளேடு 31-12-2012 அன்று அரைப்பக்கத்திற்கு "உப்புக் காற்றால் சேதமடையும் திருவள்ளுவர் சிலை" என்ற தலைப்பில் எந்த அளவிற்குச் சிலை பராமரிப்புப் பணியில் அ.தி.மு.க. அரசில் அலட்சியம் காட்டப்படுகிறது என்பதை எழுதியவுடனேயே, அது தவறான செய்தி என்றும் சிலை பராமரிப்புக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் ஜெயலலிதாவோ, அவரது ஆட்சியினரோ ஏன் மறுக்கவில்லை? அரசின் சார்பில் அடுத்த நாளே அந்தச் செய்தியை மறுத்து, பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்திருந்தால், தி.மு.கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று நாம் அறிவிக்க வேண்டிய தேவையே ஏற்பட்டிருக்காதே! நான் கூறியது விஷமத்தனமானதா? ஜெயலலிதா தற்போது பேசியிருப்பது விஷமத்தனமானதா?

அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் திருக்குறளை அழித்துவிட்டு, என்னுடைய வாசகங்களை எழுதச் செய்தேன் என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். 1967இல் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் பொதுப்பணி மற்றும் போக்கு வரத்துத் துறை அமைச்சராக நான் பொறுப்பேற்றவுடன், தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பேருந்துகளில் எல்லாம் திருவள்ளுவரின் படத்தை அமைத்து, திருக்குறளையும் பொறிக்கச் செய்தவனே நான் தான். புதிய பேருந்துகளில் திருக்குறள் எழுதப் படாத நிலையில் வழித்தடத்தில் அவசரமாக அனுப்பப்பட்டபோது, அந்தத் துறையின் அமைச்சர் தம்பி கே.என்.நேருவை அழைத்து நான் அறிவுறுத்தியதற்குப் பிறகு அந்தப் புதிய பேருந்துகளிலும் திருக்குறள் உடனடியாகப் பொறிக்கப்பட்டது.

குறள் பற்றி "குறளோவியம்" எழுதி; திருவள்ளுவருக்கு ஓவியம் தீட்டிய வேணுகோபால் சர்மா அவர்களை அழைத்து பத்தாயிரம் ரூபாய் நிதியினை வழங்கி; அவர் வரைந்த திருவள்ளுவர் உருவப் படத்திற்கான உரிமையைத் தமிழக அரசு பெற்றுக் கொள்ளச் செய்து, 3 லட்சம் ரூபாயை வழங்கி; "திருக்குறள்-கலைஞர் உரை" என்ற எனது நூலை தமிழறிஞர் அ.சா.ஞான சம்பந்தம் மூலம் வெளியிட்டுத் தொடர்ந்து திருவள்ளுவருக்குச் சிறப்பு செய்தவன் நான்.

தொடக்கத்திலேயே, 30.10.1969 அன்று தி.மு. கழக அரசின் அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, ஆண்டுதோறும் பொங்கல் விழாக் கொண்டாடப்படும் நாளுக்கு அடுத்த நாள், 'திருவள்ளுவர் நாள்' என்றும், திருவள்ளுவர் நாள் விடுமுறை நாள் என்றும், 3.11.1969 அன்று தமிழக அரசின் ஆணையாக வெளியிடப்பட்டது.

தி.மு.கழக அரசு பிறப்பித்த ஆணையின்படி தான், 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசின் நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும், திருவள்ளுவர் ஆண்டு தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

திருவள்ளுவர் விருதுக்கான தொகையை தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தான் 10 ஆயிரம் ரூபாய் என்பதற்கு மாறாக, 20 ஆயிரம் ரூபாயாகவும், 1998ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தினேன் என்பதை மறைத்துவிட்டு, திசை திருப்பும் வகையில் குற்றஞ்சாட்டியிருக்கிறார் ஜெயலலிதா.

என்னைவிட அவருக்குத் திருவள்ளுவர் சிலை பராமரிப்பில் அக்கறை உண்டு என்று நினைத்துக் கொண்டாலோ, அல்லது தமிழ், செம்மொழி என்ற விஷயங்களில் அக்கறையைப் பற்றிப் பேசினாலோ அவர் நிச்சயமாக வெற்றி பெற முடியாது. ஏனென்றால், சமச்சீர் கல்விக்கான பாடப் புத்தகங்களில் கழக ஆட்சியில் அச்சிடப்பட்டிருந்த திருவள்ளுவர் படத்தையே "ஸ்டிக்கர்" ஒட்டி மறைத்த மகானுபாவர்தான் ஜெயலலிதா.

இறுதியாக அவர் யாரோ ஒருவர் சொல்லிக்கொடுத்த குறளைச் சொல்லித்தான் தன் பேச்சை முடித்திருக்கிறார். அந்தக் குறள்,

“பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.”

அதாவது பலரும் வெறுக்கும்படியான பயனற்ற சொற்களைப் பேசுபவரை எல்லோரும் இகழ்ந்துரைப்பார்கள் என்ற இந்த வள்ளுவரின் பொன் மொழி, என்னுடைய இந்த நீண்ட விளக்கங்களுக்குப் பிறகு, அந்தக்குறள் யாருக்குப் பொருந்தும் என்பதைத் தமிழ்நாட்டு மக்களும், குறளை நன்குணர்ந்த சான்றோர்களும், புலவர்களும் நன்கு உணர்வார்கள்.

அம்மையார் கூறும் அந்தக் குறள் “பயனில சொல்லாமை” என்ற அதிகாரத்தில் இடம்பெற்றதாகும். அதே அதிகாரத்தில் இடம் பெற்ற, அம்மையார் தெரிந்துகொள்ள வேண்டிய மற்றொரு குறளும் உள்ளது. அது,

“பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்”

அதாவது பயனற்றவைகளைச் சொல்லி, பயன்பெற நினைப்பவரை, மனிதர் என்பதை விட, “பதர்” என்பதே பொருத்தமானதாகும்.

நான் ஜெயலலிதாவுக்கு விளக்கங்களைத் தான் அளிக்கிறேன். அவரோ வெறுப்பைக் கக்குகிறார். அவரைப் போன்றவர்களுக்காக வள்ளுவர் சொன்ன வாசகமான “யாகாவாராயினும் நாகாக்க” என்பதை மறந்து விடாதீர்கள் என்று நினைவூட்டுகிறேன்!

அன்புள்ள,
மு.க.
17-1-2013

3697. இந்த கொடுமைக்கு எப்போது விடியல்?

உடன்பிறப்பே,

உலகம் முழுவதிலும் தூக்குத் தண்டனை என்பது அறவே ஒழிக்கப்பட வேண்டுமென்று நான் கூறி வருகிறேன். அதைப்பற்றிப் பலவிதமான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்ற கருத்து கூறப்பட்ட நேரத்திலேகூட, அவர்களுக்குத் தனிமைச் சிறை ஆயுள் முழுவதும் வழங்கலாம் என்ற கருத்தினைத்தான் நான் தெரிவித்தேன்.

தூக்குத் தண்டனை கூடாது என்ற என் எண்ண வோட்டத்திற்குப் பதில் அளிக்கின்ற வகையில் ஒரு சம்பவம். அந்தச் சம்பவம் பற்றிப் பிரபல எழுத்தாளர் மனுஷ்ய புத்திரன் விரிவாக எழுதியிருக்கிறார். இதிலே தூக்குத் தண்டனையை விடக் கொடுமையான தண்டனை! அதுவும் ஓர் இளம் பெண்ணுக்கு! அந்தப் பெண் செய்த தவறு என்ன? அனைவரின் உள்ளத்தையும் உலுக்குகின்ற அந்தக் கோரக்கொடுமை இதோ!

கடந்த ஜனவரி 9ஆம் தேதி சவுதிஅரசாங்கம் ஒரு மைதானத்தில் ரிசானா நபீக் என்ற இளம் பெண்ணை, கை விலங்கிட்டு, பொதுமக்கள் முன்னிலையில் மண்டியிட வைத்து, அவள் தலையை நீண்ட அரிவாள் கொண்டு சீவி கொலை செய்திருக்கிறார்கள், இல்லை தண்டனை கொடுத்திருக்கிறார்கள். ஏன் அந்தத் தண்டனை? என்ன பாவம் செய்தாள் அந்தப் பெண்?

2005ஆம் ஆண்டு தன் குடும்பத்திலே தனக்கு உணவிட்டுக் காப்பாற்ற வழியில்லாத காரணத்தால், வீட்டு வேலை செய்வதற்காக இலங்கையைச் சேர்ந்த ரிசானா நபீக் என்ற அந்த இளம் பெண், சவுதிக்குச் சென்றாள். அவள் பணிக்குச் சென்ற அந்த வீட்டிலே சமையல் செய்வது, வீட்டு வேலைகளைச் செய்து, வீட்டு முதலாளியின் நான்கு மாதக் குழந்தையைப் பராமரிப்பது ஆகிய பணிகளை முறையாக நிறைவேற்றி வந்தாள். ஆனால் அந்த நான்கு மாதக் குழந்தையை இளம் பெண் ரிசானா நபீக்

கொலை செய்தார் என்று குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டு விசாரிக்கப்பட்டு - கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டதாகக் கூறி - சவுதி நாட்டு நீதிமன்றம் ரிசானாவுக்கு மரண தண்டனை விதித்து 2007 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து ரியாத்தில் உள்ள இலங்கைத் தூதரகம், ஹாங்காங்கில் உள்ள ஆசிய மனித உரிமைகள் அமைப்பின் உதவியுடன் ரியாத் உயர் நீதிமன்றத்தில் ரிசானா நபீக்குக்கு ஆதரவாக மேல் முறையீடு செய்தது.

அந்த மேல்முறையீட்டிலும் ரிசானாவிற்கு விடுதலை கிடைக்கவில்லை. தண்டனை உறுதிப்படுத்தப்பட்டது. ரிசானா சவுதி அரசாங்கத்திற்கு அனுப்பிய கருணை மனுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. வேறு வழியே இல்லையா? வழி இருந்தது. ஆம், சவுதிஷரியத் சட்டத்தின்படி, பாதிக்கப்பட்டவர் ஒப்புக் கொண்டால், எழுதிக் கொடுத்தால், குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கலாம். ஆனால் இறந்து போன அந்த நான்கு மாதக் குழந்தையின் பெற்றோர், அந்த இளம் பெண்ணை மன்னிக்கத் தயாராக இல்லை.

"அந்தக் குழந்தையைக் கொல்ல வேண்டிய ஒரு தேவை எனக்குக் கிடையாது, நான் பாலூட்டும்போது குழந்தை மூச்சுத் திணறி அதன் காரணமாக இறந்ததே தவிர, நான் பராமரித்துப் பாதுகாத்து வந்த அந்த நான்கு மாதச் சிசுவைக் கொல்ல வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது" என்று ஓலமிட்ட ரிசானாவின் குரலைக் கேட்க ஒருவருக்கும் மனம் வரவில்லை.

சவுதி அரசுக்கு தன்னுடைய கதையை மனுவாகத் தயாரித்து ரிசானா அனுப்புகிறாள். அந்த மனுவிலே,

"நான் 1-4-2005 அன்று சவுதி அரேபியாவுக்கு வந்தேன். ஒன்றரை மாதங்கள் ஒரு வீட்டிலே வேலை செய்தேன். அந்த வீட்டில் சமைத்தல், கழுவுதல், 4 மாதக் குழந்தையை பராமரித்தல் ஆகியவையே என் பணிகள். ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 12.30 மணி இருக்கலாம். வீட்டிலே யாருமே இல்லை. எஜமானரின் நான்கு மாதக் குழந்தைக்கு நானே வழக்கம் போல புட்டிப்பால் ஊட்டிக் கொண்டிருக்கும்போது, குழந்தையின் மூக்கின் வழியாகப் பால் வெளியே

வரத்தொடங்கியது. நான் குழந்தையின் தொண்டையை மெதுவாகத் தடவிக் கொடுத்தேன். குழந்தை கண் மூடியிருந்ததால், தூங்கி விட்டது என்று நினைத்து படுக்க வைத்தேன். வீட்டு எஜமானி 1.30 மணியளவில் வீடு திரும்பி, சாப்பிட்டுவிட்டு அதன் பின்னர் குழந்தையைப் பார்த்தார். அதன் பின்னர் கோபம் கொண்டு எஜமானி செருப்பால் என்னை அடித்துவிட்டுக் குழந்தையைத் தூக்கிக் கொண்டுபோனார்.

அவர் அடித்த அடியின் காரணமாக என் மூக்கிலிருந்து ரத்தம் வழிந்தது. பின்னர் என்னை போலீசாரிடம் ஒப்படைத்தார்கள். போலீசார் என்னைத் தடியால் அடித்தார்கள். குழந்தையின் கழுத்தை நெரித்ததாகக் கூறுமாறு சொல்லியே அடித்தார்கள். அப்படிக் கூறாவிட்டால் எலெக்ட்ரிக் ஷாக் கொடுப்பதாகக் கூறினார்கள். என்னை வலியுறுத்தி அவர்கள் எழுதிய பேப்பரில் கையொப்பமிடச் செய்தார்கள். அல்லா மீது ஆணையாக நான் குழந்தையைக் கொல்லவில்லை, கழுத்தை நெரிக்கவில்லை."

ரிசானாவின் இந்தக் கருணை மனு ஏற்கப்படவில்லை. இந்தக் குற்றம் நடைபெற்றபோது ரிசானாவின் வயது 17 தான். சர்வதேச மனித உரிமை சாசனத்தின்படி "மைனர்" குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படக் கூடாது.

நியாயம் வெற்றி பெறும் - தான் விடுதலையாகி, இலங்கைக்கே திரும்பி விடலாம் என்ற நம்பிக்கையோடு இறுதி வரை ரிசானா இருந்தாள். அவள் கொல்லப்படுவதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்பாக, அந்தப் பெண்ணைச் சந்தித்த மௌலவி ஏ.ஜே.எம். மக்தூம் என்பவர், ரிசானாவின் பெற்றோருக்கு அவளைச் சந்தித்தது பற்றி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில்,

"சவுதி அரேபியாவில் வீட்டு வேலைக்காக அனுப்பப்பட்டு, கொலைக் குற்றம் சாற்றப்பட்டு, 9-1-2013 அன்று 11 மணியளவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட உங்கள் மகள் ரிசானாவை, அவருக்கு அந்தத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு ஓரிரு மணி நேரத்திற்கு முன்பு சந்தித்தேன். அவரைச் சந்தித்தபோது,

அவரிடம் உனக்கு இறுதி ஆசைகள் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டேன். அந்த நேரத்தில் கூட அவருக்குத் தண்டனை பற்றி தெரியவில்லை. ஊருக்கு நான் எப்போது செல்வது என்று என்னிடம் கேட்டாள். அப்போது தான் அவர் ஊருக்குச் சென்று விடலாம் என்ற நம்பிக்கையுடன் இருப்பதை நான் தெரிந்து கொண்டேன். மரண தண்டனை விதிக்கப்படுகின்ற அந்த நேரத்தில் கூடத் தன் மீது சுமத்தப்பட்டிருந்த கொலைக்குற்றத்தை அவர் அறவே மறுத்தார். இன்றைய தினம் உங்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப் போகிறார்கள் என்று தடுமாற்றத்துடன் நான் கூறினேன். அவர் பதிலே கூறவில்லை. மௌனமாக இருந்தார். உங்கள் பெற்றோர், சகோதரிகளுக்கு ஏதாவது சொல்ல வேண்டுமா என்று கேட்டேன். அப்போதும் உங்கள் மகள், என்னை மன்னித்து விட்டுவிடச் சொல்லுங்கள் என்று கெஞ்சியது என் உள்ளத்தை உருக்கிவிட்டது”

என்றெல்லாம் எழுதியிருக்கிறார். எப்படியோ அந்த ரிசானா என்ற இளம்பெண் மீது மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டது.

இதுபோன்று எத்தனையோ சம்பவங்கள்! அதனால்தான் மரண தண்டனை என்பது ஒழிக்கப்பட வேண்டுமென்று நான் கூறி வருகிறேன். அந்த நான்கு மாதக் குழந்தையைக் கொல்வதற்கு தனக்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்று அந்த இளம்பெண் கூறிய வாதத்தை ஏற்க யாருமே முன்வரவில்லை. சவுதி அரேபியாவில் உள்ள ஊடகங்களும், பொதுமக்களும் கூட ரிசானா மன்னிக்கப்பட வேண்டும் என்றே விரும்பினார்கள். அந்த நாட்டின் இளவரசர் பெரும் தொகையை இழப்பீடாக அந்தக் குழந்தையின் பெற்றோருக்கு வழங்க முன்வந்த போதும், அவர்கள் அந்த இளம் பெண் ரிசானாவை மன்னிக்க மறுத்து விட்டார்கள். வீட்டு வேலை செய்வதற்காக ஒரு ரிசானா அல்ல, 15 லட்சத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பெண்கள் சவுதியிலே அந்தப் பணியிலே உள்ளார்கள்.

எப்படியோ அந்த 17 வயது இளம் பெண் ரிசானா நபீக் தன் துன்பத்திலிருந்து விடுபட்டு விடுதலையாகிவிட்டாள். அவளைப் பெற்று, வளர்க்க வாய்ப்பில்லாமல், அனுப்பிவைத்த அந்தப் பெண்ணின் பெற்றோர் வேதனையையும் மற்றும் சகோதரிகளின் துயரத்தையும் யாரால் போக்கிட முடியும்? எப்போதும் போல

குழந்தைக்குப் பால் கொடுத்ததைத் தவிர அவர் செய்த குற்றம் என்ன?

இன்றைக்குக் கூட பத்திரிகையிலே ஒரு செய்தி! சென்னை, வண்ணாரப்பேட்டையில் ஸ்டீல் பட்டறை தொழிலாளி கோபு. அவருடைய மனைவி தேன்மொழி. 3 மாதங்களுக்கு முன்பு பிறந்த பெண் குழந்தைக்கு மோகனா என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். நேற்று முன் தினம் இரவு சாப்பிட்டுவிட்டு, குழந்தையைப் பக்கத்தில் படுக்கவைத்து உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிகாலை 3 மணி அளவில் குழந்தை திடீரென அழுதது. கண் விழித்த தாய், பசியில் குழந்தை அழுவதை உணர்ந்து தாய்ப்பால் கொடுத்தார். குழந்தை அழுகையை நிறுத்தியது. சில நிமிடங்களில் தாயும் கண்ணயர்ந்து தூங்கிவிட்டார். காலை 6 மணியளவில் தாய் கண் விழித்து, குழந்தையைத் தூக்கியபோது, குழந்தை பேச்சு மூச்சின்றி இறந்திருப்பதைக் கண்டு கதறுகிறாள். பால் குடிக்கும்போது, பால் புரையேறி குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டு அதனால் இறந்திருக்கலாம் என்று அந்தச் செய்தியிலே கூறப்பட்டுள்ளது.

ரிசானா பால் கொடுத்த அந்த நான்கு மாதக் குழந்தைக்கும் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டிருக்கலாம் அல்லவா? மரண தண்டனை என்ற ஒரு கொடுமை ஒழிக்கப்பட்டிருந்தால் ரிசானா குரூரமாகக் கொல்லப்பட்டிருக்க மாட்டாள் அல்லவா? இதற்கு எப்போது விடியல்? உலக நாடுகள் எல்லாம் ஒன்று கூடி இதுபோன்ற கொடுமைகள் இனியும் நேராமல் இருக்க, மானுடம் காத்திடும் மனித நேய உணர்வோடு, மனித நாகரிக மாண்பினை வெளிப்படுத்தும் வகையில், முடிவெடுத்து அதனை நடைமுறைக்குக் கொண்டு வர மாட்டார்களா?

அன்புள்ள,

மு.க.

21-1-2013

3698. ஏட்டிக்குப் போட்டியென எத்தனை காலம் ஏமாற்றுவார்?

உடன்பிறப்பே,

மத்திய அரசு டீசல் விலையை உயர்த்தியிருப்பதற்கும், மானிய விலையில் சிலிண்டர் வழங்குவதைக் குறைத்ததற்கும் இந்தியாவில் உள்ள பெரும்பாலான கட்சிகள் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. தி.மு. கழகமும், மத்திய அரசில் அங்கம் வகித்த போதிலும், மத்திய அரசின் முயற்சியைக் கடுமையாகக் கண்டித்துள்ளது. அரசின் சார்பில் இப்படிப்பட்ட விலை உயர்வுகள் செய்யப்படும்போது, எதிர்க்கட்சிகள் அதை எதிர்த்துக் கண்டனம் தெரிவிப்பதும், அதே எதிர்க் கட்சிகள் ஆளுங்கட்சியானால், எதிர்க்கட்சியாக இருந்தபோது தெரிவித்த கண்டனத்தை மறந்துவிட்டு - அல்லது மறைத்து விட்டு, இப்படிப்பட்ட உயர்வுகளை அவர்கள் செய்வதும்; நாடு வியப்போடு கண்டு வரும் நடைமுறைகள் ஆகிவிட்டன.

மத்திய அரசினால் இப்படிப்பட்ட மக்கள் விருப்பத்திற்கு மாறான போக்குகள், விலை உயர்வுகள் நடைபெறும்போது எதிர்க்கட்சிகள் தங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றிடும் வகையில், கண்டனம் தெரிவிப்பதும், ஆர்ப்பாட்டம் நடத்துவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழக்கமாக இருந்து வருகிறது. மாநில அரசின் பொறுப்பிலே இருப்போர் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பது எப்போதாவது நடைபெறும் நிகழ்வாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே, சேலம் உருக்காலைத் திட்டம், சேது சமுத்திரத் திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்கம் போன்ற தமிழகத்திற்குத் தேவையான மிகப்பெரும் திட்டங்களுக்காக எழுச்சி நாள் கொண்டாடப்பட்டதை நினைவு கூரலாம். ஆனால் தற்போது தமிழகத்தை ஆளும் அ.தி.மு.க. எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் மீது பழியைப் போட்டு, குற்றம் சுமத்துவதையே வழக்கமாகப் பின்பற்றி; ஏதோ மத்திய அரசுக்கு

நேரடியாகத் தாங்கள்தான் எதிர்ப்பாளர்கள் என்பதைப்போல நடந்து கொள்வதின் உள்நோக்கம் என்ன என்பதை நாம் நன்கறிவோம்.

தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் முப்பதுக்கு மேற்பட்ட முதல் அமைச்சர்கள் கலந்து கொண்டு உரையாற்ற வேண்டிய கட்டாயத்தில் ஒவ்வொருவரும் தங்கள் பேச்சினைப் பத்து நிமிடத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கூறுவதும், அதனைக் கடைப்பிடிப்பதும் தவறான புதிய நடைமுறையா? தமிழக முதலமைச்சர் வரிசைப்படி பிறகுதான் பேச வேண்டுமென்றாலும், தமிழக முதலமைச்சர் கேட்டுக்கொண்டதை அடுத்து, அவரை முதன் முதலாகப் பேசிட அனுமதிக்கவில்லையா; அதைப்போல; தான் சில முக்கியமான பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டிய அவசியத்தில் இருப்பதால் மேலும் ஐந்து நிமிடங்களோ, பத்து நிமிடங்களோ வேண்டுமென்று கேட்டிருந்தால், அதையும் பெற்றிருக்கலாம். அதற்கு மாறாக, தான் ஏதோ புதிதாகப் புரட்சி செய்வதைப்போல அவையில் எதுவும் சொல்லாமல், வெளியே வந்துவிட்டுச், செய்தியாளர்களிடம் ஜெயலலிதா வெளிநடப்பு செய்ததாகக் கூறி, அனைத்திந்திய அளவில் ஒரு "ஸ்டண்ட்" அடிப்பது எதற்காக என்பதும் நமக்குத் தெரியும்!

அதே அரசியல் ஸ்டண்ட் வரிசையிலேதான், தற்போது மத்திய அரசைக் கண்டித்து 24ஆம் தேதி தமிழகத்திலே ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்திருக்கிறார். எதற்காக ஆர்ப்பாட்டமாம்? "விஷம்போல் உயர்ந்து கொண்டே இருக்கும் விலைவாசியைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமல், பெட்ரோல் விலை உயர்வு, டீசல் விலை உயர்வு, சமையல் எரிவாயு விலை உயர்வு, ரெயில்வே கட்டண உயர்வு ஆகியவற்றைக் கண்டித்து தி.மு.கழகமும் அங்கம் வகிக்கும் மத்திய அரசைக் கண்டித்து" ஆர்ப்பாட்டமாம்!

ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கும் அ.தி.மு.க. அரசிலே என்ன நிலைமை? இங்கே எந்தவிதமான உயர்வு களும் செய்யப்படவில்லையா? ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக 4000 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகளை விதிக்கவில்லையா? ஏழை எளிய நடுத்தர மக்கள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு, பேருந்துக் கட்டணங்களை உயர்த்தவில்லையா? பால் விலையை உயர்த்த வில்லையா? இல்லாத மின்சாரத்திற்குப் பொல்லாத

அளவில் கட்டணத்தை உயர்த்தவில்லையா? இப்படிப், பொதுமக்களை வெகுவாகப் பாதிக்கும் கட்டண உயர்வுகளை யெல்லாம் செய்துவிட்டு; தமிழகத்திலே உள்ள அ.தி.மு.க. ஆட்சியினர், மத்தியிலே கட்டண உயர்வு என்று கூறி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பது வேடிக்கையாக இல்லையா? விநோதமாக இல்லையா? இரட்டைவேடம் போட்டு, கபடநாடகம் ஆடுவதாகத் தெரியவில்லையா? எதற்காக இந்தத் திடீர் ஆர்ப்பாட்டம்? 2014ஆம் ஆண்டு வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலை மனதிலே கொண்டா? மக்களுக்கு எதுவும் தெரியாது என்று மனப்பால் குடிக்கிறார்களா?

மத்திய அரசின் மீது ஜெயலலிதாவின் அறிக்கையில் மேலும் பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக "டெல்லி மாநில அரசால் தேவையில்லை என்று ஒப்படைக்கப்பட்ட மின்சாரத்தைத் தமிழகத்திற்குத் தருவதற்கு மத்திய அரசு மறுத்து வருகிறது" என்று ஒரு குற்றச்சாட்டினைக் கூறியிருக்கிறார். இந்தக் குற்றச்சாட்டிற்கு மத்திய அரசின் சார்பில் தெளிவாகப் பதில் கூறிவிட்டார்கள். டெல்லி மாநில அரசால் தேவையில்லை என்று ஒப்படைக்கப்பட்ட மின்சாரத்தை தமிழகத்திற்கு தருவதற்கு மத்திய அரசு முன் வந்தாலும், அதனைத் தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கேற்ற "காரிடார்" வசதி அதாவது கட்டமைப்பு வசதி தற்போது போதுமானதாக இல்லை என்று நீதிமன்றத்திலும் கூறி விட்டார்கள். ஆனாலும் அதற்குப் பிறகும் ஜெயலலிதா தனது இன்றைய அறிக்கையில் அதே குற்றச்சாட்டினை மத்திய அரசு மீது மீண்டும் சொல்லியிருக்கிறார். பொய்யான ஒரு செய்தியைக் கூறுவதும், அதற்கு உண்மை விளக்கம் அளித்ததற்குப் பிறகும், மீண்டும் அதே பொய்யைத் திரும்பவும் சொல்லித் திசை திருப்பிக் குழப்புவதும் ஜெயலலிதாவின் "பாணி!" இல்லை, கோயபல்சின் "பாணி!"

2012-2013ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் நிதிநிலை அறிக்கையில் பத்தி 70இல், "வெளி மாநிலங்களில் கிடைக்கும் மின்சாரத்தை நமது மாநிலத்திற்குக் கொண்டு வருவதற்கான மின் வழித்தட வசதிகளில் நெருக்கடி உள்ளதால், மின்சாரத்தை வெளியிலிருந்து கொண்டு வருவதற்கும் வழிவகை இல்லை" என்று 26-3-2012 அன்று கூறிவிட்டு, 2012ஆம் ஆண்டு இறுதியில் குஜராத் மாநிலத்தில் மின்சாரம் வாங்க ஒப்பந்தம்

போடுகிறார்கள்; மத்திய அரசிடம் டெல்லியில் மீதமுள்ள மின்சாரத்தைத் தமிழகத்திற்குக் கொடு என்று கேட்கிறார்கள் என்றால், மார்ச் மாதம் அவர்கள் படித்த நிதிநிலை அறிக்கையை இவர்கள்தான் தயாரித்தார்களா? தயாரிக்கவில்லை என்றாலும், அதைப் படித்தபோது பக்கத்திலே இருந்து காதால் கேட்கவாவது செய்தார்களா? என்று படித்தவர்கள் நினைக்க மாட்டார்களா? நிதி நிலை அறிக்கையிலே சொன்னதற்கும், அதன்பின் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் ஏன் இத்தகைய முரண்பாடுகள்?

2011-2012ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் படித்த நிதியமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், பத்தி 67இல் "இந்த மின்வெட்டு படிப்படியாகத் தளர்த்தப்பட்டு 2012 ஆகஸ்டு மாதத்திற்குள் மாநிலம் முழுவதும் முற்றிலுமாக மின்வெட்டு நீக்கப்படும்" என்று அறிவித்தார். 2012ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமும் போய், தற்போது 2013ஆம் ஆண்டும் பிறந்துவிட்டது. மின்வெட்டு தமிழகம் முழுவதிலும் முற்றிலுமாக நீக்கப்பட்டு விட்டதா? சட்டப்பேரவையிலே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி மக்களைக் காப்பாற்றாத அ.தி.மு.க. அரசை எதிர்த்து யார் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது?

ஏன், 2012ஆம் ஆண்டு ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்த இதே முதலமைச்சர் ஜெயலலிதா என்ன சொன்னார்? தற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம் என்றும், ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்றும் சொன்னாரா இல்லையா? இப்போது என்ன நிலைமை? ஜெயலலிதா சொன்ன சொல்லைக் காப்பாற்றாததற்காக யார் ஆர்ப்பாட்டம் நடத்துவது?

அதுபோலவே டிஜிட்டல் உரிமத்தைத் தமிழ் நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷனுக்குத் தரவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு. இதற்கும் விரிவான பதிலை மத்திய அரசின் சார்பில் அந்தத் துறை அமைச்சரே கூறிவிட்டார். ஆனால் அது பற்றியும் நேற்றைய அறிக்கையில் ஜெயலலிதா குற்றச்சாட்டு கூறியிருக்கிறார்.

அடுத்து காவிரி நீர் பற்றி ஜெயலலிதா மத்திய அரசின் மீது குற்றச்சாட்டு கூறியிருக்கிறார். அந்தக் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும்

என்பதுதான் தி.மு. கழகத்தின் கோரிக்கை, வேண்டுகோள். அதற்காக பிரதமருக்குக் கடிதமே எழுதியிருக்கிறேன். கழக நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரதமரை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுக்கவும் செய்திருக்கிறேன். ஆனால் இவ்வளவிற்கும் பிறகு, முதலமைச்சர் ஜெயலலிதா என்ன சொல்கிறார்? நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடக் கூடாது என்று கருணாநிதி தன்னலத்தைக் கருத்திலே கொண்டு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தமிழக மக்கள் கருதுகின்றனர் என்று ஜெயலலிதா அறிக்கையிலே எழுதுகிறார். தமிழக மக்கள் யாரும் அவ்வாறு கருதவில்லை. ஜெயலலிதா ஒருவர்தான், வேண்டுமென்றே அப்படிக் கற்பனையாகக் கருதிக்கொண்டு, இந்தக் குற்றச்சாட்டினைக் கழகத்தின் மீது சுமத்துகிறார்.

கர்நாடக மாநில அரசு இந்தக் காவிரி நீர்ப் பிரச்சினையில் அனைத்துக் கட்சிகளையும் அடிக்கடி கூட்டி, ஒரே குரலில் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்கள், மத்திய அரசிடம் முறையிடுகிறார்கள், நேற்றையதினம் கூட கர்நாடக அமைச்சரவை கூடி அதிலே மத்திய அரசு நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பினை வெளியிடக் கூடாது என்று முடிவெடுக்கிறார்கள். ஆனால் தமிழகத்திலே என்ன நிலைமை?

அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, பல கட்சிகளும் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டும் கூட, அனைத்துக் கட்சித் தலைவர்களைக் கூட்டியது உண்டா? அனைத்துக் கட்சித் தலைவர்களைக்கூட அழைக்க வேண்டாம்; தோழமைக் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தையாவது கூட்டி அதிலே முடி வெடுத்து இந்தப் பிரச்சினையிலே நாங்கள் எல்லாம் ஒன்றாக இருக்கிறோம் என்று காட்டிக்கொள்ள வேண்டாமா? அதற்கான முயற்சி தமிழகத்திலே ஏன் எடுக்கப்பட வில்லை? தனக்குத் தெரியாதது வேறுயாருக்கும் தெரியாது என்ற தன்முனைப்புதானே? முயற்சி எடுக்காதது மட்டுமல்ல, எதிர்க்கட்சி மீது அபாண்டமான குற்றச்சாட்டு வேறா?

கர்நாடக மாநிலத்திலே உள்ளவர்களும், மத்திய அரசிலே உள்ளவர்களும் இவர்களைப் பற்றி என்ன எண்ணிக் கொள்வார்கள்? இறுதித் தீர்ப்பை வெளியிடக் கூடாது என்று தி.மு.க. மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதாக ஜெயலலிதா

கூறுகிறாரே, அவர் ஒரு முதல் அமைச்சர், இந்தக் குற்றச்சாட்டினை நிரூபிக்க அவர் தயாரா?

தமிழகத்திற்குத் தேவையான மண்ணெண்ணெயினை மத்திய அரசு அளிக்கவில்லை என்பதும் ஒரு குற்றச்சாட்டு. அழுத பிள்ளை தான் பால் குடிக்கும். கழக அரசு இருந்தபோது, உணவுத்துறை அமைச்சராக இருந்த தம்பி எ.வ. வேலு என்னிடம் அனுமதி பெற்று டெல்லிக்குப் படையெடுப்பார். அப்போது அந்தத் துறையில் அமைச்சராக இருந்த முரளி தியோரா அவர்களைச் சந்தித்து, தமிழக அரசின் கோரிக்கைகளைச் சொல்லுவார், மண்ணெண்ணெய் கூடுதலாக வழங்க வேண்டும், எரிவாயு சிலிண்டர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுப்பார். மத்திய அரசில் அப்போது அந்தத் துறையின் செயலாளராக இருந்த நமது மாநிலத்தைச் சேர்ந்த திரு.சீனிவாசனைச் சந்தித்து, மண்ணெண்ணெய் பற்றாக்குறை பற்றிக் கூறுவார். அவர்களும் இப்படியெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கிறார்களே என்பதால், கூடுமானவரை உதவி செய்வார்கள். ஆனால் இப்போது புகார் கூறுகின்ற முதலமைச்சரின் அமைச்சரவையில் உள்ள அந்தத் துறையின் அமைச்சர் மண்ணெண்ணெய் கேட்டு எத்தனை முறை மத்திய அமைச்சரைச் சந்தித்திருக்கிறார்? ஜெயலலிதா பதில் கூற முடியுமா?

எதற்கெடுத்தாலும், யார் மீது வேண்டுமானாலும், எப்போதும் குறை சொல்வதும், குற்றச்சாட்டுக்களை அடுக்குவதும் நல்ல தல்ல. ஒரு முதல் அமைச்சருக்கு அழகுமல்ல; நல்ல பண்பாடும் அல்ல. கிராமங்களில் 18 மணி நேரம் மின்சாரம் இல்லை. விவசாயிகள் வேதனையில் வெந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். திருவாரூர் மாவட்டத்தில், கோட்டூர் ஒன்றியத்தில் நேற்றையதினம்கூட ரமேஷ் என்ற விவசாயி விஷமருந்தி மடிந்திருக்கிறார். விவசாயிகள் தற்கொலை என்பது சோகத் தொடராகி வருகிறது. கோவை, திருப்பூர் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலை இல்லாமல் வாழ்வாதாரத்தை இழந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். நெசவாளர்களோ கஞ்சித் தொட்டிகளாவது திறக்கப்படுமா என்கிறார்கள். இவர்களின் வேதனைகளைத் தீர்க்க வழிகண்டு மாநில மக்களை வாழ வைத்திட வேண்டிய தமிழக அ.தி.மு.க. அரசு, மத்திய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் போகிறார்களாம்!

24ஆம் தேதி அ.தி.மு.க. மத்திய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் அரசியல் ரீதியாக நடத்துகிறது என்றால் நடத்தட்டும்; அதிலே தேவையில்லாமல், "எதற்கெடுத்தாலும் தி.மு.க., என் கனவிலும் நனவிலும் தி.மு.க. தான்" என்பதைப் போல எதற்காகத் தி.மு.க. மீது குறை கூற வேண்டும்? ஜெயலலிதா நேற்றைய அறிக்கையில், மத்திய அரசுக்கு உறுதுணையாக இருந்துகொண்டு, தமிழகத்திற்குத் தொடர்ந்து துரோகம் இழைத்துவரும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்கிறார். சாதாரணக் கண்டனம் கூட அல்ல; கடும் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார். காங்கிரஸ் கட்சியின் தோழமைக் கட்சி என்ற முறையில், கூட்டணிக்குத் துரோகம் செய்யாமல், மத்திய அரசுக்கு உறுதுணையாக தி.மு.கழகம் இருந்த போதிலும், தமிழகத்திற்கான பிரச்சினைகள் என்று வரும்போது, தி.மு. கழகம் அவற்றைக் கைவிட்டது உண்டா? அதற்காக ஓங்கிக் குரல் கொடுக்காமல் இருந்தது உண்டா? ஆனால் ஜெயலலிதாவுக்கும், அவரோடு நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணி அமைக்க வேண்டும் எனும் நோக்கில் அவரை மறைமுகமாக ஆதரிக்கும் சில கட்சிகளுக்கும் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியிலிருந்து எப்படியாவது விலகிவிட வேண்டும், மத்திய அரசில் குழப்பம் ஏற்பட வேண்டும், அதை வைத்துக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முயல வேண்டும் என்பதுதான் உள்ளார்ந்த எண்ணம். அதைத் தி.மு.க. நன்றாகவே உணர்ந்துதான் உள்ளது. நாட்டு மக்களும் அறிந்தே வைத்திருக்கிறார்கள். ஏட்டிக்குப் போட்டியென எத்தனை காலம் மக்களை ஏமாற்றுவார்?

அன்புள்ள,

மு.க.

22-1-2013

3699. ஈழத்தமிழர் வாழ்வில், நல்லொளி பரவிட....

உடன்பிறப்பே,

ஈழத்தமிழர்களின் வேதனைகள் தீர்ந்த பாடில்லை; அவை தொடர்ந்து துன்பத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகமும் தன்னால் இயன்ற அளவிற்கு என்னென்ன செய்ய முடியுமோ, அவற்றையெல்லாம் இலங்கைத் தமிழர்களின் நலனை மனதிலே கொண்டு செய்து கொண்டுதான் உள்ளது. 1956ஆம் ஆண்டு முதல் ஆட்சியிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஈழத்தமிழர்களுக்காகத் தொடர்ச்சியாக ஓங்கிக் குரல் கொடுத்து வருகிறோம் என்பதை உண்மையை நேசிப்பவர்கள் உணர்ந்தே இருப்பார்கள்.

நமது பல்வேறு கோரிக்கைகளுக்கு இந்திய அரசு உதவிட முன்வருவதாக உறுதி கூறிய போதிலும், உலக நாடுகளின் மத்தியில் நடுநிலை நாடுகளில் ஒன்று இந்தியா என்ற பெயரைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, சிலவற்றில் விட்டுக் கொடுத்துப் போகிறதோ இந்திய அரசு என்று சிலர் சந்தேகம் கொள்ளக் கூடிய அளவிலேதான் செயல்படுகிறது.

உதாரணமாக இலங்கைத் தமிழர்களைக் கொல்வதற்குக் காரணமாக இருக்கும் இலங்கை ராணுவத்தினருக்கு இந்தியாவிலே எந்தப் பகுதியிலும் பயிற்சி அளிக்கக் கூடாது என்பதுதான் தமிழகத்திலே உணர்வுள்ள தமிழர்களின் கோரிக்கை, வேண்டுகோள். அந்த வேண்டுகோளை இந்திய அரசிடம் நாம் பலமுறை விடுத்து விளக்கியுள்ளோம்.

இந்தியாவிலே இலங்கை ராணுவத்திற்குப் பயிற்சிஅளிக்க மாட்டோம் என்று இந்திய அரசின் சார்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்க அவர்களால் இயலவில்லை. நேற்றையதினம் மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஏ.கே. அந்தோணி அவர்கள்,

இலங்கையில் தமிழர் மறுவாழ்வுப் பணிகள் எதிர்பார்த்த வேகத்தில் இல்லை என்று கூறியிருக்கிறார்.

தற்போது இந்தியாவில் சுற்றுப் பயணத்தில் உள்ள இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பெரிஸ் "இந்தியாவில் இலங்கை ராணுவத்தினருக்கு அளிக்கப்படும் பயிற்சியைத் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் எதிர்ப்பது பற்றிக் கவலையில்லை. அந்த அரசியல்வாதிகள் எழுப்பும் விவகாரங்கள் வெறுப்புணர்வால் ஏற்பட்டவை" என்று கூறியிருக்கிறார்.

அதற்குப் பதிலளித்த மத்திய அமைச்சர் அந்தோணி அவர்கள், "தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் தெரிவித்த ஆட்சேபங்கள் வெறுப்புணர்வின் அடிப்படையில் எழுப்பப்பட்டவை என்று நான் கருதவில்லை. இலங்கையில், அரசு சில நடவடிக்கைகளை எடுத்த போதிலும், இப்போதும் தமிழர்களுக்கான மறுவாழ்வுப் பணிகள் எதிர்பார்த்த அளவில் இல்லை. ஒருபுறம் தமிழகத்தின் உணர்வுகளையும் நாம் மதித்து நடந்துகொள்வோம்.

எனவே தமிழகப் பகுதிகளில் ராணுவப் பயிற்சி அளிக்காமல் தவிர்ப்போம். அதே சமயம் மற்ற பகுதிகளில் உள்ள ராணுவ அமைப்புகளில் இலங்கை வீரர்களுக்குப் பயிற்சி அளிப்போம்" என்று கூறியிருக்கிறார்.

இலங்கையிலே ஒற்றுமையும் அமைதியும் ஏற்பட வேண்டுமென்று பெரிதும் விரும்புகின்ற ஐ.நா. மன்றம் போன்ற சர்வதேச நிறுவனங்கள் ஈழப் பகுதி சிங்களமயமாக்கப்படும் உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாம் நடத்திய "டெசோ" மாநாட்டிலே; பதினான்கு தீர்மானங்களை நிறைவேற்றினோம்.

நமது "டெசோ" மாநாட்டில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானங்களைத் தான் நமது கழகப் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினும், நாடாளுமன்றக் கழகக் குழுவின் தலைவர் தம்பி டி.ஆர். பாலுவும் எடுத்துச் சென்று ஐ.நா. சபையிடமும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்திடமும் ஒப்படைத்தார்கள்.

தீர்மானங்களை "டெசோ" அமைப்பின் சார்பில் நடைபெற்ற ஈழத் தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாட்டிலே நிறைவேற்றியதோடு இருந்துவிடாமல், இந்தியப் பிரதமர் அவர்களுக்கும் அதனை அனுப்பிவைத்தேன். அந்தக் கடிதத்தில்

இலங்கையிலுள்ள தமிழர்கள் கோரி வரும் அரசியல் தீர்வை, அவர்களே முடிவு செய்யும் வகையில் அவர்களுக்குத் தேவையான உரிமைகள் வழங்கும் தீர்மானத்தை ஐ.நா. பொதுச் சபையிலும், மனித உரிமைகள் ஆணையத்திலும் கொண்டுவர மத்திய அரசு உதவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருந்தேன்.

நான் அனுப்பியிருந்த கடிதத்தைப் படித்து விட்டு, பிரதமர் அவர்கள் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி அளித்ததோடு, ஏற்கனவே ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா; நமது வேண்டுகோளை ஏற்று ஆதரித்தது என்பதையும் நினைவு கூர்ந்தார்கள். பிரதமர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தின் நகலை ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று அளித்தனர்.

நமது கழக உறுப்பினர்களிடம் நேரில் உறுதி அளித்ததோடு, என்னுடைய கடிதத்திற்கு எனக்குப் பதில் எழுதிய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், இலங்கைத் தமிழர்களின் நலனுக்கும், நல்வாழ்வுக்கும் தேவையான பணிகளில் இந்திய அரசு அக்கறை காட்டி வருகிறது என்றும், ஈழத் தமிழர்களின் மறு குடி அமர்வு மற்றும் மறு வாழ்வுக்கு இந்திய அரசு மிகுந்த முன்னுரிமை வழங்கிச் செயல்படுகிறது என்றும் தெரிவித்திருந்தார். மேலும் அந்தக் கடிதத்தில், அதிகாரப் பகிர்வு குறித்து ஈழத் தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் இலங்கை அரசுக்குத் தெரிவித்திருப்பதாகவும், எதிர்காலத்தில் ஈழத் தமிழர்கள் சம உரிமை, கௌரவம், சம நீதி மற்றும் சுயமரியாதையுடன் வாழக் கூடிய நிலையை உருவாக்கிட இலங்கை அரசுடன் இந்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் 3-10-2012 அன்று என்னுடைய தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தமிழ் ஈழம் ஆதரவாளர் (டெசோ) அமைப்பின் கலந்துரையாடல் கூட்டத்தில்; "ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமையைப் பாதுகாத்திட ஐ.நா.மன்றத்தின் தலையீட்டைக் கோரும் தீர்மானத்தை இந்திய அரசு முன்மொழிவதன் மூலம் இலங்கையில் தற்போதுள்ள நிலை

மைக்கு விரைந்து முற்றுப் புள்ளிவைத்து, ஈழத் தமிழர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாத்திடவும், தங்களுடைய உரிமைகள் குறித்து விவாதித்துத் தாங்களே தீர்மானித்துக் கொள்ளவும் இந்திய அரசு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்"என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைச் சிங்கள அரசு, ஈழத்தந்தை செல்வா அவர்கள் காலந்தொட்டே, தொடர்ந்து தமிழினத்தை ஏமாற்றி வரும் கபட நாடகத்தை, நாம் புரிந்து கொண்டிருப்பதால்தான்; ஈழத் தமிழர்களுக்குத் தேவையான அரசியல் தீர்வினைப் பொது வாக்கெடுப்பு மூலமாக முடிவுசெய்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம். சிங்கள அரசின் மனித நேயமற்ற அணுகுமுறையினை உலக நாடுகள் ஒவ்வொன்றாகப் புரிந்துகொள்ளத் தொடங்கி விட்டன என்பதையே ஐ.நா. மனித உரிமை ஆணைய நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.

சில நாட்களுக்கு முன்பு இலங்கையில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செல்வ ராஜா, லண்டனில் இருந்து திரு.கண்ணன், நார்வேயிலிருந்து திரு.சிவகணேசன் ஆகியோர் எனக்கு ஒரு தகவலை அனுப்பியிருந்தனர். அதன்படி, "2009 போர் முடிந்தவுடன் திரு.இளங்குமரன் என்ற பேபி சுப்பிரமணியம், திரு.யோகி, கவிஞர் புதுவை இரத்தினகிரி, திரு.பாலகுமார், இளம்பரிதி ஆகியோருடன் 18 ஆயிரம் தமிழர்கள் சிறை வைக்கப்பட்டனர். அவர்களுடைய தற்போதைய நிலை என்ன என்று தெரியவில்லை. இதுகுறித்து திரு.யோகியின் மனைவி திருமதி யோகரத்தினம் யோகி; கவலையுடன் கேள்வி எழுப்பியிருந்தார். தற்போது, ஈழக் கவிஞர் புதுவை இரத்தினகிரி எங்குள்ளார் என்று தெரியவில்லை என்றும், ஒரு சிலர் அவர் சாகடிக்கப்பட்டு விட்டார் என்றும் சொல்கின்றனர். ஈழப் பிரச்சினையில் ஆர்வத்தோடு களப்பணியாற்றிய கவிஞர் ரத்தினகிரியின் உயிர், கேள்விக்குறியாக உள்ளது" என்றெல்லாம் தெரிவித்து இதைப்பற்றி நான் வினா எழுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

20-1-2013 அன்று நான் பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கும், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி அவர்களுக்கும் எழுதிய நீண்ட கடிதத்தில், இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் சிங்கள அரசு திட்டமிட்டு மேற்கொண்டு வரும் அத்துமீறல் மற்றும் அராஜக நடவடிக்கைகளைத் தடுத்து

நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். மேலும் அந்தக் கடிதத்தில் தமிழ் மொழி மற்றும் தமிழர் கலாச்சாரத்தை நீர்த்துப் போகச் செய்வதிலும், தமிழர்களின் பொருளாதார வாழ்வை சீர்குலைத்துச் சிதைப்பதிலும் சிங்கள அரசு வேகமாக ஈடுபட்டு வருவதையும் எடுத்துக்காட்டி, இலங்கையிலே உள்ள தமிழர்கள் வாழும் 89 கிராமங்களுக்கு ஏற்கனவே இருந்த பெயர்களை மாற்றிவிட்டுச் சிங்களப் பெயர்களைச் சூட்டியிருப்பது பற்றியும் விரிவான அறிக்கையில் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்தின் முழு விவரமும், அந்தக் கிராமங்களின் பெயர்களும் ஏடுகளில் விரிவாக வெளிவந்தன. ஆங்கில நாளேடுகள் உட்பட; அந்தச் செய்திக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன.

பிரித்தானியா, கனடா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு இந்தச் செய்தி வழக்கறிஞர், தம்பி கே.எஸ். ராதாகிருஷ்ணன் முயற்சியால் அதிர்வு இணையம் வழியாகச் சென்றுள்ளது. அதனைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் படித்ததோடு, அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஆங்கில இணையங்களிலும் வெளியிட்டிருக்கிறார்கள். அதனைப் படித்துவிட்டு நேற்று ஒரு நாளில் மட்டும் சிலர் அனுப்பிய பதில்களின் சுருக்கம் வருமாறு :-

"சுதாகரன் (ஜெர்மனி):- உங்கள் செய்தியைப் பார்த்தேன். மிகவும் கவலையாக உள்ளது. இனி நான் பிறந்து வளர்ந்த ஊரின் பெயர் சிங்களத்தில் மாற்றப்படவிருக்கிறதா? என் பிள்ளைகளுக்கு நான் இனி எங்கே பிறந்தேன் என்று சொல்ல முடியாத நிலை. இதனைச் சுட்டிக்காட்டி கடிதம் எழுதிய முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எனது நன்றி.

ஜெயசங்கரி (சுவிஸ்):- சில இணையத்தின் செய்திகளைப் பார்த்து நானும் ஒரு காலத்தில் கலைஞர் அவர்களைக் குறை சொல்லியிருக்கிறேன். ஆனால் அவர் இப்போது செய்வதெல்லாம் ஈழத் தமிழர்களுக்கு நிம்மதியைத் தருகிறது.

திருநாவுக்கரசு (லண்டன்):- நல்ல ஒரு விஷயத்தைக் கலைஞர் அய்யா அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வளவு வயதாகியும் அவர் செயல்படும் விதம் பிரமிக்க வைக்கிறது. இதனை வேறு தமிழகத் தலைவர்கள் ஏன் செய்யவில்லை?

நிதர்ஷன் (அமெரிக்கா):- 89 தமிழ் நகரங்களையும் சிங்களத்தில் மாற்றினால், இனி நமது அம்மாவைக் கூட நாம் "அம்மே" என்று சிங்களத்தில்தான் கூப்பிட வேண்டும் போல இருக்கே அண்ணா! இதில் கலைஞர் அவர்கள் செய்த வேலை பாராட்டத்தக்கது. அவராவது கடிதம் எழுதினார். மற்றவர்கள் எல்லாம் எங்கே போனார்கள்? அவர்கள் ஈழப் பிரச்சினையிலாவது இணைய மாட்டார்களா? எங்களுக்கு ஒரு விடிவு வராதா?

நிலா சுதன் (முன்னாள் போராளி) ஈழம் :- மட்டக்களப்பில் நாம் காலம் காலமாகக் கூப்பிட்டு வரும், குடுமி மலை என்னும் இடத்தை "தொப்பிகல" என்று சிங்களம் மாற்றி விட்டதே! இப்போது தமிழ் ஊடகங்கள்கூட "தொப்பிக்கல" என்றுதான் எழுதுகிறார்கள். எங்கே போய் முடியப்போகிறதோ தெரியவில்லை. ஆனால் நல்ல வேளையாகக் கலைஞர் அண்ணா அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கிறார். அவரால் ஏதாவது நடந்தால் நாங்கள் இங்கே நிம்மதியாக வாழலாம்.

விக்டர் (கனடா):- இதுவரை கலைஞர் அவர்கள் ஈழப் பிரச்சினைக்காக ஆட்சியை இரண்டு முறை இழந்தும், பல்வேறு இழப்புகள், துயரங்களைச் சுமந்த போதும், தற்போதும் கலைஞர் அய்யா அவர்கள் எங்களின்பால் நேசம் கொண்டு குரல் கொடுப்பதை ஈழத்துச் சொந்தங்களால் மறக்க முடியாது. எங்கள் நன்றிகள்!

நா.சிற்றரசு (ஜெர்மனி):- ஈழப் பிரச்சினையில் அய்யா கலைஞர் அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் எங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றன. ஐ.நா. மன்றத்திற்கும், ஐ.நா. மனித உரிமை ஆணையத்திற்கும் தி.மு.க. பொருளாளர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களையும், டி.ஆர். பாலு அவர்களையும், எங்களோடு நீண்ட காலம் தொடர்பில் உள்ள வழக்கறிஞர் கே.எஸ். இராதா கிருஷ்ணன் அவர்களையும் அனுப்பி பிரிட்டன் மாநாட்டில் கலந்துகொண்டு, எங்களுக்காகக் குரல் கொடுக்கச் சொன்னார். இந்திய நாடாளுமன்றத்தில் கவிஞர் கனிமொழி அவர்களும் எங்களுக்காகக் குரல் கொடுத்ததை மறக்க முடியாது. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், நடக்கப் போவது நல்லவையாக இருக்கட்டும். கலைஞர் அய்யாவின் முன்னெடுப்புகளால் எங்களுக்கு மறுவாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது."

இதுபோன்ற ஏராளமான கடிதங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. முதலில் வந்ததை மட்டும் இங்கே குறிப்பிட்டுள்ளேன்.

இந்தச் செய்திகளை எல்லாம் ஏதோ என் பெருமைக்காக நான் இங்கே எழுதிடவில்லை. உலகம் முழுவதிலும் உள்ள நம்முடைய தமிழ்ச் சொந்தங்களின் எண்ணவோட்டம் எவ்வாறு உள்ளது என்பதைக் குறிப்பிடத்தான் சிலவற்றை மட்டும் எடுத்துக்காட்டியிருக்கிறேன். இப்படிச் சுமார் நூற்றுக்கணக்கான மின்னஞ்சல்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், ஆனால் அவை அனைத்தையும் இங்கே இணைக்க முடியாது என்பதால் சிலவற்றை மட்டும் இணைத்துள்ளோம் என்றும் இலண்டனிலிருந்து நண்பர் குகதாசன் குகநேசன் என்கிற கண்ணன் அனுப்பியிருக்கிறார்.

வரும் மார்ச் திங்களில் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமை சபையின் கூட்டத் தொடர் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி விரிவாக விவாதிக்கும் என்ற நம்பிக்கை நமக்கு உள்ளது. உலக நாடுகளின் கடுமையான கண்டனங்கள் இலங்கை அரசுக்கு எதிராக அப்போது தெரிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த நேரத்தில் நம்முடைய இந்தியா, இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக உறுதியான நிலைப் பாட்டினை மேற்கொள்ள வேண்டுமென்பதே தமிழகத்தில் வாழும் தமிழர்களின் விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

இதைப் பற்றியெல்லாம் விரிவாக விவாதித்திடத்தான் பெப்ரவரி திங்கள் 4ஆம் நாள் அன்று மாலையில் அண்ணா அறிவாலயத்தில் "டெசோ" உறுப்பினர்களின் கலந்துரையாடல் கூட்டம் நடைபெறவுள்ளது. இந்த மடலில் நான் எழுதியுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அந்தக் கூட்டத்தில் விவாதித்து; துன்பச் சூறாவளியில் துவண்டு கொண்டிருக்கும் இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் நல்லொளி பரவிட நல்ல முடிவுகளை எடுப்போம்!

அன்புள்ள,

மு.க.

26-1-2013

3700. வெளியே வந்து விட்டது பூனைக்குட்டி!

உடன்பிறப்பே,

கலைஞானி தம்பி கமல்ஹாசன் தயாரித்து, இயக்கி, நடித்துள்ள "விஸ்வரூபம்" திரைப்படத்திற்குத் தமிழக அரசு விதித்துள்ள தடைதான் தமிழகத்திலே அனைவரது கவனத்தையும் ஈர்த்திட்ட பிரச்சினையாகும். 29-1-2013 அன்று மட்டும் சென்னை உயர்நீதிமன்றத்தில், நீதியரசர் திரு.கே.வெங்கட்ராமன் முன்னிலையில் ஆறு மணி நேரம் இதுபற்றிய வழக்கு விசாரணை நடைபெற்றுள்ளது. "விஸ்வரூபம்" திரைப்படம் தமிழகத்தில் ஜனவரி 25ஆம் தேதியன்று வெளியிடப்படுவதாக இருந்தது. இந்தத் திரைப்படத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான காட்சிகள் இடம்பெற்றிருப்பதாக ஒரு புகார் எழுந்தது. இதையடுத்து ஒரு இஸ்லாமிய அமைப்பினர் கொடுத்த புகாரின் அடிப்படையில், தமிழக அரசு "விஸ்வ ரூபம்" திரைப்படத்தைத் தமிழகத்திலே வெளியிடத் தடை பிறப்பித்தது. தடை உத்தரவை எதிர்த்துச் சென்னை உயர்நீதிமன்றத்தில் படத்தைத் தயாரித்த ராஜ்கமல் நிறுவனம் வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கு விசாரணைதான் ஆறு மணி நேரம் நடைபெற்றுள்ளது.

இஸ்லாமிய சமுதாயத்தின்பால் நானோ, தம்பி கமல் அவர்களோ, நண்பர் சூப்பர் ஸ்டார் ரஜினி அவர்களோ எந்த அளவிற்குப் பாசமும் பற்றும் மதிப்பும் மரியாதையும் உடையவர்கள் என்பதை இந்தப் பிரச்சினை எழுந்தவுடன் 26-1-2013 நான் விடுத்த அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். அந்த அறிக்கையில் மேலும் உலகில் எந்தவொரு பகுதியிலும் இஸ்லாமியர்களுக்கு எதிராக நடைபெறும் விமர்சனங்களையோ, கிளர்ச்சிகளையோ, நானும் என் தலைமையில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகமும் என்றைக்கும் ஆதரித்தது இல்லை என்பதைக் குறிப்பிட்டதோடு, "விஸ்வரூபம்" திரைப்படத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள சர்ச்சையை மேலும் நீட்டிக்காமல்,

ஜனநாயக ரீதியான பேச்சுவார்த்தை, கலந்தாலோசனை மூலமாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், சட்டம், ஒழுங்கு, அமைதியைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பிலே உள்ள தமிழக அரசும் அதற்கு ஒத்துழைத்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தேன்.

சூப்பர் ஸ்டார் ரஜினி அவர்கள் விடுத்த அறிக்கையிலும், இஸ்லாமியர்களுக்கு வேண்டுகோள்விடுத்து, இந்தத் திரைப்படத்தை வெளியிட உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மேலும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி.வீரமணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், பா.ஜ.க. தலைவர் பொன். ராதா கிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் தொல்.திருமாவளவன், திரைப்பட இயக்குநர்கள் பாரதிராஜா, பார்த்திபன், அமீர் போன்றவர்கள் விஸ்வரூபம் திரைப்படத்திற்கு அரசு விதித்துள்ள தடையை நீக்க வேண்டுமென்று அறிக்கைகள் வாயிலாகக் கேட்டுக்கொண்டனர். மேலும் அவர்கள் அறிக்கையில் கமல் எப்படிப்பட்டவர் என்பதையும், யாருடைய மனதையும் புண்படுத்தும்படியாக நடந்து கொள்ளாதவர் என்பதையும் எடுத்து எழுதினார்கள். நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் சுமூகமான தீர்வு ஏற்படுத்த முதலமைச்சர் கமலஹாசனை அழைத்துப் பேசவேண்டுமென்று அறிக்கை விட்டிருந்தார். இவ்வளவிற்கும் மேலாக, கலைஞானி கமல் அவர்களே விடுத்த அறிக்கையில் தான் இஸ்லாமியர்களுக்கு எதிரானவன் அல்ல என்றும், இந்தப் படமும் முஸ்லீம்களுக்கு எதிரானது அல்ல என்றும், முஸ்லீம்கள் தனக்குத் சகோதரர்கள் என்றும் தெரிவித்திருந்தார். ஆனாலும் தமிழக அரசு தான் விதித்த தடையைத் திரும்பப் பெற முன் வரவில்லை.

தமிழக அரசு இந்த அளவிற்குக் கடுமையாக இந்தத் திரைப்படத்திற்கு தடை விதிப்பதற்கு என்ன காரணமோ தெரியவில்லை. ஆனால் ஒரு சாரார், இந்தத் திரைப்படத்தை அ.தி.மு.க.விற்கு மிகவும் வேண்டிய ஒரு தொலைக்காட்சி நிறுவனம் அடிமாட்டு விலைக்கு வாங்க முயன்றதாகவும், ஆனால் படத்தைத் தயாரித்தவர்கள் தாங்கள் 100 கோடி ரூபாய்க்கு மேல்

செலவழித்து இந்தத் திரைப்படத்தைத் தயாரித்துள்ள நிலையில் குறைந்த விலைக்கு விற்க மறுத்துவிட்டு, அதிக விலைக்கு வேறொரு தொலைக்காட்சி நிறுவனத்திற்கு விற்றுவிட்டதுதான் காரணம் என்றும் சொல்கிறார்கள். அதைப் போலவே, மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அவர்களைப் பற்றிய நூல் வெளியீட்டு விழாவில் கலைஞானி கமல் பேசும்போது, "வேட்டிக் கட்டிய ஒரு தமிழன், பிரதமராக வர வேண்டும்" என்று ப.சிதம்பரம் அவர்களைக் குறிப்பிட்டுப் பேசியதும் கோபத்திற்கு ஒரு காரணம் என்று கூறுகிறார்கள். ஆனால் இந்தக் கருத்துக்கள் எல்லாம் எந்த அளவிற்கு உண்மை என்று நமக்குத் தெரியவில்லை.

இந்த வழக்கினை விசாரிக்கும் உயர்நீதி மன்ற நீதிபதி அவர்களே, இந்தப் படத்தினைச் சிறப்புக் காட்சியின் மூலமாக நேரிலே பார்த்தார். அதன் பிறகு 28ஆம் தேதி நடைபெற்ற விசாரணையின்போது, உயர்நீதி மன்ற நீதிபதி அவர்களே, இரு தரப்பினரும் கலந்து பேசி ஒரு நல்ல முடிவினைக் காணலாம் என்று தெரிவித்தார். ஆனால் தமிழக அரசு அதற்கான முயற்சியிலும் ஈடுபடவில்லை.

29-1-2013 தேதிய "இந்து" நாளிதழ் இந்தப் பிரச்சினை பற்றி ஒரு நீண்ட தலையங்கமே "Quash the Ban, Screen the Film" அதாவது "தடையை நீக்கு, திரைப்படத்தை வெளியிடு" என்ற தலைப்பிலே எழுதியுள்ளது. அதில்,

"The delay in overturning the unjustifiable ban on Kamal Haasan's Vishwaroopam is beginning to appear every bit as unjustifiable. It was only two years ago that the Supreme Court set aside the two-month ban on the Hindi film Aarakshan on the ground that States cannot proscribe films that have been cleared by the Central Board of Film Certification on the mere apprehension that screening them may cause a law and order problem. As we pointed out recently, the landmark case that set the tone for such judgments was S.Rangarajan v/s P. Jagajivan Ram, where the Supreme Court held that "freedom of expression cannot be suppressed on account of threat of demonstrations and processions and threat of violence". The ban on Vishwaroopam must be quashed and the police directed to provide adequate protection to threatres and moviegoers."

(கமலஹாசனின் விஸ்வரூபம் திரைப்படத்திற்கு விதிக்கப்பட்டிருக்கும் நியாயமில்லாத தடையை விலக்கிக் கொள்வதில் ஏற்பட்டு வரும் தாமதம் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாததாகும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் இந்திய உச்ச நீதிமன்றம் "அரக்ஷன்" என்ற இந்தித் திரைப்படத்திற்கு விதிக்கப்பட்டிருந்த இரண்டு மாதத் தடை உத்தரவை ரத்து செய்தது. அப்படி ரத்து செய்யும்போது மத்திய தணிக்கைக்குழு ஒரு திரைப்படத்திற்கு அனுமதி அளித்த பிறகு, அந்தப் படம் திரையிடப்படுவது சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தும் என்று நினைக்கக் கூடாது. இந்திய உச்சநீதி மன்றம் மேலும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினையும் வழங்கியுள்ளது.

எஸ்.ரெங்கராஜன் என்பவருக்கும் பி.ஜெகஜீவன் ராம் என்பவருக்கும் இடையே நடைபெற்ற ஒரு வழக்கில், உச்சநீதி மன்றம் "வன்முறைக்கு வழி வகுக்கும் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என்பதற்காக பேச்சுரிமையை நசுக்கக் கூடாது" என்று தீர்ப்பு அளித்துள்ளது. விஸ்வரூபம் திரைப்படத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும். வெளியிடப்படும் திரையரங்குகளுக்கும், திரைப்பட ரசிகர்களுக்கும் தேவையான பாதுகாப்பைத் தர வேண்டும்)

என்று "இந்து" ஏட்டில் தலையங்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"இந்து" நாளிதழ் இவ்வாறு எழுதியதற்குப் பிறகும் தமிழக அரசு முன்வந்து தான் விதித்த தடையைத் திரும்பப் பெற்றிட முன் வந்ததா? முன் வந்திருந்தால்தான் மனித நேயமிக்க அரசாக அமைந்து விடுமே?

தமிழக அரசு முன் வராத காரணத்தால்தான் நேற்றையதினம் உயர் நீதி மன்றத்தில் ஆறு மணி நேரம் வழக்கு விசாரணை நடைபெற்றுள்ளது. அந்த வழக்கில் கமலுக்காக வாதாடியவர் யார் தெரியுமா? கழக ஆட்சியில் அட்வகேட் ஜெனரலாக திறம்படப் பணியாற்றிய மூத்த வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் தான்! அவர் நீதிமன்றத்தில், விஸ்வரூபம் திரைப்படம் இந்திய முஸ்லீம்கள் யாரையும் அவமானப்படுத்தவில்லை என்றும், தமிழகம் முழுவதும்

31 மாவட்ட கலெக்டர்களும் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துவிடும் என்று ஊகித்து ஒரே நேரத்தில் தடை உத்தரவு பிறப்பிக்க முடியுமா என்றும், இந்தத் திரைப்படத்திற்கு அனுமதி சான்றிதழ் வழங்கும்போது, தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படவில்லை என்றும், தணிக்கைக் குழு அனுமதி வழங்கிய பிறகு, மாநில அரசு தடை விதிக்க முடியாது என்றும், இந்தப் படத்தில் தன் ஒட்டுமொத்த வாழ்க்கை சம்பாத்தியத்தையும் கமல்ஹாசன் முதலீடு செய்திருக்கிறார் என்றும் அடுக்கடுக்காகத் தன் வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதியரசர் வெங்கட்ராமன் அவர்கள் தனது தீர்ப்பினை இரவு 10.15 மணிக்குத் தான் அளித்துள்ளார். அதில் இந்தத் திரைப்படத்திற்கு அரசு விதித்திருந்த 144 தடையை நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பித் திருக்கிறார். ஆனால் இதற்குப் பிறகும் அ.தி.மு.க. அரசு மனம் இரங்கியதா? இல்லை, இரவோடு இரவாக நள்ளிரவில் 11.30 மணிக்கு தலைமை நீதிபதி பொறுப்பிலே உள்ள நீதியரசர் எலிபி தர்மாராவ் அவர்களின் வீட்டிற்கே சென்று, தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்ய மனு கொடுத்திருக்கிறார்கள். தலைமை நீதிபதி அதை ஏற்றுக்கொண்டு இன்று (30-1-2013) காலை 10.30 மணிக்கு அப்பீல் செய்ய அனுமதி வழங்கியிருக்கிறார். எந்த அளவிற்கு ஜனநாயகமும், மனிதாபிமானமும் இந்த அரசினரிடம் இருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேட வேண்டுமா என்ன?

ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்று இன்றைய "டைம்ஸ் ஆப் இண்டியா" ஆங்கில நாளேடு செய்திக் கட்டுரை ஒன்றை "முஸ்லீம் வாக்கு வங்கியை ஈர்த்திடும் முயற்சியில் அ.தி.மு.க. ஈடுபட்டுள்ளதா?" என்று தலைப்பிட்டு வெளியிட்டிருக்கிறது. அதில், "முஸ்லீம்களையும் விஸ்வரூபம் திரைப்படத்திற்கு அவர்களுடைய ஆட்சேபணைகளையும் அ.தி.மு.க. அரசு ஆதரிப்பது; முஸ்லீம் வாக்கு வங்கியை ஈர்த்துக் கொள்வதற்காகவே என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் "துப்பாக்கி" திரைப்படத்திற்கு ஆட்சேபணைகள் தெரிவிக்கப்பட்டபோது, முதலமைச்சர் ஜெயலலிதா உள்துறை செயலாளரிடம் இரு தரப்பினரையும்

அழைத்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று அறிவுறுத்தியதாகவும் முஸ்லீம் தலைவர் ஒருவர் தெரிவித்தார்" என்று எழுதப்பட்டுள்ளது.

"டைம்ஸ் ஆப் இந்தியா" எழுதியவாறு ஜெயலலிதா எப்படியாவது இஸ்லாமியர்களின் வாக்கு வங்கியைப் பெற முயற்சித்தாலும், அவருக்கு இஸ்லாமியர்கள்பால் எந்த அளவிற்கு உண்மையான பற்று உண்டு என்பதற்குக் கரசேவை நடைபெற்றபோது அவர் எவ்வாறு முஸ்லீம்களுக்கு எதிராக இருந்தார் என்பதும், சிறுபான்மையினர், பெரும்பான்மையினரை அனுசரித்து நடந்துகொள்ள வேண்டுமென்று அறிக்கை விட்டவர் என்பதும், அயோத்தியில் ராமர் கோவில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவது என்று கேள்வி எழுப்பியவர் என்பதும், கரசேவைக்கு அ.தி.மு.க. சார்பில் ஆட்களை அனுப்பியவர் என்பதும் இன்னும் மறந்திருக்க முடியாத நிதர்சன உண்மைகளாகும்.

ஆனால் கமல் படத்திற்கு ஜெயலலிதா இந்த அளவிற்கு எதிர்ப்பினைக் காட்டுவதற்கு என்ன தான் காரணம்? இந்தப் பகை என்பது இப்போது ஏற்பட்டதல்ல; அன்பு நண்பர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்தபோதே ஏற்பட்ட பகையாகும். கமல் அவர்கள் நடித்த "விக்ரம்" திரைப்படத்தின் சிறப்புக் காட்சி ஒன்றில் எம்.ஜி.ஆர். கலந்து கொண்டபோது, அம்மையார் ஜெயலலிதா தன் கைப்பட எம்.ஜி.ஆருக்கு எழுதிய கடிதத்தில்,

"கமலஹாசனின் "விக்ரம்" படத்தின் நிதி சேர்க்கும் சிறப்புக் காட்சியில் நீங்கள் கலந்துகொள்ள சம்மதித்தும், உங்களை அவமானப்படுத்தும் விதத்தில் விளம்பரமே செய்யாமல் விட்டானே - அதை வேறு யாராவது உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தார்களா? "நமக் கென்ன" என்று மற்ற எல்லோரும் இருந்து விட்டார்கள். ஆனால் என்னால் அப்படியிருக்க முடியவில்லை. அடுத்த நாளே - கமலஹாசன் படம் ரிலீஸ் ஆன நாளன்று - ஒவ்வொரு நாளேட்டிலும் முழு பக்க விளம்பரங்கள் கொடுத்தானே? நீங்கள் பார்த்தீர்களோ இல்லையோ - நான் கவனித்தேன். தனக்காக விளம்பரம், முழு பக்க விளம்பரம் கொடுக்க மட்டும் கமலஹாசனுக்குத் தெரிகிறது - ஆனால்

உங்களை, இவ்வளவு மக்கள் செல்வாக்குடைய முதலமைச்சரை அழைத்துவிட்டு விளம்பரமே செய்யவில்லை என்றால் - அவன் உங்களைக் கிள்ளுக்கீரை என்றா நினைத்தான்?" என்றெல்லாம் கைப்பட எழுதியதை நினைவுகூர்ந்தால்;

"விஸ்வரூபம்" திரைப்படத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடைக்கான உண்மைக்காரணம் தெரிகிறதா அல்லவா? "பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது" என்று தந்தை பெரியார் அடிக்கடி கூறுவாரே; எதற்காக இந்தத் தடை என்பது இப்போது புரிகிறதா இல்லையா?

அன்புள்ள,

மு.க.

31-1-2013

3701. எப்போது விஸ்வரூபம் எடுக்கப் போகிறதோ?

உடன்பிறப்பே,

2006 தமிழகச் சட்டசபைத் தேர்தலையொட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில்,

> "சென்னை மாநகரில் போக்குவரத்து நெருக்கடிக்குப் பெரிதும் உள்ளாகியுள்ள பகுதிகளில் "பறக்கும் சாலைத் திட்ட"த்தை (Elevated Highway) செயல்படுத்துவோம்"

-எனத் தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது.

அந்த வாக்குறுதியைச் செயல்படுத்திட முனையும் நோக்கில், 13.5.2006 அன்று கழக அரசு அமைந்தபிறகு, ஒரு மாத காலத்திற்குள்ளாக அதாவது, 5.6.2006 அன்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில்,

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை அகற்றுவதற்காகச் சென்னை துறைமுகத்திற்கு உயர்மட்டப் பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்தை அனுமதித்திட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு, சென்னைத் துறைமுகத்தையும், மதுரவாயல் சந்திப்பையும் இணைக்கும் இந்தியாவின் மிக நீளமான உயர்மட்ட மேம்பாலச்சாலை 1655 கோடி ரூபாய்ச் செலவில் அமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டு, இந்த மிகப் பிரமாண்டமான திட்டத்திற்கு மாண்புமிகு பிரதமர் மன்மோகன்சிங் அவர்கள் 8.1.2009 அன்று என் தலைமையில் நடைபெற்ற விழாவில் அடிக்கல் நாட்டினார். அப்போது நமது பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் பேசும்போது, "This Project is one more important mile-stone in the ambitious road programme of the Government that will transform the Country's

transport sector, give a boost to industry and integrate the economy" என்று குறிப்பிட்டதையும் மறக்க முடியாது. இந்தத் திட்டத்தின் மதிப்பு பின்னர் 1,815 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது.

இத்திட்டம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் நிறைவேற்றப்படத் திட்டமிட்டுத் தொடங்கப்பட்டது. இதில் பெரும் பகுதி நிதி ஒதுக்கீடு மத்திய அரசின் நிதியாகும்.

சென்னைத் துறைமுகத்திலிருந்து தங்கு தடையற்ற சரக்குப் பெட்டகப் போக்குவரத்திற்கு வழிவகை செய்வதற்காகச் சென்னைத் துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரை கூவம் ஆற்றின் ஒரு கரையோரமாகப் பறக்கும் விரைவுச் சாலையை அமைக்க இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குத் தமிழக அரசு 22.6.2007 அன்று கொள்கை அளவில் அனுமதி வழங்கியது.

பின்னர், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் கேட்டுக்கொண்டபடி, இந்த உயர்மட்ட பறக்கும் சாலையைச் சென்னை துறைமுகத்திலிருந்து கோயம்பேடுவரை கூவம் ஆற்றின் கரையோரமாகவும், கோயம்பேட்டிலிருந்து மதுரவாயல் வரை பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையின் மேலும் அமைப்பதற்கு 7.3.2008 அன்று அனுமதி வழங்கித் தமிழக அரசு ஒப்புதல் அளித்தது.

இவ்விரைவுச் சாலை உயர்மட்ட சாலையாக 17.5 கிலோ மீட்டர் நீளமும், தரைமட்ட சாலையாக 1.5 கிலோ மீட்டர் நீளமும் ஆகமொத்தம் 19 கி.மீ. நீளமுடையதாக அமையும்.

1815 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையும் இச்சாலை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மூலமாகக் கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் (Build, Operate and Transfer) திட்டத்தின் கீழ் அமைக்கப்பட முடிவெடுக்கப்பட்டது.

நான்கு வழி உயர்மட்ட சாலையாக அமையவுள்ள இச்சாலையின் கட்டுமானப் பணிகள் 3 ஆண்டு காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்கப்படும் என்றும், இது, இந்தியாவிலே மிக நீளமான உயர்மட்ட சாலையாக அமையும் என்றும் அப்போதே அறிவிக்கப்பட்டது.

இவ்வுயர்மட்ட மேம்பாலச் சாலை அமைப்பதற்குத் தேவைப்படும் நில எடுப்புக்கான செலவுத் தொகையையும் மற்றும் இத்திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்; மறுகுடியமர்வுக்கு வகைசெய்தல் ஆகியவற்றுக்காக ஏற்படும் செலவினத்தையும் சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகமும், தமிழ்நாடு அரசும் 50க்கு 50 என்கிற விகிதாச்சார அடிப்படையில் ஏற்பதற்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதனால் தமிழக அரசுக்கு 130 கோடி ரூபாய் செலவாகும்.

இதைத் தவிர, இந்த உயர்மட்ட பறக்கும் சாலை அமைப்பதையொட்டி, இப்பகுதிகளில் மாசுக் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் அனுமதி பெறுதல், குடிநீர்க் குழாய்கள், கழிவுநீர்க் குழாய்கள் மற்றும் மின் கம்பங்கள் ஆகியவற்றை இடமாற்றம் செய்தல் போன்ற பணிகளுக்காக இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்றும் ஏற்கனவே உறுதி அளிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான நிலஎடுப்புப் பணிகளால், பாதிக்கப்படுபவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல், மறு குடியமர்வுக்கு வகைசெய்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஒருங்கிணைப்பு நிறுவனமாக (Nodal Agency) நியமிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளை அவ்வப்போது ஆய்வு செய்வதற்காகத் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழுவும், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் முதன்மைச் செயலாளர் தலைமையில் ஒரு துணைக் குழுவும் 14.9.2008 அன்று தமிழக அரசினால் அமைக்கப்பட்டது.

சென்னைத் துறைமுகத்திற்குச் செல்லும் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கி விடுவதால் அவை துறைமுகத்தை அடைவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. எரிபொருள்களும் வீணாகித் தேவையற்ற செலவினமும் ஏற்படுகிறது. இந்த உயர்மட்ட சாலை அமைப்பதன் மூலம், சென்னைத் துறைமுகத்திலிருந்து சரக்குப் பெட்டகங்களைத் தங்க நாற்கரச் சாலை வழியாக எந்தப் பிரச்சினையும் இல்லாமல், கால விரயத்தையும், எரிபொருள் விரயத்தையும் தவிர்த்து, இதர

பகுதிகளுக்கு விரைவாகவும், தடங்கலின்றியும் கொண்டு செல்ல முடியும்.

பிற பகுதிகளிலிருந்து சரக்குகளைத் துறைமுகத்திற்கு விரைவாகக் கொண்டு வரவும் முடியும்.

இதன் தொடர் பயனாகச் சென்னை மாநகரில் உள்ள மற்ற சாலைகளிலும் வாகனப் போக்குவரத்துகளால் ஏற்படும் நெரிசல்களும் வெகுவாகக் குறையும்.

2011ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மத்திய அரசின் சுற்றுச் சூழல் அமைச்சகம் இந்தத் திட்டத்தைத் தொடருவதற்கான அனுமதியையும் வழங்கிவிட்டது.

கழக அரசின் திட்டங்களுக்கெல்லாம் மூடுவிழா நடத்திய பிறகு அடுத்து என்ன செய்யலாம் என்று பார்த்து, கழக ஆட்சியின் போது தொடங்கப்பட்ட மத்திய அரசின் திட்டமான சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் உயர் மட்டச் சாலை 1,815 கோடி ரூபாய் செலவிலே தொடங்கப்பட்டு அதிவேகமாக நடைபெற்று வந்ததை, அ.தி.மு.க. ஆட்சியினர் “பணியைத் தொடராதே” என்று 2012ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தடுத்து நிறுத்தி விட்டார்கள். இந்தத் திட்டத்திற்கு நீதிமன்றத்தின் மூலம் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நேரத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தின் முதல் அமர்வில் தலைமை நீதிபதி இக்பால் அவர்களும், நீதிபதி சிவஞானம் அவர்களும் 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இந்தத் திட்டத்தைத் தொடரலாம் என்று தீர்ப்பளித்ததையும் தற்போதைய தமிழக அரசு பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

திட்டத்திற்கான அனைத்து அனுமதிகளும் முறையாக வழங்கப்பட்டு, பிரதமரே வந்து பணிகளைத் தொடங்கி வைத்த திட்டம் அது. அந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் அரை மணி நேரத்தில் செல்லுகின்ற பயணம் ஐந்தே நிமிடங்களில் முடிவுறும்; போக்குவரத்துச் சுலபமடையும். ஏற்கனவே தமிழக அரசே முழுமையாக ஆய்ந்து அனுமதி கொடுத்து தொடங்கப் பட்ட திட்டம். இந்த விவரங்களையெல்லாம் மத்திய அரசின் துறைச் செயலாளரே தமிழக அரசின் தலைமைச் செயலாளருக்கு விரிவாக எழுதியதோடு, நேரிலும் வந்து விளக்கியிருக்கிறார். மத்திய அமைச்சரவையில் செயலாளர் திரு.டி.ஏ.கே.நாயர்

அவர்கள் பிரதமரின் அனுமதியோடு சென்னை வந்து முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் இந்தத் திட்டம் விரைந்து நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விளக்கியிருக்கிறார். அதற்குப் பிறகும் சென்னைத் துறைமுகம் - மதுரவாயல் உயர் மட்ட விரைவுச் சாலைப் பணியினையும் அ.தி.மு.க. அரசு முடக்கிப் போட்டுள்ளது.

16-5-2012 அன்று டெல்லி மாநிலங்களவையில் கவிஞர் கனிமொழி இந்த மதுரவாயல் திட்டத்தைத் தமிழக அரசு முடக்கிப் போட்டிருப்பது குறித்துப் பேசியபோது, அ.தி.மு.க. உறுப்பினர்கள் எல்லாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள். சுமார் ஓராண்டு காலமாக இந்தத் திட்டத்திற்கு அ.தி.மு.க. அரசு நியாயமான அடிப்படை எதுவுமின்றி, முட்டுக் கட்டை போட்ட காரணத்தினால் திட்ட மதிப்பீடும் அதிகமாகி, பொதுமக்களின் வரிப்பணம் விரயமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் பணிகள் நிறைவேற்றப் பட்டு வந்த இடத்தில் எல்லாம் புல், பூண்டுகள் முளைத்துவிட்டன. இந்த முக்கியமான திட்டத்திற்கு அ.தி.மு.க. அரசு தடங்கலாக இருந்ததின் காரணமாக மக்களிடையே எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகமானதால் தமிழக அரசு தன் முடிவினை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. 29-1-2013 தேதிய "இந்து" நாளிதழில் "Ray of hope for Port - Maduravoyal Project - State wants NHAI to realign elevated expressway along Cooum and resume work" என்ற தலைப்பில் இத்திட்டம் பற்றி நம்பிக்கை ஏற்படுத்தும் விதத்தில் செய்தி வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியின்படி, தமிழக அரசு இந்தத் திட்டத்தைத் தொடருவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருப்பதாகவும், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வந்த தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்திற்கு அதுபற்றிக் கடிதம் எழுதியிருப்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது. மேலும் அந்தக் கட்டுரையை முடிக்கும்போது, "The Tamil Nadu Government is yet to complete its share of the work in terms of relief and rehabilitation of dwellers along the Cooum River and acquisition of the land" என்றும் எழுதியிருப்பதும் குறிப் பிடத்தக்கது.

தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையத்தைப் பொறுத்தவரை; தமிழக அரசோடு செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு மாறாக எதுவும் செய்யப்படவில்லை என்பதில் உறுதியாக இருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக 500 கோடி ரூபாய் அளவிற்குச்

செலவுகள் செய்யப்பட்டு; இருபது சதவிகிதப் பணிகள் முற்றுப் பெற்றுள்ளன.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, இது போன்ற பல திட்டங்கள் காழ்ப்புணர்ச்சி காரணமாக முடக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக மக்களின் வரிப் பணம்தான் விரயமாக்கப்படுகிறது. சென்னைத் துறைமுகத்தையும் மதுரவாயலையும் இணைக்கும் இத்திட்டம் ஏற்கனவே விரிவாகப் பேசப்பட்டு, மத்திய அரசும் மாநில அரசும் விவாதங்கள் நடத்தி அதன் பிறகுதான் ஒப்புதல் தரப்பட்டு இந்தியப் பிரதமர் அவர்களே வந்திருந்து அடிக்கல் நாட்டினார்கள். அதனால் என்ன? பிரதமர் அவர்களும், திருமதி சோனியா காந்தி அவர்களும் நேரில் வந்து திறப்பு விழா நடத்தி வைத்த புதிய தலைமைச் செயலகம் - புதிய சட்டப்பேரவைக் கட்டிடத்தையே மருத்துவமனையாக மாற்ற முனைபவர்களுக்கு மதுரவாயலா முக்கியம்?

“வளர்ச்சிப் பாதையில் தமிழகத்தை முன்னெடுத்துச் சென்று முதன்மை மாநிலம் ஆக்குவேன்” என்று அடிக்கடி முழங்கிடும் ஜெயலலிதா; அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் தொடர்பான அந்த மாபெரும் திட்டத்தைத் தொடர்ந்து செயலாக்கம் பெற்றிட அனுமதித்திருந்தால் 2013ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாகவே அத்திட்டம் முழுமை அடைந்திருக்கும். ஆனால் அதன் காரணமாகத் தி.மு.கழகத்திற்குப் பெயர் வந்து விடுமே என்ற ஒரே உள்நோக்கத்தோடு அ.தி.மு.க. அரசு அத்திட்டத்திற்கு முட்டுக்கட்டை போட்டுத் தாமதம் ஏற்படுத்தி மக்கள் வரிப் பணத்தை பாழடித்துவிட்டு; மாநில வளர்ச்சியில் அக்கறை இருப்பதாகச் சொல்லிக் கொள்வதெல்லாம் போலியானதே என்ற உண்மை மக்களுக்குத் தெரியாமலா போய்விடும்? இந்த உண்மைகள் எல்லாம் எப்போது விஸ்வரூபம் எடுக்கப் போகிறதோ என்பது இப்போது தெரியாது; ஆனால் தெரியாமலே போய்விடாது;

தெரிந்தே தீரும்!

அன்புள்ள,

மு.க.

1-2-2013

3702. தனிப்பட்ட காழ்ப்பும், தலைமைச் செயலக மாற்றமும்!

உடன்பிறப்பே,

புதிய தலைமைச் செயலகம் குறித்து நீதிமன்றங்களின் முடிவு வெளிவந்துள்ள நிலையில், பல காலக்கட்டங்களில் அது தொடர்பான நிகழ்வுகளை நினைவு கூர்வது பொது நலனுக்கு உகந்ததே என்று கருதி, இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

1983ஆம் ஆண்டு முதலே தமிழகத் தலைமைச் செயலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட இடம் தேடப்பட்டது. 1983ஆம் ஆண்டில் எம்.ஜி.ஆர். புதிய தலைமைச் செயலகத்தைத் திருச்சியில் கட்டலாமா என்று எண்ணினார். 2003இல் ஜெயலலிதா, புதிய தலைமைச் செயலகத்தைத் திருவிடந்தை, தையூர் பகுதிகளில் கட்டலாமா என்று யோசித்தார்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்தான் அப்போது தலைமைச் செயலகம் இயங்கி வந்தது. இந்த இடத்தில் இந்திய ராணுவமும் இருப்பதால் பாதுகாப்பு காரணமாகப் பொதுமக்கள் எளிதில் வந்து செல்ல முடியாத ஒரு நிலை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. மக்களாட்சியில், ஆட்சியின் கேந்திரமையம் மக்கள் உரிமையுடன் வந்து செல்லக் கூடிய வகையில் அமைந்திட வேண்டுமென்பதை அனைவரும் அறிவர். மேலும், அங்கே உள்ள கட்டிடங்களில் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும்கூட - ஏன், அங்கே இருக்கும் புல்லைச் செதுக்கி அகற்றுவதற்குக்கூட - இந்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டியிருக்கிறது. வேறு சில அரசு அலுவலகங்கள் நகரின் வெவ்வேறு இடங்களில் இயங்கி வருவதால் அதன் காரணமாக "வாடகை" என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்குத் தொடர்ந்து செலவு ஏற்படுகிறது என்பதாலும்; அனைத்து அலுவலகங்களும் ஒரே வளாகத்தில் அமையக் கூடிய விதத்தில் புதிய இடத்தை அ.தி.மு.க. அரசு முதலில் தேடி வந்தது.

தி.மு.கழக ஆட்சியில் கட்டி 14-8-1975 அன்று திறந்து வைக்கப்பட்ட - நாமக்கல் கவிஞர் மாளிகையில், பல இடங்களில் விரிசல் விழுந்துள்ளது என்றும், கசிவு ஏற்படுகிறது என்றும், எனவே கோட்டையில் இருந்து உடனடியாகத் தலைமைச் செயலகத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் அப்போது ஜெயலலிதா கூறினார்.

சென்னை கடற்கரை சாலையில் உள்ள ராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிதாகத் தலைமைச் செயலகம் கட்டுவதற்கு ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது முடிவெடுத்தார். நிதி நெருக்கடி அரசுக்கு இருந்தாலும், தொலைநோக்குப் பார்வையோடு புதிய தலைமைச் செயலகத்தை ராணி மேரி கல்லூரி வளாகத்தில் அமைப்போம் என அப்போது அ.தி.மு.க. அரசு தெரிவித்தது. சட்டப்பேரவையில் ஜெயலலிதாவால் அப்போது அறிவிக்கப்பட்டபோதே, "தற்போதைய தலைமைச் செயலகம் தகுதி வாய்ந்ததாக இல்லை. ராணி மேரி கல்லூரி கட்டிடங்கள் மோசமான நிலைமையில் உள்ளன. அதை இடிக்க வேண்டும். புதிய தலைமைச் செயலக வளாகம் அவசியம்." என்றெல்லாம் கூறப்பட்டது. ஆனால் அந்தக் கல்லூரியின் ஆசிரியர், மாணவியர் மற்றும் பெற்றோர் எதிர்ப்பின் காரணமாக அது கைவிடப்பட்டது.

பின்னர், சென்னை கோட்டூர்புரத்தில் தலைமைச் செயலகம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழா பூஜை - புனஸ்காரங்களோடு நடைபெற்று, அன்றைய முதல் அமைச்சரான ஜெயலலிதாவே அதிலே கலந்து கொண்டார். ஆனால் அதுவும் நடைபெறவில்லை.

அதையெல்லாம் மனதிலே கொண்டுதான், முந்தைய ஆட்சி எடுத்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக, தி.மு.கழக ஆட்சியிலே 2007 ஆம் ஆண்டு இடம் தேர்வு செய்யப்பட்டு புதிய தலைமைச் செயலகம் உருவாக்கப்பட்டது.

ஓமந்தூரார் வளாகத்தில் சட்டமன்றப் பேரவை, மேலவை - அவற்றையொட்டி தலைமைச் செயலகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலகங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கும்; நவீனமயமான வகையில் கலைவாணர் அரங்கத்தை உருவாக்கிடவும்; முனைந்து - ஏறத்தாழ 86 ஆயிரத்து 450 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட "ஏ" பிளாக் என்ற கட்டிட வளாகத்தில் சட்டப்பேரவை கூட்ட அரங்கம் - பேரவைத் தலைவர் அலுவலகம்

- மேலவை அரங்கம் - சட்டமன்ற நூலகம் - கூட்ட அரங்கு - மேதகு ஆளுநர் அலுவலகம் - முதலமைச்சர் அலுவலகம் - முதல் அமைச்சரின் செயலகம் - எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் - அமைச்சர்களின் அலுவலகங்கள் - அமைச்சரவைக் கூட்ட அரங்கம் - தலைமைச் செயலாளர் அலுவலகம் - சட்டமன்றத் துறை - பொதுத் துறை - நிதித்துறை - உள்துறை - சட்டத்துறை - திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை ஆகிய ஆறு முதன்மையான துறைகளுக்குரிய அலுவலகங்கள் அமைக்கப்பட்டு அழகுறக் கட்டி முடிக்கப்பட்டது. 13-3-2010இல் புதிய தலைமைச் செயலகம் - சட்டப் பேரவைக் கட்டிடங்களின் திறப்பு விழா பிரதமர் மன்மோகன் சிங், திருமதி சோனியா காந்தி ஆகியோருடன் நானும் கலந்து கொண்டு நடைபெற்றது.

மிகவும் சிறப்பான முறையில் தலைமைச் செயலகத்திற்கென்றே வடிவமைக்கப்பட்டு கட்டிடம் 1000 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டமிடப்பட்டு, அதில் 581.80 கோடி ரூபாய் செலவிடப்பட்டுக் கட்டி முடிக்கப்பட்டு, திறப்பு விழாவும் நடத்தப்பட்ட பிறகு; அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், புதிதாகக் கட்டப்பட்ட தலைமைச் செயலகக் கட்டிடத்தைப் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனையாக மாற்றுவது என்று 19-8-2011 அன்று நடைபெற்ற தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுத்து, அந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்தாமல் மாற்ற வேண்டிய அவசியம் என்ன?

தற்போது புதிய தலைமைச் செயலகம் கட்டப்பட்டு - திறப்பு விழாவும் நடைபெற்று - சட்டப் பேரவைக் கூட்டத் தொடர்களும் நடைபெற்று - ஏழு முறை அமைச்சரவைக் கூட்டங்களும் நடைபெற்று - முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் எல்லாம் புதிய தலைமைச் செயலகத்திற்கு இடம் மாறிய பிறகு; 2011 மே மாதம் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன், தலைமைச் செயலகத்தை, பழைய இடத்திலேயே தொடர்ந்து நடத்துவோம் என்றும்; புதிதாகக் கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தைப் பயன்படுத்தமாட்டோம் என்றும் கூறி, அங்கே வைக்கப்பட்ட பெயர்ப் பலகைகளை எல்லாம் பெயர்த்தெறிந்துவிட்டு, புதிய பலகைகளை வைத்திடும் பணியிலே "ஜெயா" அரசு ஈடுபட்டது.

கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்ட ஓமந்தூரார் வளாகத்திலே உள்ள தலைமைச் செயலகத்திலே தான்; திரிபுரா ஆளுநர் என்னைச்

சந்தித்தார்; இந்தியக் கிரிக்கெட் குழுவின் தலைவரான மகேந்திர சிங் டோனி அவர்களுக்கு; உலகக் கோப்பையை வென்றதற்காகச் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது; அது மட்டுமல்லாமல்; மத்திய அரசின் அமைச்சர்கள், திரு.ப.சிதம்பரம், திரு.ஜி.கே. வாசன், திரு.நாராயணசாமி போன்றவர்களும்; தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களும் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், புதிய தலைமைச் செயலக வளாகத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு கட்டிட அமைப்பைப் பாராட்டி இருக்கின்றார்கள்.

ஏன்; புதிய தலைமைச் செயலகத்திலே உள்ள சட்டப் பேரவை அரங்கிற்கு ஜெயலலிதாவின் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பல நாட்கள் வந்திருந்து அவை விவாதங்களிலே கலந்து கொண்டிருக்கின்றார்கள். புதிய தலைமைச் செயலக வளாகம் சரியில்லை என்று அ.தி.மு.க. உண்மையாகவே நினைத்திருந்தால், அப்போதே அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவை நிகழ்ச்சிகளுக்கு வராமல் அல்லவா புறக்கணித்திருக்க வேண்டும். மாறாக அவர்கள் கலந்து கொண்டுதான் அவை நடைபெற்றது. ஆனால் ஒரு முறைகூட அந்த வளாகத்திற்கே வராமல் இருந்த ஜெயலலிதா, அந்தத் தலைமைச் செயலகத்தைப் புறக்கணித்துவிட்டு, தமிழகத்திலே உள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் வலியுறுத்திய பிறகும், அந்தக் கட்டிடத்தைப் புறக்கணித்து, பழைய தலைமைச் செயலகத்திலே இயங்கி வந்த "பாவேந்தர்" செம் மொழித் தமிழாய்வு நூலகத்தை இரவோடு இரவாக வெளியே தூக்கியெறிந்துவிட்டு; அங்கே மீண்டும் சட்டப் பேரவையை நடத்தி வருகிறார். இதிலிருந்து ஓமந்தூரார் வளாகத்திலே உள்ள கட்டிடம் தி.மு. கழக ஆட்சியிலே கட்டப்பட்டு, இந்தியப் பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதுதான் அவரது வெறுப்புக்கு ஒரே காரணமாக இருக்க முடியு மென்றும், நிர்வாக வசதி இல்லை என்றெல்லாம் கூறுவது அவரது உள்மனதில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் உணர்வை மறைப்பதற்காகத்தான் என்பதும் நன்றாகப் புலனாகிறது.

தி.மு.கழக ஆட்சியிலே கட்டியதுதான் காரணம் என்றால், தி.மு.கழக ஆட்சியிலே எழுப்பப்பட்ட நாமக்கல் கவிஞர் மாளிகையை மட்டும் புனருத் தாரணம் செய்து பயன்படுத்திக்

கொள்ளலாமா? தமிழகத்திலே உள்ள பல மேம்பாலங்கள் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில்தானே உருவாக்கப்பட்டன. அந்த மேம்பாலங்களின் வழியாகத்தானே அம்மையார் ஜெயலலிதாவின் கார் செல்லுகிறது! கருணாநிதி கட்டிய மேம்பாலம், அதிலே நான் பயணம் செய்யமாட்டேன் என்று நிறுத்தி விட்டாரா என்ன? தலைமைச் செயலகம் அங்கே இயங்க முடியாது என்றால் பன்நோக்கு மருத்துவமனை மட்டும் அங்கே இயங்க முடியுமா?

மருத்துவமனையாக மாற்ற ஆக்சிஜன் நிரப்பும் இடம், சறுக்குப் படிக்கட்டுகள், வார்டுகள் போன்ற வசதிகள் இந்தக் கட்டிடத்தில் இல்லை. இதையெல்லாம் செய்ய வேண்டுமென்றால் அதற்காக பல கோடி ரூபாய் செலவழிக்கப்பட வேண்டும். முதற்கட்டமாக, தற்போது அதற்காக 30 கோடி ரூபாய் செலவழிக்க அ.தி.மு.க. அரசு முன் வந்திருக்கிறது என்றால், அம்மையாரின் பிடிவாதத்திற்காகச் செய்யப்படும் செலவுதானே அது? மக்களின் வரிப்பணத்தைப் பாழடிக்கின்ற செயல்தானே அது?

இந்தப் பிரச்சினை சென்னை உயர் நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, நீதிபதிகள் முருகேசன், ஜனார்த்தன ராஜா ஆகியோர் மத்திய அரசிடம் "சுற்றுச் சூழல் அனுமதி பெறப்பட்டு விட்டதா? டெண்டர் விடப்பட்டாகி விட்டதா? வழக்கு நிலுவையில் இருக்கும்போது அரசாங்கம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமா? எனவே இது விசாரிக்கப்பட வேண்டிய வழக்கு என்று அறிவிக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அரசு வழக்கறிஞர் கூறும்போது, " இது அரசின் கொள்கை முடிவாகும்" என்று வாதாடினார். இதையடுத்து நீதிபதிகள், புதிய தலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக்க இடைக் காலத் தடை விதித்தனர். இந்த வழக்கு குறித்து விசாரித்த நீதிபதிகள் டி.முருகேசன், கே.கே.சசிதரன் ஆகியோரைக் கொண்ட அமர்வு; இந்த வழக்கினை வேறு நீதிபதிகளைக் கொண்ட அமர்வுக்கு மாற்றும்படி தலைமை நீதிபதிக்குப் பரிந்துரை செய்தார்கள். அதனைத் தொடர்ந்து நீதிபதிகள் கே.என்.பாஷா, என்.பால் வசந்தகுமார் ஆகியோரைக் கொண்ட புதிய அமர்வு அமைக்கப்பட்டது. புதிய தலைமைச் செயலகத்திற்காகப் பல கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது; அந்தக் கட்டிடங்களை இடிப்பதால் மீண்டும் அதிகச் செலவு ஏற்படும்; அருகிலேயே பல மருத்துவ மனைகள் இருக்கின்றன, போக்குவரத்து நெரிசல்

ஏற்படும் என்றெல்லாம் உயர்நீதி மன்றத்தின் புதிய அமர்வு முன் வாதாடப்பட்டது. என்றாலும் நீதிபதிகள், ஏற்கனவே அரசு மருத்துவமனைகள் அருகில் இருந்தாலும், டெல்லியில் உள்ள "எய்ம்ஸ்" மருத்துவமனைபோல பன்நோக்கு மருத்துவ மனை சென்னையிலே இல்லை, அரசு உள்நோக்கத்தோடு செயல்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை எந்தவித ஆதாரமும் இல்லாமல் ஏற்க முடியாது" என்று கூறி எதிர் மனுக்களைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

உயர் நீதிமன்றத்தில் நீதிபதிகள் இதற்கான தீர்ப்பினை வழங்கிய ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, புதிய தலைமைச் செயலகத்திற்குள் மருத்துவமனையாக மாற்றும் பணிகள் தொடங்கப் பட்டுவிட்டன. என்ன அவசரம்? மருத்துவமனை தொடங்குவதைப் பற்றி ஏடுகளிலே முன் கூட்டியே அறிவிக்கப் பட்டதா? எதற்காக இந்த அவசரக் கோலம்? தலைமைச் செயலகத்திற்காகக் கட்டப்பட்ட அந்தக் கட்டிடத்தை மருத்துவமனையாக மாற்ற வேண்டிய அவசியம் என்ன? கழக ஆட்சியில் கட்டப்பட்டது என்ற ஒரே காழ்ப்புணர்வு தானே இதற்குக் காரணம்? இனிமேல் ஒரு தலைமைச் செயலகம் கட்டப்பட வேண்டுமென்றால் அதற்காகச் செலவழிக்கப்பட வேண்டிய தொகை எவ்வளவு? தனி மனிதர் ஒருவரின் காழ்ப்புணர்ச்சி உண்டாக்கிய பிடிவாதம் காரணமாக "கொள்கை முடிவு" என்ற பெயரில் தமிழக மக்களின் வரிப்பணம் எந்த அளவிற்கு விரயமாகிறது, இன்னும் விரயமாகப் போகிறது என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா என்ன? ஆமாம்; "கொள்கை முடிவு" என்பதை எந்த ஆட்சியிலும் எப்போது வேண்டுமானாலும் எடுக்கலாம் அல்லவா?

அன்புள்ள,

மு.க.

2-2-2013

3703. மின் உற்பத்தி வளர்ச்சி - அன்றும், இன்றும்!

உடன்பிறப்பே,

ஆளுநர் உரைக்குப் பதிலளித்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மின் உற்பத்தி பற்றி அதிகாரிகள் தயாரித்துக் கொடுத்த நீண்ட விளக்கத்தைப் பேரவையிலே படித்திருக்கிறார். 2001 முதல் 2006 வரை நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில், 500 மெகாவாட் மின் திறன் கொண்ட அனல் மின்நிலையத்தை வடசென்னையில் அமைக்கவும், தேசிய அனல் மின் கழகத்துடன் இணைந்து 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை வல்லூரில் அமைக்கவும்; நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையங்களை தூத்துக்குடியில் அமைக்கவும்; 500 மெகாவாட் திறன் கொண்ட குந்தா நீரேற்று மின் நிலையத்தை அமைக்கவும்; ராமநாதபுரம் மாவட்டம் வழுதூரில் 95 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு சுழலி மின் நிலையத்தை அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும்; ஆனால் இந்த மின் திட்டங்களை 2006 முதல் 2011 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் நிறைவேற்றாததுதான் தற்போது நிலவும் மின் பற்றாக்குறைக்குக் காரணம் என்றும் சொல்லியிருக்கிறார்.

இதில் வட சென்னை அனல் மின் நிலையம் 2ஆம் நிலைக்கு 26.6.2001இல் 1ஆவது அலகு மூலமாக ரூபாய் 2475 கோடி மதிப்பீட்டில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க அரசாணை பிறப்பித்திருந்தாலும், அ.தி.மு.க. ஆட்சியைவிட்டு இறங்குகின்ற வரை ஐந்தாண்டு காலத்தில் அந்த மின்திட்டம் தொடர்பாக எதுவும் நடைபெற வில்லை. ஆனால் தி.மு. கழக ஆட்சியிலேதான் 18.2.2008 அன்று முதல் அதற்கான பணிகள் பி.எச்.இ.எல் நிறுவனத்தாருடன் பேசி துரிதமாகச் செயல்படுத்தப்பட்டது. ஆனால் முதலமைச்சர் பேரவையில் அவரது ஆட்சியில் கிடப்பில் இத்திட்டம் போடப்பட்டதை அப்படியே மறைத்துள்ளார்.

வடசென்னை அனல்மின் நிலையம் நிலை 2ன் மூலமாக ரூபாய் 2,175 கோடி மதிப்பீட்டில் 2வது அலகு அமைக்க 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க கழக ஆட்சியிலேதான் 14.7.2008ல் அரசாணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடை பெறத் தொடங்கின.

2.5.2007ல் மேட்டூர் அனல் மின் நிலையம் நிலை 3ன் மூலமாக 3,100 கோடி ரூபாய் மதிப் பீட்டில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க கழக ஆட்சியிலேதான் அரசாணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தன. இத்திட்டம்தான் தற்போது மின் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது.

127.2002ல் சென்னையில் தேசிய அனல் மின் கழகத்துடன் தமிழ்நாடு மின்சார வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் (எம்.ஓ.யூ) 1000 மெகா வாட்டிற்குச் செய்யப்பட்டிருந்தது. இதைத்தான் முதலமைச்சர் தனது ஆட்சியில் தொடங்கப்பட்டது என்று சொல்கிறார். ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தம் அ.தி.மு.க. ஆட்சியிலே போடப்பட்டதே தவிர, அதனைத் தொடர்ந்து எந்தப் பணியும் நடைபெறவில்லை. தி.மு. கழக ஆட்சியிலேதான், இதனை 1500 மெகாவாட் என்ற அளவிற்கு உயர்த்தி 8000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வல்லூரில் அமைத்திட 13.8.2007 முதல் பி.எச்.இ.எல் நிறுவனத்தாரால் விரைவாக பணிகள் செயல்படுத்தப்பட்டன.

19.6.2003ல் தூத்துக்குடியில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் புரிந்துணர்வு ஒப்பந்தம் (எம்.ஓ.யூ.) செய்யப்பட்டிருந்தாலும் அ.தி.முக. ஆட்சியில் எந்தப் பணியும் நடைபெறவில்லை . தி.மு.கழக ஆட்சி யிலேதான் 28.1.2009 முதல் 4909 கோடி ரூபாய்ச் செலவில் 1000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க வேண்டி பி.எச்.இ.எல் நிறுவனத்தாரால் பணிகள் விரைவாகச் செயல்படுத்தப்பட்டன.

14.12.2009ல் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளை நவீனமயமாக்குதல் மூலம் 1126 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 183 மெகாவாட் இணை மின்சாரம் தயாரிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டதும் தி.மு. கழக ஆட்சியிலேதான்.

27.3.2002ல் அ.தி.மு.க. ஆட்சியில் பவானி கட்டளை தடுப்பணை புனல் மின் திட்டம்-3 என்ற திட்டம் 396 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க அரசாணை பிறப்பித்திருந்தாலும்; அதற்கான பணிகள் தி.மு.கழக ஆட்சியிலேதான் விரைவாகச் செயல்படுத்தப்பட்டன.

26.10.2007ல் உடன்குடியில் பாரத மிகு மின் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் கூட்டு முயற்சியில் 8700 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் (எம்.ஓ.யூ) செய்யப்பட்டது. ஏற்கனவே கழக ஆட்சிக் காலத்திலேயே இந்தத் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டது. இதன் உற்பத்தி 2013ம் ஆண்டு, ஜனவரி மாதத்தில், 800 மெகாவாட் 1வது அலகு மூலமாகவும், மற்றொரு 800 மெகா வாட் 2வது அலகு மூலமாகவும், ஜூலை மாதத்தில் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2011இல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் தொய்வு ஏற்பட்டது. தற்போது தமிழக அரசே இந்தத் திட்டத்தை தாங்களே நிறைவேற்றப்போவதாக அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். இதுவும் அறிவிப்போடு இல்லாமல் உண்மையிலேயே தொடங்கினால் நல்லதுதான்.

8.12.2006ல் எண்ணூர் அனல் மின் நிலையம் விரிவாக்கம் மூலமாக 3,136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 மெகா வாட் மின்சாரம் தயாரிக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன. இதன் உற்பத்தி 2013ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனால் 2011இல் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டுள்ளது.

5.1.2009ல் எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் (SEZ) அனல் மின் நிலையம் (காட்டுப்பள்ளி) மூலமாக 9,613 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு, ஆரம்பக்கட்டப் பணிகள் நடைபெற்றுவந்தன. இந்தத் திட்டம் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் அக்கறையுடன் துரிதமாக நடைபெறவில்லை.

இந்த உற்பத்தித் திட்டங்கள் பற்றியெல்லாம் மின்வாரியத்தில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்று விட்டாலும், மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளரும், பேரவையின் பொருளாளருமான தம்பி சிங்கார. ரத்தினசபாபதி விரிவாக ஏற்கனவே தொலைக்காட்சிகளில் மக்களுக்கு விளக்கியிருக்கிறார்.

அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கிய மின் திட்டங்களின் மீது தி.மு. கழக ஆட்சியில், எதுவும் செய்யவில்லை என்று

ஜெயலலிதா தனது பதிலில், முதல் பத்தியில் கூறிவிட்டு, அடுத்த பத்தியில், "2005ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் ஒப்புதல் வழங்கப்பட்ட, வடசென்னை அனல் மின் நிலையத் திட்டத்தில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே மேற்கொள்ளப்பட்டிருந்தன" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே 50 சதவிகிதப் பணிகள் கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டன என்று அவரே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அவ்வாறு கழக ஆட்சியில் அந்தத் திட்டத்தின் மீது காட்டிய அக்கறையினால்தான், 600 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு ஏப்ரல் முதல் கிடைக்கவுள்ளது. அதுபோலவே கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட வடசென்னை அனல் மின்நிலையத்தின் இரண்டாவது அலகின் மூலமாக மே மாதம் முதல் 600 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவுள்ளது.

கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டப் பணிகள் மூலம் 608 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. இத்திட்டம் பற்றி பேரவையில் முதலமைச்சர் மகிழ்ச்சியுடன் கூறிய மறுநாளே இன்றையதினம் மேட்டூர் அனல் மின் நிலைய புதிய யூனிட்டில் திடீர் பழுது என்றும், சோதனை ஓட்டம் நிறுத்தப்பட்டு விட்டதாகவும் செய்தி வந்துள்ளது.

வல்லூர் அனல் மின் திட்டப் பணிகளும் கழக ஆட்சிக் காலத்தில்தான் விரைவாக நடைபெற்றன. முதல் அலகு உற்பத்தியையும் தொடங்கிவிட்டது. ஆனால் அதையும் ஜெயலலிதா இவரது முயற்சியால் கிடைத்ததைப் போலப் பேரவையிலே தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக தி.மு.கழக ஆட்சியிலே பெரு முயற்சி எடுத்துச் செயல்படுத்தப்பட்ட திட்டங்களைத்தான் முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த 19 மாதங்களில் அவர் செய்ததைப் போலப் படித்துக் காட்டியிருக்கிறார். ஆனால் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மற்ற திட்டங்களைப் போல இந்த மின் உற்பத்தித் திட்டங்களையும் முடக்கிப் போடாமல் அவர் இருந்ததே, தமிழகத்திற்குச் செய்த நன்மைதானே? ஆனால் தமிழ்நாட்டு மக்கள் காட்டிய எதிர்ப்பின் காரணமாக அவர் இந்தத் திட்டங்களையெல்லாம் தொடர்ந்தாரே தவிர, இந்தத் திட்டங்கள் எல்லாம் செயல்பாட்டிற்கு வந்து, பிரச்சினை தீர வேண்டுமென்ற

அக்கறையினால் அல்ல என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே உணர்வார்கள்.

மேலும் ஜெயலலிதா தனது பதில் உரையில், அவரது ஆட்சிக் காலத்திலே, "2,500 மெகாவாட் அளவுக்கு மின் திட்டங்கள் துவக்கப்பட்டிருந்ததால், 7000 கோடி ரூபாய் அளவுக்கு மின் திட்டங் களுக்குச் செலவழிக்க வேண்டிய நிலை தி.மு.க. அரசுக்கு ஏற்பட்டது" என்று சொல்லியிருக்கிறார். அதிலிருந்து அவரது ஆட்சிக் காலத்தில் 2,500 மெகாவாட் அளவுக்கு துவக்கப்பட்ட மின் திட்டங்களுக்காக, அவரது ஆட்சிக் காலத்தில் எதுவும் செலவழிக்கப்படவில்லை என்பதையும், கழக அரசிலேதான் அது ஜெயலலிதா ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டங்கள் ஆயிற்றே என்று கிடப்பிலே போட்டு விடாமல், 7,000 கோடி ரூபாய் அளவுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஜெயலலிதா அம்மையாரே தன்னையும் அறியாமல் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

அம்மையார் அவர்கள் தனது பதிலில், "2001 முதல் 2006 வரையில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் மின் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக வைத்திருந்தோம், கழக ஆட்சியிலேதான் மின் பற்றாக்குறை வந்துவிட்டது" என்று சொல்கிறார். அப்போது அ.தி.மு.க. ஆட்சியிலே மின் பற்றாக் குறை இல்லாத மாநிலமாக தமிழகம் இருந்திடக் காரணம், 2001ஆம் ஆண்டுக்கு முன்பு, 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் பேசின் பாலம் டீசல் எண்ணெய் மின் திட்டம், திருமூர்த்தி சிறு புனல் மின் திட்டம், முக்குருத்தி சிறு புனல் மின் திட்டம், சாமல்பட்டி டீசல் எண்ணெய் மின் திட்டம், திருமக்கோட்டை எரிவாயு சுழலி மின் திட்டம், பிள்ளைப் பெருமாள் நல்லூர் மின் திட்டம், சமயநல்லூர் டீசல் எண்ணெய் மின்திட்டம், ஆழியாறு சிறு புனல் மின் திட்டம், நெய்வேலி ஜீரோ யூனிட் மின் திட்டம், வழுதூர் எரிவாயு மின் திட்டம், பெருஞ்சாணி சிறு புனல் மின் திட்டம் என்ற இந்த 11 திட்டங்களின் மூலம் 1200 மெகா வாட் மின் உற்பத்திக்கு வழிவகை செய்ததால் தானே தவிர வேறல்ல. எனவே மின் வாரியத்தின் வளர்ச்சிக்குத் தி.மு.கழக ஆட்சிதான் வழி வகுத்தது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இறுதியாக ஒரு விவரம். ஜெயலலிதா தனது ஒவ்வொரு அறிக்கையிலும் தமிழக அரசுக்கு ஏராளமான கடன்களை நான்

வாங்கி வைத்து விட்டதைப் போலத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார். இதற்குப் பல முறை விளக்கமளிக்கப்பட்டும் கூட அதையே கூறி வருகிறார். 2006ஆம் ஆண்டு மே திங்களில்தான் தி.மு.கழகம் ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்தது. அதற்கு முன்பே , 31.3.2006 அன்றே, அதாவது ஜெயலலிதா ஆட்சி புரிந்த ஐந்தாண்டு காலத்திற்குப் பின்பு, தமிழக அரசின் மொத்தக் கடன் பொறுப்பு 57 ஆயிரத்து 457 கோடி ரூபாயாக இருந்தது. அதுபோலவேதான் மின் வாரியத்திலும் 2005-2006ஆம் ஆண்டில் 5000 கோடி ரூபாய் அளவிற்கு கடன் சுமையை வைத்து விட்டுத்தான் ஜெயலலிதா ஆட்சியை விட்டு இறங்கினார். இதைப்பற்றி நாங்கள் பொறுப்புக்கு வந்தவுடன், "அய்யோ, ஜெயலலிதா தமிழக அரசின் தலையில் 57 ஆயிரம் கோடி கடன் சுமையை ஏற்றி வைத்து விட்டுப்போய் விட்டார், மின் வாரியத்திலே 5000 கோடி ரூபாய் நஷ்டம்" என்றெல்லாம் அறிக்கைக்கு மேல் அறிக்கை வெளியிட்டு யாரையும் குறை சொல்லிக் கொண்டிருக்கவுமில்லை. பிறர் மீது பழி சுமத்தித் தப்பித்துக் கொள்ள எத்தனித்ததுமில்லை. அரசு என்றால் கடன் வாங்கத்தான் நேரிடும். அதுவும் இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மக்களுக்குத் தேவையான நலத் திட்டங்களை நிறைவேற்றிட வேண்டுமென்றால் கடன் வாங்கினால்தான் நிறைவேற்ற முடியும். இவற்றைப் பற்றியெல்லாம் ஜெயலலிதா அவரது பாணியில் புழுதிவாரித் தூற்றுவதும், நாம் ஒவ்வொன்றிற்கும் உண்மை விளக்கம் அளிப் பதும், அதற்குப் பிறகும் ஏற்கனவே சொன்ன தையே திரும்பத் திரும்பச் சொல்லி, அனைவரையும் குழப்பித் திசை திருப்புவதும் ஜெயலலிதாவின் வாடிக்கையாகிவிட்டது என்பதை; பச்சைப் பாம்புக்கும் பச்சைக் கொடிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொண்டுள்ள தமிழ் மக்கள் இதையும் அறிந்திருப்பார்கள் என்றபோதிலும், மீண்டும் விளக்கம் தர வேண்டியது என்னுடைய கடமை என்பதால்தான் இந்தக் கடிதம்.

அன்புள்ள,

மு.க.

11-02-2013

3704. முறையான நடவடிக்கை எடுத்தது; நானா? அவரா?

உடன்பிறப்பே,

ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு 8-2-2013 அன்று பதிலளித்த முதலமைச்சர் ஜெயலலிதா படித்த டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கான நிவாரணம், ஈழத்தமிழர் பிரச்சினை, மின் உற்பத்தி போன்றவைகளுக்கு நான் ஏற்கனவே விரிவாக விளக்கமளித்துள்ளேன். அவர் உரையில் எஞ்சிய பகுதி, காவேரி நதி நீர்ப் பிரச்சினை பற்றியதுதான்! காவேரி நதி நீர் பற்றி பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, அவருடைய கடந்த 19 மாத கால ஆட்சியில் கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான நீரினைப் பெற்றுக் கொடுக்க இயலாத நிலை பற்றி விளக்கம் அளிப்பதற்குப் பதிலாக, வழக்கம் போல் தேவையில்லாமல் என்னைப் பற்றி அடுக் கடுக்காக குற்றச்சாட்டுகளைக் கூறி; தான் தப்பித்துக் கொள்ள முயன்றிருக்கிறார். காவேரி நடுவர்மன்ற இறுதித்தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிடுவதற்கும், காவேரியிலிருந்து தண்ணீரைப் பெறுவதற்கும் கருணாநிதி எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். இவர் இந்தக் குற்றச்சாட்டினை அவ்வப்போது சொல்வதும், ஒவ்வொரு முறையும் அதற்கு நான் விளக்கமளிப்பதும் தொடர்கதையாகவே இருந்து வருகிறது.

காவேரி நடுவர் மன்ற இடைக்கால ஆணையை தனது இடைவிடா முயற்சிகளால் பெற்றுக்கொண்டு வந்ததைப்போல ஜெயலலிதா பேரவையிலே கூறியிருக்கிறார். **காவேரி நடுவர் மன்றம் என்ற ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று முதன் முதலாக தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போதுதான் 17-2-1970 அன்றே மத்திய அரசுக்குக் கடிதமே எழுதப்பட்டது. நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்று சட்டமன்றத்தில் தி.மு. கழக ஆட்சியிலேதான் 8-7-1971 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

தி.மு.கழகம் ஆட்சியிலே இருந்த போதுதான், 27-7-1989 அன்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்று, நடுவர் மன்றம் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தக் கூட்டத்தில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. தவிர அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர். **நடுவர் மன்றம் அமைத்திட வேண்டும் என்பதில் ஜெயலலிதாவுக்கு எந்த அளவுக்கு ஆர்வம் இருந்தது என்பதை, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அ.தி.மு.க. புறக்கணித்ததிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.**

2-12-1989 அன்று திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, நடுவர் மன்றம் அமைக்கக்கோரி கடிதம் எழுதினேன். பேரவையிலே அதைப் பற்றித் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி அனுப்புமாறு வி.பி.சிங் அவர்கள் என்னிடம் தெரிவித்ததின் பேரில், 24-4-1990 அன்று நடுவர் மன்றம் தேவை என்று பேரவையில் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தின் விளைவாகத்தான் 2-6-1990 அன்று நடுவர் மன்றம் அதுவும் தி.மு.கழக ஆட்சியிலே, நான் முதலமைச்சராக இருந்தபோது தான் அமைந்தது.

28-7-1990இல் கழக ஆட்சியில்தான் இடைக்காலத் தீர்ப்பினைக்கோரி நடுவர் மன்றத்தில் மனு செய்தோம். 5-1-1991 அன்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கிட தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று நடுவர் மன்றம் கூறியது. நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டா இல்லையா என்று தீர்ப்பளியுங்கள் என்று உச்ச நீதி மன்றத்தில் 10-1-1991 அன்று தி.மு.கழக ஆட்சியிலே வழக்கு தொடர்ந்து, 26-4-1991 அன்று உச்சநீதி மன்றம் தீர்ப்பு "அதிகாரம் உண்டு" என்று வழங்கியது. கழக ஆட்சியில் கோரிப் பெற்ற தீர்ப்பின் காரணமாகவே 25-6-1991இல் நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பினை அளித்தது. இதற்கிடையில்தான் 31-1-1991 அன்று கழக ஆட்சி கலைக்கப்பட்டு, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவரது ஆட்சிக் காலத்தில் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளிவந்த போதிலும், எந்தவிதமான விளைவு களும் ஏற்படவில்லை . 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சியில் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்ற முடியவில்லை.

1996ஆம் ஆண்டு மீண்டும் தி.மு.கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, நடுவர் மன்றத்தின் ஆணையைச் செயல்படுத்துவதில் தாமதத்தைத் தவிர்க்கும் வண்ணம், திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிட வேண்டுமென்று 19-7-1997, 23-7-1997, 29-9-1997, 1-11-1997, 6-11-1997 ஆகிய நாட்களில் பிரதமருக்கு நான் எழுதிய கடிதங்களிலும், 27-7-1997 மற்றும் 29-9-1997 ஆகிய நாட்களில் பிரதமரை நேரில் சந்தித்தும் கேட்டுக் கொண்டேன். மேலும் 10-11-1997 அன்று மத்திய அரசுக்கு அப்படியொரு ஆணை பிறப்பிக்க உச்ச நீதி மன்றத்தில் முறையீட்டு மனு ஒன்றும் தமிழக அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது. மீண்டும் 28-3-1998, 6-4-1998 மற்றும் 31-5-1998 ஆகிய நாட்களில் பிரதமருக்குக் கடிதம் மூலமாகவும், 7-4-1998 அன்று நேரிலும் சந்தித்து, வரைவுத் திட்டத்தை இறுதி செய்து அரசிதழில் வெளியிடக் கேட்டுக் கொண்டேன்.

21-7-1998 அன்று உச்ச நீதி மன்றம், **"பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கப் போவதாக மத்திய அரசு உறுதியளித்து, 15 மாதமாகிறது, இன்னமும் இணக்கமான திட்டம் உருவாக்கப்படவில்லை, இந்த நிலை நீடித்துக் கொண்டே போவதை அனுமதிக்க முடியாது" என்று தெரிவித்தது.**

28-7-1998 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்கள் 6-8-1998 அன்று பிரதமர் அலுவலகத்தில் காவிரி பிரச்சினை பற்றி பேசுவதற்காக ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் என்னைக் கலந்து கொள்ள கடிதம் எழுதியிருந்தார். அதிலே கலந்து கொள்வது பற்றி 3-8-1998 அன்று தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, பிரதமர் கூட்டியிருந்த கூட்டத்தில் நான் கலந்து கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் ஜெயலலிதா அந்தக் கூட்டத்திற்கு நான் செல்லக் கூடாது என்று அறிக்கை விடுத்தார்.

பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இரண்டு நாட்கள் தொடர்ந்து நடத்திய அந்தக் கூட்டத்தின் இறுதியில்தான், 7-8-1998இல் தி.மு.கழக ஆட்சியில் இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி இடைக்கால ஆணையில் கூறப்பட்ட 205 டி.எம்.சி. தண்ணீர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், பிரதமர் தலைமையில் காவிரி பாயும் நான்கு மாநில முதல்வர்கள் அடங்கிய காவிரி ஆணையம்

அமைக்கப்படும் என்றும் முடிவாயிற்று. அந்த ஒப்பந்தத்தை சி. சுப்பிரமணியம், ஜி.கே. மூப்பனார், சங்கரய்யா, ஆர். நல்லகண்ணு , அப்துஸ் சமது, எம்.ஏ. லத்தீப், குமரி அனந்தன், திண்டிவனம் ராமமூர்த்தி, ஆர்.எம்.வீரப்பன், ஜி.ஏ.வடிவேலு, இல.கணேசன், எஸ். திருநாவுக்கரசு, பேராயர் எஸ்றா சற்குணம் போன்ற தலைவர்களும் மற்றும் ஏடுகள் இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, விடுதலை, தீக்கதிர், தி டைம்ஸ் ஆப் இந்தியா, தி இந்துஸ்தான் டைம்ஸ் ஆகிய நாளேடுகளும் கல்கி, குமுதம், சாவி, துக்ளக், ஆனந்தவிகடன், குங்குமம், ஆகிய இதழ்களும் பாராட்டின. இதுதான் உண்மையில் நடந்த வரலாறு.

உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டுமென்றால், "தி இந்துஸ்தான் டைம்ஸ்" ஏடு, "Karunanidhi Scores Diplomatic Victory" என்ற தலைப்பில், **"காவிரிப் பிரச்சினை பற்றிய பேச்சு வார்த்தையின் முடிவு தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி அவர்களுக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய அரசியல் வெற்றியாகும். நடுவர் மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பை அமல்படுத்த கர்நாடகம் ஒத்துக் கொண்டதே மிகப் பெரிய வெற்றியாகும். ஜூன் 1990 முதல், அதாவது நடுவர் மன்றம் 205 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்திற்கு கர்நாடகம் வழங்க வேண்டுமென்று தீர்ப்பளித்த அந்த நாள் முதல், கர்நாடகத்தில் தொடர்ந்து இருந்து வந்த அரசுகள், இடைக் காலத் தீர்ப்பை ஒத்துக் கொள்ள வில்லை. கர்நாடகத்தை இடைக்காலத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளச் செய்து, நடுவர் மன்றம் தமிழகத் திற்கு வழங்கிட வேண்டிய தண்ணீ ரின் அளவு பற்றிய இறுதித் தீர்ப்பை வெளியிடும் போது 205 டி.எம்.சி. தண்ணீர் என்பது அடிப்படை அளவுகோலாக இருக்கும் என்பதையும் திரு. கருணாநிதி உறுதி செய்து கொண்டுள்ளார். அ.தி.மு.க.வும் அதன் தோழமைக் கட்சிகளும் "கர்நாடகத்துடன் பேச்சு வார்த்தையே கூடாது" என்று எடுத்திருந்த அணுகுமுறையை திரு.கருணாநிதி வெற்றிகரமாக உடைத்தெறிந்து விட்டார். அதன் மூலம் பிரச்சினைகளை வழக்குகளின் மூலம் அல்லாது, பேச்சுவார்த்தைகளின் மூலம்**

தீர்த்துக் கொள்வது சிறந்தது என்பதையும் நிரூபித்துக் காட்டி விட்டார். பேச்சுவார்த்தைக்குக் கதவடைக்க மறுத்ததன் மூலம், திரு. கருணாநிதி தன்னுடைய மிகப் பெரிய அரசியல் முதிர்ச்சியை வெளிக்காட்டியுள்ளார். ஆணையத்திற்குப் பிரதமரைத் தலைவராக அமைத்துக் கொண்டதன் மூலம், மத்திய அரசில் நடுவர் மன்றத் தீர்ப்பினை கர்நாடகம் அமல்படுத்துவதை உறுதி செய்து கொள்வதற்கான ஒரு உத்தரவாதத்தை ஏற்படுத்திக் கொண்டார்" என்று எழுதியது.

அது மாத்திரமல்ல; வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த ஒப்பந்தத்தை அனைத்துக் கட்சித் தலைவர்களும், ஏடுகளும் பாராட்டியபோது ஜெயலலிதா அதனை வரவேற்றாரா என்றால் இல்லை. மாறாக அந்தத் தீர்வினை நிராகரிக்கிறோம் என்றும், அதனை ஏற்க மாட்டோம் என்றும் கூறினார்.

அந்த முடிவு காண வழி வகுத்தவர், பா.ஜ.க. பிரதமராக இருந்த திரு.வாஜ்பாய். அப்போது அவர் அ.தி.மு.க.வுடன் கூட்டணியில் இருந்தவர். இருந்தாலும், அந்தக் கூட்டணியிலே இல்லாத தி.மு.க.வின் தலைவனான என்னை அழைத்து சுமுக முடிவு கண்டார். ஆனால் மத்திய அரசில் இடம் பெற்ற அ.தி.மு.க. தலைவி அந்த ஒப்பந்தம் பற்றி பத்திரிகையாளர்களிடம் என்ன கூறினார் தெரியுமா?

"காவிரி பிரச்சினையில் வாஜ்பாய், கருணாநிதியின் தந்திரத்திற்கு ஆளாகி விட்டார். இரண்டு பேரும் சேர்ந்து செய்து கொண்டிருக்கின்ற உடன்பாட்டை நாங்கள் நிராகரிக்கிறோம்" என்றார்.

மக்கள் கடந்த கால நிகழ்வுகளை மறந்திருப்பார்கள் என்று எப்போதும் மனப்பால் குடித்து; தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் ஜெயலலிதா, இத்தனையையும் இப்போது மறைத்து விட்டு, அவருடைய இடை விடா முயற்சிகளால்தான் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பிலே முடிவு காணப்பட்டதைப் போலவும், காவேரி நதிநீர் ஆணையம், மற்றும் காவேரி கண்காணிப்புக் குழு போன்றவை அமைக்கப்பட்டன என்பதைப் போலவும் பேரவையிலே தன்னைத்தானே தட்டிக் கொடுத்துப் பாராட்டிக் கொண்டுள்ளார்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு தி.மு. கழக ஆட்சியிலேதான் 5-2-2007 அன்று வெளியிடப்பட்டது. இந்தத் தீர்ப்பினை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த எம். கிருஷ்ணசாமி, திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என். வரதராசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன், காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் ரெங்கநாதன், உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் கே.எஸ். நடராசன் ஆகியோர் அப்போது வரவேற்று அறிக்கை கொடுத்தனர்.

ஆனால் அ.தி.மு.க.வின் சார்பில் ஜெயலலிதா விடுத்த அறிக்கையில் இறுதித் தீர்ப்பை "ஏற்க முடியாத தீர்ப்பு" என்றும், "கருணாநிதியால் காவிரி பிரச்சினையில் நடுவர் மன்றத்தின் மூலம் தமிழகத்திற்கு நியாயமாக கிடைக்க வேண்டிய தீர்ப்பை முழுமையாகப் பெற்றுத்தர முடியவில்லை. இந்த இறுதித் தீர்ப்பு தமிழகத்திற்குப் பாதகமாக வந்துள்ளது. இதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று தி.மு.க. அரசு ராஜினாமா செய்ய வேண்டும்" என்றும் எப்போதும்போல எனது ராஜினாமாவை வலியுறுத்தி அறிக்கை விடுத்தார்.

அந்த ஜெயலலிதாதான், இப்போது நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட தான்தான் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்கிறார். அதற்காக தி.மு.க. எந்தவிதமான முயற்சியும் எடுக்கவில்லை என்கிறார். பிரதமரிடம் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசிதழில் வெளியிட வேண்டுமென்று கோரிக்கை வைக்கவில்லை; மாறாக அதனைத் தடுத்தார்கள் என்கிற அளவிற்குக் குற்றஞ்சாட்டி, இந்திய நாட்டின் பிரதமர் அலுவலகத்தையே கொச்சைப்படுத்துகிறார்.

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வந்த போது கூட, தி.மு. கழக அரசு அந்த நிலையிலும், இந்த இறுதித் தீர்ப்பு குறித்து ஜெயலலிதாவைப் போலத் தன்னிச்சையாக முடிவெடுக்க விரும்பாமல், 19-2-2007 அன்றும் 15-4-2007 அன்றும் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டித்தான் முடிவெடுத்தது. ஆனால் தற்போது ஜனநாயக மரபுகளைப் போற்றக் கூடிய வகையில், அவ்வாறு எந்த அனைத்துக் கட்சிக் கூட்டமும்

கூட்டப்படாமல், தமிழக முதலமைச்சர்; தான் நினைத்ததே முடிவு என்பதைப் போல செயல்பட்டு வருகிறார்.

எனவே ஜெயலலிதா காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பையும் ஏற்க வில்லை, இறுதித் தீர்ப்பையும் ஏற்கவில்லை என்பதுதான் உண்மை. காவிரி நதி நீர் ஆணையத்தையாவது ஏற்றுக் கொண்டாரா?

காவிரி நதிநீர் ஆணையம் (Cauvery Authority) அமைக்கப்பட்டு, 11-8-1998 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. 21-8-1998 அன்று ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில், **"உத்தரவிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் போதிய அதிகாரம் உள்ள அமைப்புக்குத்தான் ஆணையம் என்று பெயர். ஆனால் பிரதமர் தலைமையிலான ஆணையத்துக்கு காவிரி தொடர்பாக உத்தரவிடுவதற்கும், செயல்படுத்துவதற்கும் எந்த அதிகாரமும் இல்லை. காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க இயலாத, எந்த முடிவும் எடுக்க விடாமல் தடுக்கிற விவாத அமைப்பாகத்தான் இப்புதிய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கர்நாடகத்துக்குச் சிறிதும் பாதிப்பில்லை; பாதிக்கப்படப்போவது தமிழகம்தான்"** என்று ஆத்திர அவசரத்தோடு சொன்னார்.

2-4-2002 அன்று சட்டப் பேரவையில் முதல்வர் ஜெயலலிதா, "செயல்படாத ஆணையம் காவிரி ஆணையம்", "பல் இல்லாத ஆணையம்"; "அந்த ஆணையத்தை ஏற்காமல் நாங்கள் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேறினோம்" என்று சொன்னார்.

21-6-2002 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் "எவ்வித அதிகாரமும் இல்லாமல், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பைத் திறம்படச் செயல்படுத்த இயலாத நிலையில் காவிரி நதி ஆணையம் உள்ளது. எனவே இந்த ஆணையத்தின் கூட்டங்களில் இனிமேல் தமிழ்நாடு கலந்து கொள்ளாது" என்று விளைவுகளைப் பற்றி விரிவாக எண்ணிப் பார்க்காமல் கொண்டதே கோலம் என்ற பாணியில் முடிவெடுத்து அறிவித்தார்.

அ.தி.மு.க. அரசின் இந்த அமைச்சரவை முடிவினைப் பற்றி என்னிடம் கருத்து கேட்ட போது, "ஆணையத்தைப் புறக்கணிக்க ஜெயலலிதா அரசு எடுத்த முடிவு; விவேகமானதல்ல;

குறுவை நெல் பயிரிடுவதற்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு மத்திய அரசின் தலையீட்டையும் உதவியையும் பெற அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும்; தி.மு.க. ஆட்சியில் எடுக்கப்பட்ட முடிவுகளை எல்லாம் மாற்றும் போக்குதான் அ.தி.மு.க. அரசில் மேலோங்கி நிற்கிறது. காவிரிப் பாசனப் பகுதிக்கு; உரிய நேரத்தில் நீர் கிடைக்க முயற்சி மேற்கொண்டது தி.மு.க. ஆட்சிக் காலம். ஆணையக் கூட்டத் துக்குச் செல்ல மாட்டேன் என்பது அ.தி.மு.க. ஆட்சிக் காலம்" என்று நான் கூறினேன்.

காவிரி ஆணையத்தைப் புறக்கணிப்போம் என்று 2002ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் தெரிவித்தவர்தான் ஜெயலலிதா. அதற்கடுத்த நாள் "அழைத்தால் பார்க்கலாம்" என்றார். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் ஆட்சியிலே இல்லாத நேரத்திலேகூட, 5-7-2002 அன்று பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு காவிரி நதி நீர் ஆணையத்தை உடனே கூட்ட வேண்டுமென்று கோரி கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில், "தமிழகத்திற்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் திறந்து விட வேண்டும் என்ற காவிரி நடுவர் மன்ற உத்தரவைக் கண்காணிப்பதற்காகவே தங்களது (பிரதமரது) தலைமையில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களின் முதல் அமைச்சர்களை உறுப்பினர்களாகக் கொண்டு காவிரி நதி நீர் ஆணையம் அமைக்கப்பட்டது. ஆனால், நடுவர் மன்ற ஆணையின்படி தண்ணீர் திறந்து விடப்படாததால், காவிரி டெல்டா பகுதி விவசாயிகள் மிகுந்த துயருக்குள்ளாகியுள்ளனர். காவிரிப் பாசன விவசாயிகளின் இந்தத் துயரத்தை உணர்ந்து, பிரச்சினை ஓரளவேனும் குறைக்கப் பட தமிழகத்திற்கு 3 டி.எம்.சி. தண்ணீரைத் திறந்து விடும்படி கர்நாடக முதலமைச்சரை தாங்கள் கேட்டுக்கொண்டதற்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், தாங்கள் விடுத்த அந்தக் கோரிக்கையை கர்நாடக அரசு ஏற்க மறுத்துள்ளது. எனவே, காவிரி நதி நீர் ஆணையத்தின் கூட்டத்தை விரைவில் கூட்டி நடுவர்மன்ற உத்தரவை உடனடியாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தங்களை வேண்டுகிறேன்" என்று எழுதியிருந்தேன்.

5-7-2002 அன்று பிரதமருக்கு காவேரி ஆணையத்தைக் கூட்ட வேண்டுமென்று நான் எழுதிய கடிதத்திற்கு 10-7-2002 அன்று பிரதமர் எழுதிய பதில் கடிதத்தில் அதைப்பற்றிக்

கவனிப்பதாகக் கூறியிருந்தார். அவ்வாறே காவிரி நதி நீர் ஆணையம் கூட்டப்பட்டது.

டெல்லியில் பிரதமர் கலந்து கொண்ட காவேரி ஆணையக் கூட்டத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா கலந்து கொண்டபோதே 27-8-2002 அன்று அங்கே சுமூகமாகப் பேசித் தண்ணீரைப் பெறுவதற்கான வழிவகை காணாமல், அவருக்கே உள்ள முன் கோபம் காரணமாக பிரச்சினையின் அவசர முக்கியத்துவத்தை மறந்து, இடையிலே வெளி நடப்பு செய்வதாகக் கூறிவிட்டு, வெளியே வந்துவிட்டார். 29-11-2002 அன்று மீண்டும் காவிரி ஆணையக் கூட்டம். கர்நாடக முதல் அமைச்சர் முதல் நாளே சென்றுவிட்டார். ஆனால் நம்முடைய முதல் அமைச்சர் ஜெயலலிதா கடைசி நிமிடம் வரை வருவதாகச் சொல்லிவிட்டு, பிறகு டெல்லி பயணத்தையே ரத்து செய்துவிட்டார். யாருக்கு இழப்பு? தமிழ்நாட்டு விவசாயிகளுக்குத்தான்!

இதற்கிடையில் **"பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான காவிரி நதிநீர் ஆணையம் மீது நம்பிக்கை இல்லை என்று தமிழக** முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் எழுதியது, கடுமையான ஆட்சேபத்துக்குரியது; அந்த அவதூறுக் கடிதத்தை நான்கு நாட்களுக்குள் திரும்பப் பெற வேண்டும்" என்று தமிழக அரசு வழக்கறிஞரிடம், உச்ச நீதி மன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். தமிழக அரசின் வழக்கறிஞரான திரு.கே.கே. வேணுகோபால், நீதிபதிகளிடம், "பிரதமர் மீதும், அவரது தலைமையில் செயல்படும் காவிரி நதிநீர் ஆணையத்தின் மீதும் தமிழகம் முழு நம்பிக்கை வைத்துள்ளது. காவிரி நதி நீர் ஆணையத்தின் மீது நம்பிக்கை தெரிவித்தும், பிரதமர் வாஜ்பாய்க்கு இதுதொடர்பாக எழுதிய கடிதத்தைத் திரும்பப் பெறுவதற்காகவும் மீண்டும் ஒரு கடிதத்தை வெகு விரைவில் பிரதமர் வாஜ்பாய்க்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா எழுதி அனுப்புவார்" என்றும் தெரிவித்தார்.

அதற்கிணங்க, 16-11-2002 அன்று பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எழுதிய கடிதத்தில், "பிரதமர்மீது தனிப்பட்ட முறையில் தான் மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாகவும், ஏற்கனவே தான் சொன்ன அத்தனை யையும் மறந்துவிட்டு காவேரி ஆணையத்தின் மீதும் நம்பிக்கை வைத்திருப்பதாகவும்" எழுதி யிருந்தார்.

வரலாற்று ரீதியிலான இத்தனை உண்மை நிகழ்வுகளையும் யார் நினைவிலே வைத்துக் கொண்டிருக்கப் போகிறார்கள் என்ற நம்பிக்கையால்தான் முதலமைச்சர் ஜெயலலிதா காவிரிப் பிரச்சினையில் கருணாநிதி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றிலே மறைப்பதைப்போல, பேரவையில் முழங்கியிருக்கிறார்.

தமிழ்நாட்டு மக்களே! நடந்தவைகளை மனசாட்சித் தெளிவுடன் ஒளிவு மறைவில்லாமல் எழுதியிருக்கிறேன், நீங்களே கூறுங்கள்; காவிரிப் பிரச்சினையில் கருணாநிதி முறையாக நடவடிக்கை எடுத்தாரா? இல்லையா?

அன்புள்ள ,

மு.க.

12-02-2013

3705. பெண்ணாளும் மாநிலத்தில், மண்ணாகுதே மங்கையர் வாழ்வு!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் பெண் முதலமைச்சர் ஒருவர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து கோலோச்சி வருகின்ற நிலையில் கடந்த சில மாதங்களில் நடைபெற்ற பாலியல் பலாத்காரத்திற்கு ஆளாக்கப்பட்ட பெண்களின் பட்டியலைப் பார்த்தால்;

- வேலூர் மாவட்டம், திருப்பத்தூரை அடுத்து ஆண்டியப்பன் கிராமத்தில் ஒன்பது வயது சிறுமி காயத்ரி, பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை.
- சிவகிரியில் நந்தினி என்ற பெண் கற்பழிக்கப்பட்டுக் கொலை.
- சைதாப்பேட்டையில் விஜயா என்ற பெண்ணின் சடலம்.
- தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டத்தில் 13 வயது சிறுமி, பள்ளி மாணவி புனிதா கற்பழிக்கப்பட்டு கொலை.
- நாகை மாவட்டத்தில் 11 வயது தலித் இனத்தைச் சேர்ந்த சிறுமியை இரண்டு பேர் சேர்ந்து கற்பழிப்பு.
- விருத்தாசலத்தில் மணிமுத்தாறு நதிக்கரையில் சுகந்தி என்கிற இளம் பெண் கற்பழிப்பு
- சிதம்பரம் அருகில் மஞ்சக்குழி கிராமத்தில், சந்தியா என்கிற இளம்பெண், கற்பழிக்கப்பட்டு 3வது மாடியிலிருந்து வீதியிலே எறியப்பட்டாள்.
- தர்மபுரியில் அரூர் தாலுக்காவில் தாதராவலசை கிராமத்தில் மேனகா என்கிற இளம்பெண் திருமணமானவர் கற்பழிக்கப்பட்டுப் படுகொலை.

- ❖ தூத்துக்குடி மாநகரில், மாதாநகர் 2வது தெருவில் மாரியம்மாள் என்கிற இளம் பெண் கணவனைப் பிரிந்து 3 குழந்தைகளுடன் தந்தை வீட்டில் வசித்து வந்தார். விடியற்காலையில் வீடு புகுந்து கற்பழிப்பு.
- ❖ விழுப்புரம் வானூர் ருக்மணிபுரம் பள்ளி மாணவி கல்கி என்பவள் கற்பழிக்கப்பட்டுச் சவுக்குத் தோப்பில் பிணமாகத் தொங்க விடப்பட்டாள்.
- ❖ உடுமலையில் 12 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். சிறுமி அவமானம் தாங்க முடியாமல் தீக்குளித்தாள்.
- ❖ நாமக்கல்லில் 18 வயது இளம்பெண், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நான்கு பேர் கொண்ட கும்பலால் கற்பழிப்பு.
- ❖ வேலூர் மாவட்டம், ஆர்க்காடு அருகில் திமிரி என்கிற ஊரில் அபிநயா என்கிற 17 வயது பெண், அச்சுறுத்தல், மிரட்டல் காரணமாக, கற்பைக் காப்பாற்றிக் கொள்ள தீக்குளித்துத் தற்கொலை.
- ❖ சென்னை, பொழிச்சலூரில் பிரேமலதா கற்பழித்துக் கொலை செய்யப்பட்டு காட்டில் பிணமாக வீசப்பட்டுக் கிடந்தாள்.
- ❖ திருச்சி மாவட்டம், தொட்டியம் அருகில் திருமணமான மீனா என்கிற இளம்பெண் தன் உறவினர் வீட்டுத் திருமண நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தபோது 4 பேர் கொண்ட கும்பல் காரில் கடத்திச் சென்று கற்பழிப்பு.
- ❖ ஓரத்தநாடு, புதூரில் 6ஆம் வகுப்புபடித்து வந்த 11 வயது சிறுமி, ஆடு மேய்த்துக் கொண்டிருந்தபோது கற்பழிப்பு.
- ❖ ராணிப்பேட்டை அருகில் சுடுகாட்டில் சிறுமி கொலை செய்யப்பட்டு, எரிந்த நிலையில் பிணமாகக் கிடந்தார்.

என்று தொடர்ந்து கட்டுக்கடங்காமல், பெண்கள் மீதான கொடுமைகள் நடைபெற்று வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். டெல்லியில் மருத்துவக் கல்லூரியில் படித்து வந்த மாணவி பாலியல் வன்முறைக்கு ஆளாகி மரணமடைந்தபோது நான் அதற்காக வெளியிட்ட இரங்கல் செய்தியில், "ஏதோ ஒரு இடத்தில் மாத்திரமன்றி இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் அண்மைக் காலமாக இத்தகைய கொடுமையான பாலியல் வன் முறைக்கு மாணவிகளும் ஏழைப்பெண்களும் ஆளாக்கப்படும் செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றன. இத்தகைய செயல்களில் ஈடுபடும் கொடியவர்களுக்குக் கடுமையான தண்டனை என்பது அவர்களை ஆயுள் முழுவதும் தனிமைச் சிறையில் அடைத்து வைக்க வேண்டும் என்பதுதான். இதுபற்றி மத்திய, மாநில அரசுகள் உறுதியான முடிவு எடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டேன்.

என்னுடைய இந்தக் கருத்தையொட்டியே வர்மா கமிஷன் பரிந்துரைகளும் அமைந்து, அதாவது பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்டு, கொலை செய்வோருக்கு ஆயுள் தண்டனை என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் தமிழக அரசைப் பொறுத்த வரையில் இந்த பாலியல் வழக்குகளில் நடவடிக்கை எடுப்பது என்பது, காவல் நிலையத்தில் பெயருக்கு ஒரு வழக்குப் பதிவு என்ற அளவிலே தான் இருந்து, டெல்லிச் சம்பவத்திற்குப் பின்னர் இந்த ஆட்சியினரும் கூட, தீவிரமான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக, பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடுவோர் மீது குண்டர் சட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்; ரசாயன ரீதியில் ஆண்மையைப் போக்க வேண்டுமென்றெல்லாம் அறிவித்திருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகும் பாலியல் பலாத்காரச் சம்பவங்கள் நின்றபாடில்லை.

கோவையில் 13 வயது மாணவிக்கு மயக்க ஊசி செலுத்தி பாலியல் குற்றம் செய்ததால் மாணவியின் தாய்மாமன் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்தச் சம்பவத்திற்கு மாதர் சங்கம் போன்ற பல அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்தச் செய்தி 17-2-2013 தேதிய நாளேடுகளில் வந்துள்ளது.

மேலும் அன்றைய நாளிதழிலேயே தர்மபுரி மாவட்டத்தில், பொம்முடி அருகே கடந்த 14ஆம் தேதியன்று 16 வயது சிறுமி ஒருவரை கடத்திச் சென்று பாலியல் பலாத்காரம் செய்ததாகச்

செய்தி வந்துள்ளது. இவ்வாறு பாலியல் குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையிலேதான், பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் முற்றிலும் எதிரான இந்தக் குற்றங்களைப் புரிவோருக்கு அளிக்கப்பட வேண்டிய தண்டனை பற்றிய கேள்விகளும் எழுகின்றன. மத்திய அரசு, வர்மா கமிஷன் அளித்த பரிந்துரைகளுக்கு மேல் ஒரு படி சென்று, அவர்களுக்குத் தூக்கு தண்டனை அளிக்க வேண்டுமென்றே அறிவித்துள்ளது.

தூக்குத் தண்டனை என்பது தற்போது இந்திய அரசியலில் மிகப் பெரிய கேள்விக்குறியாக எழுந்துள்ளது.

பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று பேரின் தூக்கு தண்டனையைப் பற்றிக் கேள்வி எழுந்த நேரத்திலே கூட, "பொதுவாகவே தூக்கு தண்டனையே கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று பேர் தூக்கு தண்டனை பற்றியும் ஏற்கனவே கழகத்தின் சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்திருந்தேன்.

இதற்கிடையே வீரப்பனின் நண்பர்களான ஞானப்பிரகாசம், சைமன், மீசை மாதையன், பிலவேந்திரன் ஆகிய நான்கு பேர் மீது வழக்கு விசாரணை நடத்திய மைசூர் தடா நீதிமன்றம் ஆயுள் தண்டனைதான் அவர்களுக்கு விதித்தது. ஆனால் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்த காரணத்தால்தான், உச்ச நீதிமன்றம் இந்த நான்கு பேருக்கும் விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை, தூக்குத் தண்டனையாக மாற்றி 2004ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. தீர்ப்பளித்து ஒன்பதாண்டு காலமாக இந்தத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப் படவில்லை. இதற்கிடையே அவர்கள் நான்கு பேரும் இந்தியக் குடியரசுத் தலைவருக்குக் கருணை மனு அனுப்பினார்கள். அந்தக் கருணை மனுவினை இந்தியக் குடியரசுத் தலைவர் நீண்ட கால நிலுவைக்குப் பிறகு, கடந்த 11ஆம் தேதியன்று நிராகரித்த நிலையில், தற்போது அவசர அவசரமாக அவர்களைத் தூக்குத் தண்டனைக்கு ஆளாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அது பற்றிய செய்திகள் ஏடுகளில் வந்து கொண்டுள்ளன.

அந்த நான்கு பேரின் சார்பாகத் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தண்டனையை

நிறைவேற்றத் தடை விதிக்கக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் 16-2-2013 அன்று மனு தாக்கல் செய்திருக்கிறார்கள். மேலும் அந்த மனுவில் தங்களுக்கு விதிக்கப்பட்டத் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் சார்பில் வழக்கறிஞர்கள் காலின் கன்சால்வஸ், சமிக் நாராயண் ஆகியோர் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. அல்டமாஸ் கபீர் அவர்களின் இல்லத்திற்கே சென்று இந்த மனுவினைத் தாக்கல் செய்து, உடனடியாக அதன் மீது விசாரணை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

தலைமை நீதிபதி அவர்கள், அந்த நான்கு பேரும் ஞாயிற்றுக்கிழமை தூக்கில் போடப்படலாம் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும், மனு உரிய நேரத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கூறியிருக்கிறார். தலைமை நீதிபதி அவர்களின் இந்த அறிவிப்பினையொட்டித் தூக்குத் தண்டனை பற்றிய கருத்துகள் பல முனைகளிலும் நாடெங்கிலும் பரபரப்பாக வெளியிடப்பட்டு வருகின்றன. இதற்கிடையே, புதன்கிழமைவரை அவர்களைத் தூக்கிலிட, உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. தூக்கு தண்டனை விதிக்கப்பட்டுள்ள நான்கு பேருக்கும், வீரப்பனுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது என்று வீரப்பனின் துணைவியாரே கூறியிருக்கிறார். தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பத்தினரும் அவர்களை நிரபராதிகள் என்று சொல்லியிருக் கிறார்கள். 1993ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியில் வேண்டுமென்றே வழக்கு தொடுக்கப்பட்டதாகவும், எனவே சி.பி.ஐ. மறுவிசாரணை செய்ய வேண்டுமென்றும் அவர்கள் வைத்துள்ள கோரிக்கை அலட்சியப்படுத்தக் கூடியதல்ல. குற்றவாளிகள் தப்பித்தாலும், நிரபராதிகள் தண்டிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதைப் பொறுப்பிலே உள்ளவர்கள் மனதிலே கொள்ள வேண்டும்.

உச்ச நீதிமன்ற அரசியல் சட்ட அமர்வு திரிவேணிபென் என்பவருக்கும் குஜராத் மாநிலத்திற்குமிடையே நடைபெற்ற ஒரு வழக்கில் ஏற்கனவே அளித்த தீர்ப்பில், “இந்திய அரசியல்

சட்டத்தின் 32வது பிரிவின்படி தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதற்குக் காரணமில்லாமல் மிகுந்த கால தாமதம் ஏற்படுமானால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர் உச்ச நீதி மன்றத்தை நிவாரணம் கேட்டு அணுகலாம்" என்று குறிப்பிட்டிருந்ததை இப்போது எடுத்துக்காட்டுகிறார்கள். தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவதில் ஒன்பதாண்டு கால தாமதம் ஏற்பட்டிருப்பதால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நால்வரும் உச்ச நீதி மன்றத்தில் தூக்குத் தண்டனையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கோருவதற்கு உரிமை உள்ளது என்ற வாதமும் வைக்கப்படுகிறது.

"இந்திய அரசியல் சட்டத்தின் 72வது பிரிவின் கீழ் இந்தியக் குடியரசுத் தலைவர் வழங்கும் ஆணை நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு உட்பட்டதாகும்" என்று உச்ச நீதிமன்றம் கேகர்சிங் என்பவருக்கும் மத்திய அரசுக்கும் இடையே நடைபெற்ற வழக்கில் வழங்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பும் இப்போது எடுத்துக் காட்டப்படுகிறது.

மேலும் உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் திரு. வி.ஆர்.கிருஷ்ண அய்யர் அவர்கள் இந்த நால்வரின் தூக்குத் தண்டனை பற்றித் தெரிவித்திருக்கும் கருத்துகள் ஆழமாகப் பரிசீலிக்கப்பட வேண்டியவையாகும். "சட்டப் புத்தகத்தில் இருந்து தூக்குத் தண்டனையை எடுத்துவிட வேண்டும் என்று அரசு அதிகாரத்தில் உள்ளவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் செயல்படுத்தும் தூக்குத்தண்டனை என்பது அரசாங்கமே செய்யும் கொலைக்குச் சமமானதே அன்றி வேறல்ல. அரசாங்கமே செய்யும் இத்தகைய கொடுங் குற்றங்களுக்கெதிராக இந்திய நாட்டு மக்கள் அணி திரள வேண்டும். அரசியல் சட்டம் வழங்கியுள்ள "வாழும் உரிமை"யை அரசாங்கம் தன்னிச்சையாகத் தூக்கியெறிய அனுமதிக்கக் கூடாது. உலகின் 90 சதவிகித நாடுகள் தூக்குத் தண்டனையை ஏற்கனவே ரத்து செய்துவிட்டன. இந்திய நாடும் தூக்குத் தண்டனையை ரத்து செய்து இது "காந்தி தேசம்" என்பதை உலகத்திற்கு நிரூபிக்க வேண்டும்" என்று திரு.கிருஷ்ண அய்யர் அவர்கள் தெரிவித்திருக்கும் கருத்துகளைத்தான் நான் பல்லாண்டு காலமாகச் சொல்லி வருகிறேன். இன்றைய நிலையில்

இந்தக் கருத்துகளை மத்திய அரசும், சட்ட வல்லுநர்களும், நீதி மன்றங்களும் சீர்தூக்கிப் பார்த்து மனித உரிமைகளையும் மனித நேயத்தையும் போற்றக் கூடிய வகையில் தூக்குத் தண்டனையைச் சட்டப் புத்தகத்திலிருந்து அகற்றி விடுவது பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வரும் இந்தக் கருத்து ஏற்கனவே உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்கப்பட்டிருக்குமானால், இப்போது தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுவரும் தூக்குத் தண்டனைகள் நிகழாமலேயே தடுக்கப்பட்டிருக்கலாம்.

அன்புள்ள,

மு.க.

19-2-2013



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதல் பதிப்பு 2022